1110

N L A Debates

V 31 NO 2 1990

(C)

வெளியீடு 9-1-1991 Issued 9-1-1991

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 19 ஜுன் 91 எழும்பூர், சென்னை-600008.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 2, 1990 - தொகுதி 31 - எண் 2
Wednesday, the 2nd may, 1990-Volume 31-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3-00

143977
சென்னை-600 008
D

# உள்ளடக்கம்.

2—5—1990

பக்கங்கள்.

வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். .. .. 231—264

தகவல் கோரல்—

உறுப்பினர் திரு. குமரி அனந்தன் 29-4-1990 ஆம் நாளன்று சென்னையில் ஒரு விழாவில் கலந்து கொண்டபோது சிலர் தாக்க முயன்றுள்ளதால் அவருக்குப் பாதுகாப்புத் தர வேண்டியதன் அவசியம் குறித்து .. 264—267

3. விதி 111-ன்கீழ் துணை வினாக்களுக்கான விடைகளுக்குத் திருத்த அறிக்கை .. .. 267—268

4. கவன ஈர்ப்பு—

(அ) கிருஷ்ணகிரி வட்டம், மரிக்கம்பள்ளியிலுள்ள கெம்பிளாஸ்ட் தொழிற்சாலைக் கழிவுநீர் தென்பெண்ணை ஆற்றில் கலப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு .. .. 268—272

(ஆ) தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி உயர்த்தப்படாதது குறித்து .. .. 272—275

5. மானியக் கோரிக்கைகள் 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 36—பாசனம் ..

(ஆ) கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் .. .. .. ..

(இ) கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும்.

(ஈ) கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்.

(உ) கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு .. .. .. ..

(ஊ) கோரிக்கை எண் 53—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு..

(எ) கோரிக்கை எண். 54-சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

275-281

| | பக்கங்கள் |
|---|---|
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 282 |
| *பேராசிரியர் க. பொன்னுசாமி | 283—290 |
| *திரு. சா. சிவசுப்பிரமணியன் | 290—294 |
| திரு. எஸ். டேனியல்ராஜ் | 294—298 |
| *திரு. ஆச்சியூர் எம். மணி | 298—304 |
| *திரு. கோ. வீரையன் | 304—315 |
| திரு. எம். சேட்டு | 315—316 |
| *திரு. இரெ. இராசமாணிக்கம் | 316—323 |
| திரு. பி. எச். பாண்டியன் .. | 323—327 |
| திரு. எம். முத்தையன் | 327—332 |
| *திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 332—340 |
| திரு. வே. நா. சுப்பிரமணியன் | 340—345 |
| திரு. த. பொன்முடி .. .. | 346—351 |
| திரு. பி.என். வல்லரசு | 351—356 |
| *திரு. கா. அண்ணாதுரை .. | 356—360 |
| திரு. சி. கிருஷ்ணன் | 360—363 |
| திரு. ஆர். ஈஸ்வரன் | 363—367 |
| *திரு. க. கன்னையன் | 367—370 |
| திருமதி பாப்பா உமாநாத் | 370—376 |
| திரு. ந. சௌந்திரபாண்டியன் | 376—381 |
| *திரு. ஏ. கோதண்டம் | 381—384 |
| *திரு. ஆ. பாலையா | 384—391 |
| திரு. அ. மு. ஹமீது இப்ராகிம் | 391—396 |

| | பக்கங்கள் |
|---|---|
| *திரு. சோ. அழகர்சாமி | 396—403 |
| திரு. வி. கே. சின்னசாமி | 403, 405, 407, 409, 412—417 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 456—457 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 19, பிரமோதூத — திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, மே 2, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.''

பொறுமையாகச் செயற்பட வேண்டிய காலத்தில், கொக்கு போல் அமைதியாக இருக்க வேண்டும்; காலம் வாய்த்தபொழுது அதன் குத்துப்போல, தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

பொதுப் பணி ஆற்றுவோருக்கு இஃது ஓர் இலக்கணமாகும்.

1. வினாக்கள்—விடைகள்.
உடுக்குறியிட்ட வினாக்கள்.

## கள்ளத்தனமாக கருங்பாறையை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்வதைத் தடுத்தல்.

*2770 திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் கள்ளத்தனமாகக் கரும்பாறையை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்வதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கனிமக்குத்தகை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள கரும்பாறை குவாரிகளில் பாறைகள் உற்பத்தி மற்றும் இரும்பு ஆகியவைகளை சுரங்கம் மற்றும் கனிமத்துறையின் மாவட்ட அதிகாரிகளால் தணிக்கை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெட்டி எடுக்கப்பட்டு, சீர் செய்யப்பட்ட ஏற்றுமதிக்கு உகந்த அளவு பாறைகளைக் குவாரியிலிருந்து வெளியே எடுத்துச் செல்ல குத்தகைதாரர், மாவட்ட அதிகாரிகளிடமிருந்து பெர்மிட் பெற வேண்டும். இதனால், கள்ளத்தனமாக வெளியே எடுத்து செல்வது தடுக்கப்படுகிறது. ஒவ்வொரு அனுமதிச் சீட்டிலும் எடுத்துச் செல்லப்படும் பாறைகளின் எண்ணிக்கை, கனபரிமாணம் ஆகியவை குறிக்கப்படுகின்றன. ஏற்றுமதிக்காக எடுத்துச் செல்லப்படும்போது, சோதனைச் சாவடிகளிலும் திடீர் சோதனைகள் செய்யப்படுகின்றன. குத்தகை வழங்கப்பட்ட குவாரிகளுக்குப் பக்கத்திலே உள்ள குத்தகை வழங்கப்படாத இடங்களும் மாவட்ட அதிகாரிகளால் கண்காணிக்கப் படுகின்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து கள்ளத்தனமாக கரும்பாறைகளை வெட்டியெடுத்துச் செல்வதாக, பல்வேறு புகார்கள் பத்திரிகையிலும் சரி—செய்தியாகவும் இன்றைக்குச் சொல்லப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு இதுவரையில் எத்தனை வந்திருக்கின்றன? அவைமீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிக் குறிப்பிட்டு புகார்கள் ஏதும் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர். அவர்களுக்கு அது போன்ற புகார்கள் ஏதேனும் வந்தால், அதனை அரசுக்கு அனுப்பி வைத்தால், ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 3 ஆண்டுகளில், சிறு கனிமங்களின் மூலம் பல்வேறு தவறுகளுக்காக வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை 1986-87-இல் ரூ. 5.64 லட்சமும், 1987—88-இல் ரூ. 10.35 லட்சமும், 1988—89-இல் ரூ. 15 லட்சமும் ஆகும். இவையெல்லாம், அங்கு நடைபெற்ற தவறுகள், சில முறைகேடுகள் ஆகியவற்றுக்காக வசூலிக்கப்பட்ட அபராதமாகும். அஃதன்னியில், பெருமளவுக்குக் கள்ளத்தனமாகக் கற்கள் கொண்டு போவதாகப் புகார்கள் அரசுக்கு வரவில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிமப் பாறைகளை வெட்டுவதற்காக குத்தகை கொடுக்கின்ற நேரத்தில், புவியியல் ஆராய்ச்சியின் மூலமாக எவ்வளவு கிடைக்கும் என்பதை அதிகாரிகள் ஆராய்ந்து, அந்தக் குத்தகையை நிர்ணயம் செய்கிறார்களா? அப்படி இல்லையென்றால், எந்த அடிப்படையில் அப்படிப்பட்ட குத்தகை நிர்ணயம் செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே எந்த அளவுக்கு, எவ்வளவு ஆழத்திலே கனிமப் பொருள் இருக்கிறது—அந்தக் கல் இருக்கிறது என்பதெல்லாம் கணக்கிடப்பட்டு, அதன் மூலம் எவ்வளவு வெட்டியெடுக்க முடியும் என்பது கணக்கிடப்பட்டு, பத்தாண்டு காலத்திற்கு, முதல் தடவையாக குத்தகை வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகிற அந்தக் குத்தகையிலே கூட, குத்தகை எடுத்தவர்கள், இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாக தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்ற நிபந்தனையோடுதான் குத்தகை வழங்கப்படுகிறது.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பாறைகள் 'டாமின்' நிறுவனம் மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறு ஏற்றுமதி செய்த வகையிலே இந்த அரசுக்கு எவ்வளவு லாபம், எவ்வளவு நஷ்டம் என்பதையும், ஆண்டு வாரியாக எவ்வளவு லாப நஷ்டங்கள் கணக்கிடப்பட்டுள்ளன என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த இரண்டு கேள்விகளையுமே, திரு. பெரியசாமி அவர்கள் கேட்ட கேள்வியிலே இணைத்து எடுத்திருக்கலாம். ஏனென்றால், அதற்குரிய விளக்கங்களில், எனக்குள்ள தகவலின்படி, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற வினாவிற்கு, விளக்கமான பதிலாகத் தரவேண்டுமேயானால், 1985—86-இல் இந்த 'டாமின்' மூலம் ஈட்டிய மொத்த இலாபம் 134 இலட்சம் ரூபாய். ஆனால் செலவு போக நிகர இலாபம் 55 இலட்சம் ரூபாய்தான். 1986—87-இல் மொத்த இலாபம் 157 இலட்சம் ரூபாய். ஆனால் செலவு போக நிகர இலாபம் 73 இலட்சம் சொச்சம் ரூபாய்தான். 1987—88-இல் மொத்த இலாபம் 214 இலட்சம் ரூபாய். ஆனால் நிகர நஷ்டம் 11.27 இலட்சம் ரூபாய். 1988—89-இல் மொத்த இலாபம் 227.81 இலட்சம் ரூபாய். நிகர இலாபம் 211.98 இலட்சம் ரூபாய். அதற்கு முன்பெல்லாம், 1988—89-க்கு முன்பெல்லாம் மொத்த இலாபம் அதிகமாகவும், செலவு அதிகமாகவும் இருந்து நிகர இலாபம் மிகக் குறைவாக இருந்திருக்கிறது. 1988—89-இலே தான் ஒரு திருப்புமுனை ஏற்பட்டு, மொத்த லாபம் 227 இலட்சம் ரூபாய் நிகர இலாபம் 211 இலட்சம் ரூபாய் என்று வந்திருக்கிறது. 1989—90-இல் மொத்த இலாபம் 564 இலட்சம் ரூபாய். நிகர இலாபம் 541 இலட்சம் ரூபாய்.

9-05 மணி

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் அதிகாரப்பட்டி கிராமத்திலே உள்ள பட்டா நிலத்திலே கருங்கல் வாங்கிக்கொண்டு பக்கத்திலே இருக்கக்கூடிய ஃபாரஸ்ட் குன்றிலே வந்து கருங்கல் வெட்டப்படுவதாக அந்தப்பகுதி மக்கள் 16, பிப்ரவரி 1990-இல் மனு கொடுத்து, நடவடிக்கை இல்லையெனில் உண்ணாவிரதம் இருப்போம் என்று சொன்ன தகவல் அரசுக்கு வந்ததா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை இங்கே நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக்கேள்வி கேட்டால் நலமாக இருக்கும். அது மாத்திரமல்ல, அது குறித்த விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அக்கறையோடு எனக்குத் தருவாரேயானால், மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதையறிந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### கருப்புக்கல் தொழிற்சாலை.

*5480 திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

[1990 மே, 2

பெரியார் மாவட்டம், அந்தியூர், பர்கூர் மலைப் பகுதியில் கருப்புக்கல் மற்றும் விலை உயர்ந்த கற்கள் ஏராளமாகக் கிடைப்பதால் அங்கு ஒரு கருப்புக்கல் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பர்கூர் மற்றும் அந்தியூரில் கிடைக்கும் கற்களை மாத்திரம் கொண்டு தனியாக ஒரு கருப்புக் கல் அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலையை அமைப்பது என்பது இயலாது.

**திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்தியூர், பர்கூர் மலையிலே கிடைக்கின்ற கருப்புக் கல்லை மட்டும் வைத்து தொழிற்சாலை அமைக்கமுடியாது என்று சொன்னார்கள். அந்த பர்கூர் மலையிலே, பெஜிலிட்டி, செங்குளம் போன்ற இடங்களில் மிகப் பெரிய கரும்பாறைகள், கருப்புக் கற்கள் இருக்கின்றன. கோடிக்கணக்கான இலாபம் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாகத் தனியாருக்குக் கிடைத்து இருக்கிறது. அந்தப் பகுதியில், ஆதிவாசிகள், ஆதிதிராவிட மக்கள் வேலையிழந்து இருக்கிறார்கள். அவர்கள் கொடைக்கானல் போன்ற இடங்களுக்கு மரங்களை வெட்டச் செல்கிறார்கள். தனியார் நிலங்களிலே கருப்புக்கல் இருந்தாலும் கூட, அவைகளை வெட்டி எடுப்பதற்கு பாலிஷ் யூனிட் அமைக்கவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். விரைவிலே அந்த பாலிஷ் யூனிட்டுகளை அமைத்து, அந்த மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ;** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய இந்தக் கருத்தினை யோசிப்பதற்கு முன்பு, நாம் தெரிந்துக் கொள்ளவேண்டியது, பர்கூர் கிராமத்தில் சுமார் மூன்று ஹெக்டேர் பரப்பிலே வர்த்தக முறையில் கருப்புக் கற் வெட்டி எடுக்க அரசு நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குக் குத்தகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அங்கே இந்தக் கற்களை வெட்டி எடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதைக் கண்டறிந்து, இயலுமானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவான முறையிலே அங்கே உள்ள நெறிகளைப் பற்றிப் பரிசீலனை பண்ணுவதாகச் சொன்னார்கள். அந்தப் பகுதியிலே ஏராளமான கற்களை எடுத்து தனியார் அதிக இலாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கற்களுக்குப் போடுகின்ற வரி அங்கே மலைவாழ் மக்கள் பகுதி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்



1990 மே, 2]

எல்லாம் அரசிற்கே போகிறது. ஊராட்சி மன்றத்திற்கு அந்த வரி சேர்வது இல்லை. அந்த வரியை அந்த ஊராட்சி மன்றத்திற்குச் சேர்த்து அந்தப் பகுதியினுடைய வளர்ச்சிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் அந்தியூர், பர்கூர் ஆகிய பகுதிகளில் கருப்புக்கல் மாத்திரம்தான் இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கின்றது. வேறு கனிமங்கள் எதுவும் இல்லை. இருந்தாலும், இந்தப் பகுதி மாத்திரமல்ல, வேறு எல்லாப் பகுதிகளிலுமே அந்தக் கல் ஏலம் போடப்படும்போது அல்லது குத்தகைக்கு விடப்படும்போது, இந்த நேரத்தில் எல்லாம் அதன்மூலமாகக் கிடைக்கின்ற வரியில் ஒரு கணிசமான சதவிகிதம் ஊராட்சிகளுக்குத் தரவேண்டுமென்று அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது.

9-10 மணி

**திரு. ரா. சொக்கர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை அமைக்காமலேயே, 'ரா-ஸ்டோன்' மட்டும் ஏற்றுமதி செய்வதற்காகப் பொது ஏலத்தின் மூலமாக 'மைனிங் லைசன்ஸ்' கொடுக்கப்படுகிறதா? தொழிற்சாலை அமைக்கும்போது—'கட்டிங் அண்டு பாலீஷங் இண்டஸ்ட்ரி' அமைக்கும்போது, அறிவிக்கப்பட்ட 103 தாலுக்காக்களில் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட 'எம்.பி.சி.' யாக அறிவிக்கப்பட்ட 30 தாலுக்காக்களில் அமைக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 'கவர்ன்மெண்ட் சப்சிடி' 15 சதவீதம் கொடுப்பதில்லை என்று சொல்கிறார்கள். தொழிற்சாலைகள் அமைக்க ஊக்குவிக்கும்பொருட்டு, பிற்படுத்தப்பட்ட தாலுக்காகளில் அமைக்கும்போது தொழிற்சாலைகளுக்கு மானியம் 15 சதவீதம் உண்டு என்று அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் நாம் ஏற்கனவே அறிவித்துள்ள 105 வட்டங்களில் அமைக்கப்படுகின்ற தொழிற்சாலைகள் எதுவாக இருந்தாலும், அதற்கு மானியம் நிச்சயமாக வழங்கப்படும். அப்படி இல்லையென்றால், அந்தக் குறிப்புகள் அரசுக்குத் தெரிவிக்கப்படுமேயானால், உடனடியாகக் கவனிக்கப்படும்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பாறை கற்களை வெட்டி எடுக்கக் கூடிய அந்தத் துறையிலே, பெருமளவுக்கு அரசு நிர்வாகம் செய்வதைவிட, தனியார்கள் தலையிட்டு, ஏராளமான லாபங்களை ஈட்டுகிறார்கள். அதைத் தடுத்து, அதாவது தனியார்களுக்குக் கொடுக்கக்கூடிய குத்தகை முழுவதையுமே ரத்து செய்து, அரசு கனிம நிறுவனத்தின் கீழேயே, பூராவையுமே கொண்டுவரக்கூடிய ஒரு முயற்சியை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1990 மே, 2

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொள்கை ரீதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. நான் தொழில் மானியத்திலே பேசும்போது, அதுபற்றிக் குறிப்பிட்டு இருக்கிறேன். 1988ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் அரசாங்கம், அப்போதைய கவர்னர் ஆட்சியில் புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்களில் காணப்படும் கருப்புக்கற்களை வெட்டியெடுப்பதற்கு, கருப்புப் பாறைகள் வெட்டி மெருகூட்டும் தொழிற்கூடம் உள்ளவர்களுக்கும், அவ்வாறு தொழில் திட்டம் உள்ளவர்களுக்கும், சுரங்கக் குத்தகை அளிப்பதெற்கென, சில கொள்கை மாற்றங்களை அறிவித்தது. அதன்படி, கருப்புப் பாறைகள் மீதான உரிம வரி, கன மீட்டருக்கு ரூ. 200-லிருந்து ரூ. 400 ஆக உயர்த்தப்பட்டது. பின்னர் இந்த அரசு, பொறுப்பேற்ற பிறகு, 1988 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட மாற்றங்களை ஏற்றுக் கொண்டு, டெண்டர் உறுதி செய்யப்பட்டால், குவாரி குத்தகை 10 ஆண்டுக் காலத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்றும், அரசுத் துறை நிறுவனமான, 'டாமின்' நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட அரசு புறம்போக்கு நிலங்களைத் தவிர, மற்ற புறம்போக்கு நிலங்களுக்கு மட்டுமே சுரங்கக் குத்தகைக்கான டெண்டர் அனுமதிக்கப்படுவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. இதில் மிக மிக முக்கியமான பிரச்சினை என்னவென்றால், இந்தப் பாறைகள் இருக்கின்ற பரப்பளவு, தமிழகத்திலே பெரும்பகுதி இருக்கிறது. கிட்டத்தட்ட 30, 35 ஆயிரம் ஏக்கரா என்று இருக்கும்போது, 'டாமின்' நிறுவனம் அமைக்கப்பட்டு இத்தனை ஆண்டுக்காலத்திலே குறைவான பகுதியிலேதான் கற்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. எனவே, மிச்சமுள்ள பகுதிகளிலே, இதுபோன்ற முறையிலே தனியாரும் அந்தத் தொழிலை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டால், அரசுக்கு வருமானம் வருமென்ற முறையிலேதான், இப்படிக் குத்தகைக்கு விடப்பட்டு, கடந்த ஆண்டு சனவரி மற்றும் பிப்ரவரி திங்களில் மாத்திரம், தர்மபுரி, சேலம், தென்னாற்காடு, பெரியார், திருவண்ணாமலை சம்புவராயர், வடாற்காடு—அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களில் டெண்டர் விடப்பட்ட வகையில், 790.50 ஏக்கரா பரப்பளவுள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் டெண்டர் மூலமாகத் தரப்பட்டு, அதன் மூலம் மாத்திரம், அரசுக்குக் கிடைத்த வருவாய்—டெண்டர் விட்டதிலே மாத்திரம், ரூ. 8.73 கோடி வந்திருக்கிறது. இந்தக் கொள்கையை நாம் கடைப்பிடிக்காமல் இருந்திருந்தால். இந்த 8.73 கோடி ரூபாயும் பூமிக்குள்ளேயே இருந்திருக்கும்; நமக்குக் கிடைத்திருக்காது. இஃதன்னியில், இவ்வாறு குத்தகை மூலம் வெட்டி எடுக்கப்படுகின்ற கற்களுக்கு வருகின்ற வரியின் மூலமும் அரசுக்குத் தொடர்ந்து வருமானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. வி. கே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர், அந்தியூர் மலைப் பகுதிகளைத் தவிர, பெரியார் மாவட்டத்தில் வேறு எந்தெந்தப் பகுதிகளிலே



1990 மே, 2]

இப்படிப்பட்ட கற்கள் கிடைக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதோடு, அந்தியூர் பகுதியிலே கட்டாயமாக தொழிற்சாலை உருவாக்கப்படவேண்டும்; ஏனென்றால், நாங்கள் அவரைக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது; காரணம், எங்கள் பெரியார் மாவட்டம் அந்தியூரிலே சம்பந்தம் வைத்திருக்கிறீர்கள்; அங்கே இருந்து ஒரு பெண்ணை உங்களுடைய இல்லத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரடியாக வினாவிற்கு வாருங்கள்.

**திரு. வி. கே. சின்னசாமி :** நாங்கள் எல்லோரும், பெருமையோடு, எங்களுடைய ஊரிலே நீங்கள் சம்பந்தம் வைத்திருப்பதை எண்ணிப் பெருமைப்படுகிறோம். ஆகவே, அந்த மருமகள் சார்பாக உங்களிடத்திலே கேட்டுக்கொள்வது, பெரியார் மாவட்டத்திலே அவசியம் நீங்கள் சம்பந்தி என்ற அடிப்படையிலே, கருப்புக் கல் தொழிற்சாலையை உருவாக்கித்தர முன் வருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நல்லவேளை பெண்ணைக் கொடுத்துவிட்டு கல்லைத்தான் கேட்கிறார். பெண்ணைக் கொடுத்துவிட்டு, கண்ணைக் கேட்கவில்லை. அதுவரையில் மகிழ்ச்சி. (சிரிப்பு).

9-15 மணி

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருங்கல், பாலீஷ் கல் தமிழகத்திலே மிகவும் கிராக்கியாக இருக்கிறது. தமிழகத்தில் வேறு எந்தெந்த இடங்களில் இந்தக் கற்கள் கிடைக்கின்றன என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அது மாத்திரமல்லாமல், மைக்காவும் எடுக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அதுவும் எங்கே கிடைக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மைக்கா பற்றித்தனிக் கேள்வி கேட்கவேண்டும். இந்தக் கல்லைப் பொறுத்தவரையில் தென்னாட்டிலேயே, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம் ஆகிய இந்த மாநிலங்களில் உயர்ந்த தரமுடைய கற்கள் கிடைக்கின்றன. தமிழ்நாட்டில், குறிப்பாக செங்கை—அண்ணா மாவட்டம், வடாற்காடு, தென் ஆற்காடு, சேலம், தர்மபுரி, பெரியார் மாவட்டங்களில் இந்தக் கருப்புப் பாறைகள் காணப்படுகின்றன. தென்னாற்காடு, சேலம், தர்மபுரியிலே அமைந்துள்ளவை, அந்தக் கருப்புப் பாறைகளிலே மிக முக்கியமானவையும், உயர்ந்தவையுமாகும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிமங்கள் வெட்டி எடுக்கப்படுகிறபோது, லோக்கல் செஸ் மற்றும் லோக்கல் செஸ் சர்சார்ஜ் என்று 295 விழுக்காடு வசூலிப்பதற்கு ஏற்பாடு நடந்ததாகவும், அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றதாகவும் செய்திகள் வந்தன. இப்போது அதனுடைய நிலைமை என்ன? அது சரியாக வரவில்லையென்றால், மற்ற மாநிலங்களிலே இருப்பதைப் போல, 'மினரல் டாக்ஸ்' என்று சென்ட் பர்சென்ட் போட்டு, அதை உரிய பஞ்சாயத்துக்களுக்கு நிதியாதாரமாகத் தருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த வினாவிலே இந்தப் பிரச்சினை எழவில்லை. இதற்குத் தனிக் கேள்வி கேட்டால், விவரமறிந்து, விளக்கமாகப் பதில் அளிக்க இயலும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கருங்கல் தொழிற்சாலையைத் தனியாருக்கு ஏலம் விடுகின்றபோது, ஏலம் எடுக்கின்ற தனியார்கள் சொந்தமாக, அதை பாலீஷ் செய்கின்ற தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்கிற ஒரு விதி இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படி இருந்தால், அதைத் தளர்த்தி, இல்லாதவர்களுக்கும் குத்தகை விட அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கின்ற நிலையில், குத்தகை எடுத்தவர்கள், இரண்டு ஆண்டுக்குள் தொழிற்சாலையை அமைக்கவேண்டும் என்ற ஒரு நிபந்தனை இருப்பதை இன்றைக்கே இரண்டு முறை சொல்லியிருக்கிறேன். இப்போது திரு. திருவேங்கடம் அவர்கள் மூன்றாவது முறையாகக் கேட்கிறார். இப்போதும் சொல்கிறேன். இந்தக் கல்லைக் குத்தகைக்கு எடுக்கின்றவர்கள் இரண்டு ஆண்டுக்குள் அதற்கான தொழிற்சாலையை அமைக்கவேண்டும் என்று இருக்கிறது. அதைத் தளர்த்த வேண்டும், முடியுமா என்று கேட்டிருக்கிறார். அது இயலாது.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் வாங்கப்பட்ட
நவீன அச்சு இயந்திரம்.

*1630 திரு. கோ. பூவராகன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குப் பல லட்ச ரூபாய் செலவில் வாங்கப்பட்ட நவீன அச்சு இயந்திரம் முழுமையாக பயன்படுத்தப்படாத சூழ்நிலை இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?





(ஆ) அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தினால் வாங்கப்பட்ட நவீன அச்சு இயந்திரம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அது எத்தனை இலட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்டது? என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றன? பல்கலைக் கழகத்தினுடைய வேலைகள் மட்டும் நடைபெறுகின்றனவா? மற்றும் வேறு இடங்களிலிருந்து அது சம்பந்தமாக அதற்கு வேலைகள் வாங்கப்பட்டு, அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் ஒரு தன்னாட்சி நிறுவனம். ஒரு அச்சுப் பொறியைப் பயன்படுத்துவது அவர்களுடைய பொறுப்பு. ஆனால் விவரங்கள் தந்திருக்கிறார்கள். அது 11,25,138— ரூபாய்க்கு வாங்கப்பட்டது. அது ஒரு சிறப்பு வகையான அச்சு இயந்திரம். அந்தச் சிறப்பு வகையான அச்சு இயந்திரம் பல்கலைக் கழகத்தால் அச்சிடப்படுகிற நூல்களை அச்சிடப் பெருமளவிற்குப் பயன்படுத்தப்படுகிறது. அரசாங்கத்திலே இருந்து அல்லது வேறு தமிழ்த் துறையிலே இருந்து ஒன்றிரண்டு நூல்கள் அச்சிடுவதற்கும் அவர்களிடத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. முழு அளவிலே அது செயல்படுவதாக அண்மையிலே வந்த அவர்களுடைய குறிப்பு தெரிவிக்கிறது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு நவீன இயந்திரம் என்ற காரணத்தினாலே முழுமையாக அந்தப் பல்கலைக் கழகம் அதைப் பயன்படுத்த முடியவில்லை. அதனால்தான் வேறு இடங்களிலே அதுபோன்ற வேலைகள் ஏதாவது கிடைக்கும் என்று சொன்னால் அந்தப் பல்கலைக் கழகம் அதனைப் பெற்று நல்ல முறையிலே முழுமையாக அதைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. அவர்களுக்குக் கிடைக்கிற வாய்ப்பைப் பொறுத்து பயன்படுத்துவார்கள்.

## ஆலங்குளத்தில் பெண்கள் பாலிடெக்னிக்.

*7755 திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு கல்வி அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளத்தில் பெண்கள் பாலிடெக்னிக் நிறுவப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் பகுதியில் எந்தவிதமான கல்லூரியோ அல்லது இதுபோன்ற பாலிடெக்னிக்கோ பெண்களுக்கு இல்லாமல் இருப்பதனால், அந்தப் பகுதியில் பெண்கள் படிப்பதற்கு ஒரு பாலிடெக்னிக் அமைத்துக் கொடுப்பது மிக அவசியமாக இருப்பதனால், அவசியம் அதை ஏற்படுத்த முடியுமா என்பதை அரசு அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

9-20 மணி

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு இரண்டுவிதமான விடைகள் வழங்கலாம். ஆலங்குளப் பகுதிபோல் தமிழ்நாட்டிலே 150, 200 பகுதிகளாவது இருக்கின்றன. இரண்டாவது இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பாலிடெக்னிக்குகளுக்கு மேல் அதிகமாக ஏற்படுத்துவதற்கு அவசியமில்லையென்பது நிபுணர் குழுவினுடைய கருத்து. இப்பொழுது ஆண்டுதோறும் 22 ஆயிரம் மாணவர்கள் பாலிடெக்னிக்களிலே படித்து வெளி வந்துகொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், அரசு பல ஆதாரங்கள் அல்லது சூழ்நிலைகளை வைத்து எந்த இடத்தில் பெண்களுக்கான, மகளிர்களுக்கான, பாலிடெக்னிக் ஒன்றிரண்டு ஏற்படுத்த முடியுமோ அவற்றை அவ்வப்போது பரிசீலிக்கும்.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்காகத் தனியாக அமைக்காவிட்டாலும், ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிப்பது போலாவது ஒரு பாலிடெக்னிக் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் அங்கேயுள்ள மலைவாழ் மக்களுக்காக, குறிப்பாகத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக அங்கே உள்ள தோட்ட முதலாளிகளுடைய சங்கம், நிர்வாகிகளுடைய சங்கம் ஏறத்தாழ 50 லட்சம் ரூபாய் தருவதாக முன்வந்திருக்கிறார்கள். அங்கே ஒரு பாலிடெக்னிக் தொடங்க ஏற்பாடு இருக்கிறது. அதேபோல் நிதி வருகிற வாயில் ஏதாவது தெரியுமானால், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் ஏற்படுத்த முயற்சிக்கலாம்.



**திரு. அ. இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள், தர்ம சிந்தனையுள்ள அமைப்புகள் போன்றவை தனியாக பாலிடெக்னிக் ஏற்படுத்த மனுச் செய்தால் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிறுவனத்தினுடைய வருமான வாயில்கள், அவர்களுக்குள்ள மொத்த செல்வ மதிப்பு அமைப்பு இவைகளைக் கருதிப்பார்த்து ஏற்க முடியுமானால், ஏற்கலாம்.

## சோழன் போக்குவரத்துக் கழகத்தின் புதிய கிளை நிலையம் அமைத்தல்.

*224 திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவையாறு நகரில் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் புதிய கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தகுந்த நிலம் கையகப்படுத்தப்பட்டதும், கிளை நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

**திரு. துரை சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறில் சமீபத்தில் 30 ஏக்கர் புன்செய் நிலம் சத்திரம் நிறுவனத்தின் மூலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. சத்திர நிருவாகத்திடமிருந்து நிலத்தைப் பெற்று போக்குவரத்து கிளை நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறில் கிளை நிலையம் அமைக் கின்ற மிக முக்கியமான பணி விரைவிலே தொடங்கியாக வேண்டும். நன்செய் நிலமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே நிலம் நமக்குப் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. சத்திர நிலம் அரசின் பொறுப்பிலே இருக்குமானால், சோழன் போக்கு வரத்துக் கழக நிருவாகிகளுக்குத் தெரிவித்து, அதை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அணுகி அந்த நிலத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கிளை நிலையம் எவ்வளவு மதிப்பீட்டில் எப்பொழுது அமைக்கப்படும் என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்குத் தேவையான இடம் கிடைத்ததற்குப் பிறகு, இடத்தினுடைய பரப்பளவு, அங்கே வந்து நிற்கக்கூடிய பேருந்துகளினுடைய எண்ணிக்கை, வந்து செல்லக்கூடிய பயணி கள், அங்கு தங்கி ஓய்வு எடுக்கக்கூடிய தொழிலாளர்கள் ஆகிய வற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் மதிப்பீடு தயார் செய்யப்பட வேண்டும்.

### மகளிர் பேருந்துகளில் மகளிர் நடத்துநர்களை நியமித்தல்

*5098 திரு. சு. குருநாதன் :

திரு. சா. கணேசன் :

திரு. என் பழனிவேல் :

திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மகளிர் பேருந்துகளில் மகளிர் நடத்துநர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 சதவீதம் கொடுக்க முன்வந்துள்ள இந்த அரசு மகளிரை ஓட்டுநர் வேலைக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடத்துநரா, ஓட்டுநரா? மூலக் கேள்வி நடத்துநர்.

திரு. சா. கணேசன். நடத்துநர்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு அரசுப் பணியில் 30 சத வீதம் கொடுப்பது என்கிற கொள்கையைப் பொறுத்தவரை, போக்கு வரத்துத் துறையில் ஏற்கெனவே எழுத்தர்களாக அல்லது இன்னும் பல்வேறு அலுவலகப் பணிகளிலே பெண்கள் ஈடுபடுத்தப் பட்டிருக்கிறார்கள், தேர்வு செய்யப்படவிருக்கிறார்கள். ஆனால் நடத்துநர் பணியைப் பொறுத்தவரையில், ஒரு சிரமமான பணி என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். இருந்தாலும் கூட பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஏற் கெனவே, 8 பெண்கள், 8 ஆண்டுகள், 9 ஆண்டுக் காலமாகப் பணியாற்றி வருகின்றார்கள். தொடர்ந்து இன்னும் சிலபேர் கண்டக்டர் 'லைசன்ஸ்' எடுத்து அவர்கள் இந்தப் பணியிலே ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதற்காக வேலைவாய்ப்பு அலு வலகத்தில் பதிவு செய்து இருக்கிறார்கள் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்ரீதர் அவர்கள் பலமுறை அரசுக்கு விண்ணப்பம் கொடுத்து, ஆலோசனைக் கூட்டத்திலே கூட அதை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் கூடுதலான கண்டக்டர்களை நியமனம் செய்யும்போது பெண்களை நியமனம் செய்யலாம் என்கின்ற யோசனை இப்பொழுது பரிசீலனையில் உள்ளது.

9—25 மணி

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர்-சிறுவர்களுக்கான சிறப்புப் பேருந்துகளில் பெண் கண்டக்டர்கள் இல்லாததால் அந்தப் பேருந்துகளில் பயணம் செய்கின்ற பயணிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார் கள். ஆகவே அந்தப் பேருந்துகளிலாவது கட்டாயம் பெண் கண்டக்டர்களை நியமனம் செய்ய, அரசு உத்தரவிட்டுள்ள முடிவினை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மகளிர்-சிறுவர்களுக்கான பேருந்துகள் எல்லா இடங்களிலும், எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் இயக்கப் படுவதில்லை. குறிப்பாக, பல்லவன் போக்குவரத்துக் கழகம், ராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்கு வரத்துக் கழகம், அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம்

ஆகிய கழகங்களிலே மட்டும்தான் குறிப்பிட்ட நேரத்தில், காலை நேரம் அலலது மாலை நேரங்களில்தான் இப்படிப்பட்ட பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே எல்லா இடங்களிலும் போதுமான அளவுக்கு, முழு நேரம் ஓட்டக்கூடிய அளவிற்கு அந்தப் பேருந்துகளுக்குக் கூட்டம் இல்லாது இருக்கின்ற காரணத்தால் முழு நேர ஊழியர்களாக பெண்களை அமர்த்துவது என்பது கடினமான காரியம்.

**திருமதி எஸ். பி. சற்குணம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் பேருந்துகளில் பெண் கண்டக்டர்களை நியமிப்பதில், முழு நேரம் அவர்களைப் பயன்படுத்திட இயலாமல் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மற்ற நேரங்களில் பேருந்துகள் புறப்படும் இடங்களில் பயணிகளுக்கு முன்னதாகவே டிக்கெட் கொடுக்கின்ற பணியில் பெண்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள முடியும். அதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்டேண்ட் கண்டக்டர்ஸ் என்று சொல்லக்கூடிய அந்தப் பொறுப்புக்கு நெரிசல் அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகளில் அத்தகைய பொறுப்புகளை உருவாக்கி அதிலேயும் பெண் கண்டக்டர்களை நியமிக்கலாம் என்கிற யோசனையும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் பேருந்துகளில் மகளிரை நடத்துநர்களாக வைத்துக்கொள்வது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிரமம் இல்லாமல் எந்த வேலையும் இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். என்றாலும் கண்டக்டர் வேலை பார்ப்பது என்பது பெரிய சிரமம் என்று நாங்கள் கருதவில்லை. ஆகவே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் மட்டுமல்லாமல் பல மாவட்டத் தலைநகரங்களில் மகளிருக்காக விடக்கூடிய அந்தப் பேருந்துகளிலும் பெண்களைக் கட்டாயமாக, கண்டிப்பாக நியமனம் செய்ய வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, குறிப்பாக, நெரிசல் அதிகமாக இருக்கக்கூடிய வழித்தடங்களில் இரண்டு கண்டக்டர்களை நியமிக்க வேண்டுமென்ற முடிவு சமீபத்திலே பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே எடுக்கப்பட்டுள்ளது. அப்படி இரண்டாவது கண்டக்டர்களாக நியமிக்கக்கூடியவர்களைப் பெண்களாக நியமிக்கலாம் என்ற யோசனையும் இருக்கிறது. அதேபோல, ஸ்டேண்ட் கண்டக்டர்ஸ், ஆங்காங்கே பஸ் ஸ்டாண்டில் நின்று முன்கூட்டியே



பயணச் சீட்டுகளை விற்கக்கூடிய வகையில் நியமிக்கக்கூடிய கண்டக்டர்களையும் பெண் கண்டக்டர்களாகவே நியமிக்கலாம் என்கின்ற யோசனையும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பரிசீலனையிலே இருக்கிறது. ஆகவே, கூடுமானவரை ஏற்கெனவே கண்டக்டர் லைசன்ஸ் எடுத்து வேலைவாய்ப்பின்றி இருக்கக்கூடிய அத்தகைய பெண்களுக்கு இந்த வேலை வாய்ப்பு நிச்சயமாகப் பயன்படும்.

### பல்லவன் போக்குவரத்து கழகம் அரக்குச் செலுத்த வேண்டிய கடன்.

***6139 திரு. பி. என். வல்லரசு :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் அரசுக்குச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் மற்றும் அதற்கான வட்டி, அபராத வட்டித் தொகை எவ்வளவு ?

(ஆ) இத்தொகையினை வசூலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| (அ) 31—3—1989-ல் நிலுவையில் உள்ள குறித்த காலக் கடன்கள். | 2,265.29 |
| 31—3—1989-ல் நிலுவையில் உள்ள வழிவகை முன்பணம். | 600.80 |
| 31—3—1989-ல் குறித்த கடன்கள் மீதான நிலுவையில் உள்ள வட்டி. | 1,816.3 |
| 31—3—1989-ல் குறித்த கால கடன்கள் மீதான அபராத வட்டி. | 15.51 |
| 31—3—1989-ல் வழிவகை முன்பணம் மீதான நிலுவையில் உள்ள வட்டி. | 619.94 |
| ,, அபராத வட்டி | 122.93 |

(ஆ) புதிய பேருந்துகளை பெருக்க விடவும், பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதியன ஓடவிடவும் அரசிடம் பெற்ற குறித்த காலக் கடன்கள் மற்றும் வழிவகை முன்பணத்தொகை அல்லது நிலுவையாக உள்ள வட்டியினையும் திருப்பிச் செலுத்த இயலாத நிலையில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் உள்ளது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலதனத்தை சீர்செய்யவும் மிகையான ஊழியர்களை குறைக்கவும் வருமான இழப்பினை சீர்செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9-30 மணி

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுள்ள இத்தகைய நஷ்டத்திற்கு என்னென்ன காரணங்கள் என்று இன்றைய அரசு பரிசீலனை செய்துள்ளதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளவுக்கு அதிகமான ஊழியர்களை வேலைக்கு நியமித்தது ஒரு காரணம். நஷ்டம் என்பது பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் நீண்ட நாட்களாக இருந்து வருகிற ஒன்று. அதிலே மட்டும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் ஆட்சி மாற்றமோ கட்சி மாற்றமோ இல்லாத அளவுக்கு எப்போதுமே நஷ்டம் என்று சொல்கிற சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நஷ்டத்தைக் குறைக்க, அல்லது தவிர்ப்பதற்காகத்தான் நிதி மூலதனத்தைச் சீர் செய்தல், நிர்வாகப் பிரிவில் செலவைக் குறைத்தல் ஆகியவற்றை எல்லாம் நாம் கருத்தில் கொண்டு எப்படிச் சீர் செய்வது என்பது பற்றிய நடவடிக்கைகளை பல்லவன் போக்குவரத்துக் கழகம் மேற்கொண்டுள்ளது.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் எதிர்காலத்தில் இலாபம் கிடைப்பதற்கு இன்றைய அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து உள்ளது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகள் கட்டணத்தின் மூலம் நமக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் குறைந்த அளவே உள்ளது. அந்த வகையில் ஒரு பெரிய நஷ்டத்தைத் தாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அத்தோடு உதிரி பாகங்கள், டீசல், டையர் ஆகியவற்றின் விலையேற்றம்; நகர்ப்புறத்தில் ஓடுகின்ற காரணத்தால் தேய்மானச் செலவும் அதிகம்; அதனைப் பராமரிக்கக்கூடிய செலவும் அதிகமாகிறது; அதே நேரத்தில் தேவை இல்லாத அனாவசியச் செலவுகள்; மிக அதிகப்படியாக இருக்கக்கூடிய ஊழியர்கள்: அவர்கள் செம்மையாக வேலைக்கு வராமல் திடீரென்று ஒரு நாளைக்கு 300 வண்டிகள், 400 வண்டிகள் ஓடாமல் நின்று விடுவது; இப்படிப்பட்ட பல்வேறு அலங்கோலங்கள் எல்லாம் பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் கடந்த ஆண்டு இருந்தது.



இன்று அவைகளை எல்லாம் குறைக்க நடவடிக்கை எடுத்து, ஓடாத பேருந்துகள், முன் அறிவிப்பு இல்லாமல், வேலைக்கு வராமல் இருக்கக்கூடிய தொழிலாளர்கள், அனாவசியச் செலவுகள் போன்றவற்றை எல்லாம் குறைப்பதற்கு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த நடவடிக்கைகளின் பலன் தற்போது நமக்குக் கிடைப்பதற்கான வாய்ப்புகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் கடன்கள் நிறைய இருக்கின்றன; இந்தச் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டியது இருக்கின்றது என்பதைப் பொறுத்த வரையில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சொன்னார்கள். ஆனால் அந்தக் கடன்களை அவர்களால் அடைக்க முடியுமா? அல்லது முடியாதா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது. அதிலே இருக்கின்ற குறைகளைப் பார்த்தால் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என்று போய்க் கொண்டே இருக்கிறது. இத்தனை குறைகளையும் திருத்தி அதன்பிறகு சர்க்கார் கடனை அடைக்க முடியுமா? இல்லை என்றால் ரைட் ஆஃப் பண்ணக்கூடிய அளவில் இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அடைக்க முடியுமா என்று பார்ப்போம். இல்லாவிட்டால் ரைட் ஆஃப் செய்ய வேண்டியதுதான்.

### ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக் கட்டிடங்கள் பராமரிப்பு.

*2253 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக் கட்டிடங்களைப் பொதுப்பணித்துறை மூலமாக பராமரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி கட்டிடங்களைப் பொதுப் பணித்துறை மூலமாகப் பராமரிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளுக்குச் சரியான கட்டிடம் இல்லாத காரணத்தால் பல பள்ளிக் கூடங்கள் மரத்தின் கீழே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதே போன்று நான் ஒருவேளை கட்டிடங்கள் இருந்தாலும் கூட அந்தக் கட்டிடங்களுக்குத் தளங்கள் இல்லாமலும், சுவர்களில் கீறல் விழுந்தும், ஓடுகள் இல்லாமலும் ஆசிரியர்களுக்குக்கூட மேசை, நாற்காலி இல்லாமலும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதாவது பொதுப்பணித் துறை மூலமாகப் பராமரிக்கும் திட்டம்தான் இல்லை என்று சொன்னார்களே தவிர பள்ளிக்கூடக் கட்டிடமே கட்டவேண்டாம் என்று சொல்கிற திட்டம் இல்லை. அதனால் கேள்விக்கு நேரடியாக வாருங்கள். இப்போது பள்ளிக்கூடங்கள் பற்றிய வருணனைகள் எல்லாம் தேவையில்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து பராமரிப்பு செய்ய வேண்டும் என்றால் அவர்களிடத்திலே நிதியாதாரம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே பொதுப்பணித்துறை மூலமாகப் பராமரிப்பு செய்யாவிட்டாலும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக இந்தப் பராமரிப்பு வேலை செய்ய அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

9-35 மணி

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாக நடத்தப்படுகின்ற பள்ளிகள் 23,408. அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல 11,532 கட்டிடங்கள் சாதாரணமாகவோ அதிகமாகவோ பழுதடைந்திருக்கின்றன. அவை அனைத்தும் இந்த ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களின் நிதியைக் கொண்டோ, அவர் குறிப்பிட்டதைப் போல வேறு பல நிதிகளில் இருந்தோ, எதை எடுத்துக் கொள்ளமுடியுமோ அதை எடுத்துக் கொண்டும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்திருக்கிற சிறப்புக் கல்வி நிதியில் இருந்து 3 கோடி ரூபாயையும் வைத்துக்கொண்டும், இந்த ஆண்டு அனைத்துக் கட்டிடங்களும் பழுது பார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மதுரை நகர வளர்ச்சிப் பணிகளுக்கு உலக வங்கி உதவி.**

*3088 திரு. கோ. பால்ராஜ் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) மதுரை நகரின் வளர்ச்சிப் பணிகளுக்கு உலக வங்கியிடம் இருந்து நிதி உதவிகள் பெறும் நடவடிக்கைகள் எந்த அளவில் உள்ளது?

(ஆ) எப்போது பணிகள் தொடங்கப்பெறும்?
(இ) என்னென்னப் பணிகள் தொடங்கவிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) : தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், உலக வங்கி உதவியுடன், மதுரை மாநகராட்சியில் திட்டப்பணிகளுக்கான அறிக்கைகள் தயார் செய்ய, கலந்தாய்வாளர்கள் ( Consultants ) நியமிக்கப் பட்டுள்ளனர். கலந்தாய் வாளர்களால் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையில் பல்வேறு திட்டப்பணிகள், ரூ. 1,715 இலட்சம் மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்டு பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

**பனைத் தொழில் வாரியம்**

*3495 திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பனைத் தொழிலாளர் நலன் கருதி பனைத் தொழில் வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் தொடங்கப்படும்?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசின் நிதிநிலைமையைப் பொறுத்து, அது அமைக்கப்படுகின்ற காலத்தைப் பற்றி நிர்ணயம் செய்யப்படும்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி மீனவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து கடலில் மீன் பிடிக்கப் போகிறார்களோ அப்படித்தான் பனைத் தொழிலாளர்களும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பனை ஏறுகிறார்கள். ஆகவே அவர்களைப் போல இவர்களையும் மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்து அவர்களையும் முன்னுக்குக் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 மே, 2

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் இந்த அரசு அந்தப் பணிகளைத்தான் செய்து கொண்டிருக்கிறது.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையிலிருந்து பல்வேறு விதமான பொருட்கள் பெறப் பட்டு பல்வேறு விதமான தொழில்கள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. பனை ஓலையிலிருந்து பனைத் தடி வரை அனைத்துப் பொருட்களுமே அந்தத் தொழில் மூலம் விரிவுப்படுத்துவதற் கான வாய்ப்புகளைக் கொண்டிருப்பதால் விரைவிலேயே பனைத் தொழில் வாரியம் ஒன்றை அமைத்து அந்தப் பனைத் தொழில் மூலமாகக் கிடைக்கின்ற பொருட்களை அடக்கமாக உற்பத்தி செய் வதற்கும் விற்பனை செய்வதற்கும் அதில் ஈடுபட்டிருக்கிற தொழி லாளர்கள் வாழ்க்கை மேம்பாடு அடைவதற்கும் உடனடியாக அந்த வாரியம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகி றேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் 1,131 ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும் மாவட்ட அளவில் 5 சம்மேளனங்களும் மாநில அளவில் ஒரு பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை நிலையமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் மூலமாகப் பனை மரங்கள் ஏராளமாக இருக்கிற பல்வேறு மாவட்டங்களில் பனைப் பொருட்களை உற்பத்தி செய்கிற பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. தனியாக ஒரு வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது. அதற்கான கூடுதல் செலவு 3 கோடி ரூபாய் ஆகும் என்று துறை கருதுகிற காரணத்தால் அரசின் நிதிநிலைமையைப் பொறுத்து இந்தத் திட்டம் எப்போது துவங்கும் என்பது நிர்ணயம் செய்யப்படும்.

பட்டின் தரம்.

*3513 திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு சமுகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ் நாடு கூட்டுறவு பட்டு இணையம் (டான்சில்க்)மூலம் வழங்கப் படும் பட்டு தரம் குறைவாக உள்ளது குறித்து அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?



1990 மே, 2]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அப்படிப்பட்ட புகார் எதுவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை டான்சில்க் நிறுவனத்தின் மூலமாக வழங்கப்பட்ட பட்டு எவ்வளவு என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியோடு இந்தக் கேள்வி தொடர்பானதாக இல்லை என்ற காரணத்தால் அதற் கான விளக்கம் தற்போது என்னிடத்தில் இல்லை. உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி எழுப்புவார்களேயானால் அதற்கான விளக்கத்தைத் தர இயலும். கதர்த்துறையில் இருக்கிற பட்டு நூற்பு மையங்களுக்கு கர்நாடக பட்டு நூல் இணையத் திலிருந்து தரமுள்ள பட்டு நூல் கொள்முதல் செய்கிறோம். அதே நேரத்தில் தமிழ்நாடு டான்சில்க் நிறுவனத்திடம் இருந்தும் பட்டு நூல் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த அரசு பொறுப் பேற்றுக் கொண்ட பிறகு தமிழ்நாடு டான்சில்க் நிறுவனத்திற்குத் தான் அதிக முக்கியத்துவம் தரவேண்டுமென்று கருதி, டான்சில்க் கிடமிருந்து அதிகமான நூலைக் கொள்முதல் செய்து கொண்டிருக் கிறோம். மொத்தம் அதற்கு எவ்வளவு டன் தேவை என்பதற் கான விளக்கம் என்னிடம் இப்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி எழுப்பவும்.

9-40 மணி

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு பட்டு இணையத்தின் மூலமாக, திருப்புவனம் பட்டு சங்கம் தேவைக்கு அதிகமாக இருப்பை வாங்கி வைத்ததன் காரணமாக ஏராளமான நஷ்டம் ஏற்பட்ட தாகச் சொல்கிறார்களே, அது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா? அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய புகார் ஏதும் அரசின் கவனத்திற்கு இதுவரை வரவில்லை. அப்படி ஏதாவது தவறு நடைபெற்றிருக்குமேயானால், அதை மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவாரேயானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மறுபயிற்சி அளித்தல்**

*4061 **திரு. ஆ. அறிவழகன் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் செயல்பாட்டை மேம்படுத்த அவர்களுக்கு மறுபயிற்சி (Refresher course) அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. ஆ. அறிவழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் கல்வியின் தரம் மிகவும் மோசமாக உள்ளது. ஆகவே, சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளிக்கும் வகையில் இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், ஆதி திராவிட மாணவர்கள் கல்வித் தரத்தில் மேம்பாடு அடைய அவர்களுக்குச் சொல்லித் தருகின்ற ஆசிரியர்களுக்குத் தகுந்த முறையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் நல்லமுறையில் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க முடியும், ஆகவே, இதனை மறுபரிசீலனை செய்து பயிற்சி அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் எல்லோரும் அவர்களுடைய ஆசிரியர் பயிற்சியை முடித்த பிறகுதான் நியமிக்கப்படுகிறார்கள். அத்தியாவசியமான தேவைகளை முன்னிட்டு அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. அறிவழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் ஆசிரியர்கள் சரியாக வருவதில்லை என்று பொதுவாக. பரவலாக பேசப்படுகிறது. அதுபோல, பள்ளிகள் சரியாக பராமரிக்கப்படுவதில்லை என்றும் சொல்லப்படுகிறது, இக்குறைபாடுகளைப் போக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், ஆதி திராவிட நலத்துறை இயக்குநர் இவர்களைக் கொண்டு திடீரென்று சோதனை செய்ய, நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?





**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகள் கடந்த காலங்களிலே இருந்தன. ஆனால் நம்முடைய இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு பிறகு, அந்தந்தத் துறையினுடைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைனய பெரு முயற்சியால், தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, சிறப்பான பணியில் இருக்கின்ற அத்தனை ஆசிரியர் பெருமக்களும், ஆசிரியர்களாகப் பணி செய்ய ஆவன செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆடுதுறை அரசு மருந்துவ மனை.**

*3139. **திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், ஆடுதுறை அரசு மருத்துவமனை அபாயகரமாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடம் கட்ட அரசு ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி எ்.கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) புதிய கட்டிடம் கட்டும் உத்தேசம் இல்லை. பழுதுசெப்பனிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மேற்படி மருத்துவமனை இடிந்து அங்கு உள் நோயாளிகள் அனுமதிக்கப்படாத சூழ்நிலை உள்ளது. ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் தற்போது ஒரு புதிய மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான படுக்கைகள் போன்ற உதவிகளைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி நோயாளிகள் பகுதியைச் சீர் செய்யும் வகையில், பழுதுபார்த்து முடியும்வரை உள் நோயாளிகள் பகுதியில் பாதியை வெளிநோயாளி பகுதியாக இயங்க வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பழுது பார்க்க 2 இலட்சம் ரூபாய் செலவாகும் என கணக்கிடப்பட்டு அதற்காக பொதுப் பணித்துறை மூலமாக அந்தப் பணியை உடனடியாக மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த இடத்தைச் சீர் செய்கின்ற பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைக்கு நாள்தோறும் 500-க்கு மேற்பட்ட புறநோயாளிகள் வருகிறார்கள், எனவே, அந்த மருத்துவமனையை விரிவுபடுத்துகின்ற வகையில் லேப் பெசிலிட்டீஸ், அதுபோன்று எக்ஸ்பெர்ட் போன்ற மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர். க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிதிநிலையைப் பொறுத்து, இதுபோன்ற திட்டங்களை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தண்ணீர் வழங்குதல்.**

* 3177 திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வல்லம் மற்றும் வடகால் ஆகிய கிராமங்களுக்கு தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வல்லம் மற்றும் வடகால் கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றில் நீர் வற்றி விட்டதால் திட்டம் முடிக்கப்பட்டும் மக்களுக்கு பயனளிக்க முடியவில்லை. கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற தேவையான ஊற்றளவுள்ள மாற்று ஆழ்துளைக் கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9-45 மணி

திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வல்லம் மற்றும் வடகால் ஆகிய கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் மூலக் கேள்வி.** துணைக் கேள்வி ஏதேனும் இருக்கிறதா ?

**திரு. ஏ. கோதண்டம் : இல்லை.**



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணைக் கேள்வி எதுவும் இல்லை என்று மிகவும் திருப்தியோடு அமர்ந்துவிட்டார்.

**தாம்பரம் நகராட்சியில் குடிநீர் வழங்குதல்**

* 3378. திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சியில் 10 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் வழங்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே

(அ) தாம்பரம் நகராட்சியில் மூன்று நாட்களுக்கொரு முறை தற்பொழுது குடிநீர் வழங்கப்படுகிறது.

(ஆ) இந்த நிலையை மாற்றி, தினமும் குடிநீர் வழங்குவதற்கு தனியாக ஒரு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆய்வு முடிந்தவுடன், திட்டத்தினை பரிசீலனை செய்து அமுல் படுத்தப்படும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இன்றைக்கு வருகிறதென்று தெரிந்ததற்குப் பின்னால், தாம்பரம் நகராட்சியின் பல்வேறு பகுதிகளுக்கு நான் நேற்று சென்று வந்தேன். அங்கே 20-வது வட்டத்தில் நேற்றையவரையில் 8 நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் வருகிறது. 4 ஆம் வட்டத்தில் குழாய்களில் தண்ணீர் வந்து 6 மாதமாகிறது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிகாரிகளிடம் சொல்லி, மறுபரிசீலனை செய்து, அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல 3 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வர ஏற்பாடு செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ;** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கே நீர் அழுத்தம் குறைவாக இருக்கிற காரணத்தாலே 3 நாட்களுக்கு ஒருமுறை நீர் கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. பாலாற்றிலே அமைந்துள்ள நீரேற்று நிலையத்திற்குக் கிடைக்கிற தண்ணீரை. வழியிலே இருக்கிற கிராமங்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கிற காரணத்தாலே தாம்பரத்திற்குத் தண்ணீர் கொடுக்கும்போது 15 இலட்சம் லிட்டர் தண்ணீர்தான் வழங்கப்படுகிறது. ஆகவேதான் இந்தத் திட்டத்தைத் திருத்தி, நிரந்தர

மாக தாம்பரத்திற்கு அதிகக் குடிதண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, புளியம்பாக்கம் என்ற இடத்திலே இப்போது இருப்பதைத் தவிர, சோளிங்கநல்லூர் அருகிலே ஆய்வு செய்து, மேலும் ஒரு குடிநீர் ஆதாரத்தை உருவாக்குவதற்கு அரசு திட்டங்களைத் தீட்டி வருகிறது. ஆகவே நிரந்தரமாக அந்தப் பகுதிக்குக் குடிநீரை அதிகமாக வழங்குவதற்கு குடிநீர் வடிகால் வாரியம் திட்டங்களைத் தயாரித்து வருகிறது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல சில இடங்களில் இருக்குமானால், அதையும் நிவர்த்தி செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சோளிங்கநல்லூர் பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவர திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கே தண்ணீர் வழங்க முடியாமல், அங்கே இருக்கிற தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டுவந்து, எங்களை அலைக்கழிக்கிறீர்கள். இன்னும் அந்தத் திட்டம் என்று சொல்லி, அதிகாரிகள் 6 ஆண்டுகளுக்கு இதிலே இழுத்தால். அமைச்சரவர்களுடைய பதவிக் காலமே முடிந்து விட்டாலும்கூட, தண்ணீர் தர மாட்டார்கள் என்பதால், தாம்பரம் நகராட்சியையும், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளையும் கிருஷ்ணா நதிநீர் திட்டத்திலாவது அமைச்சரவாகள் இணைத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சோளிங்கநல்லூர் பகுதியிலே ஆய்வு செய்யப்பட்டுத்தான் இந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் இப்போது தமிழகத்திலே இது ஒரு தொற்றுநோய் போல பரவிக் கொண்டிருக்கிறது. குடிநீருக்காக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிநீர் எடுத்துச் செல்லும்போது அதை மறுப்பது என்பது ஒரு பேஷனாக மாறிவிட்ட சூழ்நிலை இருக்கிறது. ஆனால் குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த வரையில் ஆய்வு செய்து, நிலத்தடி நீர் பாதிக்காத வகையிலேதான் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருக்கிற கருத்தையும் பரிசிலித்து, ஆந்திர அரசு குறிப்பிட்ட எல்லைகளில்தான் அந்த நீரைப் பயன்படுத்த முடியும் என்பதால், அப்படி விரிவுபடுத்தப்படுமானால், தாம்பரத்திற்கும் அதிலே வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை பாக்கி :

* 4952. திரு. கே. ரவி அருணன் :
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?



(அ) அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் சுமார் 3,229 நபர்களுக்குப் பணிக்கொடை பாக்கி பட்டுவாடா செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தொழில் தகராறு சட்டம் 29-ன்படியும், 33-ஆம் பிரிவின்படியும் நடவடிக்கை எடுத்து ஓய்வுபெற்ற தொழிலாளர்களின் துயர் துடைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(ஆ) ஆம்.

(ஆ) பணிக்கொடை கொடுக்காததால் நிர்வாகத்தின் மீது தொழிற் தகராறு சட்டப் பிரிவு 29-ன் கீழோ, அல்லது 33-ன் கீழோ நடவடிக்கை எடுக்க இயலாது. ஆனால், பணிக்கொடை பட்டுவாடாச் சட்டப் பிரிவு 9 (2)-ன் கீழ் நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கலாம். இதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு, ஓய்வு பெற்றுள்ள தொழிலாளர்கள், பணிக்கொடை பாக்கித் தொகையை கடந்த 2 வருடங்களாக வழங்காமல் இருப்பதால், பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். வருகிற 7 ஆம் தேதி மறியல் போராட்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மறியல் போராட்டத்தைக் கைவிடும் வகையில் அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல்வேறு முறை அரசின் சார்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1,112 தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை தரப்படாத காரணத்தால், அவர்கள் அத்தனைபேரும் தொழிலாளர் ஆய்வகத் துறையின் மூலமாக மனுச் செய்து, நிர்வாகத்தினரை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி அருணன் அவர்கள்கூட, மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் முன்பாக மறியல் செய்யப் போகிறோமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்ன பிறகு, மதுரா கோட்ஸ் கிராஜுவிட்டி சட்டத்தின் கீழ் 18 (1) செட்டில்மென்ட் போடப்பட்டு, அந்த செட்டில்மென்ட் பிரகாரம் அந்த நிறுவனம் நடந்துகொள்ளாததால், மேலும் ஒரு முறை நீட்டித்து பேச்சு வார்த்தை நடத்தப்பெற்றது.

9-50 மணி

நிர்வாகமும், அந்தச் சங்கமும் நடத்திய பேச்சுவார்த்தையில் முறிவு ஏற்பட்டு இருக்கின்றது. இப்போது அரசின் மேல் முறையீட்டில் இருக்கின்றது. இதில் 29-ன் கீழ் அல்லாமல், 33-ன் கீழ் அல்லாமல் 11 (2)-ன் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கின்றது. அதன் மூலம் அரசு நடவடிக்கை எடுக்க இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே திருநெல்வேலி துணை ஆணையர் அவர்களால் பணிக்கொடைத் திட்டம் 9 பிரிவின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்காக நோட்டீஸ் அனுப்பப்பட்டு பல மாதங்கள் ஆகியும் கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கின்றது. அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** தலைவர் அவர்களே, இதுபோல நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பு அவர்களுக்கு ஒரு ஷோ-காஸ் நோட்டீஸ் தரப்பட்டு இருக்கின்றது. அதில் இருக்கின்ற இரண்டு டைரக்டர்களில் ஒருவர் அதற்கான பதிலைத் தந்து இருக்கிறார். மற்றொருவரும் அந்தப் பதிலைத் தந்த பிறகு—அதில் சரியான ஒரு நிலை இல்லை என்றால், நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முனையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ரமணி :** தலைவர் அவர்களே, கிராஜுவிட்டி சட்டப் பிரகாரம் தொழிலாளிகள் வேலையிலிருந்து நிற்கின்ற அந்த நிமிடத்திலேயே அவர்களுக்குக் கணக்குத் தீர்த்து பணத்தைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எந்தத் தொழில் ஸ்தாபனமாக இருந்தாலும் அந்த முதலாளிமார்களுக்கு இருக்கிறது. இப்போது நாடு முழுவதும் 3,729 பேருக்குப் பணிக்கொடை கொடுக்கவில்லை என்று சொல்லி இந்தப் பெரிய மில்லிலே இந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்றால் பல இலட்சக்கணக்கான பணம்—ஏன் கோடிக்கணக்கான பணம், தொழிலாளிகளின் பணத்தைச் சட்ட விரோதமாக நிறுத்தி வைத்து இருக்கிறார்கள் என்று அர்த்தம். இப்படிப்பட்ட முதலாளிமார்களை, தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்களைக் கைது செய்வது உட்பட தேவையானால் தகுந்த சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றி அந்தக் காரியத்தைச் செய்வதற்கு, மத்திய சர்க்காருடைய அனுமதியையும் பெற்று, ஆதரவையும் பெற்று—தொழிலாளிகளுக்குப் பணிக்கொடை கொடுக்காமல் அவர்களை வெளியிலே அனுப்பக் கூடாது ; பணம் கையில் இல்லை என்றால் பணம் கொடுக்கிற வரைக்கும் அவர்களைப் பணியில் வைத்து இருக்க வேண்டும் என்பதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் முன்வந்து எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் 1972 முதல் 1984 வரை பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மொத்தம் 3,567 பேர்கள். இதில் 1,112 பேர்களுக்கு மட்டும்தான் 15 நாள் வீதம் பணிக்கொடை கணக்கிட்டுக் கொடுக்கவில்லை என்று தொழிலாளர் ஆய்வுத் துறையினரிடம் முறையிட்டு, முறையாக நிர்வாகத்தினரை அழைத்துப் பேசப்பட்டது. அந்த ஆய்வுத் துறையினர் இவர்களுக்கு பணிக்கொடை சட்டத்தின் கீழ் பணம் வழங்க வேண்டும் என்று தீர்ப்புக் கூறினார்கள். மறுபடியும் நிர்வாகம் மேல் முறையீடு செய்தது. அந்த மேல் முறையீட்டிலும் ஏற்கெனவே சொன்ன தீர்ப்புதான் உறுதி செய்யப்பட்டது. மேல் முறையீட்டிலும் 1972 முதல் 1984 முடிய உள்ளவர்களுக்குப் பணிக்கொடை சட்டத்தின் கீழ் பணம் வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு கூறிய பிறகு, நிர்வாகம் அதை எதிர்த்து கோர்ட்டுக்குச் சென்று இருக்கிறது. அது கோர்ட்டில் தாவாவாக இருக்கிறது. அதன் பிறகு 1986-லிருந்து 1937 வரையில் ஓய்வு பெற்றவர்களுக்கும் தாவா அரசு அதிகாரிகள் முன்பு நடத்தப்பட்டு, அவர்களுக்கும் பணிக்கொடை சட்டத்தின் கீழ் பணம் வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு கூறப்பட்டு இருக்கின்றது. அதை எதிர்த்தும் அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று இருக்கிறார்கள். இந்தமாதிரி நடவடிக்கை எடுத்தாலும் அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று வாதாடுகின்ற காரணத்தால், உடனடியாக அரசினால் தொழிலாளிகளுக்கு எந்த நியாயமும் வழங்க முடியவில்லை. இருந்தும், அதன் பிறகு நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. ரவி அருணன் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் காரணமாக பல்வேறு முறை நிர்வாகத்தினரை அழைத்துப் பேசப்பட்டது. கடைசி முறையாக அழைத்துப் பேசப்பட்டபோது நிர்வாகத்தினர் அதில் கலந்துகொள்ளவில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு தகுந்த ஆதாரங்களுடன் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அரிசி ஆலைத் தொழிலாளர்கள்.

*5645 **திரு. பி. மாரப்பன் :** மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்திலுள்ள சிறிய, பெரிய அரிசி ஆலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளார்களா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஆம்.

**திரு. பி. மாரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சுமார் 150 சிறிய பெரிய அரிசி ஆலைகள் உள்ளன. அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் எல்லாம் தினசரி கூலிகளாகத்தான் இருக்கின்றார்கள். தொழிலாளர் நலச் சட்டத்தின் மூலமாக அவர்களுக்கு எந்தவிதமான பெனிஃபிட்டும் கிடைப்பதில்லை. அதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச ஊதிய திட்டத்தின்கீழ் அரிசி ஆலையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களும் அடங்குவார்கள். 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம், 1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம், 1923-ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம், 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் தொழிலாளர்களை நிரந்தரமாக்குதல் சட்டம், 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் போன்ற சட்டங்கள் இவர்களுக்குப் பொருந்தும். மேலும், இந்தச் சட்டங்களை இயற்றும் பொழுது மின் ஆற்றல் இருக்கின்ற அரிசி ஆலைகளிலே பத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தாலும், மின் ஆற்றல் இல்லாத அரிசி ஆலைகளிலே 20-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தால்தான் இந்தச் சட்டங்கள் பொருந்தும் என்று முதலிலே அரசு ஆணைக் குறிப்பிலேயிருந்தது; பிறகு மற்ற குறைந்த ஊழியர்கள் இருந்தால்கூட அதற்கு என்று ஒரு அறிவிக்கை அரசின் மூலமாகப் போடப்பட்டிருக்கின்றது. 85 (1)-இன் கீழ் மற்றவர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தும் என்ற அளவிலே அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-55 மணி

**திரு. பி. மாரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக பெரியார் மாவட்டத்திலே இந்த அரிசி மில் தொழிலாளர்கள் எத்தனை பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் இப்பொழுது தெரிவிப்பார்களா என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சொந்த மாவட்டத்தைப் பொறுத்த அளவிற்குக் கேள்வியைக் கேட்பார்களேயானால், பெரியார் மாவட்டத்தில் இந்த அரசின் நடவடிக்கை மூலம் எவ்வளவு பேர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்று தனியாகக் கேட்க வேண்டும். பொதுப்படையாக அந்த ஊழியர்களுக்கு அரசு சட்டம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



### கால்நடை மருந்தகம்.

*5761 **திரு. ஆர். வரதராஜன் :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், சங்ககிரி ஒன்றியம், தேவூர் பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தற்போது இல்லை.

**திரு. ஆர். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி ஒன்றியம் தேவூர் பகுதி விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற பகுதி. அங்கே கால்நடைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், கால்நடைகளுக்குப் போதிய சிகிச்சைகள் செய்ய முடியாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால் அருகிலுள்ள பத்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள எடப்பாடிக்கோ அல்லது குமாரபாளையத்திற்கோ சென்று கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கின்ற காரணத்தினால், விவசாயிகள் பெரிதும் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே, அரசு அதனைப் பரிசீலனை செய்து அங்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்சமயம் சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியிலே சங்ககிரியிலே ஒரு கால்நடை மருந்தகமும், வடுகப்பட்டி, தேவூர், புல்லம்பட்டி ஆகிய ஊர்களிலே கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் எந்த ஊரில் கால்நடை மருந்தகம் அமைக்கப்பட வேண்டுமென்று, தன்னுடைய கோரிக்கையை உரிய தீர்மானங்களோடு அரசுக்கு அனுப்பி வைப்பார்களேயானால் அரசாங்கத்தின் மூலமாகக் கால்நடை மருந்தகங்கள் துவக்கப்படுகின்றபொழுது அந்தக் கோரிக்கையினுடைய அவசியத்தைக் கருத்திற்கொண்டு, அரசாங்கத்தினுடைய நிதி நிலைமைக்கேற்ப அது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### கோவளத்தில் மீன்பிடித்துறை அமைத்தல்.

*8149. டாக்டர் து. திருமூர்த்தி : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவளத்தில் மீன்பிடித்துறை அமைக்கும் செயற் குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) சொந்த கட்டுமரம் இல்லாமல் அவதிப்படும் மீனவர் களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த இந்த மீன்பிடித்துறை உடனடி யாக அமைக்கப்படுமா ?

**மாண்புமிகு** டாக்டர் க. **சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவளத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் து. திருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, கிட்டத்தட்ட 80 கிலோ மீட்டர் விஸ்தீரணத்தில், எந்தவித மீன்பிடித் துறைமுகமும் இல்லாத காரணத்தினாலும், அப்படி மீன் பிடிப்பது இராயபுரத்திலிருந்து சென்னை நகர் வழியாக வருவதாலும், அப்பொருள்கள் சேதம் அடைவதாலும், உடனடியாக மீன் பிடிப்பவர்களுடைய நலனைக் கருத்திற் கொண்டு, அவ்விடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு** டாக்டர் க. **சந்திரசேகரன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவளத்தில் மீன்பிடித் துறைமுகமோ, தங்குதள வசதிகளோ ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தொழில் நுட்ப ரீதியாக சாத்தியக் கூறுகள் இல்லை என்ற கருத்தினை பெங்களூர் மத்திய கடலோர பொறியியல் மையத்தினைச் சேர்ந் தவர்கள் கருத்துத் தெரிவித்து இருக்கின்றார்கள். பெரிய மீன்பிடித் துறைமுகங்கள் 240 கிலோ மீட்டர் தொலைவிலும், நடுத்தர மீன்பிடித் துறைமுகங்கள் 120 கிலோ மீட்டர் இடைவெளியிலும், சிறிய மீன்பிடித் துறைமுகம் 30 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைக்கப்பட வேண்டும் என்பதே தொழில் நுட்ப ரீதியான கருத்து. அதோடு, கோவளத்தில் கடல் பகுதி திறந்து இருப்ப தாகவும், வளைகுடா இல்லாததாலும் அங்கு தங்குதளம் அமைப் பதற்கான தொழில் நுட்ப ரீதியான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



### கூட்டுறவில் சேராத நெசவாளர்களுக்கு உதவும் திட்டம்.

*1149 திரு. ஜி. ஜி. குருமூர்த்தி :
மாண்புமிகு கைத்தறிமற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கூட்டுறவில் சேராத நெசவாளர்களுக்கு உதவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு** திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவரவர் களே,

(அ) ஆம்.

(ஆ) கூட்டுறவில் சேராத கைத்தறி நெசவாளர்களுக்கு, கைத்தறித் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருளான நூல் சலுகை விலையில் வழங்கப்படுகிறது. இணைந்த ஓய்வு உதவிச் சிறப்புத் திட்டத்தின் மூலம் தனியார் நெசவாளர்களுக்கு ஈட்டுறுதி பெற வாய்ப்புள்ளது. மேலும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேரும் பட்சத்தில் கைத்தறித் தொழிலுக்குத் தேவையான கடன் உதவி பெறலாம்.

10-00 மணி.

**மாண்புமிகு** பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் வினாககள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்பில் சேராத நெசவாளர்களைப் பூரணமாக கூட்டுறவு அமைப்பில் சேர்ப்பதற்கு ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு** திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, தனியார் கைத்தறியாளர்களை கூட்டுறவு அமைப்பில் கொண்டு வருவதுதான் இந்த அரசின் கொள்கை. ஆண்டிற்கு 15,000 கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ஜி. ஜி. குருமூர்த்தி : தலைவர் அவர்களே, நூல் விலை ஒரு நிதானத்தில் இல்லாமல் ஒவ்வொரு வாரமும் ஒரு விலையாக அதிகமாகக் கூடிக்கொண்டு வருகிறது. நூல் விலையைக் குறைப்ப தற்கு அரசு ஏதாவது நடவடிக்கையெடுக்க உத்தேசித்து இருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1990 மே, 2

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** தலைவர் அவர்களே, நூல் விலை ஏற்றத்திற்கு மிக முக்கியமான காரணமான பருத்தி மற்றும் நூல் ஏற்றுமதியைத் தடை செய்ய மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. மேலும் பருத்தி கொள்முதலில் லெவி முறையை அமல்படுத்த மத்திய அரசு மாநில அரசுக்கு அதிகாரம் வழங்க வேண்டுமென்றும் அரசு கோரியுள்ளது. மேலும் தனியார் ஆலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, மாநில அரசின் மூலம் செய்வதற்கு எந்த அதிகாரமும் இல்லை. இதற்கு மத்திய அரசைத் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். தனியார் ஆலைகள் கைத்தறிக்குத் தேவையான 50சத வீதம் சிட்ட நூலைத்தான் உற்பத்தி செய்ய வேண்டுமென்று இலக்கு இருக்கிறது. அதை அமல்படுத்த வேண்டுமென்று தொடர்ந்து மத்திய அரசை இந்த அரசின் மூலம் வேண்டிக் கொண்டிருக்கிறோம். மேலும், நூலை அத்தியாவசியப் பொருளாக, 'எசன்ஷியல் கமாடிட்டி ஆக்ட்'-டில் கொண்டு வந்தால் நிச்சயமாக நூல் விலையைக் குறைக்க முடியும் என்ற கருத்தையும் மத்திய அரசிற்கு மாநில அரசு கூறியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

**உறுப்பினர் திரு. குமரி அனந்தன் 29-4-1990 ஆம் நாளன்று சென்னையில் ஒரு விழாவில் கலந்து கொண்டபோது சிலர் தாக்க முயன்றுள்ளதால் அவருக்குப் பாதுகாப்புத் தரவேண்டியதன் அவசியம் குறித்து.**

**திரு. ஆர். சிங்காரம் :** தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர், இலக்கியச் செல்வர், இலக்கியப் பேரவையை வருடா வருடம் சென்னையில் நடத்தி வருகிறார். திரு. குமரி அனந்தன் அவர்கள் தி.நகரில் நடத்திய விழா நடந்து கொண்டிருந்த போது —இந்த விழாவை குமரி அனந்தன் அவர்கள் தான் நடத்துகிறார் என்பது உங்களுக்குத் தெரியும்— 29-4-1990-ம் நாளன்று மாலை 6-45 மணிக்குக் கருப்புச் சட்டை அணிந்த 4, 5 நண்பர்கள் விழாவிற்கு வந்தார்கள். அவர்கள் நடமாட்டம் சந்தேகத்தை வலுப்படுத்தியது. கருப்புச் சட்டைக்காரர்கள் திரு. குமரி அனந்தன் எங்கெல்லாம் போகிறாரோ அங்கெல்லாம் அவர்களும் கூடவே போனார்கள். விழாக் குழுவைச் சேர்ந்தவர்கள் அவர்களை சற்று சந்தேகக்





கண்ணோடு பார்த்து, நாற்காலியில் அமருமாறு கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் உட்காராமல், குமரிஅனந்தன் அவர்கள் எங்கெல்லாம் போய்க் கொண்டிருக்கிறாரோ அவரோடு அவர்களும் போய்க் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் விழாக் குழுவினர் அவர்களை வெளியே போகும்படி கேட்டுக் கொண்டபோது, அவர்கள் போக மறுத்து, குமரி அனந்தன் அவர்கள் மீது கத்தியை எறிவதற்கு அல்லது கொல்ல முயன்று, ஒரு முயற்சி நடந்திருக்கிறது. அந்த நேரத்தில் மற்றவர்கள் பிடித்து அவர்களைப் போலீசாரிடம் ஒப்படைக்க, போலீசாரும் அவர்களை உடனடியாக போலீஸ் நிலையத்திற்கு கொண்டு செல்ல முயற்சித்த போது, போலீசாரையும் கத்தியைக் காட்டி மிரட்டி, உங்களைக் கொன்று விடுவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி என்பது ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு, அதிலும் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரான குமரி அனந்தன் அவர்களுக்கே ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே நாங்கள் எல்லாம் மிகுந்த வேதனைப்படுகிற சூழ்நிலை தான் ஏற்படுகிறது. இந்த நிகழ்ச்சி குறித்து நம்முடைய குமரி அனந்தன் அவர்கள் சார்பாக எர்னஸ்ட் பால் என்பவர் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் ராஷ்டிரபதி அவர்களுக்கும் தந்தி கொடுத்து இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் உள்ளே வந்ததன் நோக்கம், ஒரு துண்டுப் பிரசுரத்தை உள்ளே கொடுப்பதற்கான முயற்சியை எடுத்து இருக்கிறார்கள். அந்தத் துண்டுப்பிரசுரத்தைப் படிப்பதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி கொடுத்தால் படிக்கிறேன். இல்லாவிட்டால் ஒருசில வார்த்தைகளை மட்டும் படிக்க ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னிடம் கொடுத்து விடுங்கள். நான் அதை அப்புறம் கொடுத்து விடுகிறேன்.

**திரு. ஆர். சிங்காரம்:** தலைவர் அவர்களே, இந்தத் துண்டுப் பிரசுரத்தில் குமரி அனந்தன் அவர்களை மிகவும் தரக்குறைவாக, தாறுமாறாக, கேவலமான முறையில் திட்டி சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் நடக்காமல் இருப்பதற்காக மாண்புமிகு கலைஞர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து, குமரி அனந்தன் அவர்களுடைய உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10-05 மணி.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்தச் செய்தி எனக்கு எட்டியவுடன் காவல்துறையினரோடு தொடர்பு கொண்டு, நான் அறிந்த விவரத்தை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

29—4—1990 அன்று மாலை 6 மணியளவில் தியாகராய நகர் வெங்கட்டநாராயணா சாலையில் பாரதிதாசன் விழா தொடர் சொற்பொழிவுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அந்த விழாவில், திரு. குமரி அனந்தன், திருமதி மரகதம் சந்திரசேகர், திரு. உமாபதி மற்றும் பலர் கலந்து கொண்டார்கள். இந்த விழா நடந்து கொண்டிருந்தபோது மாலை சுமார் 6-45 மணி அளவில் இரண்டு பேர்கள் அந்த இடத்திற்கு வந்து, ஈழவிடுதலைப் புலி பிரபாகரனை, திரு. குமரி அனந்தன் கேவலமாகப் பேசியதாகச் சொல்லிக் கண்டித்து துண்டு அறிக்கைகளை வினியோகம் செய்திருக்கிறார்கள். பாதுகாப்புப் பணியிலிருந்த காவலர்கள் அங்கே வினியோகம் செய்யக்கூடாது என்று கண்டித்துச் சொன்னபோது, அதே நேரத்தில் குமரி அனந்தன் அவர்களுடைய அலுவலகத்திலிருந்து எர்னஸ்ட் பால் மற்றும் சிலர் ஓடிவந்து மேற்படி நபர்களைப் பிடிக்க முயன்றபோது, அந்த நபர்கள் கத்தியைக் காட்டி, மிரட்டியதாகக் கூறப்படுகிறது. எர்னஸ்ட் பாலும் மற்றும் அங்கு காவலில் இருந்த போலீஸ்காரர்களும் அந்த நபர்களிலே ஒருவரான பாலகுரு என்பவரைப் பிடித்து இரவு சுமார் 7-30 மணிக்கு மாம்பலம் காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இதுகுறித்து திரு. எர்னஸ்ட் பால் அவர்கள் கொடுத்த புகாரின்மீது மாம்பலம் காவல் நிலையக் குற்ற எண். 465/90, பிரிவு 143, 506 இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, பாலகுருவிடம் இருந்து கத்தியையும், திரு. குமரி அனந்தன் அவர்களைக் கண்டித்து அச்சடிக்கப்பட்ட துண்டு அறிக்கைகளையும் கைப்பற்றியதோடு, பாலகுரு கைது செய்யப்பட்டார். இவ்வாறு குற்றம் சாட்டப்பட்ட பாலகுருவைக் கைது செய்தபோது, அவர்கள் ஒரு புகாரைக் கொடுத்தார்கள். அதிலே, அவர் அன்று மாலை 6-15 மணியளவிலே வெங்கட்டநாராயணா சாலையில் திரு. குமரி அனந்தன் அவர்களைக் கண்டித்து துண்டு அறிக்கையை வினியோகம் செய்தபோது, திரு. குமரி அனந்தன் அவர்களைச் சார்ந்த சிலர் அவரைப் பைப்புகளாலும், கட்டைகளாலும் அடித்துக் காயப்படுத்தியதாக ஒரு புகாரைக் கொடுத்ததால், அதன் மீது மாம்பலம் காவல் நிலையக் குற்ற எண். 466/90 பிரிவு 341, 324 இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பாலகுருவை இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி, அங்கே அவர் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருடைய தலையிலே சிராய்ப்புக் காயம் உள்ளது. 30-4-1990 அன்று சைதாப்பேட்டை குற்றவியல் நடுவர், மருத்துவமனைக்கே வந்து அவரை 15 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட, மருத்துவமனையிலே காவல் போடப்பட்டுள்ளது. பாலகுருவோடு குற்றம் சாட்டப்பட்ட மற்றொரு நபர் தாமு என்கிற தாமோதரன், 30-4-1990 அன்று சைதாப்பேட்டை நடுவர் நீதிமன்றத்தில் சரண் அடைய, அவரைக் கோர்ட்டார் ஜாமீனில் விடுதலை செய்திருக்கிறார்கள். பாலகுரு தென்சென்னை மாவட்ட திராவிடர் கழக இளைஞர்



அணித் தலைவர் என்றும் தாமோதரன் அரும்பாக்கம் பகுதி திராவிடர் கழக இளைஞர் அணியைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வருகிறது. கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு இருக்கிறது. அவர்கள் கொடுத்த புகாரின்மீது வழக்கு மாத்திரம் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. மேலும் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன், நான், திரு. குமரி அனந்தன் அவர்களோடு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொள்ள முயன்றேன். அவர்கள் கிடைக்கவில்லை. அதன் பிறகு, ஏற்ற நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டதாக அறிந்து கொண்டேன். போலீசாரும் நான் சொல்வதற்கு முன்பே நடவடிக்கையில் ஈடுபட்டு அவர்களைக் கைது செய்து வழக்கைத் தொடர்ந்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய விழா எடுக்கிற நேரத்தில், இப்படி அமையவேண்டியதில்லை. இதில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொஞ்சம் தீவிரமாக—இப்படிப்பட்ட ஒத்த கருத்தோடு ஒரு விழா எடுத்து, அந்தக் கருத்தோடு, நம்மோடு ஒன்றி இருக்கிற ஒரு கருத்தில் விழா எடுக்கிற நேரத்தில் இப்படிப்பட்ட நிலைகள் வரக்கூடாது.—அவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுத்து, இப்படிப்பட்ட நிலைகளைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### 3. விதி 111-இன் கீழ் துணை வினாக்களுக்கான விடைகளுக்குத் திருத்த அறிக்கை.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ;** தலைவர் அவர்களே, விவரமான அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "111-வது விதியின் கீழ் அறிக்கை" என்றால் அவ்வறிக்கையை மாண்புமிகு அமைச்சர் படிக்க வேண்டும்.

*10-10 மணி*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 5-4-1990ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா 3432-இன் கீழ், உறுப்பினர் திரு. கோ. வீரையன் அவர்கள் எழுப்பிய துணைக் கேள்விகளுக்கு, இந்த அவையிலே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அளித்த பதிலுக்கான திருத்தத்தை, அவர் அமைச்சரவைக்கும் அவைக்கும் புதியவர் என்ற காரணத்தினால் அவர் சார்பில் நான் படிக்கின்றேன்.

[டாக்டர். மு. கருணாநிதி]

அதில் சொல்லப்பட்ட பதில்: 'மாண்புமிகு தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் 100 மாணவ மாணவியர் விடுதிகள் ஆரம்பிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திருத்தப்பட்ட பதில்: 'மாண்புமிகு தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் மாணவ மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கு ரூ. 300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' என்பதாக இருக்க வேண்டும்.

உறுப்பினர் வீரையன் அவர்களின் இரண்டாவது துணைக் கேள்விக்கு அளித்த பதிலில் திருத்தப்பட வேண்டிய பகுதி—

சொல்லப்பட்ட பதில்: 'மாண்புமிகு தலைவர் அவர்களே, மாணவ மாணவியர்களின் விடுதிகளில் எண்ணிக்கை குறைந்தபட்சம் 50 விகிதாச்சாரத்தில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

திருத்தப்பட்ட பதில்: 'மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்பதாக இருக்கவேண்டும்.

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) கிருஷ்ணகிரி வட்டம், மரிக்கம்பள்ளியிலுள்ள கெம்பிளாஸ்ட் தொழிற்சாலைக் கழிவுநீர் தென்பெண்ணை ஆற்றில் கலப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

டாக்டர் க. காஞ்சனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கிருஷ்ணகிரி வட்டம், மரிக்கம்பள்ளியில் உள்ள கெம்பிளாஸ்ட் தொழிற்சாலையின் கழிவுநீர் தென்பெண்ணை ஆற்றுநீரில் கலப்பதால் அப்பகுதி மக்கள் பாதிப்பு குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்:



[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

அறிக்கை.

திருவாளர்கள் கெமிக்கல்ஸ் அண்ட் பிளாஸ்டிக்ஸ் (இந்தியா) லிமிடெட் என்ற எரிசாராய உற்பத்தித் தொழிற்சாலை தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டம் மரிக்கம்பள்ளி கிராமத்தில் 1978-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 900 கிலோ லிட்டர் கழிவுநீரை வெளியேற்றுகிறது. கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்வதற்கென்று ரூ. 2 கோடி செலவில் ஒரு கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

சுத்திகரிக்கப்படும் தொழிற்சாலைக் கழிவுநீரின் ஒரு பகுதி பயிர் விளைவிக்க பாசனத்திற்கு உபயோகபபடுத்தப்படுகிறது. எஞ்சிய பகுதி குட்டைகளில் தேக்கி வைக்கப்படுகிறது. தொழிற்சாலைக் கழிவுநீர் தென்பெண்ணை ஆற்றில் விடப்படுவதில்லை. எனவே, கிருஷ்ணகிரி அணைக்குக் கழிவுநீர் செல்வதற்கோ, அங்கு அணையின் தண்ணீர் பாதிக்கப்படுவதற்கோ வாய்ப்பு ஏதும் இல்லை.

சுத்திகரிக்கப்படும் கழிவுநீர் அனைத்தையும் பயிர் விளைவிக்க பாசனத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்கென்று மரிக்கம்பள்ளி கிராமத்தில் 50 ஏக்கர் நிலத்தை நீண்டகால குத்தகைக்கு எடுத்திருப்பதாகத் தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தைத் தொடர்ந்து நல்ல முறையில் இயக்கி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தரத்திற்கேற்ப கழிவுநீரைச் சுத்திகரிப்புச் செய்து வெளியேற்ற வேண்டும் என்று இத்தொழிற்சாலைக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் க. காஞ்சனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் தொழிற்சாலையின் கழிவுநீர் தென்பெண்ணை ஆற்றில் விடப்படுவதில்லை என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. உள்ளபடியே இந்தத் தொழிற்சாலையினுடைய கழிவுநீர் தென்பெண்ணை ஆற்றில் கலக்கப்பட்டு, அந்தப் பகுதியினுடைய தண்ணீர் பாதிக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய கிருஷ்ணகிரி அணையினுடைய தண்ணீர் ஆழ்ந்த கரும் சிவப்பு நிறத்திற்கு மாறி, கால்நடைகள் கூட அருந்துவதற்கு மறுக்கின்ற ஒரு சூழ்நிலை எங்களுடைய பகுதியில் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, கிருஷ்ணகிரி அணையினுடைய தண்ணீர் தான் கண்டேகுப்பம் என்ற அந்த பம்பிங் ஸ்டேஷனிலிருந்து கிருஷ்ணகிரி நகரம் முழுவதற்கும் குடிதண்ணீர் வழங்கப்படுகின்ற காரணத்தினால் கிருஷ்ணகிரி நகரத்திற்கு மட்டுமல்ல, சுற்றியிருக்கின்ற மரிக்கம்பள்ளி, தவளம், செம்படையமுத்தூர் போன்ற கிராமப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்கள், தலைவலி, மாலைக்கண்

நோய், சொறி சிரங்கு போன்ற தோல் வியாதிகளால் பாதிக்கப்பட்டு அவதிப்படுகிறார்கள். இதுவரையில் எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத வகையில் குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய துறை அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு எவ்வளவோ முயற்சிகள் எடுத்து, மிக மிக நல்லமுறையில் இந்த வாரியம் பணியாற்றி வருகின்ற இந்தச் சூழ்நிலையில் எங்கள் பகுதிக்கு மட்டும் இப்படி பாதுகாப்பு இல்லாத குடிநீர் வழங்கப்படுவது எங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படி நிர்வாகம் கொடுத்திருக்கின்ற இந்தத் தகவலை மறுபரிசீலனை செய்ய முன்வருவார்களா என்றுஅறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நிர்வாகம் ரூ. 2 கோடி செலவில் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது. அதிலே Anorbic Digester என்ற காற்றேற்று தொட்டி, Settling Lagoon என்ற காற்றேற்று தொட்டி, படிய வைக்கும் தொட்டி, Clarifier மற்றும் கழிவுப் படுகை Cluster drying beds ஆகிய அமைப்புகள் மூலம் சுத்திகரிப்புப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் அதை வலுப்படுத்துவதற்காக Anorbic Contact Filter என்ற ஒன்றையும் அமைக்க வேண்டுமென்று மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்த நிறுவனத்திற்கு அறிவுறுத்தியதன் பேரில் அந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும் 14 ஏக்கர் நிலத்தில் சுத்தம் செய்யப்பட்டு இந்த நீர் அங்கே பாசனத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது. 8 ஏக்கர் நிலத்தில் கரும்பு மற்றும் யூகலிப்டஸ் மரம் பயிரிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 6 ஏக்கர் நிலத்தில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் ஆவியாக்கப்படுகின்றது. மேலும் 20 ஆண்டுகளுக்கு குத்தகையாக 50 ஏக்கர் நிலத்தை நிறுவனம் எடுத்துக் கொள்ளவேண்டும். எடுத்து அங்கே சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று மாசுக்கட்டுப்பாடு வாரியம் ஆணை பிறப்பித்திருக்கிறது. அதற்காகவும் அவர்கள் 50 ஏக்கர் நிலத்தை எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் அங்கே ஆற்று நீரில் இது கலக்குமானால்—இன்று காலை கூட, மாசுக் கட்டுப்பாடு வாரியச் செயலர் அவர்களை அழைத்துப் பேசி இருக்கிறேன். அவர் கொடுத்த தகவல் தவறாக இருக்குமானால் நிச்சயமாக மேலதிகாரிகள் மீது கூட நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

*10-15 மணி.*

உறுப்பினரோடு அந்தச் செயலரையும் அனுப்பி அந்தப் பகுதியிலே மேலும் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படாமல் நேரடி நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**டாக்டர் க. காஞ்சனா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 கோடி ரூபாய் செலவில் ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்று இருக்கிறது. ட்ரீட்மெண்ட் பிளாண்ட் இருக்கிறது. அது வேலை செய்வதில்லை. அதுதான் எங்களுடைய வருத்தம். அதுமட்டுமல்ல. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்த நிர்வாகமே 50 ஏக்கர் நிலத்தை அந்தப் பகுதியிலே குத்தகை பிடித்து, குத்தகைதாரர்களுக்கு காம்பன்சேஷன் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அந்த 18 ஏக்கர் நிலத்தில் கரும்பு,தென்னை, மா மரம் எல்லாம் வைத்திருக்கிறார்கள். ஆனால் ஒன்று கூட வளர்வதே இல்லை என்பதுதான் அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில் இந்தப் பேரவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகின்றேன். நானே சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டபிறகு 7-3-1989-ஆம் நாள் அன்று கோயம்புத்தூரிலே இருக்கின்ற சீஃப் வாட்டர் அனாலிஸ்ட் என்பவருக்கு ஒரு கடிதம் எழுதி, நீங்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற சாம்பிள நீரை எடுத்துக் கொண்டு போய் அதில் பொல்யூஷன் இருக்கிறதா என்று ஆய்ந்து அறிக்கையை எங்களுக்குத் தர வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். அதற்கான அத்தனை தகவல்களையும் அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறைச் செயலரை அனுப்புவதோடு மட்டுமல்லாமல் இந்த அவைக் கூட்டத்தொடர் முடிந்த உடனே அவர்கள் கருணை கூர்ந்து எங்களுடைய பகுதிக்கு வந்திருந்து அந்தப் பகுதியை நேரிலே பார்த்து உண்மையான நிலையைக் கண்டறிய முன்வருவார்களா என்று நான் உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆலைகள் அமைகின்ற பல்வேறு இடங்களில் இதுபோன்ற பிரச்சினைகள் வந்து கொண்டு இருக்கின்றன. சென்னையிலே இருக்கின்ற எண்ணூரில் கூட இதுபோன்ற பிரச்சினைகள்—ஃபுளோரைடு அங்கே அதிகமாக வருகிறது என்ற பிரச்சினை வந்து கொண்டுதான் இருக்கிறது. இன்றுகூட மாலை அங்கே நேரிலே சென்று பார்வையிடுவதற்காக செல்ல இருக்கிறோம், இந்தத் துறையைச் சார்ந்தவர்களோடு. ஆகவே இந்த மாசுக் கட்டுப்பாடு வாரியத்தைப் பொறுத்தவரையில் இதை இரண்டு முறையிலே அணுக வேண்டியிருக்கிறது. தொழிற்சாலைகள் மூடப்படாத சூழ்நிலையும் இருக்க வேண்டும். அதே நேரத்திலே மக்களுக்கு குடிதண்ணீர் வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே அணுகுகின்ற காரணத்தினால் சில காலதாமதங்கள் ஏற்படுகின்றன. இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பது போல் நிச்சயமாக இந்த மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய உயர் அதிகாரிகளே அனுப்பி வைக்கப்பட்டு நேரடியாகச் சென்று அங்கே மேற்கொண்டு

என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதை அரசு நிச்சயமாக எடுக்கும் என்ற உறுதியை மட்டும் இப்போது நான் சொல்லிக் கொள்கிறேன்.

**(ஆ) தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி உயர்த்தப்படாதது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உ. ரா. வரதராசன், திருமதி பாப்பா உமாநாத் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலாளருக்கான குறைந்த பட்சக் கூலி 1987-க்குப் பின்னர் மீண்டும் உயர்த்தி நிர்ணயிக்கப்படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் ;

**அறிக்கை.**

1948 ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் 70 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிக்கும் தொழில். இத்தொழிலுக்கு 14-9-1987 நாளிட்ட தொழிலாளர் துறையின் அரசாணை நிலை எண். 2050-ல் குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டன. திருத்தப்பட்ட ஊதிய விகிதங்கள் 30-9-1987 முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

2. விலைவாசிப் புள்ளி உயர்வைக் கருத்தில் கொண்டு இவ்வூதிய விகிதங்கள் காலமுறையில் திருத்தியமைக்கப்படுகின்றன. ஊதிய விகிதங்களை இரு முறையில் திருத்தியமைக்கலாம். ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்து அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஊதியங்களைத் திருத்தியமைப்பது ஒரு முறை. திருத்தியமைக்கப்படவிருக்கும் ஊதிய விகிதங்களைக் குறித்து ஒரு முதனிலை அறிவிக்கை வெளியிட்டு, அது குறித்து எதிர்ப்புகள், ஆலோசனைகள் ஆகியவற்றைப் பெற்று, அவற்றைப் பரிசீலித்து, அதன் பின்னர் முதனிலை அறிவிக்கையை உறுதி செய்வது மற்றொரு முறை. இதற்கு 'அறிவிக்கை முறை என்று



பெயர். குழு அமைத்து அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் ஊதிய விகிதங்களைத் திருத்தியமைக்க காலதாமதம் ஆகும் என்பதால் ஊதிய விகிதங்களை அறிவிக்கை முறையில் திருத்தியமைக்க அரசு முடிவு எடுத்துள்ளது.

3. இப்பொழுது குறைந்த அளவு ஊதியங்கள் நிர்ணயம் செய்யப்படும்பொழுதும் திருத்தியமைக்கப்படும்போதும் அடிப்படை ஊதியங்களோடு அகவிலைப்படியும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன் பயனாக விலைவாசிப் புள்ளி உயர்விற்கு ஏற்ப தொழிலாளர்களுக்கு அகவிலைப்படியும் அவ்வப்பொழுது வழங்கப்படும். இதனால் குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைக்க காலதாமதம் ஏற்பட்டாலும் அகவிலைப்படியில் அவர்களுக்கு உயர்வு கிடைத்துக் கொண்டிருக்கும்.

4. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலுக்குக் குறைந்த அளவு ஊதிய விகிதங்களை அறிவிக்கை முறையில் திருத்தி அமைக்க தொழிலாளர் ஆணையர் செயற்குறிப்பு அனுப்பி உள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே குறைந்தபட்ச ஊதிய உயர்வு திருத்தியமைக்கப்படுவதற்கு, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது விலைவாசிப் புள்ளியிலே 50 புள்ளி உயர்வுக்குப் பிறகு என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு வரையறைகளுமே இந்தத் தொழில்களைப் பொறுத்தவரையிலே தாண்டிவிட்டன. கடந்த ஆண்டு அரசாங்கத்தினுடைய கொள்கைக் குறிப்பிலே ''This Government will make it an endeavour to revise periodically the minimum wages, to fix not less than Rs. 15/- as minimum wages'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் தொழில்களிலே திருத்தியமைக்கக் கூடிய முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. இப்பொழுது இந்தத் தொழில்களிலே ரூ. 10 தான் குறைந்த பட்ச அடிப்படைச் சம்பளமாக இருந்து கொண்டிருக்கிறது. பெண்கள், குழந்தைகள் மிக அதிகமாக உள்ள தொழில் என்பதாலேயே தமிழக அரசு இத் தொழிலுக்கு ஏராளமான சலுகைகளை அளித்துள்ளது. மத்திய அரசுக்கும் சலுகைகளுக்கான பரிந்துரையை செய்துள்ளது. எனவே இந்தப் பரிந்துரையின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த குறைந்த பட்ச ஊதியங்கள் உயர்த்தியமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆணையர் இதற்கான செயற்குறிப்பை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள் அரசு இதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே ஊதிய விகிதங்கள் இரண்டு முறைகளில் திருத்தியமைக்கலாம் என்று

[திரு. கே. என். நேரு]

ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்து அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஊதியங்களைத் திருத்தியமைப்பது ஒரு முறை. திருத்தியமைக்கப்பட இருக்கும் ஊதிய விகிதங்கள் குறித்து ஒரு முதல் நிலை அறிக்கை வெளியிட்டு அது குறித்து எதிர்ப்புகள், ஆலோசனைகள் ஆகியவற்றைப் பெற்று அவற்றைப் பரிசீலித்து அதன் பின்னர் முதல் நிலை அறிக்கையை உறுதி செய்வது மற்றொரு முறை. இதில் இரண்டாவது முறையை ஆணையர் அவர்கள் ஒரு அறிக்கையாக வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் வெளியிட்டு இப்போது அடிப்படை ஊதியம் நிர்ணயிக்கும்போது அடிப்படை ஊதியங்களோடு அகவிலைப் படியும் வழங்க வகை செய்திருக்கிறார்கள். இதன் பயனாக விலைவாசிப் புள்ளி உயர்விற்கு ஏற்ப தொழிலாளர்களுக்கு அகவிலைப்படியும் அவ்வப்போது வழங்கப்படும். இந்த குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைப்பதில் காலதாமதம் ஏற்பட்டாலும் அகவிலைப் படியில் அவர்களுக்கு உயர்வு கிடைக்கும் என்ற அளவிலே திருத்தியமைத்து ஆணையர் அவர்கள் அரசுக்கு ஒரு அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். அரசு அதைப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-20 மணி

**திரு. உ. ரா. வரதராசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முறைகளிலே அறிவிக்கை முறைதான் அமல்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுவே நல்ல முறை விரைவாகக் கிடைப்பதற்கு. ஆனால் இந்த விவர அறிக்கையிலே குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தி அமைப்பதற்கு கால தாமதம் ஏற்பட்டாலும் அகவிலைப்படியிலே அவர்களுக்கு உயர்வு கிடைத்துக் கொண்டு இருக்கும் என்று காலதாமதத்திற்கு ஒரு நியாயம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தீப்பெட்டித் தொழிலிலே புள்ளிக்கு ஒரு காசுதான் அதுவும் 425 புள்ளிக்கு மேல் என்று நினைக்கிறேன். அதுவே டிம்பர், மரம் அறுக்கும் தொழிலிலே புள்ளிக்கு 4 காசுகள், கட்டுமான தொழிலிலே புள்ளிக்கு 4 காசுகள், கடைகள், நிறுவனங்களுக்கு மாதம் புள்ளிக்கு 75 காசுகள் என்று இப்போது அகவிலைப்படி தீப்பெட்டித் தொழிலிலேதான் மிகவும் குறைவு. டிம்பர் தொழிலிலே, கட்டுமானத் தொழிலிலே 9.48 காசு என்று இருக்கிறபோது, கடைகள், நிறுவனங்களுக்கு 6.84 காசு என்று இருக்கிறபோது வெறும் 4.17 காசு மட்டுமே தீப்பெட்டித் தொழிலிலே கிடைத்துக் கொண்டு இருக்கிறது. இந்தத் தொழில் சந்தை விற்பனையில் குடிசைத் தொழிலாக இருந்தாலும் மார்க்கெட் ஷேர் 85 சதவீதம் உள்ள தொழில் என்ற காரணத்தால் தமிழ்நாட்டிலே இந்த விற்பனையிலே 95 சதவீதம் இவர்களுக்கு இருக்கிற காரணத்தாலே இந்த அகவிலைப்படி விகிதமும் உயர்த்தப்படுமா என அறிய விரும்புகிறேன். காரணம் 88 இறுதியிலே இருக்கக்கூடிய புள்ளிவிவர விகிதப்படி கமிஷனர் அவர்கள்



[திரு. உ. ரா. வரதராசன்]

அறிக்கை தந்து இருப்பதாக அறிகிறேன். அகவிலைப்படி உயர்த்துகிற அந்த விகிதத்தை புள்ளிக்கு ஒரு காசு என்பதை உயர்த்துவதற்கான உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா, அது உயர்த்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால தாமதம் ஏற்பட்டாலும் அகவிலைப்படி அவர்களுக்குக் கிடைக்கும் என்று கூறியதை, இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு காலதாமதத்திற்கு நாட்களை எடுத்துக் கொள்வார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சந்தேகப்பட வேண்டாம். உடனடியாக அரசு இதன் மீது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**5. மானியக் கோரிக்கைகள், 1990-91-- விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.**

**(அ) கோரிக்கை எண். 36— பாசனம்.**

**மாண்புமிகு திரு. துரைமுருகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 36— பாசனம்— என்ற தலைப்பின் கீழ் ரூ. 104,41,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. எஸ். டி. உகம்சந்த்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதி பழையனூர் ஏரிக்கு பாலாற்றிலிருந்து வரும் வரவுக் கால்வாய்கள் தூர்ந்து விட்டதால் சுமார் 1,000 ஏக்கர் நிலங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டது என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 36— பாசனம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,41,03,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. ஜி. பழனிச்சாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வளவன் ஆறு வடிவுகால் விரிவுபடுத்துவது என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 36— பாசனம்— என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,41,03,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் முல்லையாற்றின் குறுக்கே பல்லிக்காட்டம் பகுதியில் அணை கட்டி, அப்பகுதி மக்களின் விவசாயம் மற்றும் குடிநீர்ப் பிரச்சினைக்கு வழி வகை செய்ய வேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,41,03,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், சிற்றாறு பட்டணங்கால் கருங்கல் கடலில் இருந்து திப்பிரமலை, ஓலவிளை, கஞ்சிக்குழி வழி பாசனத்துக்குப் பயன்படும் வகையில் கிளைக் கால்வாய் ஒன்று வெட்ட வேண்டிய தேவை என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,41,03,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,65,57,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் வட்ட தாசில்தார், நீதி மன்றங்கள், கருவூலம், பதிவுத்துறை அலுவலகங்களுக்கு அரசு கட்டிடம் கட்டித் தருவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,65,57,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் பேருந்து நிலையம் அருகில் உள்ள பொதுப் பணித்துறை கட்டிடம் எந்த உபயோகமும் இல்லாமல் இருப்பதும் அதைப் பராமரிப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,65,57,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பரங்கிமலை ரயில் நிலையம் அருகே, ரயில் பாதைக்குக் குறுக்கே சுரங்கப்பாதை கட்டும் பணியை விரைவுபடுத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,65,57,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

10.25 மணி

### (இ) கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 38,29,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும்-தளவாடமும்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,29,49,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராம நதி, கடனா நதி நீர்த்தேக்கம் கட்டுவதற்கு ஆர்ஜிதம் செய்யப்பட்ட அவசியமில்லாத நிலங்களை விவசாயிகளிடம் மீண்டும் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள் பணியாளரமைப்பும் — கருவிகளும் — தளவாடமும்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,29,49,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். ஏ. தங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் தொகுதி, ஏ. வெள்ளோடு ஐயனார்கோவில் நீர்த்தேக்க சிற்றணை கட்ட அகரம் கிராமம் உலகம்பட்டி குட்டணை கட்ட வகை செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

"மானியக் கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும்-கருவிகளும்—தளவாடமும்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,29,49,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

(ஈ) கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 140,30,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை 45-ல் புக்கத்துறை முதல் விழுப்புரம் வரையுள்ள சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றுவது என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 140,30,83,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம் அரும்பாவூர் முதல் மலையாளப்பட்டி வரை பழுதடைந்த சாலை புதுப்பிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

"மானியக் கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 140,30,83,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாந்தூர், மேல் ஓடயரட்டி, கல்லக்கொரை—கரியல்வளை—இத்தலார்—போர்த்திஹாடா . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் இதில் ஏதாவது வெட்ட முடியுமா? (சிரிப்பு).

திரு. எச். எம். ராஜு : உதகை-பார்சன்ஸ் வேலி மஞ்சூர்—கிண்ணக்கொரை சாலைகள் புதுப்பித்தல் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்."

"மானியக் கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 140,30,83,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் அணை காவேரி பாலம் கடந்த மூன்றாண்டுகளாகப் பழுதடைந்துள்ளதைப் புதுப்பித்தோ அல்லது மாற்றுப் பாலம் அமைக்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 140,30,83,000 இல். ரூ. 100 குறைக்க வேண்டும்."

(உ) கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

(திரு. துரைமுருகன்) [1990 மே, 2

" மானியக் கோரிக்கை எண். 52— பாசனம் குறித்த மூலதனச் செலவு— என்ற தலைப்பின் கீழ் ரூ. 57,57,07,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும். "

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 52— பாசனம் குறித்த மூலதனச் செலவு— என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 57,57,07,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 52— பாசனம் குறித்த மூலதனச் செலவு— என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறு கின்ற ரூ. 57,57.07,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் குடியாத்தம் வட்டம் பரதராமி பெரிய ஏரிக்கு டி.பி. பாளையத்திலிருந்து வரும் காணாறு ஓடையை நீர்வரத்துக்காக சீர் செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண். 52— பாசனம் குறித்த மூலதனச் செலவு— என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 57,57,07,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

(ஊ) கோரிக்கை எண். 53— பொதுப்பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 53— பொதுப்பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு— என்ற தலைப்பின்கீழ் ரூ. 39,47,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும். "



1990 மே 2]

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 53— பொதுப் பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு— என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 39,47,79,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

" மானியக் கோரிக்கை எண். 53— பொதுப்பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு— என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 39,47,79,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கட்டிடங்கள் பழுதுபார்க்க, புதிய கட்டிடங்கள் கட்ட உரிய நிதியை உண்டாக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 53— பொதுப் பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு— என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 39,47,79,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

(எ) கோரிக்கை எண். 54— சாலைகள்— பாலங்கள் குறித் மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 54— சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு— என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,11,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும். "

10-30 மணி.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை அண்ணா மாவட்டம் ஆலந்தூரில் இரயில்வே லைனைக் கடக்க மேம்பாலம் கட்டும்

பணியில் ஏற்பட்டுள்ள தாமதம் தவிர்ப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,11,65,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 54—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,11,65,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

**திரு. வி. தம்புசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருவாரூர் வட்டத்தையும் நாகை வட்டத்தையும் இணைக்கும் பெரியதும்பூர்-மாங்குடி சாலை முற்றுப்பெற வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 54—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 33,11,65,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

**மாண்புமிகு பேரவைத் தலைவா :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் ஆகிய துறைகளைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள்* ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப் பட்டுள்ளன. அவற்றை நான் அவையில் படித்ததாகக் கருதி அவை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் நல்குகின்ற மேலான யோசனைகளையும், கருத்துக்களையும் கேட்டபின் நான் ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால் இறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* 227-317ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர்களே, இன்றைக்கு 0-க்கு மேற்பட்ட உறுப் பினர்கள் உரையாற்ற இருக்கிறார்கள். ஒவ்வொருனி கட்சிக்கும் ஒதுக்கப்பட்ட நேரம்அவரவர்களுக்குத் தெரிவிக்கப் பட்டு வரையறுக்கப்பட்டடு இருக்கிறது. எனவே அந்த நேரத்திற்குள் முடிக்காவிட்டால் அடுத்தவர் அழைக்கப் படுவார். யாரும் வருத்தப்படமாட்டீர்கள் என்று நான் கருதுகிறேன்.

: . . . . .ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

* **பேராசிரியர் க. பொன்னுசாமி :** பேரவைத் தலைர் அவர்களே, நன்றி. பொதுப்பணித்துறை மற்ற எல்லா துறைகளோடும் தொடர்புடைய துறை. மற்ற எல்லா துறைகளும் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்றால் பொதுப் டணித்துறை எல்லாவற்றுக்கும் தொடர்புடைய துறையாக விளங்கித்தான் தீரவேண்டும். தமிழகத்தில் இன்று நிலவுகிற வறட்சியைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள், வரத்து வாய்க்கால்கள் போன்றவை எல்லாம் மேடிட்டு இருப்பதைக் கவனித்து தூர் எடுத்து, மழை நீர் வீணாகாமல் தேங்கிட வழிவகை செய்யவேண்டும். கசிவுநீர்க்குட்டைகளை எங்கெங்கு அமைக்க முடியுமோ அங்கெல்லாம் அமைத்து மழைநீரைத் தேக்கி வைத்து, நிலத்தடி நீர் குறைவுபடாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் இந்தத் துறையின் மூலம் நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும். இப்படி நீரைத் தேக்கி வைத்தால் கிணறுகளை ஒவ்வொரு ஆண்டும் தோண்டுகிற அவலநிலைக்கு விவசாயிகள் ஆளாக்கப்பட மாட்டார்கள்.

ஏரிகளைப் பொறுத்தவரையில் 100 ஏக்கர் பாசனத்திற்கு மேற்பட்ட ஏரிகளை பொதுபப்ணித்துறையிலேயு அதற்குக் குறைந்தவற்றை ஒன்றியங்களிலும் ஒப்படைக் கிறார்கள். ஆனால் பொதுப்பணித் துறையிலே இருக்கிற ஏரிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அதற்கு ஒதுக்கப்படுகிற நிதி அதிகமாக இருக்கிறது. ஒன்றியங்களில் இருகின்ற ஏரிகளின் எண்ணிக்கை அதிகம். அதற்கேற்ற வகையில் நிதி இல்லை. பராமரிப்பு குறைவாக இருக்கிறது. ஆகவே ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைக் கவனித்து அரசு நடவடிக்கை. எடுக்க வேண்டும். ஏரிகள், குளங்களில் இருக்கின்ற ஆக்கிரமிப்பு காரணமாக அவை மேடிட்டுவிடுகின்றன. தண்ணீர். தேக்கம் குறைந்துவிடுகிறது.

ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கான அதிகாரம் பொதுப்பணித் துறைக்குத் தரப்பட வேண்டும். அல்லது உடனடியாக ஏதாவது மாற்று ஏற்பாட்டைச் செய்து ஆவன செய்ய வேண்டும்.

மருங்காபுரி தொகுதியைப் பொறுத்தவரையில் எக்ஸ் ஜமீன் டாங்க்ஸ் மிக அதிகமாக இருக்கின்றன. அவற்றுக்கு நிதியினை அதிகமாக ஒதுக்கி அந்த ஏரிகள் பராமரிக்கப்பட வேண்டும். வறட்சி நிவாரணப் பணிகள் வரும்போது முழுமையாக டெண்டர் விட்டு அந்தப் பணிகளைச் செய்கிற அளவுக்குத் துறையிலே ஏற்பாடுகள் நடைபெறவேண்டும். புதிய பாசனத் திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்யும்போது 'காஸ்ட் பெனிஃபிட்ரேஷியோ' என்பதை விடாப்பிடியாக அரசு பிடித்துக்கொள்கிறது. இதன் காரணமாக பல புதிய திட்டங்கள் வருவதிலே தடைகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு முறை மேற்கோள் காட்டியிருகிறார்கள். ''வெறும் லாப நட்டக் கணக்குப் பார்ப்பதாக இருந்தால் அது சர்க்காராக இருக்க முடியாது ; சத்திரமாகத்தான் இருக்கும்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே மக்கள் நலன் கருதி அப்படிப்பட்ட வரட்டு கௌரவங்களை எல்லாம் விட்டுவிட்டு வெறும் லாப நட்டக் கணக்குப் பார்க்காமல் அங்கே இருக்கின்ற விவசாயிகளின் நலன் கருதி அரசு திட்டங்களை செயல்படுத்த முன்வரவேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கஞ்சா நாயககன் பட்டி என்ற ஊரில் வர இருக்கின்ற அணைக்கட்டுத் திட்டம் இதைக் காரணம் காட்டி நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும். காஸ்ட் பெனிஃபிட் ரேஷியோ சரியாக இல்லை என்றால் அங்கே அரசு பணியைச் செய்து முடித்துவிட்டு அங்கே இருக்கின்ற விவசாயிகளிடம் மேம்பாட்டுக்காக அதிகப்படியான வரியை வசூலிப்பதற்குக் கூட ஏற்பாடு செய்யலாம்.

காவிரி, பாலாறு போன்ற ஆறுகளில் மணல் எடுப்பதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். நேற்றுகூட செய்தித்தாளில் வந்திருக்கிறது. பாலாற்றில் உள்ள அந்தப் பாலமே ஆட்டம் கண்டுவிடுமோ என்று அஞ்சுகிற நிலைமை இருப்பதாக பத்திரிகைகளில் வந்திருக்கிறது. ஆகவே அரசு இதைப்பற்றி சரியான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

குடகனாறு திட்டப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு தொடர்புடைய ஏரிகள் அனைத்துக்கும் விரைவில் நீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.



வீராணம் ஏரி மேடிட்டுப் போய்விட்டது. 3 போகம் விளைந்த இடத்தில் 1 போகம் விளைவதாகவும் 11 வரத்துவாரிகள் மேடிட்டுப் போய்விட்டதாகவும் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. ஒரு லட்சம் ஏக்கருக்கு பாசனம் தந்து கொண்டிருக்கிற அந்த ஏரியில் மிக விரைவில் மராமத்துப் பணிகள் செய்யவேண்டும்.

10-35 மணி

காவிரி நீர்ப் பங்கீடு தொடர்பாக டிரிபியூனலுக்கு அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தீர்மானம் இயற்றி இருக்கிறார்கள். அந்த நடுவர் தீர்ப்பு காலவரைக்குட்பட்டு அமைய வேண்டுமென்று கேட்க வேண்டும். நான்காவது முறையாக இந்த அவையில் நான் இதைக் கேட்கிறேன், காலவரைக்குட்பட்டதாக அமைய வேண்டுமென்று நடவடிக்கை எடுக்க நமது அரசு முன்வரவேண்டும்.

பாண்டிய நாட்டையும், சோழ நாட்டையும் பிரிக்கின்ற எல்லையாக அமைந்திருப்பது வெள்ளாறு. அது என்னுடைய தொகுதியில் தொடங்கி, வளநாடு வேம்பனூர் வழியாக கவிநாட்டு கண்மாய்க்குச் சென்று புதுக்கோட்டை மாவட்டத்தில் கடலில் கலக்கிறது. அந்த ஆற்றில் மிக அதிகமான மழைத் தண்ணீர் ஆண்டுதோறும் வீணாகிக் கொண்டு இருக்கிறது. அதைத் தேக்கும் வகையில் ஏதாவது திட்டங்கள் கொண்டு வர முடியுமா என்பதை பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வளநாடு மற்றும் வேம்பனூர் கண்மாயை மாடர்னைசேஷன் திட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள். அதை அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும் ஏற்பாடு செய்து, ஒரு போக நஞ்சையை இரண்டு போக நஞ்சையாக மாற்றித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

கண்ணூத்து நீர்தேக்கம் இருக்கிறது. அந்த நீர்த்தேக்கத்தை ஆக்ஷன் பிளானில்தான் எடுக்க முடியும். இந்த மாடர்னைசேஷன் திட்டத்தில் வரவில்லை. அதை ஆக்ஷன் பிளானில் சேர்த்து ஏறத்தாழ 600-க்கு மேற்பட்ட ஏக்கருக்குப் பாசனம் தரும் அந்த ஏரிக்கு மராமத்து வேலைகளைச் செய்து மேடிட்ட பகுதிகளைச் சரிசெய்து விவசாயிகளுக்கு நன்மையைச் செய்து கொடுக்கவேண்டும். கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கப்பட்டு ஒன்றியங்களில் அதை ஒப்படைக்கிறார்கள். ஆனால் ஒன்றியங்கள் அதைப் பராமரிப்பதில்லை. கேட்டால் நிதி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே எங்கே கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தாலும் அதைப் பராமரிக்கிற பொறுப்பை பொதுப் பணித் துறை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிட வேண்டும்.

பெரியாறு அணை பற்றி செய்திகள் வருகின்றன. அதிலே 152 அடி தண்ணீர் கொள்ளளவு. அவ்வளவு தண்ணீர் அதிலே இருக்க வேண்டும். ஆனால் இப்போது 136 அடிதான் இருப்பதாகவும், அப்படிக் குறைந்திருப்பதற்குக் காரணம், கேரள அரசு அந்த அணையை சரியாக இல்லை என்று சொல்லி, பாதுகாப்பாக இல்லை என்று சொல்லி, மராமத்து வேலைக்காக ரூ. 10 கோடி கேட்டதாகவும், அந்தப் பணம் கொடுக்கப்பட்டும், அந்த மராமத்து வேலைகள் முடிந்தும் இன்னும் தண்ணீர் அங்கே 145 அடி உயரத்திற்குக் கூட வரவிடாமல் வைத்திருக்கிறார்கள் என்றும் செய்தித் தாள்களில் செய்திகள் வருகின்றன. அதை முடித்து முழுமையாக 152 அடி தண்ணீர் வந்து, எல்லா விவசாயிகளுக்கும் நன்மை கிடைக்கும் வகையில் ஏற்பாடுகளை நமது அரசு செய்ய வேண்டும். நமக்கு வரவேண்டிய தண்ணீரை இடுக்கிக்குக் கொண்டுபோய், அதன்மூலம் அங்கே மின்சாரம் உற்பத்தி செய்து, அந்த மின்சாரத்தை நமக்கு விற்கிறார்கள் என்று கூட செய்திகள் வந்திருக்கின்றன. இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

மேற்கு நோக்கிப் பாய்கிற நதிகளைத் திருப்புவது பற்றி பல முறை இந்த அவையில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆலடித் திட்டம் என்ற ஒன்றை 1973-லேயே இந்த அரசு பரிந்துரைத்திருக்கிறது. இது தொடர்பாக என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒருவர் பெருந்தலைவராகப் பணியாற்றியவர், வெங்கம நாயக்கர் என்று பெயர். அவர் கே. எல். ராவ் அவர்களுடைய மிக நெருக்கமானவர் நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவர், அவருக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. நகல்தான். சென்ட்ரல் வாட்டர் கமிஷன் எழுதிய அந்தக் கடிதத்தை தமிழகத்திற்கு அனுப்பி விட்டு, இதில் கேரள அரசோடு தொடர்பு கொண்டு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டு, அதை விரைவில் அனுப்பி வையுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். இது மிக விரைவில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம். பம்பையாறும் அச்சன்கோவில் ஆறும் இணைந்து அதிலிருந்து திருப்பப்பட்டு டன்னல் வழியாக தண்ணீர் கொண்டு வரப்பட்டால் 2,500 அடி உயரத்திலிருந்து தண்ணீர் விழும் என்றும், அதன் மூலம் 11,000 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இயலும், 10 லட்சம் ஏக்கருக்கு பாசனம் கிடைக்கும் என்றும் அந்தத் திட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசிடம் அது இருக்கிறது. இதை விரைவுபடுத்தினால், மதுரை, கோவை, திண்டுக்கல், காயிதே மில்லத், திருச்சி, தஞ்சை மாவட்டங்கள் எல்லாம் பயன் பெறும். அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

பொதுப்பணித்துறையில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படுகின்றன. ஆனால் உடனடியாக எந்தெந்தத் துறைகளுக்கு அவை



களை ஒப்படைக்க செய்ய வேண்டுமோ அப்படி செய்யப்படுவதில்லை. அதன் காரணமாக, மக்கள் பணிகள் பாதிக்கப்படுகின்றன. அதை கருத்தில் கொண்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுப்பணித்துறையிலும், நெடுஞ்சாலைத் துறையிலும் பல்வேறு பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அப்படி அதிகம் இருப்பதாகவும் அவைகள் விரைவில் நிரப்பப்படவேண்டுமென்றும் கோரிக்கைகள் இருக்கின்றன. அதையும் அரசு கவனிக்க வேண்டும். சாலை ஆய்வாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஓய்வூதியம் தர இந்த அரசு முன்பு ஆணை வெளியிட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் பணியாற்றிய தற்காலிகப் பணிக்காலங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. அதனால் அரசுக்கு அதிகமான நஷ்டம் வரப்போவதில்லை. 30 பேர் கூட ஆண்டு ஒன்றுக்கு ஓய்வு பெறுவதில்லை. ஆகவே அந்தப் பணிக்காலத்தையும் ஏற்றுக் கொண்டு மற்ற துறைகளைப்போல, 10(ஏ)(1) சர்வீசையும் கணக்கில் ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு ஓய்வூதியம் கணக்கிட்டு கிடைக்க வழிவகை செய்யவேண்டும்.

ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பொறுத்தவரையில், கிராமச் சாலைகள் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அந்தப் பணிகள் முடிக்கப்பட்டவுடனேயே நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்படுவதில்லை. அதன் காரணமாக சில இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. என்னுடைய தொகுதியில் 3 சாலைகள் அப்படி முடிக்கப்பட்டு, ஒப்படைக்கப்படாமல் இருந்த நிலையில் ஒரு பாலம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விட்டது.

10-40 மணி

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதைப்பற்றிக் கேட்கச் செல்லும்போது ஒன்றியத்தில் ஆர். ஆர். இடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாக சொல்கிறார்கள். ரூரல் ரோட்ஸ்-ல் சென்று கேட்டால் அவர்கள் 'பணியை முடித்து விட்டோம், மீண்டும் கட்ட முடியாது, என்று சொல்கிறார்கள். பிறகு ரெகுலர் டிவிஷனில் போய்க்கேட்டால் அவர்கள் 'எங்களிடத்திலே ஒப்படைக்கப்படவில்லை. நாங்கள் என்ன செய்வது' என்று சொல்கிறார்கள். இப்படி எல்லாம் நடந்து, அங்கே சாலை மறியல் போராட்டம் நடத்துகின்ற அளவுக்கு பிரச்சினை வந்தது. இதை எல்லாம் கருத்திலே கொண்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுரை-இராமேஸ்வரம் சாலை, 160-ல் இருந்து 170 கிலோ மீட்டர், ஏறத்தாழ ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டதாகவும், அதிலே 12 பேர் டெண்டர் போட்டதாகவும், ஒருவருக்கு டெண்டர் ஷெட்யூல் கொடுக்கப்படவில்லை என்று தந்தி அடித்ததாகவும், அதன் காரணமாக அவர் கோர்ட்டுக்கு

கூட சென்றதாகவும் 15 லட்சம் ரூபாய் குறைவாக அந்த வேலையை செய்ய ஒப்புக்கொண்டதாகவும், அதையும் மீறி அந்த வேலை அவருக்கு தரப்படவில்லையாதலால் அது வழக்கு மன்றத்திலிருந்தது, பின்பு விசாரணை நடத்தப்படாமலேயே அந்த டெண்டர் மறுபடியும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் சொல்கிறார்கள். அதுபற்றி எந்த நடவடிக்கையும் இல்லை. 15 லட்சம் ரூபாய் செலவுக் குறைவாக கேட்டவருக்கு கொடுக்காமல் ஏறக்குறைய 15 பெர்செண்ட் above ரேட்டில் கொடுத்திருக்கிறீர்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால் தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்சன் கார்ப்பரேசன் இதிலே டெண்டர் போடவில்லை. 5 லட்சம் ரூபாய்க்கு மேல் டெண்டர் இருந்தால் தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்சன் கார்ப்பரேசன் டெண்டர் போட வேண்டுமென்று ஒரு முறை இருப்பதாகவும், அது இங்கே மீறப்பட்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகவே, அரசுக்கு இதனால் ஏறக்குறைய 33 லட்சம் ரூபாய் நஷ்டம் எற்பட்டிருக்கிறது. அரசுக்குக் கிடைக்க வேண்டிய லாபம் குறைந்திருக்கிறது. ஆகவே, இது அரசுக்கு நஷ்டம் 15 பெர்சன்ட் above ரேட்டிலே, 1 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய்க்கு அந்த வேலை தரப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு கோடியே 5 லட்சம் ரூபாய்க்குக் கேட்டவருக்கு இந்த வேலை தரப்படவில்லை. இதை ஏன் அரசு தராமல் விட்டது, ஏன் அரசு மறு டெண்டர் கேட்கவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மதுரை புறவழிச் சாலையில் இரு புறமும் சைக்கிள் பாதையை மாற்றம் செய்யவும், ரோடு அமைக்கும் வேலைக்கும் 1 கோடியே 20 லட்சம் ரூபாய்க்கு ஆளுநர் ஆட்சிக் காலத்தில் டெண்டர் போடப்பட்டு, இந்த அரசு அந்த டெண்டரை ஒத்துக்கொண்டிருக்கிறது. அங்கே மதிப்பீடு அளவுக்கே வேலை தரப்பட்டிருக்கிறது. பொதுவாக மறு டெண்டர், விளம்பரம் செய்யப்படுவது அரசுக்கும் லாபம் தருவதற்காக. ஓர் இடத்திலே எஸ்டிமேட் ரேட்டுக்கு கொடுத்துவிடுகிறார்கள். ஓர் இடத்திலே அதேமாதிரி வேறு ஒரு வேலைக்கு 20 பெர்சன்ட் above ரேட்டில் ஒத்துக்கொள்கிறார்கள். என். எச். 45, 305 கிலோமீட்டரிலிருந்து 312 கிலோ மீட்டர். 1 கோடியே 10 லட்சம் ரூபாய்க்கான வேலை. இதுவும் ஆளுநர் ஆட்சிக்காலத்திலே தான் கோரப்பட்டிருக்கிறது. இதுவும் 20 பெர்சன்ட் எபவ் ரேட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது ஏன் என்று தெரியவில்லை. அதாவது ஒரு கோடியே, 32 இலட்சம் ரூபாய்க்கு இந்த வேலை தரப்பட்டிருக்கிறது. 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீடு. அதே வேலை மதிப்பீட்டில், இன்னொரு பகுதியிலே, இன்னொரு ரீச்சிலே, 5 கிலோ மீட்டர் வேலையில், 12 பெர்சன்ட் லெஸ் ரேட்டில் கொடுத்திருக்கிறார்கள். ஒரே வேலை, தொடர்ச்சியாக ஒரு புறம் 12 பெர்சன்ட் லெஸ், மற்றொருபுறம் 20 பெர்சன்ட் above ரேட். ஏன் இந்த மாறுபாடு என்பது தெரியவில்லை. இதனால் அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்பதை அமைச்சர் கவனிக்க வேண்டும். ஒரே வேலை, ஒரே இடத்தில், வேண்டியவர்களுக்கு 20 பெர்சன்ட் எபவ் ரேட்டில் அதிகாரிகள்



கொடுத்துவிட்டார்களா? வேண்டாதவர்களுக்கு 12 பெர்செண்ட் லெஸ் ஆகப் போட்டதை ஏற்றுக் கொண்டார்களா ? அரசு ஏன் மறு டெண்டர் கோரவில்லை என்பதை அமைச்சர் இங்கே தெரிவிப்பார் என்று நினைக் கிறேன்.

அடுத்து "Formation of Railway overbridge and its approaches at Km. 427/0 of N.H. 7 Near Samayanallur" இதற்கும் ஆளுநர் ஆட்சிக் காலத்திலே டெண்டர் கோரப்பட்டது. 17 பெர்சன்ட் எபவ் ரேட் என்று இருந்தது. இதற்கு மட்டும் மறு டெண்டர் கோரப்பட்டது. ஆக, ஓர் இடத்திலே எபவ் ரேட் போட்டால் மறு டெண்டர் கேட்கிறார்கள். மற்றொரு இடத்திலே கேட்காமல் விட்டுவிடுகிறார்கள். ஓர் இடத்திலே, அதே ரேட்டுக்கு செய்யுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். இன்னொரு இடத்திலே அதே வேலைக்கு 12 பெர்சன்ட் லெஸ் ரேட் என்று ஏற்றுக்கொள்கிறார்கள். ஏதாவது ஒரு சரியான முறையில் இந்த டெண்டர் விவகாரத்தில் செயல்பட வேண்டும். இப்படிப்பட்ட நிலை காரணமாக அரசுக்கு ஏறக்குறைய 1 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. 4, 5 நாட்களுக்கு முன்பு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். முன்பு இருந்த ஆட்சிக் காலத்திலே அதிகமாக லாரி வாடகை கொடுக்கப்பட்டதால் நமக்கு 5 கோடி ரூபாய் போய்விட்டது. அதை நாங்கள் இப்போது ரெக்கவரி செய்து வைத்திருக்கிறோம். அந்த வகையில் அரசுக்கு வருவாயைப் பெருக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் இதையும் சொல்கிறேன். அதிலே ரெக்கவரி செய்திருக்கிறோம் என்று சொல்லிவிட்டு இதிலே தானம் செய்துவிடாதீர்கள் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டதில் இன்னும் 2 நிமிடங்கள் இருக்கின்றன. சீக்கிரம் முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஆற்றுப்பாசனம் இல்லை. அது வானம் பார்த்த பூமியாதலால் பட்டினப்பாலையில் சொல்லப்பட்டிருப்பதுபோல 'காடு கொன்று நாடாக்கி, குளம் தொட்டு, வளம் பெருக்கி, என்கிற முறையில்தான் நாங்கள் அங்கே செய்ய முடியும். காஸ்ட் பெனிபிட் ரேஷியோ பற்றி அரசு கொள்கைக் குறிப்பிலே ஒன்றை சொல்லியிருக்கிறது.

10-45 மணி

வறட்சி அதிகமான இடங்களிலே 1 : 1; வறட்சி குறைவான பகுதிகளிலே 1.5 : 1 என்று சொல்லியிருக்கிறார்கள். இதை சற்று தளர்த்தி, வெறும் லாப நட்டக் கணக்கைப் பார்க்காமல் (மணியடிக்கப் பெற்றது) மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, எனக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரம் இன்னும் ஒரு நிமிடம் இருக்கிறது என்பது தெரியும். நான் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்) : பேராசிரியர் அவர்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்ற திறமை உள்ளவர் என்பது தெரியும். ஆகவே விரைவில் முடிக்க வேண்டுகிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, சுருங்கச் சொல்லவே அனுமதிக்கவில்லையே; அந்த இடங்களில் அதிகமான கசிவு நீர்க் குட்டைகளை அமைக்க வேண்டும். சில இடங்களிலே பாரஸ்ட் லேண்ட் வருகிறதென்று சொன்னார்கள். நான் ஆலோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பாரஸ்ட் டிப்பார்ட்மெண்ட்டே அவர்களுக்காக கசிவு நீர்க் குட்டைகளை அங்கே அமைத்துக்கொள்ளட்டும். அது நிலத்தடி நீரை அதிகப்படுத்தித்தரட்டும் என்ற அளவிலே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வான் பொய்த்து விட்டால் உலகிலே பசி உள் புகுந்துவிடும் என்று திருவள்ளுவர் சொல்கிறார். ஆகவே ஏழை எளிய மக்களின் பசியைத் தீர்ப்பதற்கு, விவசாயத்தைப் பெருக்குவதற்கு, விவசாயம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் நன்மை செய்தது என்று அவர்கள் நம்புவதற்காக பொதுப் பணித் துறை சார்பில் கசிவு நீர்க் குட்டைகளை அதிகமாக அமைத்தும், ஏரி குளங்களை மராமத்து செய்து கொள்ளளவை அதிகப்படுத்தியும், நீர்நிலைகளை மேம்படுத்தியும் நிலத்தடி நீர் அதிகமாகும் அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

*திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது என்பதை உணர்ந்து, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மானியத்தில் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைமைச் செயலகத்தில் பொதுப் பணித்துறையிலிருந்து பிரிக்கப்பட்ட நெடுஞ்சாலைத் துறையை 12 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் பொதுப் பணித் துறையுடன் இணைத்ததற்கும், தலைமைச் செயலகத்தில் தலைமைப் பொறியாளர் ஒருவரை சிறப்புச் செயலாளராக நியமித்ததற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

துறையின் வளர்ச்சிக்கும், பொது மக்கள் நலனுக்காகவும் துறையில் பல சீர்திருத்தங்கள் செய்துவரும் மாண்புமிகு அமைச்சரவர்கள் மேலும் சில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்சமயம் உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு தொலைபேசி வசதி கிடையாது. போதிய வாகன வசதியும் கிடையாது. இருக்கின்ற வாகனங்களுக்கும் தற்சமயம் இருக்கின்ற தடையின் காரணமாக, ஓட்டுனர்கள் நியமிக்கின்ற தடையின் காரணமாக, ஓட்ட முடியாமல் இருக்கிறது.



ஆகவே ஒவ்வொரு கோட்டப் பொறியாளர்களுக்கும் ஒரு ஜீப்பும் தொலைபேசியும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்சமயம் இதர மாவட்டச் சாலைகளுக்கு— ஓ.டி.ஆர். என்று சொல்வார்கள். —போதிய நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால், நல்ல முறையில் அவற்றைப் பராமரிக்க முடியவில்லை. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் கிராமச் சாலைகள் திட்டம், பேருந்துச் சாலைகள் திட்டம் என்று முடிக்கப்பட்ட 800 கிலோ மீட்டர் சாலைகளைப் பராமரிக்க ஓ. டி. ஆர். கீழ் கொண்டுவரப் படுகிறது. ஆனால் அதற்கேற்ற ஒதுக்கீடு இல்லை. எனவே, ஓ.டி. ஆர்க்கு முக்கியத்துவம் கொடுத்து, நல்ல முறையில் அவைகளைப் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என். ஆர். இ. பி. உதவி கோட்டப் பொறியாளர் என்று 5 முதல் 10 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒருவர் இருக்கிறார். தற்போது ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மிக அதிகமாக இருக்கிற காரணத்தால், 3 ஒன்றியங்களுக்கு ஒரு உதவிக்கோட்ட பொறியாளர் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கூடுதல் பொறியாளர் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவனாக இருக்கிறேன். அவர்களால் பல வேலைகளைப் பார்க்க முடியவில்லை மிக நீண்ட தூரமாக இருப்பதால், என். ஆர்.இ.பி., ஏ.டி.ஈ. ஒன்றியத்திற்கு வருவது சிரமமாக இருக்கிறது. ஆகவே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முந்தைய நம்முடைய ஆட்சிக் காலத்தில் 1971 ஆம் ஆண்டு உதவிப் பொறியாளர்களுக்கு கெஜட்டட் ஸ்டேடஸ் கொடுத்திருந்தார்கள். ஆனால் இன்றுவரை நெடுஞ்சாலைத் துறையில் அதற்கான சர்வீஸ் ரூல்ஸ் திருத்தி அமைக்கப்படவில்லை. 1977 ஆம் ஆண்டு பொறியாளர்களின் பதவிகளுக்குப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஏ. டி.,ஈ., ஏ.ஈ., என்று சொல்லுவார்கள். அவர்களுக்கும் இன்னும் சர்வீஸ் ரூல்ஸ் கொண்டு வரவில்லை ஆனால் பொதுப் பணித்துறையில் இந்த மாற்றங்கள் உடனுக்குடன் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதவிப் பொறியாளர்கள் பலர் நெடுஞ்சாலைத் துறையில் பல ஆண்டுகளாக தற்காலிகப் பணியில் உள்ளவர்கள். அவர்களுடைய பணியை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் பல ஆண்டுகாலம் பணியாற்றியதன் காரணமாக அவர்கள் அரசாங்கத்தில் வேறு வேலைக்குச் செல்ல வாய்ப்பு இல்லை.

10-50 மணி

பணியில் இருக்கும்போது இறந்து போனவர்களுடைய வாரிசுகளுக்கு உடனடியாக வேலை கிடைக்கவில்லை; வேலை இல்லாவிட்டாலும், புதிய பதவிக்கு ஏற்பாடு செய்து, பதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1971-ஆம் ஆண்டு கணக்கின்படி மக்கள் தொகை ஆயிரத்துக்கு மேற்பட்ட குடியிருப்பு உள்ள பகுதிகள் அனைத்துக்கும் தார் சாலை வசதிகள் செய்து கொடுக்க இருப்பது குறித்து என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் 1971-ஆம் ஆண்டு சென்சஸ் என்று இருப்பதை மாற்றி 1981முதல் 1986 வரைக்கும் மக்கள் தொகை கணக்கை எடுத்துச் செய்தால் பல கிராமங்களுக்கு வசதி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேருந்து தடச் சாலை ஏற்படுத்தும் திட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டுக்கு 12.50 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. அதில் 3,186 கி.மீ. முடிய பேருந்து செல்லும் சாலைகளை மேம்பாடு செய்து திருத்திய திட்டத்தில் தொகுப்பு. 3,945 கி. மீ. நீளத்திற்கு அரசின் அங்கீகாரம் பெறுவதற்காக அனுப்பப்பட்டது என்று தெரிந்து அதறகாக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் 1986 என்று இருப்பதை 1989 வரைக்கும் பேருந்து செல்லும் சாலை என்று எடுத்துக் கொண்டால் இன்றைக்கு பல கிராமங்கள் பல நன்மைகளை அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல் சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டுக்கு 185 இலட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. விரைவு படுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டத்தின் கீழ் பொதுப்பணித் துறையின் மூலம் பரமரிக்கும் ஏரிகளுக்கு 65 இலட்சமும், ஊராட்சி ஒன்றிய ஏரிகளுக்கு பராமரிக்கின்ற செலவு 25 இலட்சமும், முன்னாள் ஜமீன்தார் ஏரிகளுக்கு 100 இலட்சமும் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990—91ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. என்னுடைய பகுதியில் அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வதுபோல, அது பஞ்சப் பிரதேசம் என்று சொல்வார்கள்— பஞ்சப் பிரதேசமான ஆண்டிமடம் தொகுதியை சிறப்புத் திட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐரோப்பியப் பொருளாதார குழுவின் நிதி உதவியுடன் தமிழ் நாட்டிலுள்ள ஏரிகளை நவீனப்படுத்த திட்டம் இருக்கின்றது. முதற்கட்டம் முடிந்து, இரண்டாவது கட்டம் ஆரம்பிக்கும் நேரத்தில் 100 ஹெக்டேர் முதல் 200 ஹெக்டேர் வரை ஆயக்கட்டுப்பகுதிகளைக் கொண்ட 150 மழைநீர் ஏரிகளை நவீனப்



படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பாசன வசதி இல்லாத என்னுடைய தொகுதியில் இந்த ஆண்டு குழுமூர் ஏரியை எடுத்து இருக்கிறார்கள். அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது போல் செந்துரையில் இருக்கிற பெரிய ஏரியை எடுத்துக்கோள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக இந்த மானியத்தில் எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சித் தலைவர்கூட, டெண்டரைத் தவிர வேறு ஒன்றும் குறை சொல்ல முடியவில்லை. ஆகவே சிறந்த இந்த மானியத்தை வழங்கி இருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

உடையார்பாளையம் வட்டத்தில் ஜெயங்கொண்டத்தில் நிலக்கரி கிடைக்கின்றது. நம்முடைய முதல்வர் அவர்கள் பாராளுமன்ற தேர்தல் அறிக்கையிலும் நிதிநிலை அறிக்கையிலும், தொழில் துறை மானியத்தில் ஜெயங்கொண்டத்தில் நிலக்கரியை வைத்து அனல் மின்நிலையம் அமைக்க ஏற்பாடு செய்ய இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதை இந்த ஆண்டு தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற நிதியாண்டின் அறிக்கையில் உடையார்பாளைம் வட்டத்தில் சிப்காட் துவங்க இருப்பதாக அறிவித்தார்கள். இன்னும் அதற்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்கவில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள். அனுமதி பெற்று இந்த ஆண்டு அதைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உடையார் பாளையம் வட்டத்தை இண்டஸ்ட்ரியலி மோஸ்ட் பேக்வோர்டு என்று அறிவித்து இருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் எந்தத் திட்டத்தை அறிவித்தாலும் அதற்கு நிதி உதவி தேவைப்படுகிறது.

10-55 மணி

ஆண்டிமடத்தில் இயற்கை எரி வாயு கிடைக்கின்றது. அதையும் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பொன்பரப்பி கிராமத்தில் தங்கம் கிடைக்கின்றது. ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலத்தடி நீர் சம்பந்தமாக மழை நீரை சேமிப்பு செய்ய வேண்டுமேன்று சொல்கிறார்கள். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணறுகளுக்கு 150 மீட்டர் என்று நிர்ணயித்திருப்பதை, 50 மீட்டராகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு விவசாயிகளுக்குப் பாதி மானியத்தில் போர் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பிடிப்பைக் கண்டு பிடிக்க தற்சமயம் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. அதை இனாமாகச் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜெயங்கொண்டத்திலிருந்து விருத்தாசலத்திற்குச் செல்லு கின்ற சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று மதிப்பீடு அனுப்பப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆர். எஸ். மாத்தூர் சாலையில் வெள்ளாற்றில் கோட்டைக் காடு—பெண்ணாடம் சாலையில் ஒரு பாலம் கட்டித்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

புவனகிரி தொகுதியில் கடலூர்—சிதம்பரம் செல்லும் பாதை யில் வெள்ளாற்றில் ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடையார்பாளையம் வட்டத்தில் நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியில் ஒரு ஸ்பின்னிங் மில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிகப் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 5 மார்க் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நம்முடைய முதல்வ ரவர்களுக்கு நன்றி தெரிவித்து, மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கின்ற என்னுடைய பகுதிக்கு—மிகவும் பிற்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிக்கு அரசு—தத்துஎடுத்துத் திட்டங்களைச் செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு கொடுத்த மைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு தலைவரவர்களே, பொதுப்பணித்துறை, நிர்ப்பாசனத்துறை, நெடுஞ்சாலைத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கடந்த பல தினங்களாகச் சட்டமன்ற நடவடிக்கைகளிலே யும், பத்திரிகைகளிலேயும், தமிழக மக்கள் மத்தியிலேயும் பேசப் படுகின்ற பிரச்சினை, காவிரி நீர்ப் பிரச்சினை. தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளிடத்திலேயும், அரசியல் கருத்து வேறுபாடு கள் இருந்தாலும்கூட, காவிரிப் நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலே, நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்ற கொள்கையிலே யாருக்கும் மாறுபாடான கருத்துக்கள் கிடையாது. தமிழகத்தி னுடைய எதிர்கால உணவு உற்பத்தியை நிர்ணயிக்கின்ற இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையிலே அனைத்துக் கட்சிகளும் ஒரே குரலிலே பேசுகின்றன என்ற நிலையை உருவாக்குவதற்கு இந்த அரசு தவறி விட்டதாகவே நான் கருதுகிறேன்.



கர்நாடக மாநிலத்திலிருந்து ஒரே குழுவாகச் சென்று பாரதத்தினுடைய பிரதமர் அவர்களைச் சந்திக்கிறார்கள், ஆனால் தமிழகத்தில் மட்டும் இரண்டு குழுக்களாகச் சென்று பாரதப் பிரதமரைச் சந்திப்பதற்குக் காரணம் என்ன? இந்த அரசின் தவறான அணுகுமுறைதான் காரணம் என்பதை இந்த நேரத் திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தவற்றை அரசு செய்யாமல், நமது தமிழக முதல்வர் அவர்கள்....

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காவிரிப் பிரச்சினையில், தமிழ்நாடு ஒட்டு மொத்தமாக ஒன்றுபட்டு விளங்குகிறது என்று காட்ட அரசு தவறுவதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். உண்மைகளைப் பொதுப்பணித் துறை அமைச்சரும் மிகத் தெளிவாக விளக்கினார். அதையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்களும் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். இதிலே, மாண்புமிகு முதலமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கூட்டிப் பேசி அவர்களுடைய அங்கீகாரமும் அனுமதியும் பெற்றிருக்கிறார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் எல்லோரையும் அழைத்துச் செல்ல முயன்றிருக்கிறார்கள். ஆகவே இதிலே ஒன்றுபட்டுச் செல்லவில்லை என்பதற்கு எதிர்க்கட்சிகள் காரணமே தவிர, ஆளுங்கட்சி எந்தவகையிலும் காரணம் இல்லை. (குறுக்கீடு) மன்னிக்கவேண்டுகிறேன். எதிர்க்கட்சிகள் என்று சொல்கிறபோது இதில் ஒத்துழைக்காத ஒரு சில கட்சிகளை மட்டுமே குறிப்பிடு கிறேன் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : எதிர்க்கட்சிகளினுடைய தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துப் பேசியிருக்கலாம். 1924ஆம் ஆண்டினுடைய ஒப்பந்தத்தினுடைய ஷரத்துக்களை அவர்களி டத்திலே விளக்கியிருக்கலாம். என்ன காரணத்தினாலோ நமது மாண்புமிகு முதல்வரவர்கள் எதிர்க்கட்சிகளை அழைத்துப்பேசா தது துரதிருஷ்டவசமானது.

அதே நேரத்திலே, எதிர்க்கட்சியினுடைய தலைவர்களிடத் திலே ஒரு இணக்கமான கருத்தை உருவாக்குவதற்கு அரசு தவறியதன் காரணமாகத்தான் தமிழகத்திலே இருக்கின்ற பாராளு மன்ற உறுப்பினர்கள் இரண்டு குழுக்களாகப் பிரதமரைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, நம்முடைய ஒருமித்த உறுதியான கருத்தினை ஆணித்தரமாகப் பிரதமரிடத்திலே விளக்குவதற்கு நாம் தவறி விட்டோம்.

பஞ்சாப் பிரச்சினை, காஷ்மீர்ப் பிரச்சினை, இராமஜென்ம பூமி பிரச்சினைகளிளெல்லாம் நமது பாரதப் பிரதமர் அவர்கள் பேச்சு வார்த்தையின் மூலமாக முடித்துவிடலாம் என்று நினைக்

கின்ற இந்த நேரத்திலே தமிழகத்தினுடைய முக்கிய பிரச்சினையான காவிரி நீர்ப் பிரச்சினையிலே மட்டும் பாரதத்தினுடைய பிரதமர் அவர்கள் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்காமல் கைகளைக் கழுவி விடுகின்ற நிலையிலே, அவர்கள் நீதிமன்றத்தினுடைய முடிவுக்கு விட்டு விடலாம் என்றுசொல்வது, தமிழகமக்கள் மீது அவருக்கு அக்கறைஇல்லாதது போலத் தோன்றுகிறது. அரசு தன்னிடம் குறைகளை வைத்துக்கொண்டு, தமிழகத்தில் இருக்கிற எதிர்க்கட்சிகளின் மீது குறைகளைச்சொல்வதோ அல்லது தமிழ் சமுதாயத்தின் மீது வசை பாடுவதோ, திசை திருப்புகிற முயற்சியாகத்தான் நான் கருதுகிறேன். இதையெல்லாம் விட முக்கியமான பிரச்சினையாக தேசிய நீர் வளங்களை மாநிலங்களின் அதிகாரத்திலிருந்து நீக்குகிற வகையில், காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையில் இருக்கிற ஆறுகளை எல்லாம் தேசியமயமாக்கவேண்டும். அப்படி செய்தால் தான் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வை காண முடியும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

11-00 மணி.

அடுத்து, பொதுப்பணித்துறையில் பணியாற்றுகிற டிப்ளமா பொறியாளர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தப் படுகிறார்கள். பொதுப்பணித்துறையில் பிரிவு பொறுப்பில் ஒரே வேலையைச் செய்கிற டிப்ளமா, டிகிரி பொறியாளர்களுக்கு, சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்படாமல், டிப்ளமா பொறியாளர்களுக்கு ஊதிய விகிதம் 1,400 ரூபாயிலிருந்து 2,000 ரூபாய் என்ற அளவிலும், டிகிரி பொறியாளர்களுக்கு 2,000 ரூபாய் முதல் 3,500 ரூபாய் வரையிலும் என்ற அளவிலும் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசினுடைய பொதுப்பணித்துறையில் பிரிவு பொறுப்பில் பணியாற்றுகிற டிப்ளமா, டிகிரி பொறியாளர்கள் இருவருக்கும் சமவீதத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது. ஆகவே, இந்த அரசும் சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் டிகிரி பொறியாளர்களுக்கு வழங்கப்படுகிற ஊதிய விகிதத்தை 2,000 ரூபாய் முதல் 3,500 ரூபாய் என்ற அளவில் டிப்ளமா பொறியாளர்களுக்கும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுப்பணித்துறையில் பணியாற்றிய டிப்ளமா பொறியாளர்கள், பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மறுபடியும் பணி நியமனம் வழங்கப்படும் என்று கடந்த மானியக் கோரிக்கையில், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், இந்த சட்டமன்றத்தில் அறிவித்து, 23—3—1990 அன்று அவர்களுக்கு அரசாணை வழங்கப்பட்டது. ஆனால், இதுவரையில் அவர்கள் பணியில் அமர்த்தப்படவில்லை. ஆகவே, உடனடியாக பணி நியமனம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள் விரும்புகிறேன்.



அடுத்து, தாமிரபரணி பாசன விவசாயத்தைப் பொறுத்தவரையில், தாமிரபரணி வாய்க்காலில் 86,000 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. அதிலே, 46,000 ஏக்கர் சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ளது. ஆனால், தண்ணீரைத் திறந்து விடுகிற அதிகாரம் நெல்லை-கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத்தான் இருக்கிறது. சிதம்பரனார்-மாவட்ட விவசாயிகளுக்கு தண்ணீர் வேண்டி, சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர், நெல்லை-கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கெஞ்ச வேண்டிய நிலை இருக்கிறது. இதன் காரணமாக சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவுரவம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் தண்ணீர் வழங்குகிற பொறுப்பை நீர்ப்பாசனத் துறையின் அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், தாமிரபரணி பாசனத்தை நம்பி விவசாயம் செய்கிற விவசாயிகள், விவசாயத்திற்கு தண்ணீர் பெறுவதற்கு ஏதோ நீர்ப்பாசனத் துறை அதிகாரிகளிடத்தில் லஞ்சம் கொடுத்து தண்ணீரைப் பெறுகிறார்கள் என்ற தவறான தகவலை அரசு வைத்துக்கொண்டு, இப்போது தண்ணீரை வழங்குகிற முழு அதிகாரத்தையும் அரசே தன் கையில் வைத்திருக்கிறது. வாழை, கொடிக்கால்பயிரிடுகின்ற விவசாயிகள் தங்களுடைய பயிர்களை காப்பாற்ற கூட சென்னைக்கு வந்து, அரசை சந்தித்து, தண்ணீர் கேட்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, முக்கிய சாகுபடியான கார் சாகுபடி, அட்வான்ஸ் கார் சாகுபடி, விசாகம் சாகுபடி ஆகிய முக்கிய சாகுபடிகளை வேண்டுமானால் அரசு தன் கையில் வைத்திருக்கலாம். ஆனால் பாபநாசம் மணிமுத்தாறு அணைக்கட்டிலேயிருக்கிற நீர் மட்டத்திற்குத் தகுந்தவாறு வாழை கொடிக்கால் போன்ற பயிர்களுக்கு தண்ணீர் விடுவதற்கு உரிய அதிகாரத்தை தாமிரபரணிக் கோட்டத்திலே இருக்கிற நீர்ப்பாசனத்துறையினுடைய அதிகாரியிடத்திலே வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

11-05 மணி.

அடுத்ததாக மழை காலங்களில் வெள்ளம் வருகிற நேரத்தில், எஞ்சியிருக்கிற தண்ணீரை ஸ்ரீவைகுண்டம் ஆற்றிலே வந்து சேருகிற தண்ணீரை, சேமிக்கவேண்டும். இப்போது அந்தத் தண்ணீர் ஏரிகளைத்தாண்டி, கடலிலே போய்ச் சேருகிறது. ஆகவே ஏரிகளுக்கு மேற்கே ஒரு அணையைக் கட்ட வேண்டும். அந்த அணையைக் கட்டுகின்ற பொறுப்பினை ஸ்பிக் நிறுவனத்திற்கு ஒப்படைத்து முழுச் செலவையும் அவர்களே ஏற்றுக் கொள்ளுமாறு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று எனது தொகுதியிலே ஒரு பகுதியிலே தாமிர பரணி பாசனம் நடைபெற்றாலும், மறு பகுதியிலே மழையை நம்பித்தான் விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார் கள். ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்திலே தற்போது வல்லநாடுக்கு அருகிலே இருக்கிற கலியாவூர் கிராமத்திற்குஅருகிலே இருக்கிற சித்தேரியிலிருந்து சீவலப்பேரி வழியாக இப்போது கலியா வூருக்கு ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டுள்ளது. அந்த வாய்க் காலிலிருந்து ஓலைக்குடிக்குளம், புலியூர் குளம், ஆலங்குளம் வழி யாக மேலச்சாக்காக்குடி குளத்திற்கு வாய்க்கால் வெட்டவேண்டும் மேலும் சிங்கத்தாகுறிச்சி குளத்திலிருந்து வடக்குகாரச்சேரி வழியாக பெருமாள் நாயக்கன்குளம், அரசு உடையார் குளம் வழியாக் பொட்டலூரணி கிராமத்திற்கு அருகிலே இருக் கிற வாய்க்காலோடு இணைக்கவேண்டும்.

அதற்குப்பின்னால், வடக்குகாரச்சேரியிலிருந்து தேவச் சிறுகுடை வழியாக எல்லநாய்க்கன்பட்டி, ராமநாதபுரம், செட்டிமங்கலப்பட்டி, புதுப்பட்டி வழியாக அணியாபுரம் வரையிலே வாய்க்காலை வெட்ட வேண்டும். தேவச் செயல்புரத்திலிருந்து வாகைகுளம், விடுவித்தானந்தல் வழி யாக வாகைக்குளத்திற்கு வெட்டவேண்டும். அதேபோன்று பொட்டலூரணி கிராமத்திலிருந்து திம்மராஜபுரம் வர்த்தரெட்டிப் பட்டியில் இருக்கிற கரிசல்குளத்திலிருந்து பேரூரணி அல்லிக்குளம், கூட்டலங்காடு, புதுக்கோட்டைக்குளம் வரையிலும் வாய்க் காலை வெட்டவேண்டும். (மணியடிக்கப்பட்டது). இந்தக் கிராமத்திலே இருக்கிற அந்தக் குளத்தை ஆழப்படுத்துவதன் மூலமாக, மேலும் 5 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே இந்தத் திட்டத்தை உலக வங்கி யினுடைய உதவியோடு நிறைவேற்றித்தருமாறு கேட்டுக் கொள் கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், என் னுடைய தொகுதியிலே வல்லநாடு கலியாவூர் சாலை, ஸ்ரீவைகுண் டம், சொக்கநாய்க்கன்குறிச்சி சாலை, ஏரல் சுப்பிரமணி யன்புரம் சாலை, மாரமங்கலம் இடையார்காடு சாலை, குமரிகோட்டை சொக்கலிங்கபுரம் சாலை, வேலத்தட்டம் பாறை குமரிக்கோட்டை சாலை, வடக்கு இலுச்சன்குடி மேலத் தட்டாம்பாளை சாலை, ஆகிய சாலைகளை உடனடியாகச் செப்ப னிட்டுத்தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

*திரு. ஆச்சியூர் எம். மணி : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, நீர்ப்பாசனம் மற்றும் பொதுப்பணிகள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.





1990—91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு நல்லத் திட்டங்கள், சமூகநலத்திட்டங்கள் போன்ற சிறப்பான பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அரசைப் பாராட்டுகிறேன். இன்றைய மானியக் கோரிக்கைகளான பாசனம் மற்றும் பொதுப் பணித்துறை ஆகியவற்றிற்குக் கொடுக்கப்பட்டுள்ள நிதியும் பணி களும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளன.

குறிப்பாக நெல்லை— கட்டபொம்மன் மாவட்டம் செங் கோட்டைத் தாலுக்காவில் நீண்ட நெடுங்காலமாக கோரப்பட்டு வந்த அடைவிநயினார் கோவில் நீர்த்தேக்கத்திற்கு ரூ. 38 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கக்கூடியதாகும். கடந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டு, பணி தொடங்காமல் இருந்த கொடுமுடியாறு அணைக் கட்டுத் திட்டத்திற்கு இவ்வாண்டு ஜனவரி திங்கள் வனத்துறை அனுமதி கொடுத்துவிட்டதாக குறிப் பிடப்பட்டு இருக்கிறது. இதனை அறிந்த எனது தொகுதி மக்கள் எல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றனர். எனது வேண்டுகோளை ஏற்று, மிக விரைவிலே அனுமதி வழங்க உதவிய மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணி துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். உடனடியாக கொடுமுடியாறு அணைக்கட்டுத் திட்ட அலுவலகங்கள் திறந்துவிடவும், கட்டுமானப் பணிகள் வேகமாக நடைபெறவும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அணைக்கட்டுத்திட்டம் செயல்படத் துவங்கும் வரை, சராசரியாக 1786.25 மில்லியன் கன அடி தண்ணீர் பயன்படுத்த முடியாமல் போகும். மேலும் இவ்வணையின் பாசனப் பகுதியாக உள்ள சுமார் 5753.71 ஏக்கர் நிலப்பரப்பு உடைய 42 குளங்கள் வறண்டு கிடக்கின்றன.

குறிப்பாக புதூர்குளம், சிறு குளம், சின்னம்மாள்புரம் குளம், பண்டார குளம். அச்சம்பாட்டு குளம், பெட்டைகுளம், கும்பிகுளம், சீளாத்திகுளம் போன்ற பகுதிகள் கடந்த 10 ஆண்டுகாலமாக நீரின்றி வறண்டு கிடக்கின்றன. எனவே அப் பகுதி மக்களுக்கு வாழ்வு அளிக்கும் வகையில் கொடுமுடியாற்றுத் திட்டத்தை மிகவேகமாக செயல்படுத்த இந்த மாமன்றத்தின் மூலம் அரசை கேட்டுக்கொள்கிறேன்.

11-10 மணி

எங்கள் தொகுதியில் அடிக்கல் நாட்டப்பட்டு, நீண்ட நெடுங் காலமாக செயற்படுத்தப்படாமல் போன பச்சையாறு அணைக் கட்டுத்திட்டம் வருமா என்று பலர் அச்சத்தைக் கிளப்பிய நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதற்கு பச்சைக்கொடி காட்டினார்கள். நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைந்தோம். ரூ. 24.15 கோடி திட்ட மதிப்பீட்டில் பரிசீலனையில் உள்ள இந்த ........ ..

திரு. ஒய். வெங்டேஸ்வா தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த டிமாண்டிற்குரிய மினிஸ்டரைக் காணோமே, எங்கே இருக்கிறார்? அவர் தானே குறித்துக் கொள்ளவேண்டும். அவர்தானே இதற்குப் பொறுப்பு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அமைச்சர் அவர்கள் வந்துவிடுவார்கள். நான் குறிப்பு எடுத்துக்கொண்டிருக்கிறேன். எனவே கவலைப்பட வேண்டாம். தீட்சிதருக்காக வேண்டுமானால், ஸ்பெஷலாக சொல்லியனுப்பி, அவரை அழைத்து வருவோம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்) : ஒரு விளக்கம், இப்போதுள்ள மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இல்லாவிட்டாலும், முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் குறிப்பு எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆச்சியூர் எம். மணி : ஆகவே பரிசீலனையிலுள்ள திட்டம், ஓராண்டு கடந்த நிலையிலும் நிதி ஒதுக்கீடு செய்ய முடியாத நிலையிலுள்ளது. அன்று இராவணனோடு போர் தொடுத்த குரங்கினம், இன்று பச்சையாறிலே எங்களோடு போர் தொடுக்கின்றது. அதனை வெல்ல எங்களுக்கு உதவும்படி இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன். அதனை விரைவாக செயல்படுத்த முயற்சியை மேற்கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களையும், வனத்துறை அமைச்சர் அவர்களையும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில். இதனை இவ்வாண்டிலேயே செயல்படச் செய்ய வேண்டிய அனுமதியை வழங்க சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறேன்.

பச்சையாறு திட்டம் நிறைவேற்றப்பட்டால் தாமிரபரணியில் ஆண்டுதோறும் வீணாகின்ற வெள்ளப் பெருக்கு தடுக்கப்படும். நாங்குநேரி, ராதாபுரம், சாத்தான்குளம் ஆகிய முற்றிலும் வறட்சிக்கு இலக்காகும் தாலுக்காக்கள் பயன்பெறவும், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மற்றும் திருசெந்தூர் ஆகிய தாலுக்காக்களில் உள்ள வறண்ட பகுதிகள் பாசனம் பெறவும் வாய்ப்புள்ளது. நெல்லை, சிதம்பரனார் மாவட்ட மக்களின் நீண்ட நெடுங்கால கனவு நினைவாகும்.

'நீரின்றி அமையாது உலகு' என்பதனை மெய்பிக்க என் தொகுதி மக்களின் கண்ணீரை நன்னீராக்க பச்சையாறு திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் செய்து தாருங்கள் என இந்த மன்றத்தின் மூலம் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். திருமலை தலைமையிலான நிலைக் குழுவின் பரிந்துரைகளை விரைவில் செயல்படுத்த வேண்டுகிறேன். மழைக் காலங்களில் வீணாக செல்கின்றநீரைமுழுமையாகப் பயன்படுத்த



தக்க வகையில் மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து வருகின்ற நாங்குநேரியான் கால், வடமலையான் வடகால் ஆகியவற்றை சீரமைத்து உதவ வேண்டுகிறேன். இதனை மேற்குத்தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்திலோ அல்லது குளங்கள் ஏரிகள் பராமரிப்புத் திட்டத்திலோ சேர்த்து நிதி ஒதுக்க வேண்டுகிறேன்.

குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை அணையிலிருந்து பாசனத்திற்குச் சென்றது போக வயல்களில் இருந்து வடிநீராக பெரும் பகுதி கடலுக்குள் செல்கின்றது. இதனைப் பயன்படுத்தும் வகையில் அகஸ்தீஸ்வரம் பகுதியில் ஒரு சிறு தடுப்பு அணை கட்டி,நீரை குமரி மாவட்டத்தில் ஒரு பகுதிக்கும், இராதாபுரம் தாலுக்காவில் ஒரு பகுதிக்கும் பயன்படுத்த பரிசீலிக்கும்படி அரசை வேண்டிக் கொள்கிறேன்.

பேச்சிப்பாறை அணையிலிருந்து இராதாபுரம் கால்வாய்க்கு தண்ணீர் திறந்துவிட பல்வேறு தடைகள் ஏற்படுகின்றன. அடுத்த மாவட்டம் என்ற நிலையில் உள்ள தடைகளை நீக்கி இராதாபுரம் கால்வாயில் உள்ள 52 குளங்களுக்கும் ஆண்டிற்கு 250 சி.சி. தண்ணீராவதுவழங்க நிரந்தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாங்குநேரி. இராதாபுரம் பகுதியில், நாங்குநேரி பெரிய குளம், வள்ளியூர் பெரிய குளம், தளபதிசமுத்திரம் பெரியகுளம், சின்னம்மாள்புரம் குளம், சிலாத்திக்குளம், வேப்பங்குளம், பண்டாரப்பெருங்குளம், இராதாபுரம் அணைக்குளம், மயிலாப்புதூர் குளம் ஆகிய குளங்களை சீரமைத்து ஆழப்படுத்தினால் மழைக்காலங்களிலாவது அதிக நீரைச் தேக்கப்பயன்படும். இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இம்மன்றத்தின் மூலம் வேண்டிக் கொள்கிறேன்.

143977

11-15 மணி

இராதாபுரம் வட்டம், ஆணைக்குளம் கிராமத்தில் துலுக்கர்பட்டி என்ற ஊரில் 136 ஏக்கர் பாசனம் பெறுகின்ற வகையில் ஒரு குளம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நிரந்தர வறட்சிக்கு உள்ளாகின்ற அவ்வூர் மக்கள் பயன்பெற வாய்ப்புள்ளது. இதனை நிறைவேற்றித்தர வேண்டுகிறேன். நாங்குநேரி வட்டத்திலுள்ள ஆழ்வார்குளம், புதுக்குளம் ஆகிய குளங்களை தூர் எடுத்து நவீனப்படுத்த வேண்டிக்கொள்கிறேன். சிறப்பு சிறுபாசனத் திட்டங்களை செயல்படுத்த நாங்குநேரி, இராதாபுரம் மற்றும் சாத்தான்குளம் வட்டங்களில் உள்ள குளங்களை 1990-91 ஆம் ஆண்டு ஆய்வு ( ப்யும்படி அரசினை வேண்டிக் கொள்கிறேன். நாங்குநேரி வட்டதில் புதுக்குறிச்சி, பருத்திப்பாடு, மூளைக்கரைப்பட்டி, முனைஞ்சிப்பட்டி, காரியாண்டி, வெங்கட்ராயபுரம் போன்ற பகுதிகளிலுள்ள கருப்பு நிலத்தின் நிலத்தடி நீரினையும், இராதாபுரம் வட்டாரத்தில் சிலாத்திக்குளம், கும்பிகுளம் சமூகரெங்கபுரம் போன்ற பகுதிகளிலுள்ள கருப்பு சாம்பல் நிற

நிலத்தினை முனைப்பான சிறப்பு ஆய்வின் மூலம் ஆய்வு மேற்கொண்டு நிலத்தடி ஆதார இடங்களைக் கண்டறியக் கேட்டுக் கொள்கிறேன். ரூ. 366 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வில் உள்ள கடனாநதி அணை விஸ்தரிப்பு திட்டத்தின்போது வீரசிகாமணி வரை வருகின்ற தண்ணீரை அதே சங்கரன்கோவில் வட்டத்தில் உள்ள வீ. ஆலங்குளம், வடக்கு ஆங்குளம், குத்தாலப்பேரி பொய்கை மேடு நொச்சிக்குளம், ஆட்கொண்டான் குளம், செந்தட்டியூர் வழியாக கோயிலான்குளம் வரை சுமார் 2 கி.மீ. முதல் 20 கி..மீ. வரை முடிந்த அளவு கால்வாய் அமைத்து தண்ணீர் வழங்க வேண்டுகிறேன்.

(பேரவைத் துணைத் தலைவர்— தலைமை)

மணிமுத்தாறு அணையிலிருந்து செல்கின்ற கால்வாயில் 3-வது 4-வது பாசனப்பகுதியில் சுழல் முறையில் தண்ணீர் விடுகின்ற முறையை எந்நிலையிலும் மாற்றாமல் இருக்க அரசை வேண்டிக் கொள்கிறேன். 1989-90 ஆம் ஆண்டு 3-வது 4-வது பகுதிக்கு பாசன முறை இருந்தும் 1-வது 2-வது பகுதியில் சில குளங்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டதன் மூலம் பல குளங்கள் பாதிக்கப்பட்டன. இதற்கு தக்க பாதுகாப்பு வழங்க வேண்டுகிறேன். ஐரோப்பிய பொருளாதார குழுவின் நிதி உதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும் இரண்டாம் கட்டப்பணியில் எங்கள் வேண்டுகோளை ஏற்று நாங்குநேரி தாலுக்காவில் படலியார் குளம், தாமரைக்குளம் செங்கலா குறிச்சி பெரிய குளம், வடுகட்சிமதில் கடம்போடுவாழ்வு குளம், வடமாலழகன் குளம், சூரன்குடி குளம், சிவலப்பேரி குளம், திருவேங்கடநாதபுரம் பெரிய குளம். கேசவநேரி ஏரி செங்குளம் ஆகிய 11 குளங்களைச் சேர்த்துக் கொண்டமைக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாமிரபரணி மற்றும் மணிமுத்தாறு கால்வாய் நடுத்தர மற்றும் சிறுபாசனத்திட்டத்தின்கீழ் நவீனப்படுத்த ஆய்வில் உள்ள பகுதியில் விஜயநாராயணபுரம், மூலைக்கரைப்பட்டி குளம். அ. சாத்தான்குளம், மலையன்குளம் கோவை குளம், பருத்திபாடு குளம் போன்ற 3-வது, 4-வது சாலையின் பகுதியில் உள்ள அனைத்துக் குளங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுகின்றேன். ஆய்வு செய்யப்பட உள்ள திட்டங்களில் நம்பியாறு பாசன முறையைச் சீரமைக்க வேண்டுகிறேன்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கிழக்கு கடற்கரை சாலை சீரமைப்புப் பணிக்கு 1990-91-ல் ரூ. 520 இலட்சம் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் செயல்பட உள்ளது. அதே நேரத்தில் இதே சாலையினை கன்னியாகுமரி முனையில் இருந்து செட்டிக்குளம், கூடங்குளம், உவரி, திருச்செந்தூர், காயல்பட்டினம், தூத்துக்குடி வரை முதல் கட்டமாக செயல்பட ஓர் முனைப்புத் திட்டம் தயாரிக்க



வேண்டுகிறேன். இதன் மூலம் பல புனித ஸ்தலங்களுக்கும் வர இருக்கின்ற டைட்டேனியம் தொழிற்சாலைக்கும் கூடங்குளம் அணு ஆலை கட்டுமானப் பணிக்கும் விஜய நாராயண கடற்படை தளத்திற்கும் இணைப்பு கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே இதனை பரிசீலித்து ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன். வள்ளியூர்— விஜயாபதி சாலையில் உள்ள குறுகிய பாலங்களைப் புதுப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

1989-90-ல் அனுமதிக்கப்பட்டு இன்னமும் பணித்தொடங்காமல் உள்ள திருபுரம் தச்சநல்லூர் சிவசக்தி டாக்கீஸ் சாலை பணியினை விரைவுபடுத்த வேண்டுகிறேன். மேற்கு தொடர்ச்சி மலைவளர்ச்சி திட்டத்தின் கீழ் திருக்கரன்குடி நகரையும் நம்பி கோயிலையும் இணைத்து ஒரு வலுவான சாலை அமைக்க வேண்டுகிறேன். நெல்லை மாவட்டத்தில் முக்கிய யாத்திரிகர் ஸ்தலங்களுள் ஒன்றான சித்தூர் கோவில் பக்கத்தில் இராதாபுரம் நாங்குநேரி தாலுக்காவிற்கு இணைப்பு பாதையாக நம்பியாறின் குறுக்கே பாலம் ஒன்று அமைக்க வேண்டுகிறேன். வள்ளியூர் களக்காடு சாலை தேசிய நெடுஞ்சாலையை மேற்குத் தொடர்ச்சி மலையுடன் இணைக்கும் சாலையாக இருப்பதால் இதனை விரிவுபடுத்தி செம்மைப்படுத்த வேண்டுகிறேன். நாங்குநேரி களக்காடு வள்ளியூர் ஒன்றியத்தில் நகரப் பேருந்து செல்கின்ற அனைத்துச் சாலைகளையும், தார் சாலையாக்க வேண்டுகிறேன். மதுரை கன்னியாகுமரி சாலை தேசிய நெடுஞ்சாலை எண். 7-ல் திருநெல்வேலி புறச்சாலைப் பணியினை விரைவுபடுத்த வேண்டுகிறேன். ஏரல், கல்லிடைக்குறிச்சி ஆகிய இடங்களில் வாரச் சந்தைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். அதேபோன்று மிகவும் அவசர அவசியமான வள்ளியூர் வாரச் சந்தையும் நாங்குநேரி பேருந்து நிலையமும் கட்ட பகுதி-2 திட்டத்தில் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். சிங்கிகுளத்திலிருந்து களக்காடு வரைச் செல்லுகின்ற சாலை முழுவதையும் தார்ச் சாலையாக்க கேட்டுக் கொள்கிறேன்.

நீதிமன்றக் கட்டிடங்கள்— திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்திற்கு நீதிமன்றங்கள் அனைத்தையும் ஒரு இடத்தில் அமைக்க திருசெந்தூர் சாலையில் ஒரு புதிய கட்டிடம் கட்டப்பட்டு, கடந்த 3 ஆண்டுகளாக நீதிமன்றங்கள் அங்கு நடைபெற்று வருகின்றன. இது சிவில் கோர்ட் (உரிமை இயல் நீதிமன்றம்) கிரிமினல் கோர்ட் (குற்றவியல் நீதிமன்றம்) என்று இரண்டு பிளாக்குகளாக உள்ளன. சிவில் கோர்ட் கட்டிடத்தில் முதல் மாடி உள்ளது. இதில் 7 சிவில் கோர்ட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. கிரிமினல் கோர்ட் கட்டிடத்தில் மாடி இல்லை. அங்கு 4 கோர்ட்டுகள் நடக்கின்றன. மீதி 3 கிரிமினல் கோர்ட்டுகள் இன்னமும் பழைய இடமான கொக்கிரகுளத்தில் நடக்கின்றன. இது கட்சிக்காரர்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் மிகவும் கஷ்டமாக உள்ளது. எனவே, கிரிமினல் கோர்ட்டுக்கு முதல் மாடி கட்டிக்கொடுக்க வேண்டும் என்று வழக்கறிஞர்கள் சங்கம் பல

முறை வேண்டியுள்ளது. எனவே அங்கு முதல் மாடிக் கட்டிடம் கட்டி கொக்கிரகுளத்திலுள்ள மூன்று கிரிமினல் கோர்ட்டுகளை யும் புதிய கட்டிடங்களுக்கு மாற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கின்றேன். வணக்கம்.

11-20 மணி

*திரு. கோ. வீரையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடைபெறக்கூடிய பொதுப் பணித்துறை மானிய கோரிக்கையில் ஏறத்தாழ மானிய கோரிக்கை எண். 36 லேயிருந்து 39 வரையிலும் 52-லேயிருந்து 54 வரையிலும் இருக்கக்கூடிய 7 மானிய கோரிக்கைகளைச் சேர்த்து ஒரே நேரத்தில் அனைத்திலும் கருத்துக்களைச் சொல்லவேண்டிய ஒரு கட்டாயத்திலே நாங்கள் நிறுத்தப்பட்டிருக்கிறோம். இருக் கின்ற நேரத்தில் சில குறிப்பான முக்கியமான விஷயங்களை உங்க ளுடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் என்ற முறையில் தமிழகத்தில் விவசாயம் செய்யக் கூடிய ஏறத்தாழ 57.90 லட்சம் ஹெக்டேர் நிலங்களில் 30 இலட்சம்ஹெக்டேர்வரையிலே பாசனப் பட்த்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டி ருக்கிறது. அதிலே பாசனம் என்று வருகின்ற போது ஆற்றுப் பாசனம் இருக்கிறது, ஏரிப் பாசனம் இருக்கிறது. இறவைப் பாசனம் இருக்கிறது. இவ்வளவும் ஒரு சரி பாதி அளவை எட்டிப்பிடித்து இருக்கிறது. மீதி இருக்கக்கூடிய சரிபாதி பகுதியை வரக்கூடிய காலத்தில் தான் அந்தப் பாசனத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாக கொண்டுவர வேண்டிய ஒரு நிலையும் நமக்கு முன்னாலே இருக்கிறது. அப்படி நாம் பார்க்கும்போது அதிலே ஆற்றுப்பாசனம் என்று நாம் எடுத்துக் கொள்வோமே யானால் காவேரிப் பாசனம் என்பது பிரதானமான ஒரு பாசனப் பகுதியாக வருகிறது. 10, 15 ஆண்டுக்காலமாக கர்நாடகத் திற்கும் நமக்கும் உள்ள பிரச்சினை என்பது தீர்க்கப்படாமல், நாளைய மறுதினம் உச்ச நீதிமன்றத்திலே என்ன தீர்ப்பு வழங்க இருக்கிறார்கள் என்று தீர்ப்பு வந்ததற்குப் பிறகு அவர்கள் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கு தீர்ப்பு வழங்குகிறார்களா எப்படி வழங்குகிறார்கள் என்பதைப் பொருத்து அதை அரசு கவனித்து உரிய முறையில் காவேரிப் பாசனப்பகுதிக்கு கிடைக்க வேண்டிய தண்ணீர்—நம்முடைய உரிமை—ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பாசன உரிமை என்பதை பாதுகாப்பதற்கான முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் இங்கே தமிழகத் தில் அதைப்பற்றி அனைவரும் ஒத்த கருத்தாக நம்முடைய சட்ட மன்றத்திலே பேசியிருக்கிறோம். அதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் மனு கொடுத்ததிலே வேறுபட்ட கருத்துக்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன என்ற ஒரு நிலை



பத்திரிகையிலே வந்த போது அப்படி வேறுபட்ட நிலையிலே கொடுக்கப்படவில்லை, அந்த மனுவை நாங்கள் வாங்கி அளிக்கிறோம் என்றெல்லாம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த வர்களும், அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட அந்த மனுவினுடைய நகல் கிடைத்து இருக்கிறதா, அதிலே அந்த மாறுபாடு இல்லாமல் இருக்கிறதா என்ற தகவலை பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே அளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கி றேன். அதுமட்டுமல்லாமல் நாம் கோரும் போது கர்நாடகத்திற்கு பாதகம் விளைவித்து தமிழகத்திற்கு நன்மை வேண்டும் என்று நாம் கோரவில்லை. நமக்குரிய உரிமையைக் கொடுங்கள் என்று நாம் கேட்கிறோம். அதிலே நாம் உறுதியாக நின்று அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று சொல்லக் கூடிய அதே நேரத்தில் அந்த காவேரிப் பாசனப் பகுதியிலே பல ஆண்டுகளுக்குப் பிறகு-நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூட இங்கே பதில் சொல்லும்போது சொன்னார்கள். சீமைக்காட்டாமணிக்குள்ளே அந்த நெய்வேலி காட்டாமணிக்குள்ளே ஏறத்தாழ 70 இலட்சம் ரூபாய் போய் புகுந்துவிட்டது அது கண்டுபிடிக்க முடியாமலேயே போய் இருந்தது என்றெல்லாம் சொன்னார்கள். அது என்ன ஆச்சு? 70 இலட்சம் ரூபாயை யார் என்ன செய்தார்கள்? எப்படி அவர்கள் பயன்படுத்தினார்கள்? அவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை உண்டா? ஏனென்றால் அது ஒன்றும் இல்லை என்று சொன்னால் எதிர்காலத்திலும் இப்படிச் செய்தால் தப்பித்துக் கொள்ளலாம் என்ற ஒரு போக்கு காட்டாமணி வலர்வதைப் போல வளர்வதற்கு அனுமதிக்கக்கூடாது, அதிலே என்ன செய்திருக்கிறீர்கள் என்பதையும் விளக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லா மல் இந்த நெய்வேலி காட்டாமணி இன்னும் மிஞ்சி இருக்கக் கூடிய பகுதிகளையும் அழித்து அந்த ஆறுகளை புல்டோசர் மூலமாக சீர்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அதுமட்டுமல்ல. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது இன்றைக்கு காவேரி பாசனப் பகுதியிலே எல்லாம் வாய்க்கால் தலைப்புகள் என்பது ஆறுகளிலிருந்து பிரியும்போது பழைய காலத்தில் கல்லணை மட்டும் காவேரியிலே அணை இருந்து வேறு எந்த அணைகளும் இல்லாமல் தண்ணீர் வந்த காலத்திலே அமைக்கப் பட்ட வாய்க்கால்களுடைய தலைப்புகள், 8 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர், 10 மைல், 15 மைல் என்று ஊருக்கு மேற்கே தள்ளி 10 கிராமங்கள் அல்லது 15 கிராமங்கள் என்று சேர்ந்து பாயக்கூடிய நிலையிலே இருந்தது. இன்றைக்கு அந்த நிலையிலே தண்ணீர் வரத்து இல்லாத போது கிட்டத்தட்ட 10, 51 மைலுக்கு அந்தண்டே வாய்க்கால் தலைப்புகள் இருப்பதும் அது முழுவதும் பழுது பார்க்கப்பட்டு தண்ணீர் வந்து சேர்ந்து பல கிராமங்களுக்கு ஏக காலத்தில் பாய்வது என்பதும் முடியாத நிலைமையில் இருக்கிறது என்பதை எல்லாம் நீங்கள் கணக்கில்

எடுத்துக்கொண்டு அந்த உள் வாய்க்கால்க்ள் தலைப்புகளையே மாற்றி அமைத்து இன்றைய தண்ணீர் இருக்கக்கூடிய வாய்ப்புக்கு ஏற்ற முறையில் அந்த பாசனம் வாய்க்கால்கள் என்பது மறு சீரமைப்பு செய்ய வேண்டியிருக்கிறது. வாய்க்கால்களை சீரமைப்பு செய்கின்ற முறையிலே கூரைகளிலே சிமெண்ட் கரைகள் போட்டு சீரமைத்தால் மட்டும் போதாது அந்த வாய்க்கால்கள் தலைப்புகளையே மாற்றி தண்ணீருடைய தேவைக்கு ஏற்ப எப்படி பழுதுபார்க்கவேண்டும் என்ற முறையிலே அந்த சீரமைப்பு என்பது செய்யப்பட வேண்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பொதுப்பணித்துறையினுடைய சவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

11-25 மணி

ஆற்று கரைகள் அது பல அளவுக்கு சீர் கெட்டு இருக்கிறது ஆற்றுக் கரைகளில் எர்த் ஓர்க் செய்தே பல ஆண்டுகள் ஆகிறது அந்த ஆற்றுக் கரைகளை சீர் செய்யும் அந்த முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு முடிகொண்டான் ஆற்றிலே ஒரு படுகை அணை கட்டினார்கள், ஆடிபுலியூர் என்ற கிராமத்திற்கு அருகில் சென்ற ஆண்டு 60 ஆயிரம் ரூபாய்க்கு அதிலே கொண்டு போய் கல் அடுக்கினார்கள். இன்றைக்கு கல்லையும் காணோம், அணையையும் காணோம். 60 ஆயிரம் ரூபாய்க்குச் செய்யப்பட்ட அந்த வேலை என்பது ஆற்றோடு போய்விட்டது. அப்படிப்பட்ட முறையிலே செய்யக்கூடிய மோசமான வேலைகள் தவிர்க்கப்பட்டு அது சீரான முறையில் செலவழிக்கக்கூடிய பணம் மக்களுக்கு பயன்படக்கூடிய முறையிலே இருக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே தொடர்ந்து நீண்ட காலமாக பொதுப்பணித் துறையின் பரிசீலனையில் இருந்த மதலை முத்து வாரி அணை என்ற ஒரு அணை கட்டவேண்டும் என்பது. மேலே இருந்து வரக்கூடிய அந்த வெள்ள நீரை தேக்கிக் கொடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்று நீண்ட காலமாக ஒரு கோரிக்கை இருந்து வருகிறது. அது இப்போது கொள்கை குறிப்பிலே கூட காணோம். அதையும் மறுபடியும் அந்த மதலை முத்து வாரி அணை திட்டத்தை நிறைவேற்றிக் தருவதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி பிரிவினுடைய வடிகால் ஆறு, காவிரி பிரிவுக்கே ஒரு வடிகாலாக இருப்பது திருமலைராசன் ஆறு. அந்த ஆறு அத்தரபெருமாள் கோவிலிலிருந்து கூகூர் வரையிலே ஆறு இருப்பதாக இப்போது பார்க்க முடியாது. அந்த அளவுக்கு ஆறு



முழுவதும் தூர்ந்து 2 பக்கமும் நெறுக்கி இன்னும் சில ஆண்டுகள் ஆகிவிட்டால் படத்திலே ஆறு இருக்குமே தவிர அங்கே ஊரிலே ஆறு இருக்காது என்ற அளவுக்கு அங்கே ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையிலே அதை சீர் செய்வதற்கு முயற்சிகள் என்பது எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு சில வேலைகள் செய்யப்பட்டன. மரவனாறு, குதிரை சவுக்கன் ஆறு இந்த ஆறுகளில் புல்டோசர் வைத்து வேலை செய்து பாதியில் நின்று விட்டது. புல்டோசர் ரிப்பேர் ஆகி திரும்ப வரவே இல்லை. எனவே பாதி வேலை செய்தும் பயன்படாமல் இருக்கிறது. எனவே முழுமையாக செய்து கொடுத்தால் தான் அது பயன் உள்ளதாக மாறுமே தவிர, இல்லை என்றால் செய்த வேலையும் பயன் அற்ற நிலையிலே இருக்கும்.

அதேபோல் தான் தேவநதி என்ற ஆறும், புல்டோசர் மூலம் சீர் செய்ய வேண்டும். அதேபோல் தான் காரபிடாகை என்ற இடத்திலே நம்முடைய வேதாரண்யம் கால்வாயில் கரை உடைந்து பல ஆண்டுகள் ஆகின்றன. அதனால் உப்பு நீர் முழுவதும் உள்ளே வந்து வயல்கள் பாதிக்கப்பட்டு மிக மோசமான நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த முறையில் தான் இந்த கடல் நீர் பல பகுதிகளிலே உள்ளே வந்து விடுகிறது. அப்படி கடல் நீர் உள்ளே வராமல் தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் வைகை நதி ஆற்று பாசனமும் ஏரிப் பாசனமும் இணைக்கப்பட்டதாக இருக்கிறது. அந்த ஆற்றிலே வரக்கூடிய தண்ணீரை ஏரிகளிலே நிரப்பி வைக்கப்பட்டு அந்த ஏரிகள் மூலமாக பாசனத்திற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆற்றுப் பாசனமும் ஏரிப் பாசனமும் இணைக்கப்பட்ட ஒரு பாசனமாக வைகைப் பாசனத்திற்கு ஒரு பகுதி இருக்கிறது, என்பது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலே கூட மதுரைக்கு கிழக்கில் ஒரு அணைக்கட்டி 2 கரை கால்வாய்களில் கொண்டு போய் ஏரிகளுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். அதை நான் போய்ப் பார்த்தேன். அந்த 2 கரைகளிலும் கட்டி இருக்கக்கூடிய வாய்க்கால்கள் என்பது ஆற்றுஓரத்திலே போகிறது. அந்த ஆற்று ஓரத்திலே போவதன் விளைவாக மழை வரும் போது, வெள்ளம் வரும்போது, ஆற்று ஓரத்தில் இருக்கக்கூடிய கரை மணலாக இருப்பதால் அரித்து கொண்டு போய் விடுகிறது. அதை சீர் செய்யாமல் பல ஆண்டுகள் ஆகின்றன. அந்த வாய்க்கால்கள் மதுரை—இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலைக்கு அந்தப் புறத்தில் கொண்டு போய் அந்த வாய்க்கால்கள்

அங்கே போனால்— ஆற்று ஓரத்தில் இல்லாமல் அடிக்கப்பட்டு உடைப்பு ஏற்படுவதும் அது சீர்க்கெட்டுப் போகின்ற நிலை என்பதும் இல்லாமல் இருக்கும். அதை எப்படி பொறியாளர்கள், தீர்மானித்தார்களோ எனக்குத் தெரியவில்லை. எனவே அதை மறுபடியும் நீங்கள் பரிசீலனைச் செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடகனாறு அணை, அது எந்தக் காரணத்தாலோ அன்றைக்கு உடைபட்டது. ஆனால் கட்டுமானப் பகுதியில் உடைப்பு இல்லை. கரை இருந்த பகுதியில் தான் உடைப்பு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் இதுவரையில் அதை சீர் செய்ய வேண்டிய வேலைகள் என்பது அன்றைக்கு அரசியல் காரணத்தால் அது ஒத்திவைக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியும், இருந்தாலும் அதை துரிதமாக முடிப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் இன்னொரு விஷயத்தையும் கூறாமல் இருக்க முடியாது. குறிப்பாக இந்த ஆற்றுப் பாசனத்திலே தண்ணீர் கொடுக்கும்போது விவசாயிகளுடைய நலனை நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். சமீபத்திலே 2 நாளைக்கு முன்பு மதுரை மாவட்டத்திலே நிலையூர் கால்வாயில் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று 5 ஆயிரம் ஏக்கர் பயிர் காய்ந்து கொண்டிருக்கிறது. அந்த காய்ந்து கொண்டு இருக்கக் கூடிய பயிர்களுக்கு தண்ணீர் கொடுங்கள் என்று அவர்கள் அலையாய் அலைந்தார்கள், அதிகாரிகளைப் பார்த்தார்கள், கேட்டார்கள், ஒன்றும் முடியவில்லை என்று சொல்லி ரோடு மறிலுக்குச் சென்றார்கள். தடியடி பிரயோகம் நடத்தி, கண்ணீர்ப் புகை விட்டு அவர்களைக் கைது செய்து உள்ளே வைத்துவிட்டு, அதற்குப்பிறகு நிலையூர் கால்வாயிலே தண்ணீர் திறந்து விட்டு இருக்கிறீர்களே, அதை முன்னாலேயே திறந்து விட்டிருந்தால் இந்தக் கொடுமைகளை அங்கே தவிர்த்திருக்கலாமே என்றுதான் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள..

11-30 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நிலையூர் கால்வாயைப் பொறுத்தவரையில், நிலையூர் கால்வாய் மட்டுமல்ல, எந்தக் கால்வாயிலிருந்தும், விவசாயிகள் பயிர் வாடுகிறது, நீர் வேண்டுமென்று கேட்டால் போதிய அளவு நீர் இருக்குமானால் அல்லது கொடுக்கக்கூடிய அளவுக்காவது நீர் இருக்குமானால் நான் மறுப்பது கிடையாது. காரணம் நானும் ஒரு குடியானவன் வீட்டு பிள்ளை என்பதால் பயிர் வாடாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கருதுகிறவன். அந்த வகையிலே நிலையூர் சேனலுக்கு ஏற்கெனவே ஒரு முறை



தண்ணீர் விட்டேன். இதை மன்றத்திலேகூட உறுப்பினர்கள் சொன்னார்கள். அடுத்து விவசாயிகள் வந்து என்னைக் கேட்டார்கள், பயிர் வாடுகிறது, 5 ஆயிரம், 8 ஆயிரம் ஏக்கர் போய்விடும் என்று வைகையிலிருந்துதான் அவர்களுக்குத் தண்ணீர் போகவேண்டும். வைகை கிரிட்டிலே தண்ணீர் இல்லை இருந்தாலும் பரவாயில்லை, பெரியாறு கிரிட்டிலேயிருந்து கொடுங்கள் என்று சொல்லி, கொடுத்தேன். தண்ணீர் போய்க் கொண்டே இருந்தது. 2 நாட்கள், 3 நாட்கள் போய்க் கொண்டு இருந்தது. திடீரென்று கலெக்டரிடமிருந்து எனக்குத் தகவல் வந்தது. நியாயமாகப் பார்த்தால், கலெக்டரிடம் சொல்லித்தான் இதைச் செய்திருக்கவேண்டும். கலெக்டரிடமிருந்து செய்தி வந்தது. லா அண்டு ஆர்டர் பிராப்ளம் வரும்போல் இருக்கிறது என்று. உடனே நான் சொன்னேன், அப்படியென்றால் நிறுத்தி விடுங்கள் என்று. மறுபடியும் கலெக்டரே போன் பண்ணி கொடுக்கவேண்டுமென்று சொன்னார்; மறுபடியும் கொடுத்தோம். அதிலே என்ன பிரச்சினை என்று கேட்டால் தண்ணீர் விடச்சொல்லி சொன்னேன். அந்த நியூஸ் அங்கே போய் சேரவில்லை. அன்றைக்கு கலெக்டரும் ஊரிலே இல்லை. அதைக் கொண்டுபோய் அந்த மக்களிடத்திலே சொல்வதற்கு ஆள் இல்லை. தண்ணீர் போய்க்கொண்டு இருந்தது. அங்கே அவர்கள் ஸ்டிரைக் பண்ணிக்கொண்டு இருந்தார்கள். ஆகவே, இது அவசரத்திலே ஏற்பட்ட ஒரு முடிவே தவிர, தண்ணீரை நான் ஏற்கெனவே கொடுத்து இருக்கிறேன் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவோடு கவனிக்க மாட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. நான்கூட முன்பு ஒரு முறை தென்னாற்காடு மாவட்டத்திற்கு தண்ணீர் திறந்துவிடவேண்டுமென்று கோரிய போது அவர்கள் தண்ணீர் திறந்து விட்டார்கள் என்பதை நான் உணருகிறேன். அவர் ஒரு குடியானவர் வீட்டுப்பிள்ளை என்பதையும் நம் எல்லோருடைய மூதாதையர் பூராவும் குடியானவர்களாக இருந்த வந்தவர்கள்தான் என்பதிலே எனக்கு எந்த ஆட்சேபணை இல்லை. ஆனாலும் அங்கே நடந்த சம்பவம் என்பது தடியடியும் கண்ணீர்ப் புகையும் நடந்து, கைது செய்யப்பட்ட பிறகு திறந்துவிடப்பட்ட தண்ணீரை, அதற்கு முன்னாலேயே திறந்து விட்டிருந்தால் இந்த பாதிப்பு அந்த விவசாயிகளுக்கு ஏற்படாமல் தவிர்த்து இருக்க முடியும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தண்ணீர் விடப்பட்டது என்று அறிந்த பிறகு சில பேர் அங்கே பாலிடிக்ஸ் பண்ணியிருக்கிறார்கள். எனக்குத் தெரியும். சிலபேர் பாலிடிக்ஸ் பண்ணியிருக்கிறார்கள். தவ

ணீர் இரண்டு நாட்கள் ஓடிக்கொண்டிருக்கிறது. இடையிலே இரண்டு நாட்கள் நிறுத்தப்பட்டு மறுபடியும் 3 நாட்கள் விடுகிறோம். ஆகையால் தண்ணீர் போகவில்லை என்று சொல்லக்கூடாது. அவர்களையே, அந்த விவசாயிகளையே கேட்டுப் பாருங்கள்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே அரசியல் நடந்திருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த விவரம் எனக்கு நன்றாகத் தெரியும் என்ற முறையிலே நான் சொல்கிறேன். அவர்கள் பாதிப்பிலிருந்துதான் வீதிக்கு வந்தார்களே தவிர, கேட்டு கேட்டு பார்த்துவிட்டுத்தான் அந்த நிலைக்கு வந்தார்களே தவிர, இப்போது அவர்கள் மீது அங்கே தொடுத்து இருக்கக்கூடிய வழக்கை வாபஸ் பெற்று அவர்களை விடுவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், ஏரிகளைப் பொறுத்தமட்டில் தமிழகத்தில் பெருமளவிற்கு, ஏறத்தாழ 36 ஆயிரம் ஏரிகள் இருக்கின்றன. படிப்படியாக, உலகவங்கி அல்லது ஆசிய வளர்ச்சி வங்கி நிதி ஆதாரங்களோடு இவைகளிலெல்லாம் வேலை செய்வோம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அன்றைக்குகூட இங்கே ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மூன்று முறை நாம் திட்டத்தைத் தயாரித்து அனுப்பி இருக்கிறோம் என்று அவர்கள், திருப்பித் திருப்பி ஏற்றுக்கொள்ளாமல் மறுத்து இருக்கிறார்கள்; இப்போதும் மறுபடியும் தயாரித்து அனுப்பி இருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்படியே திட்டம் தயாரித்து அனுப்பி அவர்கள் ஏற்க மறுத்து இப்படியே ஒரு நீண்டகாலம் போய்க்கொண்டு இருப்பதன் காரணமாக ஏரிகளைச் சீர்படுத்துவதிலே காலதாமதம் வருகிறது. அதையும் தவிர்ப்பதற்கு ஏற்ற முறையிலே திட்டங்களை உருவாக்குவதற்கு முயற்சிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே இருக்கக்கூடிய ஏரிகள், ஏறத்தாழ பல்வேறு தலைப்புகளின்கீழ், பல்வேறு பெயர்களின்கீழ், பல்வேறு துறைகளின் கீழ் இருக்கின்றன. அனைத்து, பாசனத்திற்கு பயன்படக்கூடிய ஏரிகளையும் பொதுப்பணித் துறையின் கீழ் பொதுப்பணித் துறை ஏரிகளாகக் கொண்டு வரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், அந்த ஏரிகளை ஆழப்படுத்தி, கரைகளை பலப்படுத்துவதோடு மட்டும் சில இடங்களில் வேலைகள் நின்று விடுகின்றன. அப்படி நின்று விடுவதால் அவைகளுடைய வரத்துக்கால்வாய்கள் முழுவதும் தூர்ந்து போய், அவைகள் இல்லாமல் இருக்கும்போது, ஏரிகளை மட்டும் ஆழப்படுத்தி விட்டுவிட்டால், வரத்துக் கால்வாய்களையும் ஏரிகளை ஆழப்படுத்தும்போது, கரைகளை பலப்படுத்தும்போது, சேர்த்தே, அந்தத் திட்டத்தோடு வரத்துக் கால்வாய்களையும் சீர்படுத்தக்கூடிய பணியையும்



சேர்த்து செய்வதன் மூலமாகத்தான் அந்த ஏரிகளுக்கு தண்ணீர் வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியும், அதோடு மட்டுமல்லாமல், நான் கேட்டுக்கொள்வது, கடந்த காலத்தில் ஏரிகளையெல்லாம் சோசிஷயல் ஃபாரஸ்டாக மாற்றுவதற்கு எடுத்து, பல இடங்களிலே சோசியல் ஃபாரஸ்டாக மாற்றி வைத்திருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றி காடுகளை வளர்ப்பதற்கென்று வேறு இடங்களைப் பாருங்கள். ஏராளமான இடங்கள் இருக்கின்றன. காடு வளர்ப்பதற்கு, ஏரிகளை, காடுகள் வளர்க்கக்கூடிய பகுதிகளாக....

11-35 மணி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் இரண்டு மணித்துளிகளை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. கோ. வீரையன் :** காடுகளை வளர்ப்பதற்கு, ஏரிகளை நீங்கள் பயன்படுத்தாமல், ஏரிகளின் கரைகள், மரங்கள் வளர்ப்பதற்கு பயன்படுத்துங்கள். அதைப் போலத்தான் இறைவைப் பாசனம் என்கிறபோது, இன்றைக்கு மின்சாரப் பிரச்சினை என்பது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இறைவைப் பாசனத்திதிற்கு பயன்படக்கூடிய அளவிற்கு நம்முடைய நிலப் பரப்பிலே 40 சதவிகிதப் பாசனம், இறைவைப் பாசனம் மூலமாகத்தான் நடைபெறுகிறது. எனவே, அதிலே தங்கி இருக்கக்கூடிய— மின் இணைப்பு கோரி இருக்கக்கூடிய பல லட்சக்கணக்கானவர்களின் மனுக்கள் தேங்கி இருக்கின்றன. 40 ஆயிரம் என்ற அளவிற்கு நீங்கள் கொடுப்பதற்காக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதை இன்னும் அதிகப்படுத்தி, அதிகமான மின் இணைப்பு கொடுப்பதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், புதிய பாசனப் பகுதிகளை விஸ்தரிப்பதற்கு 5 அணைகளைக் கட்டுவதாக இந்த ஆண்டு அறிவித்திருக்கிறீர்கள். அதிலே மோர்தானா அணையும் ஒன்றாக அறிவித்திருக்கிறீர்கள். அதேபோல் பச்சையாறு அணையும் கட்டப்படுமென்று அறிவித்திருக்கிறீர்கள். ஆக இந்த 5 அணைகளைக் கட்டுவதற்கு நான் நன்றி சொல்வதோடு கோவை மாவட்டத்தில் அவினாசி, பல்லடம், கோவையினுடைய கிழக்குப் பகுதி ஆகியவை மிகப்பெரிய அளவிற்கு வறண்டு கிடக்கின்றன. அந்த வறண்டப் பகுதிகளினுடைய தேவையை நிறைவு செய்ய, குந்தாவினுடைய கழிவு நீரை, அங்கே மிச்சப்படக்கூடிய— மின்சார உற்பத்திக்குத் தேவைப்படுவது போக கழிவாக வரக்கூடிய நீரை, அவினாசி பகுதிக்குக் கொண்டு வருவதற்காக ஒரு திட்டத்தை அரசு பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதோடு, குழாய்க் கிணறுகள் போடுவதிலே, இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே ஒரத்தநாடு

வட்டத்தில் சில குழாய்க் கிணறுகளை அரசே சமுதாயக் கிணறுகளாக அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாய நிலங்களைப் பாதுகாக்க, நிலத்தடி நீரை எடுத்துத்தர, விவசாயிகளே தங்களுடைய நிலங்களிலே குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொள்ள முடியாது. அதற்குக் காரணம், பல கிராமங்கள் முழு முழு கிராமங்கள், கோயிலுக்குச் சொந்தமான கிராமங்கள். எனவே அதிலே குத்தகை விவசாயிகளாக இருப்பவர்கள், குழாய்க் கிணறுகளை அமைக்க முடியாது. ஆகவே, அரசாங்கமே சமுதாயக் கிணறுகளை அமைத்துக் கொடுத்து, தண்ணீரைக் கொடுந்து, அதற்கானத் தொகைளை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். அந்த முறையிலே பார்த்தால், 50 கோடி ரூபாய் செலவாகும். ஒரே ஆண்டில், 50 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டுமென்று நான் கேட்கவில்லை. ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் என்று, ஒரு ஐந்தாண்டு காலத்திலே அப்படிப் பட்ட நிலத்தடி நீரை எடுத்துத் தருவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், செண்பகத்தோப்பு அணை பத்திரப் பள்ளி அணை என்ற அணைகளையும் உங்கள் திட்டத்தோடு சேர்க்க வேண்டும். அதேபோல், காவிரி சீரமைப்புக் கோட்டத்தினுடைய அலுவலகம் ஒன்று நாகையிலே இருக்கிறது. அதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக நான் அறிகிறேன். அதை நிறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

பாலங்கள், சாலைகள் என்று வரும்போது, 13 ஆண்டுகளாக கட்டப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வந்த என்னுடைய தொகுதியிலிருந்த ஒரு பாலத்தை இந்த ஆண்டு கட்டுவதற்கு நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியதற்கு அன்றே நான் எனது நன்றியைச் சொன்னேன். இன்றைக்கும், வேலைகள் துவங்கப்பட்டு அவை நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புற ரோட்டிலே, ஏழாவது கட்டத்திலே என்னுடைய தொகுதியில் 13 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனால், ஒரு வேலைகூட நடைபெற வில்லை. அதனையும் இப்போது மீண்டும் எட்டாவது திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, 1977-லே பழுதுப்பட்ட ஒரு பாலம், புதுப்பள்ளி என்ற கிராமத்தில் சீர்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்தப் பாலத்தைச் சீர்ப்படுத்தவும், அதேபோல் திருப்பூண்டி, தலைஞாயிறுக்கு இடையே இருக்கக்கூடிய இரண்டு பாலங்கள் கட்டப்பட வேண்டிய வேலைகள் இருக்கின்றன. அதனையும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



தஞ்சை மாவட்டத்தில் பல வாய்க்கால்களிலே, ஆறுகளிலே சிறு சிறு பாலங்கள் கட்டவேண்டிய வேலைகள் இருக்கின்றன, அதை நமது பொதுப் பணித்துறை கொஞ்சம் கவனிக்குமேயானால்,— வீராணம் திட்டத்திற்கு போடப்பட்ட குழாய்களை வேறு எதற்காவது நீங்கள் பயன்படுத்தப் போகிறீர்களா; இல்லையென்றால், தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த வாய்க்கால்களுக்கும், ஆறுகளுக்கும் அவற்றைப் போட்டு பயன்படுத்த முடியுமா என்பதை நீங்கள் பரிசீலிப்பீர்களேயானால், செலவுகள் பெருமளவுக்குக் குறையும்; பல பாலங்கள் அமைப்பதற்கான முறைகள் ஏற்பட முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலையிலே, கடலோர நெடுஞ்சாலையின் இரண்டாவது பகுதி வேலையை நீங்கள் துவங்குவதறகு முயற்சிக்க வேண்டும் என்பதோடு, நாகை, மைசூர் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு, முதற்கட்டமாக நாகையிலிருந்து, திருச்சி வரையிலும் 45-வது நெடுஞ்சாலையோடு இணைப்பதற்கான வேலையாவது துவக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இரயில்வே மேம்பாலங்கள் பொறுத்தவரையில், காட்பாடி, திருப்பூர் ஆகிய இடங்களுக்கான பாலங்களைக் கட்ட, இந்த ஆண்டே எடுத்துக் கொள்வீர்களா என்பதையும் நான் உங்களுடைய பதிலிலே அறிய விரும்புகிறேன்.

11- 40 மணி

அதேபோல்தான் சண்முகாநதி மேம்பாலம், பாலாறு பாலம், குமரி மணவாளக்குறிச்சி பாலம் போன்றவைகளை எல்லாம் எடுத்துக் கொள்வதற்கும் முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலைகளின் கழிவுநீர் ஆற்றிலே வராமல் உறுதியாகத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இவற்றை சொல்லும்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பணம் வேண்டுமென்று கேட்பார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய நிர்வாகத்தில் சில செலவுகள் இருக்கின்றன. சில சிக்கல்கள் இருக்கின்றன. பொதுப் பணித்துறையில் இருக்கிற குறைபாடுகளையும், நெடுஞ்சாலைத் துறையில் இருக்கிற குறைபாடுகளையும் தவிர்த்தாலே ஏறத்தாழ 50 கோடி ரூபாய் மிச்சப்படுத்த முடியும். அதிலே நடைபெறக் கூடிய தவறுகளைக் குறைப்பது அல்லது டெண்டர் விடுவதில்

ஏற்படக்கூடிய குறைபாடுகள் இவற்றை எல்லாம் தவிர்த்து உரிய நடவடிக்கைகள் எடுத்தாலே இன்றைக்கு 50 கோடி ரூபாய் அளவுக்கு மிச்சப்படுத்த முடியும் என்ற தகவலை எழுத்துப் பூர்வமாக கூட நான் வைத்து இருக்கிறேன். அதை அமைச்சர் அவர்களிடம் நான் கொடுத்துவிடுகிறேன். அப்படிச் செய்தால் 50 கோடி ரூபாயை மிச்சப்படுத்தி அவற்றை இந்த வேலைகளுக்குக் கொண்டுபோக முடியும்.

ஒரு உதாரணத்திற்குச் சொல்ல நான் விரும்புகிறேன். இங்கே தெற்கே போகும்போது அங்கே ஒரு பகுதியில் தார் போடுவதாகப் போட்டு அந்தத் தாரிலே மிச்சப்படுத்தி அதை மீண்டும் கொள் முதல் பண்ணுவதாக கணக்குக்குக் கொண்டுவந்து அதாவது சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்கு கொண்டு போவதற்காகத் தாரை வாங்கியதாகவும். அதைக் கொண்டு செல்லும் லாரிக்கும் வாடகை செலவழித்ததாகவும் கணக்குகள் எழுதப்பட்டு இப்படி எல்லாம் பணம் பாழாக்கப்படுகிறது. இதை எல்லாம்தடுத்தால் நிச்சயமாக ஒரு பெரும் தொகையை நாம் மிச்சப்படுத்த முடியும். அது மற்ற பணிகளுக்குப் பயன் படுத்த உதவும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அரசு நெடுஞ்சாலைத் துறையும், கிராமப்புற நெடுஞ் சாலைத்துறையும் ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படுவதற்கு முயற்சிக்கப்படுவதாக கொள்கை விளக்கக்குறிப்பிலே இருப்பதாக நான் அறிகிறேன். அப்படி இணைக்கும்போது நாகப்பட்டினத்தில் இருக்கக்கூடிய கோட்ட பொறியாளருடைய அலுவலகம் மாற்றப்படும் என்று அங்கே பேசப்படுகிறது. அப்படி இருந்தால் அதைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாகைக் கோட்டம் என்பது நீண்ட நெடுங்காலமாக இருந்துகொண்டு இருக்கிறது. அது மாற்றப்படக்கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

இந்தத் துறையைப்பற்றிக் குறிப்பிடும்போது சென்ற ஆண்டுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது ஒன்றைச் சொன்னார்கள். அந்த நெடுஞ்சாலைத் துறையிலே வேலை செய்து, தன்னிறைவுத் திட்டத்திலே பணியாற்றி வேலையிழந்து இருக்கக்கூடிய 300-க்கு மேற்பட்டவர்களைப் பொறுத்தவரையில் 5 ஆண்டுகள் வரையில் பணிபுரிந்து வேலையற்றுஇருப்பவர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்வதாகச் சொன்னார்கள். அது இன்னும் நிறைவுறாமல் இருக்கிறது. தினக்கூலிகளாக 600-க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். இதுவரையில் 300 பேர்களைத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் 300 பேருக்கு மேல் வேலையற்று இருக்கிறார்கள்.

அதேபோல் பொதுப்பணித்துறையை பொறுத்தவரையில் சென்னை வட்டத்தில் பணியாற்றக்கூடிய 47 சாதாரணமான மஸ்தூர்களாகவே நீண்ட நெடுங்காலம் நீடிக்கிறார்கள். இந்தக்



குறைகளை எல்லாம் தவிர்த்து அந்தத் தொழிலாளர்களை எல்லாம் உற்சாகப்படுத்தி இந்த வேலையில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு இந்த பாலங்கள், ரோடுகள் சம்பந்தப்பட்ட வேலைகளைப் பொறுத்தவரையில் இதுவரையில் கொடுக்காமல் இருப்பதைக் கொஞ்சம் கூடுதலாகக்கொடுத்து இந்த சாலை வேலைகளைப் பொறுத்தவரையில் கிராமப்புற சாலைகளுக்குக் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எம். சேட்டு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையையும், நீர்ப்பாசனத் துறை மானியக்கோரிக்கையையும் ஆதரித்து என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். இந்த ஆட்சி வந்த பிறகு நல்ல முறையில் சாலைகள் எல்லாம் செம்மையாக இருக்கின்றன. அவை நல்ல முறையில் பயன்படுத்தப்படுகின்றன.

என்னுடைய தொகுதியிலே அதாவது செங்கம் தொகுதியிலே குப்பநத்தம் அணையைக் கட்டித்தரவேண்டும். செங்கம்புதுப் பாளையம் ஒன்றியத்தில் ஒரு தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும். செங்கம் ஏரிக் கால்வாய்களைச் செப்பனிடவேண்டும் செங்கம் பேருந்து நிலையத்தை இட மாற்றம் செய்து தரவேண்டும். சாலைகளைச் செப்பனிட வேண்டும். புதுப் பாளையம் ஒன்றியத்தில் ஏதாவது ஒரு தொழிற்சாலை கட்டித் தரவேண்டும். விவசாயம் தவிர வேறு எதுவும் என்னுடைய தொகுதியில் இல்லை. அதனால் மக்களின் நலன் கருதி அந்த குப்பநத்தம் அணையைக் கட்டித் தரவேண்டும். ஒரு வருட காலமாக அமைச்சர் அவர்கள் என்னுடைய பெயரையே குப்பநத்தம் அணை, குப்பநத்தம் அணை என்று தான் அழைக்கிறார். (சிரிப்பு.)

11-45 மணி

அதுசம்பந்தமாக எல்லாக் கோப்புகளையும் அவர்களிடம் கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு நடவடிக்கை எடுத்து குப்பனாத்து விவசாயிகள் நன்மை அடைய ஆவன செய்யுமாறு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாண்டியிலிருந்து கிருஷ்ணகிரி செல்லும் பஸ்கள் வேடங்குப்பம் வழியாகச் செல்கின்றன. அப்படிச் செல்லும் பாதையில் நடுவில் 5 கிலோ மீட்டர் தூரம் மண்சாலையாக இருக்கிறது. அதை தார்ச்சாலையாக அமைத்துத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையில் ஏரி, கால்வாய் சரிபடுத்தப்பட வேண்டும். அதனால் என்னுடைய தொகுதியில் 13 வருடமாக எந்த விதமான பயனும் நன்மையும் அடையவில்லை. அந்த ஏரிகளை ஆழப்படுத்தி செப்பனிட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தது பாலங்கள், என்னுடைய தொகுதியில் சில பாலங்கள் பழுதடைந்திருக்கின்றன. அந்தப் பாலங்களை சரி செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குப்பனாத்து அணை சீரமைப்புப் பணிகளை இதற்கு முந்தைய ஆட்சிக்காலத்தில் 12½ கோடி ரூபாய் மதிப்பீட்டில் செய்யலாம் என்று அடிக்கல் எல்லாம் நாட்டினார்கள். இந்த ஆண்டில் அதைக் கட்டித்தர அன்புடன் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கிற, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் துறை மானியங்கள் மீது என்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை மாவட்டம் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற நான், காவிரி நீர்ப்பிரச்சினையை தீர்க்க முயற்சித்து வரும் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு நன்றியை தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

1975 ஆம் ஆண்டு நீங்கள் பேசித் தீர்க்க இருந்த இந்த ஒப்பந்தம், மீண்டும் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் நீங்கள் முதலமைச்சராக இருக்கிற இந்த காலக்கட்டத்தில்தான் பேசி முடிக்கப்பட இருக்கிறது. அதற்கான முயற்சிகளை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள் என்று எண்ணுகிற போது தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பில் நான் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சை மாவட்ட விவசாயிகளும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சட்டப் பேரவையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் காணிக்கையாக வைக்கிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசியபோது சில கருத்துக்களைச் சொன்னார்கள். அதற்குக்கூட என்னால் பதில் சொல்லமுடியும். ஆனால் இறுதியில் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். இன்றைய தினம் தஞ்சை மாவட்டம்



என்பது விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கிற ஒரு மாவட்டமாகும். வேறு தொழில்கள் அங்கே இல்லை. வேளாண்மையையே நம்பியிருக்கிற அந்த மாவட்டத்தில் 1,000 மைல்கள் நீளம் உள்ள 36 ஆறுகளும், 12,720 மைல் நீளமுள்ள 29,953 வாய்க்கால்களும் இருக்கின்றன. அதனுடைய விவசாயப் பரப்பு 14 லட்சத்து 8,150 ஏக்கராகும். அங்கே இருக்கிற விவசாயிகள் அத்தனை பேரும் இந்த 36 ஆறுகளையும், 29,953 வாய்க்கால்களையும் நம்பி, காவிரியில் நீர் வந்தால்தான் விவசாயம் செய்ய முடியும், வாழ முடியும் என்ற நிலையில் இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நீங்கள் தீர்த்து வைக்க முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆட்சிக்காலத்தில், இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையை பேசித் தீர்க்காமல் காவிரி தண்ணீரை ஒரு விவாதப் பொருளாகவே மாற்றிவிட்டார்கள்.

1150-மணி

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன வேண்டுகோள். இந்த காவிரி பிரச்சினை குறித்து யோசனைகளையோ, கிரிட்டிசிசமோ எதுவும் செய்யாமல் இருப்பது நல்லது. ஏனென்றால் இரண்டொரு நாட்களில் சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு வரப் போகிறது. சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்பது போல இதற்கும் நாம் ஏற்கெனவே செய்திருக்கிறது போதும். இனியும் எதுவும் செய்ய வேண்டாம். தமிழ்நாட்டு ஒட்டுமொத்த நலனை முன்னிட்டு அருள்கூர்ந்து காவிரி பிரச்சினையைப் பற்றி பேசுவதை கொஞ்சம் தவிர்க்கும்படி மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** மன்ற உறுப்பினர்கள் தயவுசெய்து காவிரி பிரச்சினை குறித்து தங்களுடைய ஆலோசனைகளையோ கருத்துக்களையோ சொல்லாமல் இருப்பது நல்லது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதைக் கவனத்தில் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முயற்சித்து வருகிறீர்கள். நாங்கள் அதற்கு உறுதுணையாக இருக்கவும், நன்றி தெரிவித்துக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். காவிரி பகுதியிலே உள்ள 36 ஆறுகளில் மண் எடுத்ததன் காரணமாக ஆறுகள் பள்ளமாகிவிட்டன. வாய்க்கால்கள் மேடாகி விட்டன. ஆறுகள் பள்ளமாகவும், வாய்க்கால்கள் மேடாகவும் இருக்கிற காரணத்தால் இன்றைய தினம் ஆறுகளில் தண்ணீர் குறைவாக வருகிறபோது வாய்க்கால்களில் தண்ணீர் ஏறிப் போகிற சூழ்நிலையில்லை. ஆகவே, ஆறுகளில் தேவையான

இடங்களில் எல்லாம் படுகை அணைகள் பெட்டேம்ஸ் ரெகுலேட்டர்கள் கட்டி கொடுக்க வேண்டும். இன்னும் வாய்க்கால் தலைப்புகள் மாற்றப்பட வேண்டிய இடங்கள் நிறைய இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் வாய்க்கால் தலைப்புகள் மாற்றி கட்டிக்கொடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குடி மராமத்து வேலைகள் நீண்ட பல வருடங்களாக நடைபெறவில்லை. சென்ற ஆண்டு, நம்முடைய ஆட்சிக் காலத்தில், தஞ்சை மாவட்டத்தில் பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் விவசாய பொறியியல் துறை ஆகிய மூன்று துறைகள் மூலமாக நிறைய குடிமராமத்து வேலைகள் நடைபெற்றன. இப்படி இந்தத் திட்டத்தின் கீழ் வேலைகள் நடைபெற்ற காரணத்தினால், சென்ற ஆண்டு தண்ணீர் குறைவாக இருந்தபோதிலும் கூட, விவசாயிகள் கொஞ்சமும் சிரமம் இல்லாமல் வேளாண்மை செய்து முடித்தார்கள். அதன் பலனாகத் தான் சென்ற ஆண்டு 10 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்து இந்த அரசுக்கு வழங்க முடிந்தது. ஆகவே, இந்த ஆண்டும், அந்தப் பணியை தொடர்ந்து செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் அதற்காக தொகை ஒதுக்கி இருப்பதற்காக தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டசபையில் நான் 29, மார்ச் 1990-ல் கேட்ட ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1986-87-ல் பொதுப்பணித்துறை, காவிரி கோட்டத்தில் மேற்கொண்ட வேலைகளில் 66.67 லட்சம் ரூபாய் முறைகேடுகள் நடைபெற்றதாக இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது எப்படி நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பதோடு, இது குறித்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அதற்காக சில ஆதாரங்களை உங்கள் முன்னாலே சமர்ப்பிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு நபர் முன்னாலே ஆளும் கட்சியிலே இருந்தவர், ஒருகடிதம் எழுதுகிறார். உதவிப் பொறியாளர், ஏ.இ., அவர்கள்(குறுக்கீடு) —நான் மாண்புமிகு சபாநாயகர் அவர்களிடத்தில் இதற்கு அனுமதி வாங்கியிருக்கிறேன். பெறுநர், உதவிப் பொறியாளர் அவர்கள், மாடர்னைசேசன் செக்சன், நன்னிலம். அன்புடையீர் வணக்கம், தங்கள் பிரிவில் கொடுக்கப்படுகின்ற நாமினேஷன் வேலையில் இரண்டு வேலைகளை, அருகாமையில் எனக்கு கொடுத்து உதவுமாறு வேண்டுகிறேன். இதுசம்பந்தமாக நான் தங்களை நேரில் சந்திக்கின்றேன். இன்று அவசரமாக சென்னை செல்வதால் கடிதம் எழுதுகின்றேன். மற்றவை நேரில், என்று கையெழுத்துபோட்டு கடிதம் எழுதுகிறார். அவரே மறுபடியும் அதே என்ஜினியருக்கு கடிதம் எழுதுகிறார். அதில் 'அன்புடையீர் வணக்கம். நான் இன்று 5 மணிக்குள் தங்களை சந்திக்க இயலவில்லை. காரணம்



மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருக்கிறேன். ஆகவே, நாளை காலை 11 மணிக்கு தங்களை சந்திக்கிறேன். எர்த் ஓர்க், ஆற்றுமண் வேலை சம்பந்தமாக என்று எழுதி கையெழுத்து போட்டிருக்கிறார். அதற்கு அடுத்து இன்னொரு கடிதமும் எழுதுகிறார். அதில் பெறுநர் உதவிப் பொறியாளர், கால்வாய் புதுப்பிக்கும் கோட்டப் பிரிவு, நன்னிலம், அன்புடையீர் வணக்கம், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள எங்களுடைய கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு தங்கள் பிரிவின் மூலம் மண்வேலை, எர்த் ஓர்க், கொடுத்து உதவுமாறு வேண்டுகிறேன். இது மிக அவசர அவசியம் ஆகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன், என்று சொல்லி அத்துடன் ஒரு பட்டியலையும் இணைத்து அனுப்புகிறார் அந்தப்பட்டியல்படி பேரளம் சரகத்தில் 20 பேருக்கு வேலை. நன்னிலம் சரகத்தில் 10 பேருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று பட்டியல் போட்டுக் கொடுத்ததன் காரணமாக, இப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் பல இடங்களிலே ரெகுலேட்டர்கள் கட்டப்பட வேண்டும். ஊழல் புகாரில் சம்பந்தப்பட்ட ஆறுகள் இருக்கின்றனவே, அந்த ஆறுகள் மீண்டும் வெட்டப்படாமல், சீர் செய்யப்படாமல் 3, 4 ஆண்டுகளாக இருக்கின்றன. எனவே விதி விலக்கு கொடுத்து. ஊழல் புகாரிலே சம்பந்தப்பட்ட ஆறுகளை, இந்த ஆண்டு வெட்டி தூர் வாரி, ஆழப்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11-55 மணி

அதோடு மட்டுமல்லாமல், குடிமாராமத்து வேலைகள் செய்வதற்கு பாசனக் கமிட்டிகள் விவசாயிகளைக்கொண்டு அமைக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஊழலே நடக்கக் கூடாது என்பதற்காக, எந்தவிதமான குறைகளும் இல்லாமல் வேலைகள் நடைபெற வேண்டுமென்பதற்காக, விவசாயிகளைக் கொண்ட நீர்ப்பாசனக் கமிட்டி அமைத்து, அவர்கள் மூலமாக அந்த வேலைகளை மேற்கொள்ள இருப்பதை நான் மனதார நெஞ்சாரப் பாராட்டுகிறேன். அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும்போது, விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அதன் மூலமாக 50 ஏக்கருக்கு ஒரு ஆழ்குழாய்க் கிணறு என்று அமைத்து தண்ணீர் இறைத்துக் கொடுக்கவும் ஆவனசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நயநு எல்லையிலிருந்து மழைக்காலத்தில் மேற்கு நோக்கி ஓடுகிற தண்ணீரைத் தேக்கி கிழக்கு நோக்கிக் கொண்டு வந்து, தமிழக விவசாயிகள் அதைப் பயன்படுத்தும் முறையில் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். கங்கை—காவிரி இணைப்புத் திட்டம் பெரிய திட்டமாக இருந்தாலும், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்த திட்டத்தைப் பற்றி நிறைய பேச முடியும். ஆனால் நேரமில்லை.

அடுத்து கிராமச் சாலைகள், கிராமச் சாலைகளைப் பொறுத்த வரையில் கலைஞர் அவர்கள் காலத்திலே ஊரக கிராமச் சாலைகள் திட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தத் திட்டத்தின் மூலமாக 1,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் முக்கிய நெடுஞ்சாலை துறை சாலைகளோடு இணைக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தை 1972-ல் கலைஞர் அவர்கள் தமிழக முதல்வராக இருந்தபோது கொண்டு வந்தார்கள். அதன்மூலமாக பல கிராமங்கள் பயன் பெற்றன. அந்தத் திட்டத்தை மீண்டும் இன்றைய தினம் கொண்டு வருவதாகவும், 1,500 என்பதைக் குறைத்து 1,000 ஜனத் தொகை உள்ள கிராமங்களுக்கும் அந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமென்று அறிவித்திருப்பதன் மூலமாக மீதம் போடப்படாமல் இருக்கக்கூடிய, பயன்பெறாமல் இருக்கக்கூடிய 5,178 கிராமங்களும் படிப்படியாக பயனடையும் என்று அறிவித்திருப்ப தற்காகவும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக 100 கோடி ரூபாய் செலவாகக் கூடிய அந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டு 22 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதற்காக என்னுடைய நன்றியினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப் புறச் சாலைகள் அமைக்க 10 கோடி; ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்பாடு செய்ய 10 கோடி; நகர் மன்றப் பகுதிகளில் சாலைகள் அமைக்க 12.9 கோடி; கிழக்குக் கடற்கரைச் சாலையைச் செப்பனிட முதல் கட்டப் பணிக்கு 5.2 கோடி; சிறிய பாலங்கள் கட்டுவதற்கு 5 கோடி; சென்னை நகரில் போக்குவரத்துக் நெடுஞ்சாலைப் பணிகளுக்கு 27.7 கோடி: சாலைகளைப் பழுது பார்க்க 80.27 கோடி; இப்படி பல்வேறு சாலை வளர்ச்சிப் பணிகளுக்கு நம்முடைய நிதிநிலை அறிக்கையில் 187 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்ப தற்காக தமிழக அரசுக்கும், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

12-00 மணி

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான் ஆரம்பத்திலே சொன்னதுபோல 20 ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த ஆறுகளில் நெடுஞ்சாலைத் துறை மூலமாக மங்கநல்லூர் வானவராயன்குப்பம் எல்லையில் வீரசோழன் ஆற்றில் வண்டிப்பாலம் கட்ட வேண்டும்.



12-00 மணி

மாந்தை மாதாகோயில் தெரு செல்லும் சாலையில் நாட்டாற்றில் ஒரு பாலம் கட்ட வேண்டும்.

எழுவேலி— காஞ்சிவாய் சாலையில் நந்தலாற்றில் பாலம் கட்ட வேண்டும்.

மல்லியம்— வானாதிராயபுரம் சாலையில் காவேரி ஆற்றில் பாலம் கட்ட வேண்டும்.

குடவாசல் ஒன்றியத்தில் சீதக்கமங்கலம்—பம்பல்—கூந்தலூர் சாலையில் திருமலைராயன் ஆற்றில் பாலம் கட்ட வேண்டும்.

சேதினிபுரம்— வெள்ளமண்டபம் சாலையில் முடிகொண்டான் ஆற்றில் பாலம் கட்ட வேண்டும்.

தேதியூர்—பாகசாலை சாலையில் திருமலைராயன் ஆற்றில் பாலம் கட்ட வேண்டும்.

குடவாசல், செருகளத்தூர்—ராதாநல்லூர் சாலையில் குடமுருட்டி ஆற்றில் பாலம் கட்ட வேண்டும்.

புளிச்சக்காடி— ஸ்ரீவாஞ்சியம் சாலையில் வளப்பாற்றில் பாலம் கட்ட வேண்டும்.

ஏராளமான பாலங்கள் கட்டாத காரணத்தால் போக்கு வரத்து வசதிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அவைகளை காலத்தில் செய்து கொடுக்க வேண்டும் என்று நான பணிவன் போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன.

ஊரக சாலைத் திட்டத்தின் மூலம் ஆயிரம் ஜனத்தொகை யும், அதற்கு மேலும் ஜனத்தொகை உள்ள கிராமங்களுக்கு சாலைகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக பருத்திக்குடி—நக்கம்பாடி—கீழமூலை வழியாக கோடிமங்கலம் செல்லும் சாலை—7 கிலோ மீட்டர் நீளமுள்ள மிக முக்கியமான சாலையை தார் சாலையாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மல்லார்பேட்டை— திருக்குளம்பியம் வழியாக புதூர் செல்லும் சாலை 4 கிலோ மீட்டர் நீளம் உள்ளது; அதை தார்ச் சாலையாக மாற்றித் தர வேண்டும் எனறு கேட்டுக்கொள்கிறேன்.

கொடவிளாகம்— முத்தூர், சடக்கம் வழியாக கிளியனூர் செல்லும் சாலையை தார் சாலையாக மாற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரளத்திலிருந்து திருமெய்ச்சூர், ஆலத்தூர், கிள்ளியூர், சுரைக்கயூர். வடக்குவெளி, கம்பூர், திருப்பாம்புரம் கருப்பூர், மாளிகைநந்தம், துளார்ராமாபுரம், சருக்கை பருத்திக்குடி, செம்மங்குடி, மணியாங்குடி வழியாக..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முடித்து விடுங்கள்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** அன்னியூர் செல்லும் சாலை- அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 30 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள்; 5 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன; அந்தச் சாலையையும் நீங்கள் கப்பி சாலையாக மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நன்னிலம்- மானந்தகுடி சாலை— அந்தப் பகுதியில் 20 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள்; இன்னும் அந்தச் சாலை செப்பனிடப்படாமல் இருக்கிறது; அது 20 கிராமங்கள் இணைந்து செல்கிற சாலையாக இருக்கின்றது; அந்தச் சாலையையும் நீங்கள் தார் சாலையாக மாற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரும்பண்ணையூரிலிருந்து எருமதலை கூத்தூர்— நெடுஞ்சேரி— நாரணமங்கலம்— திருவிடச்சே. வழியாக சேதினிபுரம் செல்லக்கூடிய சாலையையும் கப்பிச் சாலையாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) கடைசியாக ஒன்றே ஒன்றுதான்.

தஞ்சை மாவட்டத்தில் எண்ணெய் எரிவாயு நிறுவனத்தின் மூலமாக பல இடங்களில் எண்ணெய் எடுக்கப்பட்டு லாரிகள் மூலமாக தினசரி சென்னைக்குக் கொண்டுவரப்படுவதால் அந்தப் பகுதிகளில் இருக்கிற சாலைகள் எல்லாம் முழுவதும் பழுதாகி இருக்கின்றன. அந்தச் சாலைகள் சீர் செய்து கொடுக்கப்படும் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

கும்பகோணம்— சீர்காழி சாலை, மயிலாடுதுறை— முத்துப்பேட்டை சாலை, மன்னார்குடி— திருத்துறைப்பூண்டி சாலை, நாகூர்— வெட்டாறு சாலை, தரங்கம்பாடி— மயிலாடுதுறை சாலை, ஆக்கூர்- சீர்காழி சாலை, நாகப்பட்டிணம்— கூடலூர்— மைசூர் சாலை, திருவாரூர்- குடவாசல்— கும்பகோணம் சாலை (மணியடிக்கப் பெற்றது), நன்னிலம்— பிலாவடி வழியாக கும்பகோணம் சாலை, காரைக்கால்- கொல்லுமாங்குடி — கும்பகோணம் சாலை, பூந்தோட்டம்— எரவாஞ்சேரி வழியாக கும்பகோணம் சாலை— இப்படிப்பட்ட சாலைகளை எல்லாம் அரசின் சார்பாக மேம்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக



நான் கேட்டுக்கொண்டு, இந்த ஆட்சிக்கும், தலைவருக்கும், பொதுப் பணித் துறை அமைசசருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனம், நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின் கீழ் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முற்படுகின்றேன், விவசாயிகள் வாழக் கூடிய இந்த நாட்டில் பாசனத் திட்டங்களை இன்றைக்கு நம்மால் அதிகமாக நிறைவேற்ற முடியவில்லை. காரணம் நிதிப் பற்றாக்குறை. நிறைவேற்றப்பட்ட திட்டங்களின மூலமாகவும் நம்மால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தண்ணீரையும் வழங்க முடியவில்லை. இன்றைக்கு ஏரிகள் எல்லாம் சாதாரணமாக சம நிலைக்கு, நிலத்தின் நிலைக்கு வந்துவிட்டது. மழைக்காலங்களில் ஏரிகளில் தண்ணீர் தேங்கினால் தான் கிணறுகளில் ஊற்று வற்றாமல் தண்ணீர் குறையாமல் இருக்கும். ஆனால் பல ஆண்டுக்காலமாக மராமத்து செய்யப்படாத காரணத்தால், ஏரிகள் எல்லாம் இன்றைக்கு சமமான நிலமாக உயர்ந்து இருப்பதை நம்மால் காண முடிகிறது.

12-05 மணி

விவசாயப் பெருங்குடி மக்கள் அரசாங்கத்தை இன்னும் நம்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள். நமக்கு விடிவு காலம் உண்டு என்றுதான் எண்ணிக் கொண்டுதான் இருக்கிறார்கள். விவசாயத் தொழில்தான் இன்றைக்கு நம்முடைய நாட்டில் எல்லோருக்கும் சாப்பாடு போடக் கூடிய வளர்ந்த தொழிலாக இருந்தாலும், அந்தத் தொழிலுக்கு அதிகமான அளவிற்கு ஊக்கம் இல்லாத இந்தக் காலகட்டத்தில் அரசாங்கம் உணர்ந்து மற்ற துறைகளுக்கு நிதியைக் குறைத்து இந்தத் துறைக்குத்தான் அதிகமான நிதியை ஒதுக்க வேண்டுமென்ற வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கத்தில் இரண்டே இரண்டு துறைகள்தான் முக்கியம். ஒன்று, உணவுத் துறை, மற்றொன்று, சாப்பிட்ட மக்களைப் பாதுகாக்கக்கூடிய காவல்துறை, இரண்டே துறைகள் தான் முக்கியமான துறைகள். மற்ற துறைகளெல்லாம் செயல்படாவிட்டாலும், இந்த நாட்டில் ஒன்றும் ஆகிவிடாது. முனிசிபாலிட்டி இல்லாவிட்டால் இந்த நாட்டில் எந்தப் பஞ்சமும் வந்துவிடாது. உள்ளாட்சித் துறை உறங்கிவிட்டால்கூட இந்த நாட்டில் ஒன்றும் வந்து விடாது. ஆனால், விவசாயத் துறை, பாசனத்துறை இந்த இரண்டு துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் நாம் நாள்தோறும் சாப்பிடவாவது முடியும். ஆகவே, எல்லாருக்கும் உணவு அளிக்கக்கூடிய இந்தத் துறைக்குப் பல்லாண்டு காலமாக நிதி ஒதுக்காமல்— எல்லா ஆட்சியிலும்— இதற்கு முன்னுரிமை அதிகமாகக் கொடுக்காமல், கொடுத்தாலும் நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்கள் அத்தனையும் மக்களுக்குப் போய்ச்சேராத அளவிற்கு ஆங்காங்கே சிலபேருக்குப் போய்ச்சேரக் கூடிய அளவிற்குத் திட்டங்கள் எல்லா ஆட்சிக் காலத்திலும்

அமைந்திருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களைக் கருதி முதலமைச்சரோடு போராடி இன்னும் அதிகமாக நிதியைப் பெற வேண்டுமென்ற ஓர் ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலில் என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய விவசாயப் பிரச்சினைகளை நான் இங்கே சொல்லியாகவேண்டும். அங்கே, கடையம் பகுதியில் ஏழு கிராமப் பஞ்சாயத்துக்கள் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன. அந்த விவசாயப் பெருமக்களெல்லாம், சுதந்திரம் அடைந்து சுமார் 40 ஆண்டுக்காலமாக இன்னும் விவசாயத் தண்ணீரைப் பார்க்காத மக்கள். உடனே திரு. துரைமுருகன் கேட்டுவிடக்கூடாது, இதை ஏன் உங்களுடைய காலத்தில் செய்யவில்லை என்று. நான் ஒவ்வொரு பக்கத்திலும் செய்து கொண்டு வருகின்ற காலக்கட்டத்தில்தான் 1988வது ஆண்டு ஒரு நிலைக்கு ஆட்சி வந்துவிட்டது என்ற காரணத்தினாலேதான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்து விட்ட காரணத்தினால்தான். அந்தத் திட்டத்தை அன்றைக்கு நிறைவேற்ற முடியவில்லை. அங்கே வாழக்கூடிய மக்கள், கடையம் பகுதியில் இருக்கக்கூடிய விஞ்ஞானப்பட்டி, வடமலைப்பட்டி, கோவிலூத்து, பண்டாரகுளம், தெற்கு மடத் தூர் இன்னும் பல ஊர்கள் அடங்கிய இந்த விவசாயப் பெருமக்களெல்லாம் ராமநதியில் இருந்து, ஜம்பு நதியில் இருந்து, விவசாயத் தண்ணீரைத் தேக்கி ஒரு அணையைக் கட்ட வேண்டுமென்றும், ஒரு சிறிய அணையைக் கட்ட வேண்டும் என்றும் வேண்டுகோளைச் சொன்னார்கள். ஏற்கெனவே நான் அமைச்சரவர்களிடத்தில் சொன்னேன். அமைச்சரும் சொன்னார், ஜம்பு என்ற காரணத்தினால், க்ஷத்திரியர்களின் கடவுளாக இருக்கின்ற காரணத்தினால், நிச்சயமாக நான் அதை நிறைவேற்றுவேன் என்று சொன்னார். ஜம்புவான் என்பதைச் சொன்னார். நான் இங்கே கொள்கைக் குறிப்பைப் படித்துப் பார்த்தேன். அங்கே ஜம்பு நதி நீர்த் தேக்கம் சுமார் 2 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் என்ற ஒரு செய்தியும் இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு 2 கோடி ரூபாய் செலவில் என்னுடைய பகுதியில் வாழக்கூடிய அந்த மக்களுக்கு இந்தத் திட்டத்தை வேகமாக நிறைவேற்றித்தரவேண்டுமென்ற வேண்டுகோளை மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நெடுஞ்சாலைத் துறை. நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு பாலங்கள் கட்டப்பட வேண்டும். ஆனால் பாலங்களைக் கட்டுவதற்கு நிதிப்பற்றாக்குறை உண்டு. எனக்கு நன்றாகத் தெரியும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் மேலச்செவலில் இருபது இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலத்தைக் கட்ட வேண்டுமென்று நிதியை ஒதுக்கினார்கள். அது என்ன ஆயிற்று என்பது எனக்குத் தெரியாமல் இதுவரையில் இருந்தது. இன்றைக்கு நான் கொள்கைக் குறிப்பைப் படித்துப் பார்த்தேன். ( There was no response for



the tender) என்று எழுதியிருக்கிறது. மேலச் செவலில், ஆகவே, யாராவது ஒரு நல்ல கான்ட்ராக்டரைப் பார்த்து, இல்லாவிட்டால் அரசாங்கமே அந்தப்பொறுப்பை ஏற்று அந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் (குறுக்கீடு) சேங்க்ஷன் ஆகி இருக்கிறது.

12-10 மணி

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, அப்படி கான்ட்ராக்டர் வராவிட்டால், அதற்காகத்தான் நாங்கள் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் வைத்திருக்கிறோம். நிச்சயமாக அது அரசாங்கத்தினுடைய சார்பில் செய்யப்படும்.

**திரு. பி. எச். பாண்டியன்:** தலைவர் அவர்களே, Annexure —VII Class 12 அதிலே 'Melaseval 'என்பதற்கு '1' என்பதற்கு பதில் ''i'' என்று போட்டிருக்கிறது. அப்படி ஓர் ஊர் இல்லை. அதனால் There was no response for first call. Re-tender to be called for என்று போட்டிருக்கிறது.

அடுத்து முக்கூடலையும், அரிகேசவநல்லூரையும் இணைக்கிற அளவிற்கு தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தைக் கட்ட வேண்டும். இதையும் ஏன் கட்டியிருக்கக்கூடாது என்று எண்ணலாம். அன்றைக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கோபாலசமுத்திரத்தில் ஒரு பாலத்தைக் கட்டுவதற்கு, தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்ட அனுமதி அளித்தார்கள். அவர்கள் அடிக்கல் நாட்டிவிட்டு சென்றார்கள். நாம் எல்லாம் சேர்ந்து அன்றைக்கு முதலமைச்சரை வைத்து திறந்தோம். ஆகவே அந்தப் பகுதி மக்களுக்கு முக்கூடல்— அரிக்கேசவநல்லூர் பகுதி மக்களுக்கு, இந்த நன்மை போய்ச் சேர்வதற்கு அந்தப் பாலத்தைக் கட்ட வேண்டுமென்ற வேண்டுகோளை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறிய சிறிய பாலங்கள் சுமார் 20, 30 பாலங்கள் கட்டுவதாக கொள்கை குறிப்பில் இருக்கிறது. பட்ஜெட் வழங்கும் போது 100 பாலங்கள் கட்டப்போவதாக தெரிவித்து இருக்கிறீர்கள். அதிலே ஒரு பாலத்தை மலையங்குளம் என்ற கிராமம், கல்லிடைக்குறிச்சிக்கு அருகில், பொட்டல் பகுதிக்கு அருகில் இருக்கிறது. அங்கு கோரையாற்றின் குறுக்கே சுமார் 5 லட்சத்திலிருந்து 7 லட்சம் ரூபாய் ஆகலாம். சிறிய பாலம் தான். அந்தப் பாலத்தைக் கட்டித் தாருங்கள் என்ற வேண்டுகோளை நான் உங்கள் முன்னால் வைக்கிறேன்.

இதுதவிர ஆண்டுதோறும் விவசாயிகள் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினை— பாபநாசம் அணையில் தண்ணீர் எவ்வளவு இருக்கிறது மணிமுத்தாறு அணையில் தண்ணீர் எவ்வளவு இருக்கிறது என்ற ஒரு நிலையில் விவசாயப் பெருமக்கள் எல்லாம், நெல்லை மாவட்டத்தில் எண்ணிப்பார்த்து ஏங்குவது உண்டு. ஜூன் மாதம் 1 ஆம் தேதி முதல் நான்கு கால்வாய்களை திறப்பது வழக்கம். சென்ற ஆண்டு அப்படி திறந்து விட்டீர்கள். ஆகவே, இன்றைக்கே கேட்டு விடுகிறேன். 1-ம் தேதி வழக்கம் போல் முதல் நான்கு கால்வாய்களை, கன்னடியன் கால்வாயில் தொடங்கி, பாளையங்கால் திருநெல்வேலி போன்ற கால்வாய்களைத் திறந்துவிட வேண்டுமென்ற வேண்டுகோளை அமைச்சர் அவர்களுக்கு வைக்கிறேன்.

(பேரவைத் தலைவர்— தலைமை)

12-15 மணி.

நெடுஞ்சாலத் துறையில் முன்பெல்லாம் என்னுடைய தொகுதிக்குள் நுழையும்போது கார்கள் எல்லாம் ஆடாது, அலுங்காது. என்னுடைய தொகுதியை விட்டுச் செல்லும்போது நிச்சயமாக இந்த வேறுபாட்டை உணரமுடியும். ஆனால், இன்றைக்கு எல்லா சாலைகளும் பழுதுபட்டு விட்டன. வெள்ளச் சேதத்தால் சனவரி மாதம் பாதிக்கப்பட்ட கடையம்- முக்கூடல் சாலை, கடையம்— ஆலங்குளம் சாலை, அத்தனையையும், நீங்கள் வெள்ள நிவாரண நிதியின் மூலமாக செப்பனிடுவோம் என்று சொன்ன பிறகும் கூட, நான் சென்ற மாதம் 27, 28 தேதிகளில் அந்தப் பகுதிகளை பார்க்கும் போது, அந்தச் சாலைகள் இதுவரையில் செப்பனிடப்படவில்லை. குண்டும் குழியுமாக இருக்கின்றன. ஆகவே, மெயின்டெனன்ஸ் தான் சாலைகளை பராமரிக்கும்போது மிக முக்கியமானது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். * * * *

12-25 மணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தொடர்பான அனைத்துப் பகுதிகளும் நீக்கப்படும். அவை செய்தித் தாள்களிலும் வரக்கூடாது.* * * *

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



**திரு. பி. எச். பாண்டியன் :** ஆகவே மீண்டும் எனது தொகுதி பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன். அங்கே கால்வாய்கள் எல்லாம் நவீனப்படுத்தப்பட வேண்டும். உலக வங்கி திட்டத்தின்கீழ் மணிமுத்தாறு, தாமிரபரணி. அதிலுள்ள கால்வாய்கள் எல்லாம் உலக வங்கி உதவியுடன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கு, ஆய்வு எல்லாம் நடத்தி இன்றைக்கு அந்தத் திட்டம் நிறைவேறும் பொழுது பல்வேறு இடங்களில், திட்டத்தை நிறைவேற்றக்கூடிய இடங்களில் மணிமுத்தாறு கால்வாய்களில், கால்வாய்கள் தோண்டும்பொழுது இருந்த கற்கள் எல்லாம் இன்றைக்கு அங்கே காணவில்லை.

12-30 மணி

காரணம் ஒரு கால்வாயை நாம் சீரமைக்க வேண்டுமானால் அங்கே இருக்கக்கூடிய கல்லை எடுத்துத்தான் அங்கே பதிக்க முடியும் காரணம் ட்ரான்ஸ்போர்ட் சார்ஜ் கொஞ்சம் அதிகமாக இரு கு. ஆகவே இனிமேலாவது தோண்டக்கூடிய கால்வாய்களில் இருக்கக்கூடிய கற்கள் எல்லாம் பக்கத்திலேயே காலம் முழுவதும் அது எந்த ஒப்பந்தக்காரருக்கும் விற்கப்படாமல் இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இன்றைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் வெளியேயிருந்து ஒரு பகுதியிலிருந்து கற்களை எல்லாம் எடுத்துக்கொண்டு வரும்போது முழுமையான செலவு, ஒதுக்கப்பட்ட நிதி அந்த கற்களைக் கொண்டு சேர்ப்பதற்கே செலாவாகிவிடும் என்ற ஐயத்தினால்தான் இதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தான் இங்கே பாசனத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் நான் தெரிவித்த அந்த வேண்டுகோளை எல்லாம் ஏற்று இந்த ஆண்டு நிறைவேற்றித் தாருங்கள் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எம். முத்தையன்:** மாண்புமிகு இந்த அவையினுடைய தலைவர் அவர்களுக்கு என் வணக்கம்.

''இன்னவன் இனியா ரென்று யாருமே
அறியா என்னை
மன்னவன் இவன் தானென்று
மாமணி மகுடம் சூட்டி
தன்னவன் இவன் தானென்று
தார்மணிப் பொறுக்கிக் கோத்து
மன்னவன்செய்த நன்றி
மறப்பனோ பிறப்பிலேழு''

என்ற பாடலுக்கொப்ப. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பாடியதை கேட்டு அப்படியே உருகிவிட்டோம் எல்லோரும். (சிரிப்பு)

**திரு. எம். முத்தையன்:** இந்தச் சபையில் பேச வைத்த எனக்கு தாயாகவும், தந்தையாகவும், அண்ணனாகவும், வீற்றிருக்கின்ற என் தலைவருக்கு வணக்கம்.

நற்கருப்பஞ்சாற்றிலே தேன்கலந்து, பால்கலந்து, செழுங்கனியின் தீஞ்சுவைக் கலந்து, என் ஊன்கலந்து, உயிர்கலந்து உவட்டாது இனிப்பதுவே என்று வள்ளலார் கூறுவது போல எங்களது இனிக்க இனிக்க பேசுகின்ற பொதுச் செயலாளர் அவர்களுக்கு வணக்கம். இன்று நான் தங்களிடையே பொதுப் பணித் துறைப் பற்றிப் பேச வந்துள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான். அது ஞாபகம் இருக்கிறதா என்று கேட்டேன். போகிற போக்கைப் பார்த்தால் எங்கேயோ போய் விடுவீர்கள் போல் இருக்கிறது.

திரு. எம். முத்தையன் : எனக்கு வாய்ப்பு அளித்த பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு அருமை சகோதரர் துரைமுருகன் அவர்களுக்கு என் வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாய்ப்பை அளிக்கிறது அவரல்ல; பணம் அளிக்கிறது தான் அவர், வாய்ப்பு கொறடா. (சிரிப்பு)

திரு. எம். முத்தையன் : என் தொகுதி மலையும் மலையைச் சார்ந்த இடமும் உள்ள தொகுதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இலக்கியத்தில் தொடங்கியதால் இலக்கியச் செல்வர் குறுக்கிட வேண்டியிருக்கிறது. (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன் : நீங்கள் சொல்கின்றபோது வேக வேகமாகச் சொல்கின்ற போது 'வாய்ப்பைக் கொறைடா'' என்கிற மாதிரி இருக்கிறது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த நன்றி விட்டுப் போகக்கூடாது என்பதற்காக அவருடைய பெயரை இணைத்தேன்.

திரு. எம். முத்தையன்: ஏழைகள் நிரம்பியத் தொகுதி. சுதந்திரம் பெற்று 43 ஆண்டுகளாகிறது. காலுக்கு செருப்புமில்ல. கால்வயிறு கஞ்சியில்ல. கட்டத் துணியுமில்ல. குடியிருக்க வீடுமில்லை என்ற நிலையில் இருக்கிறார்கள். என் தொகுதியில் இருக்கின்ற மக்கள் தொகை மலையில் மட்டும் 40,000 பேர்கள் உள்ளனர். இங்கு பஞ்சாயத்து யூனியன் இல்லை, பிளாக் விஸ்தரிப்பு அலுவலகம் உள்ளது. ஆணையர் தலைமையில் அதிகாரிகள் நிறையபேர்கள் உள்ளார்கள். அதாவது பட்டினத்தார் சொல்வார்,—

''வீடு இருக்க மாடு இருக்க
வேண்டுமனையாளிருக்க



கூடுவிட்டு நீ போன
கோலம் என்ன கோலமோ''

என்பதற்கேற்ப எல்லா சௌகரியமும் இருந்து அங்குள்ள மக்கள் எல்லாம் இன்னும் முன்னுக்கு வரவில்லை. முன்னேறாதப் பகுதி மக்கள் அவர்கள். அந்த ஆட்களை எல்லாம் பார்த்தால். அவர்களுடைய பாஷையே தனியாக இருக்கும். நான் கூட போனால் ''ப்யோவ், ப்யோவ்'' என்று வார்த்தையே என்ன மொழி என்று தெரியாமல் அதாவது பையா பையா என்று சொல்வதற்கு ''ப்யோவ், ப்யோவ்'' எம்.எல்.ஏ., வந்திருக்கிறாரா'' என்று சொல்வார்கள். அப்படி பழக்க வழக்கங்களும் சரியாக இல்லாமல் இருக்கிறார்கள்.

12-35 மணி

வேளாண்மைத் துறை, கால்நடைப் பராமரிப்பு, மண்வளப் பாதுகாப்பு, கிராமக் குடிநீர் வசதி, நெடுஞ்சாலை, கிராமத் தொழிற் துறை, சுகாதாரம், மருத்துவமனை, இந்திய மருத்துவம், சமுதாய அபிவிருத்தி, ரேடியோ. டெலிவிஷன், மின்சாரம், குழந்தைகள் காப்பகம், ஆதி திராவிடர் நலத்துறை, முறைசாராக் கல்வி, தாட்கோ, பொதுப் பணித் துறை வேலை வாய்ப்புத் துறை, காட்டிலாகா, கல்வி— இவ்வளவு அதிகாரிகளும் மலையிலே இருக்கிறார்கள். ஆனால், நல்லவர்கள், சாமர்த்தியமானவர்களாக இருக்கிறார்கள். இருந்தும் வேலை அறவே நடைபெறவில்லை. இவைகள் அனைத்துக்கும் காரணம் சாலை வசதி இல்லை. பேருந்து வசதி இல்லை. மின்சாரம் இல்லை. இவைகள் போதுமான வசதிகள் இல்லை. அரசாங்கத்தின் பணம் பாழாகிறதே தவிர, மக்கள் வளர்ச்சிக்குப் பயன்படவில்லை. இம்மலையில் மக்கள் ஏழ்மைக் கோலத்தில் இருக்கிறார்கள். பார்த்தீர்களானால். ஒரு துணியைத் தவிர, மறு துணியே அவனுக்கு இருக்காது.

வள்ளலார் சொல்கிறார்— சோறில்லை, மேல் வெள்ளை சொக்காயில்லை. நல்ல சோமனில்லை. பாடில்லைக், கையில் பணமில்லை. தேகப் பருமனில்லை. வீடில்லை, எனக்கு வாய் வீராப்பும் இல்லை, விவாகமது நாடில்லை, ஏந்துவாரின் நண்ணுவாயே— என்று சொன்னதுபோல, அங்கே இருக்கிறது வறுமைக் கோலங்கள்.

மலையில் மொத்தம் இரண்டு சாலைகள் இருக்கின்றன. பெரிய சாலைகள், வெள்ளிமலை வழியாக ரங்கப்பனூர் போய்ச் சேர்கிற சாலை, 47 கிலோமீட்டர் உள்ளது. துணைச் சாலை ஒன்று போட்டிருக்கிறார்கள். பரிகத்திலிருந்து வெள்ளிமலை வரைக்கும், 22 கிலோ மீட்டர் உள்ளது. மலையில் மொத்தம் 156 கிராமங்கள் உள்ளன. அதிலே எந்தக் கிராமங்களுக்கும்

சாலைகள் இல்லை. அரசாங்கத்திற்கும், பொதுமக்களுக்கும் தொடர்பே இல்லை. இவை அனைத்துக்கும் மூலகாரணம், சாலை வசதிகள் இல்லை. சாலை வசதிகள் இருப்பின் மக்களுக்கு இப்போது போட்டிருக்கிற திட்டம் மட்டும், இரண்டு கோடி ரூபாய்க்குத் ; திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அது பெரிய சமாசாரம், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிகப் பெரிய பாராட்டுதல்கள். இரண்டு கோடி ரூபாய் மலைக்கு மட்டும் என்று திட்டம் தீட்டியிருக்கிறார்கள். இதை ஏற்கெனவே செய்திருந்தால், அந்தப் பகுதி ரொம்ப முன்னுக்கு வந்திருக்கும். அங்கே அந்த ரோடு சௌகரியம் இருந்திருந்தால், எல்லாத் தொடர்புகளும் இருக்கும். வியாபாரம் இருக்கும். பொருளாதார நிலை உயரும். கடுக்காய்த் தொழிற்சாலை நிறைய உற்பத்தி பண்ணி இருக்கலாம். அங்கே போய்ப் பார்த்தால், மலையிலே ஏறும்போதே, சந்தனமும் தேக்கும் மணக்கிறது. அங்கே தேன் வளங்கள் இருக்கின்றன. அங்கே இருந்துதான் தேனே இறக்குமதி பண்ணுகிறார்கள். டின், டின்னாக தேனை இறக்குகிறார்கள். அவ்வளவு பெரிய வனங்கள் இருக்கின்றன. அந்த மலையிலே, இவ்வளவுக்கும் ரோடு இல்லாத காரணம்தான். ரோடு போட்டோம் என்றால், நம்முடைய அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் நல்ல பெரிய இலாபகரமான காரியங்கள் இருக்கும்.

கூட்டுறவுக் கடைகள் மூலம் முறையாக பொருட்களை சப்ளை செய்யலாம். கல்வி நிறுவனங்களுக்கும் பால்வாடிகளுக்கும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட நேரத்திலே செல்லலாம். கூட்டுறவு முறையில் பால் சொசைட்டிகள் அமைந்தால் ஏழை எளிய மக்கள் நல்ல முறையிலே பிழைப்பார்கள்.

இதோ இன்னொரு செய்தி, புதுப் பாலப்பட்டு, பழைய காலப்பட்டு, கள்ளிப்பட்டு ஆகிய மூன்று ஊர்களும் கல்ராயன் மலையைச் சார்ந்தவை. அங்கே ஜாதி இந்துக்கள் வாழ்கிறார்கள். ஜாதி இந்துக்கள் இருப்பதால் இவ்வூருக்கு அரசின் சலுகைகள், அரசின் தொடர்பே இல்லாமல் உள்ளனர். மலையைச் சார்ந்து இல்லாமலும் கீழே சங்கராபுரம் ஒன்றியத்தைச் சார்ந்து இல்லாமலும் தீவு போலத் தனியாக எவ்விதத் தொடர்பும் இல்லாமலே உள்ளார்கள். அனாதைப் பிள்ளைகள் போல் உள்ளது. இம்மூன்று ஊர்களுக்கும் தாய் யார், தகப்பன் யார் என்று தெரியாமலே உள்ளது. இந்நிலையில் நம்முடைய கருணையான அரசாங்கம் இம்மூன்று ஊர்களையும் மலையோடு சேர்த்து மலைவாழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய அனைத்து அரசின் சலுகைகள் கிடைக்க வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைகளில் பள்ளத்தாக்குகள் உள்ளன. இப்பள்ளத்தாக்குகளில் சிறு தடுப்புகள் கட்டி, நீரினைத் தேக்கி வைப்பதன் மூலம் மலைப்பகுதிகளில் உள்ள விலங்கினங்கள் கோடைக் காலங்களில் உயிர் வாழலாம். குரங்குகள் இறந்ததாக யாரும் பார்த்திருக்க



முடியாது. ஆனால் சென்ற ஆண்டு மலைப் பகுதியிலுள்ள குரங்குகள் குடிப்பதற்குத் தண்ணீரே இல்லாமல் மரங்களில், கிளைகளில் படுத்தவாறே, அமர்ந்தவாறே செத்துக் கிடந்ததை, கல்ராயன் மலையிலே பல இடங்களிலே பார்த்தோம். ஆகவே விலங்கினங்கள் உயிர் வாழ சிறு நீர்த் தேக்கங்களை அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12-40 மணி

இப்போது மலையை விட்டு கீழே இறங்குகிறேன். சங்கராபுரம் ஒன்றியம், கள்ளக்குறிச்சி ஒன்றியம் இவைகள் அனைத்திலும் உள்ள சாலைகள் 23. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கீழே இறங்கிவிட்டதால் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். ஒரு மணித் துளியில் முடியுங்கள்.

**திரு. எம். முத்தையன் :** தலைவர் அவர்களே, மொத்த நீளம் 160 கிலோ மீட்டர். இந்த சாலைகள் அனைத்திற்கும் திட்டங்கள் தீட்டி டெண்டர் விடப்பட்டு வேலைகள் நடக்கிறது. அதிலே கூட மாற்றார் மேடைப் போட்டு ஏசுகிறார்கள். ரோடு போடுவதாகச் சொன்னீர்கள் இன்னும் போடப்படவில்லையே என்று ஏசுகிறார்கள். சாலையை போட்டு பழக்கம் இல்லாதவர்கள், மக்களின் வரிப்பணத்தைப் பாழ்படுத்தியவர்கள் பேசுகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்த உடனே சாலைகளைப் பார்த்தால் யானைப் படுக்கும் பள்ளம், மாடுகள் படுக்கும் பள்ளம், பன்றிகள் படுக்கும் பள்ளம் ஆக இப்படியாக காணப்படுகிறது. எங்கள் ஆட்சியில் 13 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தபோது போட்ட சாலைகளை ரிப்பேர் கூட செய்யாமல் கேட்பார் அற்று கிடந்தன. இந்த நிலையிலே பொறுப்பு ஏற்ற எங்களது அன்புச் சகோதரர் மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து எங்கள் தொகுதிக்கு மட்டும் 2 கோடி ரூபாய், 3 கோடி ரூபாய் என்று ஒதுக்கி அருமையாக வேலைகள் எல்லாம் நடக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

எனது தொகுதியில் உள்ள நெடுஞ்சாலைகள் அனைத்தும் மிகவும் மோசமாக உள்ளன. கள்ளக்குறிச்சி— மூங்கில்துரைப்பட்டு சாலை, அந்த ஒரு சாலையை இந்த நிதி ஆண்டில் அவசரமாக வேலை செய்ய வேண்டும். மூங்கில்துரைப்பட்டு சர்க்கரைஆலை இந்த வழியில் இருப்பதால் வாகனங்கள் அதிகமாக செல்கின்றன. அங்கு அந்த ரோட்டில் எப்போது பார்த்தாலும் சண்டைகள், வண்டிகளும் கீழே விழுந்து போகிற நிலையில் ஏகப்பட்ட பள்ளம். எவ்வளவோ ரூபாய் செலவு செய்கிறார்கள், ஒன்றும் சரியாக ஆக மாட்டேன் என்கிறது. சாலைகள் மிகவும் பாழ்பட்டு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

திருவண்ணாமலை-சேலம் இணைப்புச் சாலையாக உள்ளது. இந்த சாலையை மாவட்ட நெடுஞ்சாலையாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மாணவர் விடுதி 12 இருக்கின்றன. அதில் 2 விடுதிகள் தவிர மற்ற விடுதிகள் வாடகைக் கட்டிடத்தில்தான் நடக்கிறது. இந்த விடுதிகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களால் கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்த மானியங்கள் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

இந்தியத் திருநாட்டினுடைய இந்த நதிகள் அத்தனையையும் தேசியமயம் ஆக்குவதற்கு ஒரு தீர்மானத்தை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இந்த மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிக் கொடுத்தால் ஒழிய தமிழகத்திற்கு மட்டும் அல்ல, இந்தியாவிற்கே விமோசனம் கிடைக்காது என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காரணம் இப்போது தெரியும் 566 டி.எம்.சி. தண்ணீர் எடுத்தோம், பிறகு 177 டி.எம்.சி. தண்ணீர் எடுத்தவர்கள் இன்றைக்கு தண்ணீர் கொடுக்கக்கூடாது என்ற ஒரு நிலை வருமானால் இதற்கு எல்லாம் ஒரு முத்தாய்ப்பு வைத்தாற்போல் இதற்கு எல்லாம் ஒரு விடிவு காலம் காண்பதைப் போல் இங்கே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதுவும் நல்ல திறமை வாய்ந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேச்சு வன்மையால், பேச்சிலேயே இந்த ஆட்சியைப் பிடித்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களால். எல்லாக் காரியத்தையும் சாதிக்க முடியும்.

மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களிடத்திலே நெருங்கிய அவர்களோடு இரட்டையர்கள் போன்று இருக்கக் கூடிய அவர்கள் இந்த நேரத்திலே— ஒரு காலத்திலே கே.எல். ராவ் அவர்கள் பாசனத்துறை அமைச்சராக இருந்த போது நேரு பெருமான் அவர்கள் பிரதமராக இருக்கும்போது தேசியமயம் ஆக்குவதற்கு ஒரு சூழ்நிலை உருவாக்கினார்கள். ஆனால் அன்றைக்கு இருந்த மாநிலங்கள் அதை ஒத்துக்கொள்ளாத காரணத்தால் அது தள்ளி வைக்கப்பட்டது. அதற்கு மீண்டும் உயிர் கொடுக்கக்கூடிய அளவிலே உங்களுடைய பேச்சு சாதுரியத்தால் இதை செய்து கொடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



அவர்களுக்கு ஒத்தாற்போல் இன்றைக்கு பொதுப்பணித் துறை அமைச்சராக பணியாற்றி வருகின்ற அவர்கள் இந்த பிங்கரிங் அதாவது டைப் அடிப்பவர்கள், அவர்கள் எழுத்தை எல்லாம் டைப்மிஷினில் பார்க்க மாட்டார்கள். அவர்களாக வேகமாக அடிப்பார்கள். ஏன் என்றால் நான் டைப்ரைட்டிங் லோயர் பாஸ் செய்திருக்கிறேன். அதனால் தெரியும். அப்படி அடித்தால் அதுபாட்டிலே கைபோகும், அந்த அளவுக்கு விஷயங்கள் தெரிந்த, மக்களுக்கு பணியாற்றக்கூடிய நல்ல திறமை வாய்ந்தவரை அமைச்சராக இந்தத் துறையில் வைத்து இருக்கிறார்கள். ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் இதை தேசியமயம் ஆக்குவதற்கு ஒரு நிலைமையை உருவாக்கிக் கொடுப்பார்களானால் அது சற்று சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு) நான் உண்மையை, மனதில் இருப்பதைச் சொல்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் நீர் வளம் மிகவும் குறைவாக இருப்பதாகவும், அண்டைய 3 மாநிலங்களில் நீர் வளம் அதிகமாக இருப்பதாகவும், அதில் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று இன்றைக்கு 'நேஷனல் வாட்டர் மேனேஜ்மெண்ட்'' அதில பேசுவதற்கு நம்முடைய அரசு முடிவு எடுத்து இருக்கிறது. அதிலே பேசி இந்தத் தண்ணீர் கிடைப்பதற்கான ஒரு நல்ல நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வைகை-பெரியாறு பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள். 152 அடி தண்ணீர் தேங்க வேண்டும். இப்போது ஏதோ அங்கே ரிப்பேர் செய்கிற காரணத்தால் அது 135 அடிக்கு வந்து நிற்கிறது. 10 ஆண்டு காலமாக அந்த வேலை செய்யப்படவில்லை. இன்றைக்கு எங்களுடைய தொகுதிகள்—எனக்கு வராவிட்டாலும் கூட அதிலே இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களும் இப்போது எங்களுக்குக் கருணைகாட்டி இருக்கிறார்கள். வைகை - பெரியாறு இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீமிலிருந்து நிலக்கோட்டைக்கு 3 ஆயிரம் ஏக்கர், பெரியகுளத்திற்கு ஆயிரம் ஏக்கர் என்று, ஏனென்றால் மொத்தம் 4 ஆயிரம் ஏக்கர், ஏற்கெனவே 3 ஆயிரம் ஏக்கருக்கு சாங்ஷன் செய்யப்பட்டு, 4 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு போட்டு கெஜட்டிலே நோட்டிபிகேஷன் வந்துவிட்டது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே இந்த 3 ஆயிரம் ஏக்கருக்கு தண்ணீர் வருகிறது என்றால், அந்த வறண்ட பகுதியிலுள்ள மக்கள் உங்களை வாழ்த்துவார்கள். உங்களுக்கு நன்றிசொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள்... அந்த காலாகாலத்திலே முடிக்காத காரணத்தினாலே அன்றைக்கு 4 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டோம். ஆனால் இன்று அந்த திட்டத்தினுடைய மதிப்பீடு 25 கோடி ரூபாயிலே வந்து நிற்கக்கூடிய ஒரு நிலைக்கு வந்திருக்கிறது என்பதைத்தான் நான்

இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே வைகை- பெரியாறு திட்டத்தை விரிவுபடுத்தி, மறுபடியும் 152 அடி தண்ணீர் தேங்கக்கூடிய அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

12-45 மணி

அதோடு, இந்தத் திட்டங்களை நாம் நல்லமுறையிலே செய்தாலும்கூட கிராமப்புறங்களிலே 39 ஆயிரம் கண்மாய்கள் இருக்கின்றன. அதிலே 8,900 கண்மாய்கள் பி.டபிள்யூ.டி-ஐச் சார்ந்தவை. இந்த 39 ஆயிரம் கண்மாய்களிலும், உண்மையிலேயே ஆங்காங்கே உள்ள பெரியவர்கள், சில பெரிய மனிதர்கள் அவைகளை ஆக்கிரமிப்பு செய்துகொண்டு, அந்த வரத்துக் கால்வாய்களை ஆக்கிரமிப்பு செய்துகொண்டு அதிலே விவசாயம் செய்துகொண்டு தண்ணீரை வரவிடாத அளவிற்கு அவர்கள் தடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதுகுறித்து பதில் சொல்லும் போது—சென்ற ஆண்டு என்று நினைக்கிறேன்—மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், யாராக இருந்தாலும் நான் பார்க்க மாட்டேன்; புல்டோசர் வைத்து அத்தனை பேரையும் வெளியேற்றிவிட்டு, பிறகு தண்ணீர் தேங்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன் என்று அவர்கள் அன்று ஆணித்தரமாகச் சொன்னார்கள், அன்றைக்கே அவர்களை நான் பாராட்டி இருக்கிறேன். எனவே, யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, மக்களுக்குத் தண்ணீர் வேண்டும், இன்றைக்குத் தண்ணீர் இல்லாத காரணத்தினால் காலத்தின் கோலம், இங்கே மழை பெய்கிறது, ஆனால் இங்கே பெய்யக்கூடிய மழை நாங்கள் குடியிருக்கக்கூடிய ஹாஸ்டல் இருக்கும் இடத்தில் பெய்யவில்லை--ஒரு வறட்சியான நிலைமை நாட்டிலே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகையால், யாராக இருந்தாலும் அவர்களை வெளியேற்றி, ஆக்கிரமிப்பு செய்திருக்கக்கூடியவர்களை எத்தனை பெரிய பணக்காரர்களாக இருந்தாலும் சரி, எத்தனை பெரிய வசதி படைத்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களை வெளியேற்றி, அந்தக் கண்மாய்களையெல்லாம் சீர்படுத்தக்கூடிய ஒரு நிலைமையை நாம் உருவாக்க வேண்டும். ஐரோப்பிய நிபுணர் குழு, மற்றும் மேற்கு ஜெர்மனியிலிருந்து நீங்கள் உதவி கேட்டிருக்கிறீர்கள். அதன்மூலமாக 3 ஆயிரம் கண்மாய்களை நவீனபடுத்தக்கூடிய திட்டத்தை நீங்கள் உருவாக்கி இருக்கிறீர்கள். இதெல்லாம் பாராட்டப்படக்கூடிய ஒன்று. ஆனால், இப்பேர்ப்பட்ட திட்டங்களையெல்லாம் கொண்டு வரக்கூடிய நீங்கள் என்னுடைய நிலக்கோட்டை தொகுதி ரொம்ப மோசமாகிவிட்டது. இருந்தாலும் ஒரு பக்கத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருணையினாலும் மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களுடைய கருணையினாலும் ஒரு மூன்றாயிரம் ஏக்கருக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய ஒரு நிலைமை



வந்திருக்கிறது. என்றாலும்கூட, இருக்கக்கூடிய கண்மாய்களையெல்லாம், இருக்கக்கூடிய ஆறுகளையெல்லாம், மிகவும் மேடிட்டு எந்த வேலையும் செய்ய முடியாத நிலைமையில் இருக்கின்ற கண்மாய்களையெல்லாம் சரிசெய்யவேண்டும். தண்ணீர் சரியாக தேங்காமல் வரத்துக் கால்வாய்களெல்லாம் சரியாக இல்லாமல் இருக்கிறது. இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறோமே அந்தத் திட்டங்களிலே, என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய, மருதநாட்டியிலிருந்து வரக்கூடிய கால்வாய், தாமரைக்குளம், கருங்குளம், ரெங்கசமுத்திரம், சொட்டாங்குளம், கோபால சமுத்திரம், சிறுவன்குளம் போன்ற குளங்களையும் வத்தலகுண்டில் உள்ள வீரகுளம், பெரியகுளம் கண்மாய், வேடகுளம் இந்தமாதிரி உள்ள கண்மாய்களையெல்லாம் இந்தத் திட்டத்திலே சேர்த்து அவைகளை சீர்படுத்த வேண்டும். இந்தக் கண்மாய்களெல்லாம் மேடிட்டு கிடக்கின்றன. அந்த மேடான பகுதிகளையெல்லாம் புல்டோசர் வைத்து அவைகளை ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்தி, தண்ணீர் தேங்கவைப்பதற்கான ஒரு நிலைமையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேற்கு ஜெர்மனியினுடைய உதவியிலே, 50 கோடி ரூபாய் செலவிலே 300 கண்மாய்களை சீர்செய்ய வேண்டுமென்று நீங்கள் திட்டம் தயாரித்து இருக்கிறீர்கள்; அதிலேயாவது அவைகளைச் சேர்க்கக் கூடாதா? அவற்றோடு இந்தக் கண்மாய்களையும் எடுத்துக் கொள்ளக் கூடாதா? எதிலே பார்த்தாலும் செங்கை-அண்ணா மாவட்டம். கோயம்புத்தூர் மாவட்டம், சேலம் மாவட்டம் என்றுதான் இருக்கிறது. நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் மழையே இல்லாமல் இருக்கக்கூடிய பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்றுதான் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

சிறுமலை அருவித் திட்டம் என்று ஒரு திட்டம், சிறுமலை அருவித் திட்டம் 1964-ஆவது ஆண்டு பெரிய மழைபெய்து அங்கே வெள்ளம் வந்து பள்ளவெட்டி மற்றும் கொடலோடு இவை இரண்டுக்கும் இடையிலே பெரிய வெள்ளம் வந்து அதனால் திருவனந்தபுரம் ரெயில் கவிழ்ந்து 300 பேருக்கு மேலே அன்றைக்குச் செத்தார்கள். அந்தத் திட்டத்திற்காக, அதாவது சிறுமலை அருவித் திட்டத்திற்காக 1 கோடியே 23 லட்சத்துக்கு பிளான் போட்டு திட்டம் தயாரித்தார்கள். இன்று வரையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. இன்றைக்கு அதற்கு 19.15 கோடி ரூபாய் எஸ்டிமேட் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றாவிட்டால் மழைக் காலங்களிலே வரக்கூடிய தண்ணீரால், வெள்ளத்தால் அங்கே இருக்கக்கூடிய ரெயில்வே லைன் அடித்துக்கொண்டு போகக் கூடிய நிலைமை இருக்கிறது. நேஷனல் ரோட்டை வெள்ளம் அடித்துக்கொண்டு போகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் மக்கள் செத்து மடிகிறார்கள். இதுகுறித்து அரசினுடைய குறிப்பிலே பார்த்தால், இது அரசினுடைய பரிசீலனையில்

உள்ளது என்று இருக்கிறது. அதிலே 13 ஏக்கர் ஃபாரஸ்ட் நிலம் சம்பந்தப்பட்டிருக்கிறது. வன இலாக்காவுக்கு சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய நிலங்களுக்கு, திட்டத்தட்ட 30 ஏக்கர் அல்லது 50 ஏக்கருக்கு மாநிலமே ஒப்புதல் கொடுக்கலாம் என்ற ஒரு நிலைமை உருவாக வேண்டும். ஒரு ஏக்கராக இருந் தாலும் சரி, இரண்டு ஏக்கராக இருந்தாலும் சரி 10 செண்டாக இருந்தாலும் சரி, அதற்காக மத்திய அரசாங்கத்திடம் போக வேண்டியிருக்கிறது. இதனால் காலதாமதம் ஆகி, பிறகு அந்தத் திட்டத்தை எடுப்பதற்கு நீண்டகாலம் ஆகிய காரணத்தாலே குறைந்தது வனப்பகுதியிலேயிருந்து 50 ஏக்கர் நிலத்தை யாவது நாம் எடுப்பதற்கு—நாம் எதற்காக எடுக்கிறோம்? சும்மா எடுக்கவில்லை. அதற்குப் பதிலாக இரண்டு மடங்கு நிலத்தைக் கொடுத்துவிட்டுத்தான் எடுக்கிறோம். அப்படி எடுக்கும்போது—நம்முடைய மாநில அரசே பொறுப்பாக இருந்து அந்த நிலத்தை கொடுத்துவிட்டு நாமே எடுத்துக்கொள்ளவேண் டும் என்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நடப்பாண்டிலே இல்லாவிட்டாலும் தயவு செய்து வரக்கூடிய காலத்திலாவது, இரண்டாவது பகுதி திட்டத் திலாவது (பார்ட் 2 ஸ்கீம்) இந்தத் திட்டத்தை எடுத்து நிறை வேற்றித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**12-50 மணி**

அடுத்து, பல திட்டங்களை காங்கிரஸ் ஆட்சியில் நிறை வேற்றினோம். அதாவது பெரிய பெரிய அணைகளைக் கட்டும் திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள்ளாக, காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றிவிட்டோம். இப்போது வரக்கூடிய அணைகள் எல்லாம் சின்ன சின்ன அணைகள்தான். இந்த சின்ன சின்ன அணைகளைக் கட்டினால் பல ஆயிரம் ஏக்கர் நிலம்தான் பாசனம் பெறமுடியும். ஏனென்றால் பெரிய பெரிய அணைகளை ஏற்கெனவே காங்கிரஸ் அரசு கட்டிவிட்டது. ஆகவே இனிமேல் சிறிய அணைகளைக் கட்டும் சூழ்நிலைதான் இருக்கிறது.

என்னுடைய தொகுதியிலே மாவூர் அணை கட்டப்பட்டது. அது சிறிய அணைதான். அதற்கான செலவு சுமார் 5 இலட்சம் ரூபாய்தான். அந்த அணையைக் கட்டுவதற்கு முன்னால் கண் மாய்க்கு நிறைய தண்ணீர் வந்தது. அணை கட்டிய பிறகு அந்தத் தண்ணீர் எங்கேயோ கீழே சென்று வைகையில் போய் விழுவதாக மக்கள் சொல்கிறார்கள். அதன்பிறகு பள்ளப்பட்டி அருகில் உள்ள புலமாசி அகரம் கண்மாய்க்குத் தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்தோம். ஆனால் அந்த நீர்த் தேக்கத்தில் தண்ணீர் தேங்காத அளவுக்கு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போன்று மஞ்சளாற்றிலிருந்து வருகிற கழிவு நீரைத் தேக்கிவைப்பதற்காக ஆலங்குளம் அணையைக் கட்டினோம். அந்த அணைக்கட்டிற்கு சுமார் 2.75 இலட்சம் ரூபாய்தான் செலவு. அந்தத் திட்டத்தை எப்படி எடுத்தோம் என்றால் அங்கே ஆவரம் பட்டி என்ற ஊர் இருக்கிறது. அது தேவன்மார்கள் இருக்கிற ஊர். அவர்களுடைய தொழிலே வேறுமாதிரியாக இருந்து கொண்டிருக்கிறது. நான் சொல்வது பழைய காலத்தில் நடந்தது. அந்த ஊருக்குச் சென்று ஓ என்று அழுது, அவர்கள் தொழிலை விட்டு திருந்தவேண்டும் என்று சொல்லி ஏற்பாடுகளைச் செய்தோம். அவர்கள் தண்ணீர் வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு ஒரு வாய்க்கால் வெட்டி, தண்ணீர் கொண்டுபோகக் கூடிய அளவுக்குச் செய்தோம். ஆனால் இதுவரையில் அந்தக் கண்மாய்க்குத் தண்ணீர் போய்ச் சேரவில்லை. இப்போதுகூட 17 இலட்சம் ரூபாய் ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்திலிருந்து அதை முடிக்க 'சாங்ஷன்' செய்யப்பட்டது. சாங்ஷன் செய்யப்பட்டு ஆறு மாதங்கள் ஆன பின்னாலும் இன்னும் வேலை நடக்கவில்லை. வேலையை எடுத்துக்கொள்ளவே இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் மனதிலே வைத்து அந்த வேலையைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி ராஜாளிகோட்டை, அது எனது தொகுதியில் இருக்கிறது. அங்கே புள்ளக்கோம்பை அணை சுமார் 2.75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. கட்டிய பிறகு தண்ணீர் வரவில்லை. அந்தத் தண்ணீர் வைகைக்குப் போவ தாக மக்கள் சொல்கிறார்கள். அந்தத் குறையையும் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று தெப்பத்துப்பட்டி என் தொகுதியின் கடைசியில் இருக்கிறது. அங்கே அருகவல்லி ஓடைத் திட்டம் இருக்கிறது. 36 இலட்சத்திற்கு எஸ்டிமேட் போடப்பட்டிருக் கிறது என்று நினைக்கிறேன். அந்த 36 இலட்சத்தில் 32 இலட்சம் செலவு செய்தும் இன்னும் அந்த வேலை சரியாக முடிக்கப்படவில்லை. கரையை பலப்படுத்தவில்லை. வரத்து வாய்க்கால் சீர் செய்யப்படவில்லை. இப்படி இருந்தால் அதைக் கட்டி என்ன பயன்? நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டேன். சரியாக முடிக்கவில்லையே, ஏன் என்று எக்சிகியூட்டிவ் எஞ்சினியரைக் கேட்டபோது இன்னும் 2 இலட்சம் ரூபாய் தேவைப் படுகிறது; அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம்; பணம் வந்துவிட்டால் அந்த வேலையை முடித்துக்கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தேவையான பணத்தை ஒதுக்கி அந்த வேலையை முடித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புல்வெட்டி கண்மாய் இருக்கிறது. அதைச் சொல் லத்தான் நான் இன்று பேசுகிறேன். அந்தக் கண்மாய் செம்பட்டி அருகிலே இருக்கிறது. அங்கே எக்சிகியூட்டிவ் எஞ்சினியராக திரு. டி. ஐ. பால் இருந்தார். அவர் இருந்த 1964-ல் என்று நினைக்கிறேன்.—அவர்களோடு நானும் போய் பார்வையிட்டேன். அப்போது பார்த்தபோது தண்ணீர் நிறைய வந்துகொண்டிருந்தது. அந்தத் தண்ணீர் அமராவதி ஆற்றில் விழுந்து வீணாக கடலிலே போய் விழுந்துவிடுகிறதாம். ஆகவே, அங்கே ஒரு 'செக்டேம்' அணைகட்டி, அதிலே இரு வாய்க்கால் போட்டு, இந்தப்பகுதிக்கு கோட்டூர் பஞ்சாயத்து, சில்க்வார்பட்டி பஞ்சாயத்து, அதைப் போல அந்தப் பகுதிக்கு பச்சைமலைக்கோட்டை பஞ்சாயத்து ஐம்பு துறை கோட்டை பஞ்சாயத்து ஆகிய இடங்களுக்கு பாசனம் கொடுக்க வேண்டும். இந்த ஐம்பு துறை கோட்டை பஞ்சாயத்து நான் இருக்கிற ஊர். இப்போது அங்கெல்லாம் தண்ணீர் இல்லை. நான் ஏற்கெனவே பட்ஜெட் ஜெனரல் விவாதத்தின் போது இதுபற்றி பேசினேன். நிலம் இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. கிணறு இருக்கிறது, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் தண்ணீர்தான் இல்லை. வறுமைக் கோடு, வறுமைக்கோடு என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கி றீர்களே, அந்த வறுமைக்கோட்டிற்குக் கீழே ஒரு கோடு இருக்கிறதா என்பதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு நிலைமையை உருவாக்கிக்கொண்டிருக்கிறீர்கள் என்று அன்றைக்கு நான் சொன்னேன். எனவே, புல்வெட்டிக் கண் மாயிலே இரண்டு கால்வாய் பிரித்து வெட்டி, ஒன்று பச்சை மலைக்கோட்டை, ஐம்புத்துறைக்கோட்டைப் பகுதிக்கும் இன் னொன்று கோட்டூர், சில்க்வார்பட்டி பகுதிக்கும் செல்லக்கூடிய அளவுக்கு பாசன வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று பணி வோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு நம்முடைய சிறுமலை ஓடை இருக்கிறது. அந்தப் பகுதியிலே அதாவது ஊத்துப்பட்டி அருகிலே தண்ணீர் வருகிறது. அந்தத் தண்ணீர் வந்து வயல்வெளிகளையும் தோட்டங்களையும் அடித்துச் சென்று, கிணறுகளையும் அடித்துச்சென்றுவிடுகிறது. அங்கே ஒரு சிறிய 'செக்டேம்' அணை கட்டினால் அந்தத் தண்ணீர் பேய்க்காடு கண்மாய்க்குப் போய்ச் சேரும். அந்த அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12-55 மணி

அதேமாதிரி, தும்மளப்பட்டி என்ற ஒரு இடத்திலே— நிலக்கோட்டைத் தொகுதியில், வத்தலக்குண்டு பிர்க்காவில் போடப்பட்ட ஒரு பெரிய ஓடைத் திட்டம், நீண்ட நாட் களாக நிறைவேற்றப்படவில்லை. ஓணான் ஊத்து என்ற ஒரு திட்டம் 30 ஆண்டு காலமாக, கீழே போக மேலே வர என்று இருந்து கொண்டிருக்கிறது. அது என்னுடைய தொகுதியைச் சார்ந்தது. அதையும் பார்த்து நீங்கள் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, நான் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். வெங்கடாஸ்திரிகோட்டை அருகில் இரண்டு பாலங்களுக்கு 30 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள் கிறேன். பாலங்கள் கட்டும்போது, அதை நீங்கள் டிபார்ட் மெண்டிலிருந்து கட்டவேண்டும். ஏற்கெனவே, திரு. கக்கன் அவர்கள், பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது, ராம நாயக்கன்பட்டி, வெங்கடாஸ்திரிகோட்டை ஆகிய வற்றை இணைத்து— நம்முடைய மாண்புமிகு அமைச்சர், என் னுடைய ஜில்லாவைச் சேர்ந்தவர் திரு. முத்துராமலிங்கம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் வைகையிலே பாலம் கட்டுவதற்கு அன்றைக்கு 2-3/4 லட்சத்திற்கு எஸ்டிமேட் போட்டோம். அது இதுவரையில் செய்யப்படாமல் இன் றைக்கு ஒரு கோடி ரூபாயை எட்டி, உங்களிடத்திலே வந்திருக் கிறது. எனவே, அதற்குப் 'பிரையாரிட்டி' கொடுத்து, செய்வோமானால், அங்கே கிட்டத்தட்ட 30 ஆயிரம் 40 ஆயிரம் மக்கள் பயனடையக் கூடிய அளவிலே, அங்கே உற்பத்தியாகக் கூடிய பொருட்களை, ஆண்டிப்பட்டி வழியாக தேனிக்கு செல்லக்கூடிய வகையிலேயும், அவர்கள் வாழ்வில் ஒரு முன்னுக்கு வருவதற்கான ஒரு நிலை உருவாகும்.

பேரணைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கூட அங்கே ஒரு சுற்றுலா மையம் ஆரம்பிக்கலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள். அந்த இடத்திலே கட்டப்பட்ட ரெகுலேட்டர் — அங்கே கட்டப்பட்ட பாலம் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டியது. இப்போது அது 'டிலாபிடேட்டட் கன்டிஷன்' ஆகி ஆட்டம் கண்டிருக்கிறது. அது பூட்டியே வைக்கப்பட்டிருக் கிறது. ஆகவே, அதற்கு மாற்று இடம் ஒன்று பார்த்து, அந்தப் பாலத்தையும், கட்டி ரெகுலேட்டரையும் வைப்போ மேயானால், பாம்பே, பெங்களூர், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளிலிருந்து வரக்கூடிய மக்கள் கன்னியாகுமரி வரையிலும், செல்லக்கூடிய அளவிற்கு ரோட்டையும், பாலத் தையும் விரிவுபடுத்தலாம். அதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதிலே வைத்து, நிச்சயமாக செய்வார்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால், அவர்கள் 'அக்கா' என்று அழைக்கக்கூடிய அக்காள் சொல்கிறேன். அந்த அக்காவினுடைய கோரிக்கையை முடித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், ரோடுகள் மிகவும் மோச மாக இருக்கின்றன. பெண்கள் பிரயாணம் செய்கிறார்கள். நீங்கள் ரோடுகளை நேஷனலைஸ் பண்ணி, தேசிய நெடுஞ் சாலையோடு சேர்த்திருக்கிறீர்கள். மதுரை-தேனி, தேனி- கம்பம், கம்பம்-கம்பமெட்டு ஆகியவற்றுக்கு தேசிய நெடுஞ்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

சாலையாக அறிவித்து இருப்பதை நான் வரவேற்கிறேன்.
அதே நேரத்தில், திண்டுக்கல்-தேனி என்று அந்தப்பகுதி
70, 75 கிலோ மீட்டர் இருக்குமென்று நினைக்கிறேன்.
அதையும் தேசிய நெடுஞ்சாலையோடு சேர்த்துவிடுவீர்களே
யானால், அந்த ரோடு நன்றாக இருக்கும். பஸ் ரூட்
ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அது மிகவும்
மோசமாக இருக்கிறது. அதிலே, கர்ப்ப ஸ்திரி பெண்கள்
பிரயாணம் செய்ய முடிவதில்லை. பஸ்கள் தூக்கி தூக்கி
அடிக்கின்றன. இது எப்படி தெரியும் என்று சிலபேர் நினைக்
கலாம். நான் டவுன் பஸ் எம்.எல்.ஏ. நான் தினமும்
டவுன் பஸ்சில்தான் பிரயாணம் செய்யக் கூடியவள். 30
வருடங்களாக எம்.எல்.ஏ.-வாக இருந்தாலும் கூட, இன்
றைக்கும் நான் டவுன் பஸ்சிலேதான் பிரயாணம் செய்து
கொண்டிருக்கிறேன். ஆகையால் டவுன் பஸ் எம்.எல்.ஏ.
சொல்கிறேன். எங்கெல்லாம் பஸ் போகிறதோ, அந்த
ரோடுகள் தற்போது மேடுபள்ளமாக இருக்கின்றன. அதற்கு
ஒதுக்கி இருக்கிற பணம் போதாது. இன்னும் கொஞ்சம்
பணத்தை ஒதுக்கி, அதற்கு ஒரு திட்டம் போட்டு, அதை
விரைவிலே ஒழுங்கு படுத்தக் கூடிய நிலையை உருவாக்க
வேண்டுமென்று கேட்டு கொண்டு முடிக்கின்றேன். (மணி
யடிக்கப் பெற்றது) 15 நிமிடம் சொன்னீர்கள்.—

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரியாக 16 மணித்
துளிகள் ஆகியிருக்கின்றன. திரு. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. வே. நா. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, முதற்கண் என்னுடைய நன்றியை
உங்களுக்கு உரித்தாக்குகின்றேன். பாசனம் மற்றும் பொதுப்
பணித்துறையினுடைய மானியக் கோரிக்கை மீது, என்னுடைய
உரையைத் துவக்குகின்ற நேரத்தில், தமிழகத்தினுடைய
பாசனத் துறை அமைச்சரைப் போல, தமிழகத்திலே நீர்
வளம், வளமாக இல்லை என்பதை முதற்கண் நான்
தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நாட்டினுடைய முன்னேற்
றத்திற்கு நீர் வளம் இன்றியமையாதது என்று உங்களுடைய
கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். தமிழகத்
தைப் பொறுத்த வரையில், நீர் வளத்தைப் பெருக்குகின்ற
இரண்டு மிகப்பெரிய திட்டங்கள். இந்த நாட்டிலே பல
ஆண்டு காலமாக பேசப்படுகின்ற திட்டங்களாகவே இருந்து
கொண்டிருக்கின்றன.

கங்கை-காவேரி திட்டத்தைப் பற்றி பாபு ஜகஜீவன்ராம்
அவர்கள் குறிப்பிடுகின்றபோது, இந்தத் திட்டம் நம்முடைய
காலத்திலே நடக்காது; நம்முடைய மகன் காலத்திலேயும்
நடக்காது; போனுக்குப் பேரன் காலத்திலே வேண்டு
மானால் நடக்கலாம் என்று சொன்னார். அந்தக் குறிப்பைப்



[திரு. வே. நா. சுப்பிரமணியன்]

பற்றி இந்த அவையிலே ஒரு முறை பேசப்பட்ட
போது, ஒரு உறுப்பினர், இந்தத் திட்டத்திற்கு முற்றுப்
புள்ளி வைத்திருக்கிறீர்களா, அல்லது, கேள்விக் குறியா என்று
கேட்டபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் அதற்கு பதிலளிக்கின்ற போது, ஆச்சரியக் குறி
என்று சொன்னார்கள். ஆகவே, ஆச்சரியக் குறியாக இருக்
கின்ற அந்தத் திட்டத்திலே, தமிழக அரசுக்கு நீர்வளம்
பெறுகின்ற அளவுக்கு குறுகிய காலத்திலே, சமீப காலங்
களிலே நடைபெறாத காரணத்தினால், அடுத்து இருக்கின்ற
மேற்கு நோக்கிப் பாய்கின்ற ஆறுகளினுடைய திசைகளை
யெல்லாம் திருப்பிவிட்டு, தமிழகத்தினுடைய நீர்வளத்தைப்
பெருக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக இங்கே பேசப்
பட்டு வருகிறது.

13-00 மணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் ஒப்பு
தலுடன் அவையின் அலுவல் நேரம் 8 மணித் துளிகள்
நீட்டிக்கப்படுகின்றது.

**திரு. வே. நா. சுப்பிரமணியன் :** அப்போது இருந்த சீப்
இன்ஜினியர்கள் எல்லாம் மிக அழகாகச் சொன்னார்கள்.
கேரளாவில் சவுத் ஈஸ்ட் மான்சூன் காலத்தில் மட்டும் ஏறத்
தாழ 2500 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கிறது என்றும்
ஆனால் கேரளாவுக்கு சுமார் 800 டி.எம்.சி. தண்ணீர் போது
மானது என்றும் மீதியுள்ள தண்ணீர் எல்லாம்
வீணாகக் கடலில் கலக்கிறது என்றும் அன்றையதினம் இருந்த
ஆய்வாளர்கள் எல்லாம் அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆனால்
அந்தத் தண்ணீரைத் தமிழகத்திற்குத் திருப்பி விடுகிற
பணியை இதுவரையில் யாரும் செய்யவில்லை என்பதைச்
சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே இந்த அளவிற்குத் தமிழகத்தினுடைய நீர்
வளத்தைப் பெருக்குவதற்கு எந்தப் பெரிய திட்டமும் இல்
லாத காரணத்தால் கிடைக்கிற அந்த நீர் வளத்தை
வைத்து தமிழகத்திலே பாசனத்தைப் பெருக்குவதற்காக
இந்தத் திட்டத்தை அரசு ஆராயவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன். இதிலே ஒன்றைச் சொன்னார்கள்.
The National policy for water must necessarily aim at the optimum
use of country's renewable fresh water resources represented by the
annual precipitation in the form of snow and rain.
அந்த அடிப்படையில் சொல்கிறபோது தமிழகத்தில் 70 சத
வீத விவசாய நிலங்கள் 'மீடியம் அல்லது லோ ரெய்ன்ஃபால்'
ஏரியாவிலேதான் இருக்கின்ற காரணத்தால் நாம் எந்த

[திரு. வே. நா. சுப்பிரமணியன்]

அளவுக்கு இருக்கின்ற தண்ணீரை வைத்து விவசாயத்தைப்
பெருக்கவேண்டும் என்று உங்களுடைய திட்டத்திலே குறிப்
பிடவேண்டும். அப்படிக் குறிப்பிடுகிற போது ஒன்றை
மட்டும் நீங்கள் கவனத்திலே கொள்ளவேண்டும். 'எஃபிசி
யன்சி இன் வாட்டர் மேனேஜ்மெண்ட்' என்று சொல்வார்கள்.
குறைவான தண்ணீர் இருக்கின்ற காரணத்தால் அந்தத்
தண்ணீரை எந்த அளவுக்குப் பயன்படுத்தினால் அதிகமான
விவசாய நிலங்களுக்குப் பயன்படுத்த முடியும் என்ற அடிப்
படையில்தான் இந்தத் திட்டம் இருக்கவேண்டும். வல்லு
நர்கள் நெல் பயிரிடுவதற்கு மட்டும் ஏறத்தாழ 54.2 சத
வீதம் தண்ணீர் வீணாகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.
அதுபோல கரும்பு சாகுபடிக்கு 48.3 சதவீதம் தண்ணீர்
வீணாகிறது என்று புள்ளிவிவரங்களை எல்லாம் கொடுத்திருக்
கிறார்கள். எனவே இருக்கின்ற தண்ணீரை வைத்து 100-க்கு
100 சதவீதம் பாசன வசதி ஏற்படுகிற வகையில் அந்த
'வாட்டர் மேனேஜ்மெண்ட்' இருக்கவேண்டும் என்று நான்
இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்வார்கள். அணையிலிருந்து அல்லது
வாய்க்காலிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விழுகிறபோது
'அட் ஸ்பெசிஃபிக் இன்டர்வல்ஸ் அண்ட் அட் ஸ்பெசிஃபிக்
க்வான்டிட்டீஸ்' என்று சொல்வார்கள். அந்த அடிப்படை
யில் எவ்வளவு தேவை, எப்போது தேவை என்பதை எல்
லாம் மனதில் கொண்டு அந்த அளவுக்குத் தண்ணீர் விட
வேண்டும். ஆனால் இப்போது நமது மாநிலத்தில் பழக்கப்
பட்டிருக்கிற முறைகள் எல்லாம் 'ஓல்ட் மெத்தட்ஸ்' என்று
சொல்லக்கூடியவைதான். 'ஸ்பெசிஃபிக் இன்டர்வல்ஸ்,
ஸ்பெசிஃபிக் க்வான்டிட்டீஸ்' என்ற அளவில் இல்லாமல்
Old Traditional System of rotating releases is out of date
என்ற அளவில்தான் இருக்கின்றன. அதனால் ஒரு குறிப்பிட்ட
காலத்தில் தண்ணீர் விடுகிறபோது எவ்வளவு தேவை ஒரு
நாளைக்கு என்று அந்த அடிப்படையில் விடாமல் இருக்
கிறார்கள். ஆகவே அதை அமைச்சர் அவர்கள் கவனத்தில்
கொண்டு செயல்படவேண்டும். நீர்ப்பாசனத்தைப் பொறுத்த
வரையில் இன்னொன்றும் சொல்வார்கள். 'மேஜர், மீடியம்,
மைனர் இரிகேஷன் சிஸ்டம்' என்று சொல்வார்கள். நம்
முடைய மாநிலத்தில் 'மேஜர் இரிகேஷன் சிஸ்டத்'தை
டெவலப் பண்ணுவதற்கு 'சான்ஸ்' இல்லை என்றும்
'மீடியம் இரிகேஷன் சிஸ்டம்' ஓரளவுக்கு பூர்த்தி ஆகி
விட்டது என்ற சூழ்நிலையில் மைனர் இரிகேஷன் சிஸ்டத்
தில்தான் நாம் நம்முடைய நீர்ப்பாசனத்தைப் பெருக்கிக்
கொள்ள வேண்டி இருக்கிறது.

'மைனர் இரிகேஷன் சிஸ்டம்' என்று சொன்னாலே
கிணற்றுப் பாசனம்தான். எனவே அந்த வகையில் நாம்
எந்த அளவுக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்தி விவசாயத்





[திரு. வே. நா. சுப்பிரமணியன்]

தைப் பெருக்க முடியுமோ அந்த அளவுக்கு பெருக்குவதில்
நாம் அக்கறை கொள்ளவேண்டும். கிணற்றுப் பாசனத்தைப்
பெருக்கவேண்டும் என்று சொல்கிறபோது உங்களுக்கெல்லாம்
நன்றாகத் தெரியும். இந்த 'பவர் கனெக்ஷன்' என்பதில்
ஏழை விவசாயிகள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள் என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். ஏழை
விவசாயிகளுக்கு எந்த நேரத்தில் மின்சார சப்ளை இருக்
கிறது, எவ்வளவு நாட்களுக்கு இருக்கிறது என்ற உத்தர
வாதம் இல்லாமல் ஒரு நாளைக்குக் காலையில் மின்சாரம்
வருகிறது; அடுத்த நாள் மாலையில் வருகிறது. பலமுறை
இரவில் வருகிறது. அந்த நிலைமையை மாற்றவேண்டும்.
மேலும் விவசாயிகள் அத்தனைபேரும் பம்ப்செட் கனெக்ஷன்
வேண்டும் என்று கேட்டால் தவறாமல் அதை அவர்களுக்குக்
கொடுத்து 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கி விவசாயி
களுக்கு நன்மை செய்வதற்கான திட்டத்தைத் தீட்ட
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வாட்டர் மேனேஜ்மெண்ட் என்று சொல்கிறபோது
லைனிங் ஆஃப் சேனல்ஸ் என்று சொல்கிற அந்த அமைப்பை
உருவாக்கவேண்டும். இப்போது இருக்கின்ற பாசனத்
திற்கான தண்ணீரைப் பொறுத்த வரையில் அதாவது
40 per cent of the total irrigated water is completely wasted
என்று சொல்கிறார்கள். 'லைனிங் ஆஃப் சேனல்ஸ்' செய்
தால் இன்னும் 40 சதவீதம் அதிகமான தண்ணீரைப் பயன்
படுத்தி நீர்ப்பாசன வசதியைப் பெருக்க முடியும் என்று
வல்லுநர்கள் சொல்கிறார்கள். அதையும் நீங்கள் தயவுசெய்து
மனதில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

13-05 மணி

இன்னும் கூட ஒன்றை பாசன வசதிகள் பற்றி சொல்ல
விரும்புகிறேன். குஜராத்தில் வாட்டர் கோவாபரேடிவ்
சொசைட்டி என்று வைத்து, அங்கே கிடைக்கின்ற தண்ணீரை
எப்படி சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பதை ஆய்ந்
தறிந்து பயன்படுத்துகிறார்கள். அந்தத் தண்ணீரை பயன்
படுத்தும் விவசாயிகள் எல்லாம் சேர்ந்து விவசாயத்தில்
எவ்வளவு முன்னேற்றம் காணவேண்டுமோ அதற்காக
அவர்கள் அந்த வாட்டர் கோவாபரேடிவ் சொசைட்டியை
வைத்திருக்கிறார்கள். அதைப்போல தமிழகத்திலும் நீங்கள்
கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்ததாக, கிரவுண்ட் வாட்டர் பற்றி சொல்ல
விரும்புகிறேன். The ground water accounts for more than 95% of
all the liquid fresh water available on earth at any given.

Moment என்று சொல்கிறார்கள். ஆகவே அந்த நிலத்தடி நீரைப் பொறுத்த வரையில், நிலத்தடி நீரைக் காப்பாற்றுகிற வகையில் மைனர் இரிகேஷனை மாற்றியமைத்து வெற்றி பெறமுடியும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, டாங்க்ஸ், அதைப்பற்றிச் சொல்லும் போது. உண்மையிலேயே தமிழகத்தில் செங்கை-அண்ணா, வடாற்காடு, தென் ஆற்காடு, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் எல்லாம் இந்த டாங்குகளை நம்பியே விவ சாயம் நடந்து கொண்டிருக்கிறது. Tanks can play an important role in preventing soil erosion and recharging of soil moisture and sub soil and ground water storage.

இன்னொன்றைக் கூட இன்று காலையில் பத்திரிகை யில் படித்தேன். மத்திய அமைச்சர் திரு. உன்னிகிருஷ்ணன் அவர்கள் திருநெல்வேலியில் பேசும்போது, "திருவனந்தபுரத் திற்கும் காசர்கோடுக்கும் இடையில் 'இன்லாண்டு வாட்டர் வே' வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நாங்கள் அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறோம். தமிழக அரசும் இன்லாண்டு வாட்டர் வே, நாகர்கோயில் வரை கேட்பார்களானால், அவர்களுக்கும் நாங்கள் கொடுக்க சம்மதமாக இருக்கிறோம்" என்று மத்திய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். (மணியடிக்கப் பெற்றது) அந்த இன்லாண்டு வாட்டர் வே வந்தால் கூட, நிலத்தடி நீருக்கு உகந்ததாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான பெருந்துறைக்கு, கோவை மாவட்டத்தில் இருக்கிற பவானி நீரை, அவினாசி மற்றும் அன்னூர் தாலூக்காக்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக அங்கேயிருக்கிற குளம் குட்டைகளைப் பயன்படுத்துவதற்காக, ஒரு திட்டம் ஆய்வில் இருப்பதாக இந்தக் கொள்கைக் குறிப்பில் இருக்கிறது. என்னுடைய மாவட்ட அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களுக்கும், கோவை மாவட்ட அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். என்னுடைய தொகுதியான பெருந்துறை தாலூக்காவில், எந்த அளவுக்கு வறட்சி நிலவுகிறது என்று தெரியும். அப்படிப்பட்ட செயற்குறிப்பு இருக்குமானால், தயவுசெய்து பெருந்துறை தாலூக்காவுக்கு மட்டும் அந்தத் திட்டம் வருகிற அளவுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் ஏற் பாடு செய்தால், மாண்புமிகு அமைச்சர்களை நானே என் னுடைய தொகுதிக்கு அழைத்துச் சென்று தொகுதி மக்கள் சார்பாக பாராட்டுக் கூட்டம் நடத்தத் தயாராக இருக்கி கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக பொதுப்பணித் துறை பணியாளர்கள் குறித்து இந்த கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். பொதுப்பணியில் பணியாளர்கள் 1988-89-ல் மொத்தம்



இருந்தவர்கள். டெக்னிகல் மற்றும் டெக்னிகல் அல்லாத வர்கள் என்று, மொத்தம் 24,330 பேர் இருந்தார்கள். இது 1988-89-ல். ஆனால் 1989-90 அது 12,340 ஆகக் குறைந்திருக் கிறது. 50 சதவீதம் ஆட்குறைப்பு செய்திருக்கிறீர்கள். இந்த அளவுக்கு ஆட்குறைப்பு செய்தால், பொதுப்பணித் துறை எப்படி வளர்ந்து மேம்பாடு அடைய முடியும் என் பதைக் கவனிக்கவேண்டும். அதே நேரத்தில் சென்ற ஆண்டு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, என்.எம்.ஆர். தொழிலாளர்கள் பத்தாண்டுகள் வேலை செய்திருந்தால் அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். 50 சதவீதம் நிரந்தரம் ஆக்கப் படாமல் இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏற்கெனவே இருந்த 600-ல் இப்போது 304 பேர்தான் இருக்கிறார்கள். இதுவரை அவர்கள் நிரந்தரமாக்கப் படாமல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கவேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தமிழகத்தில் இருக்கிற அரசு அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இருப்பதை மாற்றி, சொந்தக் கட்டிடங்களில் இருக்க வகை செய்வோம் என்று சொன் னார்கள். அதை அரசின் கொள்கையாகவும் சொன்னார்கள். அந்த அடிப்படையில் 23 ஆண்டுகளாகியும் கூட இன்னும் பல அரசு அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அதற்கு ஒரு காலக் கெடு வைத்து இத்தனை ஆண்டுக்குள் பொதுப்பணித்துறை மூலம் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டு அரசு அலுவலகங்கள் அவைகவில் இயங்கும் என்ற குறிப்பாணையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் இன்றைய காலை அலுவலல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 16-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 13-09 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

16-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் மீண்டும் 16-00 மணியள வில் பேரவை கூடியது.

திரு. த. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம், நெடுஞ்சாலை துறைகளின் மீது என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன். தமிழக அரசு, மாண்புமிகு கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்கு பின்னால் தமிழகம் முழுவதும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மாவட்டத்தினுடைய தலைநகரங்கள் முழுவதும், ஆங்காங்கு நீர்ப்பாசன கருத்தரங்குகளை நிறுவி, அந்தக் கருத்தரங்குகளிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், விவசாய சங்கத் தலைவர்கள், அதிகாரப் பெருமக்கள், இவர்களை எல்லாம் கலந்து, கீழ்மட்டத்தில் என்னென்ன பிரச்சினைகள், நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில் இருக்கின்றன என்று ஆய்வு செய்து, தமிழக அரசை வலிவு பெற வைக்கிற வறையில் இந்த நீர்ப்பாசனத் துறையில் ஒரு வாய்ப்பினை உருவாக்கி தந்த தமிழக அரசை, மாண்புமிகு அமைச்சர் பெருமகனாரை மக்கள் எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

தமிழகத்தில் இருக்கின்ற எல்லா மாவட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, கொள்கைக் குறிப்பை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் சரி அல்லது வட ஆற்காடு மாவட்டம் என்று எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது சம்புவராயர் மாவட்டம் என்று எடுத்துக் கொண்டாலும் சரி அங்கே ஒன்றே ஒன்று, கண்ணே கண்ணு என்று இருக்கின்ற அணை சாத்தனூர் அணை ஆகும். அந்த சாத்தனூர் அணைப்பகுதியில் அமைச்சர் பெருமகனார் அவர்கள் எங்கள் மாவட்டத்தின் செல்லப்பிள்ளையாக இருந்தும் அங்கே ஒரே ஒரு அணை மட்டும்தானா இருக்க வேண்டும்? அங்கே கமண்டகம் ஆற்றின் குறுக்கே, செண்பக அணை கட்டப்பட வேண்டுமென்று எத்தனையோ முறை அமைச்சர் பெருமகனாரை சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் பெருமகனார் அவர்கள் இன்றைக்கு பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற காலக் கட்டத்தில் இந்த செண்பக அணை அங்கே வந்தாக வேண்டுமென்று உங்களை நான் கருணையோடு, பரிவோடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, வட ஆற்காடு - அம்பேத்கார் மாவட்டத்தில் செய்யாற்றின் குறுக்கே கொப்பளத்தம்மன் அணை கட்டப்பட வேண்டுமென்று சொல்லி, ஆண்டுகள் 13, 15 ஆகிறது. குறிப்பாக, [redacted] நம்முடைய தானைத் தலைவர் மாண்புமிகு கலைஞர் [redacted] அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அங்குள்ள ஆற்றின் குறுக்கே கொப்பளத்தம்மன் அணை கட்ட வேண்டுமென்று சொல்லி செய்திகளை வெளியிட்டிருந்தும்



இன்னும் அந்த அணை கட்டப்படாத காரணத்தால் இந்த கொப்பளத்தம்மன் அணையை உடனடியாக கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்களை என்னுடைய தொகுதியில், சாத்தனூர் அணைக்கு ஒரு முறை அழைத்துச் சென்றேன். அப்போது சாத்தனூர் அணையைப் பார்வையிட அவர்கள் வந்திருந்தார்கள். அதிகாரி பெருமக்கள் எல்லாம் சாத்தனூர் அணைப் பூங்காவை சுற்றிக் காட்ட முற்பட்டார்கள். அப்போது அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நடுப்பகல் மத்தியானம் 12 மணி. நல்ல வெயில், அந்த நேரத்திலே அவர் 'நான் இங்கே பூங்காவைப் பார்த்து, பூஞ்சோலைகளைப் பார்த்து இன்னும் அனுபவிக்க வேண்டுமென்று வந்தவர் அல்ல, கலைஞருடைய கரத்தை வலுப்படுத்தும் வகையில் நீங்கள் வேலை நடக்கும் இடத்திற்கு என்னை அழைத்துச் செல்ல வேண்டும்' என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்னதன்பேரில், பகல் 12 மணியிலிருந்து அந்த வெயிலில் பிற்பகல் 3 மணிவரை வாணாபுரம், பெருந்துறை, மற்றும் கரும்டஊர் போன்ற பகுதிகளுக்கு எல்லாம் அவர்களை அழைத்துச் சென்றோம். அங்கு ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின்கீழ் எவ்வாறு வேலைகள் நடைபெறுகின்றன என்பதைப் பார்வையிட்டது இன்றைக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன்.

சாத்தனூரில் வலதுபுற கால்வாய் என்றும் இடதுபுற கால்வாய் என்று இரண்டு இருக்கின்றன. வலதுபுற கால்வாய்க்கு மட்டும்தான் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். 20 ஆண்டுகள் ஆகியும், விலைவாசிகள் உயர்ந்து வருகிற நிலையில், கூலிகள் உயர்ந்துவருகிற நிலையில் இன்றைக்கும் அதற்காக ஒதுக்கப்படுகிற தொகை, 20 ஆண்டுகளாக ஒரே தொகையாக இருக்கிற காரணத்தால் வலதுபுற கால்வாயை புதிதாக மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்கு பிறகு உருவாக்கியும் கூட இன்னும் சாதாரண அணை பராமரிப்பதற்காக என்று ஒதுக்கும் தொகை கூட உயர்த்தப்படவில்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூட தெரியும். ஆகவே, 'அருள்கூர்ந்து, தயவுகூர்ந்து, கருணையோடு சாத்தனூரில் இருக்கின்ற நீர்த்தேக்கங்களிலிருந்து விவசாயிகளுக்கு தண்ணீர் சென்று அவர்கள் பயன் அடைய வேண்டுமென்று சொன்னால் வலதுபுற கால்வாய் மற்றும் இடதுபுற கால்வாய் ஆகிய இரண்டு கால்வாய்களையும் தூர் எடுக்கின்ற வகையில் அரசு அதிகமாக தொகை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் இந்தக் கொள்கைக் குறிப்பில் சாத்தனூர் உயர் மட்டக் கால்வாய் பற்றி அறிவித்திருக்கிறீர்கள். தயவு செய்து உயர்மட்டக் கால்வாயை அமைக்கின்றபோது வலது புற கால்வாய் பகுதி விவசாயிகள் மற்றும் இடது புற கால் வாய் பகுதி விவசாயிகள் பாதிக்காத வகையில் அந்தக் கால்வாயை அமைக்க வேண்டும். விவசாயிகள் பயன் அடைந்த பிறகு அந்தத் தண்ணீர் சமுத்திரம் அல்லது ஏரிக்கு செல்ல வேண்டும். இன்றைக்கு சாத்தனூர் அணை என்ற பெயர் பொதுவாக இருக்கிறதே தவிர, எந்தவிதமான பயனும் அதனால் இல்லாத காரணத்தால் புதிதாக அமைக்கின்ற உயர்மட்டக் கால்வாய் மூலமாக சாத்தனூர், கொடுந்தப்பட்டு, மேல்கருப்பூர், தகடாப்பட்டு, கீழ்வைக்கம் பாடி, கீழ்ச்சிறுபாக்கம், கீழ்ச்செட்டிப்பட்டு, மேல்செட்டிப் பட்டு ஆகிய கிராமங்ளுக்கு எல்லாம் தண்ணீர் கொடுத்து விட்ட பிறகுதான் சமுத்திரத்திற்கு அந்தத் தண்ணீர் சென் றடைய வேண்டுமென்ற விண்ணப்பத்தை நான் இங்கே வைக்க ஆசைப்படுகிறேன்.

16-05 மணி

அதேபோன்று எனது தொகுதியில் நாவல்கொல்லை என்ற கிராமம் இருக்கிறது. அங்கே ஏறத்தாழ 27 இலட்சம் ரூபாயில் ஒரு ஏரி கட்டுவதற்கு மதிப்பீடு எல்லாம் தயார் செய்யப்பட்டு, கிடப்பிலே கிடக்கிறது. அமைச்சரவர்கள் இதைப் பரிசீலனை செய்து, நாவல்கொல்லையில் ஏரி ஒன்று கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து வாழவெச்சனூர், பெருந்துறைப்பட்டு, இடக்கல் கிராமங் களுக்கு புதிதாக ஏரி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை ஒன்றியத்தில் துரிஞ்சலாறு தண்டரை அணைக்கட்டிலிருந்து நல்லூர், திரிவலசை, அண்டம்பள்ளம் செல்லும் வாய்க்கால்கள் ஆழப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்லூர் ஏரி கோடியிலே ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கு. வாழவெட்டி-துரிஞ்சலாறு அணைக்கட்டிலிருந்து காடக மான்கொரிக்கல் கால்வாயை ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கலசப்பாக்கம் தொகுதியில் மேல்சோழங்குப்பம் என்ற இடத்திலே ஒரு அணையை நிறுவ வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, நெடுஞ் சாலைத் துறை.....



**திரு. வே. தங்கபாண்டியன் :** பேரவைத் தலைவரவர்களே, கலசப்பாக்கம் தொகுதி மாண்புமிகு அமைச்சரவர்களுடைய தொகுதி. காட்பாடி பக்கத்திலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பக்கத்திலே இருக்கும் திரு திருவேங்கடத்திற்கு இப்படி ஒரு பாதகம் விளைவிக்கக் கூடாது.

**திரு. வே. தங்கபாண்டியன் :** மாண்புமிகு உறுப்பினர வர்கள் திருப்தி படுவதற்காக, எல்லாமே வட ஆற்காடு மாவட்டத்திலே அமைக்க வேண்டுமென்று விரும்புகிறீர் களா ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** அவைக்கு தவறான தகவல் தரக்கூடாது. கலசப்பாக்கம் என் தொகுதியல்ல.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை நான் சொல்லி விட்டேன். வட ஆற்காடு பற்றிச் சொல்கிறார். அதைப் பற்றிக் கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** அதுவும் தப்பு. உறுப் பினர் அவர்கள் சம்புவராயர் மாவட்டம், நான் வட ஆற் காடு-ஆம்பேத்கார் மாவட்டம். உறுப்பினர் சொல்வது அவைக்குத் தவறான தகவல்கள். பிரிவ்லெஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டியவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிரித்து விட்டதால் தப் பித்துக் கொள்ளலாமென்று பார்க்கிறீர்களா ?

**திரு. த. பொன்முடி :** அடுத்து நெடுஞ்சாலைத் துறை. 13 ஆண்டுக்காலமாக நெடுஞ்சாலைத் துறை மிகவும் முடக்கி வைக்கப்பட்டிருந்தது. கழக அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால், குறிப்பாக நம்முடைய அமைச்சரவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் சாலைகளிலே செல்லுகின்றபோது போதுதான் எங்கே பார்த்தாலும் கேங் கூலிகள் இருப்பது இப் எங்களுக்குத் தெரிகிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட, தொகைகள் 13 ஆண்டுக்காலமாக எப்படி செலவு செய் தார்கள், என்ன செலவு செய்தார்கள் என்றே தெரியாது. அதிகாரிகளை விசாரித்துப் பார்த்தால், மாதத்தின் இறுதி யில் 2 நாட்கள், 3 நாட்கள் முன்னால் திடீரென்று சாலை களிலே ஜல்லி கொட்டுவதாகவும், உடனடியாக அதை.

மெஷர்மெண்ட் எடுப்பதாகவும், உடனே அவை காலியாகி விடுவதாகவும் செய்திகள் எங்களுக்குத் தெரிந்தன. ஆனால் இப்போது அதற்காக ஒதுக்கப்படும் தொகையிலிருந்து, தமிழகம் முழுவதும் எங்கு பார்த்தாலும் பள்ளமாக உள்ள சாலைகளை எல்லாம் பராமரிக்கும் நிலை உருவாகியிருக் கிறது. இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களை ஒன்று கேட்டுக்கொள்வேன். சாலைகளைப் பராமரிக்க கேங் கூலிகள் இருக்கிறார்கள். அவர்கள் ரிடையர் ஆகி, மீண்டும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். காலியிடங்கள் தமிழகத் தில் நிறைய இருக்கின்றன. இந்தக் காலியிடங்களில் இவர்களை மீண்டும் பணியில் அமர்த்தி, சாலைகளைப் பரா மரிக்கும் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கொள்கைக் குறிப்பைப் பார்க்கும்போது சாலை களின் இரு மருங்கிலும் மரங்களை அதிகமான அளவுக்கு நடுவதற்கு 52.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சாலை ஓரங்களில் நிலங்களை ஆக்கிரமித்துள்ள விவசாயிகள் அந்த மரங்களை நட்ட உடனே, எடுத்து விடுகிறார்கள். எனவே இதிலே அரசாங்கம் கண்ணும் கருத்து மாக இருந்து, செலவிடும் தொகை பொருளாதாரத்தை வளர்க்க வேண்டுமென்ற காரணத்தால், தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடந்த 13 ஆண்டுக்காலமாக சாலைகள் சரியாகப் பராமரிக்கப்படாமல், பழுதுபட்ட நிலையில், வண்டிகள் செல்ல முடியாமல், தொகுதிகளில் சுற்றுப் பயணம் செய்ய முடியாமல் இருக்கிறது. மக்கள் நலனையே தங்கள் நலனாகக் கருதும் இந்த அரசு, மக்களுக்காக வாழ்கிற இந்த அரசு, மக்கள் பணியே தங்கள் பணி என்று கருதும் இந்த அரசு, குறிப்பாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் பணியில் அதிக நாட்டம் செலுத்துகின்ற காரணத்தால், கீழ்க்கண்ட சாலைகளை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை ஒன்றியத்தில்......

16-10 மணி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வாக்கியத்தை முடித்து விடலாம்.

திரு. த. பொன்முடி : தண்டரை-நாரையூர், தண்டரை யிலிருந்து மதுராம்பட்டு, வெரையூரிலிருந்து தண்டரை. வள்ளிநகரத்திலிருந்து தேவனூர், காட்டுகோயிலிருந்தும் விருது பூண்டியிலிருந்து கண்டியாங்குப்பம், திருவண்ணாமலையிலிருந்து பண்டிதபட்டு ஆகிய சாலைகள் புதிதாக அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பட்டியலை அமைச்சரிடம் கொடுக்கவும், வாக்கியத்தை முடித்து விடலாம்.



திரு. டி. பொன்முடி : இத்தகைய சாலைகள் எல்லாம் அமைக்க இருக்கிற காரணத்தால நீங்கள் அருள்கூர்ந்து இந்தப் பொறுப்பு ஏற்று இருக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில் இந்த நிலையில் இந்த வேலையைச் செய்வோம் என்ற அளவில், செண்பகத்தை மறந்துவிடாதீர்கள் ; குப்பநத்தத்தை மறந்து விடாதீர்கள் ; சாத்தனூர் அணைக்கு (மணி அடிக்கப்பெற்றது) நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கலைஞர் கரத்தை வலுப்படுத்த மக்கள் தயாராக இருக்கிறார்கள் ; இந்தப் பணிகளைச் செய்ய அமைச்சர் பெருமகனார் தயாராக இருக்க வேண்டுமென்று அன்பு வேண்டுகோள் விடுத்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசினுடைய சிறப்பு, பொதுப் பணித்துறையில் அடங்கி இருக்கின்ற நீர்ப்பாசனம் மற்றும் நெடுஞ்சாலைத் துறையினுடைய சிறப்பான பணிகளைப் பொறுத்து இருக்கின்ற காரணத்தினால், பொதுப்பணித் துறையின் பணிகள் ஓங்குமானால் இந்த மாநில அரசினுடைய புகழும் ஓங்கும் என்ற நிலை இருக்கின் காரணத்தினால், இன்றைய தமிழக முதல்வர் முதன் முதலாக பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியில் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த நேரத்திலே பம்பரம் போல் சுழன்று பணியாற்றி பொதுப் பணித்துறைக்கே ஒரு தனிச் சிறப்பை ஏற்படுத்தித் தந்தார்கள். அதுபோல், அதே சிறப்பை பாதுகாக் கின்ற அளவில் இன்றைய தினம் பம்பரம் போல் சுழன்று பணி யாற்றுகின்ற நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பொதுப் பணித்துறைக்கு ஒரு தனிச் சிறப்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்றால் மிகையாகாது. அவர்கள் பந்தயக் குதிரை போல் இன்றைய தினம் சுழன்று பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அன்று எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்த காலத்தில், இடி, மின்னல், மழையாக சட்டமன்றத்தில் திகழ்ந்து, கேள்விக் கணைகளை எழுப்பி, அன்றைய ஆட்சியினுடைய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய நேரத்தில் —இன்று அவர்களே மீண்டும் ஆட்சியிலே பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கின்ற காரணத்தினால், அது போல் கேள்விகள் நமக்கும் எழும் என்ற காரணத்தினால், இன் றையதினம் அவர்கள் பொதுப் பணித்துறையை சிறப்பாக் நடத் திக் கொண்டிருப்பதைப் பார்த்து நான் பாராட்டுகின்றேன்.

தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்பதைப் போல எனது உசிலம்பட்டி தொகுதியில் திருமங்கலம் பிரதான கால்வாயில் ஏறக்குறைய 10 நாட்களுக்கு 8 ஆயிரம் ஏக்கருக்கு நீங்கள் நீர்ப்பாசன வசதி செய்ய வேண்டும் ; அந்தத் தொகுதி மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்ட நேரத்தில் அங்கு 10 நாட்களுக்கு தண்ணீரைத் திறந்து விட்டு, 8 ஆயிரம் ஏக்கர் நிலங்களை இன்றையதினம் காப்பாற்றிய தற்கு உசிலம்பட்டித் தொகுதி மக்களின் சார்பாக நான் அமைச்சர்

[திரு. பி. என். வல்லரசு] [1990 மே 2

அவர்களை முதற்கண் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அப்படிப்பட்ட பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களை நான்
கேட்டுக் கொள்வது எல்லாம் இன்றையதினம் தமிழகத்திலே
காவிரி நீர்ப் பிரச்சினை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்
சினையோ அது போன்று தென்பாண்டி மண்டலத்திலே எங்க
ளுக்கு பெரியார் அணையின் நீர்மட்டப் பிரச்சினை ஒரு மிகப்
பெரிய பிரச்சினையாகும். பெரியார் அணையினுடைய நீர்மட்
டம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி இருந்த காலத்தில் 152
அடியாக இருந்தது. ஆனால் அதற்குப் பின்னர் வந்த அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பெரியார் அணை
யின் நீர்மட்டம் 132 அடியாகக் குறைக்கப்பட்டது. காரணம்,
அன்று கேரளாவிலிருந்த பல்வேறு அரசியல் கட்சிகள், அந்த
அணை பலகீனமாக இருக்கிறது என்றும், அது உடைந்து பல
கிராமங்களை அழிக்க இருக்கின்றது என்றும் குரல் கொடுத்த
காரணத்தினால், அன்றையதினம் இருந்த சென்ட்ரல் வாட்டர்
போர்டு சேர்மன் எல்லாம் அந்த அணையைப் பரிசீலித்து ஆய்வு
செய்து அந்த அணை நல்ல நிலையில் இருக்கிறது ; பலமாக
இருக்கிறது என்று கூறியும், அன்று ஆட்சியிலிருந்த அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக அரசு 132 அடியாகக் குறைத்து
விட்டது. கேரள மாநிலத்துக்கும், தமிழக மாநிலத்துக்கும்
இடையே 1999 ஆம் வருடம் வரை ஒப்பந்தம் இருக்கிறது. 152
அடி வரை பெரியார் அணையின் நீர்மட்டத்தை வைத்துக் கொள்ள
லாம் என்று ஒப்பந்தம் இருக்கிறது. அது 132 அடியாகக்
குறைக்கப்பட்ட நேரத்தில் ஒரு ஒப்பந்தம் இரு மாநில அரசு
களுக்கும் இடையே ஏற்பட்டது. மீண்டும் 152 அடியாக உயர்த்த
வேண்டும் என்றால், அந்தப் பெரியார் அணையை மூன்று கட்டப்
பணியாகப் பலப்படுத்த வேண்டும் என்று சொல்லி இருக்கின்
றார்கள். முதல் இரண்டு கட்டப் பணிகள் முடிந்து விட்டால்
145 அடியாக உயர்த்தலாம் என்பது இரண்டு மாநில அரசுகளுக்
கிடையே ஏற்பட்ட ஒப்பந்தமாகும். அந்த இரண்டு கட்டப்
பணிகள் முடிந்து இருக்கின்ற காரணத்தினால் நான் மாண்புமிகு
பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது
எல்லாம் இன்றே, இப்போதே 145 அடியாக உயர்த்துகின்ற நிலை
ஒப்பந்தப்படி இருக்கின்ற காரணத்தினால் ஏன் இதுவரை 145
அடியாக உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று
கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

16-15 மணி

அதேபோன்று மூன்றாவது கட்டப் பணியும் முடியும் நிலைமை
இருக்கின்ற காரணத்தினால் மூன்று கட்டப் பணியும் முடிந்து
விட்டால் 152 அடியாக உயர்த்தலாம் என்கின்ற ஒப்பந்தம்
இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சரவர்கள்
அந்த ஒப்பந்தத்தின்படியே மூன்று கட்டப் பணியும் முடியும்
தறுவாயில் இருக்கின்ற காரணத்தினால் 152 அடியாக உயர்த்த
வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.



1990 மே 2] [திரு. பி. என். வல்லரசு]

காரணம், இன்றையதினம் நமது உரிமையில் மாநில உரிமை
களை நிலைநாட்டுகின்ற அவசர அவசிய காலம் இருக்கின்ற
காரணத்தினால், எப்படி காவிரிப் பிரச்சினை இன்று கை மீறிப்
போய்க் கொண்டு இருக்கிறதோ அதேபோன்று பெரியார் பிரச்சி
னையும் கையை விட்டு மீறிப் போய் விடுமோ என்ற நிலை இருக்
கின்ற காரணத்தினால் நான் மீண்டும் அன்போடு, பணிவோடு
தெரிவித்துக் கொள்வதெல்லாம், 152 அடியாக உயர்த்துவதற்கு
உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் ஒரு மாபெரும் விவசாய
நாடு. எனவே, இந்த விவசாய நாட்டின் விவசாய மக்களுடைய
நலனைக் கருதி இன்றையதினம் பாரதப் பிரதமராக வீற்றிருக்
கின்ற திரு. வி. பி. சிங் அவர்களை வலியுறுத்தி, கங்கை-காவிரி
திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தமிழக அரசும், பொதுப்
பணித்துறை அமைச்சரவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த கங்கை - காவிரி திட்டத்
தால் தமிழகத்திற்கு ஒரு மிகுந்த நலன் இருக்கின்ற காரணத்தி
னால், கங்கை - காவிரி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, குறிப்
பாக ஒரு மிகப் பெரிய மாஸ்டர் பிளான் என்று சொல்லப்படு
கின்ற மிகப் பெரிய திட்டத்தைப் பாரதப் பிரதமர் அவர்கள்
ஏற்படுத்தி, உலக வங்கியின் மூலம் பல்லாயிரக் கணக்கான ரூபா
யாக இருந்தாலும்கூட, அத்தனை ரூபாயையும் கடனாக வாங்கி,
அந்த கங்கை - காவிரித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நமக்கு
அதிகப்படியான பலன் இருக்கின்ற காரணத்தினால் தமிழக அரசு
அதை மத்திய அரசிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் கேரளாவிலேயிருந்து மேற்கு நோக்கி
ஓடுகின்ற நதிகளெல்லாம் வீணாகக் கடலில் பாய்கின்ற நிலை
இருக்கிறது. எனவே, மேற்கு நோக்கி ஓடுகின்ற அந்த நதிகளை
கிழக்கு நோக்கித் திருப்பி விடுவோமேயானால் தமிழகத்திற்கு,
தமிழக விவசாயிகளுக்கு மிகுந்த பலன் ஏற்படும் நிலை இருக்கின்
றது. இன்றையதினம் எனது உசிலம்பட்டி தொகுதியைப்
பொறுத்தவரையில் அங்கே இருக்கின்ற பழனி முருகன் கருணை
யோடு கருணை பார்வை காட்டுகிறாரோ இல்லையோ இந்த
அவையிலே இருக்கின்ற முருகன் அமைச்சர் துரைமுருகன் அவர்
கள் தனது கடைக்கண் பார்வையை கருணை பார்வையை இந்தப்
பிற்பட்ட தொகுதியின் மீது செலுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இந்த ஆண்டு பட்ஜெட் வருகின்றபோது எனது உசிலம்பட்டி
தொகுதியில் 58 கிராமத்தினுடைய நீர்ப்பாசனத் திட்டமும்
சேர்க்கப்பட்டிருக்கும் என்று நான் பெருமகிழ்ச்சியோடு எதிர்
பார்த்தேன். ஆனால் நானும், எனது தொகுதி மக்களும்
ஏமாற்றம் அடைகின்ற அளவிற்கு இந்தத் திட்டம் இந்த ஆண்டு

பட்ஜெட்டிலே இடம் பெற வில்லை என்பதை நான் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இன்றையதினம்
உலக வங்கித் திட்டத்தின் கீழ் மூன்று திட்டங்களைத் தமிழக
அரசு பரிந்துரையாகச் செய்திருந்தது. அந்த மூன்று திட்டங்
களில், உசிலம்பட்டி தொகுதியில் 58 கிராமத்திற்கு தண்ணீர்விட
வேண்டும்; பாசன வசதி செய்ய வேண்டுமென்ற திட்டமும்
பரிசீலனையில் இருந்தது. எனவே, இந்த மூன்று பரிசீலனை
களில் இந்தத் திட்டம் இடம் பெற்றிருக்கின்ற காரணத்தினால்
இந்த ஆண்டே இந்த பட்ஜெட்டிலே இடம் பெறும் என்று எண்ணி
யிருந்த எனது உசிலம்பட்டி தொகுதி மக்களும், நானும் ஏமாற்றம்
அடைந்து இருக்கிறோம். எனவே, வருகின்ற திட்டத்திலாவது
இந்தத் திட்டத்தைச் சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதியில் இரண்டு நீர்த் தேக்கத் திட்டங்கள்
இருக்கின்றன. வைகை அணைக்குப் பெரியார் அணைக்குத்
தண்ணீரைத் துளிக்கூட எதிர்பார்க்காத இரண்டு நீர்த் தேக்கத்
திட்டங்கள். எனவே, நீர்த் திட்டங்கள் என்றவுடன் மீண்டும்
வைகையில் தண்ணீர் கேட்கிறாரோ என்று மாண்புமிகு அமைச்
சரவர்கள் எண்ணிவிட வேண்டாம். வைகை, பெரியாருக்குச்
சம்பந்தமே இல்லாத, துளி அளவுத் தண்ணீரும் எதிர்பார்க்காத,
அங்கே கரிசல்பட்டி அணைத் திட்டம் என்கின்ற திட்டமும்,
அஸ்வமாநதி திட்டம் என்கின்ற நீர்த் தேக்கத் திட்டமும், ஆகிய
இந்த இரண்டு திட்டங்களும் நிறைவேற்றப்படுமேயானால், இன்
றும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு அங்கே வசதி பெறு
கின்ற நிலை இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்ச
ரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்

என்னுடைய தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. இந்தத்
தமிழக அரசே தத்து எடுத்துக் கொள்ள வேண்டிய தொகுதி
என்று சொல்லியிருக்கிறேன்; அப்படிப்பட்ட இந்தத் தொகுதி
யில் 13 வருட காலமாகச் சாலைகள் போடப்படவில்லை;
போட்ட ஒருசில சாலைகளும் குண்டும் குழியுமாக இருந்து, இன்
றையதினம் பஸ்கள் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது.
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் மூலம்
அணுகினாலும்கூட, ரோடுகள் சரியில்லை; சாலைகள் சரியில்லை
எனவே பஸ்கள் விடமுடியாத சூழ்நிலை என்று அவர்கள் புறக்
கணிக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் எனது
தொகுதியில் பஸ்கள் ஓட வேண்டுமென்றால் மாண்புமிகு அமைச்
சர் திரு. துரைமுருகன் அவர்கள் பழனி முருகன் கருணை காட்டுகி
றாரோ இல்லையோ இந்த முருகன் கருணை காட்டினால்தான்
என் தொகுதியில் சாலைகள் மேம்படுத்தப்பட்டு, பஸ்கள் ஓடு
கின்ற நிலை இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

13 வருஷ காலமாக மேய்க்கலார்பட்டி, கீரிப்பட்டி, சிம்ம
நத்தம் சாலை போட வேண்டும் என்று கோரி வருகிறார்கள் அந்த
மக்கள். எட்டு கிலோ மீட்டர் தான். 58 கிராமத்திற்குத்



தண்ணீர் வராவிட்டாலும், இந்தச் சாலையையாவது தர வேண்
டாமா என்று அந்த 58 கிராம மக்கள் கேட்கிறார்கள். எனவே,
மேய்க்கலார்பட்டி, கீரிப்பட்டி, சிம்மநத்தம் சாலையை இந்த
ஆண்டே—எட்டு கிலோ மீட்டர் தூரத்தைச் சேர்க்க வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

16-20 மணி.

ஆர். கொக்குளம் வழியாக உத்தப்பநாயக்கனூர் செல்லும்
சாலையை இந்த ஆண்டு சேர்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்
கிறேன். வத்தலக்குண்டு, உத்தப்பநாயக்கனூர் வழியாக உசிலம்
பட்டி வழியாக எரிமேடு செல்லுகின்ற ரோடு இன்றையதினம்
அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.
தொடர்ந்து கீழேயிருந்து அரசினுடைய பரிசீலனைக்கு அனுப்பி
வைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். இந்தத் தடவை கூட
வத்தலகுண்டு - உசிலம்பட்டி வழியாகச் செல்கிற எரிமேடு
சாலையை தார்ச் சாலையாக்குகிற பணி நிறைவேற்றப்பட
வில்லை. அரசாங்கம் அதனை நிறைவேற்றித் தர வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

செல்லம்பட்டி வழியாக சுந்தம்பட்டி செல்கிற சாலையை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் சேர்த்துக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உசிலம்பட்டியில் ஒரு மருத்துவமனை இருக்கிறது.
அது மிகவும் பழைய நிலையில் பழுதடைந்து இருக்கிறது.
பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டு அந்த
மருத்துவமனையை செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அங்கே இருக்கிற நீதிமன்றக் கட்டடத்திற்கு சுற்றுச் சுவர்
அமைக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு குடிதண்ணீர் வசதி
இல்லை. கழிப்பிட வசதி கூட இல்லை. எனவே, அவற்றைப்
பொதுப்பணித்துறை மூலமாக ஏற்படுத்தித்தர வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

பொறியியல் கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்று வருகிற
பொறியியல் பட்டதாரிகள் தங்களுக்கு அரசுப் பணிகளில் உரிய
பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்றும், குறிப்பாக பாலி
டெக்னிக்குகளில் படித்து டிப்ளமா பெறுபவர்களுக்கு தங்களுடைய
பணி மாற்றி கொடுக்கப்படுகிறது என்றும் ஏக்கப்பெருமூச்சு விட்
டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, பொறியியல் பட்டம்
பெற்று வருபவர்களுக்கும், டிப்ளமா பெற்று வருபவர்களுக்கும்
அவரவர்களுடைய படிப்புக்கு ஏற்றவாறு பணிகளில் நிரந்தர
படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. என். வல்லரசு] [1990 மே 2

அடுத்து, நெடுஞ்சாலை ஆய்வாளர்கள் 19 ஆண்டுக் காலமாக பென்ஷன் வழங்கப்படவில்லை என்று ஏக்கப்பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதையும் கருணையோடு இந்த அரசு பரிசீலித்து ,நெடுஞ்சாலை ஆய்வாளர்களுக்கு 19 வருடம் விடுபட்டு போன பென்ஷனை வழங்க வேண்டுமென்று கேட்டு, உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கா. அண்ணாதுரை : தலைவர் அவர்களே, மாண்பு மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத் தில் வைக்கப்பட்டுள்ள பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை கோரிக்கைகளை வரவேற்று ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட் டிற்கும் அடிப்படையாக அமைவது பொதுப் பணித்துறையாகும். ஒரு கால கட்டத்தில் இந்த பொதுப் பணித்துறையை Public Money Waste Department என்று அழைக்கப்பட்டாலும் கூட, இன்றைக்கு இந்தத் துறை மிகச் சிறப்பாக பணியாற்றுவதை மன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவோம். கடந்த ஆண்டு இதே மன்றத்தில் பொதுப்பணித்துறை மானியத்தின் மீது உரையாற்று கிறபோது நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நம்முடைய தலைவர் அவர் கள் முதலமைச்சராக இருக்கிறார்கள் என்ற காரணத்தால், 'ஒளி விளக்கை ஏந்திக் கொண்டு இருட்டில் பயணம் செய்ய முற்பட் டிருக்கிறேன்' என்று சொன்னார்கள். அதற்கு பின்னால் இந்த ஒரு வருட இடைவெளியில், மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் சகோதரி திருமதி பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தமிழ்நாட்டில் நீர்ப்பாசனத் திட்டங்களையும், நீர் ஆதாரங்களையும், எந்தவிதமான குறிப்பும் இல்லாமல், finger tips என்று சொல்வார்களே, அப்படி உடனுக்குடன் தகவல்களை அவைக்கு தருகிற அளவிற்கு , சிறப்பாக பணியாற்றுகிற அமைச் சர் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன் ; அவருடைய பணி சிறக்க என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

' நீரின்றி அமையாது உலகு ' என்பதற்கு ஏற்ப வேளாண்மைத் திட்டப் பணிகள் வெற்றி பெறவும், உற்பத்தியில் நம்முடைய இலக்கை எட்டுவதற்கும் பாசனம் மிகவும் இன்றியமையாததாகும் 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி ' என்ற இலக்கிய பெருமை பெற்ற காவிரி இன்றைக்கு பொய்த்துவிட்ட நிலையில், சோழ நாட்டு விவசாயிகளுடைய எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாக மாறி இருக்கிறது. எனவே அந்த விவசாயிகளுக்கு நிவாரணத் திட்டங்களை நம்முடைய அரசு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த கருத்தை கடந்த மாதம் 27-ம் தேதி வெளிவந்த தினமணி பத்திரிகையின் தலையங்கமும் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. எனவே, அப்படிப்பட்ட முயற்சிகளை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



1990 மே 2] [திரு. கா. அண்ணாதுரை]

சிறுபாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் 37,000 ஏரிகள் உள்ளன. அதிலே பெரும்பாலான ஏரிகள் தனி யார் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நம்முடைய அரசு கடுமையான நடவடிக்கையை எடுத்து வருகிறது. இதற்கு ஒரு தனியாக சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, ஆக்கிரமிப்புகளை அகற்றும் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு அளிக்கப்படும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப் பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

16-25 மணி

தமிழ்நாட்டின் பாசனப் பகுதியில் 30 சதவீதம் ஏரிப் பாசனத் தையே நம்பி சார்ந்துள்ளதால், கால்வாய்ப் பாசனம் ஏற்பாடு களுக்குக் கொடுக்கப்படுகிற அதே முக்கியத்துவத்தை ஏரிப்பாசன முறைகளுக்கும், நவீனப்படுத்துவதற்கும் அளிக்கப்பட வேண் டும் என்று நம்முடையக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில் ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து பெறப்படுகிற உதவியை இரண்டு கட்டமாக ஏரிகளை நவீனப்படுத்துவதற்கும், முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. இன்றைக்கு அந்த இரண்டு கட்ட முயற்சிகளிலே யும், தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற ஏரிகள் விடப்பட்டு இருக்கின்றன. எனவே விவசாயத்தை மட்டுமே நம்பி இருக்கக் கூடிய தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற மிகப் பெரிய ஏரிகளையும் இந்தத் திட்டத்திலே சேர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஒரு மில்லியன் ஏக்கருக்குப் பாசனம் அளிக்கும்பழைய காவிரி கழிமுகப் பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் உலக வங்கியின் நிதி உதவியைப் பெறுவதற் காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் பல ஆண்டுக் காலமாக இப்படிப்பட்ட உதவிகளை நாம் உலக வங்கியிடமிருந்து பெற முடியாத அளவிற்கு கர்நாடக அரசு தடையாக இருந்து வருகிறது. நமக்குக் கிடைக்கக் கூடிய பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு நம்முடைய பகுதியிலே கால் வாய்களை நவீனப்படுத்துவதற்குரிய ஒரு திட்டம் என்ற வகை யிலே இந்தத் திட்டத்தை மறுப்பதற்கு கர்நாடக அரசுக்கு எந்த விதத்திலும் நியாயம் இல்லை என்பதை எடுத்துக்கூறி இந்த நிதியை உலக வங்கியிடமிருந்து பெறுவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டுமென நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியான பட்டுக்கோட்டைத் தொகுதியில் கண்ணன் ஆற்றில், ஒலயக்குண்ணம் கிராமத்திற்கு அருகில் ஒரு படுக்கை அணை கட்டுவதற்கு 1987-88-ல் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, சென்னையில் உள்ள தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட என்னுடைய கேள்விக்கு பதில் அளிக்கிற நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை கிடைத்ததற்குப் பின்னாலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று கூறியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் விரைவிலே அந்த அறிக்கையை அனுப்புவதாக உறுதி அளித்திருக்கிறார்கள். விரைவிலே வருகிற ஆண்டிலே அந்தப் படுக்கை அணைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் படுக்கை அணை மூலம், ஒலயக்குண்ணம், பாவாசிக் கோட்டை, கனியாக்குறிச்சி, கழிச்சாங்கோட்டை, பெரிய கோட்டை போன்ற கிராமங்கள் பயன் பெறுவதற்கு வசதியாக இருக்கும். அதோடு மட்டுமல்லாமல், அந்தப் படுக்கை அணையிலிருந்து இறவைப் பாசனம் மூலம் பன்னிரண்டாம் நம்பர் வடவாறு வாய்க்காலுக்கு பாசனத்தை ஏற்படுத்திக் தருவோமானால் மிகப் பெரிய அளவிற்கு ஏறக்குறைய 30 ஆயிரம் ஏக்கருக்கும் மேலாக பாசனம் பெறக்கூடிய வாய்ப்பையும் இந்தப் படுக்கை அணை உருவாக்கும் என்பதால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய கழக ஆட்சியிலே கட்டப்பட்ட இரண்டு படுக்கை அணைகள் என்னுடைய தொகுதியிலே உள்ளன. மிகச் சிறப்பான முறையிலே அந்த அணைகள் விவசாயிகளுக்கு பயன் பட்டு வந்தன. தற்போது அந்த வெண்டாக்கோட்டை என்று சொல்லப்படுகிற அந்த ஊரிலே இருக்கக்கூடிய நசுவினி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட, அந்தப் படுக்கை அணையும், அண்டமி கிராமத்திற்கு அருகிலே கண்ணன் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு இருக்கிற அந்தப் படுக்கை அணையும் பழுது அடைந்திருக்கிறது. நான் பொதுப் பணித்துறை அதிகாரிகளிடம் கலந்து பேசுகிறபோது, இந்த ஆண்டிலே அவைகளைப் பழுது பார்த்து செப்பனிட்டுத் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். விரைவிலே அதைச் செய்து தாவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரத்தநாடு வட்டத்திலே இருக்கக்கூடிய வேதபுரி நீர்த் தேக்கத்திலிருந்து என்னுடைய தொகுதியிலே உள்ள கரம்பயம் விவசாயிகளுக்கு பாசனம் கிடைக்கிறது. அந்த வேதபுரி நீர்த்தேக்கத்திலே இருந்து வரக்கூடிய அந்த வாய்க்கால் பழுது அடைந்திருக்கிறது. எனவே அந்த வாய்க்காலை செப்பனிட்டுத்



தருவதோடு, தொடர்ந்து அந்த வேதகிரி வாய்க்காலுக்கு ஒரு நீர்ப்பாசன ஆய்வாளரை நிரந்தரமாக நியமிக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியிலே உள்ள தம்பிக்கோட்டை, அமரிகுளம், கீழச்செம்பாளூர், பனையகுளம் ஏரி, அத்திவெட்டி காணோடை ஏரி, அதிராம்பட்டினம் களிச்சியம்மன் ஏரி, துவரங்குறிச்சியைச் சேர்ந்த காகுளம், வண்ணாத்து ஓடை, மொச்சி ஓடை ஆகிய ஏரிகளையும், சொக்கனாவூர் மேல ஏரி, நெம்மேலி பெரிய ஏரி, காடந்தங்குடி மஞ்சனேரி, காத்தியான் ஓடை ஏரி, ஆகிய ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றி தூர் எடுத்துத் தருவதற்கு நமது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே இரண்டு காட்டாறுகளின் குறுக்கே பாலங்கள் கட்டித்தர வேண்டும் என்ற கோரிக்கைகள் நீண்ட காலமாக இருந்து கொண்டு வருகின்றன. மன்னார்குடி, அதிராம்பட்டினம நெடுஞ்சாலையில் இருந்து வடக்கு காட்டாகுடிக்கு ஒரு இணைப்புச் சாலை உள்ளது. அந்த இணைப்புச் சாலையின் குறுக்கே பாட்டுவாச்சி என்கிற காட்டாறு ஓடுகிறது. மழைக்காலங்களிலே இந்தக் காட்டாற்றில் பாலம் இல்லாததால், மிகப் பெரிய தொந்திரவுக்கு அங்கேயிருக்கக் கூடிய பொதுமக்கள் ஆளாகிறார்கள். எனவே அந்தக் காட்டாற்றிலே ஒரு பாலமும் அடுத்து திட்டக்குடி பஞ்சாயத்திலே இரண்டு பகுதியாக இரண்டு கிராமங்கள் உள்ளன. அந்த சூரங்காடு, திட்டக்குடி என்கிற கிராமங்களுக்கு இடையிலே நசுவினி ஆறு ஓடுகிறது. (மணியடிக்கப்பட்டது). அந்த இரண்டு கிராமங்களுக்கு இடையிலே ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

16-30 மணி

அடுத்து, மிக முக்கியமான நெடுஞ்சாலையைப் பொறுத்த அளவில் பட்டுக்கோட்டை வளர்ந்து வரக் கூடிய ஒரு நகரம். எனவே பட்டுக்கோட்டை நகரத்திற்கு ஒருமாற்று வழிப்பாதையை அமைத்துத்தர வேண்டுகிறேன். அடுத்து, கீழச்செம்பாலூரிலிருந்து அதிராமபட்டினம் - மன்னார்குடி சாலையில் இணையும் இணைப்புச் சாலையையும், நெம்மேலி கீழக்குறிச்சி இணைப்புச் சாலையையும் தார்ச் சாலையாக மாற்றித் தர வேண்டுகிறேன்.

மன்னார்குடி - அதிரைச் சாலையிலிருந்து சிலம்புவலங்காடு, காசாங்காடு வழியாகச் செல்லும் ஒன்றியச் சாலையை பகுதி 2 — திட்டத்தில் சேர்த்து தார்ச் சாலையாக மாற்றித் தரவேண்டுகிறேன். காசாங்காடு, தெற்கு வாட்டாக்குடி இணைப்புச் சாலை

தற்போது இனம் பிரிக்கப்படாத சாலையாக உள்ளது. எனவே
இந்தச் சாலையை பகுதி 2—திட்டத்திலோ அல்லது பஸ் ரூட்
ஸ்கீம் என்கிற ஒரு திட்டத்திலாவது சேர்த்து செப்பனிட்டுத்தர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டுச் சாலை வெண்டாக்கோட்டை வழியாக துவரங்
குறிச்சிவரை செல்லும் சாலை 1981-82-ல் பகுதி 2-ல் போடப்
பட்டு, தற்போது பழுதடைந்து உள்ளது. தற்போது இந்தச்
சாலை பட்டுக்கோட்டை நெடுஞ்சாலை ரெகுலர் உட்கோட்டத்
தில் இணைக்கப்பட்டுள்ளது. எனவே அதையும் செப்பனிட்டுத்
தர வேண்டுகிறேன்.

விக்கிரமம் காடனங்குடி இணைப்புச் சாலை ஒன்றியச் சாலை
யாக இருக்கிறது. அதையும செப்பனிட்டுத்தரவேண்டுகிறேன்.
அடுத்து மிக முக்கியமான பட்டுக்கோட்டை பேராவூரணி ஆகிய
வட்டங்களின் கிராமச் சாலைகள் கோட்ட அலுவலகம தற்போது
புதுகோட்டையில் இருக்கிறது. அதனுடைய கோட்ட அலுவ
லகம் புதுக்கோட்டை எந்த வேலையை எடுத்துக் கொண்டாலும்
அவர்கள் புதுக்கோட்டைக்கு முக்கியத்துவம் தருகிறார்கள்.
எனவே எங்களுடைய மாவட்டத்தில் தஞ்சாவூரில் இந்த உட்
கோட்டம் அமைவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நட
வடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அடுத்து, அதிராம்பட்டினம் பயணியர் விடுதி. அது மிகவும்
பழுதடைந்திருக்கிறது. மத்திய மாநில அரசு அதிகாரிகள் அங்கே
வநது தங்குவதற்கு வாய்ப்பு இல்லாத அளவிற்கு இருக்கிறது.
எனவே புதுய பயணியர் விடுதியை அமைத்துத் தருவதற்கு நட
வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி
யடிக்கப்பெற்றது).

திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கையின்
மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதித்த
மைக்காக இந்தப் பேரவைக்கும் தங்களுக்கும் என்னுடைய நன்றி
கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரண நிதிக்காக நம்
முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ. 50 இலட்சம் ஒதுக்கி
யிருக்கிறார்கள். ஆனால் சேலம், தருமபுரி, வட ஆற்காடு,
போன்ற மாவட்டங்கள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு,
அங்கே குடிநீர் கூட கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிறார்கள்.
அப்படிப்பட்ட இடங்களுக்கு வறட்சிப் பணி மூலம் ஏரிகளைத்
தூர் எடுப்பதற்காகவும், குட்டைகளில் வாய்க்கால்கள் வெட்டு
வதற்காகவும் அங்கே நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்ச
ரவர்கள் அதிக நிதியை ஒதுக்கீடு செய்து அந்தப் பகுதியில்



உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று
இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிரு
கிறேன்.

அடுத்தபடியாக சென்ற மானியக் கோரிக்கையின் மீது நடந்த
விவாதத்தில் என்.எம்.ஆர்.எல்.-ஆக 600 பேர்களுக்கு வேலை
வாய்ப்பு கொடுப்பதாக நம்முடைய அமைச்சரவர்கள் அறிவித்
தார்கள். ஆனால் தற்சமயம் இந்த ஆண்டு 300 பேர்களுக்கு
மட்டும்தான் வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். மேலும்
300 பேர்களுக்கு வேலை வாய்ப்பினை கொடுக்க வேண்டுமென்று
இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்
அதேபோல் பொதுப் பணித்துறையில் வேலை செய்கின்ற பொறி
யாளர்களுக்கு இதுவரை ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை.
மற்ற அலுவலர்களுக்கும், தமிழக அரசு ஊழியர்களுக்கும் மத்திய
அரசுக்கு இணையான சம்பளம் வழங்கப்பட்டு இருக்கின்றது
நம்முடைய அரசு ஏனோ பொதுப்பணித்துறைப் பொறியாளர்
களுக்கு மட்டும். சம்பள உயர்வினை வழங்குவதில் பாரபட்சம்
காட்டுகின்றது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்
பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே
பொதுப்பணித் துறையில் இருக்கின்றவர்களில் எந்த பிரிவினருக்கு
மத்திய அரசுக்கு இணையான சம்பளம் வழங்கப்படவில்லை என்று
மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார்? ஏற்கெனவே அசிஸ்
டெண்ட் இன்சினியர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருந்தது.
அதைக்கூட மறுபடியும் கலைஞர் அவர்கள் ரெவ்யூ செய்து அவர்
களுக்கு வழங்கி விட்டார்கள். எந்தப் பிரிவினருக்கு மத்திய அர
சுக்கு இணையான சம்பளம் கொடுக்கப்படவில்லை என்றால்
அதற்கு ஏற்பாடு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அநேகமாக அவருக்கு
கொடுக்கப்பட்டிருக்கின்ற ஐந்து மணித் துளிகளும் இதற்குச் சரி
யாக இருக்குமென்று நினைக்கிறேன்.

**திரு. சி. கிருஷ்ணன் :** அடுத்தபடியாக காவிரிக் கரைகள்
எல்லாம் தண்ணீரால் அரிக்கப்பட்டு மிகவும் சேதமடைந்திருக்
கிறது. அந்தக் காவிரிக் கரைகளை கான்கிரீட் ஸ்லேப்கள்
பொருத்தி பாதுகாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேட்டூர் கிழக்கு மேற்கு
வாய்க்கால்களுக்கு புஞ்சைப் பயிர்களுக்கு அப்போது புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் தண்ணீர் விடப்பட்டது. இன்
றைக்கு மீண்டும் அதிலே தண்ணீர் விடவேண்டுமென்று இந்த
நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக தொகுப்பு வீடுகள் கட்டுவதில் பல ஊர்களி
லிருந்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அங்கே
கட்டுமானம் சரியில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் அந்தப்

பணியினை நம்முடைய பொதுப் பணித்துறையிலே எடுத்துக்
கொண்டு சிறப்பான முறையில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று
இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

16-35 மணி

மேலும் மாண்புமிகு புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்
களுக்கு கவர்னர் ஆட்சியில் நினைவாலயம் கட்டுவதற்கு வரை
படங்களை தேர்வு செய்து, அங்கே மிகச் சிறப்பான முறையில்
நினைவாலயம் கட்டுவதாக இருந்தார்கள்,. ஆனால் நம்முடைய
தமிழக அரசு ரூ. 30 இலட்சத்திற்கு ஒரு கொடையை மட்டும்
கொடுத்து, தமிழக மக்கள் ஏழை எளிய மக்கள் இதயங்களில்
வாழ்ந்து கொண்டிருக்கின்ற எம்.ஜி.ஆர். புரட்சித் தலைவர்
அவர்களுடைய தோட்டத்தில் அந்த நினைவாலயம் சரியான
முறையில் கட்டப்படவில்லை என்பதனை இந்த நேரத்தில் நான்
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனை
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னது
போல், நானே போடப்போகிறேன் சட்டம், நாடு முன்னேறத்
திட்டம் என்று சொன்னார். அதேபோல் சட்டத்தை இங்கே
இதே மாமன்றத்திலேயே போட்டு அவர் 10 ஆண்டு காலம் முதல்
அமைச்சராகவும் இருந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே
நாங்களும் சொல்கின்றோம், நாங்களே சட்டத்தைப் போட்டு,
நாங்களே அந்த நினைவாலயத்தைப் புதுப்பித்துக் கட்டிக்கொள்
கிற காலம் விரைவிலேயே வரப்போகின்றது என்று சொல்லிக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, எனது பகுதியைச் சேர்ந்த தொப்பூரிலே
ஒரு அணைக் கட்டப்பட்டுள்ளது. அந்த அணை என்னுடைய
பகுதியைச் சேர்ந்த தொப்பையாறு என்ற ஆற்றின் குறுக்கே
கட்டப்பட்ட அணையாகும். அந்த அணையிலிருந்து என்னுடையப்
பகுதிக்கு எந்தவிதமான வாய்க்கால்களும் அமைக்கப்
படவில்லை. ஆனால் அந்த தொப்பூர் வாய்க்காலிலிருந்து, ஒரு
வாய்க்கால் அமைத்து குண்டக்கல் ஏரிக்கு கொண்டு வந்து அங்
கிருந்து வடமனேரிக்கு தண்ணீர் விட வேண்டும். அதன் மூலம்
என்னுடைய பகுதிக்கும் தண்ணீர் விட வேண்டும் என்று இந்த
நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.
அதேபோல, காவிரி ஆறு, சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம்
பகுதிகளுக்கு இடையே ஓடினாலும் கூட, எங்களுடைய
பகுதிக்கு எந்தவிதமான பயனும் இல்லாமல் இருக்கிறது. ஒக்கே
னக்கல் என்ற பகுதியிலே ஒரு அணையைக் கட்டி, அந்த பகுதி
யிலேயிருந்து 'பம்பிங் ஸ்டேசன்' மூலமாக பென்னாகரம், தர்மபுரி
போன்ற பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்து கொடுத்து,
மீதி இருக்கின்ற தண்ணீரைத் தொப்பையாறு அணைக்குக்கே
கொண்டு வந்து அங்கிருந்து சேலம், தர்மபுரி மாவட்டங்களுக்கு
பாசனவசதி செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே



கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்
தமிழகத்திலே என்றைக்குமே ,நம்முடைய விவசாயப்
பெருங்குடி மக்கள் வானம் பார்த்த பூமியாகவே இருந்து கொண்டு
வருகின்றார்கள். அதனுடைய அடிப்படையிலே இன்றைக்கு
கங்கையையும் காவிரியையும் இணைக்கின்ற ஒரு திட்டத்தை
நம்முடைய அரசு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே
கேட்டுக் கொள்கிறேன். எதற்காக இதை சொல்கிறேன் என்று
சொன்னால், மத்தியிலே நம்முடைய கூட்டாட்சியில், நம்முடைய
அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். இந்த நேரத்திலே
வடக்கே இருக்கின்ற மாண்புமிகு திரு. வி. பி. சிங் அவர்கள்
மற்ற மாநிலங்களுக்குச் சொல்லி அங்கேயிருந்து தண்ணீரை
எடுத்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கின்ற, இரண்டு ஆட்சி
களும், நம்முடைய ஆட்சியாக இருக்கின்றதனாலே, நீங்கள் ஒரு
மிகப்பெரிய திட்டத்தை செயல்படுத்தி, அந்தந்த மாநிலங்களே
அந்தப் பணத்தை செலவிட்டு திட்டங்களை வகுத்துக் கொள்
கின்ற ஒரு அமைப்பினை செய்தால் மிகவும் சிறப்பான ஒரு
அம்சமாக இங்கே தமிழகமக்களுக்கு தண்ணீர் வற்றாமல் கிடைக்க
ஒரு வகையான திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று நான்
இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.
(மணியடிக்கப் பெற்றது.)

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலையில் பேசுவதற்கு
வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி. ஆனால் இந்த பொதுப்பணித்
துறையைப் பொருத்தவரையில் மாண்புமிகு பொதுப் பணித்துறை
அமைச்சர் அவர்கள் மாவட்ட வாரியாக அங்கே இருக்கக் கூடிய
குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஒரு ஆய்வு செய்தார். அப்படி
ஆய்வு செய்யும்போது என்னுடைய தொகுதியில் நீண்டநாளாக
இருக்கிற பிரச்சினை, உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம். அந்த
உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 23.7 கோடியில் மதிப்பீடும்
தயார் செய்து, ஆய்வு செய்து, தயார் நிலையில் இருக்கிறது.
அந்தத் திட்டம், இந்த நிதியாண்டிலாவது சேர்க்கப்படும் என்று
எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அது சேர்க்கப்படவில்லை. அந்த
திட்டம் நிறைவேறுமேயானால் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் பாசன
வசதி ஏற்படக்கூடிய நிலைமையிருக்கிறது. ஆகவே வருகிற
நிதியாண்டிலாவது அந்த திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து
எடுத்தால் நன்றாக இருக்குமென்று நான் எதிர்பார்க்கிறேன்.
அந்த உள்ளார் நீர்த்தேக்கத் திட்டத்தை, மாண்புமிகு பொதுப்
பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கைத்தறி துறை
அமைச்சர் அவர்களும், அனைத்து அதிகாரிகளும், பொதுப்பணித்
துறை அதிகாரி அவர்களும் நேரிடையாக பார்வையிட்டு, நெல்லை
மாவட்டத்திலே முக்கியமான நல்ல ஒரு திட்டம்,. ஆகவே அந்தத்
திட்டத்தை நீங்கள் விரைவாக வருகிற நிதியாண்டிலாவது எடுத்து
கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது
மட்டுமல்லாமல் செண்பகவள்ளி அணைத் திட்டம் ஒன்று இருக்
கிறது. அந்த செண்பகவள்ளி அணைத் திட்டம் கேரளாவினுடைய
பார்டரில் இருக்கிறது.

1962-ல் கேரள எல்லைக்குள்ள 5,600 அடி சிஐபி வாலாகக்
கட்டி அதில் 22 அடி நெடுகிலும் 18 அடி ஆழம் உட்பட உடைப்பு
ஏற்பட்டு என்னுடைய பகுதிக்கு வரக்கூடிய தண்ணீர் கேரளா
விற்குச் செல்கிறது. இந்த 5 ஆண்டுகளாக அந்த உடைப்பை
அடைப்பதற்கு தமிழ்நாடு அரசு 10 இலட்சம் ரூபாய் அனுமதி
வழங்கி முன் பணமாக 5 இலட்சம் ரூபாய் கேரள அரசிற்கு
அட்வான்ஸாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கேரள அரசு
இந்த 5 ஆண்டுகளாக அந்த உடைப்பை அடைக்காமல் தட்டிக்
கழித்துக் கொண்டு போய்க்கொண்டிருக்கிறது. எஸ்டிமேட்
ரிவைஸ் பண்ணக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த உடைப்பை
அடைத்தால்...

16-40 மணி

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** கஷ்டப்படவே வேண்டாம்
நானே சொல்கிறேன். மேற்கு தொடர்ச்சி மலையிலே புளியந்
தோடு ஜக்கம்பட்டி இரண்டும் கூடுகின்ற இடத்தில் பெரியாரிடத்
திலே அந்த செண்பகவல்லி தோப்பு அணை இருக்கிறது. அதி
லிருந்து கீழே தண்ணீர் வந்தால் ராஜப்ப ஏரி, சிங்கப்ப ஏரி
இரண்டு ஏரிகள் பாயும். அந்த ஏரிகளுக்கு நீங்கள் சொன்னதைப்
போல உடைந்து போனதற்கு 10 இலட்சம் ரூபாய் செலவாகும்.
5 இலட்சம் ரூபாய் கொடுத்தால் வேலை ஆரம்பிக்கின்றேன்
என்று கேரள அரசு சொன்னது. 1986-லே 5 இலட்சம் ரூபாய்
கட்டினார்கள். கட்டப்பட்ட பணம் என்னவாயிற்று என்று
யாரும் கேட்கவில்லை நான் போய் கேரளத்திலே கேட்கும்
வரையில். இன்றைக்கு அதைக் கட்டுவதற்கு பேபிஜான் அவர்கள்
உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். இரண்டாவது அதிலி
ருந்து வருகின்ற தண்ணீர் கரண்ட் எடுத்தால் 117 மெகாவாட்
வரும் என்று சொன்னார்கள். வாரது. அவையெல்லாம் விட்டு
விடுங்கள். பெரியார் அணை எங்களுக்கு சம்பந்தம் இல்லை
என்று தெரிவித்திருக்கிறேன். விரைவில் எடுத்துக் கொள்வதாக
சொல்கிறார். 2 முறை அதுகுறித்து பேசியிருக்கிறேன். எனவே
திரு. ஈஸ்வரன் அவர்கள் என்னோடு வந்து இடத்தைப்பார்த்தால்
தைரியமாக இருக்கலாம். செண்பகத்தோப்பு அணை கட்டப்
படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவ்வளவு தைரியம்
கொடுத்த பிறகும் தொடர்ந்து பேசவேண்டுமா ?

**திரு. ஆர். ஈஸ்வரன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு
நன்றி. நான் சொல்வதெல்லாம், 5,600 அடி 1962-லே கட்டப்
பட்ட அணை உடைப்பை அடைப்பதற்கு தமிழ்நாடு அரசே
நேரடியாக அந்த உடைப்பை அடைத்திருக்கலாம்.
ஆனால் கேரள அரசிடம் கேட்டதுதான் பெரிய தவறு. கேரள
அரசிடம் கேட்காமலேயே கேரள அரசே அதைக் கட்டுவ
தற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அந்த உடைப்பை
அடைப்பதற்கு கேரள அரசிடம் கேட்க வேண்டும் என்ற அவசியம்



இல்லை. அந்தத் தண்ணீரை அவர்கள் பயன்படுத்திக்கொள்
கிறார்கள். அந்த உடைப்பை அடைத்தால் இந்த உள்ளார்
நீர்த் தேக்கத் திட்டத்திற்கு 12,000 ஏக்கர் பாசன வசதிக்கு
வாய்ப்பு இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அது
மட்டுமல்ல. கோம்பையாறு அணைத்திட்டம் இருக்கிறது.
12.5 கோடியில் அந்தத் திட்டமும் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது.
அந்தத் திட்டம் நிறைவேறினால் 5,000 ஏக்கர் பாசன வசதி
கிடைக்கும். இவையெல்லாம் மேற்கு தொடர்ச்சி மலையில்
வீணாகச் செல்லுகின்ற தண்ணீர். இதை வருகின்ற நிதியாண்டி
லாவது அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித்தர வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி பாலமலையாறு திட்டம்
இருக்கிறது. அது 1976-லே ஆய்வு செய்து தலைமைப் பொறி
யாளர் அரசிற்கு பரிந்துரை செய்திருக்கிறார். அது சின்ன அணை.
கேட் வால் மாதிரி கட்ட வேண்டியிருக்கிறது. அதற்கு 96
இலட்சம் 1976-லே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதுவும்
அரசிடம் பெண்டிங்கில் இருக்கிறது. ஆகவே, பொதுப்பணித்
துறையைப் பொருத்தவரையில் இந்தத் திட்டங்கள் எல்லாம்
நிறைவேறினால் வாசுதேவநல்லூர் தொகுதியும், மாண்புமிகு
கைத்தறித்துறை அமைச்சர் தொகுதியும் பாசன வசதிகள் பெறும்.
குடிநீர்ப் பிரச்சினை தீரும். விவசாயம் செய்வதற்கு தரையில்
நீர்த்தேக்கம் இருக்கும். ஆகவே இந்தத் திட்டத்தை முன்னு
ரிமை கொடுத்து வருகின்ற நிதியாண்டிலாவது அமைச்சர் இதை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி
சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. கரும்பு
சாகுபடி செய்யக் கூடிய விவசாயிகளிடமிருந்து கரும்பு அபி
விருத்தி திட்டத்தின் மூலமாக ஒரு டன்னுக்கு சுமார் 5 ரூபாய்
செஸ் போடப்படுகிறது. தனியார் ஆலைகள் 8 ஆண்டுகள்
வரைக்கும் அந்த செஸ் கட்டுவதை ஏமாற்றிக் கொண்டிருக்
கிறார்கள். அதன் மூலம் சுமார் 16 கோடி ரூபாய் பெண்டிங்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி
16 கோடி ரூபாயையும் ஆண்டு ஒன்றுக்கு 4 கோடி ரூபாய் வீதம்
கட்டுவதாக தனியார் சர்க்கரை ஆலை அதிபர்கள் வாக்குறுதி
சொல்வதாக அறிகிறேன். எங்கள் பகுதியில் புதியதாக சர்க்
கரை ஆலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சாலை வசதிகள் மிக
வும் மோசமாக இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யக்
கூடிய கரும்பை வெளியில் எடுத்து வருவதற்கு மிகவும் கஷ்டமாக
இருக்கிறது. ஆகவே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்
இருக்கிறார்கள்.

16-45 மணி

உங்களுடைய வேளாண்மைத் துறையின் மூலமாகத் தான்
அந்த 16 கோடி ரூபாய் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின்
மூலமாக ஒதுக்கப்படுகிறது. அதை முன்னுரிமை கொடுத்து,
கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கி
றேன். அதுமட்டுமல்லாமல், குறிப்பாக நெடுஞ்சாலைகள் மோச
மான நிலையில் இருக்கின்றன. எங்களுடைய பகுதியில் பாரத்

[திரு. ஆர். ஈஸ்வரன்]

[1990 மே 2

தால் பஸ் ஓட முடியாத நிலை. அரசுப் போக்குவரத்துக்
கழகமாக இருந்தாலும் சரி, தனியார் போக்குவரத்து கழகமாக
இருந்தாலும் சரி பட்டைகள் எல்லாம் ஒடிந்து போகின்றன.
அவ்வளவு மோசமான நிலையில் குண்டும், குழியுமாக
இருக்கின்றன. அதனாலே அங்கே ஓட்டக் கூடிய ஓட்டுநர்கள்
அந்த ரூட்டில் பஸ் எடுப்பதற்கே ரொம்பத் தயங்குகிறார்கள்.
ஆகவே, நீங்கள் இப்போது ஒதுக்கியிருக்கிற நிதி போதுமான
தல்ல.

பழைய சாலைகளைச் செப்பனிடுவதற்காக போன ஆண்டு
62.65 கோடியும், வரும் ஆண்டுக்கு 80 கோடி ரூபாய்க்கு மேலும்
ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அந்தப் பழைய சாலைகள்
எங்கு பார்த்தாலும் குண்டும், குழியுமாகத்தான் இருக்கின்றன.
இந்தப் பழைய சாலைகளுக்காக ஒதுக்கியது போன ஆண்டு
சுமார் 62 கோடியே 65 இலட்சமும், இந்த ஆண்டு 80 கோடியும்
ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் பழுதடைந்த சாலைகளை
பராமரிக்கிற மாதிரி தெரியவில்லை. கேங் கூலிகள் ஆரம்பத்
திலே அப்போது நீங்கள் கூடுதலாகப் போட்டு இருந்தீர்களே,
அந்த கேங் கூலிகள் தான் இருக்கிறார்கள். ஆனால் ரோடுகள்
ரொம்ப விஸ்தரிப்பாகிறது. யூனியன் சாலைகளை வந்து அப்புறம்
ஹைவேஸிலே எடுக்கிறார்கள். அப்படி ஹைவேஸிலே
எடுக்கிறபோது கேங் கூலிகள் நீங்கள் கூடுதலாகப் போட
வேண்டும். பழைய கேங் கூலிகள் இறந்து விடுகிறார்கள். அதற்கப்
புறம் நீங்கள் போடுவதில்லை. அதனாலே நெடுஞ்சாலைகளை
பராமரிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. நெடுஞ்சாலை
களுக்கு, இந்த ஆண்டு சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற
ரூபாய் போதுமானதல்ல. ஏனென்றால் ரோடு பிரச்சினைதான்
முக்கியமாக இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், என்னுடைய
தொகுதியிலே 8 பாலங்கள் இருக்கின்றன. நாடு சுதந்திரம்
அடைந்து கிட்டத்தட்ட 43 ஆண்டுகளுக்கு மேலாகிறது. காட்டு
மழை பெய்தால் ஒரு கிராமத்திலேயிருந்து இன்னொரு
கிராமத்திற்குப் போகமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படி
பெரிய பாலங்கள் கட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. மாங்குடி-
யிலிருந்து பெருமாள்பட்டிக்கு மத்தியிலே ஒரு பெரிய பாலம்
கட்ட வேண்டி இருக்கிறது. அதுமாதிரி முறம்பிலிருந்து செந்
தட்டியாபுரம் தேவி ஆற்றில் ஒரு பாலம் கட்ட வேண்டியிருக்
கிறது. (மணியடிக்கப்பபெற்றது) கொஞ்சம் நேரம் கொடுங்கள்
தொகுதிப் பிரச்சினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : எனக்கு 'நேரம்' அதை
விட முக்கியமான பிரச்சினை. (சிரிப்பு).

**திரு. ஆர். ஈஸ்வரன்** : தொகுதிப் பிரச்சினை. (குறுக்கீடு)
சுப்பலாபுரம் முதல் சங்கரலிங்கபுரம் ரோடு நிச்சபநதியில் ஒரு
பாலம். சென்னிகுளம் முதல் மேலவயலி வரைக்கும் மத்தியிலே
ஒரு பெரிய பாலம் கட்ட வேண்டியிருக்கிறது. பெரியூர் முதல்
கண்டியப்பேரிக்கு மத்தியிலே ஒரு பாலம் கட்டவேண்டியிருக்



1990 மே 2] [திரு. ஆர். ஈஸ்வரன்]

கிறது. எட்டிசேரி, தென்மலைக்கு மத்தியிலே ஒரு பெரிய பாலம் கட்டவேண்டியிருக்கிறது. வாசுதேவநல்லூர்— சங்கனாப்பேரிக்கு மத்தியிலே ஒரு பெரிய பாலம் கட்ட வேண்டி இருக்கிறது. மீனாச்சியாபுரம் — அக்கரப்பட்டி மத்தியிலே ஒரு பாலம் கட்ட வேண்டி இருக்கிறது. ஒத்தகடைக்குக் கீழ்ப்புறம் ஒரு பாலம் அகலப்படுத்த வேண்டி இருக்கிறது. இந்த 10 பாலங்களுக்கும் குறைந்தது சுமார் 80 இலட்சம் ரூபாயாவது தேவைப்படுகிறது.

இன்னும் தொகுதியிலே 50 சதவிகிதம் கூட வேலைகள் பூர்த்தியாகவில்லை. பாலம், ரோடு, குளங்கள் எல்லாம் 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால் மராமத்து செய்ததுதான். அப்படி குளங்கள் எல்லாம் மேடிட்டு வருகிறது. மடைகள் பழுதடைந்து இருக்கின்றன. கலிங்கிலே தண்ணீர் போவது சரியில்லை. ஷட்டர்ஸ் எல்லாம் சரியில்லை. இந்த மாதிரி குளங்களை மராமத்து செய்வதற்கும், அவைகளைப் பராமரிப்பதற்கும் இந்த நாட்டிலேயே பொதுப் பணித்துறையும் விவசாயத் துறையும் தான் முக்கியம். விவசாயத் துறைக்கும், பொதுப்பணித் துறைக்கும் குளங்கள், ஏரிகள் சரியாக இருந்தால்தான் விவசாயத்தினுடைய உற்பத்தியைப் பெருக்கமுடியும். ஆகவே, நிதிகளை ஒதுக்குவது போதுமானதல்ல. அதிகப்படியான நிதி ஒதுக்க வேண்டும். அதே நேரத்தில், குளங்கள் என் பகுதியில் 6 பெரிய குளங்கள், ஏரிகள் இருக்கின்றன. அதற்கு நீங்கள் நிதி ஒதுக்க வேண்டும். தென்மலைக்குளம், கூடலூர் குளம், பெரிய குளம், குலசேகரபேரி குளம், சின்னஆவுடைபேரி குளம். இது எல்லாம் மலை அடிவாரத்தில் ஒவ்வொரு குளமும் 3,000 ஏக்கர், 4,000 ஏக்கர் பாசனம் ஏற்படக்கூடிய குளங்கள். அந்தக் குளங்களுக்கு மராமத்து செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்று, அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பெற்றார்.)

***திரு. கு. கன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990— 91-ஆம் ஆண்டு பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி. மாண்புமிகு அமைச்சரவர்கள் பொதுப்பணித் துறையில் பொறுப்பேற்றதற்குப் பிறகு, சீரும், சிறப்புமாக, செம்மையாக செயல்பட்டு வருகின்றார்கள். இருந்தாலும், என்னுடைய மாவட்டத்தில், திருச்சி மாவட்ட ஹைவேஸ் அதிகாரிகள், பொதுப்பணித் துறை அதிகாரிகள் செயல்படுவது சரியில்லை. இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

என்னுடைய தொகுதி தொட்டியம் தொகுதி. தொட்டியம் தொகுதியில் ஸ்ரீராமசமுத்திரம் வடகரை வாய்க்கால் என்பது 1924-ஆம் ஆண்டு வெட்டப்பட்ட வாய்க்கால். அந்த வாய்க்காலில் நீண்ட நாள் கோரிக்கையாக, 10,400 ஏக்கர் பாசனம் உள்ள ஆயக்கட்டிலுள்ள வாய்க்கால்கள், இந்த வாய்க்கால்களின்

16-50 மணி)

மேல்புறத்தில் மணல் போக்கிக் கட்டி அதிலே 500 மீட்டர் தூரம் நீர் தடுப்புச் சுவர் கட்டித்தர வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையாக என்னுடைய தொகுதி மக்களிடம் இருந்து வரு கிறது. இதுவரை அரசின் ஆய்வில் உள்ள இதை எந்த அரசும் எடுத்துச் செய்யவில்லை. இந்த அரசு உடனடியாக செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் முள்ளிப்பாடி வாய்க்காலில் 2,000 ஏக்கர் பாசனம் உள்ள வாய்க்கால் இது. இது 2 போக பாசனம் பாய்வதற்கு இந்த அரசு முன்னுரிமைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்— தலைமை**

திருச்சி மாவட்டம், காவேரி கரை ஓரங்களில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நிலங்களை நிலம் இல்லாத ஏழை, எளியவர்களுக்கு, விவசாயிகளுக்கு ஒரு குடும்பத்திற்கு 50 சென்ட் வீதம் குத்தகைக்குக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்னுரிமைக் கொடுக்க வேண்டும் என்று என்னுடைய சார்பிலும் என் தொகுதி மக்கள் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் வாய்க்கால்கள் வெட்டுவதற்கு பராமரிப்புக்கு ஒதுக்கக்கூடிய நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையாக இருப்பதால் 10 ஆண்டு காலமாக வாய்க்கால்களை சரியாக வெட்டாமல் இருப்பதன் காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து இந்த வாய்க்கால்களை பராமரிப்புச் செய்து தர வேண்டும் என்று என்னுடைய சார்பிலும் என் தொகுதி மக்கள் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரிக் கரை ஓரங்களிலுள்ள பகுதிகளில் மழை நேரங்களில் காவேரியில் வெள்ளம் வரும்போது கரைகளில் அரிப்பு ஏற்பட்டு அந்தக் கரைகள் எல்லாம் எந்த நேரத்தில் தண்ணீர் உடைத்து வருமோ என்று ஊரில் உள்ள மக்கள் எல்லாம் பயந்துகொண்டு ஊரை விட்டு வெளியே போகும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்தக் கரைகளை உடனடியாகச் செப்ப னிட்டுத் தரவேண்டும் என்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பாப்பாபட்டி ஏரியில் 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு ஏரிக்கு இந்த அரசு பரிசிலனைச் செய்து இருக்கிறது. அந்த ஏரியை அமைத்துத்தர இந்த அரசு முன் னுரிமைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அப்பநல்லூரில் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் ஏரி ஒன்று அமைக்க அரசு ஆய்வு செய்து இருக் கிறது. இதை உடனடியாக செய்து தரவேண்டும் என்று என்னு டைய சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.



சீனிவாசநல்லூர், ஏரிக்குளம், சித்தூர், அரங்கூதூர் வழியாகச் செல்லும் சாலைகள் மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. இதை நன்கு செப்பனிட்டுத் தர இந்த அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வரதராஜபுரம், அரசலூர், காரைக்காடு, கீழ்க்கா ரைக்காடு, புத்தூர் வழியாக, ஒரு புது சாலை அமைத்துத் தர இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொண்டாமுரி பாலம் பழுதடைந்து இருக்கிறது. இந்தப் பாலத்தை புதிய பாலமாக அமைத்துத் தர வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சீனிவாசநல்லூர் அரிசனர் தெருவில் ஒரு பாலம் கட்டித் தருவதற்கு இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் வரதராஜபுரம் வாய்க்காலில் ஒரு பாலம் அமைத் துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஸ்ரீராம சமுத்திரம் வாய்க்காலில் ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

16-55 மணி

அதேபோல் மஞ்சமேடு வாய்க்காலில் ஒரு பாலம் அமைத்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய மாவட்டத்தில் டாக்டர் கலைஞர் காலத்தில் குளித்தலைக்கும் முசிறிக்கும் இணைப்புப் பாலம் கட்டினார்கள். அந்தப் பாலத் தில் சுங்க வசூல் என்று சொல்லி கிட்டத்தட்ட 10, 13 ஆண்டுக ளாகியும் இன்னும் சுங்க வசூல் செய்து வருகிறார்கள். பாலம் கட்டுவதற்குச் செலவிட்ட பணம் அளவிற்கு வசூல் செய்யப் பட்டுள்ளது. இந்தச் சுங்க வசூல் செய்வதை உடனடியாக நிறுத்துவதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்— தலைமை)

என்னுடைய தொகுதியிலுள்ள தாத்தய்யங்கார்பேட்டை ஒன்றியம் மிகவும் பிற்பட்ட ஒன்றியமாகும் இதில் 110 கிராமங் கள் உள்ளன. அங்கே எந்த இடத்தில் ஆழ்குழாய் கிணறுகள் போட்டாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. இதற்காக காவிரி யிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு

இதுவரை எந்த செயல்களும் செய்யப்படவில்லை இதுகுறித்து
உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்தத் திட்டத்தை நிறை
வேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நாகையநல்லூர் ஏரி, களத்தூர்
ஏரி, ஏலூர்ப்பட்டி ஏரி, கொளக்குடி ஏரி, அப்பநல்லூர் ஏரி, மங்க
ளம் ஏரி, பாப்பாப்பட்டி ஏரி போன்ற ஏரிகளெல்லாம் ஏறத்தாழ
10 ஆண்டுகாலமாக தூர் எடுக்காமலும் கரைகள் செப்பனிடப்
படாமலும் நீண்டகாலமாக அப்படியே இருந்துகொண்டிருக்
கின்றன. இவைகளை உடனடியாக சீர்படுத்தித் தருமாறு கேட்
டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்தப் பொதுப் பணித் துறை மானியத்தில்
8 மானியங்கள் சேருகின்றன. மொத்தமாக பார்த்தால்
418 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பாசனத்
திற்கு என்று தனியாக எடுத்தால் 160 கோடிதான் வருகிறது.
ஆகவே, இது போதாது. இதைக் கூடுதலாக்க வேண்டுமென்று
முதலிலேயே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 8 மானியங்
களையும் ஒரு நாளிலே முடிப்பதில் இருக்கக்கூடிய கஷ்டத்தை
நாம் அனைவருமே அறிவோம். இரண்டு தினங்களாவது ஒதுக்
கினால் அதில் இருக்கக்கூடிய குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட
வாய்ப்பிருக்கும்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரை மிக முக்கியத்
துவம் வாய்ந்த துறை. ஆனால் முறைகேடுகளும் மலிந்துள்ள
துறை. பட்டுக்கோட்டை மக்கள் கவிஞர் அவர்கள் ஒரு பாட்டு
பாடினார் : '' குட்டுகளைச் சொல்லட்டுமா ; கூடையிலே
அள்ளட்டுமா '' என்று. அதைப்போல நெடுஞ்சாலைத் துறை
பல்வேறு முறைகேடுகளின் கூடாரமாக இன்றைக்கு விளங்கிக்
கொண்டு இருக்கிறது. இந்த ஓராண்டில் என்று நான் சொல்ல
வில்லை. கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ச்சியாக வந்திருக்கக்
கூடிய ஊழல் தொடருகிறது என்றுதான் நான் கூறுகிறேன். பல
ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைக் களைந்து,
அந்தப் பணத்தை நாம் எடுத்தோம் என்று சொன்னால் இந்தத்
தமிழகத்தின் தேவையைப் பெரும்பாலும் சாலை வசதிகளைப்
பெருக்க முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. ஆனால், அமைச்சர்
அவர்கள் இதில் நடவடிக்கை எடுத்தார்கள் என்று சொன்னால்
நிச்சயமாக அவரைப் பாராட்டி ஒரு பட்டம் கூடத் தரலாம்.

அடுத்ததாக, சாலைகளுக்கு காண்டிராக்ட் விடப்படுகிறது.
அதிலே பினாமி காண்டிராக்ட் என்று ஒன்று உண்டு. ஒருசில
அதிகாரிகளுக்கும் இதிலே கூட்டுபங்கு உண்டு. அமைச்சர் இல்லை
யென்று கூற முடியாது. இது விஷயமாக ஒரு யோசனை. ஒப்பந்
பந்த முறையைக் கைவிட்டு, படித்துவிட்டு வேலையில்லாமல்
இருக்கின்ற பொறியியல் பட்டதாரிகள், டிப்ளமோதாரர்கள்
கூலித் தொழிலாளிகளின் கூட்டுறவு அமைப்புகள், இவர்கள்
இந்தப் பணிகளை எடுத்து செய்வதற்கு ஏற்பாடு செய்யக்கூடாதா
என்று நான் கேட்க விரும்புகிறேன்.



கிராமச் சாலைகளில் ஜல்லி ஊழல் என்பது ரொம்ப சர்வ
சாதாரணமாக இருக்கிறது. தார் ஊழல், மஸ்டர் ரோல் ஊழல்
என்றும் இன்றைக்கும் தொடர்கிறது. தார் கொண்டு வராம
லேயே வந்ததாகப் பட்டியல் போட்டு பல ஆயிரம் ரூபாய் பட்டு
வாடா செய்யப்படுகிறது. வெளி மாநிலங்களுக்கு லாரி லாரியாக
தார் கடத்தப்பட்டு பல கோடி கொள்ளை அடிக்கப்படுகிறது.
சாலைகள், பாலங்கள் ஆகியவற்றின் பணிகளுக்குத் தேவையான
பொருட்களை, அதற்குரிய விகிதாச்சார முறைப்படி பயன்படுத்
தாததினால், சிறு மழை பெய்தால் கூட, அந்தச் சாலை பாழாய்ப்
போய்விடுகிறது. ரோடு போடாமலேயே ரோடு போட்ட கதை
களை நாம் தமிழ்நாட்டிலே ஏராளமாகப் பார்த்திருக்கிறோம்
சென்ற காலத்தில். அது தொடரக் கூடாது என்பதற்காகவே
நான் இந்த விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே
நெடுஞ்சாலைத் துறையில் இருக்கக்கூடிய ஊழலைக் கண்டுபிடித்து
களைவதற்கு ஒரு கண்காணிப்புக் குழுவை அமைச்சர் அவர்கள்
அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
இந்த ஊழலைத் தடுக்காமல் மேம்போக்காக நாம் எவ்வளவு
திட்டங்களைக் போட்டாலும் அதனால் பயன் கிடைக்காது
என்பதையும் நான் நினைவு படுத்த விரும்புகிறேன்.

17-00 மணி

பணிமனைகள்,
துறையிலுள்ள லாரிகள், ரோலர்கள், இடங்களில்
சென்னை, கோவை, புதுக்கோட்டை, மதுரை ஆகிய இடங்களில்
இருக்கின்றன. அங்கு ஆயிரத்திற்கும் மேலாக காலியிடங்கள்
இருக்கின்றன. அந்த காலியிடங்களைப் பூர்த்தி செய்யவில்லை.
இது என்ன நோக்கம் என்று நான் கேட்க விரும்புகிறேன். போது
மான ஆட்கள் வைக்காததினால், 100 கோடி ரூபாய் வரை
முதலீடு செய்யக்கூடிய இத்துறை லாரிகள், உருளைகள், பணி
மனைகள் பயன்படுத்தப் படாமல் இருப்பதை, அமைச்சர்
அவர்கள் அறிவாரா, அதோடு மட்டுமல்லாமல்,
நட்டத்தில் நடப்பதாகக் கதை கட்டி, காண்டிராக்டர்களின்
வாகனங்களையே பயன்படுத்தி, பல நூற்றுக்கணக்கான பணம்
இன்றைக்கு கொள்ளையடிக்கப் படுகிறது என்பதையும் அமைச்சர்
அறிவாரா? கிட்டத்தட்ட ஆயிரம் காலியிடங்களைப் பூர்த்தி
செய்து, அந்தப் பணிமனைகளையும், லாரிகளையும், ரோலர்
களையும் இயங்க வைத்து, காண்ட்ராக்டர்களின் கொள்ளையி
லிருந்து பாதுகாப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன்.

பொதுப் பணித் துறையைப் பொறுத்த வரையில், உய்ய
கொண்டான் வாய்க்கால் பராமரிப்பை உடனடியாகக் கவனிக்க
வேண்டும். திருவெறும்பூர் ஒன்றியத்திற்கும், அதற்குப் பிறகு
மேற்குத் தஞ்சைப் பகுதிக்கும் பாசனத்திற்கான ஒரு பிரதான
வாய்க்கால் இது. இந்த வாய்க்காலின் நிலை மிகவும் பரிதாப
மானது. தண்ணீர் திறந்து விட்டால், மூச்சை விட்டுவிட்டு,
கொஞ்சம் கொஞ்சமாக நகருகிறது. பிராண வாயு தேவைப்
படும் மனிதனைப் போல, நோயுள்ள மனிதனைப் போல.
தண்ணீர் திறந்து விட்டால், அது வருவதற்கு லேட் ஆகிறது,

ஏனென்று சொன்னால் அது நோய் பிடித்து இருக்கிறது. 1974
லே ஓரளவுக்கு ' ரீ-மாடெலிங் ' பண்ணினது ; இன்னும் பண்ண
வில்லை. எனவே, இந்தத் திட்டத்திலே அதைச் சேர்த்து செய்ய
வேண்டுமென்று சொல்லி, அது தூர்ந்து போய் விட்டது ; மண்
மேடிட்டு இருக்கிறது ; குழுமிகளும் கழுமிகளும் படுமோசமாகி
இருக்கிறது ; அதனாலே காவிரியிலே 800 கன அடி தண்ணீர்
திறந்து விட்டாலும்— அல்லது 500 கன அடி தண்ணீர் விட்டாலும்
அது நிறைந்து இன்னொரு குடமுருட்டி ஆற்றுக்கு அந்த நீரெல்
லாம் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. நம்முடைய பொதுப்
பணித் துறை அதிகாரிகள் அந்த வாய்க்காலின் களிங்கை இரண்டு
அடி உயர்த்தி கட்டி, அதோடு திருச்சி நீதிமன்றத்திற்கு அருகி
லுள்ள புத்தூர் பாலம் வரையிலும் கரைகளை சீர்படுத்தி, புத்தூர்
பாலத்திலிருந்து செந்தண்ணீர்புரம் வரை— திருச்சி நகராட்சி
யினுடைய கழிவு நீர் பூராவும் அதில் கலக்கிறது. அவ்வாறு
கலப்பதைத் தடுக்க வேண்டுமென்றும், அதற்காக நிதி ஒதுக்க
வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், சென்ற ஆண்டு அந்தத் தொகுதியில் பல
குளங்கள் புல்டோஸர்கள் மூலமாக புதுப்பிக்கப்பட்டது. இந்த
ஆண்டும் அதைத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து, பல குளங்
களைச் சீர்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
அப்போதுதான், வேறு அடுத்த மாவட்டத்திற்கும் தண்ணீர்
தாராளமாகக் கிடைக்க முடியும். உய்யகொண்டான் வாய்க்
காலில், வாழவந்தான் கோட்டையில் ' எக்ஸ்டென்ட் ' கால்
வாய்க்குப் பதிலாக இன்னொரு கால்வாய் தனியாக வெட்டுவதற்
கான ஏற்பாடு இருக்கிறது. அதேபோல், அந்தப் பகுதியிலே,
பொய்கைத் துறையிலே கட்டளைக் கால்வாயிலிருந்து வெட்டுவ
தற்கான திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த இரண்டு
பகுதி விவசாயிகளும் அச்சப்படுகிறார்கள். மேற்கு தஞ்சைக்கு
பாசனத்திற்கு நாம் தண் ணீர் கொடுத்துவிட்டால், நமக்கு கஷ்டம்
இருக்காதா என்ற ஒரு நிலை இருக்கிறது. என்னைப் பொறுத்த
வரையில், அடுத்த மாவட்டத்திற்கு தண்ணீர் கொடுக்கக் கூடாது
என்ற கொள்கை உள்ளவர்கள் அல்ல. இதை பாதிக்காமல்
செய்ய வேண்டுமென்று அமைச்சரிடத்திலும் கூறியிருக்கிறேன்.
எனவே, இரண்டு தரப்பாரையும் அழைத்துப் பேசி, ஒரு ஒற்று
மையை உருவாக்கி, வேலைகளை துவக்கினால் உதவிகரமாக
இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு
அந்தக் குளங்கள் மேடிட்டுப் போனதை ஆழப்படுத்த வேண்டு
மென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், உய்யகொண்டான் வாய்க்கால் நீரால் பாசன
வசதி பெறும் கிளை வாய்க்கால் ஒன்று இருக்கிறது. அதில்
ஏறத்தாழ 3,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆனால்
அந்த வாய்க்கால் பகுதியை ஆக்கிரமிப்பு செய்வதால், அதில்
தண்ணீர் வருவதில்லை. விஷ்ணுலத்தலை என்ற மடை ரொம்ப
நாட்களாகப் பூட்டிக் கிடக்கிறது. மூடிக் கிடக்கிறது. அதைத்





திறந்து விடுவார்களேயானால், தண்ணீர் கிடைக்கும். அதை
ஏன் மூடிவிட்டார்கள் என்று தெரியவில்லை. அதில் பேய்
இருக்கிறது ; பிசாசு இருக்கிறது என்று சொல்கிறார்கள்.
அதனால், அமைச்சர் அவர்கள் ஒரு நாளைக்கு அங்கு வந்து,
அதையெல்லாம் விரட்டிவிட்டு, அந்த மடையைத் திறந்தால்,
3,500 ஏக்கராவிற்கு நீர் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்றை ஞாபகப்படுத்தியாக வேண்டும்.
என்னுடைய தொகுதியில் ஆலத்தூர் ஊராட்சியில், 45 ஏக்கர்
பரப்பளவுள்ள மாவடி குளம்—என்னைப் பார்த்தாலே, அமைச்ச
ருக்கு மாவடிக் குளம் ஞாபகம் வரும் ; ஆனால், பிரயோசனம்
இல்லை. ஏனென்று சொன்னால், ஒரு தனிக் குடும்பம் அதை
ஆக்கிரமித்துக் கொண்டு சாகுபடி செய்தார்கள். குளத்தையே :
அதை எடுக்க வில்லை. சென்ற கால ஆட்சியில் அதைத் தட்டிக்
கொடுத்திருந்தார்கள். அங்கிருக்கக் கூடிய ரெவின்யூ அதிகாரிகள்
சிலரும், பொதுப்பணித்துறை அதிகாரிகளும் கொடுக்க வேண்டிய
தைக் கொடுத்து அதை சரிக்கட்டி வைத்திருந்தார்கள். ஆனால்
பாசனத்திற்கு இல்லாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டார்கள்.
சுற்றுப்புற வட்டாரத்தில் மழை பெய்தால், இடுப்பளவுக்கு
தண்ணீர் வரும். ஏனென்றால் அந்த அளவுக்கு தண்ணீர் போக
முடியாது. ரெயில்வே தொழிற்சாலை கழிவு நீர் வருவதால்.
எப்போது பார்த்தாலும் சாகுபடி செய்யலாம் ; அந்த ஆக்கிர
மிப்பை நீக்க வேண்டுமென்று பல தடவை சொல்லி, மனமிரங்கி,
ஒரு வருடமாகப் போராடி, பின் செய்தார்கள். மார்ச் மாதம்
போய் ஆக்கிரமிப்பை நீக்க வேண்டுமென்று போனார்கள். ஏ.இ.,
ஜே.இ. இன்னும் சில ஆட்களும். முதலிலே திட்டமிட்டது,
அமைச்சருடன் நம் துறைசெயலாளர் திரு. முருகராஜ், ஐ.ஏ.எஸ்.
அவர்கள் பேசி, கலெக்டரிடத்தில் போலீஸ் படையை அனுப்ப
வேண்டுமென்று சொன்ன பிறகும், அந்த அதிகாரிகள் தான்
தோன்றித்தனமாக தனியாகச் சென்று, சில அதிகாரிகளோடு
காவல்துறை உதவி இல்லாமல் சென்று, சில அடியாட்களை
வைத்து அவர்களை விரட்டியிருக்கிறார்கள். இவர்களே தீர்த்து
வைத்திருக்கிறார்கள். உண்மையிலேயே மானம் போகிறது;
அவமானமாக இருக்கிறது. ஒரு அரசாங்கத்தினுடைய
ஆணையை பின்பற்றவில்லை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட
விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

17-05 மணி

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் ஏதோ மடையிலே
பேய் பிசாசு எல்லாம் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அப்படி
என்றால் அங்கேயுள்ள விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சுவதற்குத்
தயங்குகிறார்களா ? அமைச்சர் அவர்கள் அந்தப் பேய் பிசாசை
விரட்டுவதற்கு முயற்சி எடுப்பார்களா என்பதை நான் அறிய
விரும்புகிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களும் வரட்டும். நானும் அமைச்சரும் போய் தான் அந்த பேயை விரட்ட முடியும். எங்களைப் பார்த்தால் பேய் நிற்காது என்பது தெரியும். அது ஏதோ நோக்கத்தோடு மூடியிருக்கிறார்கள். என்பதை திரு. ஈஸ்வரன் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஏ. இ. மீதும், ஜே. இ. மீதும் எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது, அவர்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவி செய்து இருக்கிறார்கள். அவர்கள் ஸ்டே வாங்குவதற்கு உதவி செய்திருக்கிறார்கள். கையெழுத்துப் போடாமல், தேதி குறிப்பிடாமல் ஒரு எவிக்ஷன் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். கோர்ட்டிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் கையெழுத்து போடாமல், தேதி இல்லாமல் என்ன எவிக்ஷன் நோட்டீஸ் என்று கேட்கின்ற அளவுக்கு ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இன்றைக்கு ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள்? முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களின் ஆட்சி இன்றைக்கு நடக்கிறதா அல்லது அந்த ஊரிலே இருக்கின்ற ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் 10 ஆண்டுகளாக அந்தப் பகுதியை ஆக்கிரமித்து கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்களே, அந்த நபரின் ஆட்சி இன்றைக்கு நடக்கிறதா என்று நினைக்கின்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதனைத் தன்னுடைய சொந்த மானப் பிரச்சினை யாக எடுத்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார். ஆனால் அடுத்த ஆண்டு வரை நீடிக்க விடக்கூடாது என்பதை நான் அவருக் குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு உண்மையி லேயே அந்தப் பகுதிக்குப் போவதற்கு அவமானமாக இருக்கிறது. எனவே அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரையில் திண்டுக் கல், சிறுமலை அடிவாரத்தில் கட்டப்பட்ட அணை வேலை முடிந்து 4 வருஷம் ஆகியும் அது செயல்படவில்லை. விவசாயி களுக்கும் நஷ்டஈடு தரவில்லை. இன்னும் எத்தனை நாட்கள் காத்துக்கொண்டு இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் தான் சொல்லவேண்டும். ஐரோப்பிய பொருளாதார உதவித் திட்டத்தில் தர்மபுரி மாவட்டமும் சேர்க்கப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். கனவாக இருந்ததை நனவாக்கி மோர்தானா அணையைக் கட்டுவதற்காக நிதி ஒதுக்கியதற்காக எங்களுடைய தோழர் திரு. கே. ஆர். சுந்தரத்தின் சார்பாக எங்களுடைய பாராட் டுக்களை அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த நன்றி முழுமை பெறவேண்டும் என்றால் பத்திரப்பள்ளி, செண்பகத்தோப்பு அணையைக் கட்டவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருப்பூரில் இரயில்வே மேம்பாலம் புதிதாக அமைக்கப்படும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆரம்ப நடவடிக்கை கள் எடுத்தும், இன்னும் பணி துவங்கப்படவில்லை என்பதைச்



சொல்லிக் கொள்கிறேன். எப்போது அந்தப் பணி தொடங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள் மூன்று நாட்களில் சீக்கிரமாக, துரிதமாக ஃபைல்கள் எல்லாம் நகரும் என்று. ஆனால் இவற்றைப் பொறுத்தவரையில் வருஷம் போனாலும் நகரமாட்டேன் என்கிறது. என்ன விஷயம் என்பதை அமைச்சர் அவர்கள் தான் சொல்லவேண்டும்.

திருப்பூர் நகரைச் சுற்றி ஒரு ரிங் ரோடும், பை பாஸ் ரோடும் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பழனி தொகுதியைப் பொறுத்தவரையில் போன ஆண்டு 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழனி மானூர் அருகே பாலம் கட்ட சாங்ஷன் ஆகியும் இன்னும் ஏற்பாடு செய்யவில்லை. அங்கே பஸ் வந்தபோது அடித்துச் செல்லப்பட்டு 5 பேர் செத்து இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அது எப்போது கட்டித் தரப்படும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, பொதுப்பணித்துறை தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : 10 மணித்துளி கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடியுங்கள்.

திருமதி பாப்பா உமாநாத் : பொதுப்பணித்துறை தொழி லாளர்கள், அதாவது என். எம். ஆர். தொழிலாளர்கள் விஷயமாக ஏற்கனவே பேசி இருக்கிறோம். 10 வருஷம் ஆனவர்களை எடுத்துக் கொள்வதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். பாதி வெளியே வந்திருக்கிறது. பாதி வரவில்லை. 314. 3 மாதம் ஆகிவிட்டது. இரண்டாவது அட்டை வரவில்லை. அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது ரொம்பச் சுரண்டல். மே தினத்தை நேற்று கொண்டாடிவிட்டு, இன்றைக்கு இந்த சுரண்டலைத் தீர்க்க அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப் போது என்னமோ படிப்பு, தகுதி பற்றி எல்லாம் பேசுவதாக நான் கேள்விப்பட்டேன். படிப்பும் வேண்டாம், ஒன்றும் வேண் டாம். 10 வருஷத்திற்கு மேலே அவர்கள் பாடுபட்டு இருக்கிறார் கள். அவர்களை எல்லாம் நிரந்தரப்படுத்த வேண்டும். அவர் களுக்கு 18 ரூபாய் நீங்கள் கொடுக்கிறீர்கள். மத்திய பொதுப் பணித்துறை 39 ரூபாய் கொடுக்கிறது. ஒப்பந்தக்காரர்கள் 35 ரூபாய் கொடுக்கிறார்கள். நாமும் 35ரூ. கொடுத்தால் பரவா யில்லை. ஆனால் நீங்கள் என்னமோ ஒரே ஒரு ரூபாய் என்று பிச்சைக்காரர்களுக்கு பிச்சை போடுவது மாதிரி சொல்லியிருக் கிறீர்கள். அது நியாயம் அல்ல. அவர்களுக்கு 35 ரூபாய் கொடுக்க வேண்டும். மேலும் அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த மாதிரி பொதுப் பணித்துறை ஆய்வாளர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் கணக்கிட்டு ஓய்வூதியமும், மற்ற சலுகைகளும் அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். 1960-ஆம் ஆண்டு முதலே அவர்கள் பணியில் உள்ளவர்கள். ஆனால் 1970-ஆம் ஆண்டு முதல் தான் கணக்கிடப்படுகிறது. இது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவெரம்பூர் ஒன்றியத்தில் அரசங்குடி ஊராட்சியைச் சேர்ந்த முடுக்குப்பட்டி கிராமம் இருக்கிறது. அதற்கு இரண்டு ஆறுகளைக் கடந்து தான் வரவேண்டி இருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து பார்த்தார்கள். எப்போதுதான் அவர் முடிவு எடுக்கப் போகிறாரோ தெரியவில்லை. ரொம்பப் பேர் சொல்கிறார்கள். பாப்பா உமாநாத் துரைமுருகனிடம் எல்லா மனுக்களையும் கொடுக்கிறார். உடனே அது நடந்துவிடுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரிவதில்லை, ஒரு வருஷமாக ஒரே பிரச்சினையை நான் சொல்லிக்கொண்டு இருப்பது அவர்களுக்கெல்லாம் தெரியாது. நான் அடிக்கடி மனு கொடுத்தாலும் திரு. துரைமுருகன் எல்லாவற்றையும் செய்துவிடவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன். அடுத்து, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, போன்ற துறைகளில் இருக்கக்கூடிய ஊழல் களையப்பட வேண்டும். அந்த ஊழல்கள் களையப்பட்டு நல்ல முறையில் செயல்படுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

17-10 மணி

**திரு. ந. சௌந்திரபாண்டியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990—91-ஆம் ஆண்டுக்கான பொதுப் பணிகள், கட்டிடங்கள், சாலைகள், பாலங்கள், பாசன வசதி ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி.

இந்தத் துறை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் நிர்வாகத்திற்கு வந்தபிறகு, கடந்த காலத்தில் ஒளியிழந்து இருந்த இந்தத்துறை இப்போது ஒளிபெற்று இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடக்கடமைப் பட்டிருக்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில், அமைச்சர்கள் யாரைக் குறிப்பிடுகிறார்களோ அவர்களுக்குத்தான் காண்ட்ராக்ட் என்ற நிலை இருந்ததை மாற்றி, இன்று தகுதியின் அடிப்படையில் யார் வேண்டுமானாலும் பொதுப் பணித்துறையில் காண்ட்ராக்ட் எடுத்துக் கொள்கிற ஒரு நிலைமை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்த நிர்வாகத் திறமை மூலமாக



இன்றைக்கு உருவாகியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த காலத்திலே இருந்த அமைச்சர்கள் தலைமைப் பொறியாளர்களிடம் என்னென்ன செயற்குறிப்பு இருக்கிறது என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்ட நிலைமை மாறி, இன்றைக்கு இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோட்டப் பொறியாளர்களிடம் அவர்களுடைய பெயரைச் சொல்லி அழைத்து, என்னென்ன செயற் குறிப்புகள் இருக்கின்றன என்று தெரிந்து கொள்கிற அளவுக்கு அந்தத் துறையில் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பதையும், இந்தத் துறையில் எந்த அளவுக்கு கடந்த ஓராண்டாக அனுபவம் பெற்றிருக்கிறார் என்பதையும் அவர் அவ்வப்போது அளிக்கின்ற பதில்களில் இருந்து நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

நெடுஞ்சாலைத் துறையில் நிரந்தர வட்டம் என்றும் ஊரகச் சாலை வட்டங்கள் என்றும் இரண்டு பிரிவுகள் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு வட்டத்தினை நிர்வகிக்கும் கண்காணிப்புப் பொறியாளர் நிரந்தர வட்டச் சாலைகளை மட்டும் பார்வையிடுகிறார். மற்றொரு கண்காணிப்புப் பொறியாளர் ஊரகச் சாலைகளை மட்டும் பார்வையிடுகிறார். அதாவது ஒரே இடத்தில் இருக்கும் இரண்டு விதமான சாலைகளை இரண்டு கண்காணிப்புப் பொறியாளர்கள் பார்வையிடுகிறார்கள் எனவே, இதைத் தவிர்த்து, 6 மாவட்டங்களுக்கு ஒரு நெடுஞ் சாலை வட்டம் என்று செயல்படும் நிரந்தர வட்டத்தையும் கிராமச் சாலை வட்டத்தையும் இணைத்து 3 மாவட்டங் களுக்கு ஒரு நிரந்தர வட்டம் ஆக செயல்படச் செய்தால் கண்காணிப்புப் பொறியாளரின் நிர்வாகமும் ஆய்வு மற்றும் சாலைப் பராமரிப்பும் நன்கு செயல்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துறையில், தாலூக்காவில் உள்ள அனைத்துச் சாலைகளையும் நிர்வகிக்கிற பொறுப்பு உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு தற்போது இருக்கிறது. அவர்கள் சாலைகளைப் பராமரிக்கிற நேரத்தில் மழைக்காலங்களில், புயல் அடிக்கிற காலங்களில் எல்லாம், உடனடியாக அங்கே சென்று பார்த்து நடவடிக்கை எடுக்க முடியாத நிலை தற்போது இருக்கிறது. காரணம், அவர்களுக்கு வாகன வசதியில்லை என்ற குறையைச் சொல்கிறார்கள். எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் அவர்களைத் தொடர்பு கொள்ளக்கூட அவர்களிடம் தொலைபேசி வசதி கூட இல்லை. இது அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. எனவே அவர்களுக்கு தொலைபேசியும், வாகன வசதிகளும் செய்து கொடுப்பதன் மூலம் மேலும் அவர்கள் நல்ல விதமாகப் பணியாற்றுவார்கள் என்ற நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ந. சௌந்திரபாண்டியன்]

நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்க போதுமான நிதிவசதி இப்போது இல்லை. உதாரணமாக ஒரு நிரந்தரக் கோட்டத்தில் சாதாரணமாக 2,000 கிலோ மீட்டர் நீள சாலைகள் உள்ளன. அதை 5 வருடத்திற்கு ஒருமுறை மறு தார் இட்டு செப்பனிடுதல் செய்ய வேண்டும். ஒரு வருடத்திற்கு 400 கிலோ மிட்டர் தான் செய்ய முடியும். இந்த 2,000 கிலோ மீட்டரை மறு செப்பனிட குறைந்தது 5 வருடங்கள் ஆகும். அதற்கு வருடத்திற்கு 300 லட்சம் ரூபாய் தேவைப்படும். மேலும் சாலைகளைப் பாதுகாப்பதற்காகவும் மற்றும் கூடுதல் பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்கவும் ஒரு கோட்டத்திற்கு 100 லட்சம் ரூபாய் செலவாகிறது. ஆக மொத்தம் ஒரு ஆண்டுக்கு ஒரு கோட்டத்திற்கு ஆகும் மொத்த செலவு 400 லட்சம். ஆனால் கடந்த காலத்தில் ஒரு கோட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 200 லட்சம் ரூபாய்தான். ஆகவேதான் சாலைகள் சரியாகப் பராமரிக்கப்பட முடியவில்லை. மேலும் காலம் கடந்து தார் பாய்ச்சல் மூலம் வேலைகள் செய்தால், சாலைகளின் அடித்தளம் வலுவிழந்துபோய், ஒன்றுக்கு மூன்று பங்கு செலவாகிறது.

17-15 மணி

இந்த அதிகபட்ச செலவினை தடுப்பதற்காக 5 வருடங்களுக்கு ஒருமுறை தார் புதுப்பித்தல் செய்யப்பட வேண்டும். எனவே, இதற்கு ஆகும் நிதியை அரசு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தமிழக அரசு சாலை நிதி குழுமம் என்ற ஒன்றை, ஸ்டேட் ரோடு பண்ட் என்கின்ற ஒன்றை நிறுவ வேண்டும். சாலை நிதி என்று இன்றைக்கு ஒதுக்கப்படுகின்ற தொகை முழுமையாக சாலைக்காக செலவிடப்படுவதில்லை தற்போது அந்த நிதி 4 சதவிகிதம்தான் சாலைகளுக்காக செலவிடப்படுகிறது. அந்த நிலை மாறி சாலைகளுக்கு குறைந்தது 5 சதவிகிதமாவது ஒதுக்கினால்தான் நிச்சயமாக சாலைகளைச் செப்பனிட வசதியாக இருக்கும். நாங்கள் போக்குவரத்து அதிகாரிகளைச் சந்தித்து கிராமங்களுக்கு பஸ் விட வேண்டுமென்று கோருகிற நேரத்தில் சாலைகள் சரியில்லை என்ற குறையினை அவர்கள் சொல்கிறார்கள். இதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு, பார்க்கிற நேரத்தில் சாலைகள் சரியாக இருக்குமேயானால் போக்குவரத்துக்கு பஸ்களை உபயோகப் படுத்துகிறபோது அந்த வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிக்கிற செலவு கூட குறையும் நிலை இருக்கிறது. ஆகவே, சாலைகள் நன்றாக இருப்பதன் மூலம் போக்குவரத்து உபயோகத்திற்கு சாலைகளைப் பயன்படுத்தும்போது வாகனங்களினுடைய பராமரிப்பு செலவு, பழுதுபார்த்தல் போன்ற செலவினங்கள் கட்டுபபடுத்தப்படுகிற நிலை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணமாக, சமயநல்லூர் தொகுதியில் சில்லூரில் இருந்து ளமங்கலம் என்ற ஊர் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது



[திரு. ந. சௌந்திரபாண்டியன்]

அது பல வருடங்களாக புதுப்பிக்கப்படாமல் குண்டும் குழியுமாக உள்ளது. மேலும், சில பகுதிகளில் தாழ்வாக இருக்கிற நிலை இருப்பதால் ஒவ்வொரு மழைக்காலத்திலும் போக்குவரத்து தடைப்படுகிறது. போதிய நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் போதிய பராமரிப்பு செய்யப்படாமல் உள்ளதாக துறையில் உள்ளவர்கள் சொல்கிறார்கள். எனவே, இந்த சாலையைச் செப்பனிட போதிய சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் இருக்கிற மாங்குளம் சாலை, கடச்சகந்தல் - திருவாதூர் சாலை, பனைக்குளம் சாலை, வண்டியூர் - மேலமடை சாலை, வலைச்சிகுளம் சாலை ஆகிய சாலைகள் எல்லாம் மோசமான நிலையில் உள்ளதால் அரசு இவற்றுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுரையிலிருந்து சிவகெங்கைக்கு செல்கிற சாலை தற்போது ஒருவழி சாலையாக இருக்கிறது. வரிச்சியூர் வழியாக செல்கிற அந்த சாலை தற்போது ஒருவழி சாலையாக இருக்கிற காரணத்தால் போக்குவரத்திற்கு மிகவும் நெருக்கடியான ஒரு நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை - சிவகெங்கை சாலையை இருவழி சாலையாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பாலங்களைப் பொறுத்தமட்டிலும் 11-8-1989 அன்று மதுரை—அருப்புக்கோட்டை சாலையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்து மதுரை மக்களுடைய பாராட்டுதலுக்கும் நன்றிக்கும் ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதையும், மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை உறுதிப்படுத்துகின்ற வகையில், மதுரை - அருப்புக்கோட்டை, சாலையை அமைத்து, அங்கே இருக்கின்ற அந்தப் பாலத்திற்கு 'என். எம். ஆர். சுப்பராமன் மேம்பாலம்' என்ற பெயரை வைத்து, சிறப்புபட செய்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மதுரை - வைகை ஆற்றின் குறுக்கே, கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக ஆல்பர்ட் விக்டர் என்ற பாலம் இருக்கிறது. வல்லுநர்கள் எல்லாம் அதனுடைய ஆயுள்காலம் 100 ஆண்டுகள் என கூறியும் கூட, இன்று அது 100 ஆண்டுகளுக்கு மேலாக மதுரையின் வட பகுதியையும் தென் பகுதியையும் இணைக்கிற பெரிய பாலம் இந்த ஆல்பர்ட் விக்டர் பாலம்தான். எனவே, 100 ஆண்டுகளுக்கு மேலாகிய இந்த பாலத்தை தவிர்த்து விட்டு புதிதாக அங்கே பாலம் அமைக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ந. சௌந்திரபாண்டியன்]

அடுத்து, சமயநல்லூர் சாலை மேம்பாலம் முடிவடையாத நிலையில் தற்போது இருக்கிறது. அதனுடைய வேலை தற்போது முடிவடையாத நிலை இருந்தாலும்கூட அங்கு நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்று நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தவர்கள் சொல்கிறார்கள். வருவாய்த் துறையிலிருந்து எங்களுக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுப்பார்களேயானால் நாங்கள் நிச்சயமாக அந்த வேலையைத் துரிதமாக முடிக்க முடியுமென்று கூறுகிற காரணத்தாலே, அந்த வேலையைத் துரிதப்படுத்தி, விரைவாக முடிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

17-20 மணி

நீர்ப்பாசனத்தை பொறுத்தமட்டில் மாண்புமிகு அமைச்சரவர்கள் மாவட்டந்தோறும் நீர்ப்பாசனக் கருத்தரங்கு என்று ஏற்படுத்தி அந்தக் கருத்தரங்குகள் மூலமாக விவசாயிகள் அனைவரையும் அழைத்து அவர்கள் கருத்துக்களைக் கேட்டு செயற்படுத்துவதன் மூலமாக இன்று மதுரை மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் அது சிறப்பு பெற்றிருக்கிறது என்பதையும், மேலும் பாசன மேம்பாடு நீர் ஆதாரங்கள் ஆணைக் குழு ஒன்று ஏற்படுத்தி, விவசாயிகளைச் சந்தித்து பல திட்டங்களைத் தீட்டி, உதவி புரிந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியாறு அணை பாசன முறை நவீனப்படுத்துதலை அரசு போர்க்கால நடவடிக்கையாக எடுத்து, விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய சமயநல்லூர் தொகுதியிலுள்ள கள்ளத்திரி 9-வது வாய்க்காலில் கோடை பாசனம் உள்ள நிலங்களில் மாமூல் கோடை இருப்பதை நிரந்தரமாக இருபோகப் பாசன வசதி செய்ய வேண்டும். மேலும் இந்த ஆண்டு பருவ ஆரம்பத்திலேயே, தென் மேற்குப் பருவக் காற்று பருவத்திலேயே 152 அடியாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 3-வது கட்டப் பணியில் சட்ரஸ் பணியை ராணுவ நடவடிக்கை போல் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

அடுத்து, கண்மாய்களை ஆழப்படுத்துதல். கண்மாய்களை ஆழப்படுத்துவதை காண்ட்ராக்டர்களிடம் விடுவதைத் தவிர்த்து அரசே அதை எடுத்துச் செய்ய வேண்டும். அல்லது கண்மாய் பாசானத்தை உபயோகித்துக் கொண்டிருக்கும் அந்த விவசாயிகள் மூலம் குழு அமைத்து அதன் மூலம் விட வேண்டும்....

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாசனம் என்பதற்கு 'பாசானம்' என்கிறார்......

**மாண்புமிகு . பேரவைத் தலைவர்:** அதிக நீர்தேங்கி அந்த இடம் பாசானம் பிடித்துவிட்டது. (சிரிப்பு).



**திரு. ந. சௌந்திரபாண்டியன்:** அடுத்து பழைய முறைப்படி குடி மராமத்து முறையைக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தற்போது குளங்கள் அனைத்தும் தூர் எடுக்கப்படுகிற நேரத்தில், அது தனிப்பட்டவர்களுடைய கையிலே இருக்கிற காரணத்தாலே முறைகேடுகள் நடப்பதாகச் செய்திகள் வருகிற நிலை இருக்கிறது. எனவே அதனை அரசோ அல்லது கிராம மக்களோ செய்வதன் மூலம், மேலும் அது சிறப்படையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

வைகை ஆற்றில் பாசனத்திற்குத் தண்ணீர் வருகிறதோ, இல்லையோ, அழகர் ஆற்றில் இறங்குகிறபோது வருடாவருடம் தண்ணீர் விடும் வழக்கம் உண்டு. அப்படித் தண்ணீர் விடுகிறபோது அந்தத் தண்ணீரை விரகனூர் அணைக்கு விட்டு, தற்போது ஆயிரக் கணக்கான ஏக்கர்களில் பயிர்கள் வாடிக் கிடக்கும் குன்னத்தூர் பகுதிக்கு அதனைத் திறந்துவிடுவதன் மூலம், அவர்கள் பயனடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

17-25 மணி.

***திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்காக ஸ்ரீபெரும்புதூர் தொகுதி மக்களின் சார்பில் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியில் குன்றத்தூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. குன்றத்தூர் ஒன்றியத்தில் செம்பரம்பாக்கம் பாசன ஏரி உள்ளது. இந்த ஏரியின் நீர்ப்பரப்பு 29.78 சதுர மைல்கள் ஆகும். ஏரியின் நீர்ப் பரப்பு 19 ஆயிரத்து 59 ஏக்கர் விஸ்தீரணம் ஆகும். இதன் மூலம் 39 கிராமங்களிலுள்ள 13,220 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த ஏரியின் கொள்ளளவு 3,120 மில்லியன் கன அடியாகும். கரையின் நீளமோ 8,800 மீட்டர் ஆகும். இந்த ஏரிக்கு 3 கலங்குகளும், ஒரு ரெகுலேட்டரும் உள்ளது. ஏரியின் நீர்மட்டம் 22 அடி ஆகும். ஆனால் மழை காலங்களில் இந்த ஏரி நிரம்பி, கலங்குகள் திறந்து விடப்பட்டால், வெளியேறும் நீர் ஒரு வினாடிக்கு 35 ஆயிரத்து 746 கன அடி ஆகும். குறிப்பாக, 1985-ஆம் ஆண்டில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் பெரும் வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக அவருடைய இராமாவரம் இல்லத்தில் தங்க முடியாமல், கன்னிமரா ஹோட்டலில் சில நாட்கள் தங்கி இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதற்குக் காரணமே இந்த ஏரியில் நீர் பெருகினால் வெளியேற்றப்பட்ட நீர் தான். இந்த ஏரியின் கொள்ளளவு 22 அடிக்குமேல் 3 அல்லது 4 அடி நீர் அதற்கு மேல் அதிகமாகிவிட்டால் தண்ணீர் வெளியே வந்துவிடும். அந்த நீரால் சென்னையைச் சேர்ந்த கோட்டூர்புரம், அடையாறு

[திரு. ஏ. கோதண்டம்]

போன்ற நகரப் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்படும் என்பது கடந்த கால அனுபவத்தின் மூலம் தெளிவாகி உள்ளது. வெள்ளக் காலங்களில் வெளியேறும் தண்ணீர் அடையாறு ஆற்றிற்குப் போகும் கால்வாய்களை அகலப்படுத்தி சீர் செய்தால், தேங்கும் தண்ணீர் விரைவில் வடிய ஏதுவாக இருக்கும். மேலும் இந்த ஏரியை ஆழப்படுத்தி கரைகளை உயர்த்தி பலப்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஏரியில் 8 மதகுகள் மூலம் 39 கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்கள் விவசாயத்துக்காக நீரை பயன்படுத்துகிறார்கள். இந்த நீர் 39 கிராமங்களுக்கும் செல்லுகின்றபோது அந்த பொதுக் கால்வாய் தூர்ந்து போய் இருக்கின்ற காரணத்தால் நீர்ப் போக்கு சரிவர இல்லாமல் விவசாயத்துக்குத்தேவையான தண்ணீர் கிடைக்காமல் போகின்றது. அந்தப் பொதுக் கால்வாயின் நீளம் மொத்தம் 75 கிலோ மீட்டர் ஆகும். இந்த 75 கிலோ மீட்டர் தூரம் உள்ள பொதுக் கால்வாயை பொதுப்பணித் துறை மூலமாகவோ, குடிமராமத்து மூலமாகவோ ஆழப்படுத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். இந்த 75 கிலோ மீட்டர் போக எஞ்சியுள்ள 150 கிலோ மீட்டர் தூரத்தை அந்தக் கிராம பொது மக்கள் அந்தக் கால்வாய்களைச் சீர் செய்து கொள்கிறார்கள். எனவே அந்த 75 கிலோ மீட்டர் பொதுக் கால்வாயை அரசு விரைவாக ஆழப்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் விவசாயிகளுக்குப் பயன் ஏற்படும்; உணவு உற்பத்தியும் பெருக வாய்ப்பாக இருக்கும்; எனவே அதை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விரைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியிலுள்ள மணிமங்கலம் ஏரி மூலம் 2,079 ஏக்கருக்கு தண்ணீர் பாய்கின்றது. மழைக் காலங்களில் அடையாறு ஆற்றில் வீணாகப் போகும் தண்ணீரை ஒரத்தூர் ஓடை என்னும் இடத்தில் சுமார் 50 அடி நீளத்துக்கு தடுப்புச் சுவர் கட்டி நீரை படப்பை ஏரியில் விட வேண்டும். படப்பை ஏரியிலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் கால்வாய் வெட்டி அந்தத் தண்ணீரை மணிமங்கலம் ஏரியில் விட்டால் இரண்டு ஏரிகளின் மூலம் விவசாயிகள் முப்போகமும் பயிர் செய்து விவசாயம் பெருகும் என்று கூறிக்கொள்கிறேன்.

17-30 மணி

மேலும், இதே அடையாறு ஆற்றின் குறுக்கே கடந்த 1985-ஆம் ஆண்டில் அம்மணம்பாக்கம் என்னுமிடத்தில் தடுப்புச் சுவர் கட்டுவதற்காக சுமார் பத்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையால் டெண்டர் விடப்பட்டு, அப்பணி சென்னையைச் சேர்ந்த திரு. அப்துல் காதர் என்னும் ஒப்பந்தக்காரரால் எடுக்கப்பட்டு, தடுப்புச் சுவர் கட்டப்பட்டு, முடிக்காமல் பாதி வேலை நடைபெற்று, வேலை முழுமை பெறாமல் நிற்கின்றன. முடிவு பெறாமல் இருக்கும் இந்தத் தடுப்புச் சுவரை உடனடியாக முழுமையாகச் செய்து தர வேண்டுமாய் அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.



 [திரு. ஏ. ஆர். கோதண்டம்]

மேலும், வடக்கு பட்டு ஏரியின் மூலம் சுமார் 1,013 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. இந்த ஏரியையும் ஆழப்படுத்தி, கரைகளையும் பலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் அடங்கிய திருபெரும்புதூர் ஒன்றியத்திலுள்ள திருபெரும்புதூர் பாசன ஏரியின் மூலம் 1,423 ஏக்கர் நிலமும், பிள்ளைப் பாக்கம் ஏரியின் மூலம் 1,096 ஏக்கர் நிலமும் கீழ்ப்பொலூர், செந்தேரி ஏரியின் மூலம் 1,097 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறுகின்றன.

இவைகளைத் தவிர பாலாறு அணைக்கட்டிலிருந்து பம்பை கால்வாய் மூலம் 9,750 ஏக்கர் நிலமும் பாய்கின்றன. மேலும் 65 பொதுப் பணி ஏரிகள் மூலம் 12,375 ஏக்கர் நிலமும், முன்னாள் ஜமீன் ஏரிகள் 49-இன் மூலம் 6,690 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறுகின்றன.

ஆகவே, 32,438 ஏக்கர் நிலம் பாய்கின்றன. எனவே, திருபெரும்புதூர் ஒன்றியத்திலுள்ள இந்த ஏரிகளைப் பொதுப் பணித் துறையின் மூலம் ஆழப்படுத்தி, நீர் வரத்துக் கால்வாய்களை வெட்டி, கரைகளைப் பலப்படுத்தி, புதிய ரிவிட்மெண்ட் போடவும் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், சிறுபாசன ஏரியை 50 ஏக்கர்களுக்கு உட்பட்ட ஏரிகள் மட்டும்.....

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொதுப் பணித் துறையாகிய இந்த மானியக் கோரிக்கையின்போது அமைச்சரவர்கள் வெளியே சென்றிருக்கிறார் போல் தெரிகிறது. ஆனால், மேல் மாடத்தில் பார்க்கும்போது, அமைச்சர் அங்கே இருப்பது போலத் தெரிகிறது. (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோதண்டம் தொடர்ந்து பேசலாம்.

**திரு. ஏ. கோதண்டம்:** ஊராட்சி ஒன்றியங்கள் மேற்பார்வையிலும், 50 ஏக்கர்களுக்கு மேல் 100 ஏக்கர்கள் வரை உள்ள பாசன ஏரிகள் பொதுப் பணித் துறையின் மேற்பார்வையிலும் பராமரிக்கப்பட வேண்டுமென முன்பிருந்த அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது மேற்படி சிறு பாசன ஏரிகளை இதுநாள் வரை பொதுப் பணித் துறை பராமரிக்கவில்லை. இந்த ஏரிகள் கடந்த பல ஆண்டுகளாக ஒன்றியத்தாலும் பராமரிக்கப்படாமல், பொதுப் பணித் துறையாலும் பராமரிக்கப்படாமல் இரண்டுங் கெட்டான் நிலையில் கேட்பாரற்று உள்ளன.

[திரு. ஏ. கோதண்டம்]

இவ்வாறு பராமரிக்கப்படாமல் உள்ளதால் அந்த ஏரிகள் நீர் வரத்துக் கால்வாய்கள் தூர்ந்துபோய் விட்டன. இதனால், மழைக் காலங்களில் வரத்துக் கால்வாய்கள் மூலமாக ஏரிக்கு வர வேண்டிய தண்ணீர் திசை மாறி வீணாக வேறு வடத்திற்குச் சென்று விடுகின்றது. மேலும் இந்த ஏரிக்கு வருகின்ற சிறிதளவு தண்ணீரும் மதகுகள் ஓட்டையாக இருப்பதால் ஏரியில் தங்காமல் வீணாக வெளியேறி விடுகிறது. ஆகவே, இந்த வரத்துக் கால்வாய்களும் ஏரியின் மதகுகளும் பராமரிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது. ஆகவே, என்னுடைய தொகுதியில் குன்றத்தூர் ஒன்றியத்தில் 50 ஏக்கருக்குள் பாசனத்திற்குப் பயன்படும் 43 ஏரிகளும், திருபெரும்புதூர் ஒன்றியத்தில் 50 ஏக்கருக்கு மேல் 100 ஏக்கர் வரை பாசன வசதி பெறும் ஏரிகள் 42-ஐயும், இவை மூலம் 7,059 ஏக்கர்களுக்கு பாய்கின்றன.—இவைகளைப் பராமரிக்க ஒன்றியத்திற்கு ஆண்டுக்கு 20,000 ரூ. மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது மிகவும் குறைவானது. இந்தத் தொகையைக் கொண்டு ஒரு ஏரியைக் கூட பராமரிக்க முடியாது. எனவே, அருள்கூர்ந்து, இந்தத் தொகையை உயர்த்தி, ஆண்டிற்கு குறைந்தபட்சம் ஒன்றியத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கிடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

17-35 மணி

என்னுடைய தொகுதியில் எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை. 95 சதவீத மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். எனவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் உள்ள விவசாயிகளை காப்பாற்றும் பொருட்டு, ஏரிகள் நிறைந்துள்ள என்னுடைய தொகுதியை பராமரிக்கும் செலவிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

*திரு. ஆ. பாலையா : தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித் துறை மானிய கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் அணைகளில் இருக்கிற நீரைப் பயன்படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகள் இன்றையதினம் அந்தப் பகுதியில் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். 2, 3 தினங்களுக்கு முன்னால் குமரி மாவட்ட விவசாயிகள் எல்லாம் மிகப்பெரிய கிளர்ச்சியை, ஆர்ப்பாட்டத்தை பேரணியை நடத்தி அவர்களுடைய கோரிக்கைகளை இந்த அரசுக்கு வைத்திருக்கிறார்கள். பேச்சிப்பாறை அணைத்



[திரு. ஆ. பாலையா]

தண்ணீரை கூடங்குளம் அணு மின்சாரத் திட்டத்திற்கு உபயோகப்படுத்தக் கூடாது என்ற வகையிலும், பெருஞ்சாணி அணையிலிருந்து நீரை குடிதண்ணீருக்கு கொடுக்கக்கூடாது என்ற வகையிலும் குமரி மாவட்ட விவசாயிகள் நியாயமான கோரிக்கைகளை அரசுக்கு வலியுறுத்தியுள்ளார்கள்.

குமரி மாவட்டம் விவசாயத்தை நம்பி வாழ்கிற விவசாயிகள் அடங்கிய மாவட்டம் என்பதை இந்த அரசு நன்றாக அறியும். ஆகவே தான் விவசாயிகள் அணைத் தண்ணீரை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கு எதிராக இருந்து வருகிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பெருஞ்சாணி, பேச்சிப்பாறை அணைகளில் ஏராளமான நீர் இருந்தாலும் கூட கடைவரம்பு நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டு, பல இலட்ச ரூபாய்க்கான நெல் உற்பத்தி கடந்த வருடத்தில் இல்லாமல் போயிற்று என்பதை நான் கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் பேசி இருக்கிறேன். அரசு மட்டத்தில் கூடங்குளத்திற்கு பேச்சிப்பாறை அணைத் தண்ணீரை கொண்டு செல்லக்கூடாது என்கிற கோரிக்கைக்கு மாறான கருத்துக்கள் நிலவுவதாகவும்—அதைப்போல பெருஞ்சாணி அணையிலிருந்து நாகர்கோவிலுக்கும், கன்னியாகுமரிக்கும் குடிதண்ணீர் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை அரசு ஏற்படுத்தக் கூடாது என்றும் விவசாயிகள் கருதுகிறார்கள். மாறாக அத்தகைய சூழ்நிலையை அரசு ஏற்படுத்துமானால் நிச்சயமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகள் மிகப்பெரிய போராட்டத்தில் ஈடுபடக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை நான் இந்த அரசிற்கு சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். விவசாயிகள் நிலவரியோடு நீர் வரியும் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு மட்டுமே அணைத் தண்ணீரை உபயோகப்படுத்த வேண்டும். நாகர்கோவிலுக்கு......

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** துணைத் தலைவர் அவர்களே, கூடங்குளத்திற்கு தண்ணீர் கொடுப்பது என்பது விவாதத்திற்குரியதாக இருக்கிறது. நான் அதைப்பற்றி பதில்சொல்ல விரும்பவில்லை. ஆனால், நாகர்கோவில் மக்கள் குடிப்பதற்கு தண்ணீர் கூட கொடுக்கக் கூடாது என்று சொல்வது—அது மிக சொற்பமானது தானே, அதற்கு கூட இவ்வளவு பெரிய எதிர்ப்பு தெரிவிக்கலாமா ?

திரு. ஆ. பாலையா : துணைத் தலைவர் அவர்களே, எவ்வளவு தண்ணீர் எடுத்தாலும் அது விவசாயத்தைப் பாதிக்கும் என்பதால் தான் விவசாயிகள் அத்தகைய கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள். நாகர்கோவில் நகரத்திற்கு முக்கூடல் அணையிலிருந்து தண்ணீர்

[திரு. ஆ. பாலையா]

வினியோகம் செய்யப்படுகிறது. அந்த முக்கூடல் அணை நாகர் கோவில் நகரில் 40,000 மக்கள் வாழ்கிற போது கட்டப் பட்ட அணையாகும். இன்றைய தினம் நாகர்கோவில் நகரில் 2 1/2 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். மக்கள் பெருக்கத்திற்கேற்ப அந்த அணையைப் பெரிதுபடுத்தி, அணையில் ஏராளமான நீரைத் தேக்கி குடிநீருக்குப் பயன் படுத்துவதற்கு நகரசபை தயாராக இல்லை. நகரசபை என்ன நினைக்கிறது அணையிலே நீர் இருக்கிறது, அதை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணம்தான் அவர்களிடையே இருக்கிறதே தவிர, புதிய திட்டங்களை தயாரித்து, புதிய நீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்து, நாகர் கோவில் நகரத்திற்குத் தண்ணீர் வினியோகம் செய்யப்பட வேண்டும் என்ற நிலையில் நகரசபை இல்லை. என்னுடைய கோரிக்கையும் கூட பொதுப்பணித்துறை இன்றையதினம் பெருஞ்சாணி அணையிலிருந்து நாகர்கோவிலுக்கும், கன்னியா குமரிக்கும் தண்ணீர் கொடுக்க அனுமதி அளித்துள்ளது. அது சரியான முடிவல்ல. எனென்றால், அடுத்து விவசாயக் காலம் தொடங்கப்பட இருக்கிறது. விவசாயத்திற்கு அணைத் தண்ணீர் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும். இதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே எந்த அணையாக இருந்தாலும்..........

17-40 மணி

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு உறுப்பினர் பாலையா அவர்கள் நீண்ட நெடுங்காலம் அரசியலிலே இருப் பவர். அப்படியே முக்கூடல் அணையிலிருந்து, அதைப் பலப்படுத்தி, அல்லது அதை பெரிதாக்கி, நாகர்கோவிலுக்கு தண்ணீர் கொடுப்பது என்றாலும் கூட ஒரு நாளிலே அது நடக்காது. இரண்டாவது அதற்கு எவ்வளவு வரத்து வரும் என்பதைப்பற்றி என்னைவிட அவர்களுக்கு அதிகமாகத் தெரியும். முக்கூடல் அணையைப் பெரியதாகக் கட்டிவிடலாம். அது ஒன்றும் பெரிதல்ல. ஆனால் பெரிய அணையாக, எவ்வளவு தண்ணீர் வரும், வரத்து உண்டா என்பதைப் பற்றி என்னைவிட அவர்களுக்கு அதிகமாகத் தெரியும். ஆகையினாலே இது ஒரு நீண்டகாலத் திட்டம். அரசு நீங்கள் சொல்கிற கருத்தைப் பரிசீலிக்கும். ஆகையினாலே உங்களுடைய கருத்து தண்ணீர் கொடுக்கவே கூடாது குடி நீருக்கு என்று சொன்னது பயங்கரமாக இருக்கிறது. அதற் காகத்தான் சொல்கிறேன்.

**திரு. ஆ. பாலையா :** நான் கேட்டுக் கொள்வது எல்லாம், குடிநீர் ஆதாரத்தை நகரசபை உருவாக்க வேண்டும். விவசாயிகளுடைய கிளர்ச்சி ஏற்படுகிறபோது தான் அவர்கள் நீர் ஆதாரத்தைத் தேடி அலைகிறார்கள்.



[திரு. ஆ. பாலையா]

முக்கூடல் அணை ஏராளமான அளவில் ஆக்கிரமிப்பு செய்யப் பட்டு இருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கிற அளவிலே தான் நகரசபை நிர்வாகம் நடந்து கொண்டு இருக்கிறது. நான் சொல்கிறேன் ஆக்கிரமிக்கப்பட்ட அந்தப் பகுதிகளை எல்லாம் எடுத்து, அணையை பெரிய அணையாகக்கட்டி, வருகின்ற நீர் ஆதாரத்தை அங்கே தேக்கி வைத்து நாகர்கோவில் நகரசபை பகுதிக்கு மட்டு மல்லாமல், கன்னியாகுமரிக்கும் அரசு ஒரு நிலையான குடி நீர்த் திட்டத்தை உடனடியாக உருவாக்கிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பத்மநாபபுரம் புத்தனாறு என்ற மிகப் பெரிய கால்வாய் இருக்கிறது. அந்த கால்வாயில் எந்த மதகுகளும் சரியாக கிடையாது. எனவே அந்த கால் வாயில் வரக்கூடிய கோதையாறு திட்டத்தில் இருக்கக்கூடிய அணைத் தண்ணீரின் பெரும் பகுதியும் வீணாகக் கடலுக்கு சென்று கொண்டு இருக்கிறது. அதைத் தடை செய்ய வேண்டும். புதிய மதகுகள் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் நீண்டகாலமாக அரசுக்கு வைக்கப்பட்ட போதிலும் கூட அந்த ஆற்றிலே மதகுகள் அமைப் பதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாம லுள்ளது. அதற்கான காரணம் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தாலே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வில்லை என்பதாகவும் தெரிய வருகிறது. அதைப்போல கோதையாறு மேம்பாடு திட்டம், உலக வங்கியினுடைய உதவியோடு சுமார் 9 கோடி ரூபாய் அளவிலே இந்த மேம் பாடுத் திட்டத்தை அமுல்படுத்துவதாக அறிவித்திருக்கிறார்கள். முதல் கட்டமாக அங்கே அதிகாரிகள் தங்குவதற்காக குடியிருப்புகளை அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ஆனால் நான் கேட்பது எல்லாம் எங்களுக்கு அந்த கோதையாறு மேம்பாடு திட்டத்தை உட னடியாக அமுல்படுத்தப்படவேண்டும். குடியிருப்புகளை எப்போது வேண்டுமானாலும் கட்டலாம். ஆனால் பாசனத்திற்கு வசதியாக நீர் ஆதாரங்களை ஒழுங்காக விவசாயத்திற்கு பயன்படுத்த அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து, வேண்டுகோள்.

மேலும் பேச்சிப்பாறை அணையிலே இன்று ஏராளமான பேர்கள் பல ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு, ரப்பர் நட்டிருக்கிறார்கள். வாழை நட்டிருக்கி கிறார்கள், தென்னை நட்டு வைத்திருக்கிறார்கள், ஒரு பாசனத்திற்கு உரிய அணைப் பகுதியை ஆக்கிரமித்து இருக்கிற ஆக்கிரமிப்பாளர்களை அகற்றவேண்டும் என்று பல்வேறு சந்தர்ப்பங்களிலே எடுத்துக் கூறியும் இதுவரையிலும்

எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், ஆக்கிரமிப்பாளர்களுடைய ஆக்கிரமிப்புப் பகுதியிலே இருக்கிற வாழை, தென்னை, ரப்பர் போன்ற மரங்கள் அழிந்து விடாமல் இருப்பதற்காக, இரவோடு இரவாக அணையைத் திறந்து தண்ணீரை வெளியேற்றி விடுகிற ஒரு சூழ்நிலையும் அங்கே நிலவுகிறது என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சம்பக்குளம் என்று ஒரு பெரியகுளம் இருக்கிறது. அதனுடைய ஆயக்கட்டு 640 ஏக்கர், இப்போது அந்த சம்பக் குளம் மண் நிறைந்து போய், தண்ணீரின் கொள்ளளவு குறைந்துபோன நிலையிலுள்ளது.

17-45 மணி

சம்பக்குளத்திற்கு ஒரு தனி மதகு அனந்தனாறு 'ஈஸ்ட் மெயின்' சானலில் அமைத்துத் தரவேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பொதுப் பணித்துறை அதிகாரிகள் அதற்கான மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் பணம் இல்லாத காரணத்தினால் அந்த மதகை கட்டமுடியாத நிலை இருப்பதாகவும் சொல்கிறார்கள். நான் கேட்டுக் கொள்கிறேன் அனந்தனாறு மேம்பாட்டுத் திட்டத்தில் 1 இலட்சத்திற்கும் அதிகமாக ரூபாய் மிகுதியாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த மிகுதியாக அந்த அனந்தனாறு மேம்பாட்டுத் திட்டத்திலே இருக்கின்ற பணத்தை வைத்து இந்த மதகை அமைக்க, அமைப்பதற்கு செலவு செய்வதற்கு அனுமதி வழங்கவேண்டும். அதுவும் உடனடியாக அனுமதி வழங்கினால் மட்டுமே அந்த சம்பக் குளத்திலே தண்ணீர் ஏற்றுவதற்கு வசதியாக இருக்கும். 640 ஏக்கரா நிலங்களை பாசனத்திற்குக் கொண்டு வரமுடியும். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அதனை தனியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நீண்ட காலமாக இந்தச் சட்ட சபையில் சொல்லிக் கொண்டு வருகிறேன். எங்கள் பகுதியில் மணவாளக் குறிச்சி பாலம் ஒன்று கட்ட தொடங்கி 8 ஆண்டுகள் ஆகியும் ரூ. 25 இலட்ச மதிப்பீட்டில் உள்ள ஒரு பாலத்தை இந்த சர்க்காரால் கட்டமுடியவில்லை என்று சொன்னால், அதைவிட ஒரு கேவலமான நிலைமை எங்கே இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்குமாறு அரசை



கேட்டுக்கொள்கிறேன். கான்டிராக்டர் ஒரு பக்கமும், அங்கேயிருக்கின்ற மாவட்டப் பொறியாளர் இன்னொரு பக்கமுமாக எலியும் பூனையும் போல இழுத்துக் கொண்டிருக்கின்ற காரணத்துனாலே அந்த திட்டம் இன்னமும் முடிக்கப்படாமல் இருக்கிறது. தமிழகத்தில் இப்படிப்பட்ட 8 ஆண்டுக்காலம் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்ற ஒரு திட்டம் இருக்கிறதா? அந்தத் பாலத்தை முடிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறதா என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன். ஏனென்று சொன்னால், இப்போது அங்கே பார்த்தால் கான்டிராக்டர் அவருடைய உபகரணங்களை எல்லாம் எடுத்துச் சென்று விட்டார். அதனாலே அந்தப் பால வேலை தொடர்ந்து நடைபெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே உடனடியாக இந்த அரசு அந்தப் பால வேலையை உடனடியாக செய்வதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்யவேண்டும். பல ஆண்டுகளாகிவிட்டது. அந்தப் பால வேலையை உடனடியாக முடிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, பாலையா அவர்கள் ஒரு அருமையான கேள்வியைக் கேட்டார்கள். மணவாளக்குறிச்சி பாலம், அது நெடுஞ்சாலை துறையில் மிக ஃபேமஸ்'-ஆன பாலம். அதை இந்த மன்றமும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்கு இடையிலே சொல்லிவிடுகிறேன்.

1981-ஆம் ஆண்டு ரூ. 25 இலட்சம் செலவில் அரசு அங்கீகாரம் பெற்றது. 82-ஆம் ஆண்டு ரூ. 25.53 இலட்சத்திற்கு டெக்னிகல் சாங்ஷன் கொடுக்கப்பட்டது. வருடங்களை நீங்கள் பார்க்கவேண்டும். 83-ஆம் ஆண்டு ஒப்பந்தப் புள்ளிக்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டது. 83-ல் பணி துவக்கப்பட்டது. 85-ல் முடிந்து இருக்கவேண்டும். 83-ல் பணி துவக்கப்பட்டது. பணி துவங்கவேண்டுமென்று 'ஓர்கிங் ஆர்டர்' கொடுக்கப்பட்ட பிறகு 84-ல் தான் வேலை ஆரம்பமானது. 84, 85, 86-ல் வேலை இல்லை. 88-ல் ரூ. 39 இலட்சத்திற்கு 'ரிவைஸ்டு எஸ்டிமேட்' போட்டு கேட்டார்கள். ரூ. 25 இலட்சம் ரூ. 39 இலட்சமாக மாறிப் போய் விட்டது. அப்போதும் வேலை செய்யவில்லை. அது அப்படியே நின்று விட்டது. இது ஒரு நீண்ட நெடிய 'க்ரானிக் டிசீஸ்' மாதிரி இருந்ததால் எங்களுடைய கவனத்திற்கு வந்தது. ஜூலை 89-ல் நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு 'பார்ஷியல் டர்மினேஷன்' ஒரு பகுதியை டிஸ்மிஸ் பண்ணி விட்டு வேறு ஒரு ஆளுக்கு விட்டு, 15—12—1989-ல் புதிய ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. நான் பாலையா அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மிக விரைவில் 20 மாதங்களில் அந்தப் பாலம் முடிக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன். ஆக இவ்வளவு நாள் இருந்ததற்கு நாங்கள் அல்ல காரணம்.

திரு. அ. இ:குமாங்கான் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சரவர்களின் பதிலுரையைக் கேட்பதற்கு உறுப்பினர்களாகிய நாங்கள் ஆர்வத்தோடு இருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு உறுப்பினருடைய கேள்விக்கும், அல்லது அவருடைய பேச்சுக்கும், அமைச்சர் எழுந்து பதில் விளக்க மாகச் சொல்கிற காரணத்தினாலே பதிலுரை சபையில் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைந் தலைவர் : பதிலுரை சுருக்கமாகச் சொல்வார்கள் என்று தெரிகிறது.

திரு. ஆ. பாலையா : அடுத்தபடியாக பழுதடைந்த பாலங்கள் அதுவும் பஸ் போக்குவரத்து செல்கின்ற பழுதுபட்ட பாலங்கள் ஏராளமாக இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒரு சிலவற்றை நான் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே நீங்கள் கொண்டுவந்து விட்டீர்கள், முடித்துவிடுங்கள்.

17-50 மணி

திரு. ஆ. பாலையா : இராஜாக்காமங்களம், ஈத்தாமொழி சாலையிலுள்ள பழுதடைந்த ஆபத்தான பண்ணை யூர் பாலம், குளச்சல் நகர மன்றத்திற்குட்பட்ட களிமார் பாலம், குளச்சல் பரசேரி சாலை வளையல் இரட்டை கரை சேனலின் குறுக்கே அமைந்துள்ள பழுதுபட்ட பாலம் குறுந்தங்கோடு வெள்ளிச் சந்தை சாலையில், குறுந்தங் கோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு பக்கத்திலுள்ள பாலம், அனந்தனாறு 'மெயின் சேனலின்' குறுக்கே அமைந் துள்ள கணியாகுளம் பக்கம் அமைந்துள்ள பழுதுபட்ட பாலம், காரவிளை சானலில் அமைந்துள்ள கிடங்கரைவிளை பாலம் இவைகளையெல்லாம் நீங்கள் முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, புதிதாக கட்டிமாங்கோடு, செருப்பங் கோடு சாலையையும், குறுந்தங்கோடு நுள்ளிவிளை சாலையையும் இணைக்க செருப்பங்கோட்டில் இரட்டைகரை சானலின் குறுக்கே ஒரு இணைப்புப் பாலம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, சுமார் 60 ஆண்டுகளைக் கடந்து கொண் டிருக்கிற வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம், அந்த உப்பு யாத்திரைக்காக இராஜாஜி நடந்து சென்ற பாதை, இராஜாஜி போனபோது எப்படி இருந்ததோ அப்படியே இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. 'டிராபிக் இன்டன் சிட்டி' 8804, 46 டி.சி.எஸ். பர் டே' என்ற அளவில்



வேதாரண்யம் திருத்துறைப்பூண்டி சாலையுள்ளது. ஐ.ஆர்.சி.
என்று கையிட்லயன்ஸ்-படி 2500 டி.சி.எஸ். பர் டே
இருந்தாலே 'டபுள் லைன்னாக' சாலையை மாற்றலாம்
என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. தற்போது 'காஸ்
டிக்சோடா, போன்ற பெரும் தொழில்கள் வருகின்ற
நிலைமை அங்கே இருக்கிறது. அது அறிவிக்கப்பட்டுள்ளது.
அந்தச் சாலையை 'டபுல் லைன்னாக மாற்றுவதற்கு நீங்கள்
முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வ
தோடு, புஷ்பவனம் என்ற வேதாரண்யம் பகுதி கிராமம்
தீவைப் போல உள்ளது. அதற்கு வேதாரண்யம் கால்வாய்
மீது பாலம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக இன்னும் ஒன்றை மட்டும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 'நேரம் ஆகிவிட்டது. இன்னும் 3 பேர் பேச வேண்டும், முடித்து' விடுங்கள்.

திரு. ஆ. பாலையா : நெடுஞ்சாலைத்துறையைச் சார்ந்த
சாலை ஆய்வாளர்களுடைய பிரச்சினை நீண்டகாலமாக
இருந்து கொண்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையினுடைய
சாலை ஆய்வாளர்களுக்கு மாண்புமிகு முதல் அமைச்சர்
அவர்கள் 1—9—1975 முதல் 'பென்ஷன்' கொடுக்கப்பட
ஆணையிட்டார்கள். அந்த ஆணைப்படி வேலை நிரந்தரம்
செய்யப்பட்ட அந்த நாள் முதல் மட்டுமே கணக்கிட்டு
'பென்ஷ்ன்' கொடுத்து வருகிறார்கள். சாலை ஆய்வாளர்
களில் பலபேர் 5 ஆண்டு முதல் 19 ஆண்டுகள் வரை
தொடர்ந்து பணியாற்றி அதன் பின்னர் நிரந்தரம் செய்யப்
பட்டுள்ளனர். எனவே, 19 ஆண்டுகள் வரை உழைத்த
காலம் 'பென்ஷனுக்கு' எடுத்துக் கொள்ளப்படவில்லை.
இதனால் ஓய்வு பெறுகின்றபோது 'பென்ஷன்' மிகவும்
குறைவாக கிடைக்கின்றது. இந்தக் காலத்தைக் கணக்கில்
எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை)

திரு. அ. மு. ஹமீது இப்ராகிம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, இந்த மானியக் கோரிக்கையின் மீது இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் சார்பாக ஒரு சிலக் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுப்பணித்துறை கோரிக்கையில் தமிழகத்தில் அரசு அலுவலகங்கள் நெடுஞ்சாலைகள், பாலங் கள் பல கட்டுவதற்காக பலகோடி ரூபாய்களை ஒதுக்கி உள்ளதை மனதார வரவேற்கிறேன். அதே நேரத்தில் அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், பொதுப்பணி துறை அலுவலகங்கள் பல தனியார் கட்டிடங்களிலும், பழைய

பழுதடைந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அதை மாற்றி பொதுப்பணித்துறையின் மூலமாக நல்ல புதிய கட்டிடங்களைக் கட்டித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கடலாடி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். ஏறத்தாழ 75 சதவீதம் விவசாய பெருமக்கள் வசித்து வருகிறார்கள். நீண்ட நெடிய காலமாக வறட்சியால் பாதிக்கப்பட்டவையாகவே இருந்து வருகின்றது. மழையை நம்பி வாழும் எனது தொகுதி மக்கள் மழை பொய்த்து விட்டால் விவசாயிகள் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி தவிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. குறிப்பாக இந்தப் பகுதியில் மலட்டாறு என்ற ஆறு வடக்கே இருந்து தெற்கே மலடாகவே காட்சி அளிக்கிறது. மழைக்காலங்களில் அந்த ஆற்றில் தண்ணீர் வந்தால் எந்தப் பயனும் இல்லாமல் வீணாகக் கடலில் கலக்கிறது. எத்தனையோ அரசுகள் தமிழ் நாட்டை ஆண்டாலும், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடலாடித் தொகுதியை மறந்து விடுகிறார்கள். இந்தத் தொகுதி சாபத்திற்கு உள்ளானதோ என்னவோ தெரியவில்லை. தயவுகூர்ந்து விவசாய பெருமக்களின் நலனைக் கருதி இந்த மலட்டாரின் குறுக்கே அணை கட்டினால் மழைக் காலங்களில் ஓடி வரும் தண்ணீரை இப்பகுதி கிராமப்புற கண்மாய்களில் தேக்கி வைத்து விவசாயம் செய்யலாம் இப்பகுதி மக்கள் வறுமையைப் போக்க தஞ்சை தரணியை ஆண்ட கரிகால்வளவன் போல் தமிழ்நாட்டை ஆளும் முதல் அமைச்சர் அவர்கள் கடலாடித் தொகுதிக்கு கருணை காட்ட வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

17-55 மணி

எனது தொகுதியில் திருப்புல்லாணி ஒன்றியத்தில் உள்ள கலரிக்கண்மாய்தான் பெரிய கண்மாயாக விளங்குகிறது. இது ஏறத்தாழ 20 வருட காலமாக மராமத்து செய்யப்படாமல் எங்கு பார்த்தாலும் மணல் மேடாகி உபயோகமற்ற நிலையில் உள்ளதால் இந்த கலரிக்கண்மாயை ஆழப்படுத்தி கரையை உயர்த்தி அணைக்கட்டு மதகுகளை மராமத்து செய்து தந்தால் ஏறத்தாழ 20 பஞ்சாயத்து கிராம விவசாய மக்கள் பயனடைவார்கள் என்பதையும் மிகவும் பணிவன்புடன் கூறிக்கொள்கிறேன். மற்றும் முதுகுளத்தூர் தாலுகா ஏர்வாடியில் இருக்கும் மங்கலநாதன் கண்மாயும் இராமநாதபுரம் தாலுகா புல்லந்தையில் இருக்கும் மங்கலநாதன் சமுத்திர கண்மாயும் ஒன்றாக இருப்பதால் விவசாய நேரத்தில் தண்ணீர் பாய்ச்சுவதில் இரண்டு கிராமத்திற்கும் வருடா வருடம் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க கண்மாயை அந்தந்த கிராம விவசாய பெருமக்களுக்கு பிரித்துக் கொடுத்து சுமுகமான சூழ்நிலையை உருவாக்கிட கேட்டுக் கொள்கிறேன். 120 ஏக்கர் நஞ்சை பாசனம் செய்யக்கூடிய, டி. ஆலங்குளம் கண்மாயில் வரத்து தண்ணீர் வருவதற்கு வழியில்லை. இதற்கு குண்டாற்று தண்ணீர் சிக்கல் நடுக்கால் வழியாக வந்து கொண்டிருந்தது. அதை இப்போது எந்தவித மராமத்து செய்யாமலும் மதகு அணைகள் சிதைந்து விட்டதாலும் இதற்கு தண்ணீர் வருவது நின்றுவிட்டது. ஆகவே இதற்கு வரத்து தண்ணீர் வருவதற்கு வழிவகுத்து இக்கண்மாயை மராமத்து செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



என் தொகுதியில் உள்ள சிக்கல் கிராமத்தில் உள்ள சிக்கல் கண்மாயை இரண்டாகப் பிரித்து சர்வே எண். 80 சிக்கல் கண்மாய் என்றும் சர்வே எண். 108 பேய்குளம் கீழ்ச்சிக்கல் கண்மாய் என்றும் சர்வே எண். 108 பேய்குளம் பஞ்சாயத்துக்கு சேருகின்றது. சிக்கல் கண்மாய் என்ற ஒரே கண்மாய் சுமார் 1200 நன்செய் ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது. இந்த ஒரே கண்மாயினை பதிவேடுகள் அளவில் மட்டும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளதால் எந்த ஒரு திட்டத்தின் கீழும் சுமார் 12 ஆண்டுக்காலமாக எவ்வித மராமத்துப் பணிகளும் செய்யப்படாமலும், கால்வாய்கள் தூர்வாரப்படாமலும் இருந்து வருகிறது. ஆகவே பேய்குளம் குரூப்பில் சேர்க்கப்பட்டுள்ள சிக்கல் கண்மாயினை சிக்கல் குரூப் கண்மாய் என்று ஒரே கண்மாயாக மாற்றித் தந்து உடனடியாக மராமத்து செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியில் கோரைகுட்டம் என்ற ஊர் உள்ளது. அதில் ஏறத்தாழ 2000 மக்கள் வசிக்கிறார்கள். அங்கிருந்து திருப்புல்லாணி வழியாகத்தான் வெளியூர்களுக்குச் செல்லவேண்டி இருக்கிறது. ஆனால் கோரைக்குட்டத்திற்கும் திருப்புல்லாணிக்கும் இடையில் கொட்டடை ஆறு ஒன்று குறுக்கே ஓடுவதால் ஏறத்தாழ 8 கிலோ மீட்டர் தூரம் காஞ்சிரங்குடி வழியாகத்தான் சுற்றிக் கொண்டு வரவேண்டியுள்ளது. ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டித் தந்தால் ஏறத்தாழ திருப்புல்லாணிக்கும் கோரைக்குட்டத்திற்கும் 1½ கிலோ மீட்டர் தூரம்தான். 6½ கிலோ மீட்டர் தூரம் மீதப்படுவதால் கோரைக்குட்டம், காஞ்சிரங்குடி, விவசாய பெருமக்களின் சிரமத்தையும், கால நேரத்தையும் மீதமாக்கும் என்பதை இந்த அரசு கருத்தில் கொண்டு கொட்டடை ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டித்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை வாழ் முகவை மாவட்ட ஏர்வாடி கிராம நலச் சங்கத்தினரால் ஐந்து ஏக்கர் நிலம் அரசாங்கத்திற்கு மருத்துவமனை கட்டுவதற்காக 1984-ம் வருடம் கொடுக்கப்பட்டது. முந்தைய அரசாங்கத்தினரால் மருத்துவமனைக் அடிக்கல்லும் நாட்டப்பட்டது. ஆனால் இதுவரையில் எந்த

வேலையும் நடைபெறவில்லை. தயைகூர்ந்து பல ஆயிரக் கணக்கான இந்திய மக்கள் வந்து போகக்கூடிய ஒரு புண்ணிய ஸ்தலமாக ஏர்வாடி இருப்பதால் உடனடியாக நடவடிக்கை எடுத்து மருத்துவமனை கட்டுவதற்கு ஆவன செய்ய மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஏறத்தாழ 25 கிராமங்களுக்கு மையமாக அமைந்திருக்கும் பெரியபட்டினம் மீனவ சமூகத்தினர் சுற்றியுள்ள ஊராகும். அங்கு ஒரு அரசு பொது மருத்துவமனை அமைத்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் எந்த இடத்திலும் பயணிகள் விடுதி கிடையாது. அகவே கடலாடி ஒன்றியம் ஏர்வாடி ஒரு புண்ணிய ஸ்தலமாக விளங்குவதால் இங்கு அனைத்து நாட்டிலிருந்தும் முக்கிய பிரமுகர்களும் அரசியல்வாதிகளும் பெரிய அதிகாரிகளும் வந்து போகக்கூடிய இடமாக இருக்கிறது. ஆகவே இங்கு ஒரு பயணிகள் விடுதி ஒன்று அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

கீழக்கரையில் அரசு பொது மருத்துவமனை ஏறத்தாழ 40 கிராமங்களுக்கு மையமாக அமைந்திருக்கிறது. மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் நோயை போக்குவதற்கு வருகின்றனர். ஆனால் அங்கு பாதுகாப்பு இல்லாமல் காம்பவுண்ட் சுவர் இல்லாத காரணத்தினால் சுற்றி குடி இருக்கும் பொது மக்கள் இரவுகளில் கழிப்பிடமாகவும், குப்பைகள் கொட்டுவதற்கும் பயன்படுத்துகிறார்கள். சாக்கடைகள் மருத்துவமனையைச் சுற்றி உள்ளே வருவதாலும் கொசுக்களும் நோய்க் கிருமிகளும் உற்பத்தியாகி மேலும் நோய் பரவுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. மேலும் நாய் பன்றிகள் இரவில் அங்கே தான் குடியே இருக்கிறது. நோய் பரவாமல் தடுப்பதற்கும் மருத்துவமனையில் இருக்கும் நோயாளிகளைப் பாதுகாப்பதற்கும் மருத்துவமனையைச் சுற்றி பாதுகாப்பச் சுவர் கட்டவும் அங்கிருக்கும் மருத்துவமனை டாக்டர்கள் செவிலியர்கள் தங்கும் விடுதிகள் ஆகியவை பழுதடைந்து இருப்பதால் அவ்வகளை மராமத்து செய்துதரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

18-00 மணி

நாடு சுதந்திரம் பெற்று நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் சரியான போக்குவரத்திற்கான சாலை வசதி கூட வாய்க்கப் பெறாமல் தவிக்கும் சில கிராமங்கள் என் தொகுதியில் உள்ளன. மிகவும் பின் தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கத்தைச் சுற்றியுள்ள வறட்சி மிகுந்த குக்கிராமங்கள் அவை. பாதையில்லா அவ்வூர்களுக்குள் போய்ச் சேருவது பெரும் உபாதையாகும்.



தேசிய நெடுஞ்சாலைகளில் ஒன்றான சென்னை-கன்னி
யாகுமரி நெடுஞ்சாலை, தேசிய ஒருமைப்பாடு, பொருளா
தாரம், வணிகம், போக்குவரத்து, வழிபாடு, சமய ஒருமைப்
பாடு ஆகிய பல்வேறு நன்மைகளை தன்னகத்தே கொண்ட
தாகும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது கிழக்குக்
கடற்கரைச் சாலையாகும். அச்சாலை சென்னையிலிருந்து
வங்கக் கடற்கரை மார்க்கமாக (சேதுநாடு) இராமநாத
புரம் அடைந்து பின்னர் இதிகாசப் பிரசித்தி பெற்ற சேதுக்
கரை என்னும் புனித தீர்த்த ஸ்தலத்தின் அருகில் உள்ள
தர்ப்பசயனம் எனப்படும் பாடல் பெற்ற திருப்புல்லாணி
என்னும் தேசிய ஒருமைப்பாட்டுத் திருத்தலத்தின் வழியாக
வரலாற்றுப் புகழ்பெற்ற செத்தும் கொடை கொடுத்த
சீதக்காதியின் கீழக்கரை மார்க்கமாக அன்றும், இன்றும்
என்றும் இந்து-முஸ்லீம்களின் ஒற்றுமைக்கு இணைப்புப் பால
மாக விளங்கும் மாமஹான் இப்ராஸம் சாகிப் வலியுல்லாஸ்
தர்ஹா அமைந்துள்ள ஏர்வாடி வழியாக சாயல்குடி, தூத்
துக்குடி, கன்னியாகுமரி என்ற இலக்கினை அடைவதே
கிழக்குக் கடற்கரைச் சாலை என்ற பேருக்கும், பெருமைக்கும்
நாட்டுக்கும் நன்மை பல தருவதாகும் என்பதனை ஆதாரங்
களோடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.
வடபுலத்தையும், தென்புலத்தையும் இணைத்து ஒற்றுமைப்
படுத்தும் திருத்தலங்கள், புண்ணிய தீர்த்தங்கள், வழி
பாட்டுத் தலங்கள் என்று மட்டுமல்லாமல் கடல்படு பொருள்
களாம் மீன், இறால், உப்பு, சங்கு, பாசி, கற்பத்திரு எனப்
படும் பனையின் ஓலை, நார் ஆகியவற்றலான பாய், பெட்டி
பல அடுக்கு வண்ணப்பைகள் மற்றும் தொப்பி இப்படி
வகை, வகையான பனை ஓலை, நார்க் கலைப் பொருள்கள்,
சங்கு மாலைகள், அணிகலன்கள் போன்ற பொருள்களினால்
ஆன வாணிபம் இப்பகுதியில் தான் மிகுதியாக நடைபெறு
கிறது. (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடத்தில் முடிக்
கிறேன். கிழக்குக் கடற்கரைச் சாலை இவ்வூர்களின் வழியாக
அமைவது நாட்டின் பாதுகாப்புக்கும் உகந்ததாகும். இத்தகைய
முக்கியத்துவத்தைக் கருதி அந்தக் கடலோர நெடுஞ்
சாலையை இராமநாதபுரம், திருப்புல்லாணி, சேதுக்கரை,
கீழ்க்கரை, ஏர்வாடி, வாலிநோக்கம், சாயல்குடி, வழியாக
எனது தொகுதியில் வரும்படி ஆவன செய்யுமாறு அன்போடு
கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி நீர்ப்பிரச்சினைக்கு ஓர் நல்ல தீர்வு காணும்
வகையில் நமது பொதுப்பணித்துறை அமைச்சரின் தலைமையில்
ஓர் தூதுக்குழு இந்தியப் பிரதமரைச் சந்தித்து மனு
கொடுத்ததன் பேரிலும், நமது சட்டமன்றத்தில் ஒருமனதாக
தீர்மானம் நிறைவேற்றியதன் பலனாகவும், இதற்கெல்லாம்
மேலாக நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர்
கலைஞர் அவர்களின் தீர்க்கமான, திடமான பேச்சினாலும்
சீரிய முயற்சியினாலும், காவிரி நீர்ப் பிரச்சினையில், தமிழக

மக்கள் தன் பக்கம்தான் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இன்று மத்திய அரசு காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்குத்தான் விடவேண்டும் என்ற பரிந்துரையை உச்ச நீதிமன்றத்திற்குத் தந்ததற்கு, என் சார்பாகவும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையை சில கட்சிகள் அரசியலாக்கி, அதில் ஆதாயம் தேடப் பார்க்கிறார்கள். ஆனால் அதைத் தமிழக மக்கள் அனுமதிக்கப் போவதில்லை. தமிழக மக்கள் கழக அரசின் பக்கம்தான். டாக்டர் கலைஞர் அவர்களின் பக்கம்தான். என்பதைக் கூறி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனம் சம்பந்தமான மானிய மானது மிக முக்கியமான ஒரு மானியமாகும். இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை, மிக, மிகக் குறைவானது என்பதை முதலாவதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். மொத்த பட்ஜெட்டிலே ஏறக்குறைய மூன்று சதவீதம் கூட இல்லை என்று கருதுகிறேன். 4,000 கோடிக்கு அதிகமான மொத்த நிதிநிலை அறிக்கையில், நம்முடைய தமிழ்நாட்டின் மொத்தச் செலவிலே இது ரொம்ப, ரொம்பக் குறைவு இதையொட்டித்தான் கிராமப் பகுதியிலே இருக்கின்ற கோடிக் கணக்கான விவசாயிகள், இந்தப் பாசனத்தை நம்பித்தான் பாசனம் இல்லையென்ற சொன்னால் இப்போது விவசாயம் இல்லை என்று நம்பியிருக்ககூடிய காலத்திலே மிக, மிக முக்கியமான ஒரு பணியாகும். ஆகவே இன்றைக்கு தேசிய அளவிலே ஒரு நபர் பயன்படுத்தக்கூடிய தண்ணீரினுடைய சராசரி 0.09 மிலியன் கன அடியாகும். தமிழ்நாட்டிலே அது 0.03 மில்லியன் கன அடிதான். ஆகவே, இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே நமக்கு அதிகமான தண்ணீரை இருக்கிற தண்ணீரை சேமிப்பது மட்டுமல்ல.

**18-05 மணி**

வரக்கூடிய நீரை எங்கெங்கு சோர்ஸ் இருக்கிறதோ அதையெல்லாம் பயன்படுத்தக்கூடிய ஒரு காலக்கட்டத்திலே நாம் இருக்கிறோம். மொத்தத்திலே 30 இலட்சம் ஹெக்டேர் பாசன வசதி பெறக்கூடிய் இந்தப் பாசனத் துறை 9½ இலட்சம் எக்டர் கால்வாய் மூலமாகவும் 9 இலட்சம் எக்டர் ஏரி குளங்கள் மூலமாகவும் மீதி 115 லட்சம் எக்டர் கிணறுகள் மூலமாகவும் பாசன வசதி பெறுகிறது. ஆகவே நீங்கள் பல்வேறு இடங்களில் பார்த்தால் புதியதாக ஏதாவது ஒரு அணை கட்டுவதற்கோ மற்ற ஏற்பாடு செய்வதற்கோ அதிகமான



நிதி ஒதுக்கியதாக பார்க்க முடியவில்லை. இன்றைக்கு 39,000 ஏரி குளங்கள் கண்மாய்கள் தமிழகத்திலே இருக்கின்றன. எங்கும் இல்லாத ஒரு சிறப்பான அம்சம் அந்தக் காலத்திலே ஜமீன்களோ. மன்னர்களோ வெட்டிய பல்வேறு குளங்கள். ஏரிகள் தமிழகத்திலே அதிகமாக இருக்கின்றன. அது கடந்த காலத்தில் எப்படி இருந்ததோ அப்படியே தான் இருக்கிறதே தவிர ஆழப்படுத்தி நீர் கொள்ளளவை அதிகரிக்கக்கூடிய முறையில் நம்முடைய ஏற்பாடுகள் இல்லை. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், அதற்கு போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததுதான் மிகவும் பிரதானமான காரணம். அந்த நிதியை அதிகமாக ஒதுக்க வேண்டும். பி.டபிள்யூடியில் இருக்கக்கூடியவர்களுக்கு புதுக்குளங்களைப் போடுவதற்கும், இருக்கின்ற குளங்களை ஆழப்படுத்துவதற்கும் வேண்டிய பல்வேறு புரோபோசல்கள் ஆங்காங்கே கிடக்கிறது. அதை துரிதப்படுத்தக்கூடிய முறையிலே அதிகமான நிதியை ஒதுக்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து இன்றைக்கு ஐரோப்பிய பொருளாதார உதவித் திட்டத்தின் கீழே சில வேலைகள் எடுக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிற்ர்கள். அதெல்லாம் போதாது. பல்வேறு இடங்களிலே அந்தக் காலத்திலே பார்த்தால் மழைக்காலத்திலே இரண்டு போகம் விளையக்கூடிய் அளவிற்கு தண்ணீர் அந்த கண்மாய்களிலே நிரம்பும். இப்போது இரண்டு தடவை நிரம்பினால் தான் ஒரு போகம் விளையக்கூடிய நிலை இருக்கிறது. அதற்கு காரணம் பல்வேறு இடங்களில் கண்மாய்கள் மேடாகிவிட்டன. அதை ரிப்பேர் செய்ய வேண்டும் என்று சொன்னால் அதற்கு ஒரு நார்ம்ஸ் சொல்லுகிறார்கள். மூன்று ஆண்டுக்ள் தொடர்ந்து அந்தக் கண்மாய் நிரம்பி, அந்த ஏரி நிரம்பி அது ஓவர்புளோவாகி இருந்தால் தான் ரிப்பேர் செய்யலாம் என்று விதி இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே தொடர்ந்து 3 ஆண்டுகள் மழை பெய்யக் கூடிய நிலையும் தமிழ்நாட்டிலே கிடையாது. அப்படியே 3 ஆண்டுகள் தொடர்ந்து பெய்து ஓவர்புளோவாகக்கூடிய நிலைமை இல்லாததன் காரணமாக பல்வேறு குளங்கள், கண்மாய்கள் ரிப்பேர் செய்யப்படாமலேயே இருக்கின்றன. ஆகவே தான் இந்த விதிகளை மாற்ற வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இல்லையென்று சொன்னாலும் கூட 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை எல்லா ஏரிகளையும், கண்மாய்களையும், குளங்களையும், ஆழப்படுத்தக்கூடிய் ஒரு முறையைக் கொண்டுவர வேண்டும். நம்மிடத்திலே இருக்கின்ற 39,000 குளங்களிலே 9,700 ஏரிகள் ஜமீன் ஏரிகளாகவும், 8,090 ஏரிகள் தான் பொதுப்பணித் துறையின் கீழும் இருக்கின்றன. மீதி ஏரிகள் பூராவும் ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொறுப்பிலே விடப்பட்டிருக்கின்றன. அது கூடாது என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால் நீர்ப்பாசனத் துறை சம்பந்தப்பட்ட அத்தனை பொறுப்புகளையும் இந்தத் துறையின் கீழே

பொதுப்பணித் துறையின் கீழே கொண்டுவரப்பட வேண்டுமே தவிர ஊராட்சி ஒன்றியத்தின் கையிலே விட்டால் அவர்களுக்கு நிதி ஆதாரம் கிடையாது. அவர்களுக்கு பல்வேறு வேலைகள் இருக்கின்றன. அதை அவர்கள் செய்யட்டும். ஆகவே பாசனம் சம்பந்தப்பட்ட வரையில் முழுவதுமாக அது குளமாக இருந்தாலோ, 40 ஹெக்டேர் அல்லது அதற்கு அதிகமாக இருந்தாலும் பொதுப்பணித் துறையின் கீழே வைத்துக் கொண்டு மீதி இருக்கக்கூடிய சிறு சிறு குளங்கள் அதாவது 100 ஏக்கருக்கு குறைந்த குளங்களை எல்லாம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிர்வாகத்திலே விடப்பட்டிருக்கிறது. அது சரியல்ல என்பது என்னுடைய ஆழமான கருத்து.

கடந்த வருடம் எங்களுடைய தென் மாவட்டங்களில் ஜனவரி மாதம் பெய்த பெருமழையின் காரணமாக பல்வேறு குளங்கள் உடைத்துக்கொண்டு போய்விட்டன. ஓடைகளிலே வருகின்ற தண்ணீரிலே மறித்து கட்டப்பட்ட அந்த கண்மாய்கள் எல்லாம் உடைப்பு எடுத்து. வருகின்ற தண்ணீர் பூராவும் வீணாக சமுத்திரத்திலேபோய் சேர்ந்துவிட்டது. ஆகவே தான் மழைக் காலங்களிலே கண்மாய்களில் எப்போதாவது பெய்யக்கூடிய மழையிலே வரக்கூடிய தண்ணீரை சீராக தேக்கி வைக்கக் கூடிய முறையில், சரியான முறையிலே அந்த கண்மாய் கரைகளை உயர்த்தி, அதை ஆழப்படுத்தி சீராக செப்பனிட்டு வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரியாக இன்றைக்கு பெரியாறு வைகை பாசனத்திலே வைகை கால்வாய் நவீனப்படுத்தக் கூடிய திட்டம் என்று சென்ற காலத்திலே செய்யப்பட்டது. அந்தத் திட்டத்திலே செய்யப்பட்ட வேலைகள் பூராவும் 1979-ஆம் ஆண்டு பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக அப்படியே அரித்துக்கொண்டு போய் இன்று வரைக்கும் அது செப்பனிடப்படாமல் அப்படியே இருக்கிறது. பெரியாறு வைகை கால்வாயினை நவீனப்படுத்தக்கூடிய திட்டம் இன்னும் முடிவுறாமல் இருக்கிறது. அதை சீக்கிரமாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அதை செப்பனிடக்கூடிய காரியத்தைச் செய்ய வேண்டும்.

18-10 மணி

உதாரணத்திற்கு வரகுனூர் மதகுக்கும், பாத்தினூர் மதகுக்கும் இடைப்பட்ட பகுதியில் இருக்கின்ற கால்வாய்கள் எல்லாம் அழிந்து போயிருக்கிறது. அவை செப்பனிடப்படாமல் இருக்கிறது. கொடுமுடி ஆறு திட்டம், ஏற்கெனவே இந்த மன்றத்திலே நான் தொடர்ந்து பல ஆண்டுகாலமாக சொல்லிக் கொண்டு வருகிறேன். எங்கள் மாவட்டத்திலே நாங்குநேரி பகுதியில் இருக்கின்ற பெரும்பகுதி மக்களுக்கு இது ஒரு முக்கியமான திட்டம் ஆகும். இது சம்பந்தமாக



சம்பந்தப்பட்ட அந்த சட்டமன்ற உறுப்பினர் இங்கே பல தடவை சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய திருமதி ரமணி நல்லதம்பி கூட சொல்லியிருக்கிறார்கள் ஆகவே, இந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட வரையில் ஏதோ ஒரு தலையீடு காரணமாக நீண்ட நாட்களாக பெண்டிங்கில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வேலைக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு 85 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. இப்போது தான் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், 1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தான் வன இலாக்காவினுடைய பர்மிஷன் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் உடனடியாக துவங்க வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு வேண்டிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியில் வைப்பாறு என்று ஒன்று இருக்கிறது. அதிலே ஏற்கெனவே விளாத்திகுளம் பகுதியிலே ஒரு அணை கட்டப்பட்டுள்ளதின் காரணமாக அந்தப் பகுதியில் இருக்கின்ற பல்வேறு குளங்கள், சிறு சிறு குளங்கள் எல்லாம் நிரம்புவது மட்டும் அல்லாமல் ஒரு மழை பெய்த உடன் வருடம் முழுவதும் அத்தனை குளங்களும் நிரம்பி சரியான மகசூல் கிடைத்துக் கொண்டு வருகிறது. இன்னும் ஒரு அணை வேண்டும் என்று அதற்கு மேற்குப் பகுதியிலே சாத்தூர் பகுதிக்குப் பின்னால் அணை வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை, அது சம்பந்தப்பட்ட புரபோசல் அரசுக்கு வந்து இன்று கிடப்பில் இருக்கிறது. அதையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புதிய அணைகள் அதிகமாக கட்டுவதற்கு வேண்டிய இடங்கள் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இதிலே பல திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால் பல்வேறு திட்டங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று பல்வேறு திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதேமாதிரி குடகனாறு அணை ஏற்கனவே உடைந்து ரொம்ப நாட்கள் ஆகிறது. அது இன்னும் செப்பனிடப்படாமல் தொடர்ந்து இருக்கிறது. தர்மபுரியில் கெலவரப்பள்ளி அணை ஒன்று இருக்கிறது. அது நீண்ட காலமாக கிடப்பில் இருக்கிறது. நான் அந்த அணையைப் போய்ப் பார்த்தேன் முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போதே சொல்லியிருக்கிறேன். ஆனால் இப்போதுதான் 98 சதவீதம் முடிந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. அதே மாதிரி இன்றைக்கு பழனிப் பகுதியில் இருக்கின்ற இளையான்குட்டி கிராமத்திற்குப் பக்கத்தில் குறுக்கே நீர்த் தேக்கம் கட்டும் ஒரு திட்டம் உத்தேசிக்கப்பட்டிருக்

கிறது. அதே மாதிரி செங்கோட்டை வட்டத்தில் மேல்கரை கிராமத்தில் உள்ள அனுமான் நதிக்கு குறுக்கே ஒரு அணை கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று உத்தேசத்தைக் சொல்லி இருக்கிறீர்களே தவிர இது இது கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது, இதற்கு இவ்வளவு நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது நடைபெறும் என்று சொல்வதற்கு பதிலாக உத் தேசிக்கப்பட்டிருக்கிறது என்று வரிசையாகசொல்லிக் கொண்டே போனால், நம் நாட்டில் கங்கை காவேரி இணைப்பும் கூட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது தான். ஆகவே, சீக்கிரமாக இந்த வேலைகளைச் செய்ய வேண்டுமே தவிர உத்தேசம் என்று சொல்லுவதை விட பணத்தை ஒதுக்கி அந்தக் காரி யத்தை துரிதமாகச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) பணம் அதிகமாக ஒதுக்கவேண்டும். இன்றைக்கு முக்கிய மானது பாசனம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட வந்து விட்டார்கள். பாசனம் முக்கியமான ஒரு அயிட்டம் ஆகும். ஆகவே, பட்ஜெட்டில் 3 சதவீதம் கூட ஒதுக்கவில்லை. இதற்கு அதிகமாக நிதி ஒதுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு நம்முடைய பாசனத் துறையிலே காண்டிராக்ட் விடுவதற்குப் பதிலாக, கன இயந்திரங்கள் நம்மிடம் அதிகமாக இருக்கின்றன. இந்த இயந்திரங்களை பயன்படுத்தக் கூடிய முறையில் கால்வாய்களை சீர் செய்வது, கண்மாய்களை ஆழப்படுத்துவது போன்ற காரியங்களை செய்யலாம். இந்த கன இயந்திரங்கள் மூலமாக செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே கூட 1982-ஆம் ஆண்டுக்கு பின்னால் 90 பேர் வரை ரிட்டையர் ஆகி இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக ஆட்கள் போடவில்லை, அங்குள்ள முழு இயந் திரங்களையும் பயன்படுத்தக் கூடிய முறையில் அதற்கு வேண் டிய அதிகமான ஆட்களை எல்லாம் போட்டு அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெடுஞ்சாலைத் துறை. ஏற்கெனவே நம் முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். எங்கே பார்த்தாலும் ஒரு டிவிஷனுக்கு 2 கோடி ரூபாய் போதாது. அதிகமாக இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையில் போக்குவரத்து அதி கரித்து இருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையின் தூரம் அதிகரித்து இருக்கிறது. நம்முடைய நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட அந்த ரோடுகளின் நீளம் அதிகரித்து இருக் கிறது. அதற்குப் போதுமான நிதி ஒதுக்க வேண்டும். நிதி அதிகமாக ஒதுக்காததன் காரணமாக 5 வருடத்திற்கு ஒரு தடவை செப்பனிடுவதற்கு பதிலாக 10 ஆண்டுக்கு ஒரு முறை கூட செப்பனிட முடியாத நிலை இருக்கிறது. இதன் காரணமாக கிடைக்கிற பணம் அந்த குண்டு குழியைக்



கூட அடைக்க முடியவில்லை, அதை செப்பனிட்டு சீராக அந்த ரோடுகளை வைத்துக்கொண்டு இருக்க முடியவில்லை. ஆகவே 140 கோடி ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை அதிகமாக ஒதுக்கீடு செய்யவேண்டும். அவர் சொன் னார். ஒரு டிவிஷனுக்கு 4 கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டும் என்று. நான் சொல்கிறேன். ஒரு டிவிஷனுக்கு 10 கோடி ரூபாயாவது ஒதுக்கவேண்டும். குறைந்தபட்சம் 10 கோடி ரூபாய் ஒதுக்கினால் தான் இந்த ரோடுகளை செப்பனிடக்கூடிய வேலைகள் சீராக நடக்கும். ஆகவே இதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச் சர் அவர்கள் முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அதிலே பணியாற்றக்கூடியவர்கள் இன்றைக்கு நிரந்தரம் செய்யப்படாமல் தற்காலிகமாக வைத்துகொண்டு இருக்கிறார்கள். ஏறக்குறைய 5 ஆயிரம் பேர் 1980-ஆம் ஆண்டிலிருந்து 7, 8, 10 வருடமாக பணியாற்றக்கூடிய அந்த ஊழியர்களை நிரந்தரம் செய்யப்படாமல் தற்காலிக மாக வைத்து இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஏற் கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த பட்ஜெட் கூட்டத்திலே சொன்னார்கள். இந்த பொதுப்பணித்துறையில் இருக்கின்ற 600 பேரை நாங்கள் நிரந்தரம் செய்யப் போவ தாக, அதிலே 300, 350 பேரை தான் இன்றைக்கு ரெகுலரைசேசஷன் செய்து இருக்கிறார்கள்.

18-15 மணி

மீதி உள்ளவர்களுக்கு கல்வித் தகுதி இல்லையென்று சொல்கிறார்கள். 10 வருடங்கள் வேலை பார்த்ததற்குப் பிறகு கல்வித் தகுதி ஆட்டோமாடிக்காக வந்து விடும். 10 வருடங்கள் வேலை பார்க்கும்போது ஏற்கெனவே அவர் களுக்கு பிராக்டிகலாக அந்த நாலட்ஜ் வந்துவிடுவதன் காரண மாக இருக்கிற பணியிலேயே அவர்களை நிரந்தரமாக நிய மிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்யவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேமாதிரியாக நெடுஞ் சாலைத் துறையின் மூலமாக ஊராட்சி ஒன்றியத்திற்கு யூனியன் ஓவர்சீயர்களையெல்லாம் அனுப்பினீர்கள். அவர் களையெல்லாம் ரெகுலரைசேஷன் செய்யப்போவதாகச் சொல்லப்பட்டது. மறுபடியும் அது நிறுத்திவைக்கப்பட்டுள்ள தாகச் சொல்லப்படுகிறது. அவர்களையும் ரெகுலரைஸ் பண்ணவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக் கீடு) யூனியன் ஓவர்சீயர்கள்.

அதேமாதிரியாக நெடுஞ்சாலைத் துறையினுடைய டிவிஷன்களிலே இருக்கக்கூடிய பணியாளர்கள் எல்லோரும், வேலைகளை அதிகமாகச் செய்யக்கூடிய வாய்ப்பு இல்லாமல்

இருப்பதன் காரணமாக, பில் போடுவது, வேலைகளை மேற் பார்வை இடுவது போன்ற காரியங்களை செய்ய முடியும். போதுமான பணம் ஒதுக்காததன் காரணமாக அதிலே பணி யாற்றக்கூடியவர்கள் கூட உற்சாகம் இல்லாமல் சஞ்சலப் படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டிலும் 140 கோடி ரூபாய் என்பது போதாது. அதிகமாக அதற்கு ஒதுக்கியாக வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக, கங்கை-காவிரி இணைப்பு சம் பந்தமாக எனக்கு முன்னாலே பேசிய பலபேர் சொன்னார் கள். அதுகுறித்து, வந்திருக்கிற மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் வேண்டிய முயற்சிகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல் மேற்கு நோக் கிப் பாயும் ஆறுகளிலே இருக்கின்ற தண்ணீரை நமக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதைப் பற்றி ஏற் கெனவே மாண்புமிகு அமைச்சர் கேரள அரசுடன் பேச்சு வார்த்தைக்குச் சென்றார்கள். கடந்த காலத்திலே இது சம்பந் தமாக பேச்சுவார்த்தை களெல்லாம் நடந்தன. ஆகவே, இதிலே முடிந்த அளவு மேற்கு நோக்கிப் பாய்கின்ற ஆறுகளினுடைய தண்ணீரை நாம் பெற முடியுமா என்பதைப்பற்றியெல்லாம் நாம் பரிசீலனை செய்யவேண்டும்.

அடுத்ததாக, பெரியாறு அணையிலே இன்றைக்குத் தண் ணீரைப் போதுமான அளவு தேக்கி வைக்கக்கூடிய முறை யிலே அந்த அணையை உயர்த்துவதற்கு வேண்டிய வேலைகள் தாமதமாக நடந்து வருகின்றன. அதையும் துரி தப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு மெயி னாக நான் சொல்வது, நம்முடைய தமிழகத்திலே 39 ஆயிரம் ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் இருக்கின்றன. இந்த, ஏரி, குளங்கள், கண்மாய்கள் பூராவும் நல்ல மழை பெய்தாலும்கூட, இரண்டடி, மூன்றடி தண்ணீர் கூட தேங்க முடியாமல் மேடாக இருக்கின்றன. இதை ஆழப் படுத்த வேண்டுமென்று சொன்னால், நிதியில்லை, நிதி ஏன் இல்லை என்று சொன்னால் நிதி ஒதுக்கீடு மிகக் குறைவு. ஊராட்சி ஒன்றியங்களிடத்திலே 30 ஆயிரம் கண்மாய்களை ஒப்படைத்து இருக்கிறீர்கள். அவர்களிடத்திலே பணம் கிடை யாது. ஆகவே, பொதுப்பணித் துறை அத்தனை ஏரிகள், குளங்கள், கண்மாய்களையெல்லாம் கையிலே எடுத்துக் சீராக, 5 ஆண்டுக்கு ஒருமுறை முழுமையாக அவைகளைப் பழுது பார்த்து கால்வாய்களைச் செப்பனிடவேண்டும்.

கடைசியாக ஒரே ஒரு வார்த்தை சொல்லி முடித்துக் கொள்கிறேன். தஞ்சாவூரிலே உள்ள கால்வாய்களுக்குப் பக்கத்திலே செடிகளெல்லாம் மண்டி, ஒவ்வொரு ஆண்டும்



கால்வாய்களின் கரைகளை உடைக்கக்கூடிய முறையில், தண்ணீரும் தேங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை அப்புறப்படுத்தவேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்வதோடு, சிதம்பரனார் மாவட்டம் ஆறுமங்கலம் பகுதியிலே, தொடர்ந்து நானும் பல தடவை இந்த மன்றத்திலே இதைப்பற்றி பேசியிருக்கிறேன். வடிகால் வசதி கிடையாது. அந்த வடிகால் வசதி இல்லாததன் காரணமாக சில நேரங்களிலே அப்படியே தண்ணீரிலே அந்தப்பயிர்கள் எல்லாம் மூழ்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வடிகால் வசதிக்கு வேண்டிய சர்வே யெல்லாம் நடந்து அந்தவேலைகள் துரிதப்படுத் தப்படாமல், சர்வேமுடிந்ததோடு அப்படியேஇருக்கிறது. இந்தக் காரியங்களையெல்லாம் செய்து முடித்து, விவசாயிகள் நீர்ப் பாசன வசதியைப் பெறுவதற்கு, குளங்கள், ஏரிகள், கால் வாய்களை மராமத்து செய்து, மழை பெய்த உடனே, கண்மாய்களெல்லாம் நிரம்பக்கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டு மென்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள பாசனம், நெடுஞ்சாலைத் துறை, கட்டிடங்கள் சம்பந்தமான மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, தமிழ்நாட்டிலேயுள்ள 13 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் 8.4 மில்லியன் ஹெக்டேர் அதாவது 65 சதவீதம் பயிரடத்தக்க நிலங்கள் உள்ளன என்று இங்கே அறிவித்து இருக்கிறீர்கள். இதிலே 6 மில்லியன் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இதிலே 3 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பிற்கு கால்வாய்ப் பாசனம், ஏரிப்பாசனம், கிணற்றுப் பாசனம் என்றும் ஒரு மில்லியன் ஹெக்டேருக்கு ஒரு போக பாசனம் என்று இருந்தாலும் பயிரடப்படும் என்றும் இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். பயிரிடப்படும் நிலப்பரப்பில் பாசனம் பெருகின்ற பகுதியினுடைய அளவு தமிழ்நாட்டிலே 60 சதவீதம். ஆனால் அகில இந்திய அளவிலே எடுத்துக்கொள்வோ மேயானால் அது 28 சதவீதமாக இன்றைக்கு இருக்கிறது. ஆனால் தேச அளவிலே ஒருவனுடைய பயனுக்கு கிடைக்கின்ற நீரினுடைய அளவு 0.09 மில்லியன் கன அடி. ஆனால் தமிழ் நாட்டிலே ஒருவருக்கு பயன் கிடைக்கக்கூடிய நீரினுடையஅளவை எண்ணிப்பார்த்தோமேயானால் 0.03 மில்லியன் கன அடி தான் வருகிறது என்று இங்கே குறிப்பிடப்பட்டிருப்பதை எண்ணிப் பார்க்கும்போது உண்மையிலேயே வருத்தப்படவேண்டிய ஒன்று தான்.

18-20 மணி

அப்படி இருந்தாலும் கூட, இருக்கின்ற நீர் ஆதாரங் களை முழுமையாகப் பயன்படுத்துகின்ற விவசாயத்தை செய்

கின்ற ஒரு மாநிலம் எது என்றால், இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழகம் தான் முதலிடம் வகிக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவேதான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தான் சினிமாவிலே நடிக்கின்ற காலத்திலே, ஆட்சிக்கு வருவதற்கு முன்னமேயே, இந்தியாவின் வளங்களைப் பற்றி ''விவசாயி'' என்ற படத்திலே, பாட்டின் மூலம் இனி வருகின்ற ஆட்சியாளர்கள், அதிகாரிகள் எப்படி செயல்பட வேண்டும் என்பதற்காக பாடி இருக்கிறார்.

''என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்,
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்;
ஒழுங்காய் பாடுபடு வயற்காட்டில்
உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்.''

என்று திறம்பட பாடியிருக்கிறார். பாடியதற்குக் காரணம், இந்தியத் துணைக் கண்டத்திலே நீர்வளம் நிறைந்திருக்கிறது; நிலவளம் நிறைந்திருக்கிறது. ஆக, இந்த வளங்களையெல்லாம், முழுமையாக ஆட்சிக்கு வருகின்றவர்கள், அதிகாரி பெருமக்கள், செயல்படுத்த வேண்டுமானால், உணவுப் பஞ்சம்— தமிழ் நாட்டிலே உற்பத்தி ஆகின்ற அரிசியை, இந்தியாவிலே இருக்கின்ற வேறு மாநிலங்களுக்குக்கூட நாம் கொடுக்க முடியும், வேறு நாட்டிலிருந்து வாங்குகின்ற அந்த நிலையைக் கூட தவிர்க்கலாம் என்ற அடிப்படையிலேதான் அன்றைய தினம் அவ்வாறு பாடி இருக்கிறார்.

இந்தியாவிலே, ஆறுகளையெல்லாம் தேசிய மயமாக்கவேண்டுமென்று மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் அழகாக எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்தில், மாண்புமிகு கலைஞர் அவர்கள், முதலமைச்சர் அவர்களால் தீர்மானம் நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கு அனுப்பவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆக, இங்கிருக்கக்கூடிய கட்சிகளினுடைய கொள்கை என்ன என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள நாங்கள் விரும்புகிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, அதிலே என்ன என்பதையும் தெளிவாக்க வேண்டும். இங்கே இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கை என்ன என்பதையும் தெளிவாக அறிவிக்க வேண்டுமென்றும், இந்த மாமன்றத்தின் வாயிலாக, தலைவர் மூலமாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட்டில், இன்றைக்கு மட்டுமல்ல; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்திலிருந்தே— அவர் முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்தே, நதிகளையெல்லாம் தேசியமயமாக்கவேண்டுமென்ற ஆழமான கருத்தைக் கொண்டது இந்த இயக்கம் என்பதையும்,



அதிலே தொடர்ந்து இருக்கும் என்பதையும், அதைக் கடைபிடிக்கும் என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தேசிய மயம் என்பது— இன்றைக்கு தேசிய முன்னணி அரசு டெல்லியிலே அமர்ந்திருக்கிறார்கள்— நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் அதிலே அங்கம் வகித்துக் கொண்டிருக்கிற அரசாக இருக்கிறது. ஆகவே, தேசிய மயம் என்பது, தேசிய மாயையாக ஆகிவிடக்கூடாது என்ற காரணத்தினால், நதிகளை தேசிய மயமாக்க வேண்டும் என்பது, நாட்டிற்கும், அனைவருக்கும் நன்மை உண்டாக்கக்கூடிய ஒரு விஷயமாக இருக்க வேண்டும். இநத நர் வளத்தை தேசிய மயமாக ஆக்க வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், பல இடங்களில் . . .

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள், நதிகள் பூராவையும் தேசிய மயமாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். தொழிற்சாலைகளை, பேருந்துகளையெல்லாம் தேசியமயமாக்குவதாக நம் டாத்திருக்கிறோம். நதிகள் பூராவையும் தேசியமயமாக்க வேண்டும் என்பதற்கு அவர் என்ன அர்த்தப்படுத்துகிறார் என்பது நமக்குப் புரியவில்லை. அதற்கு விளக்கம் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. வி. கே. சின்னசாமி : சொல்கிறேன், நீர் வளத்தை தேசிய மயமாக்க வேண்டும் என்று சொல்வதற்கு காரணம், பல இடங்களில், அது வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால், சில இடங்களில் அதனுடைய தேவை அதிகமாக இருக்கிறது. குறிப்பாக, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி செய்கின்ற கேரளாவிலே நிறைய தண்ணீர் வீணாக, கடலிலே போய் கலந்து கொண்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் இருக்கின்ற மக்கள் விவசாயிகள், விவசாயம் செய்வதற்குத் தண்ணீர் தேவை என்று கேட்டு, வாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நதிகளையெல்லாம் தேசியமயமாக்கி, கேரளாவிலே வீணாகச் சென்று கொண்டிருக்கிற நீரை, தமிழகத்திற்குத் திருப்பிவிட வேண்டுமென்று. . . .

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கேரளாவிலே இருக்கக்கூடிய நதிகள் பூராவையும் தமிழகத்திற்குத் திருப்பிவிட வேண்டும் என்பது நடக்காது. "Direction of Rivers. How to change it. அணுகுண்டு வைத்து உடைத்தால் கூட மலைகளை உடைத்து திருப்புவது கஷ்டம். அங்கு இருக்கின்ற அதிகப்படியான தண்ணீரை எப்படி தமிழகத்திற்குக் கொடுக்க முடியும்?

என்பதை இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற அரசாங்கமும், கேரளாவிலே இருக்கிற அரசாங்கமும் பேசிக் கொண்டிருக் கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். நான் ஒரு விஷயம் என்ன சொல்ல விரும்புகிறேன். என்றால், காங்கிரஸ் கட்சி 42 ஆண்டுகளில், 2½ வருடம் தவிர, ஆட்சி செய்தார்களே கங்கை நதியில் இருக்கும்படியான தண்ணீர் அத்தனையும் கடலில் போய்க் கொண்டிருக்கிறது; அந்தத் தண்ணீர் முழுவதையும் தமிழகம் வரைக்கும் திருப்பி விடுவதற்கு ஒரு பத்து அல்லது பன்னிரெண்டாயிரம் கோடி பணம் செல விடுவது சாத்தியம்; அப்படி ஒரு திட்டத்தை, டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் மந்திரி சபையில் மந்திரியாக இருந்த காலத்தில், அவரே கேட்டது இன்று வரைக்கும் அமல்படுத்தினோமா? அதற்கு ஏதாவது வழி இருக்கிறதா? உங்களுக்கு/ அந்தத் தண்ணீர் முழுவதையும் இங்கே அனுப்பி இருக்கலாமே, ஏன் செய்யக் கூடாது?

18-25 மணி

**திருமதி எ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு, கே. எல். ராவ் அவர்கள் நீர்ப்பாசன அமைச்சராக மத்தியில் இருந்தபோது, உலகம் போற்றும் பண்டித நேருஜி அவர்கள் பிரதமராக இருந்தார்கள். அன்றைக்குக்கொண்டு வந்தார்கள். ஆனால் எந்த மாநிலமும் அதை ஏற்றுக் கொள்ளலாம், தேசிய மயமாக்கலாம் என்று தீர்மானம்போட்டு அனுப்பாததால் அது தாமதமானது. இன்றைக்கு நீங்கள்....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தொடர்ந்து தவறான தகவல்களின் அடிப்படையில் ஒரு பெரிய பிரச்சினையை வீணாக்கிவிடக்கூடாது. ஏற்கெனவே ஒருமுறை இந்த அவையில் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். கே.எல். ராவ் அவர்கள் கங்கை முதல் காவிரி வரையிலான இணைப்புக்கு ஒரு முயற்சி இருப்பதை எடுத்துக் கூறி அதைப்பற்றி என்னிடமும், கேரள மாநில முதலமைச்சர், கர்நாடக மாநில முதலமைச்சர் ஆகியவர்களிடமும் ஒரு நாள் கிட்டத்தட்ட 4—5 மணி நேரம் விவாதம் செய்து, விளக்கம் அளித்தார்கள். அதற்குப் பல இடங்களில் நீரேற்று நிலையங்கள் அமைக்க வேண்டியிருக்கிறது. அப்படி அமைக்கப்பட இருக்கிற நீரேற்று நிலையங்களில், முதல் நீரேற்று நிலையம்—ஏனென்றால் மேடு பள்ளங்கள் நிறைய இருக்கிற இந்த பூபாகத்தில் அந்த நீரை ஏற்றித்தான் மறுபடியும் கொண்டு வரவேண்டியிருக்கிறது—அந்த நீரேற்று நிலையத் திற்குத் தேவைப்படுகிற மின்சாரம், இன்றைக்கு இந்தியா பூராவும் பயன்படுத்துகிற அந்த அளவு மின்சாரம், முதல்





நீரேற்று நிலையத்திற்குத் தேவைப்படுகிறது என்று குறிப்பிட் டார். பிறகு அவரிடத்தில் சொன்னேன், அப்படியானால் கங்கை காவிரி இணைப்பு என்பதை விட்டுவிட்டு, முதல் கட்டமாக கோதாவரி—காவிரி என்ற அளவுக்கு இணைப்புகளை ஆரம்பித் தாலும் எங்களுக்கு மைசூரிலிருந்து வருகிற தண்ணீர் தேவை யில்லை, கோதாவரியிலிருந்து காவிரிக்குத் தண்ணீர் வரும் என்று அந்த அளவுக்குச் சொல்லபபட்டது. எந்த மாநில அரசும் வேண்டாம் என்று சொல்லவில்லை. எல்லா மாநில அரசுகளும் தேவை என்றுதான் கூறின.

மற்றொன்றை சின்னசாமி அவர்கள் சொன்னார்கள் தேசிய மயமாக்குவது பற்றி சொன்னார்கள். திரு. ரமணி அவர்கள் அப்படியானால் என்ன என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் விளக்கம் அளிக்கவில்லை. தேசிய மயமாக்குவது என்று சொன் னால், சின்னசாமி, அவர்களுக்கு பஸ்களை தேசியமயமாக்குவது தான் பிடிக்காதே தவிர, நதிகளை ஆக்குவதில் அவருக்கு ரொம்ப இஷ்டம். தேசியமயமாக்குவது என்றால் நதிகளை பொறுத்த வரையில் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு அதனுடைய தண்ணீர் கிடைப்பதற்கு, அங்கே போதுமான தண்ணீர் இருந்து, இன்னொரு மாநிலத்தில் போதுமான தண்ணீர் இல்லாத மாநிலத்திற்கு கொடுக்க, ஒரு தேசிய அணுகுமுறை தேவை என்பதுதான் அதற்குப் பொருளே தவிர, தேசியமயமாக்குவது என்றால், கேரளாவில் இருக்கிற தண்ணீரை மொண்டு, மொண்டு நமக்குக் கொடுப்பது என்று பொருள் அல்ல. அதற்கு எவ்வளவோ பெரிய திட்டங்கள் எல்லாம் தீட்ட வேண்டியிருக்கிறது.

**திரு. வி. கே. சின்னசாமி:** நானும் அதைத்தான் எடுத்து வைத்தேன். கேரளாவைப் பொறுத்தவரையில்........

**திரு. ரா. சொக்கர் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு ரமணி அவர்கள் காங்கிரஸ் காலத்தில் என்ன செய்தீர்கள் என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களே அந்த திட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்குக் காரணம், காங்கிரஸ் கட்சி காரணமல்ல, அல்லது காங்கிரஸ் ஆட்சி காரணமல்ல, அதற்கு அன்றைக்கு இருந்த மின்சாரத் தேவை அதிகமாக இருந்ததுதான் காரணம் என்று சொன்னார்கள். ஆனால், கங்கை—காவிரி கிராண்ட் இமாலயன கனால் என்பது 3,000 அடி உயரத்திலும் கார்லண்ட் கனால் 1,500 அடி உயரத் திலும் ஓடுவதாக அமைக்கப்பட்டிருக்கிறது. நீரேற்று நிலையம் பல இடங்களில் தேவையில்லை. ஒரு இடத்தில் போதும். சுமார் 800 அடி உயரம் என்று நினைக்கிறேன். 1947-ல் இந்தியாவின் மொத்த மின்சாரத்தின் உற்பத்தி 2,600 மெகா வாட்தான். ஆனால் இன்றைக்கு தமிழகத்திலேயே 4,000, 5,000

மெகாவாட் மின்சாரம் என்ற அளவுக்கு உற்பத்தியில் முன்னேறி விட்டோம். இந்தியா பூராவும் 60,000 மெகாவாட் நாம் இப்போது தயாரிக்கிறோம். ஆக 25,000 மெகாவாட் அன்றைய தேவை என்பது இன்றைய சாத்தியம்தான். ஆகவே அன்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் முடியாமல் அது இருந்தது. இன்று தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் முடியும். அதற்கு......

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** ; 40 ஆண்டுகாலமாகச் சொல்லாத நல்லதொரு கருத்தை திரு. சொக்கர் அவர்கள் இப்போதாவது சொன்னதற்கு நன்றி. திரு.ரமணி அவர்களுடைய கவலையெல்லாம் சொக்கரைப் போல நல்ல இளைஞர்கள் இவ்வளவு விசாலமான அறிவை நதிநீர்ப் பிரச்சினை பற்றி அறிந்தவர்கள், அந்த 40 ஆண்டுக்காலத்தில் மத்திய அரசிடம் சொல்லி அதை நிறைவேற்றியிருக்கக்கூடாதா என்பதுதான். இப்போது நீங்களே மாட்டிக்கொண்டிருக்கிறீர்கள். (சிரிப்பு) இவ்வளவு அருமையான விஷயங்களை வைத்துக்கொண்டு நீங்களே மேலிடத்தில் சொல்லாமல் இருந்திருக்கிறீர்களே, உங்களுடைய குற்றமல்லவா?

**திரு. ரா. சொக்கர்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொக்கரும் சரி அல்லது இங்கே அமர்ந்திருக்கின்ற துணைத் தலைவரும் சரி, கங்கை— இங்கே வரவேண்டும் அது குமரிக் கடலைத் தொடவேண்டுமென்றுதான் வலியுறுத்தி வருகிறோம். வாய்ப்புதான் தொடர்ந்து என்று தெரியவில்லை. நீங்களும் உதவிக்கரம் கொடுங்கள், என்றைக்கு வரும் இதை நிறைவேற்றிக் காட்டுவோம்.

**திரு. வி. கே. சின்னசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரளாவைப் பொறுத்தவரையில் நம்மை விட 10 மடங்கு நீர் வளம் அதிகமாக அவர்களுக்கு இருக்கிறது அந்த நீரைப் பயன்படுத்துகிற பரப்பளவு பத்தில் ஒரு பங்கு கூட இல்லை. நாம் கேட்பது கேரளா பயன்படுத்திய பிறகு மீதமிருக்கிற தண்ணீரை தமிழகத்திற்குத் தந்து, தமிழக விவசாயிகள் பயன்படுத்துவதற்குத்தான் தரவேண்டுமென்று கேட்கிறோம். காரணம், கேரளாவைச் சேர்ந்தவர்கள் தமிழ் நாட்டில் 20 சதவீதம் பேர் இருக்கிறார்கள்.



அவர்கள் குளிப்பதற்கு, குடிப்பதற்கு, வாழ்வதற்கு, உணவுப் பொருள் உற்பத்தி செய்வதற்காகவாவது தண்ணீர் கொடுக்க அவர்கள் முன்வரவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு வவசாயத்திற்கு, பாசனத்திற்குத் தண்ணீர் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். இன்றைக்கு இந்தியா ஒரு நாடாக இருக்கவேண்டும் என்றால், ஒருமைப்பாடு உடைய நாடாக இருக்கவேண்டும் என்றால் இப்படி வீணாகப் போகின்ற தண்ணீரை இந்த மாநிலத்திற்கு விட வேண்டும் என்று கேட்கிறார்கள்.

18-30 மணி

**திரு. கோ. வீரையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் பாசனத்தோடு நின்றால் பரவாயில்லை. அவர் பரந்த உலகம் முழுவதும் செல்கிறார். கேரளத்தைச் சேர்ந்தவர்கள் 20 சதவீதம் பேர் இங்கே வாழ்கிறார்கள். அதற்காகவாவது, அதாவது அவர்களுக்காகவாவது தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்கள் உலகம் பூராவும் பரவிக் கிடக்கிறார்கள். அதனால் அவர்களுக்கெல்லாம் கொடுக்கவேண்டும் என்று கேட்பது எப்படி முறையாக இருக்காதோ, அதுபோன்றுதான் இதுவும். எனவே அதைக் காரணம் காட்டி கேட்பது எப்படி நியாயமாக இருக்கும். அது சரியல்ல. அந்தக் கருத்து தவறானது என்பதை நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வி. கே. சின்னசாமி** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தவறான கருத்தைச் சொல்லவில்லை நிச்சயமாகத் தவறாகச் சொல்லவில்லை. இங்கே இருப்பவர்களுக்காகவாவது தண்ணீர் கொடுக்கவேண்டும் என்றுதான் கேட்கிறேன். கேரளாவில் இருப்பவர்கள் இங்கேயும் நிறையப்பேர் இருக்கிறார்கள் அவர்கள் அரிசிச் சோறு சாப்பிடுகிறார்கள், அந்த அரிசியை இங்கே உற்பத்தி செய்யவேண்டி இருக்கிறது. குடிப்பதற்கு, குளிப்பதற்கு தண்ணீர் கொண்டு வரவேண்டும். அதற்காகவாவது கொடுங்கள். தமிழ்நாட்டுக்காரர்களுக்குக் கொடுக்கவில்லை என்றாலும் அந்த அடிப்படையிலாவது கொடுக்கவேண்டும் என்றுதான் கேட்கிறேன் எனவே இப்படிப்பட்ட நிலைமை நீடிக்குமேயானால் இந்தியா ஒருமைப்பாடு உடைய நாடாக இருக்காது. ஒரு மாநிலத்திற்கு மாநிலம் தேவையான தண்ணீரைக் கொடுத்தால்தான் இந்தியா ஒரு நாடாக இருக்கும். இல்லை என்றால் மாநிலங்களுக்குக்கிடையே....

**திரு. கே. ரமணி** : துணைத் தலைவர் அவர்களே, ஒரு இன மக்களுக்கு இடையில் தவறான கருத்துக்களைப் பரப்பக் கூடிய முறையில் அவர் கருத்துக்களைச் சொல்கிறார். அது நியாயம் அல்ல. எந்த ஒரு மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும் இன்றைக்கு இந்தியாவில் உள்ள பல தேசிய இன மக்களுட

[திரு. கே. ரமணி]

[1990 மே, 2

மைனாரிட்டியிலே இருக்கிறார்கள். பெரிய தேசிய இனங்களைக்
கொண்டுள்ள அப்படிப்பட்ட மாநிலங்களாக நமக்கு இருக்கின்றன.
இதிலே இருக்கக்கூடிய எந்த ஒரு தேசிய இனத்தையும் அல்லது
எந்த ஒரு மொழி பேசுகிற மக்களையும் தலை எண்ணி, அதன்
படி அடுத்த மாநிலத்தில் தண்ணீர் கேட்பது என்று சொன்னால்
தமிழ்நாட்டினுடைய கதி என்னவாகும்? நாமே பல மாநிலங்
களில் தண்ணீர் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறோம்.
அப்போதெல்லாம் அவர்களிடம் சென்று தெலுங்கர்கள் இத்தனை
பேர்கள் இருக்கிறார்கள். கன்னடக்காரர்கள் இத்தனைப்பேர்
கள் இருக்கிறார்கள், மலையாளிகள் இத்தனைப் பேர்கள் இருக்
கிறார்கள் என்று தலையை எண்ணி கேட்க ஆரம்பித்தால்
இந்தியா முழுவதும் கூறுபோட்டு நாசமாகக்கூடிய நிலைமை
தான் ஏற்படும், எனவே அந்தப் பேச்சு சரியல்ல.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
ஒரு மாநில மக்கள் அடுத்த மாநிலத்தில் இருக்கிறார்கள் என்ப
தற்காக அந்த மாநிலத்திலிருந்து இங்கே தண்ணீர் கேட்பதைப்
பற்றி இங்கே பேசினார்கள். ஆனால் நம்முடைய கவலை எல்
லாம் துங்கபத்திராவில் மழைக்காலத்தில் 10 நாளைக்குக் கடலில்
போய்க் கலக்கிற தண்ணீர் மட்டும் தஞ்சாவூரில் ஒரு போகம்
செய்வதற்கான தண்ணீராகும். அந்த அளவுக்குத் தண்ணீர்
வீணாகிறது என்று கணக்குக் கணக்கிட்டு இருக்கிறார்கள். அடுத்து
தண்ணீரை மேலேற்றுவது என்பது விந்தியத்திற்கு மேலே ஏற்று
வது மட்டும்தான். பிரம்மபுத்திராவிலிருந்து கன்னியாகுமரி
வரையில் இணைப்பதற்குரிய வகையில் நாம் நதிகளை இணைத்துக்
கொண்டு வந்துவி - முடியும். ஒவ்வொரு நதிக்கிடையிலேயும்—
50 மைல்களுக்கு இடையிலே இன்னொரு நதி வந்துவிடுகிறது.
இப்படி 50 மைல்களுக்கு இடையிலே இன்னொரு நதி வந்துவிடுகிற
காரணத்தால் நதிகளை இணைத்து கொண்டு வந்துவிடலாம்.
ஒரே ஒரு இடத்திலே மட்டும்தான். அதாவது விந்தியத்திலே
மட்டும்தான் மேலே ஏற்றவேண்டும். இல்லை என்றால்
குடைந்து கொண்டு வரவேண்டும்.

நான் கேட்பதெல்லாம் எல்லா இன மக்களும் ஒன்றுதான்.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்போது இரண்டு அரசாங்
கமும் ஒன்றாக இருக்கின்ற காரணத்தால், இந்த அவையிலேயே
நதிகளைத் தேசியமயமாக்கவேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக்
கொண்டு வந்தால் அது இந்தியாவிற்கே வழிகாட்டுதலாக இருக்
கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே,
கடந்த சில நாட்களாக அடிக்கடி எதிர்க்கட்சியின் சார்பில்,
அதிலும் குறிப்பாக நம்முடைய இலக்கியச் செல்வர் போன்றவர்
கள், "இரண்டு அரசுகளும் ஒன்றாக இருக்கின்ற காரணத்தால்"
என்று சொல்கிறார்கள். அங்கேயும் நம்முடைய அரசு, இங்கே
யும் நம்முடைய அரசு இருப்பதால் என்று சொல்கிறார்கள்.
இப்படி ஒரு காலத்தில் அங்கேயும் காங்கிரஸ் அரசு, இங்கேயும்



[டாக்டர் மு. கருணாநிதி]

1990 மே, 2]

காங்கிரஸ் அரசு என்று இருந்தது. அவர்கள் ஒரு உண்மையை
ஒத்துக்கொண்டதற்காக நன்றி சொல்கிறேன். மாநிலத்திலேயும்
காங்கிரஸ் ஆட்சி, மத்தியிலேயும் காங்கிரஸ் உள்ளபோது
இந்தக் காரியங்களைச் செய்ய முடியவில்லை என்பதை அவர்கள்
ஒத்துக்கொண்டு, அதை உங்களால் செய்ய முடியும் என்று சொல்
கிறார்கள். ஆனால் அதற்காக நதிகளை எல்லாம் தேசிய
மயமாக்கவேண்டும் என்று தீர்மானம் போடத் தேவையில்லை.
தேசியமயம் என்பது வேறு. நதிகள் பிரச்சினையில் தேசிய
அணுகுமுறை என்பது வேறு, கேரளம் பற்றிக் கூட சொன்னார்
கள். நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். கேரள
மாநிலத்து முதலமைச்சர் அவர்களோடு, கம்யூனிஸ்ட் கட்சியைச்
சேர்ந்த முதலமைச்சர்களோடு பலமுறை பேசி பல நன்மைகளை
இந்த மாநிலத்திற்கு நாம் பெற்றிருக்கிறோம் என்பதை
மறந்துவிடக்கூடாது. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் என்
றாலும் கோவைக்குத் தண்ணீர் என்றாலும், சிறுவாணி தண்ணீர்
என்றாலும், நானும் அச்சுதமேனனும் பேசி ஒரு நொடியில்
முடித்துவிட்டிருக்கிறோம். அதைப்போல, நானும் ஈ.எம்.எஸ்.
அவர்களும் பேசி, பரம்பிக்குளம்-ஆழியாறில் இருந்த சிக்கல்களை
5 நிமிடத்தில் பேசித் தீர்த்துவிட்டோம். திருவனந்தபுரத்திற்கே
சென்றிருந்தோம். அவரே சொன்னார், கொஞ்ச நேரம் அதிகாரி
களை வெளியே அனுப்பிவிட்டு நாம் மாத்திரம் உட்கார்ந்து பேசி
னால் பிரச்சினைகள் முடிந்துவிடும் என்று சொன்னார். நான்,
சாதிக்பாட்சா, மறைந்த மதியழகன் அவர்கள் எல்லாம்தான்
சென்றிருந்தோம். ஒரு 5 நிமிடம் அதிகாரிகள் இல்லாமல்
பேசினோம். பிரச்சினை முடிவுற்றது. அது போல,
கேரள அரசோடு அல்லது பக்கத்திலே இருக்கின்ற ஆந்திர
அரசோடு இப்போது பேசிக்கொண்டிருக்கிறோம். அவர்களோடு
பேசியதிலே நமக்கு எந்த சிரமமும் இருக்கவில்லை. கர்நாடகா
போன்ற சில மாநில அரசுகளோடு நமக்கு சிரமங்கள் ஏற்படு
கின்றன. எனவே, தேசியமயம் ஆக்கிவிடுகின்ற காரணத்தால்
பிரச்சினை அப்படியே தீர்ந்துவிட இயலாது.

18-35 மணி

ஆனால் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர்,
சொல்கிற யோசனை, கங்கையிலிருந்து காவிரி வரை
கன்னியாகுமரி வரை தண்ணீரைக் கொண்டு வருவதற்கு ஆங்
காங்கு நதிகளைப் பயன்படுத்திக் கொள்கின்ற பெரிய திட்டங்
கள் வகுத்துக்கொள்ளப்பட்டாகவேண்டும். அது சாதாரணத்
திட்டமாக இருக்க முடியாது. அதற்குப் பல கோடி ரூபாய்
செலவாகும். இந்த யோசனைகளை நாம் மத்திய அரசுக்குத்
தெரிவிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், எப்போது
நடைபெறும் என்பதுதான் பிரச்சினை.

[1990 மே, 2

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற காவிரி பிரச்சினை பற்றி கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, கேரள அரசோடு பேசி சுமூகமான உறவை ஏற்படுத்தி கேரளாவில் வீணாகின்ற தண்ணீரை தமிழக விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் இங்கே நான் வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி இல்லையென்றால் கர்நாடக தண்ணீர் நமக்குக் கிடைக்கவில்லை, கேரளா தண்ணீரும் கிடைக்கவில்லை என்றால் தமிழகத்தில் இருக்கிற விவசாயிகள் அனாதைகளாக வேறு மாநிலங்களுக்கு செல்லும் சூழ்நிலை ஏற்படும். அப்படிப்பட்ட நிலை வருங்காலத்தில் ஏற்படும் என்ற அச்சநிலை அவர்களிடத்தில் இருக்கிறது. இன்றைக்கும் அப்படித் தான் விவசாயிகளுடைய நிலைமை இருக்கிறது. ஆடு மாடுகளுக்குக்கூட தண்ணீர் இல்லாத நிலையில், அணைகளில் தண்ணீர் இல்லாத நிலைமையில், எல்லாம் காய்ந்துகொண்டிருக்கிற நிலைமைதான் இன்றைக்குப் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஒரு அவையில் இன்னொரு மாநில அரசைக் குறை கூறிப்பேசுவது அவ்வளவு முறையல்ல. அதுவும் பிரச்சினை எதுவும் இல்லாமல் இருக்கும்போது தேவையில்லாமல் வம்புக்கு இழுப்பதும் முறையல்ல. கேரள அரசினுடைய அமைச்சர்களும், நம்முடைய தமிழக அரசு அமைச்சர்களும் இந்தத் தண்ணீர்ப் பிரச்சினை சம்பந்தமாக பலமுறை பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். இப்போதும் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெறுகிறது. போனவாரம் கூட மாண்புமிகு கேரள அமைச்சர் திரு. பேபி ஜான் அவர்கள் இங்கே வந்து நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சரோடு பேசிவிட்டுப் போயிருக்கிறார்கள். பேசி முடித்து, சுமூகமாகப் பிரசினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்கின்ற நிலையில் பேச்சு வார்த்தை நடைபெறும் போது கேரளா நம்மை கைவிட்டது போன்ற ஒரு கற்பனை செய்துகொள்வது நல்லதல்ல.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நம்பிக்கையோடு வேறு விஷயத்திற்கு செல்கிறேன். கேரளா தண்ணீர் தமிழ்நாட்டுக்கு வருவதிலே நான் சந்தோஷப்படுவேன்.

அடுத்து, கட்டிடங்களைப் பொறுத்தமட்டில் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வது 29—4—1990 அன்று நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கட்டிட ஒப்பந்தக்காரர்களை எல்லாம் அழைத்து பேசியதாக தகவல் வந்திருக்கிறது. அவர்கள் இன்றைக்கு இரண்டு மாதக் காலத்திற்கு கட்டிட பணிகளைச் செய்ய முடியாது என்று சொல்கிற ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டில் இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்குக் காரணம், இன்றைக்கு சிமெண்ட் விலை ஏறியிருக்கிறது. சிமெண்ட் உற்பத்தியாளர்கள் உற்பத்தி



1990 மே, 2] [திரு. வி. கே. சின்னசாமி]

செய்கின்ற சிமெண்ட்டின் திறனைக் குறைத்து செயற்கை முறையில் சிமெண்ட்டுக்கு பற்றாக்குறையை தமிழ்நாட்டில் உருவாக்கியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் கட்டிட வேலை, ரோட்டு வேலை, பாலங்களுக்கு பயன்படுத்துகின்ற ஒவ்வொரு பொருள்களினுடைய விலை—குறிப்பாக கம்பியினுடைய விலை 2 மாதத்திற்குள்ளாக 10,200 ரூபாயிலிருந்து டன் ஒன்றுக்கு 13 ஆயிரம் ரூபாய்க்கு விலை ஏறியிருக்கிறது. அப்படி என்றால், 2,800 ரூபாய் விலை ஏறியிருக்கிறது அதுபோல சிமெண்ட் விலை 60 ரூபாய், 65 ரூபாயிலிருந்து 95-லிருந்து 100 ரூபாய் வரை விலை உயர்ந்திருக்கிறது. அதுபோல ஜல்லி ஒரு யூனிட், ஒரு லோடு 750 ரூபாய் என்று இருந்தது இன்றைக்கு 1,100 ரூபாயாக உயர்ந்து, லோடு ஒன்றுக்கு 350 ரூபாய் ஏறியிருக்கிறது. அதுபோல மணல்கூட லோடு ஒன்றுக்கு 675 ரூபாய் என்று இருந்தது 850 ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம் மணலை ஏலம் எடுப்பவர்கள் எல்லாம்பினாமி பெயரில் எடுத்திருப்பதால் 30 ரூபாய்க்கு ஒரு லோடு என்று வாங்கியவர்கள எல்லாம் இன்றைக்கு 150 ரூபாய் வரை வசூல் செய்கிற நிலை இருப்பதாக தெரிகிறது. மத்திய அரசு சிமெண்ட் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்லி கருத்தரங்கு நடத்தி, குறிப்பாக 80 ரூபாய் வரை அதை குறைக்க வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். அதுபோல, ஜல்லி, மணல் ஒப்பந்தக்காரர்களை எல்லாம் அழைத்து குறைந்த விலையில் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி மணல் விலை ஏறக் காரணம், ஏலம் எடுக்கும்போது இவ்வளவு விலைக்குத்தான் மணலை விற்க வேண்டுமென்ற அடிப்படையை சொல்லி ஏலம் விடுவதில்லை. குளம், ஏரியை ஏலம் விடும்போது எவ்வளவு வேண்டுமானாலும் ஏலம் எடுக்கலாம். ஆக, 30 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த மணலை இன்றைக்கு 150 ரூபாய் வரை ஏற்றி வைத்து விற்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், குளத்திலிருந்து மணலை வெட்டி எடுக்கும்போது மரங்கள் எல்லாம் வேரோடு சாய்கின்ற அளவுக்கு மணலை வெட்டி எடுக்கிறார்கள்.

18-40 மணி

என்னுடைய தொகுதியிலே காவேரி குளம் என்ற பெரிய குளம் ஒன்று இருக்கிறது. அங்கே மணலை எடுக்கும்போது மரம் சாயும் அளவுக்கு இந்த மணலை இரண்டு ஆண்டுகளாக தோண்டி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல், 30 ரூபாய்க்கு விற்ற மணலை இன்றைக்கு குளத்திலே 200 ரூபாய் வரை பெற்றுக்கொண்ட பிறகுதான் தோண்டி எடுக்க அனுமதிக்கிறார்கள். இவற்றை எல்லாம் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கட்டப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

ஆய்வில் உள்ள திட்டங்கள். கோவை மாவட்டத்தில் ஆய்வில் உள்ள திட்டங்களிலே பவானி நீரை அவினாசி, அன்னூர் பகுதியில் உள்ள குட்டைகள் மற்றும் ஏரிகளுக்கு திருப்பி விடுதல் பற்றிய ஆய்வுப் பணிகள் நடைபெற இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது என்னுடைய தொகுதி வரையில் வர வேண்டும். பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், புஞ்சைப்புளியம்பட்டி, பகுதிகளுக்கும், நம்பியூர் வரையும் நீட்டிக்க வேண்டும். அங்கே ஏரிகளிலே குளங்களிலே ஒரு சொட்டு தண்ணீர்கூட இல்லாமல், மரங்கள் எல்லாம் சாய்ந்து கொண்டிருக்கின்றன. அந்த ஆய்வுப் பணிகள் நடக்கும் போது, எங்கள் பகுதியையும் இணைத்து, ஆய்வு செய்ய வேண்டுமென்று அந்தப் பகுதி விவசாயிகள் சார்பாகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தைப் பொறுத்தவரையில் எங்கள் மாவட்டத்தில் ஒரு இடம்கூட இல்லை. பெரியார் மாவட்டம் என்ன பாவம் செய்தது என்றே தெரியவில்லை. ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டம் எங்கள் பகுதிக்கும் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நிறைய பட்டதாரிகள், பாலிடெக்னிக் படித்தவர்கள், இன்ஜினியரிங் (சிவில்) பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் கொடுத்து பணிகளுக்கான கான்ட்ராக்டுகளை அவர்களிடம் ஒப்படைத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். அவர்களுக்கு வங்கிகள் கடன் கொடுத்து, இளைய தலைமுறைக்கு நல்ல நிலைமைகளை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கீழ் பவானி பாசனத்தைப் பொறுத்த வரையில் 5, 6 ஆண்டுகளாக அதில் தண்ணீர் வருவதேயில்லை. 20 டி.எம்.சி. தான் தண்ணீர் வருகிறது. ஒரு போகத்திற்குத்தான் பயன்படும் நிலை இருக்கிறது. மேலும் ஒன்றாம் மதகில் விட்டால், இரண்டாம் மதகுக்கு 5, 6 ஆண்டுகளுக்கு நீர் வருவதே இல்லை. எனவே ஒரு வாரம் தண்ணீர் விட்டு, ஒரு வாரம் தண்ணீரை நிறுத்தி விடுவது என்ற முறையில் கொடுத்தால், 2 லட்சம் ஏக்கர்களுக்கு 10 மாதங்களுக்கு தண்ணீர் விட்டால் புஞ்சைப் பயிர் செய்யும் நிலைமை உருவாகி, குடிநீர் பிரச்சினையும் ஏற்படாது. இதனால் இரண்டு பக்கத்து விவசாயிகளும் பயன்பெறுவார்கள். இதிலே உள்ள சிக்கல் ஒன்றை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அங்கே பயிர் கட்டுப்பாடு விதிக்கிறார்கள். அப்படி பயிர் கட்டுப்பாடு விதிக்காமல் இருக்க வேண்டும். அங்கே கிணறுகள் நிறைய இருக்கின்றன. எனவே, கரும்போ, வேறு எதுவோ பயிர் செய்யலாமென்று நிலையை உருவாக்கித் தந்தால் நன்றாக இருக்கும் (மணி அடிக்கப்பெற்றது) கீழ் பவானி பாசனத்தில் 2 லட்சத்து 7,000 ஏக்கர்கள் இருக்கின்றன. அதில் 20,000 ஏக்கர்கள் ஆயக்கட்டு பெறாமல் இருக்கின்றன. அவற்றைப் புதிதாக ஆயக்கட்டில்



சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது, காராப்பாடி என்ற இடம் கூடத்தூர் என்ற இடம், இவர்களைத் தாண்டி காசிபாளையத்திற்கு தண்ணீர் போகிறது. இவர்கள் எல்லாம் வயக்காட்டிலே உட்கார்ந்து கொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ பெரியவர் செய்த தப்பு, கையெழுத்து போட்டுக் கொடுத்தார், ஆக இவர்களுக்கெல்லாம் முன்னுரிமை கொடுத்து, அந்த அடிப்படையில் உத்தரவு, போட்டு, ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குக் கொடுக்கலாம் என்று உத்தரவு போட்டு கலெக்டரிடம் என்.ஓ.சி. வாங்கப் போனபோதுதான் அந்த சர்க்கார் இல்லாமல் போய்விட்டது. ஆக, இன்றைக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். அந்த இடத்திற்கு முன்னுரிமை கொடுத்து, அந்த அடிப்படையிலே அந்த ஆயக்கட்டுகளை சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்** : மாண்புமிகு தலைவரவர்களே, 13 வருடங்களாக ஆட்சியில் இருந்தீர்கள். அப்போது ஏன் அதைச் சேர்க்கவில்லை ?

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நாங்கள் ஆட்சியில் இருக்கிறபோது தான் இந்த 25 ஆயிரம் ஏக்கரைப் புதிதாக பாசனப் பகுதியில் சேர்க்க வேண்டுமென்று, 2½, 3 ஆண்டுக்காலம் ஆய்வு செய்து, அமைச்சருக்கு அந்தக் கோப்பு வந்து சேர்கிற தருவாயில்தான் அந்த ஆட்சி அப்போது போன காரணத்தாலே அப்போது சேர்க்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. வி. கே. சின்னசாமி** : அதைத்தான் சொல்வதற்கு வந்தேன், மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தரவு போட்டு, என்.ஓ.சி. பெற வேண்டுமென்பதற்காகத்தான் அது நிறுத்தப்பட்டது. கோப்புகளைப் பார்த்தால் நன்றாகத் தெரியும். அந்த என். ஓ. சியை வாங்கி, உங்களுடைய திருக்கரங்களாலே அந்த உத்தரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு நன்றி சொல்ல வேண்டும். நான் போன முறை பேசிய நேரத்தில் குள்ளம்பாளையம் பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டேன். கொள்கைக் குறிப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்காக 10 இலட்சம் ரூபாய் சாங்ஷன் செய்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். இன்னும் நிறைய ரோடு எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். (மணி அடிக்கப்பெற்றது). ஹைவேஸ்துறையிலே ரோலர்கள் இல்லை. ஆர்.எல்.இ.ஜி.பி. இல். தார் ரோடு போட்டார்கள். 10 ஆண்டுகளுக்கு அது மிக நன்றாக இருந்தது. கிராமத்தில் உள்ள ஜனங்கள் போக முடியாத

[திரு. வி. கே. சின்னசாமி] [1990 மே, 2

இடங்களுக்கும் ஆர். எல்.இ.ஜி.பி. திட்டத்தில் தார்ச்சாலை போட்டார்கள். இப்போது ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் அது வந்த காரணத்தினால் மெட்டல் ரோடு போடுகிறார்கள். மெட்டல் ரோடு போட்டால் ஒரு வருடத்திற்குக்கூட அது நிற்பது இல்லை. குடிப்பதற்கே தண்ணீர் இல்லை; எனவே தண்ணீர் எடுத்து ரோட்டுக்கு ஒருவரும் ஊற்றுவதில்லை. கல்லைப் போட்டு ரோலரை உருட்டிவிட்டுப் போய்விடுகிறார்கள். அடுத்த 10 நாட்களில் அந்தக் கற்கள் பெயர்ந்து வெளியே வந்து கிடக்கின்றன. ஆகவே அதை மறுபரிசீலனை செய்து அந்த ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தை தார்ச்சாலையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

18-45 மணி

ஹைவேஸ் ரோலரே கிடையாது. அது இல்லாததால் ரோடுகளுக்கு மெட்டல் போடாமல் கற்கள் கொட்டிக் கிடக்கின்றன. ஆகவே ரோலர்களை வாங்கி அந்த வேலைகளையும் செய்ய வேண்டுமென்று கேடடுக்கொள்கிறேன்.

நம்முடைய தலைமைச் செயலகம், பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி, புதிய சட்டமன்ற உறுப்பினர் விடுதி, ராஜாஜி ஹால், கலைவாணர் அரங்கம், அரசு விருந்தினர் மாளிகை போன்ற பல்வேறு இடங்களில் 5 அல்லது 10 வருடங்களுக்கு மேலாக 20 ரூபாய் தினக் கூலியாக என். எம். ஆர். ஆக பணியாற்றுபவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

ஆர். ஆர். மற்றும் ரெகுலர் ஆகிய இரண்டையும் ஒன்றாக்குவதாக அமைச்சர் அவர்களே சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அப்படிச் செய்யும்போது, இரண்டு டிவிஷன்கள் ஈரோட்டிலே இருக்கின்றன; ஒரு டிவிஷனை கோபிச்செட்டிபாளையத்துக்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் பதிலுரையில் சொல்வார்கள்.

திரு. வி.கே. சின்னசாமி : ஒன்றே ஒன்று எனது தொகுதி பற்றிய பிரச்சினையை மட்டும் சொல்லிவிடுகிறேன். பவானி சாகர் நகரியத்தில் சம்பளம் கொடுப்பதற்கே காசு கிடையாது. எனவே அங்குள்ள ரோடுகளை எல்லாம் நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பல முறை அவர்கள் விண்ணப்பித்து இருக்கிறார்கள். பவானிசாகர் நகரியத்துக்கு உட்பட்ட அனைத்து சாலைகளையும் நெடுஞ்சாலைத் துறை எடுத்துப் பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1990 மே, 2] [திரு. வி. கே. சின்னசாமி]

நேஷனல் ஹைவேஸை பற்றி இங்கே சொன்னார்கள். கோவையிலிருந்து அன்னூர் வழியாக, சத்தியமங்கலம் வழியாக இரண்டு, மூன்று மாநிலங்களை இணைக்கின்ற சாலை, ஈரோட்டிலிருந்து கோபி வழியாக மைசூர் செல்கின்ற சாலை— ஆகிய இரண்டு சாலைகளையும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தில் எடுத்துப் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போனமுறை இங்கு சட்டமன்றத்தில் அறிவித்தபோது கூட அந்த ரோடு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

கோவையில் ஒரு மேம்பாலம் காந்திபுரத்தில் கட்டுவதற்கு அமைச்சரவர்கள் அடிக்கல் நாட்டி ஓராண்டுக்கு மேலாகிறது. அந்த அடிக்கல் நாட்டு விழாவுக்கு நான் சென்று பார்த்தேன். ஓராண்டு ஆகியும் அங்கு பணிகள் துவங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்து விடுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : ஆக அந்தப் பணிகள் கூடிய விரைவில் துவங்கப்பட வேண்டும் என்று கேட்டு இங்கே எனது கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்புக் கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகிய துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்பேடு இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருந்தது. அவைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் காலையிலே இருந்து 23 பேர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நான் பொறுப்பேற்றிருக்கின்ற துறையின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறையினுடைய பணிகளைக் குறித்து பல பேர் பாராட்டி இருக்கிறார்கள்; பல பேர் அறிவுரை வழங்கி இருக்கிறார்கள்; சிலர் குற்றங்களையும் குறைகளையும் சொல்லி இருக்கிறார்கள். துறையைப் பாராட்டிய அனைவருக்கும் நான் ஒன்று சொல்லிக்கொள்வேன், அந்தப் பாராட்டு எனக்கு உரியதல்ல; இந்தத் துறையை என்னிடத்திலே கொடுத்து, இந்தத் துறையை நான் எப்படி நிர்வகிக்க வேண்டும் என்று எனக்குச் சொல்லி கொடுத்த ஆசானாகவும், தலைவனாகவும் இருந்து, கோப்பினை எப்படிப் பார்க்க வேண்டும். குறிப்பு எப்படி எழுத வேண்டும், அதிகாரிகளிடத்திலே எப்படிப்பேச வேண்டும், அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் எனக்கு இந்த நிர்வாகத்தின் அரிச்சுவடியைக் கற்றுக்கொடுத்த என்னுடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத்தட்டும் ஒலி) இந்தப்பாராட்டு போய்ச் சேரும். இதை இப்படியும் சொல்லலாம், என்னுடைய தோளுக்கு இட்ட இந்தப் பாராட்டுகளை என்னுடைய தலைவ

னுடைய தாள்களுக்கு இட்டு நான் பெருமைப்படுகிறேன் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அறிவுரை சொல்லி இருக்கிறார்கள்; அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். உங்களுடைய ஆக்கப்பூர்வ மான அந்த அறிவுரைகளை— அடுத்த அடி நான் எடுத்து வைக்கும் நேரத்தில் அதை நினைவுபடுத்திக்கொண்டு, அதைச் சரிசெய்து கொள்வேன். குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அவைகள் காழ்ப்புணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு இருக் கின்றனவா என்பதை நான் இன்னொரு தரம் அவைகளைச் சிந்தித்துப் பார்த்து, அவைகள் கட்சிக்கு அப்பாற்பட்டுச்சொன்ன குற்றச்சாட்டுதான் என்றால் நிச்சயமாக தலை வணங்கி அதை நான் திருத்திக் கொள்வதற்கு முற்படுவேன் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக் கின்றேன்.

18-50 மணி

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், சொன்னதைச் செய்ய கூடிய அரசு, செய்யக் கூடியதை மட்டும் சொல்லக் கூடிய அரசு. வாக்குறுதிகளை வாரி வழங்கிவிட்டு, பிறகு அதைப் பற்றி அப்படியா, நானா சொன்னேன் என்று கேட்கிற அரசு அல்ல.

சென்ற ஆண்டு இந்தப் பொதுப்பணித்துறையைக் குறித்து மாண்புமிகு முதல்வரவர்களும், துறையின் அமைச்சராக இருக் கின்ற நானும் பல்வேறு வாக்குறுதிகளை இந்த மன்றத்தில் நாங்கள் அளித்திருக்கிறோம். அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப் பட்டிருக்கிறதா என்பதைக் கணக்குப் பார்க்கவும் இந்தநாள் உதவும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை)

மாண்புமிகு முதல்வரவர்கள், காவிரி வடி நிலப் பகுதி பாசனத் திட்டத்தை மேம்பாடு செய்வதற்காக ரூபாய் 78.80 கோடி செல வில் திட்ட அறிக்கை ஒன்று தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது என்ற ஒன்றை இந்த அவையிலே 25-3-1989- இலே சொன்னார்கள். அது இப்பொழுது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது; முடிவை எதிர்பார்க்கிறது.

தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கம்பம் பள்ளத் தாக்குத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று முதல்வரவர்கள் 25—3— 1989-ஆம்தேதி தெரிவித்தார்கள். அது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

பாசன மேம்பாட்டு நிலைக் குழு அமைக்கப்படும் என்ற உறுதியை 25-3-1989 ஆம் தேதி தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள். பாசன மேம்பாட்டு நீர்வள நிலைக் குழு— துணைக் குழு— திருமலை நிலைக் குழு— திரு. ஆர். திருமலை, ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கிறது; 24-4-1989 அதைக் கலைஞர் 25-3-1989 ஆம் தேதி அறிவித்தார்கள்; 24-4-1989 ஆம் தேதி குழு அமைக்கப்பட்டது.



அதேபோன்று, காவிரியைக் குறித்து, காவிரி நீர்ச் சிக்கல் குறித்து கர்நாடக அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி, உடன் பாட்டுக்கு வர மீண்டும் ஒரு முறை முயன்று இந்த அரசு கருத்து அறியும்; முயல்வது இந்த அரசின் கருத்தாகும், இந்த நம்பிக்கை வீண் போகுமானால் இப்பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு விட வேண்டும் என மத்திய அரசை வற்புறுத்துவது என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன் என்று கலைஞர் அவர்கள் 25— 3— 1989 ஆம் தேதி தெரிவித்தார்கள். அது எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டு இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எதிர் பார்க்கி றோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நீங்களே நன்றாக அறிவீர்கள்.

அதுமட்டுமல்லாமல், இந்தத் துறையை ஏற்றிருக்கின்ற நான் சில வாக்குறுதிகளை அன்றைக்குக் கொடுத்தேன், பத்தாண்டுக் காலம் பணி புரிந்த என். எம். ஆர். களின் பணி நிரந்தரம் செய்யப் படும் என்ற வாக்குறுதியை நான் கொடுத்திருந்தேன். இன்றைக் குப் பொதுப்பணித் துறையில் பத்தாண்டுக் காலம் பணி முடித்த 600 தினக் கூலி பணியாளர்களது பணிகள் வரன்முறைப்படுத்தப் படும் எனச் சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே அறிவிக்கப் பட்டது. அதன்படி 310 தினக் கூலிப் பணியாளர்களைப் பணி வரன் முறைக்கான ஆணைகள்— ஆணை எண். 193, பொதுப் பணித் துறை, 25-1-1989 அன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எஞ்சி இருக்கிறவர்களின் பணிகள் வரன்முறை செய்வது அரசினு டைய பரிசீலனையில் இருக்கிறது; அடுத்து அவர்களுக்குச் செய்யப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

300 தொழில் நுட்ப உதவியாளர்கள் பணியில் அமர்த்தப்படு வார்கள் என்று நான் அறிவித்தேன். இது உங்களுக்கு ஏற் கனவே அந்த டெக்னிக்கல் அசிஸ்டன்ஸ்— அந்தத் தொழில் நுட்ப உதவியாளர்கள் பழைய ஆட்சியில் விரட்டப்பட்டு, வேதனை யுற்று, வறுமையிலே வாடி, உண்ணாவிரதம் இருந்து, மொட்டை அடித்து; கடைசியிலே கோவணம் கட்டி, ஊர்வலம் போனார்கள். அன்றைக்கு— அது கலைஞர் அவர்கள் எழுதினார்கள் அதை; முரசொலியிலே உடன்பிறப்புக்கு மடல், இந்த ஆட்சி மறந்து விடவில்லை. வந்தவுடனே அவர்களுடைய பணி களுக்கெல்லாம் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். பொதுப் பணித் துறையில் தற்காலிக அடிப்படையில் பணியாற்றி, பணிக் காலியிடம் இல்லாமல் பணி பூட்டிப்பு செய்யப்பட்ட இள நிலைப் பொறியாளர்களுக்கு இத்துறையிலேயே தொழில் நுட்ப உதவியாளர்களாக நியமனம் அளிக்கப்படும் என சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டது. அதன்படி அரசு ஆணை, 680, பொதுப் பணித்துறை, நாள் 23-3-1990-இல் 300 தொழில் நுட்ப உதவியாளர்கள் பதவிக்கான ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது; எனவே, சொன்னதை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

18-55 மணி

அதைப்போன்று, பொறியாளர்கள் சொந்த மாவட்டத்தில் பணியாற்ற அனுமதிக்கப்படவில்லை; அனுமதிக்கப்படுவார்கள் என்று நான் தெரிவித்தேன். அதுவும் 20—6—1989-லேயே சொந்த மாவட்டத்தில் பொறியாளர்கள் பணியாற்றலாம் என்று சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை, சொன்ன உறுதிமொழிகளை முழுக்கக் காப்பாற்றி இருக்கிறோம் என்பதை இந்த மன்றத்திற்கு நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்திலே நாங்கள் சொன்னது மட்டு மல்லாமல் மற்ற பல உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். மதிப்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் சென்ற ஆண்டு பேசும்போது சொன்னார்கள். மற்ற உறுப்பினர்களும் பேசினார்கள். பேசிய பேச்சு காற்றோடு கலந்துவிடாமல் ஆக்கப்பூர்வமான கருத்து இருக்குமானால் அதைச் செயல்படுத்த இந்த ஆட்சி, இந்த அரசு கிஞ்சிற்றும் தயக்கம் காட்டியதில்லை. சென்ற ஆண்டு இதே இடத்தில் திரு. வீரையன் அவர்கள் மோர்தானா டேம் வேண்டுமென்று கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் வேலூரிலே நம்முடைய தலைவர் அவர்களைக் கேட்டார்கள். நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். தலைவர் பேசினார்கள். இந்த ஆண்டு மோர்தானா டேம் அறிவிக்கப்பட்டிருக்கிறது 19.50 கோடி ரூபாயில்.

செய்யாறு தொகுதி உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் தூசிமாமண்டூர் ஏரியை தூர் வாரவேண்டுமென்று சென்ற ஆண்டு பொதுப்பணித்துறை மானியத்திலே பேசினார்கள் அந்தத் தூசிமாமண்டூர் ஏரி தூர் வாருவதற்காக 1.38 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அண்ணன் பூவராகன் அவர்ளும் முகையூர் எம்.எல்.ஏ., தம்பி சம்பத் அவர்களும் சென்ற ஆண்டு மறைந்து விட்ட பெரியவர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களை நினைவு படுத்தி, நந்தன் கால்வாய்த் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டார்கள். இந்த ஆண்டு மறக்காமல் 22.50 இலட்சம் ரூபாய் அந்த நந்தன் கால்வாய்த் திட்டத்திற்கு நாங்கள் நிதி ஒதுக்கியிருக்கிறோம்.

அதைப்போன்று, நம்முடைய பெரியசாமி அவர்களும் மற்ற வர்களும் மன்றாங்கி அணையைக் கட்ட வேண்டுமென்று கேட் டார்கள். இந்த ஆண்டு 20.70 கோடி ரூபாய்க்கு அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.



நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் இங்கே வரவில்லை. நெய்யாற்றங்கரையில் தண்ணீர் வரவில்லை என்று கேட்டார்கள். நெய்யாறு கேரள மாநிலத் தின் தலைப்பகுதியில் இருக்கிறது. அதிலே இருந்து இரண்டு கால்வாய்கள் பிரிகின்றன. வலதுபுறக் கால்வாய் கேரள மாநிலத்திற்குப் பாய்ச்சலைக் கொடுக்கும். இடதுபுறக் கால் வாய் தமிழ்நாட்டிற்குப் பாய்ச்சலைக் கொடுக்கும். அதிலே கன்னியாகுமரி கால்வாய் ஒன்று பிரியும். கன்னியாகுமரி கால் வாயில் இருந்து திருவெங்கோடு கால்வாயினுடைய தலை மதகிலே 350 கன அடி தண்ணீர் வரவேண்டும். ஆனால் 150 கன அடி தண்ணீர்தான் வருகிறது. எனவே, நீர் இல்லை என்று அன்றைக்குச் சொன்னார்கள். நான் கேரளத்திலே பேரிஜாமம்—அந்த நர்ப்பாசனத் துறை அமைச்சருடன் பேசி, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தேசிய நீர் மேலாண்மைக் குழுவின் சார்பிலே அந்தப் பணியை ஆற்ற நடவடிக்கை எடுத் திருக்கிறோம் என்பதை இந்தமன்றத்திற்குத் தெரிவிக்கக்கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இந்த மானியக் கோரிக்கையில் மட்டு மல்ல; பல்வேறு நேரங்களில் கேள்வி மூலமாகவும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வேறு திட்டங்கள் கேட்கப்பட்டிருக் கின்றன. திரு. தங்கபாண்டியன் அவர்கள் கிருதமால் நதி பற்றி கேட்டார்கள். அதற்கு 59 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கிறது. இராஜாதோப்பு அணையைப்பற்றி நம்முடைய சுந்தரம் அவர்கள் நீண்டநாட்களாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதிலே ஒன்றை நான் சொல்வதிலே வெட்கப்படவில்லை. அது என்னுடைய இலட்சியம். 1971 ஆம் ஆண்டிலேயிருந்து சொல் லப்பட்டு வந்தது அது. அதற்கு 2.51 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

அடவிநயினார் திட்டம் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கட்டுரையே எழுதினார்கள. நானே நேரிலே போய்ப் பார்த்தேன், நண்பர் கோபால்சாமியும் கதிரவனும் உடன்வர அதற்கு இன்றைக்கு 37.69 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக் கிறது. அதைப்போன்று நாகல் ஓடைத் திட்டத்திற்கு 11.16 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

உய்யகொண்டான் வாய்க்கால் பற்றி அம்மையார் அவர்கள் கூட கேட்டார்கள். இந்த உய்யகொண்டான் வாய்க்கால் அப்படியே போய் வாழவச்சான் ஏரியில் விழுந்து, பிறகு அங்கிருந்து செல்கிறது, இந்த இரண்டு வாய்க்கால்களையும் இணைக் கிற ஒரு திட்டம். அதைப்போன்றுதான் இந்தப் பொய்யாகுடி திட்டம். இந்தத் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கவேண்டும். அதற்கு 11 இலட்சம் ரூபாய்; அடுத்து 9.70 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போன்று பல்வேறு திட்டங்கள்பற்றி இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்கள் சொன்ன போதெல்லாம் தவனமாகக் கேட்டிருந்து எதை எப்போது செய்ய வேண்டுமோ அதைச் செய்ய நாங்கள் கிஞ்சிற்றும் தயங்கவில்லை. இன்னும்கூடநம்முடைய உறுப்பினர்களிலே பலர் சொன்னார்கள் நம்முடைய ஈஸ்வரன் அவர்கள்கூட சொன்னார்கள். உணவுப் பொருள் பெருக வேண்டுமானால் விவசாயம் நடைபெற வேண்டும். விவசாயம் நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால் நீர்ப்பாசனம் இருக்க வேண்டும். எனவே, உணவுத் துறைக்கும் விவசாயத் துறைக்கும் மூலத் துறையாக இந்தத் துறை விளங்குகிறது என்று எண்ணிய கலைஞர் அவர்கள், நிதி ஒதுக்குவதில் இந்தத் துறையின் மீது ரிவு காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

19-00 மணி

பெரும் பாசனம் 1989— 90 சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம் 2,048 லடசம் ரூபாய். இந்த ஆண்டு 2,584 லட்சம் ரூபாய். நடுத்தரப் பாசனம் சென்ற ஆண்டு ரூபாய் 645 லட்சம். இந்த ஆண்டு ரூபாய் 881 லட்சம். சிறுபாசனத்திற்கு ரூ.2,567 லட்சம் சென்ற ஆண்டு. இந்த ஆண்டு 2,597 லட்சம். வெள்ளத் தடுப்பு என்று ஒவ்வொன்றாக ஒதுக்கி, கடைசியில் பார்த்தால், ஒதுக்கப்பட்ட பணம், சுருக்கமாகச் சொன்னால், சென்ற ஆண்டு ரூ. 8,377 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தால், இந்த ஆண்டு ரூ. 9,641 லட்சம் பாசன வசதிகளுக்காக. அனத அடுத்து, சிறு பாசனம் மற்றதையெல்லாம் சேர்த்தால் சென்ற ஆண்டு ரூ.111 கோடி ரூபாய். இந்த ஆண்டு ரூ.126 கோடி பாசன வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தப் பகுதியில் விவசாயத்தைப் பெருக்க வேண்டும். நீர்ப் பாசனத்திற்கு வழிவகை செய்ய வேண்டும் என்பதில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள் என்று கருதுகிறேன்.

சரி, ஓராண்டு காலம் ஆயிற்றே நீங்கள் ஆட்சிக்கு வந்து, இந்தத் துறை உன்னிடத்தில் ஒப்படைக்கப்பட்டு ஓராண்டு காலம் ஆயிற்றே என்ன செய்திருக்கிறீர்கள் இந்த ஓராண்டு காலத்தில் என்று கேட்டால் இந்த ஓராண்டு காலத்தில், இருக்கிற நிதி நிலைகளுக்கு ஏற்ப, எங்களால் முடிந்த அளவிற்கு செய்திருக்கிறோம். என்ன செய்திருக்கிறோம். கலைஞர் அவர்கள் எனக்கு ஒரு ஞானோபதேசம் செய்தார்கள். என்ன என்று கேட்டால், கோட்டையில் உட்கார்ந்து கொண்டு, சுழல்கிற நாற்காலி அடியில் உட்கார்ந்து கொண்டு, அதிகாரிகளிடத்தில் அது என்ன, இது என்ன என்று கேட்பதைவிட, விவசாயப் பெருமக்களிடத்தில் நீ நேரிலே செல், வயல்காட்டிலே நடப்புவுவை நீ சந்தித்துப் பேசி,



விவசாயிகளுடைய குறைகளை நேரிடையாகக் கேட்டுத் தெரிந்து கொள். எனவே, நீர்ப்பாசன க்ருத்தரங்குகளை மாவட்டந்தோறும் நடத்து. அப்படி நடத்தினால் தான் உனக்கும் விவசாயம் அத்துப்படியாகும். விவசாயிகளுக்கும் அமைச்சரிடத்தில் நேரிடையாக கருத்தைச் சொன்னோம் என்று தெரியும். ஆயிரம் புத்தகம் படிப்பதைவிட, நீ ஒரு நீர்ப்பாசனக் கருத்தரங்கின் மூலம், அந்த மாவட்டத்தினுடைய பாசன வசதிகளை தெரிந்து கொள்ள முடியும் என்ற ஞானோபதேசத்தை எனக்குச் செய்தார்கள். நான் இந்த மன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஓராண்டு காலத்தில் தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை மாவட்டங்களிலும், நீலகிரி, சென்னை நீங்கலாக, மற்ற எல்லா மாவட்டங்களிலும் நீர்ப்பாசனக் கருத்தரங்குகளை நடத்தியதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு உணர்வார்கள்.

இந்த மாமன்றத்திற்கு வர மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள். பொறுப்புணர்ச்சியோடு நாம் செயலாற்ற வேண்டும் என்ற எண்ணம் படைத்த உறுப்பினர் பெருமக்கள் அந்த நீர்ப்பாசன மாநாட்டிலே கலந்து கொண்டு கருத்துரை வழங்கி இருக்கிறார்கள். சிலர் வரமுடியாமல் போயிருக்கலாம். நான் அவர்களை குறை சொல்லவில்லை. ஆனால் அந்த நீர்ப்பாசன கருத்தரங்கின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை சிறு பாசனத் திட்டங்கள், பெரும் பாசனத் திட்டங்கள் எவ்வளவு, எவ்வளவு ஏரிகள், எவ்வளவு ஐரோப்பிய திட்டத்தில் செய்யப்படுகிறது, எவ்வளவு புறம்போக்கு நிலங்கள், எவ்வளவு ஆக்கிரமிப்புகள் என்பதெல்லாம் அத்துபடியாகி விட்டது.

ஒரு மலர் தயாரிக்கப்பட்டது. அந்த மலர் தயாரிக்கட்பட்டதிலே கூட, இன்றைக்கு உறுப்பினர்கள் கையில் ஒரு புத்தகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அதை பொதுப் பணித் துறையின் அரசாங்க ஏடு என்று கருதி விடக்கூடாது, ஏனென்றால், என்னுடைய இலாக்காவில் அப்படி அடித்து இருக்கிறார்கள். 'நீர் வளமும் பாசன திட்டங்களும்'. ஏனென்றால் இதைக்கூட கலைஞர் அவர்கள் தான்— அவரிடம் கொண்டுபோய் கொடுத்தேன் நான். நாங்கள் எல்லா மாவட்டங்களிலும் கேட்டு 'ஸ்டாட்டிஸ்டிக்ஸ்' ஒட்டுமொத்தமாக கொடுத்திருக்கிறோம். இந்த சின்ன புத்தகத்தை புரட்டினால் தமிழ்நாட்டில் உள்ள நதிகள், குளங்கள், குட்டைகள், ஏரிகள், எல்லாம் தெரியும். இதிலே பார்த்தால், பொதுப்பணித் துறையின் புத்தகம் மாதிரி இருக்கிறதே தவிர, கருத்தரங்கின் புத்தகம் மாதிரி இல்லையே— மேலே ஒரு ரேப்பர் போட்டு, வேறு மாதிரி ஒரு டாம் போட்டு அல்லவா கொடுத்திருக்க வேண்டும் என்று சொன்னார். இந்துப் புத்தகத்தை அச்சடிப்பதற்கு முன்னால் அவரைப் பார்க்காத குறையே தவிர— இல்லாவிட்டால் அந்த இடத்தில் எனக்கு அவருடைய உதவி கிடைத்திருக்கும். எனவே, இதை வைத்துக் கொள்ளுங்கள். இது பெரிய ஆராய்ச்சி. 10 ஆண்டுகாலம்

ஒருவர் முயற்சித்தால் கூட முடியாது. அவ்வளவு குளங்களை சேகரித்து வைத்திருக்கிறோம். எனவே, அந்தப் பாசனக் கருத்தரங்குகளை எல்லா மாவட்டங்களிலும் ஒரே ஆண்டில் நடத்தி முடித்த அரசு கலைஞர் அவர்களுடைய அரசு தான் என்பதை இந்த மாமன்றத்திற்குப் பெருமையோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

1-05 மணி

அதோடு நின்று விடவில்லை. விவசாயிகளோடு மட்டும் நின்று விடவில்லை. பாசனக் கருத்தரங்குகள் முடியவில்லை அந்த அதிகாரிகளை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை எஸ் ஈ.—ஈ, ஈ. ஈ லெவலில் சென்னைக்கு அழைத்து, இல்லாவிட்டால் கோயம்பத்தூர், திருச்சி போன்ற இடங்களுக்கு அழைத்து, அவர்கள் செய்கிற வேலைகள் என்ன? அதை பிரேக் பண்ணி இன்னின்ன வேலைகள் சூன் மாதத்திலே நடந்திருக்கவேண்டும், செப்டம்பரிலே இன்ன வேலைகள் நடந்திருக்கவேண்டும், அக்டோபரிலே இவ்வளவு என்று செட்யூல் போடப்பட்டு, அந்த வேலைகள் நடந்ததா என்ற கருத்தை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை நெடுஞ்சாலைத் துறையிலும் சரி, பொதுப்பணித் துறையிலும் சரி, நடத்தியிருக்கிறேன். அப்படி நடத்துகிற காரணத்தால்தான் இரண்டு மாதத்திற்கு ஒருமுறைதிட்டங்களைப் பற்றி பரிசீலிக்கிறகாரணத்தாலேதான், எனக்கு இந்தத்திட்டங்கள் அத்துப்படியாகி இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் அல்ல. எனவே அந்தக் காரியத்தையும் இந்த ஓர் ஆண்டுக்காலத்திலே நாங்கள் செய்து இருக்கிறோம்.

மூன்றாவதாக ஒரு சில புதுமைகளை புகுத்தி இருக்கிறோம். என்ன புதுமை? இங்கே கூட நம்முடைய உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் பாராட்டினார்கள். நம்முடைய தம்புசாமி அவர்கள் ஒரு நாள் பாராட்டினார்கள். இது தஞ்சை மாவட்டத்திலே இருப்பவர்களுக்குத்தான் இதனுடைய பெருமை தெரியும். காரணம் ஆறுகள் சீமைக் காட்டாமணிச் செடியினால், மண்டிப் போய், மேடிட்டுப் போய், வருகிற கொஞ்சம் தண்ணீரும் வாய்க்காலுக்கு வராமல், நின்று போயிருக்கிற அந்த நிலைமையை மாற்றி அமைப்பதற்கு புல்டோசர் மூலம் பயன்படுத்தினோம். சில பேர்கள் அதற்கு எதிர்ப்பைக்கூட தெரிவித்தார்கள். ஏன் என்று கேட்டால், மக்களுக்கு வேலை போய்விடும் என்று. வேலை என்பது வறட்சிக் காலத்திலே கொடுப்பது. மற்ற நேரங்களில் இப்படிப்பட்ட புல்டோசர் மூலமாகத்தான் நாம் சீமைக்காட்டாமணியை ஒழிக்க முடியும்.

தஞ்சை, புதுக்கோட்டை, மாவட்டங்களிலே 1989-90 ஆம் ஆண்டு புல்டோசர் மூலம் தூர் வாரி அகற்றும் பணி தொடங்கியது. 56 ஆறுகளில் 36.63 லட்சம் செலவிலும், 73 வடிகால்களில்



44.36 லட்சம் செலவிலும், 49 கால்வாய்களில், 26.74 லட்சம் செலவிலும் 16 ஏரிகளில் 12.67 லட்சம் செலவிலும் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது. 1990-91 ஆம் ஆண்டுக்கு 106 வேலை களுக்கு 75.98 லட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இப்படி புல்டோசர் மூலம் தூர் வாரப்பட்ட வாய்க்கால்கள், குதிரை வேகனார் வாய்க்கால், கொண்டனார் வாய்க்கால், மறவ னார் வாய்க்கால், சந்திரா நதி, வெள்ளையாறு, திருமலை ராஜன் வாய்க்கால் போன்ற வாய்க்கால்களை எல்லாம் செய் திருக்கிறோம். இதிலே இன்னும் பல நின்றிருக்கிறது என்று நம்முடைய வீரையன் அவர்கள் தெரிவித்தார்கள். விட்ட பணி தொடரும், சென்ற ஆண்டு துவங்கியது என்பதை மட்டும் நான் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். (குறுக்கீடு). 56 ஆறுகளை எடுத்திருக்கிறோம்.

அதேபோன்று பை-பாஸ் செய்வது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்றபோது, தெரிவித் தார்கள், காலையிலே பேசுகின்றபோது, நான் மகிழ்ச்சி அடைந்தேன். காரணம் வேறு பிரச்சினைகளுக்கு வராமல், அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்கள். இருக்கிற நீர் மிகக் குறைவு, அந்த குறைந்த நீரை வைத்துக்கொண்டு, சிக்கனமாகப் பயன்படுத்தத் தெரியவேண்டும். அதுதான் இன்றைக்கு நீரைப் பற்றியிருக்கிற புதிய தத்துவம், குறைந்த நீரில் அதிக விளைச்சலைப் பெருக்க வேண்டும். அதனால்தான் எத்தனையோ சொட்டு நீர்ப்பாசனம் என்றும் வேறு பாசனங் களை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த வகையில் ஒரு ஏரியிலிருந்து இன்னொரு ஏரிக்குத் தண்ணீர் போக வேண்டும், அதுவும் தாமிரபரணி பாசனத்திலே இந்தத் திட்டம் அதிகமாக உண்டு. ஒரு குளத்திலிருந்து இன்னொரு குளத்திற்குப் போகிறது. அதிலே சில நேரங்களில் வீணாகத்தண்ணீர் கிடக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன், கடம்பாகுளம் 12 அடி உயரம் உள்ள குளம், அந்தக் குளம் நிரம்புவதற்கு 9 நாட்களாகும். அந்தக் குளத்தின் கீழே திருச்செந்தூர் வரையிலும், குறும்பூர் குளங்கள் என்று எல்லாம் பல குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங் களுக்கு இந்தக் கடம்பாகுளம் நிரம்பி,—8 அடி மதகு இருக்கும்— அந்த மதகுகளில் எல்லாம் நுழைந்து அந்தத் தண்ணீர் போக வேண்டும். அந்தக் கடம்பா குளத்தினுடைய பாசனம் எவ்வளவு, 876 ஏக்கர் தான். ஆனால் கீழே இருக்கிற குளங்களுடைய பாசனம் எவ்வளவு, கிட்டத்தட்ட 2 ஆயிரம், 3 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம். சில நேரங்களில் அந்தக் கடம்பாகுளத்திற்கு, அதனுடைய சொந்தப் பாசனத்திற்கு நீர் இல்லாதபோதுகூட இந்தக் குளத்தை நிரப்பி, அதற்குப்பிறகுதான் கீழே திருச்செந்தூர் வரைக்கும் தண்ணீர் கொண்டு போக வேண்டியதாக இருக்கும். அப்போது என்ன நடக்கிறது என்றால், அந்த நேரத்திலே தண்ணீரை அந்தக் கடம்பாகுளப் பாசனக்காரர்கள் வேண்டுமென்றே எடுத்து செலவு செய்துவிடுகிறார்கள். அது வீணாகிறது என்ற தத்துவத்தை இப்போது நாம் கண்டுபிடித்திருக்கிறோம்.

அதைப்போன்றுதான் பொய்யாக்குடியிலும் வாழவச்சனூர் கோட்டையிலும். நம்முடைய உறுப்பினர் அம்மையார் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் கூட சொன்னார்கள்—அதிலே 136 ஏக்கர்தான் அது பாய்கிறது. கீழே இருக்கிற....

19-10 மணி

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தக் கடம்பாப் பிரச்சினையைப் பற்றி நாம் மிகுந்த எச்சரிக்கையோடு ஆய்வு செய்த பிறகு சில கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருந்தேன், நீர்ப்பாசன மாநாட்டிலே கலந்து கொண்டபோது. அதைப்போன்று முதலமைச்சரிடமும் சொல்லியிருந்தேன். ஏனென்றால் 800 ஏக்கரே அல்ல. 3,500-க்கும் மேற்பட்ட ஏக்கர்கள் அந்த கடம்பா பாசனத்தைப் பெறுகின்றன.

அதுமட்டுமல்ல, ஏற்கெனவே 4 மதகுகள் இருந்தன. இப்போது 8 மதகுகள் ஆகி அந்தப் பகுதிக்கு தண்ணீர் போகிறது. எனவே அதிலே அதிகமான தண்ணீர் தேங்குகிறது என்றும், அதனால் அங்கே தண்ணீர் போக வேண்டுமா என்று ஒரு ஐயப்பாடு நம்முடைய அமைச்சர் அவர்களுடைய கருத்திலே வந்து விடக்கூடாது என்பதற்குத்தான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே அவரிடம் நான் பேசியிருக்கிறேன். இந்தக் கடம்பாகுளம் விஷயமாக நாம் அமர்ந்து பேச வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** அதிலே நான் மாறுபட்ட கருத்து உடையவன் அல்ல. ஆனால் தேவையில்லாத நேரத்தில் கூட தண்ணீர் இருக்கிறது. அதிலே கடம்பா குளத்துக்காரர்கள் பை-பாஸ் வெட்டக்கூடாது. தனிக் கால்வாய் வெட்டக்கூடாது என்று கடம்பா குளத்துக்காரர்கள் கேட்கிறார்கள். அதைப்போல்தான் அம்மையார் கூட அன்றைக்கு அழைத்து வந்தார்கள். அவர் அந்தமாதிரி பொய்யாக்குடியிலிருந்து தனிக் கால்வாய் வெட்டக்கூடாது என்கிறார்கள். தங்கள் தங்களுடைய பாசனம் பாதிக்கப்படுமோ என்கிற அச்சம் அவர்களுக்கு இருக்கும். நான் மறுத்துச் சொல்லவில்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போன்று அம்மையாரையும் சேர்த்துச் சொல்கிறேன். அதைத்தான் அம்மையார் அவர்களும் சஜெஸ்ட் பண்ணார்கள். அந்த இரண்டு ஊர்க்காரர்களையும் வைத்துப் பேசி ஒரு சுமுகமான முடிவோடு இந்த அரசு அதை அணுக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

இன்றைக்கு ஐரோப்பிய பொருளாதாரத்தின் அடிப்படையில் சில ஏரிகளை நவீனப்படுத்துகின்ற திட்டம். அந்தத் திட்டம்



இரண்டு கட்டமாக நடத்தப்பட்டது. முதல் கட்டத்திற்கு ரூ. 44.43 கோடி. அதில் 206 குளங்கள் நவீனப்படுத்தப்பட்டன. சமீபத்தில் நான் டில்லிக்குப் போயிருந்தபோதுகூட அங்கே நீர்ப்பாசனத் துறைச் செயலாளராக இருக்கின்ற சிட்டலே அவர்கள் என்னைப் பாராட்டிச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே மட்டும்தான் ஏரிகள் நவீனப்படுத்துகின்ற திட்டத்தை செம்மையாகச் செய்கிறார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. நீங்கள் மட்டும் எப்படிச் செய்கிறீர்கள் என்று என்னைக் கேட்டார்கள். நான் அதை எப்படிச் செய்கிறோம் என்பது அல்ல. உண்மையாக மக்களுக்கு பணியாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு செய்கிறோம் என்று நான் அவரிடத்திலே விளக்கங்களைச் சொன்னேன். அதைப் பார்த்த பிறகு ஐரோப்பிய பொருளாதார நிபுணர்கள் தமிழ்நாட்டில் இவ்வளவு நல்லமுறையில் நடக்கின்றது என்று இங்கே இரண்டாவது கட்டமாக பணம் கொடுக்கவேண்டுமென்று வந்தார்கள். நம்முடைய முதலமைச்சரைச் சந்தித்தார்கள். முதல்வர் அவர்களும் எங்களுடைய பொதுப்பணித்துறை நல்ல முறையில் பணியாற்றும் என்று அவர்களுக்கு உறுதி அளித்ததன் பேரில் இரண்டாவது கட்டமாக ரூ. 50 கோடியைத் தந்திருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு 150 பொதுப்பணித் துறை ஏரிகளும், 80 எக்ஸ்-ஜமீன் ஏரிகளும் நவீனப்படுத்தப்படும் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். சரி இதெல்லாம் சீர் செய்து கொண்டிருக்கிறீர்கள். சென்ற ஆண்டு சில அறிவிப்புகளைச் செய்கிறீர்கள். ஆனால் இந்த ஆண்டு சில அறிவிப்புகளை நீங்கள் செய்யவில்லையே என்று கேட்கலாம். அதனாலே நான் முதலிலே அறிவிப்புகளை செய்துவிட்டு, அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன சில கருத்துக்களுக்கு நான் பதில் அளிக்க கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

(1) பொதுப்பணித்துறையில் மாநிலத்தேவைகளுக்குக் கொண்டு வரப்பட்ட 188 ஓட்டுநர்களின் தேர்வுநிலை ஊதியம் நிர்ணயிப்பதில் ஏற்பட்ட ஒரு சிறு பிழை காரணமாக அவர்களிடமிருந்து சுமார் ரூ. 6 இலட்சத்தை திரும்ப வசூலிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதிலிருந்து தங்களைக்காக்க வேண்டுமென்று மேற்கண்ட ஓட்டுநர்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். தேர்வுநிலை ஊதியம் நிர்ணயம் செய்வதில் ஏற்பட்ட பிழையைச் சீர் செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாட்டிற்குட்பட்டு இதுவரை மிகையாக வழங்கப்பட்ட தொகையை தள்ளுபடி செய்யலாம் என்று முதல்வர் அவர்கள் வழங்கிய அந்தக் கருணையின் அடிப்படையில் இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை நான் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(2) இளநிலைப் பொறியாளர்கள் ஊதியம், மறு ஊதியம் நிர்ணயம் செய்தல், பொதுப்பணித் துறையில் பணியாற்றி வருகிற இளநிலைப் பொறியாளர்கள் தங்களுக்கு 5-வது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம் குறைவான தாக உள்ளது என்றும், அதை உயர்த்தித் தரவேண்டுமென்றும் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறார்கள். அதன்மீது தனது நல்ல முடிவை அரசு விரைவில் அறிவிக்கும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

(3) தெலுங்கு— கங்கை திட்டத்தை விரைவுபடுத்தி கிருஷ்ணா நீரை சென்னைக்குக் கொண்டுவரும் பணியை விரைவாக்க அதற் காக தனியாக ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்படுவார்.

(4) பரம்பிக்குளம்— ஆளியாறு பாசன அமைப்பில் பரம்பிக் குளம் பிரதான வாய்க்காலில் முதல் மண்டபத்திலிருந்து பாசனப் பரப்பில் உள்ள தென்னை மரங்களை வறட்சியிலிருந்து காப்பாற்று வதற்காக மே 5 ஆம் தேதி முதல் பரம்பிக்குளம் நீர் தேக்கத்தில் எஞ்சியுள்ள 200 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(5) நெடுஞ்சாலை நிர்வாக சீர்திருத்தத்தை தற்போது நெடுஞ்சாலைத் துறையில் நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சிப் பணிகளை ஒரு தலைமைப் பொறியாளரின்கீழ் 4 வட்டங் களையும் 24 கோட்டங்களையும் கவனித்து வருகின்றன.

19-15 மணி

அதே நேரத்தில் கிராமச் சாலைகள் மற்றும் கடற்கரைச் சாலைப் பணிகளை தனியாக ஒரு தலைமைப் பொறியாளரின் கீழ் 4 வட்டங்களும், 14 கோட்டங்களும் கவனித்து வருகின்றன. இப்பிரிவுகளில் பணியாற்றும் கண்காணிப்பு பொறியாளர்களும், கோட்டப் பொறியாளர்களும் நெடுந்தொலைவு பயணம் செய்து தத்தமது பொறுப்பிலுள்ள பணியை மட்டும் மேற்பார்வையிட்டு திரும்புகிறார்கள். அவரது ஆளுகை எல்லைகள் விரிந்து பரந்து கிடக்கின்றன. ஒரே இடத்தில் நடைபெறும் இருவேறு பணி களை மேற்பார்வையிட இரண்டு கண்காணிப்புப் பொறியாளர் கள் அதே இடத்திற்கு செல்லவேண்டிய நிலையிருக்கிறது. இந் நிலையைத் தீர ஆய்வு செய்து மக்களின் நன்மையையும், நிர்வாக நன்மையையும் கருத்திற் கொண்டு நெடுஞ்சாலைப் பணிகள் மற்றும் கிராமச் சாலைகளை ஒரே தலைமைப் பொறியாளரின் கீழ்க் கொண்டு வந்து மாநிலத்தை 10 வட்டமாகப் பிரித்து ஒவ்வொரு வட்டமும் தனியே ஒரு கண்காணிப்புப் பொறியாளர் பொறுப்பில் விடவேண்டும் என்னும் கருத்துரு அரசின் பரிசீலனை யில் உள்ளது. போதுமானக் கோட்டங்களும் இத்தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளரின் கீழ் இயங்கும்.



(6) அதே போல ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிப் பணிகளை கவனிக்க தனியாக தலைமைப் பொறியாளர்களை யும், போதுமானக் கோட்டப் பொறியாளர்களையும் நியமனம் செய்வதும் அரசின் பரிசீலனையில் உள்ளது. இப்பிரிவு செயல கத்தைப் பொறுத்தவரையில் பொதுப்பணித் துறையின் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கும். நெடுஞ்சாலைத் துறையில் புலனாய்வுப் பிரிவு, போக்குவரத்து வட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு ஊக்குவிக்கத்திட்டம்— புலனாய்வு வடிவமைப்பு போக்குவரத்து மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுகளில் பணிபுரியும் அத்தனை பொறியாளர்களுக்கும், கண் காணிப்புப் பொறியாளர்களுக்கும், நிலைமைகளுக்கு ஏற்ப மாதம் ஒன்றுக்கு ரூ. 75 முதல் ரூ. 150 வரை சிறப்பு ஊதியம் வழங்கப் படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசுகின்றபோது, பெரும் பகுதியாக அவர்களுடைய பேச்சை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது ஆக்கிரமிப்புகள்தான். அதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்கிறதாக எனக்குத் தெரியவில்லை. எல்லோரும் ஆக்கிரமிப்புகளைப் பற்றி பேசினார்கள். நானும் பொதுப்பணியினுடைய கோஷமாகவே ஆக்கிரமிப்புகளை அகற்று வோம் என்றே நான் சொல்லியிருக்கிறேன். பலபேர் பேசு கிறார்கள். ஆனால் தனியாக அவர்கள் தொகுதியிலே ஒரு கண்மாயில் இருக்கிற ஆக்கிரமிப்பை அகற்றுகிறபோது இதை மட்டும் விட்டுடுங்க என்றுதான் வந்திருக்கிறார்கள். இதுதான் நான் அனுபவத்திலே பார்த்திருப்பது. பேசுகிறபோது இப்படியிருந்தால் எப்படி? இன்னொருதரம் ஆர். எஸ். மங்களம் ஏரியைப் போல் நம்மால் கட்ட முடியாது. எனக்கு இருக்கிற வருத்தம் எல்லாம் அதுதான். இன்னொரு தரம் தாமல் ஏரியைக் கட்டமுடியாது, மாமண்டூர் ஏரியைக் கட்டமுடியாது. கட்டியிருக்கிற ஏரிகளையாவது காப்பாற்றாவிட்டால் நாம் என்ன கடமையை இந்த மக்களுக்குச் செய்தோம். வரத்துக் கால்வாயை வெட்டிவிடுகிறார்கள், வெட்டி ஏரியை ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். பாசனக் கால்வாயை எடுத்துவிட்டால் பிறகு பயிர் எப்படி விளையும்? அந்த பாசனக் கால்வாய் இரண்டு அடி அகலம் கூட இருக்காது. அதை இந்தப் பக்கம் இருக்கிறவன் வெட்டுரான், அந்தப் பக்கம் இருக்கிறவன் வெட்டுரான், அதை வெட்டி, வெட்டி, கடைசியிலே இவன் அவனை வெட்ட, அவன் இவனை வெட்ட, கடைசியில் இரண்டுபேரும் வேலூர் ஜெயிலில் போய் நின்றுவிடுகிறார்கள். வரப்பை வெட்டுவதே ஒரு கலை தமிழ்நாட்டிலே, வேறு எங்கும் கிடையாது. ஒருவன் நடக்கிற வரப்பை வெட்டிக்கிட்டு இருந்தான், ஒரு பெரியவர் போனார் என்னடா நடக்கிற வரப்பை வெட்டுகிறாய், ஏற்கெனவே 30 ஏக்கர் உனக்கு இருக்கிறதே என்றார். வெட்டுகிறவன் சொன்னான். ஐயா பெரியவரே விவரம் தெரியாம பேசாதே, இந்த 30 ஏக்கருமே இப்படி வெட்டிச் சேர்த்ததுதான் என்றான். அப்படிப்பட்ட

வெட்டுகிற சுபாவம் நம்மகிட்ட இருக்கு. ஆனால் பொதுப் பணித் துறைக்கு அவற்றையெல்லாம் அகற்றுகிற அதிகாரம் உண்டாவென்றால் இல்லை. காட்டு இலாக்காவுக்கு, பல் துலக்குவதற்காக ஒரு குச்சியை ஒடித்தால் கூட காட்டை அழித்து விட்டார்கள் என்று அவர்கள் 'பிராசிகியூஷன்'' செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரமுண்டு. எனவே பொதுப்பணித் துறையிலேயும் நேரிடையாக ஆக்கிரமிப்புகளை அகற்ற அவர்கள் மீது வழக்கு தொடர காட்டு இலாக்காவுக்கு இருக்கிற அந்த அதிகாரங்கள், பொதுப்பணித்துறைக்கும் வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதிலே விரைவில் முதல் அமைச்சரோடு கலந்துபேசி நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரத்தில் இந்த ஆக்கிரமிப்புகளை ஒழிப்பதற்கு நீங்களும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று புதிதாக, மறந்து போன குடிமராமத்து.

19-20 மணி

அதை மீண்டும் புதுப்பித்து இருக்கிறோம். அதிலே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் கோ.சி. மணி அவர்கள் எனக்குப் பெரிதும் உதவி இருக்கிறார்கள். ஆலோசனை மட்டுமல்ல, என் இலாக்காவிற்குப் பணம் கொடுப்பது முதற்கொண்டு எல்லா வகையிலும் அதற்கு ஒத்துழைப்புத் தந்து இருக்கிறார்கள். அந்தக் குடிமராமத்து எப்படிச் செய்வது என்பதை, அந்தப் பிரிவையே அவர் தான் பொதுப்பணித்துறையிலே கவனிக்கிறார் என்று கூட நான் பெருமையாகத் தெரிவித்துக் கொள்வேன். அந்த அளவிற்கு அவற்றையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவதாகச் சொன்னார்கள், எல்லோரும் மேற்கு நோக்கிப் பாயும் ஆறு, திருப்பவேண்டும். மேற்கு நோக்கிப் பாயும் ஆறு, திருப்ப வேண்டும் என்று. பரம்பிக்குளம்-ஆளியாறினுடைய தத்துவமே அதுதான். மேற்கு நோக்கிப் பாய்கிற ஆறுகளைத் தமிழ்நாட்டிற்கு திருப்பிக் கொண்டு வரவேண்டும். ஆனால் அதற்கு ஒரு ஆய்வு—அதனுடைய ஒப்பந்தம் மறு ஆய்வு பற்றிப் பேச வேண்டி, அதுகுறித்து நாம் கேரள அமைச்சரோடு பேசியிருக்கிறோம். கேரள மாநிலத்தோடு இந்த ஓராண்டுக் காலத்தில் நான் பேசிய பேச்சுக்களில் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசியிருக்கிறோம். நெய்யாறு திட்டத்தில், கன்னியாகுமரி கிளைக் கால்வாய் பற்றி சொன்னேனே, அதைப் பற்றி பேசி முடிவு எடுத்திருக்கிறோம். இங்கே கொஞ்சம் முன்னாலே நம்முடைய ஈஸ்வரன் சொன்னாரே, செண்பகவல்லி அணைக்கட்டுத் திட்டம். அதைப் பற்றி ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். வாழையாறு அணை, சித்தாறு அணை ஆகியவற்றில் நீர்ப்பாசனப் பரப்பில் மூழ்கியுள்ள அந்த நிலப்பரப்புகளைப் பற்றியெல்லாம் பேசி முடிவு எடுத்திருக்கிறோம். அடுத்து, நம்முடைய மாண்புமிகு ரமணி அவர்கள் அக்கறையோடு பார்க்கிறார்கள்.



அவருக்கும் மிக விருப்பமானது அந்த பாண்டியாறு-புன்னம்புழா. அந்தத் திட்டத்தைப் பற்றி சமீபத்திலே கூட மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் பேபி ஜான் அவர்கள் அதைப்பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

அடுத்து, இங்கே நம்முடைய வல்லரசும், மற்றவர்களும் சொன்னார்கள, பெரியாறு அணையைப் பலப்படுத்துவது பற்றி. பெரியாறு அணையைப் பலப்படுத்துவதை மூன்று கட்டமாகச் செய்கிறோம். முதற்கட்டம், மேலே இருக்கிற அந்தக் கைப்பிடி—பாரபெட் வால்—அதை ஒரு 'கான்கிரீட்டாக 'மூன்று அடி உயரத்திற்கு உயர்த்துவது. இரண்டாவது கட்டம், அங்கே வெண்ட் இருக்கிறது. தண்ணீர் வந்தால் வழிந்தோடுகிற வழி. ஏனென்றால் அவர்கள் ஏன் பயப்படுகிறார்கள் என்றால் நிறையத் தண்ணீர் வந்து அணை உடைந்துவிட்டால் என்ன செய்வது என்று. நாங்கள் சொன்னோம், உடையாமல் இன்னும் நான்கு கண்களை நாங்கள் போட்டு, தண்ணீர் வந்தால், திறந்து ஆற்று வழியே போவதற்கு வழி செய்கிறோம் என்று அதற்கு செய்திருக்கிறோம். அந்தப் பணி முடிந்து விட்டு, கதவு போடுகிற வேலை நடந்து கொண்டிருக்கிறது. அதை அடுத்த கட்டம், 'ஆங்கரின்' போடுவது. மேலே இருந்து ஒரு டிரில் போட்டு, கடல் மட்டத்திற்கு அடியிலே இருக்கிற பாறையோடு அந்தக் கம்பியை இணைப்பது. அது ஒரு பெரிய வேலை. 48 இலட்சம் ரூபாயிலே அதைச் செய்து முடித்திருக்கிறோம். மூன்றாவது கட்டமாக, முட்டுக் கொடுக்கிறது, 'கான்கிரீட் பேக்கிங்' என்று சொல்வார்கள். கீழேயிருந்து 75 அடி வரையிலே இருக்கிற, அணைக்கு ஒரு முட்டுக் கொடுப்பது. அந்த வேலையும் முடிந்துவிட்டது. 75-லிருந்து 155 வரை இருக்கிற அந்த அடியைப் பலப்படுத்துகிற வேலை மட்டும்தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. 135 அடி மட்டும்தானே இருக்கிறது. இரண்டு கட்டம் முடிந்தால், 145-வது அடியை உயர்த்தலாம், இல்லையா என்று நம்முடைய வல்லரசு அவர்கள் கேட்டார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நிறுத்தலாம், இல்லையென்று சொல்லவில்லை, ஆனால் அதே நேரத்தில் இன்னும் அந்த 'வெண்டுகளுக்கு' கதவு போடவில்லை. அதைப் போட்ட பிறகுதான் அந்த வேலை செய்ய வேண்டும். ஒன்றை மட்டும் இந்த அவையிலே நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அணையைப் பலப்படுத்துகிறோம். எதற்காக? தண்ணீரைத்தேக்கி வைப்பதற்காகத்தான், அணையைப் பலப்படுத்திவிட்டு தண்ணீரை தேக்காமல் வைக்கிறோமா? வைக்கமாட்டோம். சமைக்கிறோம், எதற்கு? சாப்பிடுவதற்காக. அதைப்போன்றுதான் அணையைப் பலப்படுத்துகிறோம்.

155 அடி தண்ணீரை பெரியாறு அணையிலே நிறுத்த இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

நாம் ஒரு மாநிலத்தோடு தண்ணீருக்காக பேசுவதில்லை. கேரளாவிலே பேசி, பரம்பிக்குளத்தை முடித்தால், கர்நாடகத்தோடு காவிரி பற்றி பேசுகிறோம். காவிரியைப் பேசி முடித்தால் இந்தப் பக்கத்திலே கிருஷ்ணா நதி நீர், பேசுகிறோம். ஆரணியாறு, குசஸ்தலையாறு இவ்வளவும் பேசினோம். இவ்வளவும் பேசி முடித்து இவ்வளவும் பேச வேண்டியது இருக்கிறது. (குறுக்கீடு). இந்தப் பக்கம் போகமுடியாது. அந்தப் பக்கம் வேறு. அதே போன்று இப்போது ஆந்திர மாநிலத்தோடு 1983 ஆம் ஆண்டு மேளதாளத்தோடு கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்ட அந்த கிருஷ்ணா வாட்டர், கிருஷ்ணா நதி தண்ணீர் திட்டம் இடையிலே சுணங்கிப் போயிருந்தது. நம்முடைய முதல்வர் அவர்கள் வந்தார்கள். ஐதராபாத் சென்றார்கள். என்.டி.ஆரோடு பேசினார்கள், வென்றார்கள், திரும்பினார்கள் என்ற நிலையை உருவாக்கி இன்றைக்கு வேலைகள் மள, மள மளவென்று நடந்து கொண்டிருக்கின்றன.

19-25 மணி

நானும், மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்களும்—அந்தத் தண்ணீரை ஸ்ரீசைலத்திலிருந்து தான் கொண்டு வருகிறோம். ஸ்ரீசைலத்திலிருந்து ஒன்றாகத் தண்ணீரைக் கொண்டு வந்து, சென்னமுகப்பள்ளியிலிருந்து தனியாகப் பிரித்து, இன்னொரு வழி, தொம்மெகாரி மடத்திற்குப் போகிறது. அந்த சென்னமுகப்பள்ளியிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து அந்தப் பெண்ணையாற்றிலே விடுகிறோம். பெண்ணையாற்றிலிருந்து தண்ணீரை மீண்டும் கண்டலேறு ரிசர்வாயருக்கொண்டு வந்து, கண்டலேறு ரிசர்வாயரிலிருந்து நம்முடைய தமிழ்நாட்டிற்கு கொண்டு வருகிற அந்தத் திட்டத்தினுடைய எல்லாப் பணிகளும் வேகமாக நடந்து கொண்டு இருக்கின்றன. அந்தப் பணியை என்னுடைய துறையிலே நான் பொறுப்பு ஏற்ற பிறகு வேகமாக செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் ஒவ்வொரு உறுப்பினரும் பல்வேறு கருத்துக்களை எடுத்து இங்கே வைத்து இருக்கிறீர்கள். பல்வேறு கட் மோஷன்கள் கொடுத்து இருக்கிறீர்கள். நான் ஒரு முடிவு செய்தேன். இந்த கட் மோஷன்கள் இன்றோடு போய்விடக்கூடாது என்று இப்படி ஒரு புத்தகமாக போட்டு விட்டேன். ஏன் என்றால் அடுத்த முறை உங்களுக்கு என்ன கட் மோஷன்கள் வந்தன. அவற்றை நிறைவேற்றினோமோ இல்லையா என்று தெரியும். ஆகவே, இவ்வளவு நிறைவேற்றினோம் என்றால் எங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்கும் என்று நினைக்கிறேன். அடுத்த ஆண்டு இதில் எதை



எதை நிறைவேற்றினோம் என்ற முடிவை எங்கள் கையில் விட்டு விடுங்கள். அடுத்து நம்முடைய மணவாளக்குறிச்சிப் பாலத்தைக் குறித்து இப்படி ஒரு பாலம் இவ்வளவு நாள் இருக்கிறதே இந்த மாதிரி தமிழ்நாட்டில் பாலங்கள் உண்டா என்று கேட்டார்கள்.

அடுத்து, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் 45 ஆயிரம் கிலோ மீட்டர் இந்த மாநிலத்திலே நெடுஞ்சாலைத் துறையின்கீழ் அதன் பராமரிப்பில் இருக்கிறது. எல்லோரும் சொன்னீர்கள், நிதி போதவில்லை என்று. இருக்கிற நிதியில் வஞ்சகம் இல்லாமல் மாண்புமிகு கலைஞர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். எப்படி கொடுத்து இருக்கிறார்கள். 1988—89-ல் கொடுக்கப்பட்டது 46 கோடி ரூபாய் தான். 1989—99-ல் சென்ற முறை நாங்கள் வந்த பிறகு 55 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது, இன்றைக்கு 72 கோடி ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள், இந்தத் துறையைப் பொறுத்தவரையில். இந்த ஆண்டு நெடுஞ்சாலைத் துறையிலே எடுத்துக்கொள்ளும் புதிய திட்டங்களை அறிவித்து விடுகிறேன். ஸ்டேட் ஹைவேஸ்-அரக்கோணம் ரயில்வே மேம்பாலம் ரயில்வே போர்டின் அங்கீகாரம் கிடைத்து விட்டது 9 கோடி ரூபாய். திண்டுக்கல் ரயில்வே ஜங்சனில் ஒரு மேம்பாலம் அதன் மதிப்பீடு 3 கோடி ரூபாய். பழவந்தாங்கல் சுரங்கப்பாதை 168 லட்சம் ரூபாய்; பரங்கிமலை சுரங்கப்பாதை 250 இலட்சம் ரூபாய்; சேலம்—ஓமலூர் சாலை 220 லட்சம் ரூபாய் அது முடிகிற நிலைமை. இந்த ஹைவேஸில் ஒரு பெரிய வேலையைச் செய்து இருக்கிறார் நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள். என்ன என்று கேட்டால் High Density Corridor Road அதற்கு என்று 10 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். High Density Corridor Road அப்படி என்றால் இது தான் முதல் முறையாக தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத் துறையில் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு ரோடில் நிறைய வண்டிகள் 1,500, 2,000 வண்டிகள் ஒரு நாளைக்கு போகிறது என்று கணக்கு எடுக்கிறார்கள்; அதிகமாக டிராபிக் உள்ள ஏரியாவை கண்டுபிடித்து நம்முடைய ஸ்டேட் ஹைவேஸ்களை அகலப்படுத்துவது; Widening and Strengthening அந்த மாதிரி தான் நேஷனல் ஹைவேஸில் செய்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் உள்ள ஹைவேஸ் இது பாவம் நோஞ்சான் ஹைவேஸ் இதில் மாவட்ட சாலை, கிராமச் சாலை, பஞ்சாயத்து சாலை என்று இருக்கிறது. அதாவது நேஷனல் ஹைவேஸ் அது பெரியது அது படா, நம்முடைய ஹைவேஸ் சோட்டா, சின்ன சின்னதாக இருக்கிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டவனை எப்படி தனியாக ஒரு சலுகை காட்டி மேல் நிலைக்கு கொண்டு வருவாரோ, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கைக் கொடுத்தாரோ அதே மாதிரி சாலைக்கு கைக் கொடுத்து இருக்கிறார். (கைத்தட்டல்) இந்தியாவில் வேறு எந்த முதலமைச்சர் செய்து இருக்கிறார்

என்று சொல்லுங்கள் நான் 5 தோப்புக்கரணம் போடுகிறேன், வேறு எந்த முதலமைச்சருக்கும் இந்த ஐடியா வரவில்லை. என்ன காரணம் ரோடை பேக்வர்டு, ஷெட்யூல்டு என்று மாற்றி மேலே கொண்டு வந்துவிட்டார் சார் (கைத்தட்டல்) ரோடை பேக்வர்டு மோஸ்ட்டு பேக்வர்டு என்று பிரித்த முதல் அமைச்சர் நம்முடைய முதலமைச்சர் தான், இதற்கு 10 கோடி ரூபாய் கொடுத்து இருக்கிறார். இதை வைத்துக்கொண்டு மிகவும் நெரிசலான ரோடு, சரியில்லாத அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் இந்தப்பணத்தை செலவு செய்ய வேண்டும், இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக செய்து கொண்டு போனால் இன்னும் 10 வருடத்தில் நேஷனல் ஹைவேஸ் மாதிரி நம்முடைய மாநிலச் சாலைகளும் இருக்கும். ஆகவே, நேஷனல் சாலைகள் அளவுக்கு நம்முடைய சாலைகளைக் கொண்டு செல்கிற புதிய திட்டம் இந்த ஆண்டு நெடுஞ்சாலைத் துறையிலே அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

அது மட்டும் அல்லாமல் இன்னொரு 5 கோடி ரூபாய் கொடுத்து இருக்கிறார். அது என்ன என்றால் பாலங்கள், 100 பாலங்கள்— கல்வெர்ட் இல்லை, கல்வெர்ட் இல்லை, பாலம் இல்லை, பாலம் இல்லை இதே தான் குரல். இவ்வளவும் சொல்கிறேனா இவ்வளவையும் நான் கலைஞர் அவர்களோடு நான் பேசவில்லை. துறை அமைச்சராக இருந்தும். காரணம் அவர் தான் இதை எல்லாம் பார்த்தவர், ஏற்கெனவே அவர் விட்ட இடம் இந்த பொதுப் பணித்துறை. இந்த High Density Corridor Road என்ன என்று நேற்று தான் நான் டிஸ்கஷனில் தெரிந்து கொண்டேன். அதை மாண்புமிகு கலைஞர் அவர்கள் எவ்வாறு சேர்த்து இருக்கிறார் என்று பார்க்கவேண்டும். ஏன் என்றால் அவரே இதை எல்லாம் சேர்த்து இருக்கிறார். அதே மாதிரி Pavement Management System என்று இப்போது ஒன்று வந்து இருக்கிறது. ஏ.டி.பி. யிலேயிருந்து 80 இலட்சம் ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். ஹைவேஸ் ரிசர்ச் ஸ்டேஷனிலே உட்கார்ந்துகொண்டு, எந்த ரோடு மோசம், எந்த ரோட்டை சீரமைக்கவேண்டுமென்று கம்ப்யூட்டரிலேயே சொல்லிவிடுகிறார்கள். இராமேஸ்வரம் ரோடு எப்படி இருக்கும்; ஓமலூர் எப்படி இருக்கும் எந்த ரோட்டை நாம் முதலிலே செப்பனிட வேண்டுமென்று கம்ப்யூட்டரிலே அங்கேயே பார்த்து கரெக்டாகச் சொல்லிவிடுகிறார்கள். அதற்கான எல்லாக் கருவிகளையும் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு நமக்கு கொஞ்சம் செலவாகும். அதற்காக 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள்.

19-30 மணி

அடுத்தது, ரூரல் ரோட்ஸ். இதுவும் அவர் கொண்டு வந்தது தான் 78-லே, இந்த ரூரல் ரோடுகளைப் பொறுத்த வரையிலே 1987—88-லே 634 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1988—89-லே



642 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1989—90-ல் நாம் ஆட்சிக்கு வந்த பிறகு 652 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இன்றைக்கு கலைஞர் என்ன ஒதுக்கியிருக்கிறார் என்றால் 1080 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 10 கோடியே 80 இலட்சம். ஆனால், நீங்கள் என்னிடம் கொடுத்திருக்கிற மனுக்களை மட்டும் பார்த்தால் 100 கோடி ரூபாய்க்கான திட்டங்களுக்கு மனுக்கள் வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று ''ஸ்பெஷல் காம்பொனன்ட் பிளான்'', அதாவது. இது எஸ். சி., எஸ்.டி., மக்கள் வாழ்ந்து வருகிற ஆம்லெட் வில்லேஜுகளை இணைக்கின்ற சாலை. இது ஸ்பெஷல் காம்பொனன்ட பிளான். இதற்கு எவ்வளவு தொகை என்றால், 1987—88-ல் 66 இலட்சம்; 1988-89-ல் 66 இலட்சம், போன வருடம் ஒரு ஒதுக்கல்; இந்த வருடம் ஒரு ஒதுக்கல் என்று ஒதுக்கக்கூடாது; ஒரே ஒதுக்கல். 1987—88-லும் 66 இலட்சம்; 1988—89-லேயும் 66 இலட்சம். 1989—90-ல் கலைஞர் வந்து விட்டார். 72 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இப்போது 1990—91-க்கு 250 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் என்னிடம் கொடுத்திருப்பது 450 இலட்சம் ரூபாய்க்கான திட்டங்களைக் கொடுத்து இருக்கிறீர்கள்.

பேருந்து சாலைகளைச் செப்பனிடுதல். 1987—88-ல் ஆயிரம் இலட்சம் ஒதுக்கியிருந்தார்கள். 1988—89-ல் 960 இலட்சம் 1989—90-ல் 1,001 இலட்சம் மொய் எழுதுகிற மாதிரி போட்டிருக்கிறார் கலைஞர். 1990—91-ல் 1250 இலட்சம், அதாவது 12½ கோடி ஒதுக்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் நீங்கள் என்னிடம் கொடுத்திருப்பது 250 கோடிக்கு கொடுத்திருக்கிறீர்கள்.

ஈஸ்ட் கோஸ்ட் ரோடுக்காக இப்போது நமக்கு 53 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலேயிருந்து கடலூர் வரையில் இருக்கிற அந்தச் சாலைக்கு 53 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாலை போடுவதற்கு டெண்டர் விட்டிருக்கிறோம். அதற்கு கடைசி நாள் 2—5—1990. இன்றைக்குத்தான். திறந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். டெண்டர் திறக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இதே போன்று பல திட்டங்கள் இருக்கின்றன.

டி.என்.இ.பி. ல் இருக்கிற பலசெய்திகள். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு நடைபெற்ற வேலைகளைத் தவிர இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படுகிற வேலைகளை மட்டும் நான் உங்களுக்குப் படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அதற்கு ஒரு சீஃப் என்ஜினியர் என்னிடத்திலே உண்டு. 1990—91-ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிற பணிகள் சென்னை, கல்கத்தா சாலையையும் திருவொற்றியூர், பொன்

னேரி பஞ்சட்டி சாலையையும் இணைக்கின்ற அந்த வழித்தடத் திற்கு 640 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருவொற்றி யூர், பொன்னேரி பஞ்சட்டி சாலையிலிருந்து எக்ஸ்பிரஸ் சாலையை இணைக்கின்ற சாலைக்கு 250 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டி ருக்கிறது. கோவை கிராஸ்கட்ஸ் சாலையில் குறுக்கிடும் ரெயில்வே லைனில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கு 700 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் உலகவங்கி நிதியுதவி செய்கிறது. அதேபோன்று, காட்பாடி ரயில்வே நிலையத்தின் அருகேயுள்ள சாலையிலுள்ள மேம்பாலத்தைப் புதுப்பிப்பதற்காக 200 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மதுரை எல்லிஸ் நகரத்தில் —தினத்தந்தி ஆபீஸ் பக்கத்திலே போகிறதே அந்தச் சாலை—ரயில்வே லைன் மேலுள்ள மேம்பாலத்திற்கு புதிய சாலை மேம்பாலம் கட்டுவதற்காக 525 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சேலம் நான்கு வழி சந்திப்பிலேயிருந்து 5 சாலை சந்திப்பு வரை உள்ள சாலையை மேம்பாடு செய்வதற்காக 160 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னை—திருவள்ளூர் சந்திப்பிலிருந்து கல்கத்தா சாலை சந்திப்பு வரையிலுள்ள 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு 899 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேர்ல்ட் பாங்கிலிருந்து இந்த மாதத்தில் அதற்கு ஒப்புதல் கிடைக்கும் (குறுக்கீடு) திரு. கோவிந்தசாமி அவசரப்படாதீர் கள். கடலூர், சித்தூர் சாலை, வேலூர் நகராட்சி சாலை உட்பட அந்தச் சாலையை மேம்பாடு செய்வதற்காக 800 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருச்சி சாலைக்கும் கரூர் சாலைக்கும் இணைப்புச் சாலை அமைப்பதற்காக 350 இலட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). திருச்சி—மேலூர் மதுரை சாலையும் தேசிய சாலையும் இணைக்க உள்ள வட்ட சாலை அமைப்பதற்காக 400 இலட்சம்; ஈரோடு—காங்கேயம் சாலையில் ஒரு நடைபாதை—சுரங்க நடைபாதை அமைப்பதற் காக ரூ. 180 இலட்சம். திருப்பூர்—கோயம்பத்தூர் சாலையில், ரயில்வே லைனின் மேலுள்ள சாலை, மேம்பாலம் கட்டுவதற்காக ரூ. 480 இலட்சம். சென்னை, வடக்கு கடற்கரை சாலை இருப்புப் பாதை, கடலின் மேல் ஒரு சாலை மேம்பாலம் அமைக்க ரூ. 1,320 இலட்சங்கள். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத் தின் கீழ் இந்த சாலைகளெல்லாம் எடுத்துக் கொள்ளப்படுமென்ப தையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

19-35 மணி

அதே போல், இன்னும் சில திட்டங்கள்—ரூ. 3 கோடியே 10 லட்சத்திற்கு. திருவலத்திலே ஒரு பிரிட்ஜ் இருக்கிறது; அதை அடுத்து ஒரு பிரிட்ஜ் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக் கிறது. ஆக, இவ்வளவு திட்டங்களையும் அறிவித்திருக்கிறோம், இவ்வளவு திட்டங்களும் எவ்வளவு வேகமாக நடக்கும் என்றால், நிச்சயமாக வேகமாக நடக்கும்.



நம்முடைய திரு. பாலையா கூட கேட்டார். மணவாளக் குறிச்சி பாலம் மாதிரி ஒரு பாலம் உண்டா என்று. ஒரு பாலத்தை பற்றிச் சொல்கிறேன் கேளுங்கள். 2—11—1979-ல் 'போர்ட்ட னோவா' பாலம்—நம்முடைய திரு. சிவலோகம் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார். ரூ. 12.50 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ''டெக்னிகல் சேங்ஷன்'' ரூ. 13-¼ லட்சத் திற்குக் கேட்டார்கள், அதாவது 2—11—1979-இல். 6—5—1981-இல் அதாவது 1979—80 வாக்கில் ஒரே ஒரு ஒப்பந்தப் புள்ளி வந்ததாம். ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி. அவன் எவ்வளவு போட்டிருக்கிறான் என்றால், மிகையாக 74.21 சத வீதம்; அதாவது அபோவ் எஸ்டிமேட் 74 சதவீதம். எஸ்டிமேட்டே ரூ. 12 லட்சம். கிட்டத்தட்ட ரூ. 10 லட்சம் 'அபோவ் எஸ்டி மேட்டே வந்து சேர்ந்துவிட்டது. ஒரே 'சிங்கிள் டெண்டரில்', 1981-இல் அரசு ஒப்புதல் அளிக்கிறது; 1982-இல் வேலை ஒப்படைக்கப்பட்டது; இன்னும் வேலை நடந்து கொண்டிருக் கிறது. 1979-லிருந்து, 1989 முடிந்து, 1990 ஆம் ஆண்டின் போது, திரு. பாலையா கேட்டாரே அதுபோல் ஒரு பாலம் இருக்குமா என்று. அவ்வாறு அவர் கேட்டார். ஆனால், அதே நேரத்தில் நம்முடைய அருமை நண்பர் திரு. பொன்னுசாமி அவர் கள் இங்கே பேசினார். ஏதோ சில டெண்டர்கள் எல்லாம், அது என்ன ஆயிற்று; இது என்ன ஆயிற்று என்று, எப்படி கொடுக்கப்பட்டது என்று. 74 சதவீதம் 'சிங்கிள் டெண்டருக்கு அப்ரூவ் பண்ண ஆட்சி, உங்களுடைய ஆட்சி என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன், அடுத்து, அவர் சொன்னார். ஒரு தேசிய நெடுஞ்சாலை— மதுரைக்குப் பக்கத்தில் ஒரு புறவழிச் சாலை அமைக்கப்படுகிறது; அதிலே ஏதோ ஒரு ஊழல் நடந்திருக்கிறது என்று பேராசிரியர் பொன்னுசாமி சொன்னார்; அவருக்கு நான் சொல்கிறேன். மதிப்பீட்டுத் தொகை ரூ. 125 லடசம். ஒப்பந்தம் கோரப் பட்ட நாள் 11—1—1989. மொத்தம் கோரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 3. அவர்கள் யார், யார்? நம்பர் 1, திரு. சவரி முத்து, ஒப்பந்தக்காரர், மதுரை. 16.98 சதவீதம் மதிப்பீட்டுக் குக் கூடுதலாக—'அபோவ் எஸ்டிமேட்'. தமிழ்நாடு மாநில கட்டு மானக் கழகம்—''கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன்'', 16.51 சத வீதம் மதிப்பீட்டுக்குக் கூடுதலாக. திரு. ரங்கசாமி, ஒப்பந்தக் காரர் 4.455 சதவீதம் மதிப்பீட்டுக்குக் கூடுதலாக. ஆக, சவரி முத்து 16 சதவீதம் அதிகம்; 'கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன்; 16சொச்சம் சதவீதம்; ஆனால் ரங்கசாமி, 4.455 சதவீதம் தான் அபோவ். இந்த மன்றத்திலே இருக்கிறவர்களைக் கேட்கிறேன். யாருக்கு இந்த ஒப்பந்தப் புள்ளியை கொடுக்க வேண்டும்? 'திங்க் வொய்ஸ்'; அதைத்தான் கொடுத்திருக்கிறோம். அவர் சொல்கிறார்; அதிலே ஊழல் என்று. ஆகவே, அவர் கொடுத் தது தவறான தகவல்.

**பேராசிரியர் க. பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே ஊழல் நடந்தது என்று சொல்ல

வில்லை. அது சரியானபடி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல் மற்றவைகள கொடுக்கப்படவில்லை என்பதை ஒப்பு நோக்குவற்காக அவ்வாறு சொன்னேன்.

**மாண்புமிகு** திரு. துரைமுருகன் : அதனால்தான் நான் அதை முதலில் சொன்னேன்; நீங்கள் இப்படி வருவீர்கள் என்பதற் காக. அடுத்து சொல்கிறேன்.

அடுத்து, தேசிய நெடுஞ்சாலை— திருச்சி— திண்டுக்கல் சாலை 45-இல், சமயபுரத்தில் ஒரு வேலை, அது எவ்வளவு? ரூ. 130.72 லட்சம் மதிப்பீடு. அதற்கு ஃபிரீ-குவாலிபிகேஷன்—முதலில் சில பேருக்கு அந்த 'ஃபிரீ-குவாலிபிகேஷன்' பண்ணி எல்லா தகுதியும் இருக்கிறதா என்று பார்ப்பார்கள். அவ்வாறு இரண்டு ஒப்பந்தக்காரர்கள் ''ஃபிரி-குவாலிபிகேஷன்'' செய்யப்பட்டார் கள். ஒன்று திரு. ரங்கசாமி; இரண்டு திரு. பி. பாலையா என்பவர்கள் டெண்டர் கோரினார்கள். 'ஃபிரி-குவாலிபிகேஷன்' செய்யப்பட்டு, அதற்குப் பிறகு டெண்டர் ஷெடியூல் கொடுக்கி றார்கள். திரு. ரங்கசாமி 19.70 சதவீதம் கூடுதலாக 'அபொவ்'. திரு. பி. பாலையா 33.81 பெர்சண்ட் அபவ். ஆக ரெங்கசாமி 19 பெர்சன்ட, பி. பாலையா 33 பெர்சண்ட், யாருக்குக் கொடுப் போம்? ரங்கசாமிக்குக் கொடுப்போம். அப்படித்தான் கொடுத்து இருக்கிறோம்.

19-40 மணி

அடுத்து அதே சாலையைப் பற்றி அவர் சொன்னார், அடுத்து இன்னொரு ரீச். அந்த ரீச்சிலே அடுத்து ஒரு டெண்டர் வரு கிறது. அது எப்போது? 22— 3— 1989 அன்று முதல்டெண்டர் நடந்தது எப்போது? 27— 10— 1988 அன்று. அடுத்து ஒரு ரீச்-க்கு டெண்டர் கூப்பிடுகிறார்கள். ஒரு வருஷம் கழித்து 22— 3— 1989-லே அதாவது நெக்ஸ்ட் இயரிலே. அந்த டெண்டரிலே 24 நபர்கள் டெண்டர் படிவம் வாங்கி இருந்தார் கள். அதிலே கீழ்க்கண்ட 6 நபர்கள் மட்டும்தான் டெண்டர் கோரி இருந்தார்கள். சி. கே. ராஜன் 16.52 பெர்சண்ட் குறைவு. எல். சோமையா 3.66 பெர்சன்ட் குறைவு, தேவ ராஜன் 1.99 பெர்சன்ட் குறைவு. செல்வகுமார் அண்ட் கம்பெனி 0.52 பெர்சன்ட குறைவு. ஏ. காளிமுத்து 2.57 பெர் சன்ட குறைவு. திருவாளர் ராமநாதன் அண்ட் கம்பெனி 9.18 பெர்சன்ட் கூடுதல். ஆக இந்த 6 பேரிலே 5 பேர் குறைவு ஒரே ஒருத்தர்தன் அபொவ். குறைவான விலை வீதம் கோரியவர் திரு. சி. கே. ராஜன் அவர்தான் 16.52பெர்சன்ட் குறைவாகக் கேட்டிருக்கிறார். மற்றவர்கள் எல்லாம் 3, 2, 1, என்றுதான் குறைவாகக் கேட்டிருக்கிறார்கள். எனவே குறை வான விலை வீதம் கோரிய திரு. சி. கே. ராஜனுக்கு வேலை அளிக்கப்பட்டு இருக்கிறது. உறுப்பினர் குறிப்பிட்டார், அந்த ரீச் பற்றி. இது ஒரு இடம், அது ஒரு இடம் என்று குறிப்பிட்டார். 1988-ல் நடந்தது அது வேறு ஷெட்யூல். தனி ரீச், தனி ஷெட்யூல்,



**பேராசிரியர்** க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சில தகவல்களைச் சொல்கிறார்கள். 27— 10— 1988-லே முதலிலே சொன்ன வேலைக்கு டெண்டர் போடப்பட்டது, உண்மை, ஆனால் அது அப்ரூவல் ஆவதற்கு முன்பே 22-3-1989-ல் இப்போது அடுத்துச் சொன்ன அந்த வேலைக்கு டெண்டர் போடப்பட்டு அது முடிவு செய்யப்பட்டது. அது லெஸ் ரேட்டுக்குக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னால் 22— 6— 1989-ல் ஏறத்தாழ 3 மாதங்களுக்குப் பின்னால் 20 பெர்சன்ட் அபவ் ரேட் அதே ரீச்சில் கொடுத்திருக்கிறார்கள். அரசுக்கு பணத்தைச் சேமிக்கவேண்டும் என்ற எண்ணம் அதிகாரி களிடத்தில் இல்லை. அவைகளை ரீகால் செய்திருக்கலாம் என்று தான் நான் சொன்னேன். அதிலே தவறு இருந்தால் அமைச்சர் அவர்கள் சொல்லலாம்.

**மாண்புமிகு** திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தவறல்ல. ஒரு ரீச்-க்கு முதலிலே டெண்டர் போடுகிறார்கள். அதாவது விமான நிலையத்திலே இருந்து பல்லாவரம் வரையிலே டெண்டர் போடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளலாம். விமான நிலையத்திலிருந்து பல்லாவரம் வரையில் ரோடு போடுகிறார்கள. அதற்கு டெண்டர் விடுகிறார் கள். அந்த டெண்டரிலே யார் குறைவு என்று பார்த்து அவர்களுக்குக் கொடுத்து விடுவார்கள். அடுத்த வருஷம் பல்லாவரத்திலே இருந்து குரோம்பேட்டை வரையில் விட்டால் அது அடுத்த வருஷம் வருகிறது. அதிலே டெண்டர் கொடுத்த வர்களில் யார் குறைவு என்று பார்க்க வேண்டும். நீங்கள் இதிலே போட்ட குறைவை அதிலே பார்க்கக்கூடாது. அது தாம்பரத்தில் இருந்து அடுத்த ரீச்-க்கு. அது அடுத்த வருஷம் வந்தால் போட்டிருக்கிற டெண்டருக்குள் யார் குறைவு என்று பார்த்து அவர்களுக்குத்தான் அது கொடுக்கப்பட்டு இருக்கிறதே தவிர வரம்பு மீறி இருந்தால் நான் அதற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். டெண்டர் விளம்பரங்கள் பத்திரி கையில் விளம்பரம் செய்யப்படுகிறது.

இவ்விரு வேலைகளுக்கும் வெவ்வேறு தினங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் எந்த முறைகேடும் இல்லை. அடுத்து ஒன்று சொன்னார் அவர். என்ன? இரயில்வே மேம்பாலம் அணுகு சாலை அமைக்க 139.2 இலட்சத்திற்கு மதிப்பீடு. எங்கே? சமயநல்லூர் அருகே. 5 ஒப்பந்தக்காரர்கள் மத்திய அரசால் ப்ரீ-க்வாலிஃபிகேஷன் செய்யப்பட்டார்கள். இவர்கள் எல்லாம் நேஷனல் லெவலிலே உள்ளவர்கள். இவர்களில் திரு. ஜேஸ் என்பவர் மட்டும் 27.03 பெர்சன்ட் வரை கூடுதலாக கோரி இருந்தார். மற்ற ஒப்பந்தக்காரர்கள் டெண்டர் போடவில்லை சிங்கிள் டெண்டர் 27 பெர்சன்ட். அதற்கிடையில் அவ்வாறு டெண்டர் கோரிய அவருக்குக் கொடுக்க வேண்டும் என்றால் அவருக்கு நிலம் கொடுக்கவேண்டும். அவ்வாறு நிலம் கொடுப்பதைப் பொறுத்து

வரையில் கட்டடங்களையும், நிலங்களையும் ஆர்ஜிதம் செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சில பட்டாதாரர்கள் நிலஆர்ஜிதத்திற்கு ஒப்புதல் கடிதம் அதாவது கன்சன்ட் லெட்டர் அளிக்க மறுத்துவிட்டார்கள். இந்த ஒப்புதலை எதிர்நோக்கி டெண்டர் கோரப்பட்டது. பட்டாதாரர்கள் அவர்களுக்கு நிலத்தை எடுத்துக்கொள்ள ஒப்புதல் தர மறுத்துவிட்டமையால் நிலங்களையும், கட்டடங்களையும் ஆர்ஜிதம் செய்தபிறகு மீண்டும் டெண்டர் கோரலாம் என்று முடிவு செய்து இந்த டெண்டர் கேன்சல் செய்யப்பட்டது. அப்படி செய்ய முடியுமா என்றால் செய்யலாம். இல்லை என்றல் என்ன ஆகும் என்று கேட்டால், அதாவது கான்ட்ராக்ட் விட்டு அவர்களுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டோம் என்றால் உடனே அவர்களுக்கு ஓர்க் ஆர்டர் போட்டாக வேண்டும். எனக்கு லேன்ட் வேண்டும் என்று உடனே அவர்கள் கேட்கலாம். நிலத்தை கொடுக்க முடியாது இவ்வளவு நஷ்டம் ஆகிவிட்டது என்று நஷ்ட ஈடு கேட்டு கேஸ் போட முடியும். அதுதான் பழவந்தாங்கலில் மற்றும் ஆலந்தூரில் நடந்தது. அதைக் கட்டுவதற்கு கவர்னர் காலத்தில் டெண்டர் விட்டார்கள். ஆனாலும் நிலத்தை எடுக்கப் போகும்போது கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கிவிட்டார்கள். கான்ட்ராக்டரை அங்கே விடவில்லை. டெண்டர் கான்சல் ஆனது. ஆகவே அந்த வகையில் இது கான்சலானது. இரண்டாவது சிங்கிள் டெண்டர். அதில் பிரச்சினை என்னவென்றால், நிலமே இல்லை, கொடுக்க முடியாது என்றார்கள். ஆகவே அடுத்த முறை நிலத்தை எடுத்துக் கொண்டபிறகு நீங்கள் ஆணை போட்டுவிட்டுச் சொல்லுங்கள், அப்போது டெண்டர் கொடுக்கலாம் என்று சொன்னார்கள்.

அடுத்து மூன்றாவது மதுரை—ராமேஸ்வரம் நெடுஞ்சாலையில் ரூ. 147.21 லட்சத்திற்கான வேலை. இது ஒரு சாலை மேம்பாட்டுப் பணி. 23—3—1989-ல் டெண்டர் கோரப்பட்டது. திரு. ஏ. ரங்கசாமி மற்றும் திருவாளர்கள் மகாராஜா இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் ஆகிய இருவரும் டெண்டர் கோரினார்கள். ரங்கசாமி என்பவர் 14.36 சதவீதம் கூடுதலாகக் கேட்டிருக்கிறார், மகாராஜா கம்பெனி 22.38 சதவீதம் கூடுதலாகக் கேட்டிருந்தார்கள். குறைவான லாப விகிதம் கோரிய ரங்கசாமிக்கு அது அளிக்கப்பட்டது. இங்கே உறுப்பினர் அவர்கள் சொல்வது என்னவென்றால், அவர் டெண்டர் போடவில்லை. அவர் ஒரு ஆளிடம் சொல்லி அனுப்பினார், என்று. நான் ஒன்றைச் சொல்கிறேன். 20-ம் தேதி டெண்டருக்கு கடைசி தேதி என்று சொன்னால், 18-ம் தேதி செட்யூல் கொடுப்பார்கள். இவ்வளவு பெரிய டெண்டரில் கான்ட்ராக்டரே நேரடியாக வந்து டெண்டர் பாரம் வாங்கவேண்டும். இவர் ஒரு ஆளிடம் சொல்லியனுப்பினார். போய் டெண்டர் பாரம் வாங்குங்கள் என்று. ஆனால் அது தவறு, முறையல்ல, ஆகவே கொடுக்க



முடியாது என்று அங்கே இருந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். டெண்டரை ரங்கசாமிக்கு அவர்கள் கொடுத்துவிட்டார்கள். அந்த டெண்டர் போட்டுக் கொடுக்காமல் இருப்பதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்கள், எங்களுக்கு டெண்டர் செட்யூல் கொடுக்கவில்லை என்று. உடனே உயர்நீதி மன்றத்தில் கேஸ் வந்தது. வேலையை யாருக்கும் ஒப்படைக்காதீர்கள், டெண்டர் பாரம் கொடுக்கவில்லை, விசாரித்து தீர்ப்பு வழங்கியதும் கொடுக்கலாம் என்று சொல்லிவிட்டார்கள். பின்னர் விசாரித்து, ஸ்டே ஆர்டரும் கொடுத்திருந்தார்கள். கடைசியில் 10—8—1989-ல் வழக்கு விசாரணைக்குப்பின் அவர்கள் குறிப்பிட்ட அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த குறிப்பிட்ட நபரின் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. டெண்டர் முறையாக நடந்தது என்று நீதிபதி அவர்கள் தீர்ப்பு அளித்த பிறகு, குறைவான டெண்டர் கோரிய ரங்கசாமி அவர்களுக்கு அந்த வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே. . . . . . . .

**பேராசிரியர் க. பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் டெண்டர் ஷெட்யூல் கேட்டதாகவும், தரப்படவில்லை என்ற காரணத்தால் 28-3-1989-ல் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தந்தி கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் அது ஏற்றுக்கொள்ளப் படவில்லை. அதற்குப் பின்னாலேதான் அவர் நீதிமன்றத் திற்குச் சென்றிருக்கிறார். நீதிமன்றத்தில்கூட, dispute of facts cannot be settled என்று கூறப்பட்டுள்ளது. அதற்குப் பின்னாலே விசாரணை நடந்ததா இல்லையா என்று தெரியவில்லை. இதைத்தான் நாங்கள் சொன்னோம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** நீதிமன்றம் தீர்ப்புத் தந்ததற்குப் பிறகு இன்னொரு தீர்ப்பு வழங்குவதற்கு துரைமுருகன் தயாராக இல்லை. அவ்வளவுதான்.

அடுத்து, இவ்வளவு பணிகளை இந்த ஓராண்டுக்காலத்தில் ஓய்வு ஒழிச்சல் இன்றி, நெருப்பு போல் இருந்து பணியாற்றுகிறோம். அம்மையார் கூட சொன்னார்கள். திரு. வீரையன் கூட சொன்னார்கள். ஹைவேசில் எப்படி இருக்கிறது என்று சொன்னார்கள். ஊழல் ஊழல் என்று சொல்லிவிடலாம். அது ரொம்ப சுலபம், ஆனால் கன்ஸ்ட்ரக்டிவ் ஆக இது நடந்தது இன்ன இடத்தில் நடந்தது என்று சொல்ல முடியுமா? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட ஒரு லெட்டர் கொடுத்திருக்கிறார். அதைப் பார்த்து 2 நாளில் பதில் சொல்கிறேன். பொதுவாக, இந்த இலாக்காவில் தவறே இல்லையென்று கூட நான் வாதாடத் தயாராக இல்லை. ஒரு வருஷம்தானே ஆச்சு. இருந்தாலும் லகான் சரியாகப் பிடிக்கப்பட்டிருக்கிறது. இது கலைஞருடைய ஆட்சி என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு

பணி ஆற்றுகிறோம். திரு. சின்னசாமி கூட சொன்னார், எனக்கு ஒரு பாலம் கொடுத்தார்கள், நன்றி என்றார் கட்சி வித்தியாசம் பார்க்கிறோமா? அ.தி.மு.க. உறுப்பினர்கள், இவர்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் என்று சொல்லியிருக்கிறோமா? எல்லோருக்கும் நாம் கொடுக்கிறோம். மதிப்பிற்குரிய திரு. ரமணி அவர்கள் நம்முடைய சமாச்சாரம் என்ன என்று பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதையும் நான் சொல்லிவிட நினைக்கிறேன். அவர்களுக்கு முதலில் சொல்லவேண்டும். மின்னல் வேகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்,

19-50 மணி

மணிமுத்தாறில் பிரதான கால்வாயில் தண்ணீர் போகிறது. அந்தத் தண்ணீர் 308 குளங்களுக்குப் போய் பாயவேண்டும். அதுவும் ஓரேயடியாகப் போக முடியாது. 4 ரீச்-ஆகப் பிரித்திருக்கிறார்கள். ஏ, பி. சி. டி. என்று இந்த முதல் மூன்றில் போய் விட்ட பிறகு, நான்காவது ரீச்-சுக்குப் போய், கருமினி முத்தாறில் விட்டு விடுவார்கள். அதற்குப் பிறகு அந்த ஏரியில் போய் விழும். நான்கு ரீச்-களும் ஒன்றாக இல்லை என்றால் முறை வைத்துத் தான் பாயவிடவேண்டும். இல்லையென்றால் என்ன பண்ண முடியும்? முறை வைத்துத்தான் கொடுக்க முடியும். இந்த வருஷம் பர்ஸ்ட் அண்ட் செகண்ட் ரீச்சுக்குத் தண்ணீர் கொடுத்தால், அடுத்த வருஷம் தேர்ட் அண்ட் போர்த் ரீச்சுக்குத்தான் தண்ணீர் கொடுக்க முடியும். அதுபோல போன வருஷம் மூன்றாவது மற்றும் நான்காவது ரீச்சுக்கு தண்ணீர் கொடுத்தோம். இந்த வருஷம் பர்ஸ்ட் அண்ட் செகண்ட் ரீச்சுக்கு தண்ணீர் கொடுக்கப் போகிறோம். மிச்சம் இருந்தால் மூன்றாவது மற்றும் நான்காவது ரீச்சுக்குத் தண்ணீர் கொடுப்போம். இந்த முறையில்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது அல்ல, இதை நெடுங்காலமாக செய்துகொண்டிருக்கிறோம். 1979-80-ல் எடுத்துக்கொண்டால் நான்காவது ரீச்சில்தான்,—அதாவது அம்மையார் அவர்களுடைய தொகுதியில் இருக்கிறது. (குறுக்கீடு) நான் அதற்குப் பின்னால் வருகிறேன். 1979-லே 4 வது ரீச்சுக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1980-81-ல் கொடுக்கவில்லை. 1981-82-லும் கொடுக்கவில்லை 1982-83-ல் தண்ணீர் உங்களுக்கு வரவில்லை. 1983-84-ல் மட்டும் நான்காவது ரீச்சுக்கு மொத்தம் 79 குளங்கள் இருக்கின்ற நிலைமையில் 18 குளங்களுக்கு மட்டும் கொடுத்திருக்கிறார்கள். 1984-85-ல் மொத்தமுள்ள 79 குளங்களில் 15 குளங்களுக்கு மட்டும் கொடுத்திருக்கிறார்கள். 1985-86-ல் நல்ல படியாக தண்ணீர் இருந்தபடியால் அவுட் ஆப் 79 குளங்களில் 74 குளங்களுக்கு தண்ணீர் கொடுத்திருக்கிறார்கள், 1986-87-ல் ஒரு



குளத்துக்கும் கொடுக்கவில்லை. 1987-88-ல் நாட் ஓப்பன்ட் மணிமுத்தாறு திறக்கப்படவே இல்லை. 1988-89-ல் .5 குளங்களுக்கு மட்டும் கொடுத்திருக்கிறார்கள். 1989-90-ல் நீங்கள் பார்த்தால் 79 குளங்களில் 52 குளங்களுக்கு நாங்கள் தண்ணீர் கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இது பர்ஸ்ட் பாயின்ட்.

இரண்டாவது, அம்மையார் அவர்கள் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் நான்காவது ரீச்சில் 9, 10 மற்றும் 11-வது குரூப் குழாய்களுக்கு நீர் வழங்க தாங்கள் உத்தரவிட்டும்கூட நீர் வழங்கவில்லையே நீதி வழங்காதது முறைதானா என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். (சிரிப்பு) நான் அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், 9, 10 மற்றும் 11-வது குரூப்பில் உங்களுக்கு ஒரு குளத்திற்குக்கூட விடவில்லை என்று சொல்கிற அம்மையார் அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். வீரநாச்சேரி என்று ஒரு குளம் இருக்கிறது, அதற்குக் கொடுத்திருக்கிறோம். அது 9-வது குரூப்பில்இருக்கிறது.

**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்கிறார்கள். திருச்செந்தூரும், ஊர்தான், தஞ்சாவூரும் ஊர்தான், திருச்சியும் ஊர்தான். நான் திருச்செந்தூருக்கு வழி கேட்டால் அங்கு போச்சு, இங்கு போச்சு, தஞ்சாவூர் பஸ்சிலே ஏறு, திருச்சி பஸ்சிலே ஏறு என்று சொன்னால் சரியாக வருமா? நான் என் தொகுதியிலுள்ள குளங்களுக்கு கேட்கிறேன். நாங்குனேரி வரை வருகிறது, அப்புறம் நின்று விடுகிறது. அப்புறம், சாத்தான்குளத்திற்குக் கூட வந்து உடன் நின்றுவிடுகிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து நான் சொல்வதை முழுமையாகக் கேட்டுவிட்டு பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் சொல்கிற குளம், உங்கள் தொகுதியில் இருக்கிறதா? (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், என்னுடைய தொகுதியில் 9, 10 மற்றும் 11-வது குரூப்பிலே, மூன்று குரூப்பிலே குழாய்களுக்கு நீர் வழங்க தாங்கள் உத்தரவிட்டும் கூட ஒரு குளத்திற்கும் கூட நீர் வழங்கவில்லை என்று தான் நீங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், 9, 10 மற்றும் 11 ஆகிய மூன்று குரூப்புகள். இதிலே 9-வது குரூப்பில் இருக்கிற குளம்தான் வீரநாச்சேரி குளம். அதற்கு தண்ணீர் விட்டிருக்கிறோம்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு குரூப்புமே 3 தொகுதிகளையும் கடந்து தான் வருகிறது. முந்தின தொகுதியோடு நின்று விடுகிறது. என்னுடைய தொகுதிக்கு தலை வைக்கவில்லை. அதுதான் பிரச்சினை.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் முதலில்நான் சொல்வதைக் கேட்டுவிட்டு சொல்லுங்கள். 10-வது குரூப்பில் இருக்கிற நைனாமுடியன் குளம், தடகன்கான் குளம் ஆகிய இந்தக் குளங்கள்; விஜய ஆச்சாம்பாடி குளம் மற்றும் இலங்கையாடி குளம் பற்றியும் இதிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால் நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்றால், 12—1—1990 அன்று கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் தாங்கள் பேசியபோதும் விஜய ஆச்சாம்பாடி குளத்திற்கும் இலங்கையாடி குளத்திற்கும் தண்ணீர் வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். அதே இலங்கையாடி குளத்திற்கு தான் தண்ணீர் கொடுத்திருக்கிறோம்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எல்லாமே நாங்குநேரி தொகுதி. இலங்கையாடி குளத்தைப் பொறுத்த வரையில்....

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதைத்தான் சொல்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு அவை எல்லாம் கடந்துதான் வரணும். அதற்கு விடுங்கள். அந்த மடையிலோடி இங்கே வர வேண்டும் என்றுதான் கேட்டிருக்கிறேன். ஆனால் என் தொகுதிக்குத் தரவில்லை என்பது தான் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குளம் அதுதானா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்களே, கையெழுத்துப் போட்டு, எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், உறுப்பினர் சொல்வது எனக்குப் புரிகிறது. எங்களுக்கு எங்கே விடுகிறீர்கள் என்று கேட்டார்கள். விஜய ஆச்சாம்பாடி குளம், இலங்கையாடி குளம், இவற்றுக்கு எல்லாம் தண்ணீர் கொடுத்தால்தான் உங்களுடைய, கடைசியில் இருக்கிற சுவேதாபுரத்திற்கு. அதிலும் கடைசியில் இருக்கிற தருவை வரை கொண்டு வரலாம்



என்று பார்க்கிறீர்கள். ஆனால் நிலைமை என்ன என்று கேட்டால், இதுதான் மணிமுத்தாறு பாசனம். இது ஸ்பெஷல் குளம். இதெல்லாம் ரிசர்வ் குளம், ரெகுலர் குளம். இந்தக் குளத்திற்கெல்லாம், சுவேதாபுரம் குளத்திற்கெல்லாம், தண்ணீர் வராது.

19-55 மணி

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படியானால் ராதாபுரம் தொகுதியிலே ஒரு குளம்கூட உரிமை பெற்ற குளம் கிடையாதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் கொடுத்ததை நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குச் சொல்வது என்னவென்றால் நீங்கள் லெட்டர் எழுதியிருக்கிறீர்கள். 9, 10, 11, குரூப்பில் தண்ணீர் ஒரு குளத்திற்குக்கூடக் கொடுக்கவில்லை என்று எழுதி இருக்கிறீர்கள். you wrote like this. Shall I read it once again?

திருமதி ரமணி நல்லதம்பி : 3 குளம் நாங்குனேரி தொகுதியில் இருக்கும், 3 குளம் சாத்தான்குளம் தொகுதியில் இருக்கும், 3 குளம் என் தொகுதியில் இருக்கும். என் தொகுதியை விட்டுவிட்டு மற்றதுக்குக் கொடுத்து என்ன பிரயோசனம்? என் தொகுதியில்தான் கடல் தண்ணீர் வருகிறது. தருவைக்குளம் எல்லாம் சாத்தான்குளத்தைச் சேர்ந்தது. என் தொகுதிக்குத் தண்ணீர் போயிருந்தால், குடிநீர்ப் பிரச்சினையே தீர்ந்திருக்கும். என் தொகுதிக்கும் தண்ணிர் வரவில்லை. என் தொகுதியைக் கடந்தும் தண்ணீர் போகவில்லை. முன் தொகுதியோடு நின்றுவிட்டது. இதுதான் உண்மை. அதற்காகத்தான் முதல்வர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் என்கூட வாருங்கள். நான் குளத்தைக் காட்டுகிறேன். எல்லையைப் பாருங்கள். உங்களுக்குத் தவறான கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கூற்றை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஏனென்றால் ஒரு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், தன்னுடைய தொகுதிக்கு இருக்கிற உரிமையைப் பற்றி வாதாடுவதை வரவேற்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், என்னைவிட உங்களுக்கு அந்தப் பகுதிகள் அத்தனையும் அத்துப்படியாகி இருக்கும். நான் அதில் மாறுபடவில்லை. என்னிடம் இருக்கிற ரெக்கார்ட்ஸ்படி 9, 10, 11

குருப்பில் இருக்கையாடி குளம், பட்டாச்சாரி குளம்,
காவனாரி குளம், நன்னி குளம், பன்னாடியப்பர் குளம்
—இதற்கெல்லாம் கொடுத்திருக்கிறோம். 9, 10, 11
குருப்பில் கொடுத்திருக்கிறோம். இல்லை என்று சொன்னால்,
மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க நான் கடமைப்பட்டிருக்
கிறேன். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள்
இல்லை என்று சொல்லுகிறீர்கள். அதிகாரிகள், கொடுத்திருக்
கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை வெரிபை
பண்ணுவோம், நானே வருகிறேன். கொடுக்கவில்லை
என்றால் நான் ஆக்ஷன் எடுக்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி : பேரவைத் தலைவரவர்களே,
பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் அதை ஒரு சவாலாக
ஏற்றுக் கொண்டு—இல்லை என்று சொன்னால் நிச்சயமாக
அதற்கு நான் நீர் விடுவேன் என்று கூறுகிறார்கள், அந்த
வகையிலே—அவர்கள் என்னோடு வரட்டும். தவறான தகவல்
கொடுத்த அதிகாரிமீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
கொடுத்த குளத்திற்கே 4 நேரம், 5 நேரம் கொடுத்திருக்
கிறார்கள், ரூபாயை வாங்கிக்கொண்டு. I can prove it beyond
doubt.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அதை அதோடு விடு
வோம், அம்மையார் அவர்கள் கொடுத்ததற்குத் தனி பைல்
போட்டிருக்கிறேன். காரணம், ஆளுங் கட்சி, எதிர்க் கட்சி
என்று இந்த அரசு பார்ப்பதில்லை. எல்லோருக்கும் கூடுமான
வரையில் செய்கிறோம். இவ்வளவு செய்கின்றபோது கூட
சேற்றை வாரி இறைப்பதை சிலர் தொழிலாகக் கொண்டிருக்
கிறார்கள் என்பதை நினைக்கும்போது நெஞ்சம் பதறு
கிறது.

திரு. குமரி அனந்தன் ; மாண்புமிகு சபாநாயகர் அவர்
களே, இந்தத் தடவைதான் அந்தப் பகுதியிலே அதிகமான
மழை பெய்தது. மணிமுத்தாறு 90 அடிக்குமேலே இந்தத்
தடவை இருந்த காரணத்தாலே, 3-வது ரீச், நான்காவது
ரீச்சுக்கு இந்தத் தடவை முறை வைத்து விட வேண்டிய
தண்ணீர் வர வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் சாத்
தான்குளம், ராதாபுரம் பகுதிகளிலே எல்லாம் இந்த எண்ணம்
பலப்பட்டு, மக்கள் அந்தக் கிளர்ச்சியிலே ஈடுபடுகிற அள
வுக்குச் சென்றார்கள் என்பதை தங்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : இதிலே 2, 3, கார
ணங்கள் உண்டு. ஒரு குளத்திலிருந்து, இன்னொரு குளத்
திற்கு அடுத்த ஊர்க்காரர்கள் கால்வாய் வெட்டி தண்ணீரைக்
கொண்டு போவார்கள். ரொம்ப நாளாகத் தண்ணீர் வராத
தால் அவர்கள் கால்வாய் வெட்டாமல் விட்டுவிட்டார்கள்.
இப்போது தண்ணீர் போக முடியவில்லை. நான்கூடச் சொன்
னேன், அரசாங்கமே வெட்டிக் கொடுத்தாவது, தண்ணீர்





போக வழி பண்ணலாமென்று. எப்படியும் விவசாயிகளுக்கு
நன்மை செய்யத் தயாராக இருக்கிறோம். எதற்காகச்
சொல்கிறேன் என்று சொன்னால், இவ்வளவு செய்யும்போது
கூட போகிற போக்கிலே சேற்றை வாரி இறைக்கும்
செய்கைகளைச் செய்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் என்று
கருதுகிறேன். அவர் பேசும்போது என் இதயம் வெம்பிப்
போய்விட்டது. காரணம், மறைந்துவிட்ட முதல்வர்
எம். ஜி. ஆர். அவர்களுடைய சமாதியைப் பற்றிக் குறிப்பிடு
கிறபோது அவர் பேசிய பேச்சுக்கள் நெஞ்சு பொறுக்க முடி
யாத பேச்சுக்கள். நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
அரசியலிலே எம். ஜி. ஆர். க்கும் நமக்கும் ஆயிரம் கருத்து
வேறுபாடு இருக்க முடியும். கலைஞரை விடவா அவரோடு
நெருங்கிப் பழகியவர்கள் அவருடைய அரசியல் வாழ்விலே
உண்டு ? இன்னும் நான் சொல்கிறேன். என்னையே எடுத்துக்
கொள்ளுங்கள். நீங்கள் படத்திலே பார்த்திருப்பீர்கள்.
நான் அவர் மடியிலே உட்கார்ந்து வளர்ந்தவன். ஆக, எங்
களுக்கு மனிதத் தன்மை அற்றுப் போய்விடுமென்றா கருது
கிறீர்கள் ? எம். ஜி. ஆர். அவர்களுடைய சமாதியைக் கட்டியது
பற்றி இவ்வளவு பேச்சுப் பேசுகிறீர்களே, நாங்கள்
கட்டாமல் இருந்தால் என்ன செய்திருப்பீர்கள் ? அத்தகைய
இழி மனப்பான்மை கலைஞர் அவர்களுடைய தம்பிக்கோ,
கலைஞருக்கோ வராது. நாங்கள் அண்ணா அவர்களால்
வளர்க்கப்பட்டவர்கள். யாராவது அடிப்பார்களா ?

20-00 மணி

ஏன் கட்டுவது தானே ? அவர் மறைந்துவிட்ட பிறகு உங்
களுடைய ஆட்சி இருந்தது ; கொண்டு வந்து கட்டுவது
தானே ? யார் வேண்டாம் என்றார்கள் ? நாங்கள் அப்படிக்
கட்டலாம் என்று இருந்தோம் : இப்படிக் கட்டலாம் என்று
இருந்தோம் ; இப்படி எல்லாம் போய்விட்டது ; அப்படி
ஆகிவிட்டது என்கிறீர்கள் நான் பணிவன்போடு சொல்
கிறேன். அதற்குப் பிறகு கவர்னர் ஆட்சி ஓராண்டுக் காலம்
இருந்ததே, முடிக்கப்பட்டதா ? அதற்குப் பிறகு நாங்கள்,
கலைஞர் ஆட்சி வந்த பிறகு - நான் பெருமையாகச்
சொல்லவில்லை. கிட்டத்தட்ட 7 அல்லது 8 தடவை இருக்கும்.
கலைஞர் அந்த இடத்துக்கு வந்து நின்றது ; காலை
5 மணிக்கு அவர் வாக்கிங் வரும்போது வந்து நிற்பார் ;
அவருடைய பார்வையிலே, ஒவ்வொன்றையும் இப்படிச் செய்
யுங்கள், இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லி இருப்பார். நான்
சவாலாகவே கேட்கிறேன். அமெரிக்க நாட்டிலே
கென்னடியினுடைய சமாதியைவிட ஆயிரம் மடங்குக்கு
மேல் எம். ஜி. ஆர்.-உடைய சமாதி கட்டப்பட்டு

இருக்கிறது. இந்தக் குடையை வைத்துவிட்டுப் போகிறோம்; குடையோடு முடித்து இருக்கலாம். ஆனால் அதிலே குஞ்சம் கட்ட வேண்டும்; மணி கட்ட வேண்டும் என்று அவர் சொன்னார். எம். ஜி. ஆர். மீது அன்பு இல்லாவிட்டால் அந்த மணி கட்ட வேண்டும் என்று சொல்ல கலைஞருக்கு என்ன அக்கறை? கிடக்கட்டும் 'குடை' என்று பேசாய் இருக்கக் கூடாதா? அதற்கு ஒரு எழில் வர வேண்டும் என்று அவர் நினக்கிறார். அவர் மூன்றாவது நாள் சொல்கிறார், இன்னும் அந்த விளக்குகள் அந்த சமாதிக்குப் பக்கத்தில் இருக்கிற கடைகள் அழகு தரவில்லை; நேற்று கூட சொல்கிறார், எல்லாம் சரி, லைட் எல்லாம் சரி, எம். ஜி ஆர். சமாதிக்கு மரங்கள் நடுகிற வேலை இல்லையே என்று சொல்கிறார். மறைந்துவிட்ட ஒரு மனிதர், மறைந்துவிட்ட ஒரு பகை மறைந்து போகிறது. மனிதத் தன்மை இருக்க வேண்டும். ஆனால் நீங்கள் அதைக் கட்டி இருந்தால் பாராட்டி இருப்போம். கட்டிய வீட்டுக்கு நொட்டம் சொல்வதற்கு வந்து இருக்கிறீர்களே? 30 இலட்சம் தானா என்கிறீர்கள். என்ன செய்வது? உங்களுக்கு அது சர்வ சாதாரணம். உங்களுக்கு பீடா செலவாக 30 இலட்சம் இருக்கிறது. ஆனால் இந்த அரசாங்கத்துக்கோ அது மிகப் பெரியது. நான் ஒன்றைச் சொல்கிறேன். தமிழனை தமிழனாக நிறுத்தி, தாழ்ந்து கிடந்த தமிழகத்தை தலைநிமிரச் செய்து நம்மை எல்லாம் மானம் உள்ளவனாக மாற்றிய மறைந்து விட்ட நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து போன போது அவருக்கு சமாதி எழுப்பப்பட்டது. அப்போது 1972-ஆம் ஆண்டு இந்த மாமன்றத்தில் திருமதி அனந்த நாயகி ஒரு கேள்வி கேட்டார்கள். இதுவரை அண்ணா சமாதிக்கு செலவு செய்யப்பட்ட தொகை என்ன என்று அப்போது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர் நம்முடைய மாண்புமிகு அண்ணன் சாதிக் அவர்கள். அண்ணா சமாதிக்கு இதுவரை செலவழிக்கப்பட்ட தொகை 4 இலட்சத்து 85 ஆயிரம். உங்களையும், எங்களையும், தமிழ்நாட்டையும், இந்த மொழியையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், நம்மையெல்லாம் கட்டிக் காத்து வளர்த்துவிட்ட அறிஞர் அண்ணா அவர்களுடைய சமாதிக்கே 4 இலட்சத்து 85 ஆயிரம் தான். ஆனால் எம்.ஜி.ஆருடைய சமாதிக்கு 30 இலட்ச ரூபாய் செலவு செய்து இருக்கிறோம். இன்னும் கூடத் தேவைப்பட்டால் செலவு செய்து இருப்போம். செலவுப் பணம் எவ்வளவு என்பதல்ல. மனம் இருக்க வேண்டும். ஆனால் ஒன்றை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப் பேசுவதன் மூலம் மறைந்துவிட்ட அந்தத் தலைவருக்கு நீங்கள்தான் கேடு செய்கிறீர்கள். அவருடைய புகழைப் பின்னப்படுத்துகிறீர்கள் என்பதை நான் உங்களுக்கு மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இதே நிலையில் நீங்கள் போய்க்கொண்டு இருப்பீர்களேயானால்—புழுதி வாரித் தூற்றி, அண்ணா சொன்னதைப் போல எங்களை, இங்கே



உட்கார வைத்து இருக்கிறீர்கள்; இன்னும் எங்கே கொண்டு போய் உட்கார வைக்கப் போகிறீர்கள் என்பதை மட்டும் தெரிவித்து, மனிதப் பண்பு இருக்க வேண்டும் அதை மட்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொண்டு நிறைய வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து இருக்கிறீர்கள், நான் வெட்டுத் தீர்மானங்களைப் பற்றிப் பேசுவதானால் ஒவ்வொருவருடையதையும் தனித் தனியாக எடுத்து வைத்து இருக்கிறேன். மாண்புமிகு அம்மையார் குறிப்பாக நம்முடைய திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் பார்க்கிறார்கள். அவர்கள் கொடுத்ததையும் நான் வைத்து இருக்கிறேன். அவர்கள் ஒன்று சொன்னார்கள். 'துரைமுருகன், நான் சொன்னால் செய்கிறார்' என்று எல்லோரும் சொல்கிறார்கள்; ஆனால் ஒன்றும் செய்ய மாட்டார்' என்று. அது உங்களுக்கும் எனக்கும் இருப்பது, இதுமாதிரி நிறைய பேர் ரெக்கமென்டேஷனுக்கு அம்மாவிடம் வருகிறார்கள் என்பதற்காக இப்படி ஒரு போடு போட்டு இருக்கிறார்கள். இருந்தாலும் அதை நான் எடுத்துக் கொள்கிறேன். மாவடிகோட்ட விவகாரத்தை மட்டும் நான் உங்களுக்குச் சொல்லிவிட்டுப் போகிறேன். அது செய்யப் பட வேண்டிய ஒன்று; நானே செய்து முடிக்கிறேன் என்பதை நான் எடுத்துக் கூறி, நான் இவ்வளவு சொல்லி இருக்கிற காரணத்தால், இந்த வெட்டுத் தீர்மானங்களுக்கு உரிய மரியாதை வழங்கப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்து, அருள் கூர்ந்து வெட்டுத் தீர்மானங்களை நீங்கள் வாபஸ் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

20.05 மணி

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய சமாதிப் பிரச்சினை எழுப்பப்பட்ட நேரத்தில், கவர்னர் ஆட்சியில் அதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்த வரைபட அடிப்படையில் அந்த வேலைக்கான பணம் ஒதுக்கப்பட்டு அந்த வேலை துவங்குகிற நேரத்தில் தேர்தல் வந்து நீங்கள் ஆட்சிக்கு வந்து இருக்கிறீர்கள். அந்தத் திட்டத்திலே மாற்றம் ஏற்படுத்தப்பட்டு, பணச் செலவு குறைக்கப்பட்டு இருக்கிறது என்ற அடிப்படையிலே தான் அவர் கருத்தைச் சொன்னார். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை ஒரு பெரிய குற்றச்சாட்டுப் பிரச்சினையாக ஆக்கி, 'உங்களுக்கு இதயம் இருக்கிறதா? மனம் இருக்கிறதா?' என்ற அளவுக்கு அவர் வழக்கமாகப் பேசுகிற பாணியில் பேசுகிறார். ஆனால், நான் பணிவோடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுக்கு—எங்கள் தலைவர் மீது வைத்திருக்கிற

நம்பிக்கையின் அடிப்படையில் எங்களுக்கு இருக்கிற மனக் குறைகளை நாங்கள் வெளியே சொல்கிறோம். ஆனால் (குறுக்கீடு) நான் வந்திருக்கிறேன். அவர் சொன்னார், அவர் சொன்னதை நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா ? எனவே, அந்த வகையில் எங்களுடைய மனக் குறைகளைச் சொல்லுகின்ற உரிமை எங்களுக்கு இருக்கிறது. நீங்கள் செய்திருப்பதை நீங்கள் சொல்லலாம். ஆனால் அதனாலேயே எல்லாம் முடிந்து விட்டது என்ற நிலை கிடையாது. எங்களுடைய குறைகளை நாங்கள் சொல்லிக் கொண்டுதான் இருப்போம். ஆனால், நீங்கள் செய்ததைச் சொல்லுங்கள். அது வேறு விஷயம். அதனால் நாங்கள் எதையுமே சொல்லக் கூடாது ; நீங்கள் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொள்ள வேண்டுமென்ற அவசியம் எங்களுக்கு இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் எந்த நேரத்திலே, எந்தப் பிரச்சினையிலே பேசினாலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர்கள் எம். ஜி. ஆர்-ருடைய சமாதியைப் பற்றி பேசுவதும், அவருக்கு ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசு அவமானத்தை விளைவித்து விட்டது என்கிற இதே வார்த்தைகளை உச்சரித்துப் பேசுவதும், இன்றைக்கும் அதே பேச்சைப் பேசியதும் எந்த அளவிற்கு முறையானது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருமதி ஜானகி அம்மையாருடைய ஆட்சி ஒரு மாத காலம் நடைபெற்றது. அதற்குப் பிறகு கவர்னருடைய ஆட்சி ஓராண்டுக் காலம் நடைபெற்றிருக்கிறது. அப்பொழுது தான் ஏதோ திட்டம் போட்டோம்; வரைபடம் கொண்டு வந்தோம் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே அல்லாமல், தி. மு. க. ஆட்சி வந்தவுடன்தான் அதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

கவர்னர் ஆட்சியிலே போடப்பட்ட வரைபடம் எம். ஜி. ஆருக்கு ஒரு கோவில் கட்டுகிற விஷயம். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளராக இருந்த எம். ஜி. ஆர். அவர்களுக்குக் கோவில் கட்டுவதை அவர் பொருளாளராக இருக்கும்பொழுது அந்தக் கட்சிக்குத் தலைவராகப் பொறுப் பேற்றிருந்த நான் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள மாட்டேன். எம். ஜி. ஆர். கூட அவர் மறைவதற்கு முன்பு உங்களுக்கு ஒரு சமாதி இப்படிக் கட்டப் போகிறேன் என்று சொன்னால், அதைக் கோயிலாகக் கட்டுங்கள் என்று அவரேகூட ஒத்துக் கொள்ள மாட்டார்.



ஏதோ கோயில் கட்ட வேண்டும், கோயில் கட்ட வேண்டும் என்றால் நாங்கள் கோயில் கட்டுவதாக இருந்தோம், அதை நீங்கள் கெடுத்து விட்டீர்கள் என்று பேசுவது முறை அல்ல.

இன்று நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் குறிப்பிட்டதைப் போல, திட்ட மதிப்பீடு அண்ணா அவர்கள் சமாதிக்கு 5—12—1969-இலே போடப்பட்டது 3 இலட்சம் ரூபாய்தான். பிறகு ரிவைஸ்ட் எஸ்டிமேட் 4 இலட்சத்து நாற்பத்தாறு ஆயிரம். பிறகு டோட்டல் எக்ஸ்பெண்டிச்சர் அதைத்தான் சாதிக்பாட்சா அவர்கள் 72 ஆம் ஆண்டு இங்கே அறிவித்தது, அனந்தநாயகி அவர்களுடைய கேள்விக்கு பதிலாக அறிவித்தது 4 இலட்சத்து எண்பது ஆயிரம் ஆகும்.

அண்ணா அவர்களுக்கே 4 இலட்சம் ரூபாயிலே ஒரு சமாதி கட்டி முடித்திருக்கும்பொழுது—இப்பொழுது பண மதிப்பு மாறியிருக்கிற காரணத்தால் அது முப்பது இலட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. அண்ணாவுக்கு 4 இலட்சம்தான் ; அதைவிட எம். ஜி. ஆருக்கு அதிகச் செலவிலே கட்ட வேண்டுமென்று நண்பர் இராதா விரும்புகிறாரா என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா** : மாண்புமிகு தலைவரவர்களே, நீங்கள் ஒரு கருத்தை முன்னுக்குப் பின் மாறுபட்ட நிலையிலே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அண்ணா அவர்களுடைய சமாதிக்கு அன்றைக்குச் செலவு செய்யப்பட்டிருக்கிற தொகையினுடைய மதிப்பும், இன்றைக்கு அந்த ரூபாயினுடைய மதிப்பும் நீங்களே சொல்லி விட்டீர்கள், அதனால் 30 இலட்சம் ரூபாய் பெரிய தொகை என்று நீங்கள் கருதுவீர்களேயானால் நான் நிச்சயமாகச் சொல்கிறேன். எனக்கு அதிலே மனக்குறை இருக்கிறது ; 30 இலட்சம் ரூபாய் பெரிய தொகை அல்ல. இன்னும் அதைச் சிறப்பாக நீங்கள் செய்திருக்க வேண்டுமென்பது எங்களுடைய கருத்து. அதைச் சொல்லக் கூடாது என்பது அல்ல. மாண்புமிகு முதல்வருடைய நினைவுக்காக நான் ஒன்றைச் சொல்கிறேன். திருச்சியிலே. .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : அண்ணா சமாதிக்கு வராதவர்கள், எம். ஜி. ஆர். சமாதிக்கு இன்னும் கூட வராதவர்கள், அவர்களையெல்லாம் தலைவராகப் பெற்றிருப்பவர்கள் இதைப் பேசுவது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.

**திரு. எஸ். ஆர். இராதா** : பேரவைத் தலைவரவர்களே, அண்ணா சமாதிக்கு வராதவர்கள், எம். ஜி. ஆர். சமாதிக்கு வராதவர்கள் என்பது அவர் யாரைச் சொல்கிறார் என்பது எனக்குத் தெரியவில்லை. எங்கள் தலைவி எல்லா இடத்திற்கும் வந்திருக்கிறார்கள். தெரியாமல் நீங்கள் பேசக் கூடாது. தயவு செய்து இப்படிப் பேசுவதனாலே விட்டு

விடுவேன் என்று நினைக்காதீர்கள். எல்லா இடத்திற்கும்— அந்தச் சமாதிக்கு வந்திருக்கிறார்கள், எல்லா சமாதிக்கும் மலர் வளையம் வைத்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் படம் இருக்கிறது. ஆதாரம் வேண்டுமானால் உங்களுக்கு நான் காட்டுகிறேன். ஆனால், ஏதோ ஒரு கருத்துக்காக நீங்கள் சொல்ல வேண்டுமானால்—— அதற்காக நீங்கள் சொல்லக் கூடாது.

நான் உங்களுக்கு இன்றைக்குச் சொல்கிறேன். ஒரே கட்சியிலே இருக்கும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்திலே கூட, திருச்சி பொதுக்குழுவிலே இதே கலைஞர் மீது நாங்கள் குற்றம் சொன்னோம். அன்றைக்கும் அதையே தான் சொன்னார்கள். அண்ணா சமாதியை நான் பெரியதாகக் கட்டியிருக்கிறேன், வேண்டுமானால் காந்தி சமாதியை வந்து பாருங்கள், நானே எனது செலவில் அழைத்துப் போகிறேன் என்று கலைஞர் அவர்கள் சொன்னார்கள்.

குற்றச்சாட்டு என்று சொல்லுகிற நேரத்திலே சில மன உணர்வுகளைச் சொல்கிறோம். நீங்கள் செய்ததைச் சொல்லுங்கள். நான் ஒன்றும் மறுக்கவில்லை. ஆனால் எதைச் செய்ய வேண்டுமென்ற எங்கள் ஆசையைச் சொல்கிறோம். ஆசையைக் கூடச் சொல்லக் கூடாது என்று சொல்கிற நிலை நல்லது அல்ல என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது; இப்பொது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 36— பாசனம்.

திருவாளர்கள் எஸ். டி. உகம்சந்த், ஜி. பழனிச்சாமி, ஆர். நடேசன், செ. நூர்முகமது ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 36— பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 104,41,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



20-10 மணி.

(ஆ) கோரிக்கை எண் 37— பொதுப்பணிகள்— கட்டிடங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் எஸ். எஸ். ராமசுப்பு, உ. ரா. வரதராசன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 37— பொதுப்பணிகள்— கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,65,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண் 38— பொதுப்பணிகள்— பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் கே. ரவி அருணன், எஸ் ஏ. தங்கராஜன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 38— பொதுப்பணிகள்— பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 38,29,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.".

[1990 மே 2

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஈ) கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

திருவாளர்கள் ரெ. பிச்சைமுத்து, எச். எம். ராஜீ, எம். சிரங்கன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 140,30,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(உ) கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

திரு. எஸ் டி. உகம்சந்த் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் ஆர். சிங்காரம், கே. ஆர். சுந்தரம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 57,57,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "



1990 மே 2]

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஊ) கோரிக்கை எண் 53—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் ஆர். சிங்காரம், கோ. வீரையன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 53—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 39,47,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(எ) கோரிக்கை எண் 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

திருவாளர்கள் ஆர். சிங்காரம், வி. தம்புசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,11,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 3—5—1990 காலை 9,00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 20-14 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

84. சென்னை, இந்திய பிராணிகள் நல வாரியத்திற்கு சொந்தமான எம். எஸ். எம். 4369-ஆம் எண் கொண்ட நடமாடும் பிராணிகள் சிகிச்சை வண்டிக்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ-1) துறையின் 6-1-1990-ஆம் நாளிட்ட 40-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது],

85. சென்னை ராயபுரத்திலுள்ள ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனைக்குச் சொந்தமான மஹிந்திரா ஜீப்பிற்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ.அ) துறையின் 10—1—1990-ஆம் நாளிட்ட 62-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

153. பாசனம் மற்றும் கட்டிடங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91. (தமிழ், ஆங்கிலம்).

154. கோரிக்கை எண். 39 மற்றும் 54—தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91. (தமிழ்).



155. கோரிக்கை எண். 39 மற்றும் 54—தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91. (ஆங்கிலம்)

156. கட்டிடப் பிரிவுப் பணிகள் பற்றிய ஆய்வுக் குறிப்பு, 1989-90. (தமிழ், ஆங்கிலம்)

157. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை பற்றிய வரவு-செலவுத் திட்டச் சாதனை, 1989-90. (தமிழ், ஆங்கிலம்)

158. பாசனம் மற்றும் நிலத்தடி நீர் குறித்த சாதனைத் திட்டம், 1989-90. (தமிழ், ஆங்கிலம்)

## இணைப்புகள்.

(52-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாட்டில் சாலை-மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய 1989-90 ஆம் ஆண்டிற்கான ஆய்வும், 1990-91 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும்.

**முன்னுரை :**

1. ஒரு நாட்டில் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை முன்னேற்றமடையச் செய்யும் திறமையான வழிகளில் சாலைகளை சரிவர அமைத்து அவற்றை மேம்பாடு செய்வதும் ஒன்றாகும். அப்படிப்பட்ட வளர்ச்சிக்கு சாலைகளும் சாலைப் போக்குவரத்தும் இன்றியமையாத அடிப்படைத் தேவையாக விளங்குகின்றன. ஒரு நாட்டில் சாலை அமைப்பும், அதன் பொருளாதார வளர்ச்சியும் நெருங்கிய தொடர்பு உள்ளவை.

நமது நாட்டில் சுமார் 80 விழுக்காடு மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். அக்கிராமங்களுக்கு சாலைகள்தான் போக்குவரத்துக்கு முக்கிய சாதனமாக விளங்குகின்றன. பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பகுதிகளுக்கு மேலும் இந்நிலைமை சிறப்பாகப் பொருந்தும்.

அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட பின்வரும் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை

பாலம் மற்றும் சாலைப்பணிகளை இம்மாநிலத்தில் மேற்கொள்கின்றது :—

(அ) மாநிலச் சாலைகள் திட்டம்.

1. மாநில நெடுஞ்சாலைகள்.

2. மாவட்டப் பெருஞ்சாலைகள்.

3. இதர மாவட்ட சாலைகள்.

(ஆ) இதர சாலைகள் திட்டம்.

(இ) தற்போதுள்ள இருப்புப் பாதைகள் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள், கீழ்ப்பாலங்கள் கட்டுதல்.

(ஈ) கருவிகளும் தளவாடங்களும்.

(உ) நிழற்சாலைகள்.

மாநிலச் சாலைகள் திட்டம் :

2. பெருகிவரும் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்வதற்காக கீழே குறிப்பிட்டுள்ள மூலப்பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன :—

(1) தற்போதுள்ள உறுதியற்ற கட்டுமானங்களை உறுதிப் படுத்துதல்.

(2) பாலம் கட்டப்படாத குறுக்கீடுகளில் சிறு பாலங்கள்/ கட்டுதல்.

(3) சாலைத் தளங்களை அகலப்படுத்துதல்/உறுதிப் படுத்துதல்.

(4) சாலைகளின் வடிவமைப்பினை மேம்பாடு செய்தல் போன்ற சீரமைப்பு பணிகள்.

மாநில நெடுஞ்சாலைகள் :

இத்திட்டத்தின் கீழ் மாநில நெடுஞ்சாலைப் பணிகள் முதல் முக்கியத்துவம் வாய்ந்த பணிகளாக எடுத்துக்கொள்ளப் படுகின்றன. 1-4-1989 ஆம் நாளைய நிலவரப்படி மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 1,885 கி.மீ. ஆகும். மாநில நெடுஞ்சாலைகளில் ரூ. 46 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு



சாலைப்பணியும் ரூ. 30.50 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு பாலப்பணிகளும் 1989-90 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் விவரம் இணைப்பு-1இல் கொடுக்கப்பட்டுள்ளன. 1990-91 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின் கீழ் ரூ. 35 இலட்சம் மதிப்பீட்டில் 4 பணிகளை எடுத்துச் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட உள்ளது. இப்பணிகளின் விவரமும் இணைப்பு 2-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 92.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட பெருஞ்சாலைகள் :

1—4—1989 ஆம் தேதிய நிலவரப்படி, மாவட்டப் பெருஞ்சாலைகளின் மொத்த நீளம் 14,008 கி.மீ. ஆகும். 1989-90 ஆம் ஆண்டில் மதுரை, உசிலம்பட்டி, தேனி, போடி, போடிமெட்டு, கொச்சி சாலையில் 118 கி.மீ. நீளப் பகுதி தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் மாவட்டப் பெருஞ்சாலைகளின் மொத்த நீளம் 13,890 கி.மீ. ஆக குறைந்துள்ளது. 1989-90 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 164.00 இலட்சம் மதிப்பீட்டிலான 11 பாலப்பணிகளுக்கும், ரூ. 100.00 இலட்சம் மதிப்பீட்டிலான இரண்டு சாலைப் பணிகளுக்கும் மாவட்ட பெருஞ்சாலைகளின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் விவரங்கள் இணைப்பு-3இல் கொடுக்கப்பட்டுள்ளன.

1990-91 ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ. 264.00 இலட்சம் மதிப்பீட்டிலான 14 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப் படவுள்ளது. இப்பணிகளின் விவரம் இணைப்பு 4-இல் கொடுக் கப்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 892.26 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதர மாவட்ட சாலைகள் :

1—4—1989 ஆம் தேதிய நிலவரப்படி, இதர மாவட்ட சாலைகளின் மொத்த நீளம் 30,420 கி.மீ. ஆகும். 1989-90 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின் கீழ் இதர மாவட்ட சாலைகளில் ரூ. 67 இலட்சம் மதிப்பீட்டில் 3 பாலப்பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் விவரம் இணைப்பு-5இல் கொடுக்கப்பட்டுள்ளது.

1990 மே 2

- 1990-91 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் ரூ. 71.00 இலட்சத்திற்கான மதிப்பீடுகளில் 8 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் விவரம் இணைப்பு 6-இல் கொடுக்கப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 221.69 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதர சாலைகள் திட்டம் :

ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூ. 50,000-க்கு மேல் மதிப்பிடப்பட்ட பெரிய சிறிய மேம்பாலங் கள், தாம்போகிகள், சிறிய பாலங்கள் மற்றும் சாலை மேம்பாடு பணிகள் போன்ற மூலப்பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயல் படுத்த எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சாலைகளையும், பாலங்களையும், பராமரிப்பதில், ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஓரளவு நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ. 50,000 மதிப்பீட்டிலான ஊராட்சி ஒன்றிய சாலைகளில் சாலை மற்றும் பாலப் பணிகள் முடிக்கப்பட்டவுடன் அச் சாலை மற்றும் பாலங்களை அரசு நிதியில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை பராமரிக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1989-90 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் ரூ. 37.00 இலட்சம் மதிப்பீட்டிலான 2 பாலப்பணிகளுக்கு. இத்திட்டத் தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது, தொடர்ந்து 1989-90 ஆம் ஆண்டிலேயே ரூ. 127 இலட்சம் மதிப்பீட்டிலான 10 சாலைப்பணிகளுக்கும் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பாலப் பணிக்கும் கூடுதலாக பணிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகளின் விவரங்கள் இணைப்பு-7 இல் கொடுக்கப் பட்டுள்ளன. 1990-91 ஆம் ஆண்டின் பகுதி -2 திட்டத்தில் ரூ. 101.00 இலட்சம் மதிப்பீட்டிலான 8 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது. இதன் விவரம் இணைப்பு 8-ல் கொடுக் கப்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 143.02 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேல்/கீழ் மட்ட பாலங்கள் :

அரசு சாலைகள், இரயில் பாதை சந்திப்பு கடவுகளில், இரயில் வாகன அலகு ஒரு இலட்சத்தை மிகும் இடங்களில், தற்போ துள்ள இருப்புப்பாதை கடவுகளுக்கு பதிலாக மேல்/கீழ் மட்ட பாலங்கள் அமைத்திட இத்திட்டம் வழிவகுக்கிறது. இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள். அப் பணியின் முக்கியத்துவத்தைக் கருதியும், நிதி ஒதுக்கீட்டின் அள வைப் பொறுத்தும் தொடர்ந்த இரயில்வே பணிகள் திட்டத் தில் சேர்க்கப்படுகிறது.



1990 மே 21

அணுகு சாலைகள் உள்பட இரயில்வே மேம்பாலங்கள், இரயில்வே கீழ்மட்ட பாலங்கள் கட்டுவதற்காகும் செலவை மாநில அரசும் இரயில்வே துறையும் சரிசம அடிப்படையில் (50 : 50) ஏற்கின்றன. இந்திய அரசின் இரயில்வே அமைச்சகம் ''இரயில்வே பாதுகாப்புப் பணிகள் நிதி'' என்கிற நிதியினை ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து ஆளில்லாத இருப்புப்பாதை கடவுகளுக்கு ஆட்களை நியமித்தல் தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுகளைத் தரமுயர்த்துதல் மற்றும் அவை களுக்கு மாற்றாக மேம்பாலங்கள் அல்லது கீழ்மட்ட பாலங்கள் கட்டுதல் ஆகியவற்றிற்காக மாநில அரசால் முன்னதாக செலவு செய்யப்படும் தொகை திரும்பப்பெறப்படுகிறது. மேற்படி நிதி ஒதுக்கீட்டில் 80 விழுக்காடு மாநிலங்களிலுள்ள தற்போதைய இருப்புப்பாதை கடவுக்கு மாற்றாக மேம்பாலம்/கீழ் மட்ட பாலம் அமைத்திடவும், ஆளில்லா கடவுகளில் ஆட்களை நியமிக்கவும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இரயில்வே பாது காப்பு பணிகள் நிதியிலிருந்து தற்போது தமிழ்நாடு ஆண்டிற்கு சுமார் ரூ. 15.00 இலட்சத்திலிருந்து ரூ. 20.00 இலட்சத்திற் குள்ளாக நிதியினைப் பெறுகிறது. சாலை மேம்பாலங்கள் நக ராட்சிகளின் எல்லைக்குள் வருமாயின் செலவுத் தொகையில் மாநிலத்தின் பங்கு (மொத்த செலவில் 50 விழுக்காடு) மாநில அரசு, நகராட்சி இவைகளுக்கிடையில் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

மதுரை-அருப்புக்கோட்டை சாலைகளில் கி.மீ. 1/6 இல் புதிதாக கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம் 11—9—1989 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் போக்குவரத் திற்குத் திறந்து வைக்கப்பட்டது.

மணலி எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலைக்குச்செல்லும் சாலையில் கி.மீ. 0/10 இல் கட்டப்பட்டு வரும் சாலை மேம் பாலப் பணி நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது.

சேலம்-ஓமலூர் சாலையில் கி.மீ.0/8 இல் கட்டப்பட்டு வரும் சாலை மேம்பாலம் முன்னேற்ற நிலையில் உள்ளது.

பரங்கிமலை இரயில் நிலையம் அருகே, ரயில்வே கி.மீ.15-20-21-இல் தற்போதுள்ள கடவுக்கு மாற்றாக சுரங்கப்பாதை அமைக்கும் பணி நிலம் கையகப்படுத்தலுக்குப் பின் மீண்டும் தொடங்கப்பெறும். இப்பணி 1988-89 ஆம் ஆண்டிற்கான இரயில்வே திட்டப் பணியில் சேர்த்துக் கொள்ளப் பரிந் துரைக்கப்பட்டுள்ளது.

பழவந்தாங்கல் அருகில் நங்கநல்லூர் சாலையில் கி.மீ.0-6 இல் கட்டப்படவுள்ள சுரங்கப்பாலம் நிலம் கையகப்படுத் தலுக்குப் பின் செயலாக்கப்படும்.

அரக்கோணம்-சந்திப்பில் கட்டப்படவுள்ள சாலை மேம் பாலப் பணி இரயில்வே திட்டப்பணிகளில் 1989-90 ஆம் ஆண்டு திட்டத்தில் அங்கீகாரம் பெற்றுள்ளது.

திண்டுக்கல்- வட்டாணம் சாலையில் கி.மீ. 2/4 இல் கட்டப் படவேண்டிய சாலை மேம்பாலம் பணியானது 1990-91 ஆம் ஆண்டிற்கான இரயில்வே திட்டப்பணியில் சேர்ப்பதற்குப் பரிந்து அனுப்பப்பட்டுள்ளது.

1989-90 ஆம் ஆண்டில் இத்திட்டப்பணிகளுக்கு ரூ. 233.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது, 1990-91 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டப் பணிகளுக்கு ரூ. 210.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கருவிகளும், தளவாடங்களும் :**

ஆண்டுதோறும் பராமரிக்கப்பட வேண்டிய சாலைகளின் நீளம் அதிகரித்து வருகிறது. அதிகமாகிவரும் வேகவாகனப் போக்குவரத்திற்கு ஈடு செய்ய வாகன ஓடுதளத்தை மேம்பாடு செய்யவேண்டும். பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல் படுத்தியதைத் தொடர்ந்து நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையின் சாலை அமைப்புப் பணிகள் அதிகரித்துள்ளன. இத னால், நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் கருவி களையும் தளவாடங்களையும் மேம்பாடு செய்வதும், நவீனப் படுத்துவதும் அவசியமாகிறது. பழைய கருவிகள் மற்றும் தளவாடங்களில் பல அவற்றின் காலவரம்பினைக் கடந்து பயனற்றுவிட்டதால் அவற்றிற்கு பதிலாக புதியவற்றை வாங்கு வது அவசியமாகிறது. புதிய கருவிகளும் தளவாடங்களும் படிப் படியாக வாங்கப்பட்டு வருகின்றன.

1989-90 ஆம் ஆண்டில், கருவிகளும் தளவாடங்களும் வாங்கு வதற்காக ரூ. 55.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 39.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**நிழல் தரும் மரங்கள் வளர்த்தல் :**

சூழலியலை பராமரிப்பதற்காகவும், சாலையை பயன்படுத்து வோருக்கு நிழல் தருவதற்காகவும், சாலை ஓரங்களில் பெருமளவு நிழல் தரும் மரங்கள் வளர்க்கப்படுகின்றன, இப்படி வளர்க்கப் படும் மரங்கள், அவற்றின் கனிகளின் வாயிலாக அரசுக்கு வருவாயையும் அளிக்கின்றது. இது, ஊரக வேலை வாய்ப்பினை யும் ஊரக தொழில் வளர்ச்சியினையும் உருவாக்குகிறது.



தற்சமயம் பல இலட்சக் கணக்கில் பனை மரங்கள் மற்றும் மரம், எரிபொருள் எண்ணெய், கனிகள் மற்றும் பூ பூக்கும் மற்ற வகை மரங்களையும் வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. ஒழுங்கான கண்காணிப்பிற்கும், ஆயுள் வீதத்தை அதிகரிக்கச் செய்ய உத்தரவாதம் அளிப்பதற்கும் தொகுதி வளர்ப்பு தொழில் நுட்பங்கள் கடைப்பிடிக்கப்படு கின்றன.

1989-90 ஆம் ஆண்டில் 1,45,000 பனை மரங்களும், 55,000 இதர வகை மரங்களும் வளர்த்திட இலக்கு நிர்ணயிக்கப்பட் டுள்ளது. பனை மரங்களையும் இதர வகை நிழல் தரும் மரங் களையும் வளர்ப்பதற்காக 1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ 52.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**அரசு சாலைகளைப் பராமரித்தல் :**

சாலைகளைப் பராமரிக்கும் செலவு, (1) பொருட்களின் அதிக விலை; (2) தாரின் விலை உயர்வு; (3) சாலைப் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டுவரும் சாலைத் தொகுதியாட்கள் கூலி மற்றும் படி உயர்வு ஆகிய மூன்று காரணங்களினால் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் எல்லாப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற வகையில் ஊரகச் சாலைகள் திட்டம் நீலகிரி மாவட்டத்தின் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், பேருந்து வழித்தட மேம் பாட்டுத் திட்டம் பழங்குடியினர் துணைத் திட்டம், மேற்கு மலைத் தொடர் சாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங் களின் கீழ் சுமார் 1,000 கி. மீ. நீளத்திற்கு சாலைகள் பெரும் செலவில் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன இதனால் பரா மரிக்கப்பட்டு வரும் சாலைகளின் நீளம் ஆண்டுக்கு ஆண்டு கூடிக் கொண்டு வருகிறது. இச்சாலைகளை நிரந்தர சொத்தாகக் கொள்ளலாம். அச்சாலைகளை காலமுறைப்படி புதுப்பித்தும் பராமரித்தும் காப்பது அவசியமாகும். நிதிநிலைக்கேற்ப அரசு ஒவ்வொரு ஆண்டும் பராமரிப்புத் தொகை ஒதுக்கீடு செய்கிறது. 1989-90 ஆம் ஆண்டின் ஒதுக்கீடான ரூ. 55.45 கோடி செலவிடப்பட்டுள்ளது.

1990—91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 68.84 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பணிகளை ஆய்வு செய்தல் :**

பாலங்கள், மேம்பாலங்கள், புறவழிச்சாலைகள், சாலைகள் அமைத்தல் போன்ற பெரும் பணிகளின் மதிப்பீடுகளை தயாரிப் பதற்காக வேலை செய்யப்படும் இடத்தில் விரிவான ஆய்வும்

கீழ்மண் ஆராய்ச்சியும் செய்யப்பட வேண்டியுள்ளது.
இப்படிப்பட்ட கடுமையான பணிகளை செய்வதற்காக தற்சமயும்
ராப்பள்ளியினை தலைமையிடமாகக் கொண்டு மூன்று திருச்சி
களை உள்ளடக்கி ஒரு வட்டமும் விழுப்புரத்தை கோட்டங்
மாகக் கொண்டு மூன்று கோட்டங்களை உள்ளடக்கி தலைமையிட
வட்டமும் செயல்பட்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலைகளைத் மற்றொரு
தவிர, மாநிலத்தில் உள்ள பணிகள், முக்கிய சாலைப் பணிகள்
அனைத்தும் குறித்து ஆய்வு செய்து விவரங்கள் சேகரிக்கப்
படுகின்றன. இவை சரியான முறையில் திட்டங்களை வடிவமைப்
பதற்கும் மதிப்புகளை தயாரிப்பதற்கும் உதவுகின்றன. இத்
துடன் அரசு ஏனைய துறைகளான தொழில், வீட்டு வசதி, மீன்
வளம், வனத் துறை, வேளாண்மைத் துறை, மற்றும் உள்ளாட்சி
மன்றங்களின் பணிகள் குறித்து ஆய்வு செய்து திட்டங்களையும்
மதிப்பீடுகளையும் தயாரிக்கும் பணிகளை இவ்வட்டங்கள் மேற்
கொள்கின்றன.

### வடிவமைப்பு :

ஆய்வின் மூலம் புலனாகும் ஆதாரங்களை அடிப்படையாகக்
கொண்டு, வடிவமைப்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.
இத்துறை மேற்கொள்ளும் முக்கிய பாலப்பணிகளுக்காக வடிவ
அமைப்புகளை தயாரிப்பதற்கு தனி வட்டம் ஒன்று பொறுப்பு
வகிக்கிறது. பெரிய பாலங்கள், மேம்பாலங்கள், சுரங்கப்
பாதைகள், நீண்ட விட்டமுள்ள முன்னரே உறுதியேற்றப்பட்ட
சிமிட்டி கற்கலவை கட்டுமானங்கள் போன்ற சிக்கலான கட்டு
மானங்கள் வடிவமைப்புகளைத் தற்போதுள்ள தொழில் நுட்ப
உதவியுடன் தயாரிக்கும் பணியில் இவ்வட்டம் பெரும்பாலும்
ஈடுபடுகிறது. இதனால், இப்பணியை மேற்கொள்ளுவதற்கு
சிக்கனமானதும் சிறந்ததுமான வடிவமைப்புகள் கிடைக்
கின்றன. உறுதியற்ற கட்டுமானங்களைக் கண்டறிந்து ஏற்கனவே
உள்ள கட்டுமானங்களிலுள்ள குறைகளைப் போக்குவதற்கு
அவசியமான பிரேரணைகளைத் தயாரிக்கும் பணிகளையும்
இவ்வட்டம் மேற்கொள்கிறது.

நவீன வடிவமைப்பில் அதிக அளவிலான பணிகளை கவனிக்க வேண்டியிருப்பதால், வடிவமைப்புப் பணிகளைக் கணக்கிட்டுப் பொறி மூலம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### போக்குவரத்துப் பொறியியல் நிருவாக வட்டம் :

தமிழ்நாட்டில் போக்குவரத்து குறிப்பிடத்தக்க அளவிற்கு
வளர்ச்சியடைந்துள்ளதால், போக்குவரத்து மற்றும் போக்கு
வரத்துப் பொறியியல் ஆகிய துறைகள் தனித்தன்மை பெற்று
விளங்குவது இன்றியமையாததாக உள்ளது. இப்பிரச்சினையின்
தன்மையை உலக வங்கியும் ஆய்ந்தறிந்து போக்குவரத்துப்



பொறியியல் மற்றும் நிர்வாகத்திற்காக தனி வட்டம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று பரிந்துரையும் செய்தது. அதன்படி சென்னையை தலைமையிடமாகக் கொண்டு போக்குவரத்துப் பொறியியல் நிருவாக வட்டம் ஒன்றை மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த வட்டம் கண்காணிப்புப் பொறியாளரின் தலைமையில் செயல்படுகிறது.

இவருக்கு இரண்டு கோட்டப் பொறியாளர்கள் உதவி புரிகின்றனர். இவ்விரண்டில் ஒன்று சென்னையிலும் மற்றொன்று திருச்சிராப்பள்ளியிலும் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில், சென்னை மாநகரிலும் மற்றுமுள்ள முக்கிய நகரங்களிலும் போக்குவரத்து சைகை விளக்குகளை அமைப்பதிலும் போக்குவரத்துக் கட்டுப்பாடு அமைப்பிற்கு வகை செய்வதிலும், தேவையான இடங்களில் போக்குவரத்துத் தீவுகளை ஏற்படுத்துவதிலும், போக்குவரத்து பாதுகாப்பாகவும் முறையாகவும் நடைபெறுவதற்கு போக்குவரத்துப்பாதைகளில் அடையாளமிடுவதிலும், நிருவாகப் பணியாளர்களுக்கு இவ்வட்டம் ஆலோசனை கூறுகின்றது. இம்மாநிலத்தில் உள்ள சாலைகளின் போக்குவரத்து பளுவைத் தாங்கக் கூடிய அளவில் அமைய இது உதவுகிறது.

### தொழில் நுட்பக் குழுமம் :

நெடுஞ்சாலைத் துறை ஆண்டுதோறும் ரூ. 9,000 இலட்சம் மதிப்புள்ள பணிகளை சாதாரணமாக செயல்படுத்தி வருகிறது. சிக்கலான அதிகச் செலவாகும் பணிகளுக்கு நேர்த்தியான தரக் கட்டுப்பாடு தேவைப்படுகிறது. இத்துறையில் தலைமைப் பொறியாளரின் கீழ் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட மதிப்பீடுகளை சரிபார்ப்பதும், செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு போதுமானதா என்பதைத் தொழில்நுட்ப ரீதியாகக் கண்டறிவதும், பணிகளை நிறைவேற்றுவதில் குறிப்பிடப்பட்டுள்ளவை உரியவாறு செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதுமே இக்குழுமத்தின் பணிகளாகும். வடிவமைப்பின் தரத்தை உயர்த்துவதற்கும் பெரும் பணிகளை நிறைவேற்றுவதற்கும் கட்டுமான செலவில் சிக்கனத்தை ஏற்படுத்துவதற்கும் இக்குழுமம் உதவுகிறது.

### ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் :

1985 முதல் 1990 வரையிலான ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய நிதிக்குழு, சாலை மற்றும் பாலப்பணிகளுக்காக ரூ 130.00 கோடி மூலதனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 1985—86, 1986—87, 1987—88, 1988—89 ஆகிய முதல் நான்காண்டு காலத்தில் அடைந்த சாதனைகளும், மற்றும்

1989—90 ஆம் ஆண்டில் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| 1985—86இல் செய்யப்பட்ட செலவு | .. | 25.32 |
| 1986—87 இல் செய்யப்பட்ட செலவு | .. | 32.70 |
| 1987—88 இல் செய்யப்பட்ட செலவு | .. | 41.38 |
| 1988—89 இல் செய்யப்பட்ட செலவு | .. | 48.62 |
| 1989—90 இல் எதிர்பார்க்கும் செலவினம் | .. | 47.50 |
| மொத்தம் | .. | 195.52 |

தமிழ்நாட்டில் உள்ள சாலைகளையும் பாலங்களையும் பொறுத்த மட்டில் இந்திய நிதிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 130.00 கோடியாகும். ஆனால் இவற்றிற்காக செலவிட உத்தசிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 195.52 கோடியாகும். இத்தொகை, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இம் மாநிலத்தில் மொத்தமாக ஒதுக்கப்பட்ட மூலதனத்தில் 3.14 விழுக்காடு ஆகும்.

எட்டாம் திட்டத்தின் முன்னோக்கம் :

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் 31—3—1990 இல் முடிவடைவதால், 1—4—1990 முதல் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்குகிறது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், சாலைகள் மற்றும் பாலங்களுக்குமான முதல் ஒதுக்கீடு, மாநிலத் திட்டப் பிரிவின் நிலுவைப் பணிகளுக்கான தொகைக்காக முடிவாக்கப்பட வேண்டும்.

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சாலைகள் பகுதிக்கென ரூ. 240 கோடி தோராயமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு :—

| | | (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| 1. அரசுச் சாலைகள் .. | .. | 51.00 |
| 2. சாலை மேல்மட்ட/கீழ்மட்ட பாலங்கள் | .. | 2.00 |
| 3. ஊராட்சி ஒன்றியச் சாலைகள் | .. | 10.00 |



| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 4. ஊரகச் சாலைகள் | .. | 48.00 |
| 5. பழங்குடியினர் துணைத் திட்டம் | .. | 10.00 |
| 6. தமிழ்நாடு நகரிய மேம்பாடு திட்டம் | .. | 53.00 |
| 7. கிழக்கு கடற்கரை சாலைகள் | .. | 53.00 |
| 8. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகள் | .. | 1.00 |
| 9. தளவாடம் மற்றும் கருவிகள் | .. | 2.00 |
| 10. சாலை மரவளர்ப்பு | .. | 1.00 |
| 11. பல்வகை .. | .. | 9.00 |
| மொத்தம் | .. | 240.00 |

சாலைகள் பகுதிக்கென தோராயமாக ஒதுக்கீட்டில் பின்வரும் இனங்கள் இடம் பெற்றுள்ளன :—

(1) மாநில நெடுஞ்சாலைகள்; அனைத்து ஓர் வழித்தடங்களும் இருவழித் தடங்களும் அகலத்திற்கு ஏற்ப அகலப்படுத்துதல், நகர்ப்புறங்கள அருகிலுள்ள அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள சாலைப் பகுதிகளை திடப்படுத்துதல்.

(2) மாவட்ட பெருஞ்சாலைகள், தற்போது கருங்கல் பரப்பிய சாலையாக உள்ள அனைத்து மாவட்டப் பெருஞ்சாலைகளும் தார் பரப்பு சாலைகளாக மேம்படுத்தப்படும்.

(அ) மாவட்ட தலைமையிடங்களிலிருந்து துறைமுகம் மற்றும் தொழிலக மையங்களை இணைக்கும் போக்குவரத்து மிக்க சாலைகளை தற்கால போக்குவரத்திற்கு ஏற்ப மேம்படுத்துதல்.

(3) இதர மாவட்ட சாலைகள் :—

(அ) தற்போதுள்ள அனைத்து கருங்கல் பரப்பிய சாலைகளும், தார் பரப்பு சாலைகளாக மேம்படுத்துதல்.

(ஆ) 500 கி.மீ. நீளத்திற்கு கல்பரப்பிய சாலைகள் தார் சாலைகளாக மேம்படுத்துதல்.

(4) 1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி மக்கள் தொகை 1000-க்கு மேற்பட்டுள்ள குடியிருப்புப் பகுதிகள் அனைத்திற்கும், தார் சாலை வசதிகள் செய்வித்தல்.

**தேசிய நெடுஞ்சாலை :**

தேசிய நெடுஞ்சாலையைச் சார்ந்த பணிகள் 1971 ஆம் ஆண்டு முதல் தனித் தலைமைப் பொறியாளரின் கீழ் செயல் படட்டு வருகின்றன. தற்போது, தேசிய நெடுஞ்சாலைப் பகுதி யின் கீழ் செயலாக்கப்படும் திட்டங்கள் வருமாறு :—

(1) தேசிய நெடுஞ்சாலை திட்டம் (மத்திய அரசின் திட் டம்).

(2) மத்திய சாலை நிதித் திட்டம்.

(3) தேசிய நெடுஞ்சாலை நகர்புற இணைப்புகள் (மாநில அரசின் திட்டம்).

(4) நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

(5) பழங்குடியினர் பகுதி வளர்ச்சித் திட்டம்.

(6) மேற்குமலைத் தொடர் அபிவிருத்தித் திட்டம்.

**ஒவ்வொரு திட்டத்தின் செயல் விளக்கங்கள் வருமாறு :**

(1) தேசிய நெடுஞ்சாலைத் திட்டம:

தேசிய நெடுஞ்சாலைகள் மத்திய அரசைச் சார்ந்தவை, தேசிய நெடுஞ்சாலையின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு வேலை கள் மத்திய அரசின் நிதியிலிருந்து நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையைச் சார்ந்த தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு, தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை மத்திய அரசின் சார்பில் செயலாக்கி வருகின்றது. இதற்கு மத்திய அரசு முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பில் 9 விழுக்காடு முகவைத் தொகையாக செலுத்தி வருகின்றது.

தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 2,002.464 கிலோ மீட்டர் ஆகும். இதில் 125.86 கிலோ மீட்டர் நீளம் தேசிய நெடுஞ்சாலை நகர்ப் பகுதியில் அடங்கும். தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளத்தில் இரு வழித்தடம் 1,923.464 கிலோ மீட்டரும், ஒரு வழித்தடம் 79,000 கிலோ மீட்டரும் அடங்கும்.



**தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகள் :**

கீழே குறிப்பிட்டுள்ள பல்வேறு மூலப் பணிகள் செயலாக்க எடுத்துக் கொள்ளப்படுகிறது :—

(1) இருவழித் தடங்களை அகலப்படுத்துதல்.

(2) வலுவிழந்த இருவழித் தடங்களை வலுப்படுத்துதல்.

(3) ஒரு வழித் தடத்தை இருவழித் தடமாக அகலப்படுத்தி வலுப்படுத்துதல்.

(4) வளைவுகளை மேம்பாடு செய்தல்.

(5) மேல்/கீழ் பாலங்கள் கட்டுதல்.

(6) புறவழிச் சாலைகள் அமைத்தல்.

(7) பெரிய மற்றும் சிறிய பாலங்கள் கட்டுதல்.

(8) தாம் போகிகள் கட்டுதல்.

நான்காவது திட்ட ஆரம்பத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலைப் பணியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| | | கி.மீ. |
| (1) | சாலைத்தளத்தையும் அகலப்படுத்தியும் வலுப்படுத்தியும் மேம்படுத்துதல். | 1,473 |
| (2) | புறவழிச் சாலைகள் எண்ணிக்கை .. .. | 31 |
| (3) | மேல்/கீழ் பாலங்களின் எண்ணிக்கை .. | 8 |
| (4) | பெரிய பாலங்களின் எண்ணிக்கை .. .. | 55 |
| (5) | சிறிய பாலங்களின் எண்ணிக்கை .. .. | 173 |

1989—90 ஆம் ஆண்டிற்கு தேசிய நெடுஞ்சாலைகளின் (மூலப் பணிகளுக்கு) (தேசிய நெடுஞ்சாலை 45 பணிகள் உள்பட) இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட தொகை ரூபாய் 2,041.20 இலட்சத்தில், 1990 ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை செலவு செய்யப்பட்ட தொகை ரூபாய் 1,471.26 இலட்சம் ஆகும். தேசிய நெடுஞ்சாலையை மூலப் பணிகள் திட்டத்தின் கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளுக்கும், புதிய வேலை களுக்கும மற்றும் தேசிய நெடுஞ்சாலை 45-ல் அகலப்படுத்தி, வலுப்படுத்தும் பணிக்கும் மத்திய அரசிடம் 1990—91 ஆம்

ஆண்டிற்கு ரூபாய் 1,995.00 இலட்சம் கோரப்பட்டு அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. சமீபத்தில் ஒப்பளிக்கப்பட்டு, ஒப்பந் தங்கள் முடிவடையாமல் உள்ள ஒரு சில வேலைகள் தவிர தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன.

புற வழிச்சாலைகள் :

கீழே குறிப்பிட்டுள்ள புற வழிச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.—

(1) தேசிய நெடுஞ்சாலை எண். 7-இல் புகளூர் புறவழிச் சாலைகள்.

(2) தேசிய நெடுஞ்சாலை எண். 46-இல் வாணியம்பாடி புறவழிச் சாலைக்ள்.

(3) தேசிய நெடுஞ்சாலை எண். 46-இல் வேலூர் புற வழிச்சாலைகள்.

(4) நிலம் கையகப்படுத்துதல் வேலை, கோயம்புத்தூர் புறவழிச்சாலைக்கு முடிவடைந்து விட்டது. புறவழிச்சாலை அமைக்கும் பணி விரைவில் எடுத்து செயல்படுத்தபபட இருக் கின்றது.

(5) சென்னை நகரத்திற்கு புறவழிச்சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி (தேசிய நெடுஞ்சாலை எண்கள் 45, 4 மற்றும் 5-ஐ இணைக்கும்) நடைபெற்று வருகின்றது.

சாலை மேம்பாலங்கள் :

தேசிய நெடுஞ்சாலை எண் 7-இல் சுசீந்திரம் அருகே சாலை மேம்பாலம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலை எண். 7-ல் கி. மீ. 395/2 இலும் சேலம் புறவழிச்சாலையில் மேட்டூர் கேட் அருகே சாலை மேம்பாலங்கள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு முன்னேற் றத்தில் உள்ளன.

சமயநல்லூர், உளுந்தூர்பேட்டை, கந்தம்பாக்கம் மற்றும் பச்சகுப்பத்தில் சாலை மேம்பாலங்கள் வெகு விரைவில் எடுத்து செயல்படுத்தப்படவுள்ளன.

1—8—1989 முதல் தே. நெ. எண். 49 மதுரை, தேனி, போடிமேட்டுச்சாலையுடன் இணைந்து 118.00கி. மீ. தொலை விற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.



தேசிய நெடுஞ்சாலைகள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு :

1989—90 ஆம் ஆண்டிற்கு தேசிய நெடுஞ்சாலை பராமரிப்பும் மற்றும் பழுது பார்ப்பிற்காக ஒதுக்கீட்டுத் தொகை மற்றும்

| செலவுத்தொகை விவரங்கள் பின்வருமாறு (1) | முடிவான ஒதுக்கீடு (2) | செலவானது 1990 வரை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. சாதாரண பழுது பார்த்தல் | 193.03 | 153.0 |
| 2. காலமுறை புதுப்பித்தல் .. | 427.68 | 327.68 |
| 3. வெள்ளச்சேத பழுதுபார்த்தல் (தொடர்பவை). | 102.00 | 42.22 |
| 4. தேசிய நெடுஞ்சாலை (நகர்ப்புறம்) சாலை பராமரிப்பு. | 21.00 | 20.86 |
| 6. தனி பழுது பார்த்தல் (புதியவை) | 3.16 | 0.94 |

பராமரிப்பு மற்றும் பழுதுபார்பிற்காக 1990-91 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை வருமாறு:—

| | |
|---|---|
| சாதாரண பழுதுபார்த்தல் .. .. .. | 250.00 |
| காலமுறை புதுப்பித்தல் .. .. .. | 580.00 |

மையச்சாலை நிதி வேலைகள் :

13—5—1988 அன்று மக்கள் பேரவை மற்றும் மாநிலப் பேரவைகளால் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி மோட்டார் சாராவி, டீசல் ஆகியன மீது விதிக்கப்படும் சுங்கத் தீர்வை, ஆயத்தீர்வை அடிப்படையில் விழுக்காட்டிற்கு குறையாமல் ஒதுக்கப்பட்டு சாலைகள் மேம்பாட்டிற்கும், பராமரிப்பிற்கும் அனுமதிக்கப்படும்.

அவ்வாறு சேர்க்கப்படும் சாலை நிதியானது மைய அரசால் கீழ்க்கண்டுள்ளவாறு பகிர்ந்தளிக்கப்படும்—

| | விழுக்காடு. |
|---|---|
| (1) நிதியை நிர்வகிக்க .. .. .. | 12 |
| (2) தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தவும பராமரிக்கவும். | 35.12 |
| (3) மாநில சாலைகளை மேம்படுத்தவும் பராமரிக்கவும். | 46 |

மையச்சாலை நிதியானது, மைய அரசு அனுமதிக்கும், சாலை சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கு நிதி உதவியளிக்க உபயோகப்படுத்தப்படுகிறது.

ஆறாவது திட்ட காலத்திற்கு முன் ஒப்பளிக்கப்பட்ட 29 வேலைகளில் 2 வேலைகள் முடிக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய மூன்று வேலைகளில், இரண்டு வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஒரு வேலை நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான வழக்கினால் முடிக்கப்படாமல் உள்ளது.

ஆறாவது திட்ட காலத்தில் ஒப்பளிக்கப்பட்ட 6 வேலைகளில் 3 வேலைகள் நீக்கப்பட்டுவிட்டன. ஒரு வேலை முடிக்கப்பட்டுள்ளது. மற்றும் ஒரு வேலையின் பணி நடைபெற்று வருகின்றது. எஞ்சிய ஒரு வேலையை எடுத்து செய்யப்படவுள்ளது. இவ்வேலை புனித பயணிகளுக்கும், சுற்றுலாவினர்களுக்கும் பயனளிக்குமாதலால் சுற்றுலாத் துறையின்கீழ் சுற்றுலா நிதியின் மூலம் செயலாக்க சுற்றுலா துறையினரை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஏழாவது திட்ட காலத்தில் ஒப்பளிக்கப்பட்ட கொல்லேகல் செல்லம்பாளையம் சாலையில் கி.மீ. 54-6 இல் கிர்காகண்டி அருகே பாலாற்றின் குறுக்கே உள்ள பாலத்திற்கு அணுகு சாலை அமைத்தலுக்கு வனத்துறையின் அனுமதி எதிர்நோக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட முக்கிய இரு பெரிய வேலைகள் வருமாறு :—

(1) திண்டுக்கல் காயிதே மிலலத் மாவட்டத்தில் தடியன் குடிசையிலிருந்து ஆடலூர் சாலையை மேம்பாடு செய்தல்.

(2) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் போளூரிலிருந்து ஆலங்காயம் செல்லும் சாலையை மேம்பாடு செய்தல்.

1989—90 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட தொகை ரூபாய் 27.98 இலட்சம் ஆகும். இதில் 1990 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிய செலவு செய்யப்பட்ட தொகை ரூபாய் 28.94 இலட்சம் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் 1990—91 ஆம் ஆண்டு திட்டத்தில், தேசிய நெடுஞ்சாலை புறவழிச்சாலைகளுக்கு இணையான போக்குவரத்துச் சாலைகள் அமைக்கவும், மற்றும் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள முக்கியமான நகர்ப்புறச்சாலைகள் அமைக்கவும், கருத்துரு ரூபாய் 12.50 கோடிக்கு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**தேசிய நெடுஞ்சாலையின் நகர்புற இணைப்புகள் :**

மக்கட் தொகை 20,000-மும் அதற்கு மேலும் உள்ள நகர் பகுதி எல்லைக்குள் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலைகள்



தேசிய நெடுஞ்சாலை நகர்ப்பகுதி இணைப்புகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசின் தற்போதைய தகவலின்படி மொத்த தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புபகுதி இணைப்புகளின் மொத்த நீளம் 125.86 கிலோமீட்டராகும்.

இத்தேசிய நெடுஞ்சாலை நகர்ப்பகுதி பராமரிப்பிற்கு ஆண்டொன்றுக்கு ஒரு கிலோமீட்டருக்கு ரூ. 16,000 வீதம் மைய அரசின் நிதி உதவி கிடைக்கிறது. தேசிய நெடுஞ்சாலை நகர்ப்பகுதி இணைப்புகளுக்கு இதற்கு மேல் ஆகும் கூடுதல் நிதியை மாநில அரசு அளிக்கிறது இச்சாலைப் பகுதிகளை தரமான முறையில் பராமரிக்க மேம்பாட்டு வேலைகள் மாநில பகுதி-2 திட்டத்தின் கீழ் கட்டம், கட்டமாக செயலாக்கப்படுகிறது.

இந்த நோக்கத்திற்காக ஏழாவது திட்டத்தில் ரூபாய் 150.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 46.77 இலட்சமும், ரூபாய் 24.23 இலட்சமும், ரூபாய் 40.12 இலட்சமும் மற்றும் ரூபாய் 15.00 இலட்சமும் முறையே 1985—86, 1986—87, 1987—88 மற்றும் 1988—89 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ளது. 1989—90 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 41.00 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 1990 ஆம் ஆண்டு மார்ச்சு முடிய செலவு செய்யப்பட்ட தொகை ரூபாய் 41.16 இலட்சம் ஆகும்.

1988—89 ஆம் ஆண்டில், பரமக்குடி நகர எல்லைக்கு தேசிய நெடுஞ்சாலை எண். 49-ல் கிலோ மீட்டர் 74/94 76/0-ல் உள்ள பகுதியை மேம்படுத்தும் பணி எடுத்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**பழங்குடியினர் பகுதி வளர்ச்சித் திட்டம் :**

சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினரின் முக்கியமாக பழங்குடியினரின் முன்னேற்றம் குறித்து, தனி கவனம் செலுத்த வலியுறுத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலும் பழங்குடியினர் குடும்பங்கள், வறுமைக்கோட்டை கடக்கும் வகையில் ஒட்டு மொத்த திட்டங்கள் தீட்டி துரிதப்படுத்தவும், வலியுறுத்தப்பட்டது. பழங்குடியினர் சமூகப் பொருளாதார சிக்கல்களை சீர்செய்ய வெவ்வேறு உள்ளமைப்பு வசதிகளுக்கு வழி கோலப்பட்டுள்ளது. பழங்குடியினர் பகுதிகள் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் தெரிந்து எடுக்கப்பட்டு அடிப்படை வசதிகள் அளிக்க குறிப்பிட்ட திட்டங்கள் தீட்டப்பட்டன. அவைகளில் சாலைத் தொடர்பே இல்லாத பழங்குடியினர் வாழ் பகுதிகளுக்கு சாலைத் தொடர்பு அளிப்பது தான் முதன்மையானது. ஆகையால் சாலைகள் அமைப்பு மிக முக்கியமான பங்கேற்கிறது.

இத்திட்டத்தின் கீழ் சேலம், திருவண்ணாமலை—சம்புவ
ராயர், வட ஆற்காடு -அம்பேத்கார், தென்னாற்காடு, தருமபுரி
மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில்—பழங்குடியினர்
பகுதிகள் இனங்காணப்பட்டு சாலை வேலைகள் எடுத்து செயல்
படுத்த ப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 1976—77 முதல்
தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

1987—89 ஆம் ஆண்டு இறுதிவரை, 432 கிலோ மீட்டர்
நீளத்திற்கு 31 பணிகள் ரூபாய் 18.28 கோடி செலவில் ஒப்பளிக்
கப்பட்டது. இதில் 19 பணிகள் 258.4 கிலோமீட்டர் நீளத்
திற்கு ரூபாய் 10.14 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.
எஞ்சிய 12 பணிகளில், 10 பணிகள் 160.60 கிலோ மீட்டர்
நீளத்திற்கு ரூபாய் 749 இலட்சம் செலவில் பலதரப்பட்ட நிலை
களில் முன்னேற்றத்தில் உள்ளன. இரண்டு வேலைகள் 13
கிலோமீட்டர் நீளத்திற்கு ரூபாய் 65.00 இலட்சம் செலவில்
இன்னும் எடுக்கப்படாமல் உள்ளன.

1988—89ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு
வேலைகள் செயலாக்க எடுக்கப்பட்டுள்ளன.—

(ரூபாய் இலட்சத்தில்)

1 மேல் சோபனபுரத்தையும், செங்காட்டுப்பட்டி யையும் இணைக்கும் சாலைக்கு தார்வேலை செய்தல். 76.00

2 திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பச்சைமலை குன்றுகளில் 21.00 கிலோ மீட்டர் நீளத்திற்கு மேல் செங்காட்டுப்பட்டி தோனூர் சாலையை அமைத்து மேம்பாடு செய்தல். 143.00

(ரூபாய் இலட்சத்தில்)

நடப்பாண்டான 1989-90-இல் கீழே குறிப்பிட்டுள்ள நான்கு
வேலைகள் ஒப்பளிக்கப்பட்டு செயல்படுத்துவதற்கு வெகு
விரைவில் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

1 சேலம் மாவட்டம், கொல்லிமலையில் குழி வளவு ஒத்தக்கடை சாலை கி.மீ. 9/8-இல் இருந்து செங்கேரி, பவர்காடு, மைகினிகாடு வழியாக நவக்காடு செல்லும் சாலையை அமைத்து மேம்படுத்துதல். கி.மீ. —12/0. 92.70

2 சேலம் மாவட்டம், கல்ராயன் மலையில் கரியார் கோயிலிலிருந்து சூலாங்குறிச்சிக்கு செல்லும் சாலையை மேம்படுத்துதல் (பெரிய பாலம் கட்டுதலும் இதில் அடங்கும்) கி.மீ. 0/0/3—7. 27.00



(ரூபாய் இலட்சத்தில்)

3 சேலம் மாவட்டத்தில், கொல்லிமலையில் சோளக்காடு-செம்மேடு செல்லும் சாலையை மேம்படுத்தலும், சாலையின் வளைவுகளை சரிப்படுத்தலும் மற்றும் குறுக்கு வடிகால் கட்டுதலும் கி.மீ. 0/0/5—0, 35.02

4 தென்னாற்காடு மாவட்டத்தில், கல்ராயன் மலையில், வெள்ளி மலையிலிருந்து சேராப்பட்டு செல்லும் சாலைக்கு கல்பரத்தி தார் வேலை செய்தல் கி.மீ. 0/0/19—2. 128.01

மேற்கூறிய வேலைகளுக்கு விரிவான மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

1989-90ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடு ரூபாய் 162.42 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 1990 ஆம் ஆண்டு மார்ச் முடிய செலவு செய்யப்பட்ட தொகை ரூபாய் 162.23 இலட்சம் ஆகும்.

1990-91ஆம் ஆண்டு பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ், கீழே குறிப்பிட்டுள்ள 5 வேலைகள் 71.60 கி.மீ. நீளத்திற்கு ரூபாய் 555.00 இலட்சத்திற்கு கருத்து தயாரிக்கப்பட்டு அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| தொடர் எண்ணும், வேலையின் பெயரும். (1) | மலையின் பெயர் மற்றும் மாவட்டம். (2) | சாலையின் நீளம். (3) (கி.மீ.) | தொகை (4) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1 வளவந்தி-கொட்டடீடு, சாலையில் கி.மீ. 4/4-ல் இருந்து, கொம்பிதோக்கிரி மனமங்கலம், கூத்த முத்தல், கிளையூர், மாவுத்து, பிள்ளக்கோடு மற்றும் மதூர் வழியாக சின்னமதூர் செல்லும் சாலையை மேம்பாடு செய்தல், கி.மீ. 0/0—18/8. | சேலம் மாவட்டம் ஏற்காடு மலை. | 18.80 | 85.00 |
| 2 வெப்பிலை-முத்தம்பட்டி சாலையிலிருந்து கிருஷ்ண கணூர் மஞ்சநாயக்கன்தண்டா, வேம்ப மருது கருங்காலூர் மற்றும் ராம்டாஸ் தண்டா வழியாக தொப்பயாறு செல்லும் சாலையை் அமைத்து மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0—10/8. | தருமபுரி மாவட்டம் சித்தேரி மலை. | 10.80 | 105.00 |
| 3 சிங்காரப்பேட்டையிலிருந்து புதூர் நாடு செல்லும் சாலை மேம்பாடு செய்தல்—கி.மீ.0/0—22/0. | திருவண்ணா மலை—சம்புவ ராயர் மாவட்டம், ஜவ்வாது மலை. | 22.00 | 185.00 |
| 4 பெரிய பாக்கத்திலிருந்து மயம்போடி மற்றும் கடுன் கால் செல்லும் சாலையை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0—10/0. | சேலம் மாவட்டம், பச்சமலைகுன்று. | 10.00 | 80.00 |
| 5 மணல் ஓடையிலிருந்து தோணூர் சின்ன இலுப்பை, சேக்காடு பெரிய இலுப்பூர் மற்றும் பரத்தால் வழியாக நாகூர் செல்லும் சாலையை அமைத்தல், கி.மீ. 0/0—10/0. | திருச்சிராப் பள்ளி மாவட்டம், பச்சமலை குன்று. | 10.00 | 100.00 |
| மொத்தம் . . | | 71.60 | 555.00 |



**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமே உரியது. இத்திட்டத்தின் நோக்கங்கள் மலை சிற்றூர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துதல், வெவ்வேறு திட்டக் கூறுகளான வேளாண்மை, கால்நடை, வனங்கள், தொழில்கள், சுற்றுலா ஆகியவற்றின் கீழ் செயலாக்கப்படும் இடங்களுக்கு தொடர்பு வழி ஏற்படுத்துதல், சமூக பொருளாதார செயல்களுள்ள ஊர்மையங்களுடன் பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் சிற்றூர்களை இணைத்தல் ஆகியவைகளாகும்.

இத்திட்டம் 1975 முதல் செயலாக்கப்பட்டு வருகிறது. இதுவரை ரூபாய் 1,523.53 இலட்சம் மதிப்பில் 610.26 கி.மீ. நீளமுள்ள 90 வேலைகள் ஒப்பளிக்கப்பட்டது. இதில் ரூ. 958.78 இலட்சம் செலவில் 381.45 கி.மீ. நீளமுள்ள 73 வேலைகள் முடிக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய 17 வேலைகளில் ரூபாய் 194.50, இலட்சம் செலவில், 105.11 கி.மீ. நீளமுள்ள 8 பணிகள் பல தரப்பட்ட நிலையில் முன்னேற்றத்தில் உள்ளது மற்றும் 9 வேலைகள் நீக்கப்பட்டு விட்டன.

இத்திட்டத்தின் கீழ் கீழே குறிப்பிட்டுள்ள முக்கிய பணி எடுத்துச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.—

(1) ஊட்டி-கோத்தகிரி-மேட்டுப்பாளையம் சாலையில் முழு வழித் தடத்திற்கு மறுபடியும் மேற்பரப்பு அமைத்தல் கி.மீ. 0/0-58/0.

1988-89ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் சேம்பாடியிலிருந்து எருமாடு செல்லும் சாலையை கி.மீ. 0/0-15/0 வரை மேம்பாடு செய்வதற்கு ரூபாய் 32.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்டு எடுத்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டான 1989—90ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூபாய் 80.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 1990 மார்ச் மாதம் வரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 80.35 இலட்சம் ஆகும்.

1990—91ஆம் ஆண்டு திட்டத்திற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 2.66 கோடிக்கு கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தித் திட்டம் :**

இத்திட்டத்தின் நோக்கம், தமிழ்நாட்டில் மேற்கு மலைத் தொடர் பகுதியில் மலைவிளை பொருள்களை மலையிலிருந்து கீழே வணிக வாய்ப்பிற்காக கொண்டு செல்ல, சாலைத் தொடர்பு

ஏற்படுத்துதலாகும். இத்திட்டம், கோவை, மதுரை, திண்டுக்கல்-காயிதேமில்லத், காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயல் முறையிலுள்ளது.

15 வேலைகள் இத்திட்டத்தின் கீழ் செய்ய ஒப்பளிக்கப்பட்டுள்ளன. 1988–89ஆம் ஆண்டு தர்மாத்துப்பட்டியிலிருந்து ஆடலூர் செல்லும் 21.00 கி.மீ. நீளமுடைய சாலையை அமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 60.00 இலட்சம் செலவிலும் மற்றும் கும்பக்கரையிலிருந்து வெள்ளக்கவி செல்லும் சாலையில் கி.மீ. 17/4 இல் ஒரு பாலம் ரூபாய் 10.00 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

1988–89ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில், மேலபுரம் ஒன்றியத்தில் பாகோடு சிற்றூரில், கடம்பக் கோடில் முல்லை ஆற்றில் குறுக்கே பாலம் கட்டும் பணி ரூபாய் 27.50 இலட்சம் செலவில் ஒப்பளிக்கப்பட்டு எடுத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1990–91ஆம் ஆண்டு திட்டத்தில், இத்திட்டத்தின் கீழ் வேலைக்கு 32.00 கிலோமீட்டர் நீளத்திற்கு ரூபாய் 116.30 இலட்சத்திற்கு கருத்துரு அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது அவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—



| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். (1) | மாவட்டம் மற்றும் மலையின் பெயர். (2) | நீளம். (3) (கிலோ மீட்டரில்.) | தொகை. (4) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1. பெருமான் மலையிலிருந்து அடுக்கம் செல்லும் கி.மீ. 0/0-12/8 நீளமுள்ள சாலையை சரளை கற்கள் மற்றும் தார் போட்டு மேம்பாடு செய்தல். | திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம். | 12.80 | 47.30 |
| 2. கருங்கானியிலிருந்து கோட்டக்குடி செல்லும் கி.மீ. 0/0-4/0 நீளமுடைய சாலையை அமைத்து மேம்பாடு செய்தலும் மற்றும் கோட்டக்குடி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதலும் உட்பட. | மதுரை மாவட்டம். | 4.00 | 34.00 |
| 3. இராஜபாளையம்-செண்பகத்தோப்பு சாலையில் கி.மீ. 5/6 ல் பிரிந்து விரியன் கோயில் ராக்காச்சி அம்மன் கோயில் சாலையில் இணையும் சாலையின் நீளம் கி.மீ. 0/0/6/8. | காமராசர் மாவட்டம். | 6.80 | 10.00 |
| 4. புலியங்குடியிலிருந்து-மனைக்கவுடையார் கோவில் செல்லும் கி.மீ. 1/6-9/0 நீளமுடைய சாலையை அமைத்தல். | திருநெல்வேலி கட்டபொம்மன் மவட்டம். | 7.40 | 20.00 |
| 5. கோயம்புத்தூர்-திண்டுக்கல் சாலையில் இருந்து பிரிந்து மக்கினாம்பட்டி கிராமத்திற்கு செல்லும் கி.மீ. 0/0-1/0 நீளமுடைய சாலையை மேம்பாடு செய்தல். | கோயம்புத்தூர் மாவட்டம். | 1.00 | 5.00 |
| மொத்தம் .. | | 32.00 | 116.30 |

[1990 மே 2

இத்திட்டத்திற்கு 1989—90 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூபாய் 25.12 இலட்சம் ஆகும். இதில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய செலவு செய்யப்பட்ட தொகை ரூபாய் 25.13 இலட்சம் ஆகும்.

தேசிய நெடுஞ்சாலை— 45 :

தேசிய நெடுஞ்சாலை எண். 45 ''சென்னை, திருச்சிராப்பள்ளி திண்டுக்கல் சாலையாகும்''. இது முன்னர் தென்னக பெருஞ்சாலை என அழைக்கப்பட்டது. இச்சாலை தமிழகத்தின் தலைநகரான சென்னையின் தெற்கு பகுதியிலுள்ள பெருநகரங்களான திருச்சிராப்பள்ளி மற்றும் திண்டுக்கல் ஆகியவற்றினை இணைக்கிறது. இச்சாலை தமிழ்நாட்டில் தென்பகுதிக்குச் செல்லும் மிக முக்கிய சாலையாகும். 421.6 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலை எண். 45, சென்னை நகரத்தின் தலையான பகுதியில் தொடங்கி திண்டுக்கல்லில் முடிவடைகிறது. இது செங்கை-அண்ணா, தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி மற்றும் திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்டங்களின் வழியாகச் செல்கிறது. தாம்பரம், செங்கற்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களினூடே செல்கிறது.

1. உலக வங்கி உதவித் திட்டத்தின் கீழ் செயலாக்கப்படும் பணி :

தேசிய நெடுங்சாலை எண். 45-இல் உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும் இத்திட்டம், தற்போது கி.மீ. 27/8 முதல் கி.மீ. 160/2 வரை (தாம்பரம் முதல் விழுப்புரம் வரை) உள்ளப்பகுதியினைச் சார்ந்ததாகும்.

இத்திட்டத்தின்கீழ் செயலாக்கப்படும் இப்பகுதியில், போக்குவரத்து அளவு மற்றும் இதர இனங்களான பொருளாதார குறியீடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு 132.4 கி.மீ. நீளத்திற்கு (கி.மீ. 27/8 முதல் 160/2 வரை) சாலை மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கி.மீ. 27-8 முதல் 67-0 வரையிலான பகுதியினை இருவழிப்பாதையிலிருந்து நான்கு வழிப் பாதையாக அகலப்படுத்தப்பட்டும், கி.மீ. 67/0-விருந்து 160/2 வரையிலான பகுதியினை அகலப்படுத்தி பலப்படுத்தி இருவழிப் பாதையான 7.5 மீட்டர் அகலத்திற்குக் கொண்டு வருவதுடன், சாலையின் இருபகுதியிலும் 2.5 மீட்டர் அகலத்திற்கு ஓரத்தினை கடினமாக்கும் பணியும் செயலாக்கப்பட்டு வருகிறது.

தேசிய நெடுஞ்சாலை எண். 45 கி.மீ. 27/8 முதல் 160/2 வரை பலப்படுத்துவதற்கும் அகலப்படுத்துவதற்கும் நில ஆர்ஜிதம் உள்பட ரூ. 54.11 கோடிக்கு உலக வங்கி மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. இந்திய அரசு இப்பணிக்கு 72.29 கோடித் திருத்திய மதிப்பீடு அளித்துள்ளது. இதன் விவரங்கள் பின் வருமாறு :—



1990 மே 2]

| வரிசை எண்ணும் விவரமும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) (ரூபாய் கோடியில்.) | திருத்திய மதிப்பீட்டுத் தொகை. (3) (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| 1. கி. மீ. 27/8 முதல் 160/2 வரை நிலம் கையகப்படுத்துதல் .. | 2.71 | 3.8082 |
| 2. கி.மீ. 27/8 முதல் கி.மீ 54/4 வரை தற்போதைய இருவழிப் போக்குவரத்துப்பாதையை நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் (தொகுப்பு-1) | 13.94 | 19.8018 |
| 3. கி.மீ. 54/4 முதல் கி.மீ.67/0 வரை தற்போதைய இருவழிப் போக்குவரத்துப் பாதையை நான்கு வழிப் பாதையாக அகலப்படுத்துதலும் பலப்படுத்துதலும் மற்றும் செங்கற்பட்டு புறவழிச்சாலை அமைத்தல் (தொகுப்பு-2) .. .. .. .. .. | 8.73 | 14.4178 |
| 4. பாலாற்றின் குறுக்கே கி.மீ. 62/4-5-இல் பாலம் அமைத்தல் இருபுறமும் அணுகு சாலையை அமைத்தல் (தொகுப்பு-3) .. .. | 2.87 | 3.728 |
| 5. தாம்பரம், பரனூர் மற்றும் செங்கற்பட்டு புறவழிச்சாலையின் இரயில் மேம்பாலம் அமைத்தல் (தொகுப்பு-4) .. .. .. | 2.57 | 3.2313 |
| 6. கி.மீ. 67/0 முதல் கி.மீ. 104/9 வரை தற்போது உள்ள போக்குவரத்துப் பாதையினை அகலப்படுத்துதலும், உறுதிப்படுத்துதலும் மற்றும் கிள்ளியாற்றின் குறுக்கே கி.மீ. 79/4 இல் ஒரு பாலம் கட்டுதல் (தொகுப்பு-5) .. .. .. .. .. | 10.00 | 12.4057 |
| 7. கி.மீ. 104/0 முதல் 160/2 வரை தற்போது உள்ள போக்குவரத்துப் பாதையை அகலப்படுத்துதலும் உறுதிப்படுத்துதலும் மற்றும் கி.மீ. 123/4, 124/8இல் சிறு பாலம் அமைத்தல் (தொகுப்பு-6) .. | 13.29 | 14.90 |
| மொத்தம் | 54.11 | 72.2928 |

நிலம் — கையகப்படுத்துதல் :

தொகுப்பு-1 மற்றும் 2-க்கு 149,17 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துதல் மற்றும் 160.10 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தை உடைமை மாற்றுதல் ஆகியன செய்யப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது. தொகுப்பு 5 மற்றும் 6-க்கு நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது.

தொகுப்பு-1 மற்றும் -2 (தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் கி.மீ. 27-8 முதல் 67-0 வரை)—

இந்த இரு தொகுதிகளும் பம்பாயைச் சேர்ந்த திருவாளர்கள் ஆப்கானீஸ் டாலிங் கூட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரரின் உடன்படிக்கை அக்டோபர் 1989 இல் ஏற்கப்பட்டுள்ளது. பணித்தளம் 15—11—1989-இல் ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் நவம்பர் 1992-இல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தொகுப்பு-3 :

தேசிய நெடுஞ்சாலை எண். 45-இல் கி.மீ. 62/4-5ன் இல் பாலாற்றின் குறுக்கே ஒரு பெரும் பாலம் கட்டும் பணி இத் தொகுப்பில் அடங்கும். பாலாற்றின் குறுக்கே தற்போது கட் டப்பட் டிருக்கும் பாலத்திற்கு 25 மீட்டர் தள்ளி இப்புதிய பாலம் கட்டப்பட்டுள்ளது. புதிய பாலத்திற்கான கண்களின் எண் ணிக்கை தற்போது உள்ள பாலத்திற்குரிய கண்களின் எண்ணிக் கைக்குச் சமமாகவே அமைக்கட்டுள்ளது. இது தவிர, பாலத் தின் இரு பக்கமும் பாதசாரிகள் நடந்து செல்ல பாதை அமைக் கப்பட்டுள்ளது. இப்பாலப்பணி உத்திரப்பிரதேச மாநில பாலம் கட்டும் கழகத்திடம், ரூ.309 இலட்சம் மதிப்பிற்கான ஒப்பந்தப் புள்ளிக்கு அளிக்கப்பட்டு பால வேலைகள் முழு அளவில் டிசம்பர் 1989 இல் முடிக்கப்பட்டது.

தொகுப்பு-4 :

இதன் கீழ் தாம்பரம், பரனூர் மற்றும் செங்கற்பட்டில் இரல்வே மேம்பாலம் அமைக்கும் பணிகள் தென்னக ரெயில்வே துறையினரால் வைப்புத் தொகைப் பணியாக எடுத்துச் செய்யப் பட்டது. முடிக்கப்பட்ட வேலைகளின் விபரம் பின்வருமாறு ;

(1) தாம்பரம் இரயில் பாலம்— 100 சதவீதம்.

(2) பரனூர் இரயில் பாலம்—100 சதவீதம்.

(3) செங்கர்படடு புறச்சாலை இரயில் பாலம்—98 சதவீதம்.





நிலுவையில் உள்ள பணிகள் 1990 மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்படும், என எதிர்பார்க்கப்படுகிறது.

தொகுப்பு-5 :

கி.மீ. 6/70 முதல் 104/0 வரையிலான 37 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணி இதனுள் அடங்கும். தற்போதுள்ள போக்குவரத்துப்பாதையினை அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துவதோடு கி.மீ. 76/8-இல் ஒரு சிறுபாலம் அமைத்தல், கி.மீ. 79/4-ல் கிள்ளியாற்றின குறுக்கே ஒரு பெரும் பாலம் அமைத்தல் மற்றும் 32 வாராவதிகள் அமைப்பது இத்தொகுப்பில் அடங்கும்.

தற்போது 6.7 மீட்டர் அகலப்பாதையினை 7.5 மீட்டர் நீளத்திற்கு அகலப்படுத்துதலும், சாலையின் இரு பகுதிகளிலும் 2.5 மீட்டர் அகலத்திற்கு ஓரத்தினை கடினமாக்குவதும் இதனுள் அடங்கும்.

இப்பணிகள் பம்பாயைச் சேர்ந்த திருவாளர்கள் அட்லாண்டா கட்டுமான கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடந்தேறி வருகின்றன. 31.6 கி.மீ. நீளத்திற்கு சாலையை அகலப் படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் பணிகள் முடிக்கப்பட் டுள்ளன. மேலும் 32 வாராவதிகளுக்கு 30 வாராவதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இப்பணியை 1990 ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்கப்படுவதற்கு திருத்திய வேலைத் திட்டம் பெறப்பட்டுள்ளது.

தொகுப்பு-6 :

கி.மீ. 104/0 முதல் 160/2 வரையிலான 56.2 கி.மீ. நீளமுள்ள சாலை இத்தொகுப்பினுள் அடங்கும். தற்போதுள்ள 6.7 மீ. அகலமுள்ள சாலையினை 7.5 மீ. அகலமுள்ள சாலையாக, மேம்படுத்துவதிலும் மற்றும் உறுதிப்படுத்துதலும் சாலையில் இரு பகுதியிலும் 2.5 மீ. அகலத்திற்கு ஓரத்தினை கடினமாக்குவதோடு கி. மீ. 123/4 மற்றும் 124/8-இல் இரு பாலங்கள் அமைப்பதோடு 28 வாராவதிகள் அமைப்பதும் இதனுள் அடங்கும். இப் பணிகள் பம்பாயில் உள்ள அட்லாண்டா கட்டுமான கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடந்தேறி வருகின்றன.

41.272 கி.மீ. சாலையைப் பகுதி அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்தும் பணிகள் முடிக்சப்பட்டுள்ளன. 27 தாம்போகிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதரப் பணிகள நடந்தேறி வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் 1990 மே மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டு அதற்கான திருத்திய வேலைத்திட்டம் பெறப்பட்டுள்ளது.

2. புதிய திட்டங்களுக்கான பிரேரணை :

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி தேசிய நெடுஞ்சாலை-45 இல் எஞ்சியுள்ள சாலைப்பகுதிகளை மேம்பாடு செய்வதற்கான திட்டங்கள் இந்திய அரசுக்கு தமிழ்நாடு மாநில அரசு மூலமாக உலக வங்கி உதவியின்கீழ் எடுத்துச் செய்ய பிரேரணைத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது.

| | உத்தேச மதிப்பு (கோடியில்). |
|---|---|
| 1. கி.மீ.67/0 முதல் 160/2 வரை தேசிய நெடுஞ்சாலை எண். 45-இல் கூடுதல் நான்கு வழிப் பாதை அமைத்தல் .. .. .. | 62.62 |
| 2. கி.மீ.160/2 முதல் 314/5 வரை தேசிய நெடுஞ்சாலை-45 இல் 7.5 மீ.அகலத்திற்குக் கொண்டு வந்து பலப்படுத்துதல் .. .. .. | 68.00 |
| 3. கி மீ 160/2 முதல் 314/5 வரை நான்கு வழிப் பாதையாக அகலப்படுத்துதல் .. .. | 127.00 |
| மொத்தம் .. | 257.20 |

ஊரகச் சாலைகள் திட்டம்:

மாவட்ட வாரியங்கள் கலைக்கப்பட்ட பிறகு ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்படுத்தப்பட்டன. மிகக் குறைந்த நிதி நிலையைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்களில் சாலைப் பராமரிப்பினை செய்ய இயலவில்லை. எனவே ஊரகச் சாலைகள் திட்டம் என்ற பெயரில் 1972-73 ஆம் ஆண்டிலிருந்து அரசு அங்கீகாரம் பெற்று ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 1,500-க்கும் மேற்பட்ட ஜனத்தொகை கொண்ட கிராமங்கள் 100 சதவீதத்தினையும் 1,000-லிருந்து 1,500 வரையிலுள்ள மக்கட் தொகை கொண்ட கிராமங்களில் 50 சதவீதத்தினையும் தார் சாலைகள் மூலம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டான 1990-ஆம் ஆண்டுக்குள் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பொதுவாக ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்ட சாலையின் அளவிற்கு மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்படும். தற்சமயம் சாலை அமைப்பு மற்றும் தேவையினைப் பொறுத்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மேம்பாடு செய்யப்படும் சாலைகள் முடிவுற்றதும் பராமரிப்பிற்கு அரசு சாலையாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இருந்தாலும் சில இடங்களில் அதாவது கடற்கரை பகுதிகள் பழங்குடிகள் வசிக்கும் இடம் ஆலைகள் உள்ள இடம், பிற்பட்டோர் வசிக்கும் பகுதி ஆகிய இடங்களில் மக்கள் தொகை



சிதறுண்டு இருப்பதால் விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. இந்த மாதிரி இடங்களில் கூட்டு மக்கள் தொகை 1,500 அல்லது பல குடியிருப்பு பகுதிகள் சேர்ந்த மக்கள் தொகை 1,500 எனவும் கிராமங்கள் 1.00 கி.மீ. வட்டத்திற்குள் இருக்கும் பகுதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் உள்ள 1,500 மக்கள் தொகையும் அதற்கு மேலும் உள்ள அனைத்து கிராமங்களும் மக்கள் தொகை 1,000-1,500 உள்ள கிராமங்களில் பாதியளவும் ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பாதியளவும் அதாவது 31—3—1990 இறுதியில் பருவ கால சாலையில் இணைக்கப்படும் என்று இந்திய அரசு எதிர்நோக்குகிறது.

1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 3,762 கிராமங்கள் 1,500-ம் அதற்கு மேல் மக்கள் தொகை உடையதாகவும் 2,568 கிராமங்கள் மக்கள்தொகை 1,000-ம் முதல் 1,500 வரை உள்ளதாகவும் 16,717 கிராமங்கள் மற்றும் குடியிருப்புகள் மக்கள் தொகை 1,000-க்கு குறைவாகவும் உள்ளனவாகும்.

இதுவரை ஊரகச் சாலை திட்டத்தின் கீழ் ஆறாம் கட்டப் பணிகள் வரை தமிழ்நாட்டில் 5,890 ச.கி.மீ. நீளம் சாலைகள் ரூ. 62.15 கோடி செலவில் 31—3—1985 வரை அமைக்கப்பட்டுள்ளன. இதன் விவரம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி உள்ளன.

| வருடம். | செலவு செய்தது. (ரூபாய் இலட்சத்தில்). | சாலையின் நீளம். (கி.மீ.) |
|---|---|---|
| 1972—73 | 286.85 | 113 |
| 1973—74 .. .. | 325.01 | 701 |
| 1974—75 .. .. .. | 333.95 | 1,001 |
| 1975—76 .. .. .. | 302.96 | 709 |
| 1976—77 .. .. .. | 293.92 | 341 |
| 1977—78 .. .. .. | 283.77 | 172 |
| 1978—79 .. .. | 392.88 | 228 |
| 1979—80 .. .. .. | 388.97 | 127 |

| வருடம். | செலவு செய்தது. (ரூபாய் இலட்சத்தில்.) | சாலையின் நீளம். (கி.மீ.) |
|---|---|---|
| 1980—81 | 693.31 | 510 |
| 1981—82 | 801.08 | 510 |
| 1982—83 | 1,135.26 | 500 |
| 1983—84 | 1,144.96 | 500 |
| 1984—85 | 833.46 | 478 |
| | 6,215.08 | 5,890 |

ஏழாம் கட்டத்தில் 1,650.30 கி.மீ. சாலைகளை மேம்பாடு செய்ய ரூ. 2,808.30 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

ஏழாம் திட்ட பணியில் இதுநாள் வரை திட்டமும் நிர்வா செலவுகளும் கீழ்க்கண்டபடி உள்ளன:—

| வருடம். (1) | செலவினங்கள் (இலட்சம்.) (2) | சாலை நீளம் (கி.மீ.) (3) |
|---|---|---|
| 1985—86 | 682.24 | 250 |
| 1986—87 | 713.00 | 251 |
| 1987—88 | 941.00 | 251 |
| 1988—89 | 961.00 | 571 |
| 1989—90 | 980.00 | 436 |
| | 4,277.24 | 1,759 |



1990—91 ஆம் ஆண்டின் வருடாந்திர திட்டத்தில் கீழ்க்கண்ட விபரப்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. கிராமச் சாலைத் திட்டம் | 1,080.00 |
| 2. சிறப்பு உறுப்புத் திட்டம் | 250.00 |
| 3. இயக்கம் மற்றும் நிர்வாகச் செலவு | 330.00 |
| | 1,660.00 |

எட்டாம் திட்ட பணிகளுக்கு ரூ. 100 கோடிக்கு தொகுப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசின் அனுமதிக்கு அனுப்பப்படும் மேற்கண்ட தொகுப்பு திட்டத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கிராமச் சாலைகள் சிறப்பு உறுப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு அதிலிருந்து வேலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசின் அனுமதி பெறப்படும். 1990—91 ஆம் ஆண்டில் கிராமச்சாலைத் திட்டத்திற்கு ரூ. 22.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**இணைப்புச் சாலைகள் அமைப்பதில் சாதனை :**

ஏழாம் திட்டத்தின் ஆரம்பத்தில் 3,762 கிராமங்கள், 1500-ம் அதற்கு மேலும் உள்ள மக்கட் தொகை உள்ள கிராமங்களில் 2,498 கிராமங்கள் சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஏழாம் திட்ட காலத்தில் திட்டமிட்டபடி 1,264 கிராமங்கள் மேற் கண்ட மக்கள் தொகையுள்ள கிராமங்களுக்கு இணைப்புச்சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,000-1,500 உள்ள கிராமங்களின் எண்ணிக்கை 2,568 ஆகும். 6 ஆம் திட்டத்தின் முடிவிலும், 7 ஆம் திட்ட காலத்தில் துவக்கத்திலும் 911 கிராமங்கள் கிராமச்சாலைத் திட்டத்தின் மூலம் இணைப்பு வழங்கப்பட்டது. ஏழாம் திட்டத்தின் இறுதியில் 457 கிராமங்களுக்கு இணைப்பு வழங்கப்பட வேண்டும்.

ஏழாம் திட்டத்தின் துவக்கத்தில் மக்கள் தொகை 1000-ம் அதற்கு குறைவாக உள்ள இணைப்பு வழங்கப்படவேண்டிய எண்ணிக்கை 9,802. 7 ஆம் திட்ட காலத்தில் 2,188 கிராமங்களுக்கு மேற்கண்ட மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் வழங்கப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின்படி, 8 ஆம் கால திட்ட பணியின் ஆரம்பத்தில் 4,721 கிராமங்கள் இணைப்புச் சாலை வசதிகள் செய்ய வேண்டியதாக இருக்கும்.

எட்டாம் கால பணி : [1990 மே 2

1971 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 8 ஆம் ஐந்தாண்டு திட்டத்தில் இணைப்புச் சாலை செய்து வரவேண்டிய கிராமங் களுக்கு வருமாறு :—

| | |
|---|---|
| 1500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகை உள்ள கிராமங்கள். | இல்லை. |
| 1000-ம் முதல் 1,500 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்கள். | 457 |
| மக்கள் தொகை 1,000த்திற்கு குறைவாக உள்ள கிராமங்கள். | 4,721 |

எல்லா கிராமங்களுக்கும் சமபருவச் சாலைகள் அமைக்கும் பணி 1 கிராமத்திற்கு தோராயமாக 3.00 கி.மீ என்று கொண் டால் 15,534 கி. மீ நீளம் ஆகும். இதற்கு 1.கி.மீ சாலைக்கு செலவு தொகை சுமார் ரூ 4.00 இலட்சம் என்று கணக்கிட்டு தேவையான தொகை ரூ. 621.36 கோடியாகும்.

எட்டாம் திட்டப்பணி காலத்தின் மீதம் உள்ள 457 கிராமங்கள் 1,000 முதல் 1,500 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு முழுமையாக சாலை வசதி செய்து கொடுத்தால் இந்த தரத்தின் சாதனை 10 விழுக்காடு பூர்த்தியாகும்.

## சிறப்பு உறுப்புத் திட்டம் :

ஆதி திராவிட மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற் காக 1980—81 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1000-க்கும் மேற் பட்ட மக்கள் தொகை கொண்ட ஆதி திராவிடர் குடியிருப்பு களுக்கு எல்லாப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுகின்றது. 1986-87 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்திற்கென, தனி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. 1987—88 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 66 இலட்சங் கள் தனி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 130 இலட்சம் மொத்த செலவிலான 75 கி.மீ. நீள 22 சாலைப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. 1988-89 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில், இத்திட்டத்திற்கென ரூ. 66 இலட்சம் ஒதுக்கப்பட்டது. திருத்திய மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 66 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது 1987-88 ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப் பட்ட 22 பணிகளில் எஞ்சிய பணிகள் 1988-89 ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்பட்டன.



1990 மே 2]

இந்த திட்டத்திற்கு 1988-89 இல் புதிய பணிகளுக்காக நிர்வாக ஒப்பளிப்பு அரசினால் வழங்கப்பட வில்லை. 1-4—88 இல் ரூ. 71.17 இலட்சங்களுக்கு நிலுவையிலுள்ள பணிகளை செயல்படுத்தி முடித்திடுமாறு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறைக்கு அரசு அறிவுரை வழங்கி நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது, 1988-89இல் ரூ. 66.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ. 65.90 இலட்சங்கள் செலவிடப்பட்டது. பெரும்பாலும் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டிருக்கின்றன.

1989-90 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 66.00 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. 1989-90 இல் 46 கி.மீ. சாலையினை மேம்பாடு செய்வதற்கு ரூ. 128.10 இலட்சம் மதிப்பி லான 12 பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டிற்கு சிறப்பு உறுப்புத் திட்டத்திற்கு ரூ. 2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பேருந்து தடச்சாலை ஏற்புத் திட்டம் :

இத்திட்டம் பேருந்து செல்லும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் குறிப்பிட்ட காலக் கட்டங்களில் எடுத்து மேம்பாடு செய்து ஊராட்சி மன்றங்கள் மேற்படி சாலைகளை பராமரிக்கும் சுமையிலிருந்து விடுவிக்க ஏற்படுத்தப்பட்டது. இத் திட்டம் 1960-61 முதல் செயல் பட்டு வருகிறது. 1960-61 முதல் 1973-74 வரை உள்ள காலக் கட்டத்தில் 12,500 கி.மீ. நீளத்திற்கு ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு அரசால் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட் டுள்ளது. இத்திட்டம் 1974 முதல் 1979 வரை நிறுத்தி வைக்கப்பட்டது. இத்திட்டம் 1979—80 ஆம் ஆண்டுகளில் மீண்டும் உயிரூட்டப்பட்டது. 1979—80 முதல் 1988—89 வரை 12,976 கி.மீ. நீளத்திற்கு பேருந்து தட திட்டத்தின் மேம்பாடு செய்யும் பணிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

1989—90 ஆம் ஆண்டில் 168 வேலைகளுக்கு 422.125 கி.மீ நீளத்திற்குச் சாலைகள் மேம்பாடு செய்ய அரசு அங்கீ காரம் அளித்துள்ளது. 1989—90 ஆம் ஆண்டுக்கு ரூ 10.00 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மார்ச்சு 1990 வரை இவ் வேலைகளுக்கு ரூ. 1001.00 இலட்சங்கள் செலவிடப் பட்டுள்ளது.

1990-91-ல் ஆண்டிற்கு ரூ. 12.50 கோடிக்கு நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. 31—3—1986 முடிய பேருந்துகள் செல்லும் சாலைகள் மேம்பாடுகள் செய்ய திருத்திய திட்ட தொகுப்பு 3946 கி.மீ நீளத்திற்கு அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது.

பொருளாதார பன் மாநில முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் குறித்த நிலை/தரம் :

பொருளாதார பன் மாநிலம் முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள், பாலங்கள் அமைக்கும் இத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கிறது. இது மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டமாகும். இத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு மட்டுமே மத்திய அரசு ஒப்புதலை அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் பணிகள் நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து நடைமுறையில் உள்ளது.

கீழ்க்காணும் வகையைச் சேர்ந்த சாலைகள், பாலங்கள் இத்திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படத் தகுதியுடையவையாகும்

(1) நேர் போக்குவரத்திற்கு அவசியமாகின்ற பன் மாநிலத் தொடர்பு வாய்ந்த சாலைகள்.

(2) அண்மைக் காலத்தில் இருப்புப் பாதைகள் அமைக்க முடியாத தொடர்பு வாய்ந்த புதிய புறப் பகுதிகளை இணைக்கும் சாலைகள் மற்றும் பாலங்கள்.

(3) அதிகமான கனிவளம் மலைத் தோட்டம் மிக்க பகுதிகளிலும் சம வெளிப் பகுதிகளிலும் விரைவாக பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமாக உதவக் கூடிய சாலைகளும் பாலங்களும்.

சாதனை :

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலம் 1970—75;—

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1969-74) கிழக்குக் கடற்கரைச் சாலையில் ரூ. 392.00 இலட்சங்கள் செலவில் 38 பாலங்கள் மத்திய அரசு அளித்த ரூ. 261.00 இலட்சங்கள் கடனுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலம் (1975-1980):—

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2 பணிகள் மத்திய அரசு அளித்த ரூ 60-00 இலட்சங்கள் கடனுதவியுடன் மேற் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட இரண்டு பணிகளுடன் ''திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப் பாறை-துறையூர் சாலையில் முசிறியையும் குளித்தலையையும் இணைத்து காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தை (தந்தை பெரியார் பாலம்) கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு ரூ 139.00 இலட்சங்கள் செலவில் முடிக்கப்பட்டுள்ளது.



ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலம் (1980-1985).—

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மாநிலப் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ் கிழக்குக் கடற்கரைச் சாலையில் நாகப்பட்டினத்திலிருந்து கன்னியாகுமரி வரை சில பகுதிகளில் ரூ 300.82 இலட்சங்கள் செலவில் 68.40 கி.மீ. நீளமுள்ள சாலை மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றவும், 17 பாலப் பணிகளை நிறைவேற்றவும் மத்திய அரசு ஏற்பளித்துள்ளது.

மேற்சொன்ன பணிகளின் மூன்று பாலப் பணிகளைத் தவிர அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள அப்பணியின் செயலாக்கம் முன்னேற்றத்திலுள்ளது. இப் பணியும் விரைவில் முடிக்கப்பட்டு விடும்.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலம் (1985-1990).—

மத்திய பிரிவு சாலைகளின் பிரிவு திட்டத்தின் கீழ் கடனாகக் கொடுக்க வேண்டிய நிதி ஆதாரங்கள் வரையறுக்கப்பட்டு விட்டதனால் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் ஏழாம் திட்டக் காலத்தில் எடுக்கப்படவில்லை என மத்திய அரசு தெரிவித்திருக்கின்றது.

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலம் (1990-1995).—

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலப் பணியாக பாண்டிச்சேரி, கிருஷ்ணகிரி சாலையை (மாநில எல்லை முடிய) மேம்பாடு செய்தல் பணியாவது மதிப்பீடு தொகை ரூ. 10.00 கோடிகளுக்கான கருத்துருவுடன் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டுள்ளது. இதற்கான மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகின்றது.

கிழக்குக் கடற்கரைச் சாலை :—

கிழக்குக் கடற்கரைச் சாலை சென்னையையும் கன்னியாகுமரியையும் கடற்கரை ஓரமாக இணைக்கும் ஒரு முக்கிய சாலையாகும். இச்சாலை செங்கை-அண்ணா, தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் வழியே செல்கிறது. சாலையின் நீளம் 737 கி.மீ இந்தச் சாலை மேம்பாடு செய்த பிறகு தேசிய நெடுஞ்சாலை ஐந்தையும் (சென்னை-கல்கத்தா சாலை) தேசிய நெடுஞ்சாலை ஏழையும் (சேலம், கொச்சி, கன்னியாகுமரி சாலை) இணைக்கும் மற்றும் தேசிய நெடுஞ் சாலை 45-ல் போக்குவரத்து நெரிசலை அகற்றும்.

737 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையை முழுவதும் மேம்பாடு செய்யத்தக்க முகாந்திரம் உள்ளது. எனினும் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு கி.மீ. 11/8 முதல் 178/4 வரை திருவான்மியூருக்கும் கடலூருக்கும் இடைப் பட்ட கிழக்குக் கடற்கரைச் சாலையை மட்டும் மேம்பாடு செய்ய 24.47 மில்லியன் டாலர்கள் (அல்லது ரூ. 36.70 கோடி) கடனுதவி அளிக்க ஆசிய வளர்ச்சி வங்கி முன் வந்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் மணிலாவில் 27—12—1988 அன்று மத்திய அரசுக்கும் ஆசிய வளர்ச்சி வங்கிக்கும் இடையே முடிவாகியது.

தமிழக அரசு ஆணை எண். 2297, பொதுப் பணி, நாள், 15-11-1989-ல் இத் திட்டத்தை செயல்படுத்த ரூ. 53.00 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் இரு பகுதிகள் அடங்கியது.

| | |
|---|---|
| தொகுதி 1 கி.மீ. 11/8—95/0 | ரூ. 27.50 கோடி. |
| தொகுதி 2 கி.மீ. 95/0—178/4 | ரூ. 22.50 கோடி |

இந்தத் திட்டத்தின்படி தற்போதுள்ள சாலை வலுப்படுத்தி 7.00 மீ. அகலமுள்ள இருவழி தடச்சாலையாக தேசிய நெடுஞ்சாலை தரத்திற்கு மேம்பாடு செய்யப்படும் எட்டு பாலங்களும் 245 சிறுபாலங்களும் திருத்திக் கட்டப்படும்.

ஒப்பந்தக்காரர்கள் தகுதிப்படுத்தப்பட்டுள்ளார்கள் 1990 ஆம் ஆண்டு ஜூலையில் ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப் பட்டு அதன் பின் ஓரிரு தினங்களில் திட்டப்பணி செயலாக்க துவங்கப்படும். இந்தத் திட்டத்தை நான்கு ஆண்டுகளில் முடிக்க கருதியுள்ளது.

1990-91 ஆம் ஆண்டு திட்டக் காலத்திற்கு ரூ. 520 இலட்சம் நிதி கேட்கப்பட்டுளள்து.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்;

நெடுஞ்சாலை ஆராயுச்சி நிலையம் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் ஒரு பிரிவாக 1957 ஆம் ஆண்டு, டெல்லியில் அமைந்துள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையத் திற்கு ஒப்ப, ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி நிலையம், தமிழ் நாட்டில் அமைந்துள்ள சாலைகள், பாலங்களுக்கான புலனாய்வு கட்டுமானம், பராமரிப்பு தொடர்பாக செயல் முறை சார்புடைய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு செயல்படுகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் சாலை மற்றும் பாலங்கள் அமைப்பதில் ஏற்படும் செலவுகளை சிக்கனப்படுத்தும் வகையில் அறிவியல் அடிப்படையில் ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டு நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துகிறது.



நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் செயல் திட்டங் களை நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

(அ) மண் மற்றும் அடித்தளம் பொறியியல்.

(ஆ) கற்கலவை மற்றும் கட்டுமானம்.

(இ) நிலக்கீல் மற்றும் சரளைக் கற்கள்.

(ஈ) போக்குவரவு மற்றும் போக்குவரத்து.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை உயர்த்தும் பொருட்டு பொருடகளை சோதனை செய்வதற்காக தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூரிலும் மண்டல ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், சேலம், கடலூர் சென்னையில் மண்டல ஆய்வகங்கள் நிறுவ திட்டமிடப்பட்டுள் ளது.

1989—90 ஆம் ஆண்டில் இரண்டு ஆராய்ச்சி திட்டங்கள் முடிவு பெற்றன. இவ்வாண்டில் மேற் கொள்ளப்பட்ட குறிப் பிடத்தக்க ஆராய்ச்சி வேலைகள் மற்றும் 1990—91-ல் மேற் கொள்ளவிருக்கும் பணிகளின் விவரம் பின்வருமாறு :—

1. பாம்பன் பாலத் தளத்தின் உள் அளவுகள் மற்றும் உஷ்ண நிலை மாறுபாடுகளைக் கண்டறிய, அதன் கட்டு மானத்தின் போது, அப்பாலத்தில் கருவிகள் பொருத்தப்பட்டு, அளவுகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகின்றன.

2. ஆசிய மேம்பாட்டு வங்கியுடன் தள மேலாண்மைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு இத்துறைச் சார்ந்த 30 பொறி யாளர்களுக்கு நவீன செயல் முறை நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

3. கிழக்கு கடற்கரைச் சாலை மற்றும் மதுரை கொச்சி சாலைகளை மேம்படுத்தும் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட் டது.

4. ரூ. 70 இலட்சம் செலவில் 50 சதவிகிதம் மத்திய அரசு நிதி உதவியுடன் கனரக சோதனைத் தளத்திற்கான வடிவ மைப்பு நிர்ணயிக்கப்பட்டு, வேலை ஆரம்பிக்க்ப்பட உள்ளது.

5. சோதனைத் தளத்தில் பல்வேறு கருவிகள் பொருத்தி சாலை அமைப்பதில் சிக்கனம் ஏற்படுத்தும் விவரக் குறிப் பீடுகளை உருவாக்குவது முன்னேற்ற நிலையில் உள்ளது.

6. நடப்பு நிதி ஆண்டு 1989—90-இல் பகுதி 2 திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. 26 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு. அத்தொகையும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

7. நடப்பு நிதி ஆண்டு 1989—90-இல் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய செயல் முறைகளுக்காக பராமரிப்புப் பணிகளுக்காக ரூ 13 இலட்சம் செலவிடப்பட்டது. 1990—91 ஆம் ஆண்டிற்கு மதிப்பிட செலவினமாக ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

8. இத்துறையைச் சார்ந்த பொறியாளர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்க 1990-91 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி நிலையம் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

9. 1990—91 ஆம் ஆண்டிற்கு பகுதி 2 திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஆய்வக வசதிகளைப் பெருக்குவதற்காக ரூ. 27.31 இலட்சம் திட்டமிடப்பட்டுள்ளது.

10. எட்டாவது திட்டம் 1990—95-ற்காக மொத்தத் தேவைகளான ரூ. 35,409.00 இலட்சத்தில் மத்தியச் சாலை நிதியின் கீழ் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிக்காக ரூ. 715.00 இலட்சம் கோரப்பட்டது. 1990—91 ஆம் ஆண்டிற்குரிய குறியீடு ரூ. 115.00 இலட்சமாகும்.

11. முன்னேற்ற நிலையில் உள்ள திட்டங்களின் பட்டியல் இணைப்பு 9 'அ' விலும், முன் மொழியப்பட்ட புதிய திட்டங்களின் பட்டியல் இணைப்பு 9'' ஆ''விலும் கொடுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்.

முன்னுரை :

''தமிழக அரசு'' சென்னை நகரில் நகர்ப்புற மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு உலக வங்கியின் நிதியுதவியுடன் 1971 ஆம் ஆண்டு முதல் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. சென்னை புறநகர் வளர்ச்சிக்கான முதல் திட்டம் 1977 முதல 1980 வரை செயல்படுத்தப்பட்டது. இரண்டாவது திட்டம் 1981 முதல் 1985 வரை செயல்படுத்தப்பட்டது. மேற்கண்ட திட்டங்களில் பெறப்பட்ட அனுபவங்களை கருத்தில் கொண்டு ''தமிழக அரசு'', சென்னை மற்றும் நகரங்களின் மேம்பாட்டுக்காக உலக வங்கியின் கூடுன் உதவியுடன் புதியதொரு திட்டத்தை செயலாக்க திட்டமிட்டது.



2. இத்திட்டம் ''தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்'' என அழைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் ஒரு பிரிவு போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டமாகும் இப்பிரிவின் பணிகள் தமிழ்நாடு நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இப்பிரிவின் திட்ட மதிப்பீடு ரூ. 100.30 கோடியாக உள்ளது. இத்திட்டத்தில் கட்டுமானப் பணிகளுக்காக செலவிடப்படும் தொகையில் 75 விழுக்காடு உலக வங்கியிடமிருந்து ஈடு செய்யப்படுகின்றது.

இத்திட்டம் 1988 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 6 ஆண்டுகளில் செயலாக்கப்பட உள்ளது.

இத்திட்டம் சென்னை மற்றும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர், வேலூர் ஆகிய நகரங்களில் செயல்படுத்தப்படுகின்றது.

குறிக்கோள் :

இத்திட்டத்தின் பணிகள் கீழே கண்டுள்ள அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றன.

1. போக்குவரத்து நெறிகளை குறைந்த செலவில் சிறந்த முறையில் பராமரிப்பதின் மூலம் சாலைகளின் திட்ட முதலீட்டை குறைப்பது.

2. குறிப்பாக நகர்ப்புறத்தில் குறைந்த வருவாயில் வாழும் மக்களின் தேவைக்கான அடிப்படையில் போக்குவரத்தின் திறமையையும், தன்மையையும் மேம்படுத்துவது :

3. சாலை உபயோகிப்பாளர்களின் தேவைக்கேற்ப நகர சாலைகளின் திறனையும், நிலையையும் மேம்பாடு செய்வது :

4. போக்குவரத்துக்களின் நெறிகளை நல்ல முறையில் அமுல்படுத்துவது;

5. பாதுகாப்பான பயணம் செய்வதற்கான வசதிகளை, குறிப்பாக பாதசாரிகளுக்கும், மெதுவாக செல்லும் வாகனங்களுக்கும் அமைத்துக் கொடுப்பது.

திட்டப்பணிகளின் தேர்வு மற்றும் நோக்கம் :

இத்திட்டத்தின் கீழ் பணிகள், போக்குவரத்து, பொருளாதார மற்றும் சமூக தேவையின் அடிப்படையில் தேர்ந்து எடுக்கப்படுகின்றன. இந்தத் திட்டப் பணிக்கு முதலீடு செய்யுமுன் ஒரு பணிக்கு பல்வேறு மாற்று வழிகள் ஆராயப்பட்டு அதில்

எந்த ஒரு வழி முதலீட்டுக்கு 12 விழுக்காடு திரும்பப் பெறக் கூடிய விதத்தில் அமைகிறதோ, அந்த வழி தேர்வு செய்யப் படுகின்றது.

நகரங்களில் உள் வட்டச்சாலை அமைத்தல், புறவழிச்சாலை அமைத்தல், பாலங்கள் கட்டுதல், இருப்புப் பாதை கடவினை அகற்றி அவ்விடங்களில் சாலை மேம்பாலம் அல்லது சாலை கீழ்ப் பாலங்கள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள சாலைகள், பாலங்கள் மேம்பாடு செய்யும் பணிகள் இத்திட்டத்தில் செய லாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

அங்கீகரிக்கப்பட்ட பணிகள் :

இத்திட்டத்தில் 19 பணிகளுக்காக ரூ. 5,511.00 இலட்சங் களுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ரூ. 278.00 இலட்சங்கள் மதிப்புள்ள பணிகள் சென்னை மாநகராட்சியால் செயல்படுத்தப்படும்.

பணிகளின் முன்னேற்ற விவரம் :

2,143 இலட்சங்களுக்கான மதிப்பில் 7 பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

ரூ. 350 இலட்சங்கள் கொண்ட ஒரு பணிக்கான ஒப்பந்தம் அரசின் ஒப்புதலுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியும் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

மீதமுள்ள 9 பணிகளை 1990—91 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பணிகளின் விவரங்கள் இணைப்பு 10-இல் உள்ளது.

செலவினங்கள் :

1988-89 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் ரூ. 165.64 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டது.

1989-90 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 1,000.00 இலட்சங்கள். ஆனால் திருத்திய மதிப்பீட்டின்படி நிதி ஒதுக்கீடு ரூ. 400.00 இலட்சங்கள் ஆகும். இந்த ஒதுக்கீட்டில் ரூ. 500.00 இலட்சங்களும் செலவிடப்பட்டுள்ளது.



1990-91 ஆம் ஆண்டுத் திட்டம் :

1. ஒப்புதல் அளிக்கப்பட்ட எல்லா வேலைகளும் செயல் படுத்தப்பட உள்ளன.

2. இரண்டு பணிகள் முடிக்கப்பட்டு விடும்.

3. 1990-91 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 11.91 கோடிகள் ஆகும்.

சென்னை புறநகர் மேம்பாட்டுத் திட்டம் 1 மற்றும் 2 :

முன்னுரை :

சென்னை பெருநகர் மேம்பாட்டிற்காக நிதி உதவி பெறு வதற்காக உலக வங்கித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. நீண்ட காலத்தில் திருப்பிச் செலுத்தும் வகையில் கடன் தொகை யினை தமிழ்நாடு அரசுக்கு கொடுத்து சென்னை பெருநகரின் பல துறைகளில் மேம்பாட்டுக்கு வழி வகுக்க பன்னாட்டு அபிவிருத்தி குழு முன் வந்தது. இதில் ஒரு துறைதான் சாலைப் பிரிவு, இதன் கீழ் உள்வட்டச்சாலை அமைத்தல், நடை பாதைகள் மற்றும் மிதிவண்டி வழித் தடங்கள் அமைத்தல், வண்டி தடங்கள் அமைத்தல், பாதசாரிக்கான சுரங்க நடைபாதைகள், பாலங்கள் கட்டுதல், சாலை சந்திப்புக்களை மேம்பாடு செய்தல் போன்ற பணிகள் செயலாக்க எடுத்துக்கொள்ளப்பட்டன. இத்திட்டம் இரண்டு கட்டங்களாக சென்னை புறநகர் மேம்பாட்டுத் திட்டம் 1 மற்றும் 2 என எடுத்துக் கொள்ளப்பட்டன.

2. இதில் முதல் கட்டத்தின் கால வரையறை 1977 முதல் 1980 வரையும், இரண்டாவது கட்டத்தின் கால வரையறை 1981 முதல் 1985 வரையிலாகும்.

சென்னை புறநகர் வளர்ச்சித் திட்டம் 1-க்கு கட்டுமான பணிக்கான செலவில் 45 விழுக்காடும், திட்டம் 2-க்கு கட்டுமானப் பணிக்கான செலவினங்களில் 55 விழுக்காடும் ஈடு செய்யப்பட்டு உள்ளது.

சென்னை புறநகர் மேம்பாட்டுத் திட்டம் 1 :

பணிகளின் முன்னேற்ற விவரம் :

சென்னை புறநகர் மேம்பாட்டுத் திட்டம் 1-ல் செயலாக்கத் திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகளில் ஒரு சிறு பகுதியில் நிலங்கள் கிடைக்காத காரணத்தாலும் மற்றும் வைத்தியநாத

முதலி தெரு சாலை மேம்பாலம் அமைக்கும் பணியும் நீங்கலாக
மற்ற எல்லா பணிகளும் முடிவடைந்து சாலை போக்குவரத்துக்
கும் திறந்து விடப்பட்டுள்ளது.

செலவினங்கள் :

1989—90 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 105.62
இலட்சங்கள். ஆனால் ஒரு பணியில் ஏற்பட்டுள்ள கால தாம
தத்தால் இந் நிதியாண்டில் ரூ. 47.00 இலட்சங்கள் செலவாகும்
என எதிர்பார்க்கப்படுகிறது.

1990-91 ஆம் ஆண்டுத் திட்டம் :

1. வைத்தியநாத முதலி தெருவில் சாலை மேம்பாலம்
கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இப்பணி
1990—91 இல் முடிவடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1990-91 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 1,00.19
இலட்சங்கள் ஆகும்.

சென்னை புறநகர் மேம்பாட்டுத் திட்டம் 2:

பணிகளின் முன்னேற்ற விவரம் :

இத்திட்டத்தில் அடங்கிய எல்லா வேலைகளும் 1989—90 ஆம்
ஆண்டில் முடிவடைந்துவிடும்.

செலவினங்கள் :

1989-90 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 6.73 இலட்சங்
கள். ஆனால் இவ்வாண்டிற்கான செலவு ரூ. 9.00 இலட்சங்
களாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

1990-91 ஆம் ஆண்டுத் திட்டம் :

1990-91 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 2.63 இலட்சங்
கள்.

ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டம் :

முன்னுரை :

நெடுஞ்சாலைத் துறை மற்றும் சென்னை மாநகராட்சி
வரம்பிற்குட்பட்ட சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும
எல்லைக்குட்பட்டும் உள்ள தேர்வு செய்யப்பட்ட சாலைகள்
இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது.



பணிகளின் முன்னேற்ற விவரம் :

இத்திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை எண் 5 கி.மீ.
7/6-இல் பாலம் கட்டும் பணியும் மற்றும் வேளச்சேரி புறவழிச்
சாலை அமைக்கும் பணியில் நில ஆர்ஜிதம் செய்வதில் தாமத
மாகும் ஒரு சிறு பகுதி நீங்கலாக மற்ற எல்லாப் பணிகளும்
முடிவடைந்துள்ளன.

செலவினங்கள் :

1989-90 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 5.18 இலட்
சங்கள். ஆனால் நிதி ஆண்டான 1989—90-இல் ரூ. 8.40
இலட்சங்கள் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1990-91 ஆம் ஆண்டுத் திட்டம் :

1990-91 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு. இத்திட்டத்
திற்கு ரூ. 5,95 இலட்சங்கள் ஆகும்.

## இணைப்பு 1

**1989-90 ஆம் ஆண்டில் மாநில நெடுஞ்சாலைகள் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பணிகளின் பட்டியல்.**

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | கோட்டத்தின் பெயர். | பணியின் பெயர். | உத்தேச மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்). | தற்போதைய நிலை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | திருநெல்வேலி கட்டபொம்மன். | விருதுநகர் | தென்காசி-மதுரை சாலையில் கி.மீ. 73-0 74-2 மற்றும் கி.மீ. 74/10-76/0 நீங்கலாக கி.மீ. 73/0-800 இல் வாகனப் பாதையை உறுதிப் படுத்துதல் உட்பட மேம்பாடு செய்தல். | 46.00 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 2 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | பெரம்பலூர்-மானா மதுரை சாலை கி.மீ. 45/2இல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல். | 8.00 | திருப்புச் சாலை அமைக்கப்படுகிறது. |
| 3 | பசும்பொன்தேவர் திருமகனார் | சிவகெங்கை .. | பெரம்பலூர்-மானா மதுரை சாலை கி.மீ. 217/6-இல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல். | 2.50 | திருப்புச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. |
| 4 | நீலகிரி .. .. | உதகமண்டலம் .. | காலிகட்-வைத்ரி-கூடலூர் சாலை கி.மீ. 130/4 இல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல். | 5.00 | பணி தொடங்கப்பட்டுள்ளது. |
| 5 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் .. | கோயம்புத்தூர்-திண்டுக்கல் சாலை கி.மீ. 47/4 இல் உள்ள வலுவிழந்த வளைவுப் பாலத்தை திரும்பக் கட்டுதல். | 15.00 | ஒப்பந்தம் நிச்சயிக்கப்பட வேண்டும். |
| | | | மொத்தம் .. | 76.50 | |

143977
D
V211,31'N90
N90.31.2

இணைப்பு 2.

**1990-91 ஆம் ஆண்டில் மாநில நெடுஞ்சாலைத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்படவுள்ள பணிகளின் பட்டியல்.**

| வரிசை எண். | மாவட்டம். | கோட்டம். | பணியின் பெயர். | உத்தேச மதிப்பீடு. | 1989-90 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 | திருவண்ணாமலை சம்புவராயர். | திருவண்ணாமலை.. | கடலூர்-சித்தூர் சாலை கி.மீ. 85/4 இல் உள்ள சிதைவுற்ற சிறு பாலத்தை திரும்பக்கட்டுதல். | 3.00 | 2.00 |
| 2 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி .. | நாகப்பட்டினம்-கூடலூர் மைசூர் சாலை கி.மீ. 119/10 இல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல். | 12.00 | 2.00 |
| 3 | ௸ | ௸ | திருச்சிராப்பள்ளி-நாமக்கல் சாலை கி.மீ. 59/8 இல் உள்ள சிறு பாலத்தை திரும்பக் கட்டுதல். | 5.00 | 2.00 |
| 4 | சேலம் .. | நாமக்கல் .. .. | திருச்சிராப்பள்ளி-நாமக்கல் சாலையில் கி.மீ. 70/6—75/8 பகுதியில் தேவைப்படும் இடங்களில் சாலை அகலத்தை தரத்திற்கு விரிவுபடுத்துதல். | 15.00 | 5.00 |
| | | | மொத்தம் .. | 35.00 | 11.00 |

இணைப்பு 3.

1989-90 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டம்.

மாவட்டப் பெருஞ்சாலைகள்.

| வரிசை எண். | மாவட்டம். | கோட்டம். | பணியின் பெயர். | உத்தேச மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்). | பணியின் தற்போதைய நிலை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | திண்டுக்கல் காயிதேமில்லத். | திண்டுக்கல் ... | பழனி-தாராபுரம் மேற்கு சாலையில் கி.மீ. 5/6-8 இல் மானூர் அருகே சண்முகா நதியின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். | 78.00 | ஒப்பந்தம் நிச்சயிக்கப் பட வேண்டும். |
| 2 | சிதம்பரனார் .. | தூத்துக்குடி .. | மதுரை- தூத்துக்குடி சாலை கி.மீ. 90/8 இல் உள்ள வளைவு கட்டுமானத்தை திரும்பக் கட்டுதல். | 3.00 | முக்கிய சிறு பாலம் கட்டப் பட்டு விட் டது. பாது காப்பு கற் கள் நடப் பட வேண் டும். |
| 3 | பசும்பொன் தேவர் திருமகன். | சிவகெங்கை ... | மதுரை-தொண்டி சாலை கி.மீ.18/2(1) இல் உள்ள வளைவுக் கட்டுமானத்தை திரும்பக் கட்டுதல். | 1.50 | திருப்புச் சாலை போடும் பணி நடை பெறு கிறது. |
| 4 | பசும்பொன் தேவர் திருமகன். | சிவகெங்கை .. | மதுரை-தொண்டி சாலை கி.மீ.18/2 (2) இல் உள்ள வளைவுக் கட்டுமானத்தை திரும்பக் கட்டுதல். | 2.50 | மண் வேலை நடை பெறு கிறது. |
| 5 | இராமநாதபுரம் | பரமக்குடி ... | மதுரை-தொண்டி சாலை கி.மீ.71/8-இல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல். | 10.00 | பணி தொடங்க உத்திர விடப் பட்டுள் ளது. அஸ் திவாரப் பணி நடை பெறு கிறது. |
| 6 | தஞ்சாவூர் ... | நாகப்பட்டினம் .. | நாகப்பட்டினம்-வேளாங் கண்ணி சாலை கி.மீ. 4/2இல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல். | 4.00 | திருப்புச் சாலை அமைக்கப் பட்டு உள் ளது. |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 13 | தஞ்சாவூர் .. | தஞ்சாவூர் .. | கும்பகோணத்திற்கு புறவழிச்சாலை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துதல். | 40.00 | விரிவான மதிப்பீடு தயாரிப்பில் உள்ளது. |
| | | | மொத்தம் .. | 264.00 | |



## இணைப்பு 4.

### 1990-91 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டப் பிரேரணைகள்.

#### மாவட்டப் பெருஞ்சாலைகள்.

| வரிசை எண். | மாவட்டம். | கோட்டம். | பணியின் பெயர். | உத்தேச மதிப்பீடு. | 1990-91 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 | தஞ்சாவூர் .. | நாகப்பட்டினம் .. | மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலை கி. மீ. 77/10 இல் உள்ள பாலத்திற்கு அணுகு சாலைகள். | 7.00 | 3.00 |
| 2 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி .. | திருச்சிராப்பள்ளி-சிதம்பரம் சாலை கி.மீ. 33-2 இல் தற்போதுள்ள பழுதடைந்த வளைவுப் பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 18.00 | 8.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 3 | தென்னார்க்காடு | விழுப்புரம் .. | கண்ணாளம் கிராமத்திற்கு அருகாமையில் ஆற்காடு-விழுப்புரம் சாலை கி.மீ. 67-10 இல் கண்ணாளம் ஓடையின் குறுக்கே உள்ள வலு விழந்த பாலத்தை திரும்பக்கட்டுதல். | 45.00 | 8.00 |
| 4 | திருவண்ணாமலை-சம்புவராயர். | திருவண்ணாமலை | திருவத்திபுரம் நகருக்கு புறவழிச்சாலை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துதல். | 40.00 | 5.00 |
| 5 | வடஆற்காடு-அம்பேத்கார். | வேலூர் .. .. | திருப்பத்தூர்-ஆலங்காயம் சாலை கி.மீ. 20-6 இல் உள்ள பாலத்தை திரும்ப கட்டுதல். | 18.00 | 4.00 |
| 6 | தஞ்சாவூர் .. | நாகப்பட்டினம் .. | கும்பகோணம்-சீர்காழி சாலை கி.மீ. 62/8 இல் உள்ள பாலத்தை திரும்பக்கட்டுதல். | 18.00 | 4.00 |
| 7 | செங்கை-அண்ணா | செங்கல்பட்டு .. | புக்கத்துறை-உத்திர மேரூர் சாலையில் கி.மீ. 2/8, 11/4, 13/6 மற்றும் 19/10 இல் உள்ள சேதமுற்ற சிறு பாலங்களை திரும்பக் கட்டுதல். | 12.00 | 6.00 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 8 | செங்கை-அண்ணா | செங்கல்பட்டு .. | சென்னை-வண்டலூர்-கேளம்பாக்கம் சாலை கி.மீ. 36/4, 46/4, 48/2 இல் உள்ள சிதைவுற்ற சிறு பாலங்களைத் திரும்பக் கட்டுதல். | 8.00 | 6.00 |
| 9 | செங்கை-அண்ணா | செங்கல்பட்டு .. | செய்யார்-வந்தவாசி சாலையுடன் இணையும் உத்திர மேரூர்-கமலம் பூண்டி சாலை கி.மீ. 3-2, 3/10 மற்றும் 6/2 (3 உருப்படிகள்)-இல் உள்ள சிதைவுற்ற சிறு பாலங்களைத் திரும்பக் கட்டுதல். | 6.00 | 6.00 |
| 10 | தென்னார்க்காடு | கடலூர் .. .. | கடலூர்-விருத்தாசலம்-சேலம் சாலை கி.மீ. 37/2 இல் உள்ள சிதைவுற்ற பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 25.00 | 4.00 |
| 11 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி .. | மாத்தூர்-திட்டக்குடி சாலை கி.மீ. 18/8 இல் உள்ள சிதைவுற்ற பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 10.00 | 3.00 |

இணைப்பு — 4 தொடர்ச்சி

1990-91 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டப் பிரேரணைகள்—தொடர்ச்சி.

மாவட்டப் பெருஞ்சாலைகள்—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 12 | திருநெல்வேலி-கட்டபொம்மன். | திருநெல்வேலி .. | வள்ளியூர்-விஜயபதி சாலை கி.மீ. 19/4 மற்றும் 19/6 இல் வலுவிழந்த குறுகிய சிறு பாலங்களை திரும்பக் கட்டுதல். | 20.00 | 4.00 |
| 13 | திண்டுக்கல்-காயிதேமில்லத். | திண்டுக்கல் .. | வெங்கடாஸ்திரி கோட்டைக்கு அருகாமையில் அம்மைய நாயக்கனூர்-பெரிய குளம் சாலை கி.மீ. 14/8 மற்றும் 14/10 இல் உள்ள பாலங்களை திரும்பக் கட்டுதல். | 30.00 | 4.00 |
| 14 | காமராஜர் .. | விருதுநகர் .. | சாத்தூர்-சிவகாசி-திருவில்லிபுத்தூர் சாலை கி.மீ 17/6 இல் உள்ள வலுவிழந்த பாலத்தை திரும்பக் கட்டுதல். | 7.00 | 2.00 |
| | | | மொத்தம் .. | 264.00 | 67.00 |



இணைப்பு—5.

1989-90 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டம்.

இதர மாவட்ட சாலைகள்.

| வரிசை எண். | மாவட்டம். | கோட்டம். | பணியின் பெயர். | உத்தேச மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்). | பணியின் தற்போதைய நிலை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தஞ்சாவூர் .. | தஞ்சாவூர் .. | மேகளத்தூர்-பத்தளப் பேட்டை சாலைகி.மீ. 3/4 இல் கல்லணை கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல். | 35.00 | ஒப்பந்தம் நிச்சயிக்கப்பட வேண்டும். |
| 2 | செங்கை-அண்ணா | செங்கல்பட்டு .. | மேலூர்,மெய்யூர்சாலை கி.மீ. 4/6-8 இல் கொரத்தலையார் ஆற்றின் குறுக்கே குழாய் தாம் போகி கட்டுதல். | 20.00 | ஒப்பந்தம் நிச்சயிக்கப்பட வேண்டும். |
| 3 | திருவண்ணாமலை—சம்புவராயர். | திருவண்ணாமலை .. | கலவை-வாழப்பந்தல் சாலை கி.மீ. 21/6 இல் செய்யாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். | 12.00 | ஒப்பந்தம் நிச்சயிக்கப்பட வேண்டும். |
| | | | மொத்தம் .. | 67.00 | |

## இணைப்பு—6.

1990-91 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டப் பிரேரணைகள்.

| வரிசை எண் மற்றும் மாவட்டம். (1) | கோட்டம். (2) | பணியின் பெயர். (3) | உத்தேச மதிப்பீடு. (4) (ரூபாய் இலட்சத்தில்) | 1990-91 ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீடு. (5) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 தென்னாற்காடு | கடலூர் | மன்னார்குடி—ஓமம்புலியூர் சாலை கி.மீ. 3/4 இல் உள்ள சிதைவுற்ற பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 20.00 | 3.00 |
| 2 திருவண்ணாமலை-சம்புவராயர். | திருவண்ணாமலை | திருவண்ணாமலை—அவலூர்பேட்டை சாலை கி.மீ. 5-2 இல் உள்ள சிதைவுற்ற சிறு பாலத்தை திரும்பக் கட்டுதல். | 3.00 | 3.00 |
| 3 தஞ்சாவூர் | தஞ்சாவூர் | பெரமூர்—ஆணைக்குடி சாலை கி.மீ.2/4 இல் உள்ள சீர் குலைந்த பாலத்தை திரும்பக் கட்டுதல். | 10.00 | 2.00 |



| | | | | |
|---|---|---|---|---|
| 4 தஞ்சாவூர் | நாகப்பட்டினம் | வேளாங்கண்ணி—வேதாரண்யம் சாலை கி.மீ. 31/10 இல் உள்ள சிதைவுற்ற சிறு பாலத்தை திரும்பக் கட்டுதல். | 3.00 | 3.00 |
| 5 சேலம் | சேலம் | தீவட்டிப்பட்டி—தானிஷ் பேட்டை சாலை கி.மீ 4/8 இல் உள்ள வலுவிழந்த சிறு பாலத்தை திரும்பக் கட்டுதல். | 6.00 | 3.00 |
| 6 செங்கை-அண்ணா | செங்கல்பட்டு | மதுக்கரை—கடலூர் சாலை கி.மீ. 0/2, 1/6, 4/2, 4/10,5/6, 15/4, 22/6, 24/2, 24/6, 25/2(1)(2) உள்ள சிறு பாலங்களை திரும்பக் கட்டுதல். | 18.00 | 6.00 |
| 7 செங்கை-அண்ணா | செங்கல்பட்டு | பொன்னேரி—காரை-பெராந்தூர் சாலை கி.மீ. 4/2 இல் உள்ள பழுதடைந்த சிறு பாலத்தை திரும்பக் கட்டுதல். | 5.00 | 3.00 |

## இணைப்பு 6—தொடர்ச்சி.

### 1990-91 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்ட பிரேரணைகள்—தொடர்ச்சி.

| | | | | |
|---|---|---|---|---|
| 8 செங்கை-அண்ணா | செங்கல்பட்டு .. | நெல்வாய்-திருக்கழுக்குன்றம் சாலை கி.மீ. 4/8, 5/2, மற்றும் 7/2 இல் உள்ள பழுதடைந்த சிறு பாலங்களை திரும்பக் கட்டுதல். | 6.00 | 3.00 |
| | | மொத்தம் .. | 71.00 | 26.00 |



## இணைப்பு—7.

### 1989-90 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டம்.

### இதர சாலைகள்.

| வரிசை எண் மற்றும் மாவட்டம். | கோட்டம். | பணியின் பெயர். | உத்தேச மதிப்பீடு. | பணியின் தற்போதைய நிலை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 தஞ்சாவூர் .. | நாகப்பட்டினம் .. | மொட்டாத்தூர்—கொத்தவாசல் மேல சகடமங்கலம் சாலை கி.மீ. 0/2இல் அரசலாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். | 21.00 | ஒப்பந்தம் நிச்சயிக்கப்பட வேண்டும். |
| 2 சேலம் .. | சேலம் .. .. | தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் அக்கரை பூலாம்பாடி சாலையில் சுவேதா நதியின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். | 16.00 | விரிவான மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது. |

இணைப்பு 7— தொடர்ச்சி.

1989—90 ஆம் ஆண்டிற்கான பகுதி—2 திட்டம்—தொடர்ச்சி.

இதர சாலைகள்—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 3 தென்னாற்காடு | கடலூர் | ஆலப்பாக்கம்—பெரிய குப்பம்(வழி)திருச்சி சோரபுரம் சாலை கி.மீ. 0/0-4/1, மேம்பாடு செய்தல். | 12.00 | ஒப்பந்தம் நிச்சயிக்கப் பட வேண்டும். |
| 4 வட ஆற்காடு | திருவண்ணாமலை | கேட்டவரம்பாளையம் முதல் கிடாம்பாளையம் வழியாக நேரு நகருக்கு செல்லும் சாலை கி.மீ. 0/0-7/0 மேம்பாடு செய்தல். | 16.00 | ஒப்பந்தம் நிச்சயிக்கப்பட வேண்டும். |
| 5 திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | தூவாக்குடி—பழங்கனங்குடி சாலை கி.மீ. 0/0-4/4, மேம்பாடு செய்தல். | 10.00 | பணி தொடங்கப்பட்டுள்ளது. |
| 6 புதுக்கோட்டை | புதுக்கோட்டை | காணூர்—கண்ணன்குடி சாலை கி.மீ. 0/0-2/2, மேம்பாடு செய்தல். | 5.00 | மண்வேலையும் மணல் செஞ்சரள் கலவை பணி முடிக்கப் பட்டுள்ளது. |
| 7 மதுரை | மதுரை | சேடப்பட்டி—கேது வார்பட்டி (வழி) ஜம்பலாபுரம் சாலை கி.மீ. 0/0-4/0, மேம்பாடு செய்தல். | 9.00 | ஒப்பந்தம் நிச்சயிக்கப்பட வேண்டும். |



| | | | | |
|---|---|---|---|---|
| 8 கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | அம்பரபாளையம்—சேதுமடை சாலை கி.மீ. 13/2 முதல் தம்மம்பட்டி சாலை கி.மீ. 0/0—5/0, மேம்பாடு செய்தல். | 18,00 | சாலை அமைப்பும், வடிநீர் கட்டுமான பணியும் நடைபெறுகின்றன. |
| 9 கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | சமத்துர்—முதல் எஸ். பொன்னாபுரம் அங்கிருந்து தேவனூர் புதூர் சாலை கி.மீ. 0/0—5/0 மேம்பாடு செய்தல். | 18.00 | சாலை அமைப்பும் வடிநீர் கட்டுமான அமைப்பும் நடைபெறுகிறது. |
| 10 சேலம் | நாமக்கல் | பாலமுனியப்பர் கோயில் சாலை கி.மீ. 0/0—210 மேம்பாடு செய்தல். | 7.00 | ஒப்பந்தம் நிச்சயிக்கப்பட வேண்டும். |
| 11 திருநெல்வேலி-கட்டபொம்மன். | திருநெல்வேலி | திருபுரம் முதல் தச்சநல்லூர் (வழி) சிவசக்தி டாக்கீஸ் சாலையை மேம்பாடு செய்தல். | 20.00 | மறு ஒப்பந்தப் புள்ளி கோரப் பட்டுள்ளது. நிலம் கையகப் படுத்தப்பட வேண்டும். |
| 12 திருநெல்வேலி கட்டபொம்மன். | திருநெல்வேலி | மேலசேவை ஆற்று சாலை கி.மீ. 3/4-ல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல். | 20.00 | மறு ஒப்பந்தப் புள்ளி கோரப் பட்டுள்ளது. |

## இணைப்பு 7—தொடர்ச்சி.

### 1989-90 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டம்—தொடர்ச்சி

### இதர சாலைகள்—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 13 காமராஜர் | விருதுநகர் | அச்சம்தவிர்த்தான்—கோடங்கிப்பட்டி சாலை கி.மீ. 0/0—3/4. மேம்பாடு செய்தல். | 12.00 | ஒப்பந்தம் நிச்சயிக்கப்பட வேண்டும். |
| | | மொத்தம் .. | 184.00 | |



## இணைப்பு—8.

### 1990—91 ஆம் ஆண்டிற்கான பகுதி—2 திட்டப் பிரேரணைகள்.

### இதர சாலைகள்.

| வரிசை எண் மற்றும் மாவட்டம். | கோட்டம். | பணியின் பெயர். | உத்தேச மதிப்பீடு. | 1990—91 ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 பசும்பொன் தேவர் திருமகன். | சிவகெங்கை | இளையாங்குடி—கரும்பு கோட்டம் சாலை முதல் அரியாண்டிபுரம் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | 7.00 | 3.00 |
| 2 செங்கை-அண்ணா | சைதாப்பேட்டை | மடிப்பாக்கம்—வேளச்சேரி சாலையை மேம்பாடு செய்தல். | 12.00 | 6.00 |
| 3 தென்னாற்காடு | விழுப்புரம் | விழுப்புரம்—திருவண்ணாமலை சாலை கி.மீ. 61/10/இல் பிரிந்து வெங்கனூர் சாலைக்கு செல்லும் சாலையை மேம்பாடு செய்தல். | 10.00 | 3.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 4 தென்னாற்காடு | விழுப்புரம் | அன்னியூர்—பணமலை, சாலை கி.மீ. 11/10 முதல் வெங்கனூர் (வழி) வெள்ளையன்பட்டு சாலையை மேம்பாடு செய்தல். | 8.00 | 4.00 |
| 5 பசும்பொன் தேவர் திருமகன். | சிவகெங்கை | அரியாண்டிபுரம் முதல் தெற்கு கீரனூர் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | 9.00 | 4.00 |
| 6 தருமபுரி | கிருட்டிணகிரி | நவலை முதல் பெரமண்டபட்டி சாலையை மேம்பாடு செய்தல். | 15.00 | 4.00 |
| 7 தருமபுரி | கிருட்டிணகிரி | அரூர் நகரத்தையும் ஆதி திராவிடர் காலனியையும் இணைக்கும் வகையில் வாணி ஆற்றின் குறுக்கே கண்கள் கொண்ட தாம்போகி கட்டுதல். | 30.00 | 4.00 |
| 8 பெரியார் | ஈரோடு | ஈரோடு—சக்திசாலை கி.மீ. 55/10இல் பிரிந்து செல்லும் இந்தியம் பாளையம் முகுள்ளம் பாளையம் சாலை கி.மீ. 2/4 இல் பாலம் கட்டுதல். | 10.00 | 4.00 |
| | | | 101.00 | 30.00 |



## இணைப்பு—9 அ.

**நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நடைமுறையில் உள்ள ஆராய்ச்சி திட்டங்கள் விவரம் :—**

1. வலு ஊட்டிய மண் கொண்டு உயர் மட்டச் சாலைகளில் இரு பக்கங்களையும் பாதுகாக்கும் முறைகளை ஆராய்தல்.

2. ஆழமான கடைக்கால்களுக்கு சுமக்கும் திறன்களை பொருத்தமான முறை, மரபு, அழுத்தமறியும் கருவி மூலம் அறிந்து உருவாக்குதல்.

3. அடித்தள வடிகால்களின் கீழ் இழைகளை பயன்படுத்தல்.

4. கெட்டித்தளங்களின் மேல் ஏற்படும் விரிசல்களைத் தடுப்பதற்கு அதன் மேல்தளங்களின் நெகிழும் தன்மையினை நில நுகர் இழைகளையும் நில நுகர் கம்பி வலைகளையும் பயன்படுத்தி விரிசல் தடுப்பு முறை எப்படி என்று ஆராய்தல்.

5. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் களிமண் அடித்தளத்தின் மேல் அமைக்கப்படும் கற்கலவைத் தளத்தன்மை குறித்து ஆராய்தல்.

6. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் சோதனைத் தளத்தை அமைத்தலும் கருவிகளைப் பொருத்துதலும்.

7. மணல் கப்பி, மணல் கலந்த களிமண் கலவைகளின் மொத்த சிறப்புக்குழைவுக் குறியீட்டு எண்ணையும், கலிபோர்னியா தாங்கும் விகித எண்ணையும் தொடர்புபடுத்தி ஆய்வது.

8. சாலை அமைப்பதில் வழக்காற்றல் இல்லாத பொருள்களைப் பயன்படுத்துதல் பற்றி ஆய்வு.

9. நிலக்கீல் பொருள்களில் பாலிமர் சேர்ப்பதால் ஏற்படும் தன்மை பற்றிய ஆய்வு.

10. புகைக்கீல் கற்கலவை கலவைகளின் பல்வேறு தன்மைகளின் உட்புகு திறன் வரம்பு பற்றி ஆராய்தல்.

11. நெடுஞ்சாலைத் தளங்களின் மேற்பரப்பு நயம் பற்றிய ஆய்வு.

12. சாலை பாலத்தில் தளங்களில் தேய்வாகும் மேல் அமைப்புக் கற்கலவைத் தளத்தில் பொருத்த விகிதங்களை ஆய்தல்.

13. கற்கலவையில் கடல்நீர் கலப்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆராய்தல்.

14. தளத்தில் கற்கலவை அமைத்தலில் சீர்படுத்தும்முறை கண்டுபிடிப்பது பற்றி ஆய்வு.

15. சாலை விபத்துக்கள் பற்றி ஆராய்தல்.

16. சாலைகளில் ஓட்டுதற்குரிய தரம் பற்றி ஆராய்தல்.

17. நகர்புறச் சாலைகளிலும் கிராமச் சாலைகளிலும் வேகம் குறித்து ஆய்வு.

18. தமிழ்நாட்டில் லாரிகள், கனரக வண்டிகள் போக்குவரத்து பற்றிய ஆய்வு.

19. நகர்ப்புறத்தில் போக்குவரத்துக் கட்டுப்பாடு திறன் குறித்து ஆய்வு.

20. சாலை சந்திப்புகளில் போக்குவரத்தைச் சீர்படுத்துதல்.

**இந்திய அரசுத் திட்டங்கள்.**

1. ஆர்-6. "பெங்கிள்மேன் பீம் திரும்பு" முறையைப் பயன்படுத்தி தற்போதுள்ள நெகிழ்வு தளங்களில் கட்டுமான மதிப்பீடு செய்தல்.

2. ஆர்-8. நெகிழ்வு தளங்களுக்கு நிலக்கீல் மேற்பரப்பு வகைகளை தேர்வு செய்யும் நெறிமுறைகள்.

3. ஆர்-9. உப்புத் தன்மையுள்ள களிமண் பகுதிகளில் சாலைகள் அமைப்பதற்காகக் கோட்பாடுகள் வகுத்தல்.

4. ஆர்-16. சாலைகள் பராமரிப்பதற்காக குறிப்பிட்ட தளங்களைப் பல்வேறு சூழ்நிலைகளின் கீழ் நிர்ணயிப்பதற்காக அவைகளின் பராமரிப்புச் செலவுகளைப் பற்றி ஆராய்ந்து அதன்படி வரைமுறை செய்தல்.



**இணைப்பு—9 ஆ.**

புதிய திட்டங்கள்.

1. கற்கலவை கட்டுமானங்களைப் பழுதுபார்க்கப் பயன்படும் பொருள்கள் குறித்து ஆராய்தல்.

2. ஆர்-44. இரண்டாம் நிலைச் சாலைகளில் போக்குவரத்து மாதிரி பற்றியது.

3. பாலத்தின் மேல் தளங்களில் வெப்பம் பகிர்வு பற்றிய நீண்டகால ஆய்வு.

## இணைப்பு—10,

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகளின் விவரங்கள்.

| வரிசை எண் மற்றும் நகரத்தின் பெயர். | பணியின் பெயர். | நிர்வாக ஒப்புதல் தொகை (ரூபாய் இலட்சத்தில்). | தொழில் நுட்ப அங்கீகாரம். (ரூபாய் இலட்சத்தில்). | பணியின் முன்னேற்ற விவரம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 சென்னை | உள்வட்டச்சாலை கி.மீ. 0/0 முதல் 4/475 வரை நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல். | 400 | 440 | பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. |
| 2 சென்னை | உள்வட்டச்சாலை கி.மீ. 4/475 முதல் 8/615 வரை நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல். | 306 | 330 | பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. |
| 3 சென்னை | உள்வட்டச்சாலை கி.மீ. 8/615 முதல் 11/720 வரை நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல். | 258 | 283.80 | பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. |
| 4 சென்னை | தே. நெ. 45-இல் கி.மீ. 12/4 முதல் 15/4 வரை ஆறு வழித்தடமாக அகலப்படுத்துதல் மற்றும் தற்போதைய தளத்தை உறுதிப்படுத்துதல். | 390 | 429 | பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது |
| 5 சென்னை | உள் வட்டச்சாலை வட பகுதியை கி.மீ. 17/5 முதல் 25/6 வரை நீட்டித்து திருவொற்றியூர், பொன்னேரி/பஞ்செட்டி சாலை கி.மீ. 5/2 இணைத்து மேற்படி திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலை கி.மீ. 5/2-4/6 மேம்பாடு செய்தல். | 640 | .. | மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது. |
| 6 சென்னை | திருவொற்றியூர்-பொன்னேரி பஞ்செட்டி சாலையில் கி.மீ. 4/6-ல் பிரிந்து எண்ணூர் விரைவு பாதை சாலையில் 1310-ல் போய்சேரும் மணலி எண்ணெய் சுத்திகரிப்பு சாலையை அகலப்படுத்தி உறுதி செய்தல். | 250 | .. | மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது. |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 7 சென்னை | கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மூன்று பாலங்களை மேம்பாடு செய்தல். | 255 | .. | மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது. |
| 8 கோயம்புத்தூர் | 'கிராஸ்கட்' சாலை, கி.மீ. 0/6 முதல் 1/[illegible] வரையிலும், 100 [illegible] சாலை கி.மீ. 0/0—1/2 வரையிலும் மற்றும் கிழக்கு மேற்கு பவர் ஹவுஸ் சாலையையும் மேம்பாடு செய்தல். | 140 | .. | 0/2-இல் சாலை மேம்பாலம் பணியுடன் சேர்ந்து பணி துவங்கப்படும். |
| 9 கோயம்புத்தூர் | 'கிராஸ்கட்' சாலையில் கி.மீ. 0/2இல் ஒரு சாலை மேம்பாலம் கட்டுதல். | 800 | .. | திட்ட ஆய்வு அறிக்கைக்கு அங்கீகாரம் எதிர் பார்க்கப்படுகிறது. |
| 10 கோயம்புத்தூர் | பெரிய கடை வீதி, ஸ்டேட் வங்கி சாலை, ஆஸ்பத்திரி சாலை ஆகிய சாலைகள் சந்திக்கும் இடத்தில் உள்ள சாலை கீழ்மட்டப் பாலத்தை திரும்ப புதியதாகக் கட்டி சாலைகளை மேம்பாடு செய்தல். | 150 | .. | இரயில்வே பாலம் மதிப்பீடு சம்பந்தமாக இரயில்வே துறையுடன் கடித போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. |
| 11 மதுரை | மதுரை புறவழிச்சாலையில் தே. நெ. 7— சேலம்— மதுரை சாலை பிரிவில் கி.மீ. 436/85 முதல் 440/73 வரை இருபுறமும் மிதிவண்டிப் பாதை மற்றும் துணைச் சாலைகளும் அமைத்தல். | 175 | 192.50 | பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. |
| 12 மதுரை | வைகை ஆற்றின் குறுக்கே ராஜா மில் சாலைக்கும் இடையிலிருந்து தத்தநேரிக்கும் இடையில் ஒரு பாலம் கட்டுதல். | 120 | 120 | திட்ட ஆய்வு அறிக்கைக்கு அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 13 மதுரை .. | திண்டுக்கல் சாலையில் மதுரை ரயில்வே சந்திப்பு நிலையம் அருகில் எல்லிஸ் நகரையும் மதுரை புறவழிச் சாலையையும் இணைக்கும் வகையில் ஒரு சாலை மேம்பாலம் கட்டுதல். | 525 | .. | திட்ட ஆய்வு அறிக்கைக்கு அங்கீகாரம் எதிர் பார்க்கப்படுகிறது. |
| 14 மதுரை — | வைகை ஆற்றின் குறுக்கே அண்ணா நகர் 80 அடி சாலையையும் காமராஜர் சாலையையும் இணைக்கும் சாலையில் ஒரு மேல்மட்டப் பாலம் கட்டுதல். | 370 | .. | திட்ட ஆய்வு அறிக்கைக்கு அங்கீகாரம் எதிர் பார்க்கப்படுகிறது. |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 15 திருச்சிராப்பள்ளி | புதுக்கோட்டை சலை கி.மீ. 50/6 முதல் 56/2 வரை மேம்பாடு செய்தல் மற்றும் மூன்று சாலை மேம் பாலங்களை திரும்பக் கட்டுதல். | 610 | 350 | இரயில்வே துறை இரண்டு சாலை மேம் பாலங்கள் திரும்பக் கட்டும் பணியை துவக்கியுள்ளது. சாலைப் பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் ஒப்புதல் அரசிடம் இருந்து எதிர் பார்க் கப்படுகிறது. |
| 16 திருச்சிராப்பள்ளி | ''சாலை'' ரோட்டையும் கரூர் புறவழிச் சாலை யையும் இணைக்கும் சாலை அமைத்தல். | 350 | .. | திட்ட ஆய்வு அறிக் கைக்கு அங்கீகாரம் எதிர் பார்க்கப்படு கிறது. |
| 17 திருநெல்வேலி | மதுரை கன்னியாகுமாரி சாலை (தே. நெ. 7) கி. மீ. 146/4-ல் பிரிந்து கி. மீ. 155/8-ல் போய் சேரும். திருநெல்வேலி புறவழிச் சாலை அமைத்தல். | 500 | 550 | பணி நடைபெற்று கொண்டு இருக்கி றது. |



1990 மே 2]

## கொள்கை விளக்கக் குறிப்பு

### 1990—91-ஆம் ஆண்டு.

பொதுப்பணித் துறை, பெரிய, நடுத்தர, சிறிய பாசன திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் பாசனத் திட்டங்கள் நிலத்தடி நீர்பற்றிய ஆய்வுகள் மேற்கொள்வதற்கும் பொறுப்பு வகிக்கிறது. கடுமையான வறட்சி நிலவும் காலத்திலும், வெள்ளம் ஏற்படும் காலத்திலும், இத்துறை தனது பணிகளை விரிவுபடுத்தி, மேம்பாட்டுப் பணிகளையும் நிவாரணத் திட்டங் களையும் போர்க்கால அடிப்படையில் உரிய நேரத்தில் செயற் படுத்தி மேற்சொன்ன நிலைமைகளைச் சமாளிக்கிறது. அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனங்கள், மருத்துவமனைகள், வீட்டுவசதிக் குடியிருப்புகள் முதலிய வற்றைக் கட்டுவதற்கும் இத்துறை பொறுப்பு வகிக்கிறது.

வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நோக்கமாகக் கொண்டு, வேளாண் பணிகளுக்கு மேற்பரப்பு நீரையும் நிலத் தடி நீரையும் நன்கு நிருவகித்து அறிவார்ந்த அறிவியல் முறை யில் பங்கீடு செய்வதே பாசன ஏற்பாட்டின் முக்கிய நோக்க மாகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், அடுத்தடுத்து செயற்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில், அதிக மான நிலப்பரப்பிற்குப் பாசன வசதியளிக்கும் நோக்கத்துடன் மொத்தம் 52 பாசனத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பாசன வசதிகளை மேம்படுத்துவதில் இம்மாநிலம் முன்னோடியாகத் திகழ்கிறது.

இம்மாநிலத்திலுள்ள 13 மில்லியன் எக்டேர் நிலப்பரப்பில், 8.4 மில்லியன் எக்டேர், (65 சதவீதம்) பயிரிடத்தக்க நிலங்க ளாகும். இவற்றில், 6 மில்லியன் எக்டேர் பரப்பில் தற் போது சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 3 மில்லியன் எக்டேர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதிகள் கிடைக்கின்றன. ஒரு மில்லியன் எக்டேர் பரப்பில் இரு போகப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. பாசனம் பெறும் 3 மில்லியன் எக்டேரில், 0.95 மில்லியன் எக்டேர் கால்வாய்ப் பாசனமும், 0.90 எக்டேர் ஏரிப் பாசனமும் எஞ்சிய 1.15 மில்லியன் எக்டேர் கிணறுகள், குழாய்க் கிணறுகள் மூலமும் பாசனம் பெறு கின்றன. பயிரிடப்படும் நிகர பரப்பளவில் பாசனம் பெறு பகுதியின் சதவீதம் தமிழ்நாட்டில் 50 சதவீதமாகும். இது அகில இந்திய அளவில் சுமார் 28 சதவீதமாகும். தேசி அளவில், ஒருவருடைய பயனுக்காகக் கிடைக்கும் சராசரி நீரின் அளவு 0.09 மில்லியன் கன அடியாக இருக்க, இம்மா நிலத்தில் ஒருவருக்குக் கிடைக்கும் சராசரி நீரின் அளவு 0.03 மில்லியன் கன அடி மட்டுமே என்றாலும், இம்மாநிலத்தில்

பயிரிடப்படும் மொத்தப் பரப்பில் பார்க்கையில் பாசனம் பெறும் பகுதியின் வளர்ச்சி அதிகமாகவே உள்ளது. கிடைக்கின்ற நீர் வளம் பெரும்பாலும் முற்றிலுமாகப் பயன்படுத்தப் படுகிறது.

இம்மாநிலத்தில், நீர் ஆதாரங்கள் அரிதாக உள்ளன. ஆனால், தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்களான கேரளம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றில், தமிழ் நாட்டுடன் ஒப்பிடுகையில், நீர் ஆதாரங்கள் அதிகமாக உள்ளன. தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, அண்டை மாநில ஆற்றுப் படுகைகளின் உபரி நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்பி விடுவது குறித்து தேசிய நீர் வள மேம்பாட்டு முகவரமைப்பின் தலைமை இயக்குநருடன் கலந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதிய, பெரிய அல்லது நடுத்தர பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்பு, தமிழ்நாட்டில் மிகக் குறைவே. அதனால், கால்வாய்ப் பாசன முறையையும், ஏரிப்பாசன முறையையும் நவீனப்படுத்துவதன் மூலம், நீர் வீணாவதைத் தடுப்பதிலும், நீரை உரிய அளவிற்குப் பயன்படுத்துவதிலும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதனால், சேமித்த நீரைப் புதிய பகுதிகளுக்குப் பாசனமளிக்க அல்லது அப்பகுதியில் கூடுதலாகப் பயிர் சாகுபடி செய்யப் பயன்படுத்த இயலும். உலக வங்கி நிதியுதவியுடன், பெரியார்-வைகைப் பாசனத் திட்டத்தில் ஏற்கனவே பெரிய அளவில் நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனந்தனாறு கால்வாயையும், அதன் கிளைக் கால்வாய்களையும் மாற்றியமைப்பது மற்றொரு நவீனப்படுத்தும் திட்டமாகும். இப்பணி முடிவுறும் தறுவாயில் உள்ளது. ஒரு மில்லியன் ஏக்கருக்குப் பாசனம் அளிக்கும் பழைய காவிரிக் கழிமுகப் பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவதற்கான செயற் குறிப்புகள், உலக வங்கியின் நிதியுதவியைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பெரிதும் நம்பத்தக்கதும், முன்கூட்டியே அறியத்தக்கதுமான சமமான பாசன நீர் வழங்கு திட்டம் மூலமாகவும், அவசியம் ஏற்பட்டால் தற்போதைய பயிரிடு முறையை மாற்றுவதன் மூலமும் உற்பத்தித் திறனையும், பண்ணை வருமானத்தையும் அதிகரிக்க பழைய பாசனத் திட்டங்களைச் சீரமைப்பதன் மூலம் அவற்றின் திறனை மேம்படுத்தவும், உலக வங்கி நிதியுதவியுடன் தேசிய நீர் நிர்வாகத் திட்டம் தமிழ் நாட்டில் செயற்படுத்தப்படுகிறது. ஐந்து பாசனப் பகுதிகளில் அதாவது, சாத்தனூர், கோதையாறு, தாமிரபரணி, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி பழைய வாய்க்கால் பகுதி, சேத்தியா தோப்பு துணைத் திட்டம், மருதாநதி துணைத் திட்டம் ஆகியவற்றிலும், பின்னர் தெரிந்தெடுக்கடவுள்ள ஏனைய திட்டப் பகுதிகளிலும், மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இவை தவிர, உழவர்கள் உட்பட, பாசனம் பெறும் உழவுத் தொழிலில் சம்பந்தப்பட்டுள்ள திட்டமிடுபவர் முதல், நிர்வாகி, வடிவமைப்பாளர், பொறியாளர், வேளாண் பொருளாதார வல்லுநர், செயல்-பணியாளர் ஆகிய அனைவருக்கும் போதிய பயிற்சியளித்து, நீரை உரிய அளவு பயன்படுத்துவது நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்த நவீன தொழில் நுட்ப உத்திகளை அறியச் செய்யவும், உற்பத்தித் திறனை மேம் படுத்தும் பொருட்டும், அமெரிக்க நிதியுதவியுடன் தமிழ் நாட்டில் பாசன நிருவாகப் பயிற்சி நிறுவனம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

இம்மாநிலத்தின் நீர் வளம் குறைவாக இருப்பதையும் நீர் ஆதாரங்களை மேற்கொண்டு மேம்படுத்துவதிலும் நிருவாகத்திலும், சிக்கலான பிரச்சினைகள் இருப்பதையும் கருத்திற்கொண்டு, ஆறுகள், ஏரிகள், நிலத்தடி நீர் போன்ற பல்வேறு ஆதாரங்களின் பாசனத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆற்றின் வடிநிலைப் பகுதியிலுள்ள நீரின் நிலையைப் பொறுத்து இப்பணியை மேற்கொள்ள வேண்டும். இந்த அணுகுமுறையை செயற்படுத்த உதவியாக, அரசு பொறியாளர்கள்— பாசனம்— அதன் தொடர்புடைய துறைகளில் வல்லுநர்கள் ஆகியோர் அடங்கிய நிலையான பாசன மேம்பாட்டுக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

பாசனம்.

1985-86-ஆம் ஆண்டில் தொடங்கிய ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் 1989-90-ஆம் ஆண்டில் முடிவுற்றது. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக, ரூ. 212 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பாசனத் திட்டங்கள், தலைமைப் பொறியாளரின் (பாசனம்) கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவையாகும். ஏழாம் திட்டக் கால அளவில் கூடுதலாக 28,435 எக்டேர் பரப்பளவிற்குப் பாசனம் வழங்கக் கருதப் பட்டுள்ளது.

பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 212 கோடியில், 1988-89-ஆம் ஆண்டு முடிவில் (அதாவது 1985-86, 1986-87, 1987-88, 1988-89 ஆகிய நான்காண்டுகளில்) ரூ. 145.09 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், 1989-90-ஆம் ஆண்டில் ரூ. 27.50 கோடி பயனபடுத்தக் கருதப் பட்டுள்ளது. 1990-91-ஆம் ஆண்டிற்கு ஒதுக்கக் கருதப் பட்டுள்ள தொகை ரூ. 33.87 கோடியாகும்.

[1990 மே 2

பெரிய பாசனத் திட்டங்கள்.

பரம்பிக் குளம் ஆழியாறு திட்ட ஆயக்கட்டு விரிவாக்கத் திட்டமானது கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங் களில் கூடுதலாக 56,570 எக்டேர் பரப்பளவுக்கு பயன் தருவதற்காக வகுக்கப்பட்டது. அது. ரூ. 23.18 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணி கூடுதலாக 14,140 எக்டேருக்குப் பயன் தருவதாகும். இதுவும் ரூ. 8.18 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் :

1,75 இலட்சம் ஏக்கர் விரிவாக்க ஆயக்கட்டுப் பகுதிகளுக் கும், ஏற்கனவே நீர் வழங்கப்பட்டு வருகிற 2.50 இலட்சம் ஏக்கர் பரப்புள்ள மூல ஆயக்கட்டுப் பகுதிகளுக்கும் சமமாக பாசனம் அளிப்பதை உறுதி செய்யும் பொருட்டு, நான்கு மண்டல பாசன முறையைப் பின்பற்றி, இரண்டாண்டுகளுக் கொருமுறை பாசனமளிக்கலாமெனத் தலைமைப் பொறியாளர் கருத்துத் தெரிவித்துள்ளார். தனி ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையரின் கருத்துக்களைப் பெறும் பொருட்டு இச் செயற்குறிப்பு அவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவருடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

நடுத்தரப் பாசனத் திட்டங்கள் :

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத் தொடக்கத்தில், (1985-86-ஆம் ஆண்டில்) பின்வரும், நடுத்தரப் பாசனத் திட்டங்கள் குறித்த பணிகள் பல்வேறு அளவுகளில் முடிந் திருந்தன :—

(1) வாணியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

(2) வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத் திட்டம்.

(3) பெரியாறு அணையை வலுப்படுத்துதல்.

(4) ஈச்சம்பாடி அணை (ஈச்சம்பாடி கிராமத்திற்கருகில் பெண்ணையாற்றுக்குக் குறுக்கே அணை கட்டுதல்).

(5) தொப்பையாறு நீர்த்தேக்கத் திட்டம்.

(6) சித்தமல்லி நீர்த்தேக்கத் திட்டம்.

(7) தொய்யல் நீர்த்தேக்கத் திட்டம்.



1990 மே 2]

(8) ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டம்.

(9) குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம்.

(10) ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம்.

(11) கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம்.

(12) அனந்தனாறு கால்வாயையும், அதன் கிளைக் கால்வாய்களையும் நவீனப்படுத்துதல்.

(13) குடகனாறு நீர்த்தேக்கத் திட்டம் (மறுகட்டுமானம்)

மேற் குறிப்பிட்ட 13 நடுத்தர நவீனப்படுத்தும் திட்டங்களில் 8 நடுத்தர திட்டங்கள் (1, 2, 4, 5, 6, 7, 9, 12 தொடர்களைக் காண்க) இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

<u>நிறைவேற்றப்பட்டு வருகின்ற நடுத்தர பாசனத் திட்டங்களின் தற்போதைய நிலை)</u>

1. பெரியாறு அணையை வலுப்படுத்துதல் :

அணையை வலுப்படுத்துவதற்கான 1-ஆம் நிலைப்பணிகள், அதாவது 0 அடியிலிருந்து 75 அடி வரையில் முடிக்கப் பட்டுள்ளன. II-ம் நிலைப்பணிகளில், அதாவது, 75.00 அடியி லிருந்து 145.00 அடி வரையில் கற்கலவை சிமிட்டிக் கலவைப் பூச்சுப் பணி நடைபெற்று வருகிறது.

கூடுதலாக 3 கண்வாய்களை ( Vent ) அமைப்பதில், அதற் கான கட்டிடப்பணி முடிக்கப்பட்டு விட்டது. வாயில்கள் நிறுவும் பணி நடை பெற்று வருகிறது.

2. ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டம் :

மண் அணை, வெள்ளக்கால் ஆகிய பணிகள் (98 சதவீதத் திற்கு மேல் முடிக்கப்பட்டுள்ளது). முடிவுறும் தறுவாயில் உள்ளன. வலப்பக்க முதன்மைக் கால்வாய் பணிகளில், மொத்த நீளம் 15 கி. மீட்டர்களில், 14.81 கி. மீட்டர் நீளத் திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இடப்பக்க முதன்மைக் கால்வாய்ப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டப் பணி, 1991-ஆம் ஆண்டு மார்ச்சில் முடிக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. நொய்யல்-ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம்.

நில மட்டத்திற்குக் கீழேயுள்ள மண் அணைப்பகுதிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நில மட்டத்திற்கு மேலே உள்ள பகுதிக்கான பணியில் சுமார் 80 சதவீதப் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. அணையில் காரைக் கட்டடப் பகுதி பணியில் 70 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது. வலப்பக்க முதன்மைக் கால்வாய், இடப்பக்க முதன்மைக் கால்வாய், நீர் வழங்கு கால்வாய் ஆகியவற்றின் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டப் பணி, 1990-ஆம் ஆண்டு செப்டம்பரில் முடிக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம்:

அணைக்கட்டுப் பணிகளில் 98 சதவீதப் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. மேல் தள கற்கலவை பலகையை இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. வலப்பக்க முதன்மைக் கால் வாயில் 90 சதவீதப் பணியும், இடப்பக்க கால்வாய்ப் பணியில் 70 சதவீதமும் முடிக்கப்பட்டுள்ளன. கிளைக் கால்வாய்கள், கண்ணி வாய்க்கால்கள் அமைக்கும் பணிகள நடைபெற்று வரு கின்றன. இத்திட்டப்பணி, 1991-ஆம் ஆண்டு மார்ச்சில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. குடகனாறு நீர்த்தேக்கத் மறுகட்டுமானத் திட்டம்:

மண் அணையைச் சீரமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. தலை மதகு கட்டும் பணி முடியும் தறுவாயில் உள்ளது. வெள்ளக்கால் பகுதிக்கான பணி நீர்வழிந்தோடியின் தலைப்பகுதி வரையில் முடிக்கப்பட்டுள்ளது. இடதுப்பக்க முதன்மைக் கால் வாய், கண்ணி வாய்க்கால்கள ஆகியவற்றுக்கான கரை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. வலப்பக்க கால்வாயின் மொத்த நீளமான 53.52 கிலோ மீட்டரில் சுமார் 44 கிலோமீட்டர் வரை யில் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. மேற்கொண்டும் பணி கள் நடைபெற்று வருகின்றன. கண்ணி வாய்க்கால் பணிகள் பல்வேறு நிலைகளில் நடநதேறி வருகின்றன. இத்திட்டப் பணி, 1991-ஆம் ஆண்டு மார்ச்சில் முடிவுறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.



செங்கோட்டை வட்டம், மேக்கரை கிராமத்திலுள்ள அனுமான்
நதியின் குறுக்கே அதவிநாயினார் கோயில் நீர்த்தேக்கம்
கட்டுதல் :

திருநெல்வேலி, கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த மேக்கரை கிராமத்திலுள்ள அனுமான் நதியின் குறுக்கே ரூ. 3,769.00 இலட்சம் செலவில் 174 மில்லியன் கன அடி நீர்கொள்ளளவுள்ள (ஆண்டொன்றுக்கு 348 மில்லியன் கன அடி நீரைத் தேக்கி வைக்கத் தக்கத் திறனுடன்) அதவி நாயனார் கோயில் நீர்த் தேக்கம் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இத் திட்டம், 3,859 ஏக்கர் பரப்பிற்கு பாசன உறுதி அளிப்பதுடன் 243 ஏக்கர் நன்செய் நிலங்கொண்ட ஆயக்கட் டுக்குப் புதிதாகப் பாசனமும் விடுபட்ட பாசனப் பகுதியான 1,523 ஏக்கருக்கு பாசனம் அளிப்பதும் இத் திட்டத்தின் நோக்க மாகும்.

இத்திட்டத்திற்காக வனத்துறையைச் சேர்ந்த 41.72 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படவுள்ளது.

பழனி வட்டத்திலுள்ள இடையான்கோட்டை கிராமத்தின்
அருகிலுள்ள நங்கஞ்சியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றை
அமைத்தல் :

இத்திட்டத்தின் கீழ், திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம் பழனி வட்டத்திலுள்ள இடையான்குடி கிராமத்தின் அருகே நங்கஞ்சியாற்றின் குறுக்கே, ரூ. 2,070.00 இலட்சம் செலவில் நீர்த்தேக்கத் திட்டம் ஒன்று அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட் டுள்ளது. இந்த நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு 254.381 மில்லியன் கன அடியாகும்; இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம், 2,530.36 எக்டேர் (6,250 ஏக்கர்) மொத்தப் பரப்புள்ள புன்செய் நிலங்களுக்கு, ஒரு போகப் பயிருக்குப் பாசன வசதியும் 23.86 எக்டேர் 58.96 ஏக்கர் பரப்புள்ள நன்செய் நிலங்களுக்கு பாசன உறுதியும் கிடைக்கும்.

மோர்த்தானா கிராமத்தின் அருகிலுள்ள கௌண்டின்யா நதியின்
குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுதல் :

இத்திட்டத்தின்கீழ் வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத் திலுள்ள மோர்த்தானா கிராமத்தின் அருகில் கௌண்டின்யாநதி யின் குறுக்கே ரூ. 1,950.00 இலட்சம் செலவில் 264.30 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்து வதன் மூலம், 6,388 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறும், மற்றும் புதிதாக 705 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்கப்படும். இத்திட்டத்திற்காக வனத்துறையைச் சேர்ந்த 92.12 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படவுள்ளது.

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திற்குள்ள செங்கை கிராமத்தின் அருகிலுள்ள இராஜா தோப்புக் கானாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுதல் :

இத்திட்டத்தின் கீழ் வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் வட்டத்திலுள்ள செங்கை கிராமத்தின் அருகிலுள்ள இராஜாதோப்புக் கானாற்றின் குறுக்கே, ரூ. 251.00 இலட்சம் செலவில், 27.50 மில்லியன் கன அடி கொள்ளளவில் நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவதற்கு, உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை பாசன வசதி அளிக்கப்படாத 41.72 ஏக்கருக்குப் பாசன வசதி அளிப்பதுடன், தற்போதுள்ள 500.05 ஏக்கர் ஆயக்கட்டுக்கு பாசன உறுதி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்திற்காக வனத் துறையைச் சேர்ந்த 17.76 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படவுள்ளது.

காமராசர் மாவட்டம், அம்பலத்தாடி அருகில் கிருதமால் ஆற்றின் குறுக்கே (Bed Dam) படுகை அணை ஒன்றைக் கட்டுதல்:

திருச்சுழி, மானாமதுரை ஆகிய வட்டங்களிலுள்ள ரங்கையன் இடைமறிச்சான் ஏரிக்கும் ஏனைய 20 ஏரிகளுக்கும், வெள்ள நீரைத் திருப்பி விடுவதன் மூலம் நீர் வழங்குவதற்காக, ரூ. 53.00 இலட்சம் செலவில், கிருதமால் ஆற்றின் குறுக்கே அணை ஒன்றைக் கட்டுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இதனால் மொத்தம் 3,458.57 ஏக்கர் பரப்புள்ள ஆயக்கட்டு பயனடையும்.

சிறு பாசனத் திட்டங்கள் (ரூ. 50.00 இலட்சத்திற்கு மேல்):

தலைமைப் பொறியாளர் (பாசனம்) செயற்படுத்திய சிறு பாசனத் திட்டங்களுக்கான ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 24.22 கோடியாகும். ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத் தின் முதல் நான்கு ஆண்டுகளில் (அதாவது 1985-86, 1986-87 1987-88, 1988-89 ஆகிய ஆண்டுகளில்) ரூ. 29.95 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டில் அதாவது 1989-90-ஆம் ஆண்டில் ரூ. 6.07 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கீழ்க்காணும் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. அவையாவன :—

1. நாகாவதி நீர்த் தேக்கத் திட்டம்.

2. கேசரி குலிஹல்லா நீர்த்தேக்கத் திட்டம்.



3. கோலவார்பட்டி நீர்தேக்கத் திட்டம்.

4. ஆனைகுட்டப் நீர்த்தேக்கத் திட்டம்.

5. பெரும்பள்ளம் நீர்தேக்கத் திட்டம்.

6. திருப்பரப்பு அணைக்கட்டின் வலது புறக்கால்வாயை நீட்டித்து, அதன் முழுப்பகுதியையும் நவீனப்படுத்தும் திட்டம்.

கீழ்க்காணும் ஏனைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன :—

1. சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம்.

2. கரியகோயில் நீர்தேக்கத் திட்டம்.

3. மதுராந்தகம் வலதுபுறக் கால்வாய்.

4. சின்னவேடம்பட்டி ஏரி.

5. சண்முகா நதி நீர்த்தேக்கத் திட்டம்.

6. சென்னம்பட்டி அணைக்கட்டு.

7. நாகலாற்றின் குறுக்கே ஏரி அமைத்தல் (மாஊத்து ஓடை).

8. பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டம்.

9. நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், கூடுதலாக 11,970 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது மொத்தம் ரூ. 60.20 கோடி செலவில் 8 திட்டங்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது. அவையாவன—

| | | | ரூபாய் (கோடியில்) |
|---|---|---|---|
| 1. | மதுராந்தகம் வலப்புற கால்வாய் அமைக்கும் திட்டம். | | 43.0 |
| 2. | சின்னவேடம்பட்டி ஏரி | .. | 3.70 |
| 3. | சண்முகா நதி நீர்த்தேக்கத் திட்டம் | .. | 6.95 |

| | | (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| 4. சென்னம்பட்டி அணைக்கட்டு | .. | 6.70 |
| 5. கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம் | .. | 15.60 |
| 6. மதுரை மாவட்டம், தொப்பம்பட்டி கிராமத்திலுள்ள நாகாலாற்றுக்குத் குறுக்கே ஏரி அமைத்தல். | | 1.96 |
| 7. பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டம் | | 10.87 |
| 8. நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டம் | .. | 10.12 |
| மொத்தம்.. | | 60.20 |

இத்திட்டப் பணிகள் ஏற்கெனவே நிறைவேற்றத்திற்கு
எடுத்துக் கொள்ளப்பட்டு, வெவ்வேறு நிலைகளில் பணி நடை
பெற்று வருகிறது. கொடுமுடியாறு நீர்த் தேக்கத் திட்டத்
திற்கு வனத்துறையிடமிருந்து அண்மையில்தான் (1990,
ஜனவரி) அனுமதி கிடைத்துள்ளது.

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்திலுள்ள தூசி
மாமண்டூர் ஏரிக்கும் கால்வாய்களுக்கும் மேம்பாட்டுப்
பணிகள்:

தூசிமாமண்டூர் ஏரி, திருவண்ணாமலை—சம்புவராயர்
மாவட்டத்திலுள்ள மிகப்பெரிய ஏரிகளில் ஒன்றாகும். அதன்
கொள்ளளவு 1799.76 மில்லியன் கன அடியாகும். இந்த
ஏரிக்கு நீர் வரத்து போதிய அளவில் இல்லை. பாலாற்று
நீர் வரும் முதன்மைக் கால்வாய் மேம்படுத்தப்பட வேண்டும்.
இராஜாக்கள் கால்வாயின் தலைமதகின் முன் பகுதியில் தற்
போதுள்ள அடைசலை ( Grone ) மேம்படுத்துவது மட்டு
மின்றி, நீர் வழங்கு கால்வாய்களில் தூர் எடுத்தல், ஏரியின்
மதகுகளைப் பழுது பார்த்து மேம்படுத்துதல் ஆகிய பணிகளும்
மேற்கொள்ளப்படவேண்டும். இந்த ஏரியை ஒட்டுமொத்த



மாக மேம்படுத்துவதற்கு இராஜாக்கால் கால்வாய் பிரியுமிடத்
திலிருந்து தடுப்புச் சுவர் ஒன்று கட்டவும் உத்தேசிக்கப்
டுள்ளது.

ரூ. 138.20 இலட்சம் நிதியொதுக்கத்தில் 1990-91 ஆண்டில்
ரூ. 15.00 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உய்யக்கொண்டான் வாய்க்காலில் கிளைக் கால்வாய்
வெட்டுதல்:

உய்யக்கொண்டான் கால்வாய், காவிரி நதியின் வலதுபக்
கக்கரையிலிருந்து பிரிந்து வாழவந்தான் கோட்டை ஏரியில் பாய்
கிறது. ஆனால், உய்யக்கொண்டான் நீட்டிப்புக் கால்வாய்
வாழவந்தான் கோட்டை ஏரியிலிருந்து பிரிகிறது. உய்யக்
கொண்டான் கால்வாய், திருச்சி மாவட்டத்தில் 30,409 ஏக்கர்
நிலத்திற்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,335 ஏக்கர் நிலத்திற்
கும் பாசனம் அளிக்கிறது. ஆனால், உய்யக்கொண்டான்,
நீட்டிப்புக் கால்வாய், திருச்சி மாவட்டத்தில் 235 ஏக்கர் நிலத்திற்
கும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,207 ஏக்கர் நிலத்திற்கும் பாசனம்
அளிக்கிறது. இந்த ஏரி நிரம்பும்போதுதான் நீட்டிப்புக்
கால்வாய்க்கு நீர் கிடைக்கிறது. ஆகவே வாழவந்தான்
கோட்டை ஏரியைச் சார்ந்திராமல், உய்யக்கொண்டான் நீட்டிப்
புக் கால்வாய்க்குப் போதிய நீர் கிடைக்கச் செய்யும் பொருட்டு
உய்யகொண்டான் கால்வாயையும், உய்யகொண்டான் நீட்டிப்புக்
கால்வாயையும் இணைத்து, வாழவந்தான் கோட்டை ஏரிக்
கரையில் கிளைக் கால்வாய் வெட்டுவதற்கு உத்தேசிக்கப்
பட்டுள்ளது.

ரூ. 11.00 இலட்சம் நிதியொதுக்கத்தில் 1990-91-ஆம்
ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாயில் (பொய்யாக்குடி
ஏரியை தவிர்த்து) மாற்று வாய்க்கால் வெட்டுதல்:

புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாய் காவிரியில்
வலது கரையிலிருந்து புதிய கட்டளை படுகை மதகில் பிரிகிறது.
இவ்வாய்க்கால் 19,784 ஏக்கர் பரப்பிற்கு நேரடியாகவும்,
12,125 ஏக்கர் பரப்பிற்குப் பிற வழியாகவும், பாசன வசதி
அளிக்கிறது. இவ்வாய்க்கால் பொய்யாக்குடி ஏரியில் தொலை
கல் 70/2-ல் விழுந்து தொலைகல் 71/1-ல் வெளியேறுகிறது.
எனவே பொய்யாக்குடி ஏரி நிரம்பினால்தான் தொலைகல்
71/1-க்கு கீழ் உள்ள சுமார் 4,527 ஏக்கர் நிலம் பாசன
வசதி பெறும். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பொய்யா
குடி ஏரி வழியாக வராமல், மாற்று வழியாக தொலைகல்

70-2-லிருந்து 71-1 வரை புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாயில் மாற்று வாய்க்கால் ஒன்றை வெட்ட உத்தேசிக் கப்பட்டுள்ளது.

மொத்த திட்ட ஒதுக்கீடான ரூ. 9.70 இலட்சத்தில், 1990-91-ஆம் ஆண்டில் ரூ. 5.00 இலட்சம் செலவிடுவதென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தென் ஆர்க்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டத்திலுள்ள பழைய நந்தன் கால்வாயை சீரமைத்தல்:

'' பழைய நந்தன் கால்வாயைப் ''புதுப்பிக்கும் திட்டத்தின் கீழ், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலுள்ள 14 ஏரிகளும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள 22 ஏரி களும் பயன்பெறும் வகையில் துரிஞ்சலாற்றின் குறுக்கே, கீரனூர் அணைக்கட்டிலிருந்து கால்வாய் ஒன்றை வெட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது. 6,241 ஏக்கர்களுக்கு பாசன உறுதி அளிக்கவும் விடுபட்ட பாசனப் பகுதியான 413 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்கவுமே இத்திட்டம் உருவாக்கப்பட்டது. புதிய ஆயக் கட்டு எதற்கும் பாசன வசதி அளிக்க இதில் வழிவகைசெய்யப்பட வில்லை. இத்திட்டத்திற்காக ரூ. 31.89 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதுடன், ரூ. 128.36 இலட்சம் திருத்திய மதிப்பீட்டிற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணி, 1978-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. இதற்கான இறுதிச் செலவு ரூ. 94.95 இலட்சமாகும். இத்திட்டத்தின்கீழ் 3028 கி.மீ. நீளம் கொண்ட கால்வாய் ஒன்று வெட்டப்பட்டு, விழுப்புரம் வட்டத்திலுள்ள பனமலை ஷிசா ஏரியில் தற்போதுள்ள பழைய கிளைக் கால்வாயுடன் இணைக்கப்பட்டது.

இக்கால்வாய் வெட்டப்பட்ட பின்னர் இதன் வழியாக தண்ணீர் விட்டபோது, இத்திட்டத்தின்கீழ் பயன்பெறவேண் டிய ஏரிகள் அனைத்தும் பயன்பெறவில்லை என்று தெரிய வந்தது. இது குறித்து மதிப்பீட்டு ஆய்வு ஒன்று மேற்கொள் ளப்பட்டது. இக் கால்வாயின் பராமரிப்புப்பணி கடந்த 13 ஆண்டுகளாக மேற்கொள்ளப்படாததால் இக்கால்வாய் மணல் மேடிட்டு விட்டது. ஒரு சில மதகுகளுக்கு கதவுகள் போட வேண்டியுள்ளது. சில குறுக்குக் கட்டுமானப் பணிகளை மேம்படுத்த வேண்டியுள்ளது.

மேலே கூறிய அபிவிருத்திப் பணிகளை செயல் படுத்தினால் இந்தக் கால்வாய் தகுதியான நிலை அடைந்து எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்கப்பெறும்.

இதற்கு ஆகும் செலவுத்-தொகையான ரூ. 22.50 இலட்சத் தில், நடப்பு நிதி ஆண்டில் (1990-91) ரூ. 15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## சிறுபாசனம்.

சிறப்பு சிறு பாசனத் திட்டம் :

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 39,000 ஏரிகளில், 8,900 ஏரி கள் ஒவ்வொன்றும் 40 எக்டேருக்கும் (100 ஏக்கர்) மேற்பட்ட பரப்பிற்கு பாசனம் அளிக்கின்றன. இவை பொதுப்பணித்துறை யின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. கிராமங்களில் சமூக, பொரு ளாதார மேம்பாட்டுக்கான முக்கிய அம்சமாக இந்த ஏரிகள் திகழ்கின்றன. இச்சிறிய பணிகளைக் குறுகிய காலத்திற்குள் முடிக்க இயலும். அதனால் பொதுமக்களுக்கு விரைவாக பயன்கள் கிடைக்கின்றன. இவ்வாறு, தமிழ்நாடு அரசு சிறு பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

1989-90 ஆம் ஆண்டில் சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின்கீழ் ரூ. 246.39 இலட்சமும், தூர் வாருதல் சீரமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 0.10 இலட்சமும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1989-90 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 8 பணிகளில் 2 பணிகள் முடிக்கப்பட்டு விடும் என்றும், இதன் மூலம் 287 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்குமென்றும், இதன் பயனாக கூடுதலாக 567 டன் உணவு உற்பத்தி செய்யப்படுமென்றும் எதிர்பார்க்கப்படு கின்றது.

சமீபத்தில் 1989-90 ஆம் ஆண்டிற்கான சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ. 155 இலட்சம் திட்டச் செலவில், மேலும் 14 பணிகளை நிறைவேற்றுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும் 200 எக்டேர் பரப்பிற்குப் பாசன வசதி அளிப்பதற்காக சிறப்பு சிறுபாசனத் திட்டம், மற்றும் தூர் வாருதல் சீரமைக்கும் திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண் டில் ரூ. 185 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட உள்ள திட்டங்களில் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் வட்டம், நாகல் கிராமத்தில் கானாற்றின் குறுக்கே ரூ. 11.16 இலட்சம் செலவில் குளம் ஒன்றை அமைப்பதும் ஒன்றாகும்.

விரைவுபடுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டம் :

தமிழ்நாட்டில், மொத்தமுள்ள 39,000 ஏரிகளில், 9,700 ஏரிகள் முன்னாள் ஜமீன் ஏரிகளாகும். 8,900 ஏரிகள் பொதுப் பணித்துறை ஏரிகளாகும். எஞ்சியுள்ள ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. 40 எக்டேருக்கும் அதற்கு மேலும் பாசன வசதி அளிக்கும் ஏரிகள் பொதுப் பணித்துறையின் கட்டிப்பாட்டின் கீழ் உள்ளன. எஞ்சியுள்ள ஏரிகளை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன.

விரைவுபடுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டத்தின் கீழ் பொதுப்பணித்துறை இந்த ஏரிகளைத் தரம் உயர்த்தி, அவ்வாறு இந்த ஏரிகளைத் தரம் உயர்த்திய பின்னர் 40 எக்டேருக்கு குறைவான ஆயக்கட்டுகளைக் கொண்ட ஏரிகளை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கின்றது.

1989-90, 1990-91 ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பெற்ற/வரப்பட உள்ள ஏரிகள் குறித்து ஆன/ஆகவிருக்கும் செலவு விவரம் வருமாறு :—

| | பொ.ப.து. பராமரிக்கும் ஏரிகள். | ஊ. ஒ. பராமரிக்கும் ஏரிகள். | முன்னாள் ஜமீன் ஏரிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (செலவு ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1989-90 | 65.00 | 25.00 | 100.00 |
| 1990-91 .. | 65.00 | 25.00 | 100.00 |

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் :

(ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள பணிகள்.)

மத்திய அரசு, ''தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்'' ''ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம்'' ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஒரே திட்டமாக்கி '' ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்'' என்ற ஒரே திட்டமாக்கி 1990-91 ஆம் ஆண்டில் அதை நிறைவேற்றுவதற்கான புதிய நெறி முறைகளை வகுத்துள்ளது.

மத்திய அரசு 1983 ஆம் ஆண்டு ஆக்ஸ்டு திங்களில் தொடங்கி வைத்த ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டத்தை, பொதுப் பணித்துறை (சிறு பாசனம்) 1984-85-ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றி வருகின்றது. ஊரக நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களைத் தருவதுடன் நிரந்தர பாசன ஆதாரங்களையும் ஏற்படுத்திக் கொடுக்க இத்திட்டம் வழி வகை செய்கின்றது. இத்திட்டத்தின் அடிப்படையில் பொதுப்பணித்துறை ஏரிகள், குளங்கள் அமைத்தல், அணைக்கட்டுகள் கட்டுதல், கிளை



வாய்க்கால்களை மாற்றியமைத்தல், தற்போதைய பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு சிறு பாசனத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான முழுத் தொகையும் தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக மத்திய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படுகிறது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டத்தின் கீழ் எஞ்சிய பணிகளை மேற்கொள்ளுவதற்காக 1989-90 ஆம் ஆண்டில், இத் திட்டத்தின் கீழ் அரசு ரூ. 433 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. பொதுப்பணித்துறை (சிறு பாசனப் பிரிவு) செயற்படுத்தப்படும். இத்திட்டத்தால், 19.67 இலட்சம் உழைப்பு நாட்கள் உருவாக்கப்படும். இதனால் 1000 எக்டேர் பரப்பு பாசன வசதி பெறும். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் தொடங்கப்பட்டதைக் கருத்திற் கொண்டு 1989-90 ஆம் ஆண்டில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டத்தின்கீழ் எஞ்சியுள்ள பணிகள் (146 பணிகள்) மேற்கொள்ளப்பட்டன.

ஐரோப்பிய பொருளாதார குழுவின் நிதி உதவியுடன், தமிழ் நாட்டிலுள்ள ஏரிப்பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்துதல் நிலை-1.

மேற்பரப்பு நீர்வளம் 98 சதவீதம் பயன்படுத்தப்பட்டு நிலத்தடி நீர் வளத்தை பயன்படுத்துவதும் விரைந்து அதிகரித்து வருவதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் எதிர்காலத்தில் வேளாண்மைப் பாசனத்தை விரிவுபடுத்துவது பெரும்பாலும் பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தி, தற்போதுள்ள பாசன ஆதாரங்களிலுள்ள நீரைச் சிக்கனமாகவும், திறம்படவும் பயன்படுத்துவதைப் பொறுத்தே உள்ளது. தமிழ்நாட்டின் பாசனப் பகுதியில் 30 சதவீதம், ஏரி பாசனத்தையே சார்ந்துள்ளதால் கால்வாய் பாசன ஏற்பாட்டுக்குக் கொடுக்கப்படுவதைப் போன்று அதே அளவு முக்கியத்துவம் ஏரிப்பாசன முறைகளை நவீனப்படுத்துவதற்கும் அளிக்கப்பட வேண்டும்.

ஏரிப்பாசன முறையை நவீனப்படுத்துவதன் மூலம் பாசனத் திறன் அளவு 44 சதவீதத்திலிருந்து 67 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதனால் இயக்க வரையிலான இழப்பு (operational losses) கசிவினால் ஏற்படும் இழப்பு, நிலத்தை பயன்படுத்தும் முறையில் ஏற்படும் இழப்பு ஆகியவற்றைக் குறைப்பதனால் ஏற்படும் மிச்சம் காரணமாக ஒவ்வொரு ஹெக்டேர் ஆயக்கட்டுப் பகுதியிலும் 0.40 ஹெக்டேர் அளவிற்குத் தேவையான தண்ணீர் மிச்சம் ஆகும். இவ்வகைப் பணிகளில் கிளை வாய்க்காலை மேம்படுத்துதல், கரை, மதகு, உபரி நீர் செல்வதற்கான ஏற்பாடு போன்ற ஏரியின் தொடர்

புடைய கட்டுமானங்களுடன் ஏரியைச் சீரமைத்தல் ஆகியவை அடங்கும். தேவையான சட்டுப்பாட்டு ஏற்பாடுகளுடன் 10 எக்டேர் வரை கிளை வாய்க்காலுக்கு கரை அமைக்கப்படும், தனியார் நிலங்களுக்கு நீர் வழங்கு வாய்க்கால்கள் அமைத்தல் உட்பட பண்ணை மேம்பாட்டுப் பணிகள் 2 எக்டேர் வரை கரை அமைத்தல், பகிர்வு பெட்டிகள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் நவீன வேளாண் நடைமுறைகள் ஆகியவற்றின் காரணமாக எக்டேர் ஒன்றில் உற்பத்தி செய்யப்படும். விளைச்சல் அதிகரிக்கும். இதனால் வேளாண் வேலை வாய்ப்பு பெருகுவதுடன், விவசாயிகளின் தனி நபர் வருமானமும் அதிகரிக்கும்.

என். ஏ. 83/18 ஆம் எண் நிதியுதவி ஒப்பந்தத்தின் கீழ் ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து பெற்ற 25 MECU மானியத்தைக் கொண்டு செங்கை-அண்ணா, வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், தென் ஆற்காடு, புதுக்கோட்டை, பசும்பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம், க்ாமராஜர் ஆகிய மாவட்டங்களில் தலா 200 எக்டேருக்கும் குறைவான ஆயக்கட்டுள்ள 150 மழை நீர் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் 1984 ஜூலைத் திங்களில் மேற் கொள்ளப்பட்டது. இவை ஏழாண்டு காலத்தில் அதாவது 31—3—1991க்குள்ளாக நிறைவேற்றப்படும். MECU வின் அந்நியச் செலாவணி மதிப்பு 1984 ஜூலைத் திங்களில் ரூ. 9.50 ஆக இருந்தது. 1988 ஆம் ஆண்டு ரூ. 16 ஆக உயர்ந்தது. இதன் காரணமாக இத்திட்டத்தின்கீழ் மேலும் 56 ஏரிகளை நவீனப்படுத்துவதற்காக பணிகளை மேற்கொள்ள முடிந்தது. அரசு மேற்கண்ட 206 ஏரிகளையும் நவீனப்படுத்தும் பணிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

206 ஏரிகள் குறித்த மாவட்ட வாரியான தொகைப் பங்கீடு விவரங்கள் வருமாறு :—

| தொடர் எண்ணும் மாவட்டமும். | எண்ணிக்கை. | தொகை. | நிகர பயன் பெறும் பரப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | (ஹெக்டேரில்) |
| 1 செங்கை-அண்ணா | 38 | 835.62 | 5,777 |
| 2 வட ஆற்காடு அம்பேத்கார் மற்றும் | 34 | 637.75 | 4,502 |
| 2ஏ திருவண்ணாமலை சம்புவராயர். | | | |
| 3 தென் ஆற்காடு | 36 | 796.16 | 4,833 |
| 4 புதுக்கோட்டை .. | 27 | 559.25 | 3,698 |
| 5 பசும்பொன் தேவர் திருமகன். | 24 | 561.11 | 3,250 |
| 6 இராமநாதபுரம் .. | 25 | 602.11 | 3,623 |
| 7 காமராஜர் .. | 22 | 448.63 | 3,097 |
| மொத்தம் .. | 206 | 4,440.63 | 28,780 |



1989-90 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு ரூ. 933.98 இலட்சமாகும். இத்தொகையினை 47 பணிகளுக்குச் செலவிடுவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கூடுதலாக 800 எக்டேர் பாசன வசதி பெறும். 1990-91 ஆம் ஆண்டில் 1,060 எக்டேருக்குக் கூடுதல் பாசன வசதி அளிப்பதற்காக ரூ. 470 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த முதற் கட்ட பணிகள் 1991 மார்ச்சுத் திங்களில் முடிக்கப்படும்.

இரண்டாவது கட்டம் :

ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் முதற் கட்டப் பணிகள் வெற்றிகரமாகச் செயற் படுத்தப்பட்டதனால் மன நிறைவு கொண்ட ஐரோப்பிய பொருளாதாரக் குழு இத்திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளுக்கு அனுமதி வழங்கியது.

ஏரிகளை நவீனப்படுத்தும் இரண்டாவது கட்டப் பணியில் இரு திட்டங்கள் அடங்கும். முதல் திட்டம், செங்கை-அண்ணா, வட ஆற்காடு, அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், தென் ஆற்காடு, புதுக்கோட்டை, பசும்பொன் தேவர் திருமகன்,

இராமநாதபுரம், காமராஜர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திண்டுக்கல்-காயிதே மில்லத், திருநெல்வேலி கட்டபொம்மன் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் தலா 100 எக்டேர் முதல் 200 எக்டேர் வரை ஆயக்கட்டுப் பகுதிகளைக் கொண்ட 150 மழை நீர் ஏரிகளை நவீனப்படுத்துவதாகும். மற்றொரு திட்டம் பசும்பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம், காமராஜர், புதுக்கோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களிலுள்ள 80 முன்னாள் ஜமீன் ஏரிகளை நவீனப்படுத்துவதற்கான முன்னோடித் திட்டமாகும்.

150 பெரிய ஏரிகளை நவீனப்படுத்துவதன் மூலம் 20,302 எக்டேரும், 80 சிறிய முன்னாள் ஜமீன் ஏரிகளை நவீனப்படுத்துவதன் மூலம் 2,080 எக்டேரும் பயனடையும்.

இத்திட்டத்திற்கான மொத்த செலவு 33.20 MECU ஆகும். இதற்குச் சமமான இந்தியப் பணம் ரூ. 53.12 கோடியாகும். இதில் ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் மானியத் தொகை 24.50 M.ECU அதாவது ரூ. 39.20 கோடி ஆகும். தமிழக அரசின் பங்கு 8·70 M.EC U அதாவது ரூ. 13.92 கோடி ஆகும். இரண்டாவது கட்ட திட்டத்திற்காக ஐரோப்பிய பொருளாதாரக் குழுவுடன் 1989 ஏப்ரல் திங்களில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அரசு 10—8—1989 ஆம் நாளன்று 50 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கியது. தொழில் நுட்ப அனுமதியும் 55 கோடி ரூபாய்க்கு வழங்கப்பட்டது. 80 சிறிய முன்னாள் ஜமீன் ஏரிகளை நவீனப்படுத்துவதற்குரிய முன்னோடித் திட்டத்தின் செயலாக்கத்தையும், பயன்களையும், மதிப்பிட்ட பின்னர் ஐரோப்பிய பொருளாதாரக்குழு பசும்பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம், புதுக்கோட்டை, காமராசர் ஆகிய நான்கு மாவட்டங்களிலுள்ள 5,585 முன்னாள் ஜமீன் ஏரிகளையும் நவீனப்படுத்துவதற்கான திட்டத்திற்கு ஏற்பளிக்க வாய்ப்புகள் உள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 11—8—1989 அன்று இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ், 6 ஏரித் திட்டங்களுக்கு 20—9—1989 அன்று அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் மேற்கொண்டும் 8 ஏரித் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படும். 1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 730 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்தம் ரூ. 50 கோடி செலவில் 300 ஏரிகளை நவீனப்படுத்துவதற்கு மேற்கு ஜெர்மனியிடமிருந்து நிதியுதவி பெற அரசு தனியே நடவடிக்கை எடுத்து வருகிறது.



## மாவட்டச் செயல் திட்டம்.

தமிழ்நாட்டில் முனைப்பான வேளாண்மை உற்பத்திக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட பின்னரும் மாவட்டங்களிலுள்ள 223 சிறு பாசன ஏரிகளைத் தரம் உயர்த்துவதற்கு 1988-89, 1989-90 ஆம் ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி சிறப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 320 இலட்சம் திட்ட முன் உதவி வழங்க, மத்திய அரசு முடிவு செய்தது. இதனால் கூடுதலாக 2,186 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1. செங்கை-அண்ணா.

2. வட ஆற்காடு-அம்பேத்கார் (சம்புவராயர் மாவட்டம் உட்பட).

3. தென் ஆற்காடு.

4 திருச்சிராப்பள்ளி.

5. புதுக்கோட்டை

6. மதுரை.

7. காயிதே மில்லத்.

8. திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார்.

இத்திட்டத்தின் கீழ் 1988-89 ஆம் ஆண்டு ரூ. 160 இலட்சம் செலவிடப்பட்டது. கூடுதலாக 640 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்றன.

வேளாண் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற் காக சிறு பாசனப் பணிகளுக்கென ரூ. 100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகை, செங்கை-அண்ணா, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், பெரியார், புதுக்கோட்டை, மதுரை, திண்டுக் கல்-காயிதே மில்லத், பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார், ஆகிய மாவட் டங்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக் கப்பட்ட மேற்சொன்ன மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிந்துரைத்துள்ள, தனி ஏரிகளில் (Non-System ) கரைகளை வலுப்படுத்தல், கிளை வாய்க்கால்களை புதுப்பத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இது போன்று மொத்தம் 762 பணிகள் முடிக்கப்பட்டன. இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 99.67 இலட்சமாகும்.

வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் :

வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்காக ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 9.00 கோடியாகும். முதல் நான்கு ஆண்டுகளில், ரூ. 7.47 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் (1989-90) ரூ. 0.36 கோடி செலவிடப்படக்கூடும். 1990-91ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கீடு ரூபாய் 0.50 கோடியாகும்.

2. வைகை ஆற்றில் வெள்ளத் தடுப்புக் கரை அமைத்தல், பார்த்திபனூர் மதகுக்கு கீழே அமைந்துள்ள வெள்ளத்தால் சேதமடைந்த வாய்க்காலைச் சீரமைத்தல் ஆகிய பணிகள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பெரும் பணிகளாகும். சில சிறு பணிகள் தவிர, எல்லா பணிகளும் முடிக்கப்பட்டு விட்டன.

காலநிலைமைகள்.

1989-90 ஆம் ஆண்டில், காவிரி, பெரியாறு, தாமிரபரணி, பரம்பிக்குளம்-ஆழியாறு, பகுதிகளின் மேல் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை இயல்பான அளவுக்கு இருந்தது. 1989 ஆம் ஆண்டு சூலைத் திங்களின் பிற்பகுதியில் தான் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், பருவமழை தீவிரமடைந்தது. சிதம்பரனார், கன்னியாகுமரி, நீலகிரி, தென் ஆற்காடு மாவட்டங்கள் தவிர, தமிழ்நாடு முழுவதும் பருவமழை இயல்பாக அல்லது இயல்புக்குக் கூடுதலாக இருந்தது.

2. சாதாரணமாக, வட கிழக்குப் பருவமழை அக்டோபர் திங்கள் மூன்றாம் வாரத்தில் தொடங்குகிறது. இந்த ஆண்டு பாசனப் பருவத்தில் வட கிழக்குப் பருவமழை, அக்டோபர் திங்கள் கடைசி வாரத்தில் தொடங்கியது. மழையும் அவ்வளவு தீவிரமாக இல்லை. அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் மழை குறைவாகவே இருந்தது. 1990 ஜனவரியில், 6 முதல் 9 தேதி வரை, குறைந்த காற்றழுத்தம் காரணமாக திடீரென மழை பொழிந்தது. இந்த மழைதால் தாமிரபரணி, காவிரி ஆகிய ஆறுகளில் திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இந்த மழை, காவிரி கழிமுகப் பகுதியில் பயிர்களுக்கு உதவியாக இருந்ததோடு மட்டுமின்றி, மேட்டூர் நீர்த்தேக்கத்தில் ஓரளவுக்கு நீரைச் சேமிக்கவும் உதவியது.

காவிரி வடிநிலம்.

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் போதிய அளவுக்குத் தண்ணீர் இல்லாததால், வழக்கமாகத் திறந்து விடப்படும் சூன் மாதம் 12 ஆம் தேதி அன்று பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்





படவில்லை. இந் நீர்த்தேக்கம் சுமார் இரண்டு மாத கால தாமதத்திற்குப் பிறகு, அதாவது 20— 8— 1989 அன்றுதான் பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டது. காவிரி கழிமுகப்பகுதியில் தொடக்கத்திலிருந்தே முறை வைத்துப் பாசனம் அளிக்கும் ஏற்பாடு பின்பற்றப்பட்டது. இந் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக, தண்ணீர் காலதாமதமாகத் திறந்து விடப்பட்டதன் காரணமாக, சாதாரணமாக, சுமார் 5 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட வேண்டிய குறுவைப் பயிர் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக இந்த ஆண்டும் பயிரிடப்படவில்லை. குறுகிய கால ஒரு போகப் பயிரை மட்டும் பயிரிடுமாறு உழவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேட்டூர் நீர்த்தேக்கத்தின் கீழ் வருகின்ற பாசன ஏற்பாடுகள் அதாவது (சேலம், பெரியார் மாவட்டங்களில்) மேட்டூர் கால்வாய்கள் (திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில்) புதிய கட்டளை உயர்மட்டக்கால்வாய் மற்றும் புள்ளம்பாடி கால்வாய் ஆகியவை முறையே 3— 9— 1989, 10— 9—1989 ஆகிய நாட்களில் (வழக்கமாக தண்ணீர் திறந்துவிட வேண்டிய நாள் ஆகஸ்டு முதல் தேதி ஆகும்). பாசனத்திற்குத் திறந்துவிடப்பட்டன.

காவிரி கழிமுக பாசன ஏற்பாட்டில் 11 இலட்சம் ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பில் பயிர் விளைவிக்கப்பட்டது. 1990 ஜனவரித் திங்கள் இரண்டாம் வாரத்தில் தொடங்கி, 1990 பிப்ரவரித் திங்கள் இறுதியில் பெரும்பாலான அறுவடை முடிந்துவிட்டது. காவிரி கழிமுகக் பகுதியில் கடைசியாகப் பெய்த வட கிழக்கு பருவ மழை போதுமானதாக இல்லை. இதனால், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் எதிர்ப்பார்த்த அளவிற்கு நீர் சேரவில்லை இந்த அரசு கருநாடக அரசை அணுகி, 9— 1— 1990 அன்று நடத்திய பேச்சு வார்த்தையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களைக் காப்பாற்ற கருநாடக மாநிலத்தில் உள்ள நீர்த்தேக்கத்திலிருந்து 30 டி.எம்.சி. தண்ணீரை விடுமாறு கேட்டுக்கொண்டது. காவிரி கழிமுகப் பகுதியில் 1990 ஜனவரித் திங்கள் 6 முதல் 9 தேதி வரை பெய்த மழை, பயிரிடப்பட்டுள்ள பயிர்களைக் காப்பாற்றியதோடு மட்டுமின்றி மேட்டூர் நீர்த்தேக்கத்தில் ஓரளவு நீரைச் சேமிக்கவும் உதவியது. கழிமுகப் பாசனப் பகுதிகளுக்கு 22—1— 1990 ஆம் நாளன்று மாலை சுமார் 6 மணிக்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டு, 1990 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் வாரம் வரையில் தொடர்ந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடப்பட்டது. விரிவான பேச்சுவார்த்தைக்குப் பின்னர், கருநாடக அரசு கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்திலிருந்து 5 டி.எம்.சி. தண்ணீரை விட ஒப்புக் கொண்டது. 6— 2— 1990 முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டு 12— 2— 1990 அன்று நிறுத்தப்பட்டது.

24,500 ஏக்கர் பரப்பளவிற்குப் பாசனமளிக்கும் பழைய பவானி வாய்க்கால்கள், அதாவது அரக்கன் கோட்டை தாடப்

பள்ளி ஆகிய வாய்க்கால்கள் 1—5—1989 அன்று திறந்துவிடப்பட்டன. 14,000 ஏக்கர் பரப்பளவிற்குப் பாசனமளிக்கும் காளிங்கராயன் வாய்க்கால் 27—7—1989 அன்று திறந்து விடப்பட்டது.

கீழ் பவானி கால்வாய்த் திட்டத்தின் கீழ் 1,03,500 ஏக்கர் பரப்பளவிற்குப் பாசனமளிக்கும் முதல் முறை ஆயக்கட்டு நிலங்களுக்கு, வழக்கமான நாளில் (15—8—1989ஆம் நாளன்று) தண்ணீர் திறந்து விடப்பட்டது. பாசனப் பகுதிகளில் பருவ மழை போதிய அளவில் பெய்யாததால், 15—1—1990 ஆம் நாள் வரையிலும் தண்ணீர் விட அனுமதிக்கப்பட்டது. நீர்த்தேக்கத்தில் போதிய அளவு நீர் இல்லாததால், பாசனத்திற்கு இரண்டாம் முறை தண்ணீர் விட முடியவில்லை.

அமராவதி நீர்த்தேக்கத்திலிருந்து பாசனம்பெறும் பழைய ஆயக்கட்டு நிலங்களுக்கு (31,200 ஏக்கர்களுக்கு) 26—7—1989 ஆம் நாள் முதற்கொண்டு தண்ணீர் விடப்பட்டது. அமராவதி நீர்த்தேக்கத்தில் தண்ணீர் 1—8—1989 அன்று முழு நீர்த்தேக்க அளவை எட்டியது. அமராவதி பிரதான கால்வாய் வழக்கம் போல் ஆகஸ்டு 1ஆம் நாள் திறந்து விடப்பட்டது. 1990 ஜனவரியில் மழை பெய்ததன் காரணமாக, நீர்த்தேக்கத்திற்கு நிறைய நீர் வந்தது. பயிர்களுக்குத் தேவையான அளவைக் காட்டிலும் அதிகமாகவே தண்ணீர் இருப்பு உள்ளது.

பெரியாறு :

பெரியாறு பிரதானக் கால்வாயின்கீழ் வருகின்ற இருபோகப் பயிர் சாகுபடி பகுதிக்கு 28—7—1989 அன்றும் (வழக்கமான தேதி ஜூன் முதல் நாள்) ஒருபோகப் பயிருக்கு, வழக்கமான தண்ணீர் திறந்து விடுகின்ற நாளான ஆகஸ்டு 15 ஆம் நாளன்றும் தண்ணீர் திறந்து விடப்பட்டது. திருமங்கலம் பிரதான கால்வாய் 1—9—1989 அன்று திறந்துவிடப்பட்டது. பெரியாறு புதிய விரிவாக்கப் பகுதிக்கு 15—9—1989 முதல் பாசனத்திற்காக நீர் திறந்து விடப்பட்டது. பெரியாறு-வைகை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவியுடன் மேம்படுத்தப்பட்ட திருமங்கலம் கால்வாயின் கீழ் உள்ள 2,300 ஏக்கர் புதிய பரப்பளவிற்கு முதல் முறையாக 15—9—1989 முதல் நீர் திறந்து விடப்பட்டது. 1990 ஜனவரி 6 ஆம் நாளுக்கும் 9 ஆம் நாளுக்கும் இடையே பெய்த மழையினால் நல்ல நீர்வரத்து இருந்தது. பெரியாறு-வைகை நீர்த்தேக்கத்தில் தற்போதுள்ள இருப்புப் பாசனத் தேவைகளை நிறைவு செய்யவும் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்யவும் போதுமானது.



தாமிரபரணி :

தாமிரபரணி வாய்க்கால் 86,000 ஏக்கருக்குப் பாசனம் அளிக்கிறது. மொத்தமுள்ள 11 வாய்க்கால்களில், முதல் நான்கு வாய்க்கால்களில் 9—6—1989 முதல் நீர்விடப்பட்டது. அடுத்த 5 வாய்க்கால்களில் 23—6—1989 முதல் நீர் விடப்பட்டது. கடைசி இரண்டு வாய்க்கால்களில் 19—7—1989 முதல் நீர் விடப்பட்டது. பாசனப் பயிருக்காகத் தொடர்ச்சியாக நீர் விடப்பட்டது. 11 வாய்க்கால்களிலும் பாசனத்திற்காக நீர் விடுவது 31—3—1990 அன்று நிறுத்தப்பட்டது.

மணிமுத்தாறு :

1989-90 பாசனப் பருவத்திற்குரிய சுழல் முறைப்படி, 3-வது 4-ஆவது பாசனப் பகுதிகள் முன்னுரிமை பெறுகின்றன. அவ்வாறே, ஏரிகள் அனைத்திற்கும் 3 ஆவது பகுதியில் 93 ஏரிகளுக்கும், 4 ஆவது பகுதியில் 73 ஏரிகளுக்கும் தண்ணீர் விடப்பட்டது.

1 ஆவது 2 ஆவது, பாசனப் பகுதிகளைச் சேர்ந்த ஆயக்கட்டுதாரர்களிடமிருந்து தொடர்ந்து முறையீடுகள் வந்தன. மாவட்ட ஆட்சியரும் பொதுப்பணித்துறை அதிகாரிகளும் பார்வையிட்ட பின்னர், முதல், இரண்டாவது பாசனப் பகுதிகளில் அருகில் உள்ளதும் பிரதான கால்வாயிலிருந்து நேரடியாக நீர் பெறுவதுமான ஏரிகள் சிலவற்றிற்கு நீர் விட முடிவு செய்யப்பட்டது. அவ்வாறே, முதல் பகுதியில், 29 ஏரிகளுக்கும் (66 ஏரிகளில்) இரண்டாவது பகுதியில் 19 ஏரிகளுக்கும் (75 ஏரிகளில்) நீர் விட அனுமதிக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டில் பாசனத்திற்கு நீர் விடுவது 15—3—1990 அன்று நிறுத்தப்பட்டது.

கோதையாறு :

96,000 ஏக்கருக்குப் பாசனமளிக்கும் கோதையாறு, பட்டணங்கால், இராதாபுரம் கால்வாய்களில் முறையே 23—6—1989, 30—6—1989, 25—8—1989 ஆகிய நாட்களில் பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இவை முறையே 31—12—1989 15—3—1990 ஆகிய நாட்களில் மூடப்பட்டது.

பொன்னியாறு :

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக, வழக்கமாக, ஆகஸ்டு மாதம் முதல் நாள் நீர் திறந்துவிடப்படும். உழவர்களிடமிருந்து முறையீடுகள் வரப்பெற்றதன் பேரில், கிருஷ்ண

கிகி பிரதான கால்வாய் 5—11—1989 அன்று பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது. இந்த நீர்த்தேக்கத்தில் பாசனத்திற்குத் தேவையான தண்ணீர் உள்ளது.

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் (4—11—1989 அன்று இது முழு நீர்த்தேக்க அளவை எட்டியது). உபரி நீர் சாத்தனூர் நீர்த் தேக்கத்தில் சேர்ந்தது. எனினும், அக்டோபர் முதல் நாளன்று பாசனத்திற்கு திறந்து விடப்பட வேண்டிய சாத்தனூர் வலது பக்கக் கால்வாய் போதுமான நீர் இல்லாததால் திறந்து விடப் படவில்லை. டிசம்பர் 15ஆம் நாள் திறந்து விடப்பட வேண்டிய சாத்தனூர் இடது பக்கக் கால்வாயும் திறந்துவிடப்படவில்லை. இருக்கின்ற நீர் சாத்தனூர், இடது பக்கக் கால்வாயின்கீழ் உள்ள ஏரிகள் சிலவற்றை நிரப்ப 4—1—1990 முதல் திறந்து விடப் பட்டது.

**பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம்.**

நடப்பாண்டின் முற்பகுதியில் (1989-90), ஆழியாறு வடி நிலப் பகுதியில் உள்ள 22,348 ஏக்கர் பாசனப் பகுதிக்கு நீர் திறந்துவிட வேண்டியிருந்தது. ஆகஸ்டு 15ஆம் நாள் பாசனம் பெற வேண்டி இந்தப் பாசனப் பகுதிகள், 20—12—1989 முதற் கொண்டு பாசனம் பெற்றன; இப்பாசனப் பகுதிகளுக்கு, 4—5—1990 அன்று தண்ணீர் நிறுத்தப்படவுள்ளது. பரம்பிக் குளம்-ஆழியாறு நீர்த்தேக்கங்களில், நீர் இருப்பு போதுமான தாக இல்லாததாலும், தென் மேற்குப் பருவ மழை தாமதித்த தாலும், நீரைத் திறந்து விடுவதில் காலதாமதம் ஏற்பட்டது.

பின்னர், நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு அதிகரித்ததால், நடப்பு ஆண்டின் (அதாவது 1989-90) முதல் பயிர்ப் பருவ காலத்தில் ஜூலை 1 ஆம் நாளிலிருந்து 15—11—1989 ஆம் நாள் வரையில் பாசனம் பெற வேண்டிய பாலாறு வடிநிலப் பகுதியில் உள்ள 76,497 ஏக்கர் நிலப்பரப்பு பரம்பிக்குளம் முதன்மைக் கால்வாய் மூலமாக (மண்டலம் 2) 8—8—1989 முதல் 22—12—1989 வரை பாசனம் பெற்றது.

மேலும், பாலாறு வடிநிலப் பகுதியில் உள்ள 60,000 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பரம்பிக்குளம் முதன்மைக் கால்வாய் மூலமாக (மண்டலம்-3) 17—11—1989 அன்று நீர் திறந்து விடப்படு வதாக இருந்தது; பின்னர், இரண்டாம் பயிர்ப் பருவ காலத்தில் 22—12—1989 முதல் நீர் திறந்துவிடப்பட்டது; இப்பாச னப் பகுதிகளுக்கு 5—5—1990 அன்று தண்ணீர் நிறுத்தப்பட வுள்ளது.



மேற்கூறிய பாசனத்திற்காக நீர் திறந்துவிடப்பட்டதுடன், வறட்சியால் ஏற்பட்ட குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கு வதற்காகவும் நீரின்றி வாடுகின்ற தென்னந்தோப்புகளை காப் பாற்றுவதற்காகவும், நீர்க்குட்டைகளுக்குத் தண்ணீர் விடு மாறு பொது மக்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலி யோரிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகளின் அடிப்படையில் அவ் வப்போது நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

முதற்பருவப் பயிர்க்காலத்தில், மொத்தமுள்ள 22.91 இலட் சம் ஏக்கர் பரப்பில், 22.33 இலட்சம் ஏக்கர் பரப்புக்குப் பாசனத் திற்காக நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

சம்பா பருவகாலத்தில் சாதாரணமாக 11.33 இலட்சம் ஏக்கர் பாசனப் பரப்பளவுக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டி யிருக்க வட கிழக்குப் பருவ மழை வழக்கமான அளவுக்கு இல் லாததால் 5.15 இலட்சம் ஏக்கர் பரப்பளவுக்கு மட்டுமே பாச னத்திற்குத் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. பாசனம் அளிக் கப்படாத மொத்தமுள்ள 6.23 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் காவிரி வடிநிலப் பகுதி மட்டுமே 5.54 இலட்சம் ஏக்கராகும். (மேட்டூர் நீர்த்தேக்க ஆயக்கட்டில் 4.50 இலட்சம் ஏக்கரிலும், பவானி சாகர் நீர்த்தேக்க ஆயக்கட்டில் 1.04 இலட்சம் ஏக்கரிலும் சாகுபடி செய்யப்படவில்லை.)

இவ்வாறாகப் பெரும் பாசனம், நடுத்தரப் பாசனம் என்பதன் கீழ், சாதாரணமாக 34.29 இலட்சம் ஏக்கர் பரப்பளவு பாசனம் பெற வேண்டியிருக்க 1989-90-ஆம் ஆண்டில் பாசனத்திற்காக மொத்தம் 27.48 இலட்சம் க்கர் பரப்பளவுக்குத்தான் தண் ணீர் திறந்துவிடப்பட்டது.

**காவிரி நீர்ப் பிரச்சினை.**

மைய அரசின் விருப்பப்படி 1970ஆம் ஆண்டு முதற் கொண்டே பேச்சு வார்த்தைகளை நடத்தியும், காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண வழி எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் சுமூகமான தீர்வு காண வழிவகுக்கத் தவறின. மத்திய அரசு 1986 ஜூன் 16 ஆம் நாள் நடத்திய கூட்டத்தில் நடுவர் மன்றம் ஒன்றை அமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. இதைத் தொடர்ந்து, 1956ஆம் ஆண்டு பன் மாநில நீர்த் தகராறுகள் சட்டத்தின் 3ஆம் பிரிவின்படி, காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு அனுப்புமாறு, தமிழ்நாடு 1986 ஜூலை 6 ஆம் நாள் மத்திய அரசை முறையாகக் கேட்டுக் கொண்டது. மத்திய அரசு இந்நடுவர் மன்றத்தை இன்னும் அமைக்கவில்லை.

இதற்கிடையில், தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளை பொருட்கள், விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம், காவிரி நீர்த் தகராறை நடுவர் மன்றத்திற்கு அனுப்ப மத்திய அரசுக்குக் கட்டளையிடுமாறு கோரி, தாக்கல் செய்த ரிட் மனுவின் மீது இந்திய உச்ச நீதி மன்றம் 1988 ஜூலை 18ஆம் நாள் பிறப்பித்த ஆணையின் அடிப்படையில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், இப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காணும் நோக்குடன் கர்நாடக மாநில முதலமைச்சருடன் 1988 செப்டம்பரில் பேச்சு வார்த்தை நடத்தினார். ஆனால், இரு தரப்பிலும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பொதுவான உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. இது குறித்து; உச்ச நீதி மன்றத்திற்கு 1988 செப்டம்பர் 30ஆம் நாள் அன்று தெரிவிக்கப்பட்டது.

தற்போதுள்ள அரசு பதவி ஏற்றதும், நமது முதலமைச்சர் அவர்களே பேச்சு வார்த்தை மூலமாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காண மீண்டும் ஒரு முறை முயற்சிகள் மேற்கொண்டார். இரு தரப்புப் பேச்சு வார்த்தைகள் 28- 4- 1989 அன்று நடைபெறுவதாக இருந்தது. ஆனால் பேச்சு வார்த்தை நடைபெற இருந்த சில நாட்களுக்கு முன்பாக, கருநாடக மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் வந்தது. அவ்வாறிருந்தும், நமது முதலமைச்சர் அவர்கள், இப்பிரச்சினைப்பற்றி விவாதிக்க ஒரு வாய்ப்பளிக்குமாறு கருநாடக ஆளுநரைக் கேட்டுக் கொண்டார். எனினும், கருநாடக மாநில ஆளுநர் அவர்கள், தன்னுடைய மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் இருக்கின்ற நிலையில் சிக்கல் வாய்ந்த, முக்கியமான கொள்கை முடிவு எடுக்க வேண்டிய ஒரு பிரச்சினைக்கு தன்னால் உறுதியான ஒரு முடிவு எடுக்க இயலாது என்றும், இரு அரசுகளின் நலனைக் கருதிப் பார்க்கையில், கருநாடகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் இப்பிரச்சினையை விவாதிப்பது நல்லது என்றும் கருநாடக மாநில ஆளுநர் கருத்துத் தெரிவித்தார்.

1989 ஜூலையில் நடைபெற்ற, சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொண்டும் காலதாமதம் செய்யாமலும், கருநாடக மாநிலத்துடன் மேற்கொண்டும் பேச்சு வார்த்தை நடத்திக் காத்திருக்காமலும், நடுவர் மன்றம் ஒன்றை அமைக்க மத்திய அரசை வலியுறுத்த ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. அதன்படி இந்தத் தகராறை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுமாறு, நமது முதலமைச்சர் அவர்கள், அப்போதைய பிரதமருக்கு 1989 ஆகஸ்டில் கடிதம் எழுதினார். இப்பிரச்சினை நீர்வளங்கள் நிருவாக மத்திய அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அப்போதைய பிரதமர் பதிலளித்தார்.

காவிரி நீர்த் தகராறைத் தீர்த்து வைக்க நடுவர் மன்றம் ஒன்றை அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, நமது முதல்வர் அவர்கள், தற்போதுள்ள பாரதப் பிரதமருக்கு [illegible] 1989 அன்று மீண்டும் கடிதம் எழுதியுள்ளார்.



காவிரி நீர்ப் பிரச்சினைப்பற்றி பேச்சு வார்த்தை நடத்திச் சுமுகமான முடிவு காண்பதற்காக தற்போதுள்ள கருநாடக மாநில முதலமைச்சர், தமிழ்நாடு மாநில முதலமைச்சருடன் பெங்களூரில் 16—2- 1990 அன்று நடத்தவிருந்த கூட்டம், எதிர்பாராத சூழ்நிலைகளினால் நடைபெறவில்லை.

இந்திய உச்ச நீதிமன்றத்தில் விசாரணை முடிவுறாமல் இருந்த ரிட்மனு, 26- 2—1990 அன்று விசாரணைக்கு வந்தது. மார்ச்சு மாதத்தில், காவிரி வடிநிலப் பகுதியில் அமைந்த மாநிலங்களின் முதலமைச்சர்களிடையே பேச்சு வார்த்தைகள் நடத்துவதன் மூலமாக, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண மீண்டும் ஒரு முயற்சி எடுக்கப்படும் என்று நீதிமன்றத்தில் இந்தியத் தலைமைச் சட்ட முகவர் தெரிவித்தார். உச்ச நீதிமன்றம் இவ்வழக்கை 24-4-1990 வரை ஒத்தி வைத்ததுடன், இதற்கிடையில் பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காணப்படவில்லை என்றால், நீதிமன்றம், இப்பிரச்சினையைத் தகுதி அடிப்படையில் விசாரணை செய்து முடிவு எடுக்கும் என்றும் உத்தரவிட்டது.

காவிரி நீரைப் பகிர்ந்து கொள்ளுவது பற்றி விவாதிக்க, மத்திய அரசு, வடிநிலப் பகுதியில் அமைநதுள்ள மாநிலங்களின் கூட்டத்தைப் புதுடில்லியில் 5—4— 1990 அன்று நடத்தியது. அதில் தொடர்புடைய நான்கு மாநிலங்களின் முதல்வர்களும் கலந்துகொண்டனர். அதைத் தொடர்ந்து மீண்டும் 19—4—90 அன்று தமிழ்நாடு-கருநாடக மாநில முதல்வர்கள் சென்னையில் கலந்துரையாட உள்ளனர். பின்னர் வடிநிலப் பகுதியைச் சேர்ந்த நான்கு மாநில முதல்வர்களும் மைய நீர்வள அமைச்சர் முன்னிலையில் 20—4- 1990 அன்று சென்னையில் கலந்துரையாட உள்ளனர். இம்முயற்சியில் வெற்றி பெறவில்லையானால் உடன் இப் பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டும் என நாம் வலியுறுத்துவோம்.

## கிருஷ்ணா நதி நீர் வழங்கல் திட்டம்.

சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவை அதிகரிக்கும் பொருட்டு, கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீர் பெறுவதற்கான இணைத் திட்டமாக, ஆந்திர-மாநில எல்லையில், தெலுங்கு கங்கைத் திட்டத்தின் முக்கியக் கூறுகளைச் செயலாக்குவதற்காக, தமிழ்நாடு அரசு 1983 ஏப்ரலில் ஆந்திர மாநில அரசுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துக் கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, ஆந்திர மாநிலத்தில் மேற்கொள்ளக் கூடிய பணிகளுக்காகும் செலவில் ஒரு பகுதியைத் தமிழ்நாடு மாநிலம் ஏற்க வேண்டும். நீர் வருகையில் ஏற்படும் இழப்பு நீங்கலாக ஆண்டொன்றுக்கு 12 டி.எம்.சி. நீர், சென்னைக் குடிநீர் வழங்கு திட்டத்திற்காக, ஆந்திர மாநில தமிழ்நாடு மாநில எல்லையில் வழங்கப்படும்.

2. 1989-90 ஆம் ஆண்டிற்கான வீதங்களில் மதிப்பிடப் பட்ட, ''சோமசீலா-நிலை-2'' பணிகள் உட்பட, ஆந்திர மாநில எல்லை வரையில் மேற்கொள்ளப்படும் நீர் வரத்துப் பணி களுக்காகும் மொத்தச் செலவு ரூ. 996 கோடி எனக் கணக்கிடப் பட்டுள்ளது. இச் செலவுத் தொகையில் தமிழ்நாட்டின் பங்கு ரூ. 252.05 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இத் தொகை யில், தமிழ்நாடு 1985 வரையில் ரூ. 47 கோடி கொடுத்துள்ளது. இத்திட்டத்திற்கு நிதி வழங்கும் முறையை முடிவு செய்வதில் இக்கட்டான நிலை காணப்பட்டதால், பணி முன்னேற்றம் தடைப்பட்டது.

3. தற்போதுள்ள அரசு பதவியேற்றவுடன், நமது முதல் அமைச்சர் அவர்கள், ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சரை இந்த இக்கட்டான நிலையை மாற்றும் பொருட்டு ஐதராபாத் தில் சந்தித்தார். பேச்சு வார்த்தைக்குப் பின்னர், கீழ்க் காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன:—

1. ஆந்திர மாநிலத்தில் பாசனப் பணியைத் தொடங்கவும் சென்னை மாநகருக்கு 1992-93 ஆம் ஆண்டிற்குள் குடிநீர் வழங் கவும் ஆந்திர மாநில அரசு தெலுங்கு கங்கைத் திட்டத்தின் அனைத்துக் கூறுகளையும் செயலாக்கும்.

2. தமிழ்நாடு அரசு உடனடியாக ரூ. 30 கோடியும், 31—3—1990ஆம் நாளுக்கு முன்னர் ரூ. 30 கோடியும் வழங்கும்.

3. ஒப்பந்தத்தில் ஏற்கனவே குறிப்பிட்டபடி, திட்டக் கூறுகள் வாரியான பங்குத் தொகை வழங்குவதைப் பொறுத்த மட்டில் 1990-91 முதல் இத்திட்டத்திற்கு ஆகும் செலவை ஆந்திர மாநிலமும், தமிழ்நாடு அரசும் சமமாக ஏற்கும்.

4. மேற்கூறிய முடிவைத் தொடர்ந்து, செலவுத் தொகையில் தமிழ்நாட்டின் பங்குத் தொகையாக, ரூ. 30 கோடி, 27—6—1989 அன்று ஆந்திர மாநிலத்திற்குக் கொடுக்கப்பட்டது. 1989 டிசம்பர் வரையில் ஆந்திர மாநில அரசுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 317.11 கோடியாகும். இதில், தமிழ் நாட்டின் பங்கு சுமார் ரூ. 83.61 கோடியாகும்.

5. நமது முதலமைச்சர் அவர்கள் 4—2—1990 அன்று, ஐதராபாத்தில், ஆந்திர மாநிலத்தின் தற்போதைய முதலமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடியபோது, திட்டத்தை விரைந்து செயலாக்குவதற்காக, தமிழ்நாட்டின் பங்குத்தொகை வகையில், ஆந்திர மாநிலத்திற்கு, 31—3—1990ஆம் நாளுக்கு முன்னர் மேலும் ரூ. 15 கோடி வழங்க ஒப்புக் கொண்டார். அதன்படி, தமிழ்நாடு அரசு, ஆந்திர மாநிலத்திற்கு ரூ. 15 கோடி வழங்கியது. 1988—89ஆம் ஆண்டிற்குரிய வீதங்களின்படி



ரூபாய் 252.05 கோடி பங்குத் தொகையில், ஆந்திர மாநில அரசுக்கு இதுவரை வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 92 கோடியாகும்.

6. ஆந்திர மாநிலத்திலிருந்து அலுவலர்கள் குழு ஒன்று 31—3—1990 அன்று சென்னைக்கு வந்து, தெலுங்கு கங்கைத் திட்டத்திற்குரிய பணி விவர அட்டவணை, நிதித் தேவைகள் ஆகியவை பற்றிய விவரங்களை நமது முதலமைச்சரிடம் தெரி வித்தது.

தமிழ்நாடு எல்லையில் பணிகள்.

(1) தமிழ்நாடு எல்லையிலிருந்து பூண்டி வரையில் கால்வாய் அமைக்கும் பணி, (2) பூண்டி நீர்த்தேக்கத்தின் முழு நீர்த் தேக்க அளவை இரண்டு அடி அதிகரிக்கும் பணி, (3) புழலேரி யின் முழு நீர்த்தேக்க அளவை 2 அடி அதிகரிக்கும் பணி, (4) செம்பரம்பாக்கம் ஏரியின் முழு நீர்த்தேக்க அளவை 2 அடி அதிகரிக்கும் பணி, (5) பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து செம்பரம் பாக்கம் ஏரிக்கு இணைப்புக் கால்வாய் அமைத்து, அதனை 3 பிரிவுகளாகப் பிரித்து ஒரு வட்டத்தின் நிருவாகப் பொறுப்பின் கீழ் கொண்டுவரும் பணி ஆகிய பணிகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

வன நிலங்கள் தவிர மாநில எல்லையிலிருந்து பூண்டி நீர்த் தேக்கம் வரையில் கால்வாயின் முழு நீளத்திற்கும் நிலத்தைக் கையகப்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 25.275 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் அமைக்க வேண்டியிருக்க, 0. கி. மீட்டருக்கும் 24 கி. மீட்டருக்கும் இடையே பல்வேறு இடங் களில் கால்வாய் வெட்டும் பணி நடந்தேறி வருகிறது. கால் வாயில் ரூ. 44 கோடிச் செலவில் மேற்கொள்ள வேண்டிய கட்டு மானப் பணிகளில், 36 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 27 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 9 பணி கள், பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பூண்டி நீர்த்தேக்கத்தின் முழு நீர்த்தேக்க அளவை அதிகரிப்ப தற்காக நிலத்தைக் கையகப்படுத்தும் பணி முடிக்கப்பட்டு, தற் போது கட்டுமானப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புழலேரி செம்பரம்பாக்கம் ஏரி ஆகியவற்றின் முழு நீர்த்தேக்க அளவையும் இணைப்புக் கால்வாயின் உயரத்தையும் அதிகரிக்கும் பணிக்காக, தேவைப்படும் அளவிற்கு நிலவரைபட விவர அட்ட வணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1989-90ஆம் ஆண்டிற்கென கருதப்பட்ட திருத்த மதிப்பீடு ரூ. 400 இலட்சமாகும். இதில் 1990 பிப்ரவரி வரையில் ஏற் பட்டச் செலவு ரூ. 368 இலட்சமாகும். இத் திட்டத்தை தொடங்கியது முதல் (அதாவது 1983 முதல்) ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 1991 இலட்சமாகும்.

[1990 மே, 2

இடைக்கால நடவடிக்கையாக, கிருஷ்ணா நதி நீர் வழங்கும் திட்டக் கால்வாய் வழியாக, ஆரணியாற்றிலிருந்து மழை நீரைக் கொரட்டலையாற்றுக்குத் திருப்பி விடுவதென்று முடிவு செய் யப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிக்கப்பட்டன. கடந்த வட கிழக்குப் பருவ மழையின்போது ஆரணியாற்றிலிருந்து சுமார் 300 மி.க. அடி மழை நீர், கொரட்டலையாற்றுக்குத் திருப்பி விடப்பட்டு, அதன் மூலம், சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கால்வாய் அமைப்புப் பணியின் தற்போதைய நிலையையும், சென்னை மாநகரின் குடிநீர் நிலை ஆண்டுக்கு ஆண்டு மோச மடைந்து வருவதையும் ஆராய்ந்த பின்னர், பாசன நீர் ஆதாரங் கள் குழு, கிருஷ்ணாநதி நீர் வழங்குத் திட்டத்தின் Iஆம் நிலைப் பணியை 3/93-க்குள்ளும், II ஆம் நிலைப் பணியை 3/96-க்குள்ளும் முடிக்க எவ்வளவு நிதி தேவைப்படும் என்பதையும் எவ்வளவு பணியாளர் தேவைப்படுவர் என்பதையும் கணக்கிட்டுள்ளது. மொத்தச் செலவுத் தொகையில், தமிழ்நாட்டுக்குரிய பங்குத் தொகையில் ஒரு பகுதியை, குறித்த காலத்தில் ஆந்திர மாநில அரசு பெற்றுக் கொண்ட பின்னர், இது தொடர்பாக மேற் கொள்ளும் பணிகளில் முன்னேற்றம் தெரிவதாலும், மேலும் 3/93க்குள் கிருஷ்ணா நதி நீரை வழங்குவதற்காக ஆந்திர மாநில அரசு உறுதியளித்துள்ளதாலும், கிருஷ்ணா நதி நீர் வழங்குத் திட்டத்தின் 1ஆம் நிலைப்பணியை 3/93க்குள் நாம் முடிக்க இயலும் என்று நம்புகின்றோம். ஆகவே, மேற்படி குழு, கூடுதல் பணியாளர்களுடன் 1990-91-ஆம் ஆண்டிற்கென்று வரவு-செல வுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் ரூ. 22.4 கோடி அனுமதிக்க பரிந் துரைத்துள்ளது. மாநிலத் திட்டக் குழு 11-12-1989 அன்று கலந்து பேசி கிருஷ்ணா நதி நீர் வழங்குத் திட்டத்திற்காக 1990-91 ஆம் ஆண்டிற்கென ரூ. 10 கோடி வழங்கப் பரிந் துரைத்தது.

<u>பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் :</u>

பரம்பிக்குளம்—ஆழியாறுத் திட்ட ஒப்பந்தத்தின் 5-சி பிரிவில் வகை செய்துள்ளவாறு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள ஏற்பாடு களை ஆய்வு செய்வதற்காகத் தமிழ்நாடு மாநிலப் பொதுப் பணித்துறை அமைச்சர், கேரள மாநில பாசனத்துறை அமைச்சர் ஆகியோருக்கிடையே இணக்கப் பேச்சு வார்த்தைகள் சென்னை யில் 1989 டிசம்பர் 21, 22 தேதிகளில் நடைபெற்றன. அப் போது துறை அதிகாரிகளும் இப்பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர். மேற்கொண்டும் பேச்சு வார்த்தைகளைத் திருவனந்தபுரத்தில் விரைவில் தொடரலாம் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.



1990 மே 2]

### ஆய்வுப் பிரிவு.

பொதுப்பணித்துறையின் ஆய்வுப் பிரிவு, தலைமைப் பொறியாளர் ஒருவரின் தலைமையில் 1975-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. பொதுப்பணித்துறையைச் சேர்ந்த இப் பிரிவு நீரின் அளவைக் கணக்கிட்டு நீர்வளத்தை மதிப்பிடுவதன் மூலம், வெவ்வேறு வடிநிலப் பகுதிகளிலுள்ள நீர் வளத்தை மதிப்பிடுவதோடு, பெரிய, நடுத்தர, சிறிய, சிறப்பு சிறுபாசனத் திட்டங்களைத் தயாரிக்கும் பணியையும், வண்டலை அகற்றிச் சீரமைக்கும் திட்டப்பணிகளையும் கவனித்து வருகிறது. ஐரோப்பிய பொருளாதாரச் சமூக நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஏரியை நவீனப்படுத்தும் திட்டங்களின் ஆய்வுப் பணியையும் இந்தப் பிரிவு மேற்கொள்கிறது.

2. தற்போது 16,722 ஏக்கர் பாசனப்பகுதிக்குப் பயனளிக்கும் ரூ. 40.3 கோடி செலவிலான இரு நடுத்தரப் பாசனத் திட் டங்களும் 84,864 ஏக்கர் பாசனப் பகுதிக்குப் பயனளிக்கும் ரூ. 241.80 கோடி செலவிலான 33 சிறுபாசனத் திட்டங்களும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

3. மேற்கூறியவற்றுடன் ரூ.252.63 கோடி செலவிலான 12 பாசனத் திட்டம் தொடக்க அறிக்கைகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவை அரசின் பரிசீலனையில் இருக்கின் றன. அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

4. இந்த நிதியாண்டில் (1990-91), 22 சிறிய மற்றும் நடுத் தரப் பாசனத் திட்டங்களை ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண் டும் என்றும் அத்துடன் இதே கால அளவில் 22 சிறிய மற்றும் நடுத்தரப் பாசன ஆய்வுகளை இறுதியாக்க வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டிருக்கின்றன.

மேற்குறிப்பிட்டவற்றுடன் மொத்தம் 1,25,594 ஏக்கர் பரப்புடைய பாசனப் பகுதிக்குப் பயனளிக்கும் வகையில் ரூ. 68.50 கோடி செலவிலான இரண்டு பாசன நவீனத் திட் டங்கள் அதாவது (1) கோதையாறு நவீனத் திட்டமும் (2) பொன்னியாறு நவீனத் திட்டமும் அமெரிக்க நாட்டு உத வியைப் பெறுவதற்காக, அரசுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

ஆண்டுத் திட்டத்தில் (1990-91) 6 சிறுபாசனத் திட்டங் களும், ஒரு சிறப்பு சிறுபாசனத் திட்டமும் அனுமதிக்காக சேர்க்கப்பட்டுள்ளன.

சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ், ரூ. 14.480 கோடி செலவில் 94 திட்டங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அனுமதிக்காக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவற்றில்,

37 திட்டங்களை நில நிருவாக ஆணையாளர் அரசுக்குப்
பரிந்துரைத்துள்ளார். இத்துடன், வறட்சிப் பகுதித் திட்டந்
தின் கீழ் ரூ. 4.77 இலட்சம் செலவிலான ஒரு திட்டமும் அர
சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ. 8.35 கோடி
செலவிலான 102 சிறப்புச் சிறுபாசனத் திட்ட மதிப்பிடுகள்
ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்
கீழ் செயல்படுத்துவதற்காக தலைமைப் பொறியாளருக்கு (சிறு
பாசனம்) அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த, 93
பொதுப்பணித்துறை ஏரிகள், முன்னாள் ஜமீன் ஏரிகளில், 85
ஏரிகளை ரூ. 24.57 கோடி செலவில் ஐரோப்பிய பொருளாதார
சமுக நிதி உதவியுடன் நவீனப்படுத்துவதற்கான மதிப்பீடுகள்
தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த நிதியாண்டில் (1990-91) 176 புதிய சிறப்புச்
சிறுபாசனத் திட்டங்களை ஆய்வு செய்யும் பணியை மேற்கொள்ள
வும், ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்ட 132 சிறப்பு சிறுபாசனத்
திட்ட ஆய்வுகளை இறுதியாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 1990-91ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் ஆய்வு :

சுமார் 52 நீர்த்தேக்கங்களையும் 39,000-க்கும் சிறிது அதிக
மான ஏரிகளையும் கட்டியதன் மூலம் பயன்படுத்தத்தக்க நில
மேற்பரப்பு நீரைப் பெரும்பாலும் பயன்படுத்திய சில மாநிலங்
களில் தமிழ்நாடு ஒன்றாகும். இம்மாநிலத்துல் சுமார் 52 நீர்த்
தேக்கங்கள், 39,000-க்கும் மேற்பட்ட ஏரிகள் ஆகியவற்றின்
மூலம் நிலமேற்பரப்பு நீர் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்
நாட்டில், தற்போதுள்ள சுமார் 17 இலட்சம் பாசனக் கிணறு
களில், சுமார் 12.60 இலட்சம் பாசனக் கிணறுகளுக்கு மின்
இணைப்பு வழங்கி பெருமளவுக்கு நிலத்தடி நீர் ஆதாரங்களையும்
தமிழ்நாடு பயன்படுத்தியுள்ளது. எனவே, மேற்கொண்டும் நீர்
ஆதாரங்களை மேம்படுத்த, அறிவியல் ரீதியில் நிலத்தடி நீராய்
வினை மேற்கொள்வதும், நவீன நீர் ஆய்வுத்தொழில் நுட்ப உத்தி
களைப் பின்பற்றுவதும், நீர் நிருவாக நடைமுறைகளை மேற்
கொள்வதும், நீர்வளம் பாதுகாப்பு முறைகளைக் கையாளுவதும்
இன்றியமையாததாகிறது.

2. 1966-லிருந்து 1972 வரையிலான ஆண்டுகளில், ஐக்கிய
நாட்டு வளர்ச்சித் திட்ட உதவியுடன், தெரிந்தெடுக்கப்பட்ட
பகுதிகளில் வடிநிலப் பகுதி வாரியாக நிலத்தடி நீர் பற்றிய
ஆய்வினை விரிவாக மேற்கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு
முதல் மாநிலமாக விளங்கியது. 1970 நவம்பரில் ஏற்படுத்தப்
பட்ட நிலத்தடி நீர் இயக்ககம், தமிழ்நாடு முழுவதிலும் நிலத்தடி
நீர் குறித்த நுண்ணாய்வினை விரிவாக மேற்கொண்டு, மத்திய



அரசு கருத்துத் தெரிவித்த விதிமுறைக்கோட்பாடுகளை பின்
பற்றி ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும் நிலத்தடி நீரா
தாரம் மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்ட ஆண்டு மறு
செறிவோடு ஒப்பிடுகையில் தற்போதைய நீர் பயன்பாட்டு அள
விற்கேற்ப வளர்சசி வட்டாரங்கள் மூன்று வகையாக கருப்பு,
சாம்பல், வெண்மை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த
மதிப்பீட்டின் அடிப்படையில் சிறு பாசனத் திட்டத்தைச் செயல்
படுத்த நிலத்தடி நீரை எடுக்க அனுமதி அளிக்கப்படுகிறது. வணிக
வங்கிகள், நிலவள மேம்பாட்டு தொடக்க வங்கிகள் போன்ற
நிதியுதவி நிறுவனங்கள் மூலம் வேளாண்மை, ஊரக வளர்ச்சிக்
கான தேசிய வங்கியிடமிருந்து மறு நிதியுதவியைப் பெற இது
உதவுகிறது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து துணை வடிநிலப்
பகுதிகளுக்கும் உரிய வடி நிலப்பகுதிவாரியான நீர் மண்ணியல்
ஆய்வு குறித்த தகவல் விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.
மிகவும் பயன்தரத்தக்க இந்தப் புள்ளி விவரங்கள் தொகுக்கப்
பட்டு, அவை ஆவணங்களாக்கப்பட்டு வருகின்றன.

நிலத்தடி நீராதார மதிப்பீட்டை நாளது வரையிலாக்குவதற்
கும், குறித்த காலத்திற்கு ஒரு முறை நிலத்தடி நீரை எடுப்பதற்
கும் நிலத்தடி நீர் கண்காணிப்புப் பணி தொடர்ந்து மேற்
கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது, நிலத்தடி நீரின் தன்மை குறித்து ஆய்வு செய்
வதற்கு பாதுகாக்கப்பட்ட வெவ்வேறு கிணறுகளிலிருந்து எடுக்
கப்பட்ட தண்ணீர் மாதிரிகளை ஆய்வு செய்வதற்கு, சென்னை
யில் ஒன்றும் தஞ்சாவூரில் ஒன்றுமாக, மண்ணியல், இரசாயன
ஆய்வுக் கூடங்கள் இரண்டு மட்டுமே தற்போது இருக்கின்றன.
தொழில் மயமாக்கப்பட்டு வருவதன் காரணமாகவும், தற்போ
துள்ள நவீன வேளாண் நடைமுறைகள், மக்கள் தொகை பெருக்
கம் ஆகியவற்றின் காரணமாகவும், கடந்த சில ஆண்டுகளில் சுற்
றுப்புறச் சூழலில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை
குறித்து மிகுந்த கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்
டுள்ளது. எனவே, ரூ. 7.00 இலட்சம் செலவில், மதுரை,
நிலத்தடி நீர் வட்டத்தில் 1990-91ஆம் ஆண்டில் மேலுமொரு
மண்ணியல் இரசாயன ஆய்வுக் கூடமொன்றை ஏற்படுத்தக் கருதப்
பட்டுள்ளது; அச்செலவில், ரூ. 4.50 இலட்சமும் 1990-91ஆம்
ஆண்டில் செலவிடப்படும்.

3. பொதுப்பணித் துறையின் நிலத்தடி நீர்ப்பிரிவில் தொலை
தூர இயற்கை வள ஆய்வுத் தொழில் நுட்ப உத்திகளைப் பயன்
படுத்தி அனைத்து வசதிகளையும் கொண்ட தொலை தூர
இயற்கைவள ஆய்வுக்கூடம் ஒன்று செயல்பட்டு வருகிறது. நிலத்
தடி நீர் ஆதாரத்தை மதிப்பிடுவதற்கான வரை படங்கள் தயாரிக்
கப்படுகின்றன. தமிழ்நாடு முழுவதற்கும் 1,50,000 என்ற
அளவில் செயற்கைக் கோள் படங்களையும் விமானத்திலிருந்து
எடுக்கின்ற ஒளிப்படங்களையும் பயன்படுத்தி நிலப்பிரப்பியல்

மண்ணியல் (ஜியோமார்பாலஜி) வரைபடம் பயன்பாட்டு வரைபடம், மண்ணின் தனிச் சிறப்புக் கூறுகள் பற்றிய (விலெதமென்ட்) நிலம்) வரைபடம் ஆகியவை வட்டம் வாரியாக தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த வரைபடங்கள், நிலத்தடி நீர் மேம்பாட்டுக்குச் சாதகமான பகுதிகளைக் கண்டறிய உதவுகின்றன.

4. ஐக்கியநாட்டு வளர்ச்சித் திட்ட நிதி உதவியுடன், நில மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் ஆகிய இருவகை நீராதாரங்களையும் வடிநிலம் வாரியாக மதிப்பீடு செய்யும் பணியை நிலத்தடி நீர்ப்பிரிவில் ஏற்படுத்தப்பட்டுள்ள நீரியல் ஆய்வு நிறுவனம் மேற்கொண்டுள்ளது. பெரியாறு, வைகை, தாமிர பரணி, பொன்னியாறு ஆகிய வடிநிலப் பகுதிகளில் ஆய்வுப்பணி முடிக்கப்பட்டு, அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1988-லிருந்து 1990 வரையிலான ஆண்டுகளில் பாலாறு வடிநிலப்பகுதியில் இத்தகைய ஆதார மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5. இத்துடன் பொதுப்பணித் துறையைச் சேர்ந்த நிலத்தடி நீர்ப்பிரிவு, பின்வரும் தனி ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளது.

(அ) தொழிற்சாலைக் கழிவு நீர் காரணமாகவும், இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன் காரணமாகவும் ஏற்படும் மாசுக்கேட்டினைக் கண்டறிந்து, மதிப்பிடுதல்.

(ஆ) செயற்கை முறையில் மீண்டும் நிலத்தடி நீரில் மறுசெறிவு ஏற்படுவதற்கான வாய்ப்பு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

(இ) கடலோரப் பகுதிகளில், நன்னீர் கிடைக்கின்ற பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்து கலந்துவிடுவதைக் கண்காணித்தல்.

(ஈ) பெரிய பாசனப் பகுதிகளிலும் ஏரி பாசனப் பகுதிகளிலும் நிலத்தடி நீராதாரத்தை மதிப்பிடுதல்.

6. (அ) 119 வளர்ச்சி வட்டாரங்களில் கருப்பு, சாம்பல் என வகைப்படுத்தப்பட்டுள்ளவற்றின் நிலத்தடி நீர் குறித்து தீவிர ஆய்வை, மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இந்த விரிவான ஆய்வை 1990 ஏப்ரலிலிருந்து மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. முனைப்பான, சிறப்பு ஆய்வின் மூலம் இப்பகுதிகளுக்குள் அமைந்துள்ள நிலத்தடி நீர் ஆதார இடங்களைக் கண்டறிய முடியும்.

(ஆ) இதுவரை சேகரிக்கப்பட்ட நீர்வள ஆதாரம் பற்றிய தகவல்கள் அனைத்தும், நீராதார நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கணிணியுடன் கூடிய தகவல் தொகுப்பு மையத்தில் ஆவணமாக்கப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களைப் பயன்படுத்த விரும்பும் முகவரமைப்புகள், தேவையானபோது இவற்றைப் பெறத்தக்க வகையில் அவை தொகுக்கப்பட்டு ஆவணமாக்கப்பட்டுள்ளன.



(இ) குறைந்த கட்டணத்தில் நவீன அறிவியல், மின்னணு
வியல் சாதனங்களைப் பயன்படுத்தி எந்தெந்தப் பகுதிகள்
கிணறு தோண்டுவதற்குப் பொருத்தமான இடங்கள் என்கிற
தகவல்களைப் பரிந்துரைப்பதற்கு உழவர்களுக்கும், பொது
மக்களுக்கும், அரசுத் துறைகளுக்கும் ஆலோசனை கூறப்
படுகிறது. உழவர்கள் பலர் இத்திட்டத்தின் மூலம் பயன்
பெற்றுள்ளனர். பொய்த்த கிணறுகளைத் தோண்டுவது
குறைந்ததால் வீண் செலவும் தவிர்க்கப்பட்டுள்ளது. நிலத்தடி
நீர், மழை பெய்வது ஆகியவை குறித்த மாதாந்திர செய்தி
வெளியீடுகள் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தும் முகவரமைப்
புக்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. வறட்சி ஏற்படும்
காலங்களில் நிலத்தடி நீர் அளவு குறைந்து, தண்ணீர்த்
தட்டுப்பாடு ஏற்படக் கூடிய பகுதிகளைக் கண்டறிந்து
நிவாரண நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கு
திட்டங்களுக்கு அனுமதி அளிக்குமாறு அரசுக்குப் பரிந்துரைக்
கப்படுகின்றது. குட்டைகள் அமைப்புத் திட்டத்திற்கான வழி
முறைக் கோட்பாடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் கருத்தரங்குகள் ஏற்பாடு
செய்வதன் மூலமாகவும் நிலத்தடி நீர் மேம்பாட்டுப் பணியில்
சம்பந்தப்பட்டவர்களை வரவழைத்து, இக்கருத்தரங்குகளில்
கலந்துகொள்ளச் செய்வதன் மூலமாகவும், ஏனைய பயன்பாட்டு
முகவரமைப்புகளுக்கு, இத்துறையின் கண்டுபிடிப்புகள் தெரிவிக்
கப்பட்டன. இத்தகவல்கள், சிறந்த உற்பத்தித் திறனை உறுதி
செய்வதற்கு பயனுடையவையாக இருக்கின்றன.

இந்நிலையம் தற்காலிகமாகச் சென்னையில், நிறுவப்
பட்டது. பின்னர் 25—11—1987 அன்று திருச்சிராப்பள்ளி
தூவாக்குடியிலுள்ள காவிரி வளாகத்திற்கு நிரந்தரமாக மாற்றப்
பட்டது. இந்நிலையம், அனைத்து நவீன வசதிகளையும்
கொண்ட பயிற்சி நிலையமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.
ரூ. 400 இலட்சம் செலவில் காவிரி வளாகத்தில் கட்டப்பட்ட
இப்பயிற்சி நிலையத்தை 29—1—1990 அன்று மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

திருச்சிராப்பள்ளி வட்டாரப் பொறியியல் கல்லூரி, பாரதி
தாசன் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம்,
வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றிலுள்ள வசதி
களையும் சிறப்பறிவுத் திறனையும், இந்தப் பயிற்சி நிலையம்
பயன்படுத்திக்கொள்கிறது.

இத்துறைக்குள்ளேயே பல்வேறு பாடத் திட்டங்கள் குறித்த
பயிற்சி வகுப்புகளைக் கொண்டுள்ள இப்பயிற்சிப் பிரிவுகள்
செயல்முறை நிலையில், இளநிலை, நடுத்தர நிலை, முதுநிலை
அலுவலர்களுக்குப் பாசனம், வேளாண்மை, வேளாண்மைப்
பொறியியல் ஆகிய துறைகளில் பணியில் இருப்பவர்களுக்கான
பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. இவை தவிர உழவர்களுக்கு
பயிற்சி-செய்முறை விளக்கத் திட்டங்களிலும், பயிற்சி அளிக்கப்
படுகிறது.

இதுவரையில் சுமார் 3,924 பணியாளர்கள் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சி நிலையம் பின்வரும் ஆலோசனைப் பணிகளையும் புரிந்து வருகிறது. அவையாவன :

வெவ்வேறு மாவட்டங்களில் நடைபெற்றபாசனம் குறித்த கருத்தரங்குகளில் நிலத்தடி நீராதாரங்கள், நிலத்தடி நீர் கிடைப்பதற்குச் சாதகமான பகுதிகள், கிணறு வெட்டுவதற்கு ஏற்ற இடங்கள் பொதுப்பணித்துறையின் நிலத்தடி நீர் ஆய்வுப் பிரிவு வழங்குகிற ஆலோசனைகள் ஆகிய தகவல்கள் அடங்கிய கையேடுகளை வெளியிடுவதன் மூலம் சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் நிலத்தடி நீர் நிலைமைகள் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள தண்ணீர் தேவையை நிறைவேற்றுவதற்கு இயன்ற அனைத்து நவீன தொழில் நுட்ப உத்திகளும் பயன்படுத்தப்படுகின்றன.

பாசன-நிருவாக பயிற்சித் திட்டத்தின் அமெரிக்க ஐக்கிய நாட்டின் நிதியுதவியுடன் நம் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஐந்து நிலையங்களிலும் தமிழ்நாட்டிலுள்ள துவாக்குடி பாசன நிருவாக பயிற்சி நிலையமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கால அளவு 1983 செப்டம்பரிலிருந்து 1990 செப்டம்பர் வரையிலானதாகும். அதன் பிறகு, இந்நிலையம் மாநில அரசின் பொதுப்பணித்துறையின் கீழ் தொடர்ந்து செயல்படும். பொதுப்பணித்துறை, அரசு செயலாளரின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட நிருவாகக் குழு ஒன்று இந்த நிலையத்தை நிருவகிக்கிறது.

நோக்கங்கள் :

திட்டமிடுபவர், நிருவாகி, வடிவமைப்பவர், கிராமப் பொருளியல் நூலார், உழவர் உட்பட வயலில் பணிபுரியும் பணியாளர்கள் உட்பட வேளாண்மைப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் போதுமான பயிற்சி அளிப்பதும் உரிய அளவிற்குத் தண்ணீரைப் பயன்படுத்துவதற்காகப் பாசன நிர்வாகத்தில் நவீனத் தொழில் நுட்ப உத்திகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதும் இந்நிலையத்தின் நோக்கமாகும்.

(i) பெரியாறு வைகைத் திட்டம்— பணியிடைப் பயிற்சி :

உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பெரியாறு வைகைத் திட்டத்தின் இரண்டாம் நிலைப் பணியின் ஒரு பகுதியாக, இந்நிலையம், திட்ட இளநிலை அதிகாரிகளுக்காகத் தொகுதி தொகுதியாகப் பயிற்சி வகுப்புகளை வடிவமைத்து





நிறுவி நிறைவேற்றியுள்ளது. 20 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, இத்திட்டத்தைச் சேர்ந்த 600 இளநிலை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(ii) தேசிய நீர் நிருவாகத்திட்டம்— பணியிடைப் பயிற்சி :

இந்நிலையம், இத்திட்டத்தின் கீழ் வரும் பயிற்சித் திட்டங்களை வடிவமைத்து நிறுவுவதில் ஆலோசனை வழங்கும் நிறுவனமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. தேசிய நீர் நிருவாகத் திட்டத்தின்கீழ் சாத்தனூர் துணை திட்டப் பணி தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வரும் பணியாளர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிப்பதற்கு, தேவை அடிப்படையிலான பயிற்சி தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் மேலாண்மைத் திட்டம்.

இத்திட்டம்இந்தியாவில் தென் மாநிலங்களாகிய தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கருநாடகம் ஆகிய மூன்று மாநிலங்களில் 1986-87ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன் தொடர்பாக ஒரு திட்ட ஒப்பந்தம் உலக வங்கி, இந்திய அரசு மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கிடையே 28—1—1987ஆம் ஆண்டு கையெழுத்தாகியது.

தற்பொழுதுள்ள நீர்பாசன அமைப்புகளில், மேலும் நம்பகமான முறையிலும், முன் அறியக் கூடிய வகையிலும், ஆயக்கட்டு முழுவதற்கும் சரிசமமான முறையில் பாசன நீர் விநியோகிப்பதன் மூலமும், '' உற்பத்தி திறனை அதிகரித்து, பண்ணை வருவாயை '' அதிகரிக்கச் செய்வதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். பயிர் வளர்ச்சிக்குத் தேவையான அளவு நீர் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில், நவீன நடைமுறை பராமரிப்பு முறைகள் ஆகியவற்றைத் திட்டமிடுதல், செயல்படுத்தல், கண்காணித்தல், ஆகியவற்றிற்குத் தேவையான திறனைப் பெருக்க, நம் மாநிலத்திற்கு இத்திட்டம் மிக உதவியாக இருக்கும். இத்திட்டத்தின் கீழ் 1986ஆம் ஆண்டு விலை விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு எக்டேர் ஒன்றுக்கு ரூ. 2,500 வீதம் செலவிடப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுவதற்காக கீழ்க்கண்ட திட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன :—

1. சாத்தனூர் துணைத் திட்டம்.

2. கோதையாறு துணைத் திட்டம்.

3. தாமிரபரணி துணைத் திட்டம்.

4. அமராவதி துணைத் திட்டம்.

5. கம்பம் பள்ளத்தாக்கு துணைத் திட்டம்.

6. சேத்தியா தோப்பு துணைத் திட்டம்.

7. மருதாநதி துணைத் திட்டம்.

மேற்கண்ட திட்டங்களை மொத்தம் 1,53,146 எக்டேர் பரப்புள்ள பாசன பகுதிகளில் செயல்படுத்த ரூ. 52.70 கோடி ஒட்டுமொத்தத் தொகைக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2. துணைத் திட்டங்களின் செயல் முன்னேற்றம்.

சாத்தனூர் துணைத் திட்டம் :

இத்திட்டத்தை செயலாக்க நான்கு உப கோட்டங்களுடன் ஒரு கோட்டம் அமைக்க ஆணை வழங்கப்பட்டு இயங்கி வருகிறது.

1988-89 ஆம் நிதியாண்டில், இவ்வுப திட்டத்தின் கீழ், குளங்கட்கு தண்ணீர் வரத்துக்காக புதிய இணைப்புக் கால்வாய் அமைத்தல், மதகுகளைப் புனரமைத்தல், கால்வாய்களுக்கு லைனிங் செய்தல், அரசு அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல்; முக்கிய கட்டுமானத் தளவாடக் கருவிகள், மற்றும் இயந்திரங்கள் வாங்குதல் ஆகியவைகளுக்கு ரூ. 32.99 இலட்சம் மதிப்புள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நீர் முறைப்படுத்தும் குறுக்கு மதகுகள் அமைத்தல், மதகுகள், வடிகால்கள் நீர் வழிந்தோடும் கட்டுமானங்களை புனரமைத்தல், குளங்கட்கு நீர் வரத்துக்காக இணைப்பு கால்வாய் அமைத்தல், சாத்தனூர் வலது மற்றும் இடதுபுற கால்வாய்களுக்கு மதகுகள் அமைத்தல், அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல், ஆகிய பணிகள் ரூ. 124.19 இலட்சம் செலவில் 1989-90-ல் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த பணிகளைச் செய்வதற்கான செலவு நடப்பு ஆண்டில் (1989-90) வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 106.46 இலட்சம் வரம்பிற்குள் செய்யப்படும்.

இந்த திட்டத்தினால் 18,210 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.



கோதையாறு துணைத் திட்டம் :

இத்திட்டத்தினை செயல்படுத்த இரு செயலாக்கக் கோட்டம் மற்றும் ஆறு உபகோட்டங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1988-89-ல் (14—9—1988 முதல்) ரூ. 11.97 இலட்சம் இந்த துணைத் திட்டத்திற்குச் செலவிடப்பட்டுள்ளது. இதில் ஏழு அலுவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ. 3 இலட்சமும், மீதத் தொகை சிமெண்ட் வாங்குவதற்கும், பணியமைப்பு செலவிற்கும் செலவிடப்பட்ட தொகையாகும். அலுவலர் குடியிருப்புகள் கட்டும் பணி 1989-90லும் தொடர்ந்து நடைபெற்றது.

1989-90-ல் கால்வாய்களின் கரையைப் பலப்படுத்துதல், கோதையாறு இடதுபுறக் கால்வாய், பத்மநாபபுரம் புத்தனாறு கால்வாய், தோவாளைக் கால்வாய் ஆகியவற்றின் மதகுகளை புனரமைத்தல் போன்ற பணிகள் ரூ. 152.52 இலட்சம் மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டுத் தற்போது நடைபெற்று வருகின்றன. இருப்பினும் இந்த பணிகளை செய்வதற்கான செலவு 1989-90ல் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 130.00 இலட்சம் வரம்பிற்குள் செய்யப்படும்.

இந்த உப திட்டத்தினால் 37,800 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

தாமிரபரணி துணைத் திட்டம் :

இத்திட்டத்தினைச் செயலாக்க இரு கோட்டங்களும் 6 உப கோட்டங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

1988-89ல் பனிரெண்டு அலுவலர் குடியிருப்புகள் ரூ. 15.81 இலட்சம் மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு ரூ. 11.91 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

1989-90-ல் ரூ. 170 இலட்சம் மதிப்புள்ள வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மாற்றுவழி வாய்க்கால் வெட்டுதல், சைபன் கட்டுதல், வடிகால்களை பலப்படுத்தல், பாசனக் கால்வாய் வெட்டுதல், மற்றும் அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல் ஆகிய பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இருப்பினும் 1989-90ல் நிதி நிலை திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையாகிய ரூ. 101.12 இலட்சம் வரம்பிற்குள் செலவிடப்படும்.

இந்த துணைத் திட்டத்தின் மூலம் 34,846 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**அமராவதி துணைத் திட்டம் :**

தேசிய நீர் மேலாண்மைத் திட்ட மதிப்பீட்டு குழு, இந்திய அரசின் நிலையில் 5—12—1989ல் இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த உப திட்டத்தினால் 12,625 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும். திட்டத்தின் பணிகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு ஆகும் செலவு 315.625 இலட்சம் ரூபாய் ஆகும்.

**கம்பம் பள்ளத்தாக்கு துணைத் திட்டம் :**

தமிழ்நாடு அரசின் நிலையில் தொழில் நுட்ப ஆய்வுக் குழுவும் நிர்வாக ஒப்புதல் குழுவும், மத்திய அரசு நிலையில் மதிப்பீட்டுக் குழுவும் இத்துணைத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளன. மத்திய அரசு அனுமதி வழங்கிய தேதி 7—2—1990 ஆகும். இந்த திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 278.70 இலட்சமாகும். இத்திட்டம் இவ்வாண்டில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தினால் 4,665 எக்டேர் ஆயக்கட்டு பயனடையும்.

**சேத்தியாத் தோப்பு துணைத் திட்டம் :**

இத்திட்டத்திற்கு தேசிய நீர் மேலாண்மைத் திட்ட மதிப்பீட்டுக் குழு இந்திய அரசின் நிலையில் 7—2—1990-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. திட்டத்தின் மதிப்பீடு ரூ. 1,036 இலட்சம் ஆகும். 19,466 எக்டேர் ஆயக்கட்டு பாசனப் பரப்பு இத் திட்டத்தினால் பயனடையும். இத்திட்டமும் இவ்வாண்டில் செயல்படுத்தப்படும்.

**மருதாநதி துணைத் திட்டம் :**

இந்த திட்டத்தின் முதற் கட்ட ( Preliminary ) திட்ட அறிக்கை மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு முறையான ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தினால் 2,665 எக்டேர் ஆயக்கட்டு பாசனப் பரப்பு பயனடையும். மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.



**3. வரவு-செலவு ஒதுக்கீடு — 1989-90.**

1989-90-ல் அங்கீகரிக்கப்பட்ட வரவு-செலவு அறிக்கையில், இத் திட்டத்திற்காக ரூ. 550 இலட்சம் கொடுக்கப் பட்டுள்ளது. இதற்கான துணைத் தலைப்பு வாரியான ஒதுக் கீட்டின் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும் துணைத் திட்டத்தின் பெயரும். | திருத்திய மதிப்பீடு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. சாத்தனூர் .. .. .. | 106.46 |
| 2. கோதையாறு .. .. .. .. | 113.27 |
| 3. தாமிரபரணி .. .. .. .. | 101.12 |
| 4. கம்பம் மற்றும் அமராவதி .. .. | 26.25 |
| 5. தலைமை பொறியாளர் அலுவலர், தேசிய நீர் மேலாண்மைத் திட்டம். | 20.56 |
| 6. மேம்படுத்தப்பட்ட இயக்கமும் மற்றும் பராமரிப்பு குழு. | 5.26 |
| 7. திட்ட பராமரிப்பு குழு | 112.08 |
| 8. பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் | 65.00 |
| மொத்தம் | 550.00 |

## பாசன மேம்பாடு—நீர் ஆதாரங்கள் நிலை ஆணைக் குழு:

கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது பாசன மேம்பாடு—நீர் ஆதாரங்கள் நிலை ஆணைக் குழு அமைப்பது தொடர்பாக நான் அறிவித்ததை உறுப்பினர்கள் நன்கறிவர். இந்த ஆணைக் குழு, திரு. ஆர். திருமலையைத் தலைவராகவும், தலைமைப் பொறியாளர் (பாசனம்) உட்பட ஆறு பேரை உறுப்பினர்களாகவும் கொண்டு 14—6—1989 முதல் செயல்படத் தொடங்கியது. இக்குழு, செயல்படத் தொடங்கிய குறைந்த கால அளவிற்குள் இம்மாநிலத்தின் பாசனத் துறைக்கான எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவுக் குறிப்பு 1990-91 ஆம் ஆண்டுத் திட்டம் ஆகியவற்றை தயாரிப்பதில் உதவியுள்ளது. இக்குழு, திட்டப் பணிகள் செயல்படுத்துவது குறித்தும் மதிப்பீடு செய்து வருகின்றது.

1993 ஆம் ஆண்டில் வழங்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிற கிருஷ்ணா நதி நீரைப் பெறுவதற்கு அவசியமான, நாம் நிறைவேற்ற வேண்டிய பணிகளை முடிப்பது குறித்து நான் பெரிதும் வலியுறுத்தியுள்ளேன். பொதுப் பணித் துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் ஆகியவை நிறைவேற்றிய பணிகளின் முன்னேற்றம் குறித்து இந்த ஆணைக் குழு நுணுக்கமாக ஆராய்ந்துள்ளது. 1993 ஆம் ஆண்டில் நீர் வழங்கப்படவுள்ள நாளிலிருந்து செயல்படுவதன் மூலம் இந்நோக்கத்தை எய்துவதற்கு அவசியமானதும் நான் தெரிவித்துள்ளதுமான நிருவாக நடவடிக்கை எடுப்பது குறித்து இக்குழு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இம்மாநிலத்தில் பெரியார், திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பத்து பெருந் திட்டங்கள் பற்றிய ஆய்வையும் இக்குழு முடித்துள்ளது. இத்திட்டங்களின் மூலம் பாசன முறையையும், நீர் வழங்கலையும் எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றி இக்குழு அரசுக்குத் தன்னுடைய பரிந்துரைகளை அளித்துள்ளது. பாசனப் பகுதிகளுக்கு நிரந்தரமான பயன்கள் கிடைக்கும் வண்ணம் நீடித்திருக்கக்கூடிய சொத்துக்களை ஏற்படுத்துவதன் அவசியத்தைக் குறிப்பாக வலியுறுத்தித் தேசிய நீர் நிருவாகத் திட்டத்திற்கு இக்குழு கட்டளைகள் பிறப்பித்துள்ளது.

மத்திய நிலத்தடி நீர் ஆய்வுப் பிரிவு உட்பட நிலத்தடி நீர் பற்றிய ஆய்வு, கண்டு பிடிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பல அமைப்புகள் அடங்கிய ஒருங்கிணைப்புப் பிரிவு ஒன்றை இக்குழு தன் சார்பில் அமைத்துள்ளது.

நிலத்தடி நீர்ப் பயன்பாடு உட்பட பாசன மேம்பாடு பாசன முறையை முறைப்படுத்தல் ஆகியவற்றுக்காக விரிவான சட்டத்தைத் தயாரிக்கும் பணியில் தற்போது இக்குழு ஈடுபட்



டுள்ளது. பாசனப் பகுதிகளிலுள்ள உழவர்களை ஈடுபடுத்திப் பாசன ஏற்பாடுகள் ஏரிகள், கால்வாய்கள், நீர் வழங்கு வாய்க்கால்கள் ஆகியவற்றை முறையாகப் பராமரிப்பதற்கு உரிய அமைப்பு தொடர்பான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## பெரியாறு-வைகை பாசன முறையை நவீனப்படுத்துதல் :

நீரைக் கொண்டு செல்லும் போது, அதனைப் பயன்படுத்தும் போதும் நீர் வீணாவதை புதுப்பித்தல், நவீனப் படுத்துதல் ஆகியவற்றின் மூலம் குறைக்க பெரியாறு-வைகை பாசன முறையை நவீனப்படுத்தும் திட்டம் வகை செய்கிறது. இவ்வாறு சேமிக்கப்படும் நீர், பாசன வசதிகளை அதிகரிப்பதற்குப் பயன் படுத்தப்படுகிறது. இத் திட்டம் இரண்டு நிலைகளில் செயல் படுத்தப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம், பசும் பொன் தேவர் திருமகன் மாவட்டம் ஆகியவற்றின் ஒரு சில பகுதிகளுக்கு பயனளிக்கின்ற 1-ஆம் நிலையானது 23.00 மில்லியன் அமெரிக்க டாலர் உலக வங்கி நிதியுதவியுடன் ரூ. 44.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் 1977 சூலைத் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் 1-ஆம் நிலைப் பணி, 1984 ஆகஸ்டு திங்களில் முடிக்கப்பட்டது. 1-ஆம் நிலைப் பணியின் கீழ் கூடுதலாக 10,305 எக்டேர் நிலம் பயன் பெற்றது. அத்திட்டத்தின் IIஆம் நிலைப் பணி 35.00 மில்லியன் அமெரிக்க டாலர் உலக வங்கி நிதியுதவியுடன் ரூ. 56.86 கோடி மதிப்பீட்டுச் செலவில் II ஆம் நிலைப் பணி நடைபெற்று வந்த போதே அதாவது 1983 அக்டோபர் திங்களில் மேற்கொள்ளப்பட்டது. பொது மக்களின் வேண்டுகோளின் பேரில் சில கூடுதல் பணிகளும் II ஆம் நிலைப் பணியில் சேர்க்கப்பட்டன. எனவே உயர்த்தப்பட்ட தொகையான 170 கோடி ரூபாய்க்கு அனுமதி அளிக்கப்பட்டது :—

IIஆம் நிலைப் பணியின் கீழ் கூடுதலாக 7,521 எக்டேர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கப்படும். கீழ்க்காணும் பணிகள் தவிர IIஆம் நிலையைச் சேர்ந்த பணிகளில் பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டு விட்டன.

(அ) பேரணை பொறி மதகைப் புதுப்பித்தல்.

(ஆ) பாசன விவரங்களை கணிப் பொறி உதவியுடன் தொகுத்தல்.

(இ) கூடுதல் வி. எச். எப். நிலையங்கள் அமைத்தல்.

(ஈ) நிறுவன அமைப்பு—நடைமுறைப் பிரிவுப் பணியாளர்களுக்காக கூடுதல் குடியிருப்புகளைக் கட்டுதல்.

(உ) எஞ்சியுள்ள கூடுதல் பணிகள்.

[1990 மே 2

செலவு.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
| --- | --- |
| II ஆம் நிலைப் பணி தொடங்கப்பட்டதி லிருந்து 1988-89-ஆம் ஆண்டு இறுதி வரை ஏற் பட்ட செலவு. | 5,755.00 |
| 1989-90-ஆம் ஆண்டில் (1989 டிசம்பர் திங்கள் வரை) ஏற்பட்ட செலவு. | 410.47 |
| 1989 டிசம்பர் திங்கள் வரை ஏற்பட்ட மொத்தச் செலவு. | 6,165.47 |
| 1990 ஜனவரித் திங்கள் முதல் 1990 மார்ச்சுத் திங்கள் வரை ஏற்படக் கூடிய செலவு. | 370.53 |
| 1990 மார்ச்சுத் திங்கள் வரை ஏற்படக் கூடிய மொத்தச் செலவு. | 6,536.00 |

1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்
கத்தில், இதற்காக ரூ. 264 இலட்சம் நிதி யொதுக்கீடு செய்ய
மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1989-90 ஆம் ஆண்டில் நன்கு
மழை பெய்ததாலும் அதன் காரணமாக நீர்த் தேக்கங்களில்
போதுமான அளவு நீர் சேமித்து வைக்கப்பட்டிருந்ததாலும்
இப்பணிகளை மேற்கொள்வதற்கு உகந்த காலத்தில் குறிப்பிடத்
தக்க பகுதியை இழக்க நேர்ந்ததால், ஏற்கெனவே திட்டமிடப்
பட்டிருந்த பணிகளில் சில இந்த ஆண்டில் அதாவது 1990-91
ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். அதன் காரணமாக,
இப்பணிகள் தொடர்பாக 1990-91 ஆம் ஆண்டில் சுமார்
464 இலட்சம் ரூபாய்க்கான பணிகளை மேற்கொள்ள வேண்டி
யிருக்கும். மற்றும் உலக வங்கியின் கடனுதவியில் எஞ்சியுள்ள
16.85 கோடி ரூபாயும் பெரியாறு வைகைத் திட்டத்திற்கு
கடனுதவியாகக் கிடைக்கும்.

உலக வங்கியின் ஒப்புதலுடன், பெரியாறு-வைகைத்
திட்டத்தின் II ஆம் நிலைப் பணி மேலும் இரண்டாண்டு
களுக்கு தொடர்ந்து மேற்கொள்ளப்படும். நிலக்கோட்டை,
பெரியகுளம் ஆகிய வட்டங்களில், மேலும் சுமார் 4,000 ஏக்கர்
நிலம் பயன் பெறுவதற்காக 25 கோடி ரூபாய் செலவில் கூடுதல்
பணிகள் மேற்கொள்ளப்படும். உலக வங்கியின் கடன் உதவி
முழுவதும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.



1990 மே 2]

நீரியல்—நீர் அழுத்தவியல் நிறுவனம், பூண்டி.

மாநிலத்திலுள்ள பல்வேறு திட்டங்கள் குறிப்பாக பாசனத்
திட்டங்கள் தொடர்பாக, நீரியலில் ஏற்படும் தொழில் நுட்பப்
பிரச்சினைகளை, சிறந்த தொழில்நுட்ப உத்திகள் மூலம் தீர்ப்
பதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்காகப் பொதுப்
பணித்துறையின் ஒரு பிரிவான, பூண்டி நீரியல்-நீரழுத்தவியல்
நிறுவனம், செங்கை-அண்ணா மாவட்டத்தில் பூண்டி நீர்த்தேக்
கத்திற்குக் கீழே 1945-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. புது
டில்லி, பாசன மின்சக்தி மத்திய வாரியம் ( C.B.I.P. ) இந்திய
வேளாண்மை ஆராய்ச்சிக்குழு ( I.C.A.R.) ஆகியவை பொறுப்
பேற்ற ஆய்வுகள், தெரிந்தெடுக்கப்பட்ட நீர்த்தேக்கங்களில்
வண்டல் படிவது பற்றிய ஆய்வு அதன் நீர்பிரி முகடு ஆய்வு
ஆகியவற்றையும் இந்த ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொள்
கிறது.

தலைமைப் பொறியாளர் பதவித் தரத்திலுள்ள ஓர் இயக்குநர்
இந் நிறுவனத்தின் தலைவராவார். இவருக்கு நிருவாகப்
பொறியாளர் பதவித் தரத்திலுள்ள 4 துணை இயக்குநர்கள்
உதவி புரிகின்றனர். தற்போது கீழ்க்காணும் நான்கு வகை
களைச் சேர்ந்த ஆராய்ச்சிப் பணிகள் இந்நிறுவனத்தில் மேற்
கொள்ளப்படுகின்றன. அவையாவன :—

1. பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, தமிழ்
நாடு மின் வாரியம், வேளாண் பொறியியல் துறை, பெருநகர்
குடிநீர் வழங்கல் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் ஆகியவை குறிப்பிடும் திட்
டங்கள் பற்றிய அடிப்படை ஆய்வுகள், செயல்முறை பிரச்சினை
கள், தமிழ்நாட்டில் கடற்கரை நெடுக ஆய்வுகள், காவிரி கழி
முகப் பகுதியில் நீர் வழங்கலை மேம்படுத்துவது குறித்து செயல்
திட்ட ஆராய்ச்சிப் பணிகள்.

2. மழையளவு, வானிலையாய்வு போன்ற நீரழுத்தவியல்
புள்ளி விவரங்களை வகைப்படுத்தித் தொகுத்தல்.

3. புதுடில்லி, பாசனம்-மின்சக்தி மத்திய வாரியம் பொறுப்
பேற்கும் ஆய்வுகள்.

சென்னை நீர் சிக்கனப் பயன்பாட்டு வாரியம் ஒப்புதலளித்து
தெரிந்தெடுக்கப்பட்ட நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவது
பற்றிய நீர்பிரி முகடு ஆய்வு ஆகியவற்றை நடத்துதல்.

## கட்டிடங்கள்.

அரசின் பல்வேறு துறைகளுக்கான கட்டிடங்கள் கட்டுவது குறித்துத் திட்டமிடுவதும், வடிவமைத்தலும், கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுவதும், அவற்றை பராமரித்துச் சீர மைத்தலும், பொதுப்பணித் துறையின் கட்டிடப் பிரிவின பொறுப்பிலுள்ளது. மேலும், குறிப்பிட்ட சதவீதக் கட்ட ணத்தைப் பெற்று, உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் அரசு சார் நிறுவனங்களின் கட்டுமானப் பணிகளும் பொதுப்பணித் துறை யால் மேற்கொள்ளப்படுகின்றன. தவிரவும், மத்திய அரசுக் கென, தொழிலாளர் காப்புறுதிக் கழகம் மற்றும் மலைப் பகுதி வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றுக்கான கட்டுமானப் பணிகளும் பொதுப்பணித் துறையால் செய்யப்படுகின்றன.

2. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பொதுப் பணித்துறைக் கட்டடப் பிரிவிற்கான செலவு விபரங்கள் கீழே யுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன:—

| வருடம். | | பொதுப்பணி. | வீட்டுவசதி. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1985—86 | .. | 548.68 | 41.24 | 589.92 |
| 1986—87 | .. | 893.97 | 94.45 | 988.42 |
| 1987—88 | .. | 927.92 | 139.94 | 1,067.86 |
| 1988—89 | .. | 769.56 | 243.39 | 1,012.95 |
| 1989—90 | .. | 819.72 | 371.80 | 1,191.52 |

(எதிர்நோக்கு).

3. 1989-90-ல் பொதுப்பணித் துறைக்கான நிதி ஒதுக்கீடு மானிய எண். 37-ன் கீழ் ரூ. 7.93 கோடியும், மானிய எண். 53-ன் கீழ் ரூ. 20.43 கோடியும் ஆகும். இந்த ஆண்டில், வெவ்வேறு அரசு கட்டடங்கள் கட்டுவதற்கென, ரூ. 21.32 கோடியும் பராமரிப்புக்கென ரூ. 5.28 கோடியும், செலவிடத் திட்டமிடப் பட்டது. மேலும் 1989-90—ல் ரூ. 42.72 கோடி செலவில் 1,150 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுப் பல்வேறு துறை களின் உபயோகத்திற்கென, அவற்றிடம் ஒப்படைக்கத் திட்ட மிடப்பட்டது. 31—12—1989 நிலவரப்படி ரூ. 34.60 கோடி



மதிப்புள்ள 461 பெரிய கட்டிடங்களும் ரூ. 1.66 கோடி மதிப் புள்ள 360 சிறிய கட்டிடங்களும் முடிக்கப்பட்டுப் பயன் படுத்தும் துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. ஏனைய பணிகள் முன்னேற்றத்தில உள்ளன. இவற்றில் ஒவ்வொன்றும் ரூ. 50 இலட்சத்துக்கும் அதிகமான மதிப்புடைய 16 கட்டிடங் களும், ரூ. 5 இலட்சத்துக்குக் கூடுதலான ஆனால் ரூ. 50 லட்சத்துக்கும் குறைவான 416 கட்டிடங்களும் அடங்கும்.

4. தவிரவும், ரூ. 54 கோடி மதிப்புடைய பணிகளுக்குச் சமீபத்தில் ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 11 பெரிய கட்டிடப் பணிகள் அடங்கும். 1990-91-ல் பணி துவங்கப்படும்.

5. சென்னை மெரீனா கடற்கரையில் காலஞ்சென்ற முதல் அமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர் களுக்கென ரூ. 33.34 இலட்சம் செலவில் ஒரு நினைவாலயம் பொதுப்பணித் துறையால் கட்டி முடிக்கப்பட்டு 15-11-1989 அன்று மாண்புமிகு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது. கீழ்க்கண்ட நினைவாலயப் பணிகளுக்கும் அரசு ஏற்பு அளித்துள்ளது. பணி விரைவில் துவங்கப்படும் :—

1. கேரள மாநிலத்திலுள்ள வைக்கம் என்ற இடத்தில் தந்தை பெரியாருக்கு நினைவாலயம் கட்டுதல்—ரூ. 15 இலட்சம்.

இப்பணியை கேரள அரசின் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. இலங்கையை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் ராஜா விக்கிரமசிங்கனுக்கு வேலூரில் முத்து மண்டபம் கட்டுதல் —ரூ. 7 இலட்சம்.

3. கவியரசு கண்ணதாசனுக்குக் காரைக்குடியில் நினைவகம் கட்டுதல்— ரூ. 30 இலட்சம்.

4. கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு சிலை அமைத்து நினைவாலயம் கட்டுதல்— ரூ. 4.32 கோடி.

5. அரசு ஏற்பு அளித்துள்ள சில சிறப்பான திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன. வேலைகள் ஆரம்பித்துள்ளன :

| | | (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| 1. | முன்னாள் உயர்நீதி மன்றம் இருந்த இடத்தில் சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் கட்டுதல். | 6.32 |

143977
600 008

5 ... இணைப்புகள்.

[1990 மே 2

(ரூபாய் கோடியில்.)

| | | |
|---|---|---|
| 2. | ஊரக வளர்ச்சித் துறைக்கென சென்னை சைதாப்பேட்டையில் கட்டிடம் கட்டுதல். | 3.94 |
| 3. | ஊட்டியில் பழங்குடியினர் அருங்காட்சியகம் கட்டுதல். | 2.00 |
| 4. | ஐரோப்பிய பொருளாதாரக் கழக உதவியுடன் ஆடு வளர்ப்புக்கென கட்டிடம் கட்டுதல். | 1.26 |
| 5. | சென்னை, பெரம்பூரில் நவீன இறைச்சி அறுக்கும் இடம். | 1.21 |

7. மொத்தம் ரூ. 8.10 கோடி செலவில் ஒவ்வொன்றும் ரூ. 5 இலட்சம் மதிப்புடைய 120 ஆரம்ப சுகாதார நிலையங்களும், ஒவ்வொன்றும் ரூ. 1.75 இலட்சம் மதிப்புடைய மருத்துவ அலுவலர்களுக்கான குடியிருப்புகளும், வெவ்வேறு இடங்களில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான செலவினம் 50 : 50 என்ற அடிப்படையிலும், குடியிருப்புகளுக்கான செலவினம் 30 : 70 என்ற அடிப்படையிலும் மாநில அரசு மானியமாகவும் "ஹட்கோ" நிறுவனத்திலிருந்து பெறும் கடனாகவும் பகிர்ந்து கொள்ளப்படும். தமிழ்நாடு கட்டுமானக் கழகம் கடன் தொகையைப் பெற்றுப் பொதுப்பணித் துறையிடம் வழங்கும்.

8. கடந்த ஆண்டு பொதுப்பணித்துறை வரவு-செலவு திட்ட விவாதத்தின்போது உறுதியளித்தபடி, பொதுப்பணித் துறையில் 1987 ஆம் ஆண்டு பதவி இழந்த 125 இளம் பொறியாளர்களுக்கும் 1988 ஆம் ஆண்டு பதவி இழந்த 74 தொழில் நுட்பயாளர்களுக்கும் மற்றும் இது போன்றவர்களுக்கும் தொழில் வாய்ப்பு அளிக்க, பொதுப்பணித் துறையில் 300 நுட்ப வேலை உதவியாளர்கள் பதவியிடங்கள் தோற்றுவிக்க ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன.

9. இனிமேல் அரசுத்துறைகள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்களின் அனைத்து கட்டுமானப் பணிகளையும் பொதுப் பணித்துறை (கட்டிடப் பிரிவு) யிடமே ஒப்படைக்க வேண்டுமென கொள்கை அளவில் அரசு முடிவு எடுத்துள்ளது.

10. மேலும் மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் ஐரோப்பிய பொருளாதாரக் கழகத்தின் நிதி உதவியுடன் ரூ. 1.50 கோடி செலவில் 16 புயல் பாதுகாப்பு இடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

D

V2:1,31 'N90
N90.31.2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.